எங்கள்
சுவடுகளை
ஆழமாகவும்
நேர்த்தியாகவும்
பதிப்போம்!

பதின்மூன்றாவது ஆண்டு மலர் Thirteenth Anniversary Issue

பெப்ரவரி 2004 February

தமிழர் தகவல்

TAMILS' INFORMATION



050
தமிழ
CL/PR.

Growing
with the
Community

ESTD-1991



தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

பிரதம ஆசிரியர்: திரு எஸ். திருச்செல்வம்
இணை ஆசிரியர்: றஞ்சி திரு
மூத்த உதவி ஆசிரியர்: விஜய் ஆனந்த்
உதவி ஆசிரியர்கள்:
சசி பத்மநாதன், அன்ரன் கனகசூரியர்
பொது முகாமையாளர்: எஸ். ரி. சிங்கம்
பொதுஜனத் தொடர்பு விநியோகம்:
ப. சிவசுப்பிரமணியம், நா. விமலநாதன்,
பொன். சிவகுமாரன், ரி. தேவேந்திரன்,
என். குமாரதாஸன், ஆர். ஆர். ராஜ்குமார்

தொழில்நுட்ப உதவி:
ஹரன் கிறாப் & தமிழ் கிரியேட்டஸ்
ஒளி அச்சு, வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு:
அகிலன் அசோஷியேற்ஸ் (416) 920-9250
தயாரிப்பு: ஈழத்தமிழர் தகவல் நிலையம் &
தமிழ் தகவல் ஆய்வகம், ரொறன்ரோ

வெளியீடு: அகிலன் அசோஷியேற்ஸ்
மாதாந்த வெளியீடு: 4000 பிரதிகள்
ஆண்டு மலர்: 5000 பிரதிகள்

Our Proud Sponsors of the Main Awards - 2004

Sabesan
Anicko Interior Inc.
416 605 1990

Victor Santhiapillai
Century 21 Affiliate Reality Inc.
416 290 1200

Yaso Sinnadurai
Law Office
416 265 3456

Kannan Thurairajah
Kas-Kade Linen Services
416 604 4217

Our Proud Sponsor of the Youth Awards - 2004

Dr. M. Illango
Dr. Illango & Associates - Dental Clinics
416 292 7004 & 905 270 7844

ஆசிரியரிடமிருந்து

பூப்பும் மூப்பும்

இந்த நூற்றாண்டின் முடிவில் அழியப்போகின்ற உலக மொழிகளில் தமிழும் ஒன்றென்று ஓர் அபாயக்குரல் வந்துள்ளது. இது, சர்வதேச மையமொன்றிலிருந்து வந்திருக்கும் எச்சரிக்கை. அதனால், முற்று முழுதாக இதனைத் தட்டிக் கழிக்க முடியவில்லை.

தமிழீழ மண்ணிலிருந்து அகதிகளாகப் புலம்பெயர்ந்த ஆறு இலட்சம் வரையான தமிழர்களால், உலகப் பந்தின் மூலைமுடுக்கெங்கும் தமிழின் மணம் ஓங்கி வீச்சுப் பெற்றிருப்பதால், 'தமிழ் அழியப்போகும் மொழிகளில் ஒன்று' என்பதை மனதார ஒப்புக்கொள்ளவும் முடியவில்லை.

இரண்டுக்கும் இடைப்பட்டதாக தமிழர் வாழ்வும், தமிழின் உயிரும்.

மேற்குலகில் பொங்கிப் பிரவாகித்து வரும் தமிழ் ஊடக வளர்ச்சியும், தமிழ்க் கலை பண்பாட்டு விழுமியங்களின் மீதான அதீத அக்கறையும் மகாகவி சுப்பிரமணிய பாரதி வேண்டிய "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுகின்றது' என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

ஆனால், இத்தகையை புறத்தோற்ற வளர்ச்சியால் தமிழின அடையாளத்தையும், தமிழ் மொழியின் அரியாசனத்தையும் தக்க வைக்க முடியுமா என்ற கேள்வியும் எழாமலில்லை.

நாம் முகமிழந்த மனிதர்களாகி விடுவோம் என்று சில புலமையாளர் சொல்கின்றனர்; நாம் முகவரியில்லாத மனிதர்களாகி விடுவோம் என்று சில சமூகவியலாளர் கூறுகின்றனர்.

"ஒருவர் புலம்பெயர்ந்து வாழ்வது என்பது ஒரு வரவேற்கத்தக்க காரியமாக என்றும் இருக்கவில்லை. எங்கள் கிராமங்களில்கூட ஒருவரைத் தாழ்த்திப் பேச வேண்டுமென்றால் 'வந்தேறு குடிகள்' என்று சொல்வார்கள். இந்தப் புலம்பெயர் வாழ்வு என்பது தமிழ்ப் பண்பாட்டில் எல்லாக் காலங்களிலும் போற்றப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை..." என்று மூத்த தமிழ்த்துறையாளரும் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியருமான கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் விழித்துள்ளார்.

"புலம்பெயர்ந்த தமிழர்' என்பது புகழுக்குரிய சொற்றொடர் அல்ல. என்னதான் தங்கத்தில் குளித்தாலும் ஏதிலி ஏதிலி தான். இன்னொரு நாட்டின் குடியுரிமை பெற்றவர்களாக நாங்கள் இருக்கின்றோம். நாங்கள் ஏதிலிகள் இல்லை எனச் சிலர் மார்தட்டலாம். சொந்த நாட்டை இழந்தவனுக்கு எந்த நாட்டிலும் மதிப்பில்லை என்பதே வரலாறு. குடியுரிமை பெற்றதாலேயே அந்த நாடு தாய்நாட்டுக்கு ஈடாகி விடாது" என்று தன்னினமான தமிழுணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சுட்டியுள்ளார்.

இவைகள் ஆய்ந்தோய்ந்து உணர வேண்டிய கருத்துகள்.

தாய் மண்ணினது வேரின் ஈரம் எமது முதலாவது பரம்பரையிடம் இன்னமும் பச்சையாக ஒட்டியிருப்பதால், புகலிட வாழ்வின் முதற்சுற்று பிறந்தகத்தை நினைவுடன் சுமந்து கொண்டிருக்கின்றது. இதனை அடுத்தடுத்த சுற்றுகளிடமும் எதிர்பார்ப்பது நியாயமாகுமா? சாத்தியமாகுமா?

அடுத்த தலைமுறை இதற்குத் தயாரா என்பதும், இன்றைய தலைமுறை அவர்களை இதற்குத் தயார்படுத்துகின்றதா என்பதும் எல்லாத் தரப்பிலிருந்தும் இவ்விடத்தில் மையம் கொள்ளும் வினா.

எமது ஊடகங்களின் பங்களிப்பு இங்கேதான் முனைப்புப் பெறுகின்றது. சமூக அசைவியக்கத்துக்கு உகந்தவாறு, ஊடகங்களின் நோக்கும் போக்கும் அதற்கான குவிமுனையுடன் தம் பார்வையைத் திருப்ப வேண்டும். உருவாக்கத்துக்கும் மீள்உருவாக்கத்துக்குமிடையில் முன்னுரிமைகளை நிலைநிறுத்த வேண்டிய காலமிது. இல்லையெனில், இவற்றின் தேவையே தேவையற்றதாகலாம். (மறுபக்கம் வருக)

Tamils' Information
P.O.Box - 3
Station -F
Toronto, Ontario.
M4Y 2L4.
Canada.
Phone: 416 920 9250
Fax: 416 921 6576
email: tamilsinfo@sympatico.ca

உலக மயமாக்கல் நவீனத்துவம் பின்நவீனத்துவம் எனப்படும் வகைதுறை நிலைக்களத்துள், பன்மொழி வயப்பட்ட சமூகக் கட்டமைப்புக்கூடாகவும் நம்முன்னோர்களின் அருஞ்செல்வத்தைப் பேணிக் காத்து அடுத்த தலைமுறையிடம் கையளிக்க வேண்டியவர்களாக புகலிடத் தமிழர்கள் இருக்கின்றனர்.

இப்பணியில் கனடியத் தமிழர்களுக்குப் பாரிய பங்குண்டு. புதிய நூற்றாண்டில் மேற்குலகத் தமிழர்களுக்குத் தலைமை தாங்கும் பெரும் பொறுப்பு விரும்பியோ விரும்பாமலோ இவர்களுடையதாகியுள்ளது. இதற்கான வகிபாக வரிப்புணர்வில் ஒரு பங்காளராகவும் பதிவாளராகவும் அணிசெய்வதைத் 'தமிழர் தகவல்' நிகழ்கால உரித்தாக்கியுள்ளது.

கனடியத் தமிழர்கள் 'வயதுக்கு வந்துவிட்டார்கள்' என்பதை அவர்களின் தனிப்பட்ட மற்றும் அமைப்பு ரீதியான செயற்பாடுகள் மூலம் கணிக்க முடிகின்றது. 'வயதுக்கு வந்துவிட்டார்கள்' என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் கொள்ளப்படும். பூப்படைவது என்பது ஒன்று; மூப்படைவது என்பது அடுத்தது. பூப்படைதல் என்றால் பருவமடைதல் அல்லது பக்குவப்படல் எனலாம். மூப்படைதலில் முதிர்ச்சி கொள்ளலும் அடங்கும்.

தாய்மண்ணின் விடுதலைப் போரினை சிறீலங்காவின் சிங்களப் பேரினவாதம் மனித அவலத்துக்குள்ளாக்கியது. நியமங்கள் மாற்றம் பெற்றன. ஒட்டுமொத்த வடிவில் புலப்பெயர்வு நிகழ்ந்தது. மேனாட்டு மாதிரியத்தின் அச்சு வார்ப்பாக புகலிடத் தமிழர்கள் மாறும் அச்சம் தோன்றியது. தலையில்லாத முண்டங்களாக தமிழினம் மாறுமென அவர்கள் விருப்புடன் எதிரபார்த்தனர்.

ஆனால் நடந்ததோ வேறு.

சமூகத்தை நோக்கி வீசப்பட்ட சவால்களை எம்மவர்கள் நிமிர்ந்த தலையுடன் சந்தித்தனர். புகுந்த மண்ணில் 'இப்படித்தான் வாழவேண்டும்' என வகைப்படுத்தி வெற்றி கண்டனர். பிறந்த மண்ணை மறவாதவர்களாக தம்மை நெறிப்படுத்தி மகிழ்வு கொண்டனர். இங்குள்ள அனைத்துத் துறைகளிலும் - அரசியல் உட்பட, எம்மவரின் ஆற்றல் வியப்புக்குரியதாக மேலோங்கியுள்ளது.

இதனால், கனடியச் சிறுபான்மை இனங்களின் முதற் பத்துக்குள் 'தமிழர்' அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது முதல் வெற்றியாகும்.

எனவேதான், கனடியத் தமிழர்கள் 'பூப்பும் மூப்பும்' அடைந்து விட்டனர் என்று துணிந்து சொல்கின்றோம்.

இங்கு அலசப்பட்ட பலவற்றையும் உள்ளே கட்டுரைகள் வடிவில் நீங்கள் தரிசிக்கலாம். துறைபோன வல்லாளர்கள் அவைகளை விரிந்து நோக்கியுள்ளனர்.

கனடியத் தமிழர்களின் திசை மாறாப் பயணத்தில் அவர்களின் கரங்களைக் கோர்த்தவாறு தமிழர் தகவலும் தனது பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்கின்றது. அதனால், எம்மவர்களின் ஒவ்வொரு அடியையும் எம்மால் பக்குவமாகப் பதிவு செய்ய முடிகின்றது.

தகவல் நெடுஞ்சாலையில் பதின்மூன்று கற்களைக் கடந்து விட்டோம். மேனாட்டு வாழ்வியலில் 'பதின்மூன்று' என்பது அச்சமிகு இலக்கம். அதனையும் தாண்டியாகி விட்டது. பதினான்காம் படியில் பாதங்களைப் பதிப்பது உவகையைத் தருகின்றது.

எங்கள் பயணம் 'ஒட்டகப் பயணம்' என்பதை மீண்டும் நினைவுபடுத்துகின்றோம்.

பதின்மூன்று வருடப் பயணத்தின் பங்காளிகள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொண்டு, எங்கள் சுவடுகளை ஆழமாகவும் நேர்த்தியாகவும் பதிக்கின்றோம்.

நாளைய பாதையில் எங்கள் சுவடுகள் நன்றாகத் தெரியட்டும்!

திரு எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்

புலம்பெயர்வு
Migration



டாக்டர் அ. சண்முகவடிவேல்

இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் உலக நாடுகளில் 10 - 15 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். இதில் கணிசமான தொகையினர் கனடாவில் இருக்கிறார்கள். அன்று இங்கு வந்தவர்களின் குழந்தைகள் இன்று வளர்ந்து உயர்கல்வியை முடித்து தொழில் செய்ய ஆரம்பித்தவுடன் விவாகமாகி பெற்றோர்களாக ஒரு புதிய சந்ததியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளையில் புலம்பெயர்ந்த தமிழர் என்பது புகழ்ச்சிக்குரிய சொற்றொடர் அல்ல. சொந்த நாட்டை இழந்தவனுக்கு எந்த நாட்டிலும் மதிப்பில்லை என்பதே வரலாறு என்று உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தன் கூறியிருப்பதை நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

நாம் எவ்வாறு புகுந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமது எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்பது பற்றி எத்தனை பேர் சிந்திக்கின்றீர்களோ என்னவோ, என் மனதில் இந்தக் கேள்விகளே எப்பொழுதும் எழுந்த வண்ணம் இருக்கின்றன. இங்கே கட்டுண்டு கிடவாது நமது நாட்டுக்குச் சென்று வாழ முடியாதா எனப் பலர் ஏங்குகிறார்கள்.

இலங்கையில் நாம் வாழ்ந்த பொழுது கூட நாம் அந்நாட்டை எமது நாடு எனப் பெருமைப்படவில்லை. அங்கே இருந்து வந்த இன ஒடுக்கலும், அரசியல் சூழலுமே அந்த நிலையை உருவாக்கியது. தொடர்ந்து நிலவிய இனக்கலவரங்களாலும் பதற்றநிலை காரணமாகவும் உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் பலர் தாம் பிறந்த மண்ணைவிட்டு அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் புகும் நிலைமை ஏற்பட்டது.

இன்று இங்குள்ள நிலைமை என்ன? பல தமிழர்கள் ஓரளவு வசதியாக வாழ்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. சமூக, சமய, கலை, கலாசார, வியாபார, தொழில் முயற்சிகளில் எம்மவர்கள் ஓரளவிற்கு நிறைவு கண்டுள்ளார்கள் என்பதே எனது கணிப்பாகும்.

பலர் இன்று தமது சொந்த வீடுகளில் வதிகின்றார்கள். வீடுகளில் ஒன்றோ இரண்டோ மோட்டார் வண்டிகள் இருக்கின்றன. திருமண விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், ஊர் மக்களின், பழைய பாடசாலைகளின் ஒன்றுகூடல்கள் என்பனவற்றை கொண்டாடி மகிழ்கிறார்கள்.

எம்மத்தியில் பல அமைப்புகள், சமய மன்றங்கள், பத்திரிகைகள், வானொலிகள், வைத்தியர்கள், சட்ட வல்லுனர்கள், வீடு விற்பனையாளர்கள், காப்புறுதியாளர்கள், தரகர்கள், கோயில்கள், உணவகங்கள், கடைகள் பெருகி வருவதைக் காண்கிறோம்.

ஒரு காலத்தில் மிகச் சிக்கனமாக வாழ்ந்த எம்மக்கள் இன்று ஆடம்பர வாழ்க்கையிலும் கொண்டாட்டங்களிலும் கோயில் திருவிழாக்களிலும் பாராட்டு விழாக்களிலும் பல்லாயிரம் டாலர்களை செலவிடுவது அவசியமானதா என எண்ணத் தோன்றுகின்றது!

புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது தேசிய இன அடையாளத்தைக் காத்தல் தமது முதற் கடமையாகக் கொள்ளல் வேண்டும். எமது தாய் மொழியையும் எமது பாரம்பரிய மதத்தையும் பேணிக் காக்க வேண்டியது அவசியமாகும். இவை எமது சொத்துகளே என்ற உணர்வை எமது குழந்தைகளுக்கு நாம் ஊட்ட வேண்டும். இன்று பல நாடுகளிலும் பரந்து வாழும் எமது புதிய தலைமுறையினருக்குத் தமிழ் மொழியே பொது மொழியாக அமையும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மலேஷியாவுக்கு நான் அண்மையில் சென்ற பொழுது அங்குள்ள எதிர்காலச் சந்ததியினர் தாய் மொழியைப் புறக்கணிப்பதைக் கண்டபோது மனவேதனையாக இருந்தது. இதே புறக்கணிப்பு பல வருடங்களாக மொறிஷியஸ் மற்றும் தென் ஆபிரிக்காவிலும் இருந்து வந்துள்ளது. இப்பொழுது தான் தாம் செய்த தவறை உணர்ந்து அங்கு வாழும் மக்கள் தமிழை மீட்டெடுக்க பல முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். இன்று இதே நிலைமை இங்கும் ஏற்படுவதைக் காண்கிறோம்.

ஒரு சில பெற்றோரே தமது குழந்தைகளுடன் தமிழில் பேசுவதிலும் அவர்களுக்குத் தமிழ் மொழியையும் சைவ மதத்தையும் போதிப்பதிலும் அக்கறை கொள்கிறார்கள். எனது பல்வைத்திய நிலையத்திற்கு வரும் தமிழக் குழந்தைகளுடன் முதலில் தமிழில் பேசுவதே எனது வழக்கமாகும். அதை குழந்தைகள் விரும்புகிறார்கள் எனினும் சில பெற்றோர்கள் குறுக்கிட்டு "டொக்டர்! இங்கிலீஸிலை கதையுங்கோ, அவருக்குத் தமிழ் சரியாக விளங்காது" என்று சொல்லுவார்கள். தமக்கு இயல்பாக வரும் தாய் மொழியில் பேசுவது இழிவு என நினைப்பவர்களை நினைக்கும் பொழுது கவலையாகத் தான் இருக்கிறது.

இன்று பலர் விளம்பரப் பிரியர்களாகி விட்டார்கள். பல்வைத்தியர்களுக்கு விளம்பரக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அளவுக்கு மீறிய விளம்பரங்கள் எமது தொழிலுக்கு இழுக்கை ஏற்படுத்தும் என்பதே உண்மை. ஆனால் எல்லோரும் சட்டத்தை மதிப்பதாகத் தெரியவில்லை!

இன்று எம்மத்தியில் இருக்கும் தொலைக்காட்சிகளில் முக்கிய பகுதி சினிமா அல்லது அது சம்பந்தமானவையாகத்தான் இருக்கின்றன. இது எமது பணத்தைக் கொண்டே எமது பண்பாட்டை உருக்குலைப்பதாகத் தெரிகிறது. நான் மலேஷியாவில் சைவ மாநாட்டில் கலந்து கொண்ட பொழுது ஒரு தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதியின் கூற்று எனக்கு நினைவு வருகின்றது. அவர் சொன்னார் "இன்றைய சினிமா இந்தியாவில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் தமிழர் கலாசாரத்தைச் சீரழிக்கும்."

எமது குழந்தைகளுக்குச் சூட்டப்படும் பெயர்கள் இன்று அர்த்தமற்றவையாகி விட்டன. பெயர்களை எண் சாத்திரத்திற்கேற்ப வைப்பதாகச் சொல்லி மிகவும் அசிங்கமான பெயர்களை வைத்து விடுகிறார்கள். குழந்தைச் செல்வங்களுக்கு நல்ல அழகான சின்ன தமிழ் அல்லது தெய்வத்தின் பெயர்களைத் தெரிவு செய்வதால் நாம் எமது பாரம்பரியத்தைக் காக்கிறோம் என்பதை நாம் உணர வேண்டும்.

(மறுபக்கம் வருக)

ஈழத் தமிழர்கள் பலர்கடந்த 20 வருடங்களாக இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களினாலும் போரினாலும் பல இன்னல்களை அனுபவித்து வந்துள்ளார்கள். எனினும் நாம் எவ்வளவிற்கு மாற்றமடைந்துள்ளோம்? இன்றும் இலங்கையில் 10 லட்சமோ 20 இலட்சமோ சீதனமாக வாங்கியதாகக் கூறிப் பெருமைப்படுகிறார்கள். எம்மிடையே உள்ள போட்டியும் பொறாமையும் குறைந்ததாகத் தெரியவில்லை. சல சங்கங்கள் ஒரு சிலரின் பதவி ஆசை காரணமாக இரண்டாகப் பிரிவடைந்துள்ளன. ஒரு சில அமைப்புகளில் தொடர்ந்து தலைமைப் பதவியை இறுகப் பிடித்தபடி சிலர் இருக்கிறார்கள். தாமாக விலகி சனநாயக முறைப்படி புதிய தலைவரைத் தெரிவு செய்ய இவர்கள் இடமளிப்பதில்லை. இந்தக் குறைபாடுகள் சில உலக அமைப்புகளிலும் காணப்படுகின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற மார்க்கம் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்கள் நடந்து கொண்ட முறை கவலைக்கிடமானதாகும். படிப்பாலும் பட்டங்களாலும் பதவிகளாலும் நாம் வளர்ச்சியடைந்த பொழுதிலும் கனடிய அரசியலில் நாம் இதுவரை எதையும் சாதிக்கவில்லை என்பதை எல்லோரும் அறிவோம். அரசியலில் இறங்கி வெற்றி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டதை நாம் உணர்கிறோம். நாம் ஒரு வளரும் சமுதாயத்தைச் சேர்ந்த காரணத்தால் எம்மிடையே மோதி சீரழிந்த பண்பாட்டு வரலாற்றை மாற்றி ஒற்றுமையாகச் செயலாற்றி சாதனைகள் புரிய வேண்டும் என்பதே எனது ஆவல்.

இந்த வகையில் இந்தியர்கள் வெற்றியடைந்துள்ளார்கள். இங்குள்ள அரசியல்வாதிகளின் வாலைப் பிடித்துக் கொள்வதில் எதுவித பிரயோசனமும் எமக்கேற்படப் போவதில்லை. ஆற்றல் உள்ள ஒரு சில தமிழர்கள் அடுத்த தேர்தலில் இறங்குவதற்குத் தம்மை தயார் செய்ய வேண்டியது அவசியமாகும்.

பொதுவாக வளர்ந்து வரும் நாடுகளிலிருந்து படித்தவர்கள் வெளியேறி வளர்ந்த நாடுகளில் குடியமர்வதால் புத்திஜீவிகளின் இழப்பு (Brain drain) வறிய நாடுகளுக்கு ஏற்படுகிறது என்பது பொதுவான கருத்தாகும். இதனால் அந்த நாடுகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. ஆனால் இன்று பெருமளவு மக்களின் வருகையால் (Substantial diaspora) அவர்களின் தாய் நாட்டிற்கு அனுப்பப்படும் பணம் பல மடங்காக உயர்ந்துள்ளது. இப் பணம் தகுந்த முறைகளில் முதலீடு செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் வெளியேறிய நாடுகள் கணிசமான அளவில் பயனடையும் வாய்ப்புகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இன்று கனடாவில் இருக்கும் அமைப்புகள் பல வகைகளில் ஈழத்திற்கு பண உதவிகள் செய்து வருகிறார்கள். அங்குள்ள பாடசாலைகள், கோயில்கள், சமூக அமைப்புகள், வைத்தியசாலைகள், அநாதை இல்லங்கள் இவற்றால் பெரிதும் பயனடைந்துள்ளன.

நாம் நாட்டிற்கு அனுப்பும் பணத்தில் பெரும் பகுதி பாவனைச் செலவினங்களுக்குப் (Consumption) போவதால் அவை வளர்ச்சிக்கு உதவுவதில்லை என்ற கருத்தும் உண்டு. அங்கு கிடைக்கும் பண உதவிகளால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன் அவர்களின் செலவினங்களும் அதிகரித்துள்ளன. வீடுகளைத் திருத்தவும் வாகனங்கள், தொலைபேசி போன்றவற்றை வாங்குவதற்கும் குழந்தைகளின் படிப்பிற்கும் வைத்தியச் செலவுகளுக்கும் பணம் உபயோகப்படுகின்றது.

சென்ற வருடம் உலக மட்டத்தில் வெளிநாடுகளில் நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ குடியமர்ந்த மக்களால் தமது சொந்த நாடுகளுக்கு அனுப்பப்பட்ட உத்தியோகப்பூர்வமான தொகை (Total remittances) 80 பில்லியனை எட்டிப் பிடித்துள்ளது என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்து வரும் பணம் இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுச் செலாவணியின் முதுகெலும்பாக இருப்பதாக அரசாங்கம் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளது. உல்லாசப் பிரயாணிகளின் தொகை வீழ்ச்சியடைந்த குறையை எம்மவர்கள் நிவர்த்தி செய்துள்ளார்கள். இங்கிருந்து செல்பவர்கள் பலர் தென்னிலங்கையில் சுற்றுலா நடத்துகிறார்கள்.

கனடாவில் உள்ள தமிழ் வைத்தியர்களின் அமைப்பு தமிழீழத்திற்குச் சென்று தொடர்ச்சியாக சேவை செய்ய ஆர்வம் காட்டி வருகிறது. ஒரு குழு சென்ற வருடம் அங்கு போய்வந்துள்ளது. இந்த முயற்சி பயனுடையதாக அமைய நாட்டில் உள்ள நிலைமை சாதகமாக அமைய வேண்டியது அவசியமாகும். கனடிய வைத்தியர்களுடன் உள்ளூர் வைத்தியர்களும் சேர்ந்து இயங்குவதால் இரு சாராரும் மக்களும் பயனடையவுள்ளார்கள். இதற்கு கனடிய அரசினதும் இலங்கை அரசினதும் பங்களிப்புத் தேவை.

அங்கு சென்று பழுதான பற்களைப் பிடுங்கியெறிந்து வருவதை ஒரு பெரும் சாதனையாக நான் கருதவில்லை. அங்குள்ள வைத்தியர்களே அதைச் செய்ய முடியும். நூற்றுக்கு மேற்பட்ட புதிய பல் வைத்தியர்கள் இலங்கையில் முழு நேர வேலைவாய்ப்பு இன்றி இருப்பதாகக் கூறப்படுகிறது. எமது அனுபவத்தையும் ஆற்றலையும் நவீன கருவிகளின் உபயோகங்களையும் அங்குள்ள பல் வைத்திய இளம் சந்ததியினருடன் பகிர்ந்து கொள்ளவே நான் விரும்புகின்றேன். அதனால் எமது சேவை பல மடங்காகின்றது.

பல் வைத்தியத்துறையில் சிகிச்சைகள் மட்டுமன்றி தடுப்பு முறைகளிலும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். Dental Hygienist, Dental Nurses போன்றவர்களை உருவாக்கி அவர்களின் மூலம் பற்களைப் பாதுகாப்பதில் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமானதாகும்.

இங்கிருந்து வைத்தியர்கள் மட்டுமன்றி பொறியியலாளர்கள், கல்விமான்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுனர்களும் தமது சேவைகளை வழங்க முன்வர வேண்டும்.

இலங்கையில் பணியாற்றும் வைத்தியர்களையோ, பல் வைத்தியர்களையோ இதர துறை வல்லுனர்களையோ இங்கு அழைத்து குறுகிய காலப் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதும் பயனுடையதாகும்.

மேலும், இங்கு பல வருடங்கள் சேவையாற்றியவர்கள் பொறுப்புகள் குறைந்தவர்கள் சிலர் தாய் நாட்டுக்குத் திரும்பிச் சென்று சேவையாற்ற விரும்புவார்கள். இதை ஆங்கிலத்தில் Return migration என்று கூறுவார்கள். This return is often seen as the conclusiion to a successful migration. அவுஸ்திரேலியா, மலேஷியா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு அந்த நாட்டு மக்கள் பலர் திரும்பியுள்ளார்கள். இலங்கையில் போர்ச் சூழல் முற்றாக மாறி நிரந்தர சமாதானம் இன்னும் நிலவவில்லையாயினும், எனக்குத் தெரிந்த சிலர் இங்கிருந்து அங்கு திரும்பிச் சென்று சேவையாற்றுகின்றார்கள்!

எமது மக்கள் நாடு திரும்புவதற்கேற்ப அங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். சிறந்த வைத்திய வசதி, இருப்பிட வசதி, தொழில் செய்வதற்கு உபகரணங்கள், நவீன முறைகள் என்பன அவசியமானதாகும். மேலும் விசா அல்லது இரட்டை பிரஜாவுரிமைகள் இலகுவில் வழங்கப்பட வேண்டும்.

தாய் நாட்டிற்குச் சென்று கடமையாற்ற வேண்டும் என்ற உணர்வு உள்ளவர்கள் பலர் இலங்கையில் உள்ள அரசியல் நிலைமை சீரடையும் பட்சத்தில் திரும்பிச் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை. இதனால் ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து மேற்கு நாடு செல்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து விடும்.

புலம்பெயர்ந்த தமிழர் கடமை



காசி ஆனந்தன்

புலம்பெயர்ந்த தமிழர்' என்பது புகழுக்குரிய சொற்றொடர் அல்ல. என்னதான் தங்கத்தில் குளித்தாலும் ஏதிலி ஏதிலி தான். இன்னொரு நாட்டின் குடியுரிமை பெற்றவர்களாக நாங்கள் இருக்கின்றோம். நாங்கள் ஏதிலிகள் இல்லை எனச் சிலர் மார்தட்டலாம். சொந்த நாட்டை இழந்தவனுக்கு எந்த நாட்டிலும் மதிப்பில்லை என்பதே வரலாறு. குடியுரிமை பெற்றதாலேயே அந்த நாடு தாய்நாட்டுக்கு ஈடாகி விடாது.

இங்கிலாந்தில் குடியுரிமை பெற்ற ஆபிரிக்கக் கறுப்பு இனத்தவன் எந்தக் காலத்திலாவது இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் ஆக முடியுமா? அல்லது ஜேர்மனியில் குடியுரிமை பெற்ற துருக்கிய இஸ்லாமியன் எந்தக் காலத்திலாவது ஜேர்மனியின் அரசுத் தலைவராக முடியுமா? குடியுரிமையைத் தந்தவனே அதனைப் பறிமுதல் செய்யும் அதிகாரமும் கொண்டிருக்கிறான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அடுத்தவனில் தங்கி வாழும் வாழ்க்கை என்பது எப்படிப் பார்த்தாலும் அறுந்து விழக் கூடிய கயிற்றில் தொங்கி வாழும் வாழ்க்கையே. தன் தாயகத்தை விடுதலை பெற்ற நாடாகக் கொண்டவன் பிற நாடொன்றில் குடியுரிமை பெற நேர்ந்தால், ஓரளவு தலை நிமிர்வோடு உலாவலாம். குடியேறிய நாட்டின் சொந்தக்காரனுக்கு உள்ள வாய்ப்புகள் கிடைக்காமற் போனாலும் குனிவற்ற வாழ்வாவது கிடைக்கும்.

குடியுரிமை பெற்ற தமிழனுக்குக் கிடைக்காத மதிப்பு அமெரிக்காவில் குடியுரிமை பெற்ற யூதனுக்குக் கிடைக்கிறது. இஸ்ரேல் விடுதலை பெற்ற நாடாகவும் தமிழீழம் அடிமைப்பட்ட நாடாகவும் இருப்பதே காரணம். எனவே, தாய்மண்ணில் கிடைக்கும் உரிமை தஞ்சம் புகுந்த நாட்டில் புலம்பெயர்ந்தோருக்குக் கிடைக்காது என்பதையும், அடிமைப்பட்ட தாய் மண்ணில் இருந்து பிற நாட்டில் குடியுரிமை பெறுகிறவனுக்கு மதிப்பே கிடைப்பதில்லை என்பதையும் புலம்பெயர்ந்த தமிழர் புரிதல் வேண்டும்.

நிமிர்ந்த எதிர்காலத்திற்கான திட்டமிடுதலுக்கும், திட்டமிட்டதை நிலைநாட்டுதலுக்கும் இப்புரிதல் தேவை. தங்கள் தேசிய இன அடையாளத்தைக் காத்தல் புலம்பெயர்ந்த தமிழர் முதற் கடமை. தமிழர் போன இடங்களிலெல்லாம் தம்மை மறந்து அந்த மண்ணிற்குரியவர்களாக மாறிப் போனார்கள் என்பதே தமிழரது இழிந்த வரலாறாகும்.

500 ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கீச நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து மட்டக்களப்பில் குடியேறிய 2000 போர்த்துக்கீசியர் தங்கள் வீடுகளில் போர்த்துக்கீசிய மொழியையே பேசுகின்றனர். ஆனால் 150 ஆண்டுகளுக்கு முன்பு மொறிஷியசுக்குப் போன தமிழர் தமிழை மறந்து கிரியோல் பேசும் மொறிஷியசுக்காரர் ஆகிவிட்டனர். இந்தவாறு வரலாற்றில் இனியும் நடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது புலம்பெயர்ந்த தமிழர் கடமையாகும்.

உன் தாய் மண்ணில் நீ இல்லாமல் இருக்கலாம். ஆனால், உன்னில் தாய் மண் இருக்கிறது. நேற்றும் இன்றும் நாளையும் நீங்கள் தமிழீழத்தின் பிள்ளைகள் என்பது உங்கள் உடலின் குருதியூற்றும் உணர்வும் உயிர்ப்பும் ஆதல் வேண்டும். தமிழீழத்தின் இழந்த விடுதலையை மீட்டெடுத்தலே புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் ஒரே நினைவாதல் வேண்டும். பனை மரத்தின் வேர் புலம்பெயர்ந்த தமிழர் நெஞ்சில் ஆழப் பதிவதாக.

வெள்ளைக்கார நாடுகளிலே தங்கள் குடும்பத்தின் எதிர்கால வாழ்க்கை என்று கருதி சிலர் தங்கள் பிள்ளைகளை வெள்ளைக்காரர்களாக்கிக் கொண்டிருக்கின்றனர். நாளை வெள்ளைக்கார நாடுகளாலும் இவர்கள் வெறுத்தொதுக்கப்படலாம். தமிழீழத்தாலும் இத்தகையோரது மனமாற்றமும் இனமாற்றமும் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். பிரான்சில் உங்கள் பிள்ளை பிறந்திருக்கலாம். ஆனாலும் அந்தப் பிள்ளையின் தாய் தமிழீழமே. காக்கையின் கூட்டில் பிறந்த குயிலின் குஞ்சு காக்கையாகி விடாது என்பதைப் புலம்பெயர்ந்த தமிழர் நினைவிற் கொள்ள வேண்டும்.

"என் பேரனுக்குத் தமிழே பேச வராது" என்று பெருமைப்படும் பாட்டி, பிள்ளை தன்னை "மம்மி" என்று அழைப்பதையே விரும்பும் தாய், இரண்டு தமிழ்ச் சொற்களோடு இருபது ஆங்கிலச் சொற்கள் கலந்து பேசித் தமிழுக்குப் பாடை கட்டும் அப்பா, பிறந்த நாள் விழாவில் "Happy birthday to you" பாடும் பிஞ்சிலே பழுத்த பிள்ளைகள், திருமண விழாவில் "கேக்" நடனமும் "பிரேக்" நடனமும் ஆடித் தமிழர் பண்பாட்டைக் கடித்துக் குதறும் "தண்ணிக் கூத்தர்கள்" தமிழீழத் தேசிய இனத்தின் அடையாளத்தை உருச் சிதைத்துக் கொண்டிருக்கும் கொடுமைக்கு உடன் முற்றுப்புள்ளி தேவை.

தமிழ்நாடு அழுகிப் போய்க் கிடக்கிறது. புலம்பெயர்ந்த தமிழர்களே! தமிழ்நாட்டின் ஊடகங்களை தலையில் வைத்துக் கூத்தாடாதீர்கள். இங்கே தொலைக்காட்சிக்கு 'சண்' என்று பெயர் வைக்கிறான். செய்தி இதழுக்கு 'விசிட்டர்' என்று பெயர் வைக்கிறான். திரைப்படத்திற்கு 'ஜென்டில்மேன்' என்று பெயர் வைக்கிறான். "முஸ்தப்பா, முஸ்தப்பா Don't worry முஸ்தப்பா" என்று திரைப்படத்தில் ஆங்கிலம் கலந்து பாடித் தமிழ்த் தாய் முகத்தில் கரி பூசுகிறான். தசை வெறிக் காட்சிகளினால் திரைப்படங்களை நிறைத்து தமிழ்ப் பண்பாட்டுக்கு சாவு மணி அடிக்கிறான். புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் அடையாளத்தை தொலைத்துக் கட்டுவதில் அவர்கள் வாழும் பிறநாடுகளில் சுற்றாடல் மட்டுமல்ல, தமிழ் நாட்டில் இருந்து வரும் ஊடகங்களும் பெரும் பங்கினை வகிப்பதை நாம் புரிதல் வேண்டும்.

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பெயர் கொண்ட தமிழ்ச் செய்தி இதழ்களையும், திரைப்படங்களையும் புறந்தள்ளுங்கள். உங்கள் பணத்தைக் கொண்டே உங்களை ஒழித்துக் கட்டும் ஊடகங்கள் இவை. பணம் கொடுத்துத் தமிழ் நாட்டில் இருந்து நீங்கள் வாங்கும் பச்சையும் கொச்சையுமான படச்சுருள்கள், படச்சுருள்கள் அல்ல பாம்புச் சுருள்கள் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர் நடத்துகின்ற வானொலிகளும், தொலைக்காட்சிகளும் பொழுதுபோக்கு ஊடகங்களாக இருந்தாலும் தமிழ்மொழி காப்பதிலும், அதனை வளர்ப்பதிலும், பயிற்றுவித்தலிலும், அவை பெரும் பங்காற்ற முடியும் என்பதை அவ்வத்துறை சார்ந்தோர் உணர வேண்டும். ஆங்கிலத்தையும் ஆரியத்தையும்

(மறுபக்கம் வருக)

அவற்றுக்கு அப்பாலுள்ள அயலவன் மொழிச் சொற்களைப் புகுத்தாமல் உங்கள் சொந்த மொழியில் முடிந்தளவு நடத்துங்கள். பிறமொழியைக் கலப்பது உங்கள் அன்னை மொழிக்கு ஊறு செய்வதாக நீங்கள் எண்ணவில்லையா?

"அடையாளத்தைக் காப்பது" என்பதில் தாய்மொழி காத்தலே அடையாளத்தின் ஆணிவேர் காத்தலாகும். "என் பேரன் பிரான்சில் பிறந்தான், அவன் பிரெஞ்சு மொழி தான் பேசுவான்" என்று பெருமைப்படுகிறார்கள். காக்கையின் கூட்டில் பிறந்தாலும் குயில் காக்கை மொழி பேசுவதில்லை என்பதைக் கூட இவர்கள் மறந்து போனார்கள். தங்கள் பிள்ளைகளோடும் வீட்டுக்கு வரும் உறவினர்களோடும் புலம்பெயர்ந்த தமிழர் தமிழிலேயே பேச வேண்டும்.

தமிழர் பண்பாட்டைக் காப்பாற்றிக் கொள்வதும் புலம்பெயர்ந்த தமிழரது தலையாய கடமைகளில் ஒன்றாகும். கனடாத் தமிழ் வார இதழ் ஒன்றில் புலம்பெயர்ந்த தமிழீழப் பிள்ளையொன்றின் பிறந்த நாள் விபரம் ஒன்று இவ்வாறு பதிவாகியிருந்தது. பிறந்த நாள் கொண்டாடுபவர் டியூலன். இவரை லிஷோன், நிலுஷா, மிளிர்ஷா, சஷாரல், மெரல் ஆகியோர் வாழ்த்துகிறார்கள். என்ன பெயர்கள் இவை. தமிழ்க் குழந்தைகளுக்கு இப்படியெல்லாம் பெயர் வைப்பது சரிதானா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

அண்மையில் மொன்றியாலில் ஒரு குழந்தைக்கு சியான் (Chien) என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நாகரிகமான பெயர் என்பது அவர்களுடைய நினைப்பு. குழந்தை வளர்ந்து பள்ளிக்கூடம் சென்ற போது, கூடப் படித்த மாணவர்கள் அப்பிள்ளையைக் கிண்டல் செய்த பொழுது தான் உண்மை தெரிய வந்தது. பிரெஞ் மொழியில் சியான் என்றால் நாயாம். புலம்பெயர்ந்த தமிழர் தங்கள் பிள்ளைகளுக்கு தூய தமிழ்ப் பெயர்களையே சூட்ட வேண்டும். சேரன், சோழன், மாறன், வளவன், வள்ளுவன், இனியாள், நங்கை, உமையாள், அன்பரசி, அருளரசி, அறிவரசி என்று வையுங்கள். இந்தப் பெயர்களுக்கு ஒரு பொருளிருக்கும். ஒருவேளை ஈழம் திரும்ப வேண்டி வந்தால் மதிப்பும் இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

உங்கள் உற்றாரது, உறவினரது, நண்பரது சின்னஞ் சிறார்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறங்க உறைவிடமின்றி, பிணிக்கு மருந்தின்றிப், படிக்கப் பள்ளியின்றி உருக்குலைந்து போவதை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். இந்த நிலையில் பல்லாயிரம் வெள்ளி செலவிட்டு பிறந்த நாள் கொண்டாட்டங்களும் பூப்பு நீராட்டு விழாக்களும் நடத்த வேண்டுமா? இவற்றை நிறுத்தி இதனால் மீதப்படும் பணத்தை ஆதரவற்ற ஈழக் குழந்தைகளுக்கு அனுப்பி வையுங்கள். வருங்காலம் உங்களை வாழ்த்தும்.

புலம்பெயர்ந்த தமிழர்களே! தமிழீழ விடுதலைப் போருக்கும், அப்போரை முன்னெடுத்துச் செல்லும் ஒப்பற்ற தலைமைக்கும் என்றென்றும் துணை இருப்போம் என புயலின் மீதும் நெருப்பின் மீதும் ஆணை எடுங்கள்.

சேரனாய், சோழனாய், பாண்டியனாய் தம்மிடையே மோதிச் சீரழிந்த பண்பாட்டையும் வரலாற்றையும் மாற்றி "குழுக்கள்" கட்டுதலை நிறுத்தி, புலம்பெயர்ந்த தமிழர்களே! சேர்ந்து செயலாற்றுங்கள்! தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு காத்து தமிழீழத் தேசிய இனமாய் நிமிர்வோடு விடுதலை பெற்ற தமிழீழம் திரும்புவோம்.

நன்றி: உலகத் தமிழர், கனடா



புதுஅகவையில் பொன் ஏடே நீ வாழி!

'தீவகம்' வே. இராசலிங்கம்

அகவை பதின்மூன்று ஆகிப் பணியேடு
தகவல் புதுஆண்டு தருகிறது - மகவை
புதிதாகக் காணும் பெற்றதாய்த் தமிழர்க்கு
அதியமான் கனியாம் இது!

புலமான நாடும் புதுசான சட்டமுமாய்
நிலமீதில் நாங்கள் நீளுகையில் - கலமாகி
வீதிகளும் வீதிகளும் விளக்கும் தகவல்தான்
மதியைப் பதிக்கும் மலர்!

மண்மானம் தமிழ்மானம் மானிடர்க்கு இனமானம்
தன்மானம் தந்துவரும் தகவல் - இன்நாளில்
கலைபாரம் பரியநிலை காட்டும் விழாக்களையே
அலையாக எடுத்துவரும் அறி!

தகவல் துணையாகத் தான்வளர்ந்த பாதைவிட்டு
முகத்தை வறுத்தவர்கள் வீண் - அகத்தில்
ஒன்று குடியிருக்க ஊரறிய இன்னொன்றாய்
நின்றவர்கள் பாதையிலே நெடி!

வைத்தால் பாசம் வறுத்தால் போம்நேசம்
கைத்தலத்தில் வைத்தவராம்திரு - சத்துமிக
புத்தகத்தில் உலகில் புதுசாக்கித் தரும்பாணி
எத்தனை பேர்க்குஉண்டு எடு!

தமிழர் தகவல் தந்ததோர் புதுஆண்டில்
அமிழ்தாய் என்வாழ்த்து ஆகட்டும் - குவியாகி
நின்று தமிழ்உலகை நீராட்டி நல்வழியில்
வென்று வளர்கநிதம் நீடு!

பிறந்த நாட்டுக்குப் பெருமையும், புகுந்த நாட்டுக்குப் புகழும் சேர்ப்போம்!



நக்கீரன்

ஒரு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் எனது ஊரைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்குச் சுமார் பத்து மைல் தூரத்தில் இருக்கும் ஒருவருக்கு பெற்றோர்கள் திருமணம் பேசி முடித்தார்கள். இதனை அறிந்த உற்றாரும் மற்றோரும் கவலை அடைந்தார்கள்.

"சின்னப் பெண். இப்படித் தூர இடத்துக்கு வாழ்க்கைப்பட்டால் ஒரு அந்தரம் ஆத்திரத்துக்கு யார் ஓடிப் போய் உதவப் போகிறார்கள்? என்ன இருந்தாலும் பெண்ணின் பெற்றோர் அந்தப் பிள்ளைக்கு தூரத்தில் மாப்பிள்ளை பார்த்திருக்கக் கூடாது" ஊரார் இப்படிப் பேசிக் கொண்டார்கள்.

பயணம் கால்நடையாக அல்லது மாட்டு வண்டிலில் நடந்த போது பத்து மைல் மிக நீண்ட தூரமாக இருந்தது.

இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் கனடாவில் இருக்கும் முன்பின் தெரியாத ஒருவருக்கு வாழ்க்கைப்பட தாலிக் கொடியைக் கொடுத்து கட்டுநாயக்காவில் இருந்து பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்கிறார்கள்.

இந்தளவுக்கு இன்று உலகம் சுருங்கி விட்டது. காலையில் பியேர்சன் விமான நிலையத்தில் விமானத்தை பிடிப்பவர் மதியச் சாப்பாட்டை இலண்டனில் வைத்துக் கொண்டு இரவுச் சாப்பாட்டுக்கு கொழும்புக்குப் போய் விடுகிறார்!

இந்த வேகத்தை வைத்துத் தான் இன்று உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்டது (Global village) என்கிறார்கள்.

மாட்டு வண்டில் வேண்டாம். கப்பல்கள் இருந்த காலத்தில் இன்னும் நாம் இருந்திருந்தால் தமிழர்கள் கனடா உட்பட ஏனைய மேற்குலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்திருக்க முடியுமா?

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பல நாடுகளைப் பிடித்தாண்ட ஆங்கிலேயருக்கு அந்த நாடுகளில் புதிதாக ஆரம்பித்த கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்களில் கூலி வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்ட போது தமிழ் நாட்டில் இருந்து தமிழர்களை இலட்சக் கணக்கில் அழைத்துப் போனார்கள்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் இலங்கை, பிஜி தீவு, தென்னாபிரிக்கா, மொறிஷியஸ், றீயூனியன், மடகாஸ்கர், கயானா போன்ற நாடுகளுக்கு கப்பல்களில் ஆடு மாடுகளை ஏற்றிச் செல்வது போல் ஏற்றிச் சென்று இறக்கி விடப் பட்டார்கள்.

மழையிலும் வெய்யிலிலும் பனியிலும் மாடாய் உழைப்பதற்கு தமிழர்கள் தான் தோதானவர்கள் என்று வெள்ளைக்காரன் எப்படியோ மணந்து பிடித்து விட்டான்! ஆங்கில அகர முதலியில் இடம்பிடித்துக் கொண்ட ஐந்தாறு தமிழ்ச் சொற்களில் கூலியும் ஒன்று!

இப்படிப் புலம்பெயர்ந்த தமிழர்கள் நாளடைவில் தங்கள் தாயகத்தோடான தொடர்பு அற்றுப்போய் தங்கள் மொழி, கலை, கலாசாரத்தை இழந்தார்கள். சமயம் ஒன்று மட்டுமே அவர்களது அடையாளத்தை கொஞ்சமேனும் காப்பாற்ற உதவியது.

இன்று இப்படிப் புலம்பெயர்ந்து தங்கள் முகவரியைத் தொலைத்த மக்கள் மீண்டும் தங்கள் வேர்களைத் தேட ஆரம்பித்துள்ளார்கள். பெரிய அளவில் இல்லாவிட்டாலும் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழைப் படிப்பித்துக் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். அதற்கான ஆசிரியர்களை, பாட நூல்களை தமிழ்நாடு அரசு கொடுத்து உதவுகிறது.

அண்மையில் மொறிஷியஸ் தமிழர்கள் தங்கள் கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதென முடிவு செய்து, அதற்கான பயிற்சியைப் பெற தமிழ்நாட்டுக்கு அர்ச்சகர்களை அனுப்பி வைத்துள்ளார்கள்.

இந்த மாற்றத்துக்கு மூன்று முக்கிய காரணிகளைக் கூறலாம். (1) உலகமயம் (2) தகவல் தொழில்நுட்பம் (Information technology) (3) தமிழீழ விடுதலைப் போராட்டம்.

இன்று தகவல் தொழில்நுட்பம் மற்றும் பயணம் இரண்டிலும் ஏற்பட்டுள்ள புரட்சி காரணமாக உலகம் ஒரு கிராமமாக மாறிவிட்டது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் புலம்பெயர்ந்த தமிழர் ஊருக்கு ஒரு கடிதம் போட்டால் அது போய்ச் சேர குறைந்தது ஆறு மாதம் பிடிக்கும். பதில் வர மேலும் ஆறு மாதம் எடுக்கும். இன்று ஐந்து விநாடியில் தொலைபேசி மூலம் பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பவரோடு தொடர்பு கொள்ள வசதிகள் இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழர்கள் இழந்த தன்மானத்தை, தேசிய அடையாளத்தை மீளப் பெற உதவியுள்ளது. உலகம் வாழ் தமிழர்களுக்கு கருணாநிதியை அல்லது ஜெயலலிதாவை விட தேசியத் தலைவர் பிரபாகரனை நன்கு தெரிகிறது.

தென்னாபிரிக்காவில் வாழும் ஐந்து இலட்சம் தமிழர்களிடையே இந்த மாற்றம் வெளிப்படையாகத் தெரிகிறது.

எண்பதுகளின் பிற்பகுதியில் இருந்து தான் கனடாவுக்கு தமிழீழத் தமிழர்கள் பெருமளவு புலம்பெயர்ந்தார்கள். ஒரு புதிய சமூகம் என்ற முறையில் கனடியத் தமிழர்களது வளர்ச்சி மிகவும் மெச்சத்தக்கது. வேறெந்த சமூகத்தையும் விட கைத்தொழில், கல்வி, பொருளாதாரம் போன்ற துறைகளில் தமிழர்களது வளர்ச்சியின் வேகம், கனபரிமாணம் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

கல்வியை எடுத்துக் கொண்டால் தமிழ் மாணவர்களது சாதனை மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படும் அளவுக்குப் போற்றத்தக்கதாக இருக்கிறது. உயர்கல்விக்கு கனடிய பல்கலைக்கழகங்கள் வழங்கும் வாய்ப்பை நன்கு பயன்படுத்தி ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பல்வேறு துறைகளில் படித்துப் பட்டம் பெற்று வெளியேறி நல்ல பதவிகளிலும் அமர்கிறார்கள்.

பிறந்த நாட்டில் உயர்கல்விக்கு பல்கலைக்கழகங்களின் கதவுகள் திறமை அடிப்படையில் தமிழ் மாணவர்களுக்குக் கிட்டத்தட்ட மூடப்பட்டுக் கிடக்கிறது. ஆனால் கனடாவில் அவை அகலத் திறந்து வைக்கப்பட்டுள்ளது!

கனடியத் தமிழர்கள் பலர் வயது காரணமாகவும் போதிய கல்வித் தகைமையின்மை காரணமாகவும் செய்வினைத் திறம் (Skills)

(மறுபக்கம் வருக)

இல்லாத குறையாலும் சமூக பொருளாதார ஏணிப் படிகளில் ஏறுவது பெரிய அறைகூவலாக இருப்பது உண்மைதான்.

ஒரு வாழைக் குட்டியை பிடுங்கி நட்டால் அது போடும் குலை பெரிதாக இருக்காது. ஆனால் அந்தக் குட்டியின் குட்டி அப்படியில்லை. அது மதமதவென வளர்ந்து பெரிய குலை தள்ளும்.

இதே போலத்தான் பெற்றோர்களது முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கும் காரணிகள் அவர்களது பிள்ளைகளுக்கு இருக்கப் போவதில்லை.

தொழில்துறையை எடுத்துக் கொண்டால் பெரும்பாலான தமிழ்க் கனடியர்கள் வாங்கி விற்கும் சில்லறை அல்லது மொத்த (Retail or wholesale) வணிகத்தில் அல்லது சேவைத் தொழிலில் (Service industry) ஈடுபட்டுள்ளதையே காண்கிறோம். ஒரு சிலர் தான் உற்பத்தித் தொழிலில் (Manufacturing) இறங்கியுள்ளதைப் பார்க்கிறோம். தமிழர்கள் யாராவது கட்டிடத் தொழிலில் (Construction industry) ஈடுபட்டுள்ளார்களா என்பது தெரியவில்லை.

பொருள் ஈட்ட வேண்டும் என்றால் இந்த உற்பத்தித் தொழில், கட்டிடத் தொழில் போன்ற தொழில்களில் தமிழர்கள் ஈடுபட வேண்டும். இதற்கு பெரிய அளவிலான முதலீடு தேவை என்பது உண்மைதான். இருந்தும் சில்லறை, மொத்த வணிகம் இரண்டிலும் உள்ளவர்கள் இப்படியான தொழிலில் ஒரு கண் வைத்திருக்க வேண்டும். இதில் யூதர்களை நாங்கள் முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

The first Jews immigrated to Canada in the 1750's. They too had to compromise their Jewish identity in order to gain entrance into the New World. Canada was under rule of the French colonizers. So Jews, and in fact all non-Catholics, were prohibited from settling.

கனடாவிற்கு யூதர்கள் 1750களில் தான் வர ஆரம்பித்தார்கள். பெரும்பாலோர் அமெரிக்காவில் இருந்துதான் குடிபெயர்ந்தார்கள். அப்போது கனடா பிரான்சின் ஆட்சியில் இருந்தது. கத்தோலிக்கர் அல்லாத யாரும் குடியேற அனுமதிக்கப்படவில்லை. எனவே அவர்கள் தங்கள் உண்மையான அடையாளத்தை மறைக்க வேண்டியிருந்தது.

கனடாவைப் பிரித்தானியர் பிடிக்கும் மட்டும் யூதர்கள் தான் அதன் பொருளாதாரத்தை தாங்கிப் பிடிப்பதில் பெரும் பங்கு வகித்தார்கள். அவர்களிடம் இருந்த கப்பல்கள் கனடாவிற்கும் பிரான்சிற்கும் இடையில் அங்கும் இங்குமாக ஓடி உணவு, பொருட்கள், ஆயுதங்களை கொண்டு வந்து குவித்தன.

1851 இல் எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி 197 யூதர்களே மேல்-கீழ் கனடாவில் இருந்தார்கள். 1851 இல் இந்த எண்ணிக்கை 451 ஆக அதிகரித்தது. 1850 - 1900 வரை ஐரோப்பாவில் இருந்து யூதர்கள் வரத் தொடங்கினார்கள். 1900 - 1920 காலப் பகுதியில் 120,000 யூதர்கள் குடியேறினார்கள். 1920 - 1940 இடையில் 60,000 பேர் வந்தார்கள். இரண்டாவது உலக யுத்தத்திற்கும் 1980க்கும் இடையில் 135,000 யூதர்கள் அமெரிக்கா, வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் இருந்து வந்து குடியேறினார்கள்.

1991ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி யூதர்களது எண்ணிக்கை 356,000 என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதில் ரொறன்ரோவிலும் (162,000) மொன்றியலிலும் (98,000) வன்கூவரிலும் (25,000) அதிகமான யூதர்கள் வாழ்கிறார்கள்.

இன்று கனடாவின் ஊடகம், தொழில், தாவரச் சொத்து (Real Estate) போன்ற துறைகளில் அவர்கள் செலுத்தும் செல்வாக்கு மிக மிக அதிகமாகும். மேலும் மருத்துவம், சட்டம், கணக்கியல் போன்ற துறைசார் தொழில்துறைகள் யூதர்களது கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன.

அமெரிக்காவில் யூதர்கள் செலுத்தும் ஆதிக்கம் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. அரசியல், கைத்தொழில், ஊடகம், பொழுதுபோக்கு போன்ற துறைகளில் அவர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள். அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கையை யூதர்களே நிர்ணயிக்கிறார்கள். இதனால் அமெரிக்கா சரி பிழை பார்க்காது உலக அரங்கில் இஸ்ரேல் நாட்டை கண்மூடித்தனமாக ஆதரித்து வருகிறது.

கோடி கோடியாகப் பணம் புரளும் ஹொலிவுட்டை எடுத்துக் கொண்டால் பெரும்பாலான படத் தயாரிப்பாளர்கள், நடிக நடிகைகள், கதை வசன கர்த்தாக்கள் யூதர்களே!

The Jewish Post And Opinion of December 6, 1994 states:

"Jews dominate Hollywood today as they did in its infancy, The Jewish presence in Hollywood is a historic fact, A majority of the producers and directors are Jewish while the Writers Guild is practically 70% to 100% Jewish!"

எல்லாம் சரி கனடாவில் தமிழர்கள் தங்கள் தேசிய அடையாளத்தைக் காப்பாற்ற முடியுமா? தமிழ் வாழுமா? அல்லது இந்தத் தலைமுறையோடு அல்லது அதிகபட்சம் அடுத்த தலைமுறையோடு தமிழ் அழிந்து போகுமா? இன்றைய பட்டிமன்றத்துக்குரிய கருப்பொருளாக இக் கேள்விகள் அமைகின்றன.

இந்தக் கேள்விக்கு விடை மிகவும் சிக்கலானது. இளைய தலைமுறையைச் சேர்ந்த சிலர் தான் தமிழை விரும்பிக் கற்று வருகிறார்கள். பெரும்பாலோர் தமிழை மிக வேகமாக இழந்து வருகிறார்கள். வீட்டு மொழி ஆங்கிலமாக மாறி வருகிறது. இதற்கு கனடிய சூழல் ஒரு காரணம்.

கனடிய சூழலில் தமிழை பேச்சு மொழியாகவோ (வீட்டில் தவிர) கற்கை மொழியாகவோ பயன்படுத்தப்படும் வாய்ப்பு மிக மிகக் குறைவுதான்.

ஒரு மொழி வளர வேண்டும் என்றால் அந்த மொழி நாளாந்தம் பயன்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்தப்படாத பண்டம் பாழாகி விடும். மொழிகள் அவற்றைப் பயன்படுத்துவோர் தேவைக்கு ஏற்பத்தான் வளரும். எவ்வளவு வளர வேண்டும் என்று எண்ணுகிறார்களோ அந்தளவுக்குத் தான் வளரும். அதற்கு மேல் வளராது.

நான் தொடக்கத்தில் குறிப்பிட்ட தகவல் தொழில்நுட்பம், உலகமயப்படுத்தல் தமிழை வளர்க்க உதவும். முன்போலல்லாது தமிழைப் படிக்க கணினிகள், சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் நிச்சயம் உதவும்.

மறுபுறம் இதே தகவல் தொழில்நுட்பம் உலக மயப்படுத்தல் தமிழ்மொழிக்கு பெரிய அச்சுறுத்தலாகவும் இருக்கிறது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் உலகமயப்படுத்தல் ஒரு மொழியின் பயன்பாட்டையும் ஆதிக்கத்தையும் தோற்றுவித்துள்ளது. அந்த மொழி ஆங்கில மொழியாகும். இன்று ஆங்கிலம் வெகு விரைவாக உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவி வருகிறது. அதாவது உலகத்தின் பொதுமொழியாக (Lingua franca) ஆங்கிலம் உயர்த்தப்பட்டுள்ளது.

இப்போது பிரித்தானியாவை விட இந்தியாவில் அதிகளவு ஆங்கில நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருகின்றன.

(எதிர்ப்பக்கம் வருக)

வேறெந்த மொழியையும் விட ஆங்கிலத்தில் அறிவியல் தொடங்கி வணிகம் வரை ஏராளமான நூல்கள், தகவல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இதனால் இந்த மொழி பற்றிய அறிவு உயர் படிப்புக்கு, தொழிலுக்கு இன்றியமையாது இருக்கிறது. இன்று எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகப் பள்ளிகளில் படிப்பிக்கப்பட்டு வருகிறது.

உலகம் ஒரு மொழி நோக்கி ஓடுவதால் ஏனைய மொழிகள் அழிந்துபடும் அபாயம் தோன்றியுள்ளது என ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூக, பண்பாட்டு கழகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அமைப்பு அடுத்த 100 ஆண்டுகளில் வழக்கொழிந்து போக இருக்கும் மொழிகளின் பட்டியலையும் வெளியிட்டுள்ளது. இதில் பெரிய வியப்பு என்னவென்றால் அந்தப் பட்டியலில் தமிழ் மொழியும் சேர்க்கப்பட்டுள்ளது.


கனடிய தமிழர்கள் தமிழை மறந்துவிட்டு அல்லது அதனை இழந்துவிட்டு மருத்துவம், சட்டம், பொறியியல், கைத்தொழில், அரசியல் ஆகிய துறைகளில் வளர்ச்சி அடைந்தால் அது வளர்ச்சியாக இருக்காது. மாறாக அது வீக்கமாகத்தான் இருக்கும்.

தமிழும் வளர வேண்டும். தமிழனும் உயர வேண்டும். இதற்கு வழி இருக்கிறதா?

இருக்கிறது. தமிழனுக்கு ஒரு சுதந்திரமான நாடு வேண்டும். யூதர்களுக்கு எப்படியொரு இஸ்ரேல் நாடோ அதுபோல தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும்.

யூதர்கள் 1800 ஆண்டுகள் நாடு விட்டு நாடு அகதிகளாய் அலைந்ததில் தங்களது தாய்மொழியான ஹீப்புரூ மொழியை அடியோடு மறந்து போனார்கள். 1948 இல் இஸ்ரேல் என்றொரு நாடு தோன்றிய பின்னர் ஹீப்புரூ மொழிக்கு புத்துயிர் கொடுக்கப்பட்டது. இன்று ஹீப்புரூ தான் இஸ்ரேல் நாட்டின் உத்தியோக மொழி!

ஆனால் நாடு உருவாகுமட்டும் காத்திராமல் கோயில் தலங்களுக்குப் பதிலாக முழு நேர பள்ளித்தலங்கள் கட்ட வேண்டும். அங்கே தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்களது மொழி, பண்பாடு, வரலாறு, ஒழுக்கம் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். கனடியத் தமிழர்களாகிய நாம் இங்குள்ள வாய்ப்பையும் வசதிகளையும் தக்கவாறு பயன்படுத்தி கல்வி, கைத்தொழில், பொருளாதாரம், அரசியல் என சகல துறைகளிலும் முன்னேறி பிறந்த நாட்டுக்குப் பெருமையும் புகுந்த நாட்டுக்குப் புகழும் சேர்ப்போம்.



கலை பண்பாட்டு விழுமியங்களும் புதிய தலைமுறையின் தேடல்களும்

பொன்னையா விவேகானந்தன்

"கலை பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு திகழும் ஒரு மனிதக் கூட்டமானது, ஓர் இனமாக வரையறுக்கப்படும்" - இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் ஒன்று குறிப்பிடுகின்றது.

மேற்குறித்த இலக்கணத்திற்கியைந்த இனங்களில் தமிழினமும் ஒன்று என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை. தாய்நாடு விட்டகன்று அந்நிய மண்ணில் நிரந்தர வாழ்களத்தை அமைக்க முயன்று கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகக் குழுமங்களின் எதிர்காலம் குறிப்பிட்ட இலக்கணத்திற்கமையுமா என்பது ஐயத்துக்குள்ளாகலாம்.

ஆளுமைமிக்க பொதுமொழியினைக் கொண்ட ஒரு நாட்டில், பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் கூடி வாழ்கின்ற போது சூழல் பரிமாற்ற மொழியாகி, அப் பொதுமொழியே ஆதிக்கம் பெறுகின்றது. இந்நிலையில் கருத்துப் பரிமாற்றச் செல்வாக்கினை மெல்ல இழக்கும் தாய்மொழி வீட்டுக்குள் மட்டும் காக்கப்படுகின்ற பண்பாட்டு மொழியாகத் தங்கி நிற்கும். இனத்தின் ஆளுமைக்கமைய இந்நிலையை எட்டுவதற்கான காலம் கூடிக் குறையலாம். ஆனால் கலை பண்பாட்டுப் பேணல்கள் மொழியில் இருந்து மாறுபட்டவை. தாய்மொழியில் இருப்பதைப் போன்ற சிறப்பு இல்லையெனினும், பேசப்படுகின்ற பிற மொழிகளாலும் கலை பண்பாட்டினை எடுத்துச் செல்ல முடியும்.

நம் வாழ்களமானது தொடர்ச்சியான வாழ்க்கைப் போராட்டத்தில் வழிநெடுகிலும் பெரும் அசதியை ஏற்படுத்துவதாகும். இப் புதிய சூழலில் வாழத் தலைப்பட்டு பிறரால் அடையாளப்படுத்தக்கூடிய தனிப் பண்புகளோடு பொருளாதார வெற்றிகளின் பாதையில் வளர்ந்து செல்லும் இனமாகவே தமிழினம் இனங்காணப்படுகின்றது. அதே சமயம் இனத்தின் பாரம்பரிய தன்னியல்புகளைப் பேணுவதில் பெரும் பங்காற்றும் கலை பண்பாட்டுச் செயற்பாடுகளானது, பெறப்படுகின்ற பொருளாதார வெற்றிகளுக்குச் சமாந்தரமாக எடுத்துச் செல்லப்படவில்லை என்பதானது இனப்பற்றாளர்களுக்கு வேதனை தரக்கூடியதொன்றாகும்.

நமது கலை பண்பாட்டுப் பேணல்கள் நமது தலைமுறைக்கானது அல்ல, வரப்போகும் சந்நதியினருக்கானது என்பதில் நாம் தெளிவு கொண்டவர்களாக இருக்க வேண்டும். நமது பாரம்பரிய தாய்ப்புலத்திலேயே காலத்திற்குக் காலம் மரபுகளைப் பேணுகின்ற வடிவங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. மரபுகளும் மாற்றங்களை உள்வாங்கியிருக்கின்றன. இந்நிலையில் தகவல், தொழில்நுட்பங்களில் அதியுயர் வளர்ச்சி பெற்றதும், ஒப்பீடு செய்யவல்ல மாற்றின கலை பண்பாட்டு செயற்றிறன் மிக்கதுமான வாழ்களத்தில் நின்றபடி மாற்றங்களை ஏற்க மறுப்பது பொருத்தமான ஒன்றல்ல. அதேவேளை அடுத்த தலைமுறையை ஈர்க்கும் வகையில் மரபுகள் சிதையாவண்ணம் கலைவடிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் எமது கடமையாகும்.

கலைவடிவங்கள் சூழலுக்கேற்ப மாற்றங் கொண்டாக வேண்டும் என்ற உண்மை உணரப்படும் அதேவேளையில், பல்லினப் பண்பாட்டுச் சூழல் ஏற்படுத்தும் தாக்கங்களையும், எதிர்விளைவுகளையும் கணித்து, தேர்ந்தெடுக்கப்பட்ட கலை

(மறுபக்கம் வருக)

வடிவங்களினூடாக நம் இனத்தின் மரபுசார் இயல்புகளை வெளிப்படுத்த வேண்டும். நமது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கவல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட கலைவடிவமானது, ஏனைய சமூகத்தோருக்கும் நமது அடையாளங்களை புலப்படுத்தக்கூடியதாக அமைய வேண்டும்.

நமக்கான கலை பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்ற கருத்தில் எவருக்கும் வேறுபாடு இல்லை. பல்லினப் பண்பாட்டுச் சூழல் ஏற்படுத்தும் பலமான தாக்கங்களின் மையத்தில் வாழ்ந்து கொண்டு நமது பாரம்பரிய கலை பண்பாட்டு மரபுகளையும் அவற்றை வெளிப்படுத்தும் வழிமுறைகளையும் கட்டுக் குலையாமல் பேண முயல்வது சொற்ப காலத்திற்கே சாத்தியமாகும். தொடர்ச்சியான கால ஓட்டத்தில் மரபினைப் பேணும் வடிவங்களில் மாற்றங்களை ஏற்கவல்ல மனநிலை நம்மிடையே இல்லையாயின் நமது விழுமியங்களை இழந்துவிடும் வாய்ப்பே அதிகமாகிவிடும்.

கனடிய மண்ணில் இரண்டாம் தலைமுறை தலைதூக்கியிருக்கும் காலம் இது. கனடியத் தமிழர் எண்ணிக்கையில் கணிசமான விழுக்காடு இவர்களுக்குரியது. இன்றைய கலைவிழா நிகழ்வுகளில் பாதிக்கு மேல் கூட்டம் சேரவில்லையே என்பது பலருடைய ஆதங்கமாகும். இதற்கு முக்கிய ஏதுவாக அமைவது மரபு வழிப்பட்ட எமது கலை வடிவங்களில் ஈடுபாடு காட்ட விரும்பாத புதிய தலைமுறையேயாகும். இங்கு நடைபெறும் கலைநிகழ்வுகள் பலவும் மூத்த அல்லது முதல் தலைமுறையின் மனநிறைவினையும், ஆற்றல்களையும் மையப்படுத்தியே அமைகின்றன. மிகக் குறைந்த அளவில் இளந் தலைமுறையினர் இக் கலைப்படைப்புகளில் ஈடுபட்டாலும் அவர்களிலும் பெரும்பாலானோர் வலிய இழுத்து வரப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். தொடர்ச்சியான கலை நிகழ்ச்சிகளில் அவர்கள் காணப்படாமையே இதற்குச் சான்றாகின்றது. இசை, நடனம், வாத்தியக் கருவிகளை இசைத்தல் போன்ற கலை வெளிப்பாடுகளில் இளந் தலைமுறையினரின் அரங்கப் பங்களிப்பு அதிகளவில் இருப்பதான ஒரு தோற்றப்பாடு காணப்படினும் அதன் பின்புலங்கள் தனியானவை. அவற்றைப் பின்பு நோக்கலாம்.

எண்பதுகளின் இறுதியில் முழு உருப்பெற்ற கனடியத் தமிழ்க் கலைநிகழ்வுகள் தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் உச்சம் பெற்று இரண்டாயிரத்தின் தொடக்கங்களில் சற்று சோர்வடைந்த நிலையில் அடுத்த நகர்வுக்கான மாற்றங்களை எதிர்பார்த்து நிற்கின்றன. இந்த மாற்றத்தின் முக்கிய அம்சமானது மூத்த கலைப்படைப்பாளர்கள் கலைநிகழ்வுக் களங்களை இளங் கலைப்படைப்பாளர்களிடம் ஒப்படைப்பது என்பதாகும். எங்குமான பொது இயல்பு என்னவெனில் மூத்த கலைப்படைப்பாளர்களிடையே கலந்து பயிற்சி பெற்று ஆற்றலுற்ற இளம் படைப்பாளர்கள் மூத்தோர் வழிகாட்டலில் முன்னிலை பெற்று கலைப்படைப்புகளை அடுத்த தலைமுறைக்குக் காவிச் செல்வர். ஆனால் முற்றிலும் மாறுபட்ட கனடியச் சூழல் ஏற்படுத்திய அழுத்தங்கள் காரணமாக, ஆற்றல் மிக்க இளந் தலைமுறையை உள்வாங்கத் தவறியவர்களாகவே மூத்த கனடியக் கலைஞர்கள் காணப்படுகின்றனர். அவர்களை உள்வாங்க முடியாமைக்கான அடிப்படைக் காரணமாக அமைவது அவர்களை ஈர்க்கும் வகையிலான மாற்றங்களைக் கொண்ட கலை வடிவங்களை உருவாக்கத் தவறியமையேயாகும். இதன் விளைவாகவே பங்காளர்களாகவும் பார்வையாளர்களாகவும் அடுத்த தலைமுறைக்கான காவிகளாகவும் இருக்க வேண்டிய இளந் தலைமுறையினர் இந்தத் தொடரோட்டப் பாதையில் இருந்து விலகிக் காணப்படுகின்றனர்.

ஒரு விடயத்தை உறுதியாகக் குறிப்பிட வேண்டும். இளம் சந்ததியினர் நமக்கான பாரம்பரிய கலைவடிவங்களில் தம்மை ஈடுபடுத்தத் தயக்கம் காட்டுகிறார்களே தவிர அவர்களிடையே காணப்படும் ஆற்றல்களைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. கட்டுக்கோப்பாக, மரபு சார்ந்து நெறிப்படுத்தப்பட்ட வழிமுறைகளினூடாக வெளிப்பட வேண்டிய இவர்களது ஆற்றல்கள் இன்று திரை இசை நடனங்களாகவும், Fashion show களாகவும் பண்பாடு பிறழ்ந்த நிகழ்வுகளாய்ச் சிதைந்து கொண்டிருக்கின்றன. இளந் தலைமுறையினரின் இந்த ஆற்றல்கள், நமது கலை பண்பாட்டு விழுமியங்கள் புலப்படும் வகையில், அவர்கள் விரும்பும் வடிவங்களினூடாக வெளிப்பட வேண்டுமாயின், அதற்கான மூத்த தலைமுறையின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

தொலைக்காட்சிகள், மற்றும் பாடசாலை, கல்லூரிகளில் தொழில்நுட்பம் நவீன உத்திகளுடன் கூடிய கலை நிகழ்வுகளைப் பார்த்தும் கேட்டும் பங்கு கொண்டும் நிறைவடைகின்ற நம் சந்ததியினர் நம் பாரம்பரிய கலைவடிவங்களோடு அவற்றை ஒப்பிடவே செய்கின்றனர். இத்தகைய ஒப்புநோக்குதல்களின் விளைவாகவும் நமது கலைவடிவங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

இதுகாறும் சொல்லப்பட்டவைகளின் வாயிலாக, நமது கலைவடிவங்கள் தொடர்புடையதான இளந் தலைமுறைகளின் தேவைகளையும் தேடல்களையும் ஓரளவுக்கேனும் உய்த்துணர முடியும். இச் சிக்கலின் ஆழத்தை உணர்ந்து கொள்கின்ற வேகத்தோடு இச் சிக்கலுக்கான தீர்வினைக் கண்டுவிட முடியாது. எனினும் இச்சிக்கல்களை நாம் அடையாளம் கண்டுகொள்ள முயற்சிப்பதே தீர்வை நோக்கிய முதல் நகர்வாக அமையும்.

இந்த சிக்கல்களை உணர்ந்து கொள்ள நாம் நீண்ட காலதாமதத்தை ஏற்படுத்தி விட்டோமோ என எண்ண வைக்கின்றது. இளந் தலைமுறையின் ஒரு சாரார் மேற்கொண்ட சில முயற்சிகள் நமது வழிகாட்டல் அற்ற நிலையில் தமது கலைத் தாகத்திற்கான தேடல்களில் ஈடுபடும் இளைஞர்கள் நிச்சயமாய்ச் சிலவற்றைக் கண்டு கொள்வார்கள். அவர்களில் இன உணர்வு கொண்டோர் சிலர் இருப்பார்களேயானால் நாம் எதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமோ அதை அவர்களே கண்டு கொள்வார்கள். இவ்வகையில் எம்மில் பலரைத் தம் பக்கம் திருப்ப வைத்திருக்கின்றார்கள் குறும்படங்கள் சிலவற்றைத் தயாரித்த இளைஞர்கள் சிலர். அடுத்த தலைமுறையின் கலைக் காப்பாளர்களாக இவர்கள் அடையாளம் காணப்படுகையிலேயே இச் சிக்கலின் வீரியம் பாதியாய்க் குறைந்து விடுகின்றது.

இதுபோலவே அடையாளம் காணப்படாத பல விடயங்கள் முளைவிட்டெழும் புதிய தலைமுறையினரின் ஆரோக்கியத்துக்கும் ஐக்கியத்துக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றன. இன்னுமொரு கட்டுரையின் வாயிலாக அவற்றில் சிலவற்றை இனங் காண முயற்சிப்போம்.

பனிதிற்கு இதமளிக்கும் வசந்தத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது புள்ளினம். வசந்தமும் வருகிறது. புத்துணர்ச்சியை குதூகலமாக வெளிக் கொணரும் புள்ளினத்தைப் போல கனடாவில் வாழும் தமிழ் மக்களும் விழாக்காண விளைகின்றனர். கலையார்வம் மிக்கவர்களும், பல கலைகளையும் கற்றுவரும் சிறுவர்களும், கலை பண்பாடு, சிந்தனையைத் தூண்டும் ஆக்கங்கள் பலவற்றை வழங்குவதற்கான பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பிக்கின்றனர். தங்கள் வாரிசுகள் தமிழையும், கலைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதும் பெற்றோர்கள் இரவு பகலென்று பாராது கலை நிகழ்ச்சிகளின் ஒத்திகைகளுக்கும் பயிற்சிகளுக்கும், பல கஷ்டங்களின் மத்தியிலும் அழைத்துச் செல்கிறார்கள், பயிற்றுவிக்கிறார்கள்.

பல தமிழ் பெற்றோர்கள் இவ்வாறு இயங்கும் போது "தமிழைக் கற்றுக் கொள்வதால் எங்கள் பிள்ளைகள் என்ன சாதிக்கப் போகிறார்கள்? இந் நாட்டில் தமிழைப் படிப்பது அனாவசியம். தமிழைக் கற்றுக் கொள்ளுமாறு எமது பிள்ளைகளை வற்புறுத்துவது வேறு பிரயோசனமான விடயங்களை அறிந்து கொள்ள, கற்றுக் கொள்ள அவர்கள் உபயோகப்படுத்தும் நேரத்தை விரயப்படுத்துவதாகவே அமையும். எதிர்காலத்தில் அவர்களுக்கு வாழ்க்கையில் தமிழ் எந்த ஒரு முன்னேற்றத்தையும் அளிக்கப் போவதில்லை. ஆதலால் தமிழைக் கற்றுக் கொள்ளுவது எவ்விதத்திலும் அவசியமாகத் தோன்றவில்லை" என்றும் கருத்துத் தெரிவித்து, தாய் மொழியாம் தமிழைக் கை நழுவ விடும் பெற்றோர்களும் இருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன், ஒரு கலைவிழாவிற்குச் சென்றிருந்தேன். விழாவில் இசை விருந்தளித்த இசைக் குழுவில் பாடிய ஒரு சிறுமியின் தாயார் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அவர்கள் குடும்பமாக இலங்கையை நீங்கி, இந்தியாவில் ஒன்றரை வருடங்களைக் கழித்து, கனடாவை வந்தடைந்தவர்கள். கனடாவிற்கு வந்து எட்டு மாதங்கள் ஆகியிருந்தன. அழகாகப் பாடிய பதினான்கு வயதுச் சிறுமியை நான் பாராட்டிய போது, அச் சிறுமியின் தாயார் கூறினார், "என்னுடைய மகளுக்கு தமிழ் பாட்டுகளை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்தாற் தான் பாடுவாள். தமிழில் எழுதியிருந்தால் அவளால் பாடிக் கொள்ள முடிவதில்லை. அவளுக்கு தமிழ் மறந்து போய்விட்டது. எப்பொழுதும் ஆங்கிலம் தான் வாயில் வருகிறது." இதைக் கேட்டு நான் திகைத்தேன். "ஐயோ! இவ்வளவு ஆங்கில மோகமா?" என்று மனதுள் சோர்வுற்றேன். தாய் நாடு பின்னர் தமிழகம் இவ்வாறு சுமார் பதின்மூன்று வருடங்கள் வாழ்ந்து ஆங்கிலம் அதிகம் தெரியாத அம்மா, அப்பாவின் அருமை மகள், தமிழை தாய் மொழியாகக் கற்ற, தாய் மொழி தமிழைப் பேசி வளர்ந்த அந்தச் சிறுமி எட்டு மாத காலத்துள் எங்ஙனம் தமிழை மறக்க முடியும்? மறுக்க முடியும்? இது எப்படி சாத்தியமாகியது? கீறல் விழுந்த ஒலித்தட்டு போல் என்னுள் "மறதி அப்பிள்ளையை ஆட்கொள்ளவில்லை. ஆங்கிலம் மாத்திரமே தெரிந்திருப்பது பிறர் கவனத்தையும் மதிப்பையும் பெற்றுக் கொடுக்கும் எனும் தவறான கருத்து அவர்களை ஆட்கொண்டு விட்டது" என்று ஒலித்துக் கொண்டேயிருந்தது. இங்கு வாழும் பெற்றோரையும் பிள்ளைகளையும் அவதானித்தேன். போட்டி மனப்பான்மையுடனும், பிரபல்யமடைய வேண்டுமென்ற நோக்கத்துடனும், பரிசுகள், விருதுகள் பல பெற வேண்டுமென்ற ஆவலுடனும் பல விழாக்களில் பெற்றோர் தமது பிள்ளைகளைப் பங்குபற்ற வைக்கிறார்கள்.

விழாக்களில், கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் சிறுவர்களும் அழகிய உடைகளை அணியலாம் பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெறலாம் எனும் ஆசைகளால் உந்தப்படுவதுடன், பெற்றோரின் கட்டுப்பாட்டுக்கும் கீழ்படிகிறார்கள். இவ்வாறு தமிழ் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் சிறுவர்கள் நாளடைவில் தமிழ் நிகழ்ச்சிகளிலோ, தமிழுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலோ கலந்து கொள்ளும் ஆர்வத்தைச் சிறிது சிறிதாக இழந்து விடுவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இவர்கள் தமிழை ஆசையுடன் கற்றுக் கொள்கிறார்களா? ஆசையுடன் கற்றுக் கொள்ளும் சிறுவர்கள், தமிழை தமிழில் எழுதுவார்களேயன்றி, தமிழின் உச்சரிப்பை ஆங்கிலத்தில் எழுத மாட்டார்கள். தமிழை, அதன் இனிமையை, தமிழிலுள்ள இலக்கியங்களைச் சுவைத்து மகிழ வேண்டுமானால் தமிழை எழுத, வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா? இங்கு வளர்ந்து வரும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் தமிழை ஆர்வத்தோடு கற்கிறார்களா? வளர்க்கிறார்களா? விரல் விட்டு எண்ணக் கூடிய தொகையில் இருக்கிறார்கள் என்ற பதிலைத் தான் எதிர்பார்க்கலாம். இந் நாட்டில் பிறந்து வளரும் இளைய சமுதாயம், அவர்களது சந்ததி தமிழை உதாசீனப்படுத்தலாகாது, தமிழைப் பாதுகாக்க வேண்டும்; தமிழைக் கற்க வேண்டும் என்று விழிப்புடன் இருக்குமா? கேள்விக்குறி தான்!



இருபது ஆண்டுகளுக்குப் பின்.....

திருமதி தனலஷ்மி சபாநடேசன்

இன்று கனடாவில் "தமிழைக் கற்க வேண்டும். தமிழ் அழியக் கூடாது" என்று ஆதங்கத்துடன் அயராது உழைக்கும் தமிழ் ஆர்வலர்கள் இருக்கிறார்கள். இவர்களது ஆசை, கனவு நிறைவேறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? சிந்திப்போம்! புதுமையான முறைகளைக் கையாளுவோம்!

"சூழலே ஒரு மனிதனை உருவாக்குகிறது" என்னும் கருத்தின்படி ஆங்கிலமே எங்கும் ஒலிக்கும் இந் நாட்டில் நம் சந்ததி ஆங்கிலத்தை ஆர்வத்துடன் கற்பதும், தமிழைப் புறக்கணிப்பதும், அதிசயிக்கவோ, குறை கூறவோ, வெட்கப்படவோ முடியாத செயல்களாகும். பாரம்பரிய நடனமும், சங்கீதமும் கலையுணர்ச்சியும், கலையார்வமும் மிக்க சிறுவர்களை வசீகரிக்கும் தன்மை வாய்ந்தவை. நாடகங்களில் பல வேடங்களில் நடிப்பதும் அவர்களுக்கு தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் உண்டாக்குகிறது. இவர்கள் ஓரளவு தமிழ் பண்பாட்டையும், பெருமையையும் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் பெறுகிறார்கள். தாம் பெற்ற மனதிற்கின்பமளிக்கும் கலைகளை தமது சந்ததிக்கு வழங்கி வாழ்த்தி நிற்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இயல், இசை, நாடகத் துறைகளைப் பேணி வளர்ப்பது தமிழை நிலைநிறுத்த உதவி புரியுமெனும் நம்பிக்கையை அளித்து, மன ஆறுதலை நிலவச் செய்கின்றது. நம்பிக்கையில் வாழ்வது வெற்றியை நோக்கி எடுக்கும் பயணம்! அப் பயணத்தில் எத்தனையோ இடர்கள், திருப்பங்கள் வரலாம். ஆனால் மனம் சோர்ந்து விடலாகாது! இலக்கு தப்பிவிடலாகாது! பயணத்தைத் தொடர்வோம்! பதினைந்து அல்லது இருபது வருடங்களின் பின், கனடாவில் வளர்ந்து வரும் நம் செல்வங்கள் பல துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள்! இது நிச்சயம்! அதேபோல் தமிழில் எழுத, வாசிக்கப் பேசத் தெரிந்திருக்குமா? மேடைகள் அமைத்து தமிழ் முழங்கச் செய்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்! அதற்குரிய வழி வகைகளை வளர்ப்போம்!

ஈழம் - ஆய்வு செய்யும் காலமிது



பொன் பாலசுந்தரம்

உண்மையிலேயே அமெரிக்க வெள்ளை மாளிகையிலிருந்து ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசிய, பசிபிக் பிராந்திய நாடுகளின் ஆட்சி பீட மூலஸ்தானங்களில் எல்லாம் ஈழத்தைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது.

சுமார் கால் நூற்றாண்டுக் காலத்தில் இல்லாத ஆய்வு ஈழத்துக்கும் அதன் மக்களுக்கும் இன்று கிடைத்திருக்கிறது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெரியதோர் சர்ச்சை ஏற்பட்டது ஞாபகம் வருகிறது. சர்ச்சை என்பதிலும் பார்க்க ரகளை என்று கூறினால் கூட மிகையாகாது.

இதற்குக் காரணம் ஜப்பானிய மக்கள் சபையில் உரையாற்றிய அதன் அங்கத்தவர் ஒருவர், "இலங்கை இந்தியாவில் உள்ள ஒரு மாநிலம்; இந்தியாவுக்குச் சொந்தமான இடம்" என்று கூறியது தான். சிங்கள இனவாத குளவிக் கூட்டுக்கு ஜப்பானியர் ஒருவர் கல்லெறிந்து விட்டதாக சிங்கள பேரினவாத "தேசபக்தர்கள்" கூச்சல் போட்டு ரகளை செய்தனர்.

புத்தர் வழிவந்த நாடான ஜப்பான் மற்றொரு பௌத்த நாடான இலங்கை எந்தக் கண்டத்தில், எந்தக் கோணத்தில் அமைந்திருப்பதென்பதை அறியாமல் இருப்பது இலங்கையையும், அதன் பௌத்த மக்களையும் அவமதிப்புச் செய்யும் செயலாகுமென சிறில் மத்யூ போன்ற "தேசபக்தர்கள்" அவலக்குரல் கொடுத்தனர்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் களம் பல கண்டும், கண்டம் கடந்தும் நிலைகொண்ட நாடு ஜப்பான். அப்படிப்பட்ட ஒரு நாட்டுக்கு தாங்கள் இவ்விஷயத்தில் சவால் விடுவதாகவே கருதினர்.

அமெரிக்காவில் கூட அரசியல்வாதி ஒருவர் "இலங்கை" எங்கே உள்ள நாடு எனக் கேட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார் என்பதையும் ஞாபகப்படுத்தலாம்.

அன்றெல்லாம் உலக அரங்கில் முக்கியமானவர்கள் எனக் கருதப்பட்ட பலருக்கு இலங்கை என்ற ஒரு நாடு எங்கிருக்கிறதெனத் தெரியாமல் தான் இருந்திருக்கிறது. இதில் ஆச்சரியமில்லை.

ஆனால், இன்றோ நிலைமை மாறிவிட்டது. புலிகள் இயக்கம் ஈழப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்தை மைல் கல்லாக வைத்துப் பார்த்தால் அதுதான் உண்மையிலேயே பூப்பெய்திய காலமாகும்.

அரசியல் ஆய்வாளர்கள் மத்தியிலும், உலக ஊடக கூடங்களிலும், அரசியல் விமர்சகர்களின் பேனாக்களிலும், முக்கியமாக உலகத் தலைவர்களின் நேரடிப் பார்வையிலும் "இலங்கை" என்பதிலும் பார்க்க "ஈழம்" தான் முன்னிலை பெற்றுள்ளது. "ஈழம்" என்றால் "இலங்கை", "இலங்கை" என்றால் "ஈழம்" என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு பெரிய உதாரணத்தை இங்கு பெருமையாகக் கூறலாம். சமீப காலத்தில் வெளிவந்த ஒக்ஸ்போர்ட் (Oxford Dictionary) அகராதியில் தமிழ் புலிகள் (Tamil Tigers) என்றால் ஈழப் போராளிகள் என்ற பதங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகும்.

இந்த நிலையில் ஈழத்தைப் பற்றி எமது மக்கள் ஆய்வு செய்கிறார்கள் என்பது தெரிகிறது. இவர்கள் மனங்களில் எழும் கேள்விகள் பலவாறாக உள்ளன.

ஈழம் சிறிதாக உள்ளதே? அதன் வளம் போதுமானதா? பொருளாதார பலம் இருக்குமா? போதியளவு வேலை வாய்ப்பு இருக்குமா? நிதி நிலைமையைச் சமாளிக்க முடியுமா? எதில் எல்லாம் சுயதேவைப் பூர்த்தி காணலாம்? கேந்திர முக்கியத்துவம் உடையதா?

இப்படி எல்லாம் கேள்விகளைக் கேட்டு விடைகளை அறிவது ஒரு நாட்டின் சுபீட்ச வளர்ச்சிக்கு நல்லது. நாம் நமது நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை என்பதை ஈழத்தைத் தாயகமாகக் கொண்டுள்ள ஒவ்வொருவரும் தீர்மானித்துச் செயற்பட இது வாய்ப்பளிக்கும்.

ஒரு சிறிய நாட்டின் பெரிய வரலாறு பற்றி அறிவது நல்லது. கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலும் உள்ளது.

உலகத்தில் பிரபல்யமான மாத சஞ்சிகைகளில் ஒன்றான "தேசிய பூமி சாத்திர சஞ்சிகை" (National Geographical Magazine) இல் பொப் கிறிஸ்ற் என்பவர் சிறிய நாடான மோல்ற்ரா பற்றிய சிறப்புக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இவர் ஒரு சிறந்த புகைப்படக் கலைஞர். ஆதாரபூர்வமான கட்டுரைகளை எழுதுவதில் நிபுணர்.

"மோல்ரா 95 சதுர மைல்களைக்கொண்டுள்ள ஒரு நாடு" என்று கிறிஸ்ற் தமது சிறப்புக் கட்டுரையை ஆரம்பித்ததைப் படித்ததும் எமது சிறிய ஈழம் எப்போது மலரும் என்ற ஆதங்கத்துடன் இருக்கும் என் மனதுக்கு ஒரு உணர்வைத் தந்தது.

ஈழம் எவ்வளவு சதுர மைலைக் கொண்டிருக்கும் என்பது எனக்கு இன்னும் சரிவரத் தெரியவில்லை. ஆனால் மோல்ற்ராவை விடச் சிறிதாக இருக்காதென்றே நம்புகின்றேன். உலகத்தில் சிறிய நாடுகள் தான் பெரிய சாதனையை இன்று சாதிக்கின்றன. இது வரலாறு தரும் பாடம்.


உலகின் கலாசாரங்கள் என்ற தலைப்பில் கிறிஸ்ற் எழுதியிருக்கும் மோல்ரா பற்றிய கட்டுரைக்கு "உள்ளூர் அறிவு உலகை அறிந்து கொள்வதற்கு ஒரு அத்திவாரம்" என மகுடமிட்டுள்ளார்.

இனி, நாம் அவரது படைப்புக்கு வருவோம் - சரித்திர காலம் தொட்டு மோல்ரா தீவு மத்தியதரைக் கடல் பகுதியில் ஒரு பரபரப்பான நாடாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதனால் சரித்திரத்தோடு உறவாடிக் கொண்டிருக்கிறது. மோல்ற்ராவின் எந்தத் திசையையும், திக்கையும் நோக்கினாலும் சரித்திரம் தெரிகிறது. வெங்கலம், பித்தளையிலான சின்னங்களைக் காணலாம்.

மோல்ரா மக்கள் உணர்ச்சி உடையவர்கள். உணர்ச்சி வசப்படுபவர்கள். அவர்களது

(22ம் பக்கம் வருக)

புலன் பெயர்ந்த மனிதர்கள்



அசை சிவதாசன்

ஆறு மில்லியன் உறவுகளை ஹிட்லரின் கொலைத் தாண்டவத்துக்குக் காவு கொடுத்த பின் காலம் காலமாக அதைச் சொல்லிச் சொல்லி தாமும் தம்மை அண்டியவர்களையும் கண்ணீர் சொரிய வைத்துக் கொள்ளும் யூத இனம் பற்றி, உங்களைப் போலவே, எனக்கும் ஒரு சஞ்சலம். தமக்கு நடந்த அநியாயங்களுக்கு உலகத்தின் கழிவிரக்கத்தைத் தேடிக்கொள்ளும் அவர்களுக்கு தம்மால் தினமும் கொல்லப்படும் பாலஸ்தீனிய மக்கள் மீது மட்டும் ஏன் இரக்கம் வர மறுக்கிறது?

இனவெறிக்கு இரையாகிப் போய் எஞ்சிய கந்தைகளோடு ஓடி வந்த எங்கள் தமிழர்களால் மட்டும் எப்படி இன்னுமொரு சக தமிழனைக் குத்திக் குதற மனமிசைகிறது?

வெள்ளையர் கைகளால் பிழியப்பட்ட கறுப்பு மக்களின் கைகளில் வழிகின்ற இரத்தம் ஏன் இன்னுமொரு கறுப்பருடையதாக இருக்க வேண்டும்?

சுய விசாரணைக்கான உந்தல்கள் அரிதாகவே காணக் கிடைக்கின்றது.

இப்படியான பல கேள்விகளையும் அவற்றுக்கான பல பதில்களையும் பலரும் எழுதியும் பேசியும் விட்டு விட்டுப் போயிருக்கலாம். என்னைப் போலவே நீங்களும் மண்டையில் போட்டு உருட்டி உணர்வுகள் விளையாடி விட்டுப் போக உதவி புரிந்திருக்கலாம். இறுதியில் என் இதயம் எனக்காக மட்டுமே துடித்துக் கொள்ளும் என்கின்ற நிஜம் வந்து என் சுகபோகங்களுக்கு மட்டும் இறுக்கமான வேலியைப் போட்டு பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் உறுதி செய்துவிட்டுப் போகும். ஒரு இதயத்தை வைத்துக்கொண்டு எனக்காகவும் இன்னொருவனுக்காகவும் ஏக காலத்தில் இரங்க முடியாது என்ற உண்மை புலப்படும் போது மேற்சொன்ன அத்தனை சம்பவங்களுக்கும் விடை அங்கு புலப்படும்.

உலகம் முழுவதிலும் நடைபெற்ற அநியாயங்களிலிருந்தோ அக்கிரமங்களிலிருந்தோ நாம் எதைக் கற்றுக் கொண்டோம்? என்று யாராவது கேட்கக் கூடும். போரின் அனர்த்தங்களைக் கண்டு பங்கு கொண்டு, அனுபவித்து உலகத்துக்கு அழியாத கோலங்களாய் விட்டுச் சென்றான் அசோகச் சக்கரவர்த்தி. அவன் பரப்பிய சாத்வீக சமயம் போர்களை நிறுத்தியதா? அல்லது மத ரீதியாகப் பிரிந்தால் நாம் மகிழ்ச்சியோடிருப்போம் என்று வாதாடி சுதந்திர இந்தியாவைத் துண்டு போட்ட ஜின்னாவின் சந்ததி இன்னுமேன் இந்துச் சுவாலைகளில் பொசுங்கிக் கொண்டிருக்கிறது?

காரண காரிய இயக்கங்களுக்காக ஆத்மீகத்தைத் துணைக்கழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை. சாதாரண தருக்க ரீதியான ஒளிப் பாய்ச்சலே போதும் புரிந்து கொள்வதற்கு. உலகம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. அல்லது கற்ற பாடங்கள் மறக்கப்பட்டு விட்டன. அவ்வளவுதான்.

அதுவே தான் இயற்கையின் விருப்புங்கூட. மறதி என்பது ஒரு வகையில் தேவை கருதிய படைப்பு என்பது எனது கருத்து. இறப்புகளும் இழப்புகளும் தருகின்ற துன்பம் நிரந்தரமற்றது. சருமத்தில் குத்திய வலி போலவே அத்துன்பங்களும். தற்காலிக உணர்வுகள் புலன்களைத் தீண்டுவதால் எழுகின்ற அத்துன்பங்களை நிரந்தரமாக்கிக் கொள்ள அப்புலன்களிடத்தே நினைவுக் கலங்களில்லை. கணினிகளிலுள்ள RAM Memory களைப் போல அவை எந்த நினைவுகளையும் நிரந்தரமாகத் தேக்கி வைப்பதில்லை. உடல் முழுவதுமே 'மூளை' யாகி விடாமலிருப்பது எவ்வளவு நல்ல விடயம். சிறுவயதில் அம்மா கிள்ளியதை சருமம் நினைவு வைத்திருந்தால் அது தினமும் வலி தருவதாக இருந்திருக்கும். மாறாக மூளை மட்டும் அதை அப்பப்போ நினைவுக்கெடுக்கும் போதெல்லாம் அந்த நிகழ்வை உணர்வகற்றிப் பகுத்தறிந்து கொள்ளும். அந்த நிகழ்வை அழகுபடுத்திப் பார்க்கும். அந்நிகழ்வின் பின்னணியை ஆராய்ந்து பார்க்கும். அம்மா ஏன் கிள்ளினாள்? நான் என்ன குழப்படி செய்தேன் என்றெல்லாம் அலசிப் பார்க்கும்.

உணர்ச்சி வசப்படாமல் காரியங்களை ஆற்றுவதற்கு மூளையையும் அதை இயக்கவென்று சிந்தனையையும் சிந்தனையைத் தூண்டி விடுவதற்குப் புலன்களையும் படைத்து ஒரு முழுதான தொழிற்பாட்டுக் கோப்பை (System) இயற்கை படைத்திருக்கிறது.

உணர்ச்சியின் வசப்படுதலே உலகின் அனர்த்தங்களுக்கான மூலாதாரம். வசப்படுபவனும் வசப்பட வைப்பவனும் இவ்வுலகின் அழிவுக்கான ஆரம்ப கர்த்தர்கள். புலன்களின் வசப்பட்டவன் மூளையின் உறவு இல்லாதவன். அதனால் அவனை முட்டாள் என்கிறார்கள். இனம், மதம், மொழி போன்றனவற்றிற்கு புலன்களோடு ஒரு வகை விசித்திர உறவு. புலன்களை வசப்படுத்தி உலகையே மாற்றியமைக்கும் வல்லமை இவற்றுக்கு உண்டு.

துரதிர்ஷ்டவசமாக அரை நூற்றாண்டு காலத்தை நாம் புலன்களுக்கான போர்களில் செலவு செய்து விட்டோம்.


ஆப்பிரகாமின் குழந்தைகள் மத்திய கிழக்கில் தம்மைத் தாமே அழித்துக் கொள்வதற்கும், 'அயோத்தி' நகரில் புதிய ராம பரிவாரங்கள் குருதியால் அபிஷேகம் செய்வதற்கும் பேதம் ஏதுமில்லை.

இரு சாராருமே புலன் பெயர்ந்தவர்கள்.

தேவையறிந்து உணர்ச்சி அலைகளை உருவாக்கித் திசை திருப்பி விடவென்று ஒரு இனம் சதா இயங்கிக் கொண்டு இருக்கிறது. அவர்கள் தான் அரசியல் வாதிகள். எல்லைகளற்ற இந்த இனத்துக்கு விதிகளேயில்லை. மக்களது மூளைகளைப் பிடுங்கிக் கொண்டு புலன்களை மட்டும் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் இனமிது. போதை வஸ்துகள் தயாரிப்பது போல வசப்படுத்தும் உணர்வுகளைத் தயாரித்து பலவீனப்பட்ட மக்களை நோகடி அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார்கள். வரலாறு என்ற புனிதமான பெயரில் மீண்டும் மீண்டும் உணர்வுகளைப் படிமங்களாக்கி உருவெடுத்துக் கொண்டாடுகிறார்கள்.
இருக்கின்ற ஒரு இதயத்தை எத்தனை கூறாகப் பங்கு போடலாம்?

உலக சமாதானம் வேண்டுமெனில் புலன்கள் பெயராத ஒரு சமூகம் உருவாக்கப்பட வேண்டும்.

அவர்களைப் புரிந்து கொள்வோமா?



பொ. கனகசபாபதி

என்ன! அரைத்த மாவையே அரைக்கிறாய் என்று என்னைப் புறக்கணிக்காமல் ஒருக்கால் என்னோடு உள்ளே வருகிறீர்களா?

நாம் எண்பதுகளிலே பெரும் தொகையாய் மேற்கத்திய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோம். எனவே, நாம் இங்கு கால் பதித்து கால் நூற்றாண்டு கழிந்து விட்டது. முதல் கனடிய தமிழ் தலைமுறையும் தோன்றிவிட்டது எனலாம். எமது சமூகம் ஒரு முற்போக்கான சமூகம். Adaptability is a sign of a progressive community என்பார்கள். அதாவது இசைவாக்கம் முற்போக்கான ஒரு சமூகத்தின் அடையாளச் சின்னம். அதனால் தானே "நாம் பாம்பு தின்னும் ஊருக்குப் போனால் நடுமுறி நமக்கு" எனக் காலம் காலமாகச் சொல்லி வருகிறோம். இங்கே குடியேறிய பின்னர் எமது சமூகத்தின் விழுமியங்களிலும் தனி மனித மனப் பாங்குகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. எமது பிள்ளைகள் ஒன்றில் இங்கே பிறந்தவர்கள் அல்லது இங்கே வளர்ந்தவர்கள். அவர்களின் மனப்பாங்கு மாற்றங்களோ, மனப்பாங்கு விருத்தியோ கடுகதி வேகத்தில் நடைபெறுபவை. வாழும் சூழல் அத்தகையது. சிலசமயங்களில் பெற்றோரால் அம் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் போகலாம். அவ்வேளைகளில் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இளவயதில் பூப்படைதல்:

அமெரிக்காவில் உள்ள வட கரோலினா பல்கலைக்கழகத்தில் பொதுச் சுகாதாரத்துறைப் பேராசிரியராய் விளங்குபவர் மார்சியா ஹேர்மன் கிடென்ஸ் (Marcia Herman-Giddens) என்பவர். இன்று பெண் பிள்ளைகள் மிக்க இளம் வயதிலே பூப்படைந்து விடுகிறார்கள் என அதிக ஆய்வுகள் செய்த பின்னர் அவர் கூறுகிறார். அவர் சொல்வதென்ன - நாளாந்தம் எம் கண் முன்னாலேயே நடைபெறும் காட்சி இது. நாற்பது வருடங்களுக்கு முன்னர் பெண்கள் 11 அல்லது 12 வயதிலேயே பூப்படைந்தனர். இப்போ அவர்கள் பூப்படையும் சராசரி வயது 8 ஆகும் என்கிறார் அவர். இதன் விளைவாக பூப்படைகின்ற சமயத்தில் சுரக்கப்படும் ஈஸ்ரோஜன் (Estrogen) எனும் ஓமோன் மிக்க இளம் வயதிலேயே, சுரக்கப்பட பெண்மைக்குரிய துணை இயல்புகள சின்னஞ் சிறு வயதிலேயே தோன்ற ஆரம்பித்து விடுகின்றன. ஈஸ்ரோஜன் தொடர்ச்சியாக நீண்ட காலம் சுரக்கவுள்ளதால் மார்புப் புற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு உள்ளமை ஒரு பக்கமிருக்க, மிக்க இளம் வயதிலே பாலியல் முதிர்ச்சியை எதிர்கொள்ளும் மன உணர்வு அப் பிள்ளைகளுக்கு இல்லாமையே ஏகப்பட்ட பிரச்சனையாகிறது என்பதே பெற்றோர் எதிர்கொள்ளும் பேருண்மையாகும். பெரிய அளவிலான உளவியல் மற்றும் உணர்வு பூர்வமான பல பிரச்சனைகள் மனதளவிலே இன்னும் குழந்தைகளாக ஆனால் உடலமைப்பிலே, உருவத்திலே இளம் பெண்களாக உள்ள இச்சிறார்களுக்கு ஏற்பட்டுள்ளன. வயதான பையன்களும் அவர்களை விட்டு வைப்பதில்லை. இக் குழந்தைகளின் மனத்திலே எத்தகைய போராட்டங்களும் மன உளைச்சல்களும் உள்ளனவென்பதை எவரும் சுலபமாய் அறிய முடியாது என்பது நிஜம். இதிலிருந்து ஒன்று மிகத் தெளிவாகப் புலனாகிறது. பாலியல் கல்வி சிறுபிராயத்திலேயே போதிக்கப்படுதல் அவசியம். பாடசாலையின் பாடத் திட்டங்கள் பாலியல் கல்வியை உட்படுத்தினாலும் கூட, அங்கே இன்னும் மாற்றங்கள் கொண்டுவரப் படுதல் அவசியமாகிறது. இதனிலும் பார்க்க முக்கியமானது பெற்றோரின் அணுகுமுறை தான். பெற்றோர், சிறப்பாக தாய்மார் இதில் சிரத்தையுடன் தொழிற்படுதல் அவசியமாகிறது. தாய்மார் பிள்ளைகளைக் குளிக்க வைக்கும் போது, உடை மாற்றும் போது, ஏன் தொலைக்காட்சி பார்க்கையில், சமையல் செய்கையில் பாலியல் கல்வியை நாசூக்காகப் போதித்தல் அவசியம். எதுவும் வீட்டில் கிடைக்காத சந்தர்ப்பங்களிலே தான் பிள்ளைகள் அதனை வெளியே பெற முயல்கிறார்கள் என்பதைப் பெற்றோர் உணர வேண்டும். பாலியல், காதல், மற்றும் விழுமியங்கள் பற்றிப் பிள்ளைகள் பெற்றோரிடமிருந்தே பெற விரும்புகிறார்கள். ஊடகங்களிலே நிறையச் செய்திகள் வருகின்ற போதும் அவற்றின் நம்பகத் தன்மையில் பிள்ளைகளுக்கு நம்பிக்கை அதிகம் இல்லை.

நாம் எமது கூச்ச சுபாவத்தால் எதனைச் சொல்வதற்குத் தயங்குகிறோமோ அது பாரிய பிரமாணம் பெற்று நாம் கூச்சப்படுமளவுக்கு வந்து விடலாம் என்பதை மறவாதீர்கள்.

சிறார்கள் சிறுவயதிலேயே முதிர்ச்சியடைவதற்குக் காரணங்கள் பல கூறப்பட்டாலும் என்னைப் பொறுத்தமட்டிலே இறைச்சி மற்றும் காய்கறிகளில் உள்ள ஓமோன்களைத் தான் காரணமாகச் சொல்வேன். வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் முகமாக ஆடு, கோழிகளுக்கு G.H என அழைக்கப்படும் வளர்ச்சி ஓமோன் (Growth Hormone) ஊட்டப்படுகிறது. இந்த ஓமோன் வளர்ச்சியை வேகப்படுத்துவதுடன் கழிவாக வெளியேறாமல் அவ்விலங்குகளுடைய உடற் தசைகளில் தங்கி விடுகிறது. குழந்தைகள் இந்த இறைச்சியை உட்கொள்ளும் போது அந்த ஓமோன் பிள்ளைகளின் உடற் தசைகளில் போய் தங்கி அதீத வளர்ச்சியைத் தூண்டுகிறது.

தொழிற்தேர்வு

Edward Hallowell எனும் குழந்தை உளவியலாளர் "எமது பிள்ளைகள் பற்றிய நமது விசாரம் வித்தியாசமான உபாதை. மற்றைய எந்த மனத்துன்பத்திலும் பார்க்க இது வேறு வகையான துன்பத்தை ஏற்படுத்துகிறது. அங்கே அன்பு மிதமிஞ்சிக் காணப்படும். பயம் எந்நேரமும் நிரம்பி வழியும். நம்பிக்கை எட்டிப் பார்க்கும், கையாலாகாத தன்மை ஏங்க வைக்கும்" என்கின்றார். இவை எல்லாம் கலப்படமாகி விட அதற்கு முடிவு தான் ஏது?

நான் இம்முறை இங்கிலாந்து சென்ற போது அங்கே தங்கிய நாட்கள் வெறுமனே ஏழு நாட்களே. ஆனால் அந்த ஏழு நாட்களில் நான் கேள்விப்பட்டது என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. உயர் பதவிகளில் இருப்போர் நான்கு பேரின் குடும்பத்துப் பிள்ளைகள் நால்வர் பல்கலைக்கழகம் புகுந்தபின் மேற்கொண்டு படிக்க மாட்டேன் என அடம்பிடித்து வீட்டில் தங்கி நிற்கிறார்கள். இவர்கள் ஒருவருமே சாதாரண மாணவர்கள் அல்ல. மிகவும் சிறந்த பெறுபேறுகள் பெற்று பல்கலைக்கழகம் புகுந்தவர்கள். இத்தகைய பரிதாப நிலை ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ள போதிலும் கல்வித் தேர்வு தொழில் சார்புடையதாக வேண்டி பெற்றோர் தேர்வு செய்வது தான் பிரதானமாக இருக்கலாம் என்பது எனது எண்ணம். பெற்றோரின் எதிர்பார்ப்புகள் பிள்ளைகளுடைய சுயமதிப்பினைப் பெரிதும் பாதிக்கின்றது. எதிர்பார்ப்புகளின் எல்லைகள் அடையக் கூடியதாக அமைவதோடு அவை பிள்ளைகளுடைய மனப்பாங்கினோடு ஒத்துப் போகுமாயின் பிள்ளையினுடைய சுயமதிப்பு உயர அவரின் அடைதிறன்கள் பரிணமிக்கின்றன.

இலக்கு அடைய முடியாத போதும் அது பிள்ளையின் மனப்பாங்குக்கு முரணாக உள்ளபோதும் அவரின் சுயமதிப்பு வீழ்ச்சியடைய அதன் காரணமாக ஏற்படும் விரக்தி பல்வேறு எதிர்மறையான விளைவுகளுக்குக் காரணமாகின்றது. ஒப்பீட்டளவிலே கனடாவிலும் பார்க்க

(எதிர்ப்பக்கம் வருக)

இங்கிலாந்திலே தான் இப்பிரச்சனை நம்மவரிடையே அதிகம் உள்ளது. அங்கே வீட்டுக்கு ஒரு பிள்ளையையாவது வைத்தியராக்க வேண்டும் என்ற அனேகமான பெற்றோரின் அங்கலாய்ப்பு பிரச்சனையாகின்றது. தாம் கல்வி கற்ற காலத்துடன் இன்றைய வேலைவாய்ப்பு, தொழிற்தகமை ஒப்பிட முடியாத அளவுக்கு மாறிவிட்டன. ஆகவே தொழிற்தேர்வும், அதற்கான கல்வித் தேர்வும் எம் பிள்ளைகளைச் சார்ந்தே இருக்க வேண்டும். நம் கடமை அவர்களுக்கு உறுதுணையாக நிற்பதே.

இணையத் தளம்

இங்கிலாந்தில் பிரசுரிக்கப்படும் Sunday Express பத்திரிகையில் நவம்பர் 9ம் திகதி Alison Gordon என்பவர் எழுதியதை இங்கே தருகிறேன். அரசு தரும் தகவலின்படி நான்கு பெண் பிள்ளைகளில் ஒருவர் தனது 16வது வயதை அடையுமுன்னர் பாலியலில் ஈடுபட்டுள்ளார். பலர் இணைய தளம் மூலம் தொடர்பு கொள்பவருடனேயே தொடர்பு வைக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் இதில் எவ்வித தப்பும் இல்லை என எண்ணுவது தான் வருத்தத்துக்குரிய செய்தி. தமது சிறார்களுடன் பாலியல் தொடர்புகள் பற்றிப் பேசுவதற்கு எவ்விதம் ஆரம்பிப்பது என்பதுவே அநேக பெற்றோரின் பிரச்சனை. ஆனால் சிறார்களுக்கு அவர்கள் பெற்றோர் பாலியல் பற்றி நல்ல விளக்கம் கொடுப்பார்களாயின் அவர்கள் இளம் வயதில் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதை பெருமளவில் தவிர்த்துக் கொள்வார்கள் என நம்பலாம்.
பெற்றோர்களுக்கு இணைய தளத்தினால் ஏற்படக்கூடிய பல சிக்கல்களில் இது ஒன்று. இணைய தளம் என்பது அத்தியாவசியமான ஒரு இக்கட்டு என முன்னரும் ஒருமுறை நான் எழுதியுள்ளேன். இதோ வேறு ஒன்று.

Children are bullied every day. இது 28.11.-2003 தின ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை ஆசிரிய தலையங்கத்தின் தலைப்பு. அதில் கூறப்பட்டது கீழே உள்ளது. அச்சுறுத்தல் அல்லது மிரட்டல் மூலம் ஆதிக்கத்தைப் பெறுதல் ஆகும். இது பல்வேறு பிரமாணங்களைப் பெறுகிறது. அது உடலுக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கும் அல்லது வெறும் வாய்ப்பேச்சு மிரட்டலாக இருக்கலாம். இங்கே நேரடியாக ஒருவர் முகத்தைப் பார்த்து செய்யப்படலாம் அல்லது அவர் இல்லாத சமயம் நிகழ்த்தப்படலாம். இணைய தளம் மூலம் வரும் அச்சுறுத்தலே (Cyber - bullying) அண்மைக் காலத்து அநாகரிக செயற்பாடு. இளைய தலைமுறையினர் பெரிதும் விரும்புகின்ற text messaging, e-mail, postings on website மற்றும் chat-rooms போன்றவற்றைக் கையாண்டு தன் கோழைத்தனத்தை இவ்வச்சுறுத்தல் காண்பிக்கிறது. The Canadian journal of psychology எனும் சஞ்சிகையில் பிரசுரித்துள்ளதன்படி மாணவர்களிலே 10% வீதத்தினர் வன்முறையாளர்களாகவும் 50% வீதத்தினர் பாதிக்கப்பட்டோராகவும் உள்ளனராம். இதில் முக்கியமான ஒரு விசயம் பாதிக்கப்பட்டோரில் பயந்தாங்கொள்ளிகள் பலர். அவர்கள் மனதில் அதை வைத்துக் குமுறுவார்களேயன்றி அது பற்றி பெற்றோருக்கோ உறவினருக்கோ தெரிய வைக்க மாட்டார்கள். இது கொல்லாமல் கொல்லும் வியாதி.

இணையதளம் மிக அவசியம். உங்கள் பிள்ளைக்கு அது தேவையே. அவருக்கென தனிப்பட ஒன்றினை ஏற்பாடு செய்து கொடுத்தால் நீங்கள் பிழை விடுகிறீர்கள் என்பது அர்த்தம். அண்மையில் பத்திரிகை ஒன்று பாடசாலை மாணவரிடையே கருத்துக் கணிப்பு ஒன்றினை எடுத்து அதனை "Kids Take On Media" என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது. அதன்படிக்கு 26% பாடசாலை மாணவர்களுக்குச் சொந்தமாக கணினியும் இணைய தளமும் உள்ளனவாம். இவர்களிலே பெரும்பாலோர் தமக்கு எந்தவித கட்டுப்பாடும் வீட்டாரிடமிருந்து வருவதில்லை எனவும் கூறியுள்ளனர். எம்மவர்களில் சொந்தமாக கணினி வைத்திருப்போரின் வீதம் 26க்கும் அதிகமாகவே இருக்கும்.

கணினி ஒருவருக்கு மாத்திரம் சொந்தமல்ல. வீட்டில் உள்ளோர் எல்லோருக்கும் பொதுவானதாக ஒரு கணினி இருக்கட்டும். கணினியை அவரின் அறைக்குள் வைக்காமல் பொதுவான ஒரு இடத்திலே வைத்தீர்களானால் ஒரு கட்டுப்பாடு இருக்கும். என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். என்னை அவர்கள் கவனிக்கிறார்கள் என்ற பயம் அவருக்கும் இருக்கும்.

பெற்றோர் பிரிவு

இது கதையல்ல. நிஜம். கியூபெக் மாகாண நீதி அமைச்சர் Marc Bellemare அவரது 21 வயது மகள் Mercier Bellemare இரவு விடுதி ஒன்றில் நிர்வாணமாக நடனமாடுபவராய் பொலிசார் பிடித்துள்ளனர். அவர் தனது தந்தையும் தாயும் விவாகரத்துச் செய்து தந்தை மறுமணம் செய்ததும் 13 வயதுப் பெண்ணாக வீட்டை விட்டு வெளியேறியதாகவும் 18 வயதிலே நிர்வாண நடனம் ஆடத் தொடங்கியதாகவும் சொல்லியுள்ளார். அங்கே பரிதாபம் என்னவென்றால் தான் தனது கல்லூரிக் கல்விக்கு வேண்டிய கட்டணம் கட்டுவதற்காகவே நிர்வாண நடனம் ஆடுகிறாராம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பார்கள். அதே சமயம் மதியாதார் வாசல் மிதியாமை கோடி பெறும் எனவும் கூறுவர். கணவன் மனைவிக்கிடையே மனமுறிவு அதனால் மணமுறிவு சாதாரணமாகி விட்டது. இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் இருவரது அரவணைப்பிலும் வாழ வேண்டிய சிறார்கள் பாதிக்கப்படுகிறார்கள். பொதுவாக மேலைத்தேய சட்ட அதிகார எல்லைகள் யாவும் இப்பொழுது விவாகரத்து அளிக்கின்ற பொழுது "பாதுகாப்புப் பொறுப்பேற்றல் மற்றும் பிள்ளையைக் காணும் உரிமை கோட்பாட்டினை" (Concept of custody and access) முற்றாகவே கைவிட்டு விட்டு "பங்காளிப் பெற்றோரியம் (Shared parenting) என்பதனைக் கையாளுகின்றன. Judith Wallerstein எனும் ஆய்வாளர் விவாகரத்து செய்த பெற்றோர் இருவருடைய அனுசரணை மிக்க ஆதரவு பிள்ளைகளுக்குத் தேவை என்பதால் அவர்களிடம் விவாகரத்துக்குப் பின்னரும் தொடர்பினை வைத்திருங்கள் என கெஞ்சி வேண்டுகோள் விடுகிறார். தந்தைமார் பொதுவாகவே பொறுப்பற்றவர்கள். அவர்கள் தொடர்ந்து பிள்ளைகளை அக்கறையுடன் கவனிக்க மாட்டார்கள் எனப் பெண்ணியவாதிகள் கூறுவார்கள். அதில் உண்மை இல்லாமல் இல்லை. இதன் காரணமாகவே 1988ம் ஆண்டிலே கனடிய பாராளுமன்றத்தின் மேலவை - கீழ்ச்சபை இரண்டுமாகச் சேர்ந்து தயாரித்த அறிக்கையான "For The Sake Of The Children" ஏனோ இது நாள்வரை கிடப்பிலே போடப்பட்டுள்ளது. அதன் சிபாரிசுப் படிக்கு இரு பெற்றோரும் விவாகரத்துக்குப் பின்னரும் பிள்ளை வளர்ப்பில் சரிசமனான பங்கேற்றல் வேண்டும். யோர்க் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 92 மாணவர்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் படி 26% வீதத்தினர் பேரன் பேத்திகளுடன் அதிக தொடர்பு வைத்திருப்பவர்களாகத் தெரிகிறது. பல குடும்பங்களிலே பேரன் பேத்திகள் பெற்றோருக்கான குறியீடுகளாகவும் பேரப் பிள்ளைகளுக்கு உணர்வு பூர்வ ஆதரவினை வழங்குபவர்களாகவும் உள்ளனர். கனடா புள்ளி விபரவியல் திணைக்களத்தின் கணிப்புப் படி ஒவ்வொரு 100 பேரர்களுக்கும் ஒருவர் என்ற வீதத்தில் பேரப் பிள்ளைகளுடன் வாழ்கின்றனராம். எனவே விரிவாக்க குடும்பங்கள் இன்றைய காலகட்டத்திலே மிகவும் விரும்பக் கூடிய ஒன்றாகும்.

மனப்பாங்கு

1. சத்தம் காதைத் துளைக்குது.
வீட்டின் உள்ளே பாட்டு, வானொலி, தொலைக்காட்சி எல்லாமே உச்ச ஸ்தாயியில். எல்லாமே அமைதியாக, மிக மென்மையாக ஒலிநாடாவை ஓடவிட்டபடி எதையாவது வாசித்து இன்புற்ற காலத்துக்கு எப்பவோ விடை கொடுத்தாகி விட்டது. வீட்டில் மாத்திரமா? வெளியிலும், அது Le Chateau போன்ற உடை அணிக் கடையாக இருக்கலாம் அல்லது Carlton Cinema வாக அல்லது Elaine Cinema வாக இருக்கலாம். பாடல்கள் பயங்கர சத்தமாகவே இருக்கும். எங்களை அது உறுத்துகிறது. ஆனால் அவர்களுக்கு இன்னும் மேலும் மேலும் வேணும். அவர்கள் சித்தாந்தம் வேறு. உரத்த ஓசை அவர்களைப் பொறுத்த மட்டிலே இரு அற்புதச் செயற்பாடுகளுக்குக் காரணமாகின்றன. (மறுபக்கம் வருக)

1. தூண்டல் ஊக்கப்பேறு: செயல்களை விரைவாகவும் செவ்வையாகவும் செய்வதற்கு வேண்டிய ஊக்கத்தை பலத்த ஓசை வழங்குகின்றது என்பது அவர்கள் சித்தாந்தம். 2. மன அழுத்தத்தைக் குறைக்கிறது. பிள்ளைகளுக்கு சிறப்பாகப் பதின்ம வயதினருக்கு வயதிற்கேற்ற பல பிரச்சனைகள் மன அழுத்தத்தை ஏற்படுத்தக் காரணமாக இருக்கலாம். உரத்த ஒலியில் பாடல்கள் கேட்கும் போது அவர்களது மன அழுத்தம் குறைகிறதாகக் கருதுகிறார்கள். அதில் உண்மையிருக்கலாம். கேட்டல் புலம் மிகையாக உபயோகிக்கப்படும் வேளையில் ஏனைய புலன்கள் செயலிழக்கலாம்.

ரொமி சூ போன்ற Audiologist பலத்த ஒலியின் பாதிப்புப் பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சாதாரணமாக எமது செவிப் பறையில் உள்ள 15,000 உணர்வுக் கலங்கள் ஒலியினை மூளைக்கு இட்டுச் செல்கின்றன. உரத்த ஒலி இம்மயிரிழைகளைக் கொன்று விடுகின்றன. சாதரணமாக 85 decibel எமது காதுகள் ஏற்கின்றன. உரத்த ஒலியின் போது 125 decibel இற்கும் அதிகமாக ஒலி அலைகள் எழுகின்றன. அதனால் கேட்டல் பாதிக்கப்படுவது உண்மையே. எனினும் பாதிப்பு தெளிவாகப் புலப்படுதல் வயதான பின்னர் என்பதால் அதன் தாற்பரியம் இளைஞர்களுக்குப் புரிவதில்லை. பெற்றோர் இதனை சினேகமான முறையிலே சிரித்தபடி சற்று நகைச்சுவையுடன் கூறி அவர்களுக்குப் புரிய வைக்கலாம். இது இன்றைய இளைஞர் உலக நியதி என அவர்கள் செயலை நியாயப்படுத்தி அமைதியும் காக்கலாம்.

2. செல்லிட பேசி தேவையா?
தொலைபேசி கண்டுபிடித்தது கிரஹாம் பெல் எனக் கனடாக்காரன் தலைகால் புரியாமல் போகவரச் சொல்லிக் கொண்டிருந்தது ஜெர்மன்காரனுக்கு எட்ட அவன் இல்லை உங்களுக்கு முன்னரே நாம் கண்டுபிடித்து விட்டோம் எனக் கூறத் தொடங்கி விட்டான். எது எப்படி என்றாலும் அது கண்டு பிடிக்கப்பட்ட காலம் தொட்டு பதின்ம வயதினரின் காதல் அதன் மேல் தான். (காதலிப்பதற்கும் அது தேவை அல்லவா?) அந்தக் காதல் வரவர அதிகரித்து இன்று செல்லிட பேசி வந்ததும் (Cell phone) நீயில்லாமல் நானில்லை என்ற அளவினுக்கு முற்றிவிட்டது. பெற்றோர் அதனை வேண்டாம் என்று வாங்கிக் கொடுக்க மறுத்து நிராகரித்தது உண்டு. அது அநாவசியச் செலவு, போகவரப் பேசிக் கொண்டு திரிதல் உபத்திரவம். பழக்கத்திற்கு அடிமையாகல் என வெவ்வேறு காரணங்களைப் பெற்றோர் காட்டினாலும் கூட தொலைபேசி நிறுவனங்கள் மயக்க வார்த்தைகளால் பதின்ம வயதினரைத் தம் கைக்குள் போட்டு விட்டனர். பெற்றோரைப் பொறுத்தமட்டிலேயும் இதனை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பிள்ளைகள் எங்கே உள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் அவர்கள் ஏதாயினும் இக்கட்டில் உள்ளனரா என்பதை தெரிந்து கொள்ளவும் செல்லிட பேசி உதவுகின்றது என்பது உண்மையே. எனவே பிள்ளைகளுக்கு செல்லிட பேசி ஒன்றினை வாங்கிக் கொடுக்கும் முன்னர் அவர்கள் அதனை படிக்கிற காலத்தில் உபயோகிக்க மாட்டார்கள், மற்றும் வீட்டிற்கு வந்ததும் அதனைப் பொதுவான இடம் ஒன்றில் வைத்திருக்க வேண்டும், வீட்டில் உள்ள சமயங்களில் தொலைபேசியில் பேசுவதானால் வீட்டுத் தொலைபேசியில் தான் பேச வேண்டும், செல்லிட பேசியும் தந்தை அல்லது தாயின் பெயரிலேயே பதியப்பட்டிருக்க வேண்டும் என்ற உத்தரவாதங்களைப் பெறுதல் அவசியம்.

3. போதிய உறக்கமின்மை பதின்ம வயதினருக்கு இயற்கையானதே.
காலை 6:30க்கோ 7:00க்கோ பாடசாலைக்கு நேரமாகுது எனப் புரட்டிப் புரட்டி எழுப்புவோம். மூடியிருக்கும் கண்ணைத் திறக்கவே கஷ்டப்படும் இதே பிள்ளை தானா முதல் நாள் இரவு 11:00 மணிக்கு எனக்கு நித்திரை வரவில்லை எனக் கூறிப் பாட்டுக் கேட்டபடி படிப்பது போல பாசாங்கு செய்தவர். "ஆண்கள் ஐந்து மணித்தியாலங்களும், பெண்கள் ஆறு மணித்தியாலங்களும் முட்டாள்கள் எட்டு மணித்தியாலங்களும் உறங்கலாம்" என நெப்போலியன் கூறினாராம். இது வயதானவர்களுக்கே பொருந்தும். பதின்ம வயதினர் குறைந்தது ஒன்பது மணித்தியாலங்களாவது நித்திரை கொள்ள வேண்டும் என ஆய்வாளர்கள் சொல்கிறார்களை. Dr. மேரி கார்ஸ்டொன் பிறவுண் பல்கலைக்கழகத்தின் உறக்கநிலை ஆய்வாளர். இவர் "Adolescent Sleep Patterns" எனும் நூல் ஒன்றினைப் பிரசுரித்துள்ளார். அதில் பதின்ம வயதினர் உறக்கம் பற்றி நிறையச் செய்திகள் கூறியுள்ளார். வளர்ச்சி ஓமோன்களும் பாலியல் ஓமோன்களும் பொதுவாக உறக்கத்தின் போது தான் சுரக்கப்படுகின்றமையால் போதிய உறக்கமின்மை உடலியல் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். நிர்ப்பீடனத் தொகுதியும் பாதிக்கப்படுகின்றமையால் நோய் எதிர்ப்புச் சக்தியும் பாதிக்கப்படும். நினைவாற்றல் கூட உறக்க வேளையில் தான் உருவாகின்றமையால் பிள்ளைகளின் கற்றலையும் பாதிக்கும். போதிய உறக்கம் இல்லாத பதின்ம வயதினரைப் பற்றி மிக அழகாக கார்ஸ்டொன் "அவர்கள் பாடசாலையில் இருக்கலாம் ஆனால் அவர்களது மூளை வீட்டிலே தலையணையின் மேலே உள்ளது" என்கிறார். சனி, ஞாயிறு இன்னும் மோசம்.

பதின்ம வயதினர் இரவு 9:00 அல்லது 10:00 மணிக்கு உறக்கம் வரவில்லை எனக் கூறுவது பொய்யான கூற்றுக்கள் அல்ல என்னும் டொக்டர். மேரி கார்ஸ்டொன் அவர்களுடைய உடல் நேரம் காட்டி, சொல்ல முடியாத காரணத்தின் பொருட்டு சற்று வித்தியாசமான முறையில் இயங்குகிறது. அதன் பொருட்டாக இயற்கையாகவே அவர்கள் இரவு வேளைகளில் பிந்தி உறங்குவதும் காலையில் பிந்தி எழுவதும் இயற்கையானதே. எனவே இதனைப் பெற்றோர் அங்கீகரித்தே ஆக வேண்டும் என்கிறார்.

ஒத்த வயதுடையோர் ஈர்ப்பு
எங்கெல்லாம் அங்கீகாரம் கிடைக்கிறதோ, எங்கெல்லாம் எமக்கு உறுதுணையாக நிற்கத் தயாரானோர் உள்ளனரோ அங்கே எம்மையும் சேர்த்துக் கொள்வது மனித இயல்பு. இது குற்றமல்ல. ஆனால் அது குற்றங்கள் புரிவதற்குக் காரணமாகும் போது தான் பிரச்சனை எழுகிறது. ஒத்த வயதுடையோர் ஈர்ப்பு எல்லாப் பிள்ளைகளிடத்தேயும் இருக்கவே செய்யும். ஆனால் அது பெற்றோரின் அரணைப்பைப் பெறாத பிள்ளைகளிடத்தே விகாரமான முறையிலே அமையலாம் என்பது வேதனை. Horatio Alger Association அண்மையில் வெளியிட்ட அறிக்கை நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. அதன்படிக்கு இரண்டாம் நிலைப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் 75% வீதத்தினர் தம்மை ஒத்த வயதுடையோருடன் உறவாடித் திரிய விரும்பினாலும் கூட பெற்றோருடன் நல்லுறவு உள்ளதாகவும் அதில் 44% வீதத்தினர் பெற்றோரையே தமது ஆதர்ச மாதிரிகளாகக் (Role model) கொண்டதாகவும் கூறியுள்ளனர். பெற்றோர் பிள்ளையிடையே பலமான உறவு இருக்குமாயின் பிள்ளை ஒத்த வயதுடையோரின் மது அருந்துதல், பாலியல் வேண்டுகோள்களுக்குச் செவி சாய்க்க மாட்டார்கள் என்பது உறுதி. பெற்றோர் மனத் திருப்தியை பெரிதும் எண்ணிக் கொள்வார்கள்.

Oscar Christensen என்பவர் Arizona University இன் முன்னை நாள் உளவியல் துறைப் பேராசிரியர். "எம்மில் பல பெற்றோர் தாம் தமது பெற்றோரிடமிருந்து பெற்ற பெற்றோரியத்தையே பிள்ளை வளர்ப்பில் கையாள்கிறார்கள். இந்தப் பாரம்பரியங்கள் போற்றுதற்குரியவை என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்றாலும் அவை 50 வருடங்களுக்கு முந்தியவை" என்கிறார். எமது செயற்பாடுகள் பல எம் பிள்ளைகளை ஓடோடிச் சென்று ஒத்த வயதுடையோரிடம் தஞ்சமடையச் செய்கின்றன. கிறிஸ்ரென்சன் சொல்வதைக் கேளுங்கள்.
1. பிள்ளைகளும் பங்காளிகளே. இல்ல அமைப்பில் தாங்களும் பங்காளிகள் என அவர்கள் உணர்ந்து பங்காற்றும் விதத்தில் பெற்றோரது நடவடிக்கைகள் அமைய வேண்டும். வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இன்றைய உலகிலே சிறு குழந்தைகள் கூட இல்ல நடவடிக்கைகளில்


(எதிர்ப்பக்கம் வருக)

தம்மைக் கலந்தாலோசிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

2. கதைப்பதை நிறுத்துங்கள். பெற்றோர் நீண்ட நேரம் பிள்ளைகளுக்கு உபதேசிப்பதை விட்டு விட வேண்டும். பல பெற்றோர் பிள்ளைகளில் ஒழுங்காட்சி ஏற்படுத்துவதற்கு "பேசுதல்", "கற்பித்தல்" அல்லது "அறிவுறுத்தல்" நலம் என எண்ணுகிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. ஒரு நொடிப் பொழுதுக்கு மேல் அவர்கள் செவிகளில் நீங்கள் சொல்வது ஏறாது. "செவிடன் காதில் ஊதிய சங்கு" என்றும் "உறங்குகின்றவனை எழுப்பலாம், உறங்குவது போலப் பாசாங்கு செய்பவனை என்ன செய்யலாம்" என்றும் கூறுவார்களே, இரண்டு பழமொழிகளையும் ஒன்று சேர்த்துப் பாருங்கள் புரியும். பல பிள்ளைகளுக்கு "தாய் - செவிடு" (Mother deaf-ness) ஏற்படுகிறதாம். திறந்த மனதுடன் வெளிப்படையான கலந்துரையாடல் (கவனிக்க: போதனை அல்ல!!) அவர்களை நல்ல முடிவுகள் எடுக்க வழி வகுக்கும் என்பதை மறவாதீர்கள்.

3. பிறப்பு ஒழுங்கில் கவனம். வீட்டின் மூத்த பிள்ளை தன் சாதனைகள் திறமையாக அமையுமாயின் வீட்டு அங்கீகாரம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் திறமையாகச் செயற்பட முனைவார். இரண்டாவதின் பாடு கொஞ்சம் இக்கட்டாக அமையும். மூத்தவரோடு ஒப்பிடுவதும், அவர் கழித்தவை இவருக்குப் போவதும் இவரை பிழையான பாதையில் போக ஏவலாம். மூன்றாவதன் பாடோ திண்டாட்டம் தான். முதல் இரண்டு பற்றியும் பேசுவதற்கே பெற்றோருக்கு நேரம் போதாது. எனவே "என்னை விரும்புவோர் எவரும் இல்லை" என அவர் குமுறத் தொடங்கலாம்.

தம் பிள்ளைகளைப் பற்றிய முழுமையான அறிவு எந்த ஒரு பெற்றோருக்கும் இருப்பதில்லை. கட்டாயமாக அங்கே ஒரு குருட்டுப் புள்ளி இருக்கவே செய்யும். நாம் காணாத, காண முடியாத ஒரு குறையினை மற்றவர்களோ, ஆசிரியர்களோ ஏன் அவன் நண்பர்களோ கண்டிருக்கலாம். ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் சில பெற்றோர் தெரிந்தும் தெரியாதது போலப் பாசாங்கு செய்கிறார்களே அது வரவேற்கத் தக்கதல்ல. இதனை மறுத்தல் (Denial) என்பார்கள். வீட்டுக்கு வீடு வாசற்படி. எனவே ஒரு பிரச்சனை வந்தால் அது ஏதோ உங்களுக்குத்தான் சமூகத்திலே வந்ததாக எண்ணி அவஸ்தைப்படாதீர்கள். அதனை மறுக்கவும் முயலாதீர்கள். அத்தகைய பிரச்சனை வேறு பலருக்கும் வந்திருக்கலாம். அவர்கள் மறைத்திருக்கலாம். அதற்காக நீங்களும் மறைத்து அவலப்படாதீர்கள். நெஞ்சில் உரத்துடன் அது மேலும் வலுப் பெறுமுன் அதனை எதிர் கொள்ளுங்கள். சுமுகமாகத் தீர்க்கப் பாருங்கள்.



நிறுத்தற் குறியீடுகள்
Punctuation Marks

கவிஞர் வி. கந்தவனம்

கட்டுரைகளில் நிறுத்தற் குறியீடுகளைப் பொருத்தமான இடங்களில் நிறுத்தத் தவறும் அல்லது தடுமாறும் கட்டுரையாளர்களை வழிப்படுத்த இக்கட்டுரை முயல்கின்றது.

நிறுத்தற் குறியீடுகள் கருத்துகளைத் தெளிவுபடுத்தற் பொருட்டு வசனங்களுக்கிடையிலும் முடிவிலும் பயன்படுத்தப்படுகின்றன. அக்குறியீடுகள் பின்வருமாறு:

1. முற்றுப்புள்ளி - Full stop (.)
2. காற்புள்ளி - Comma (,)
3. அரைப்புள்ளி - Semicolon (;)
4. முக்காற்புள்ளி - Colon(:)
5. கேள்விக்குறி - Question mark (?)
6. வியப்புக்குறி - Exclamation mark (!)
7. மேற்கோட் குறிகள் - Quotation marks/Inverted Commas (")
8. அடைப்புக் குறிகள் - Brackets/Parentheses ()
9. இடைக்கோடு - Dash (-)
10. பதவுரைக் கோடு - Hyphen (_)

1. முற்றுப்புள்ளி

(1) இது முற்றுந் தரிப்பு என்றும் வழங்கப்படும். முற்றுந் தரிப்பு பொதுவாக முற்றுத் தொடர்மொழி முடிவிற் பயன்படுத்தப்படும். முற்றுத் தொடர்மொழி என்பது, எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருள் முதலியவைகளோடு சேர்ந்தேனும் சேராமலேனும் முடிவு பெற்று நிற்கும் தொடர்மொழியாகும். வடநூலார் இதனை வாக்கியம் என்பர்.
உதாரணம்: சியாமளா விளையாடினாள்.
சியாமளா மைதானத்தில் தனது தோழியரோடு விளையாடினாள்.

(2) முற்றுந் தரிப்பு மொழி அல்லது பெயர்க் குறுக்கங்களைக் காட்டவும் பயன்படுத்தப்படும்.
உதாரணம்: திரு. (திருவாளர் என்ற மொழியின் குறுக்கம். திருமதி என்பது ஒரு முழுமையான சொல்லாதலால் அதன் முடிவில் முற்றுந் தரிப்பு தேவையற்றது.)
திருமதி வ. இராமலிங்கம்
ஐ. நா. (ஐக்கிய நாடுகள்)
க.பொ.த. (கல்விப் பொதுத் தராதரம்)

ஆங்கில மொழியில் இப்பொழுதெல்லாம் தொடர்ப் பெயர்களின் குறுக்கங்கள் முற்றுப் புள்ளிகள் இல்லாமலேயே காட்டப்பட்டு வருகின்றன. அந்த வழக்கத்தை நாம் தமிழ்மொழியிற் பின்பற்றாமல் இருப்பது நல்லது. பின்பற்றினால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.
உதாரணம்: உலகத் தமிழ் வானொலி உ.த.வா.

(3) எண்ணிக் காட்ட வேண்டிய அல்லது வரிசைப்படுத்திக் காட்ட வேண்டிய நிலைமைகளில் எண்களுக்குப் பின்னும் முற்றுப்புள்ளி இடம்பெறும்.
உதாரணம்: நிதியுதவியோர்
1. திரு. ம. வித்தியானந்தன்
2. திரு. ம. செ. அலெக்சாந்தர்
3. திருமதி பூ. சின்னராசா
4. திருமதி ந. இன்பன்

2. காற்புள்ளி

சொற்கூட்டங்களை அல்லது தொடர்மொழிகளைப் பிரித்துக் காட்ட இது பயன்படுத்தப்படும்.

உதாரணம்:
(1) குறிஞ்சி, முல்லை. பாலை, மருதம், நெய்தல் எனத் திணை ஐவகைப்படும்.
(2) உதாரணமாக, இரு வருடங்களுக்கு முன்னர் பல நிபுணர்கள் அடங்கிய ஒரு குழு, கனடிய அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ், நாட்டின் வெவ்வேறு திறமைகளின் அபிவிருத்தியைப் பற்றி ஆராய்ச்சி செய்து தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

(மறுபக்கம் வருக)

குறிப்பு: (1) உம்மைத் தொகையாக வரும் சொற்கூட்டங்களைக் காற்புள்ளி கொண்டு பிரிக்க வேண்டியதில்லை.
உதாரணம்: சேர சோழ பாண்டியர்
நன்மை தீமை
தாய் தந்தை

(2) இவை போலவே எளிமையான முற்றும்மைத் தொடர்களையும் பிரிக்க வேண்டியதில்லை.

உதாரணம்: (1) கணவனையும் மனைவியையும் இரக்கமின்றிச் சுட்டுக் கொன்றனர்.
(2) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் எப்பொருட்டு எப்பெயர் வழங்கி வருமோ, அப்பொருளை அச்சொல்லாற் கூறுதலே மரபாம்.

முற்றும்மையிற் பொருள் இணைகின்றது. இணையும் பொருளைக் காற்புள்ளியிட்டுப் பிரிக்க வேண்டியதில்லை. பல் தொடர் முற்றும்மைகளைத் தெளிவு கருதி பிரித்துக் காட்ட வேண்டுமெனின் காற்புள்ளியைப் பயன்படுத்தலாம்.

3. அரைப்புள்ளி
(1) ஒரு எழுவாய்த் தொடர் பல பயனிலைகளைத் தாங்கி வருகையில் முன்னுள்ள பயனிலைகள் அரைப்புள்ளி பெற்றும் இறுதிப் பயனிலை முற்றுப் புள்ளியுடனும் முடியும்.

உதாரணம்: புலிப்படைகள் திட்டமிட்டவாறு முன்னேறின; சிங்கள இராணுவ முகாமைச் சூழ்ந்து கொண்டன; திடீரெனத் தாக்கின; யாருமே முகாமை விட்டு வெளியேற முடியாத வகை வெளிவாயில்களைக் காவல் புரிந்தன; முப்பது நிமிடப் போராட்டத்தின் பின் முகாமைக் கைப்பற்றிக் கொண்டன.

(2) ஏற்கனவே காற்புள்ளியாற் பிரிக்கப்பட்ட வாக்கியத் தொடர்களை வேறுபடுத்திக் காட்டவும் அரைப்புள்ளி பயன்படுத்தப்படுவதுண்டு.

உதாரணம்: இந்தப் பயணத்தை மேற்கொள்ள முன் இரு விடயங்களைச் சீர்தூக்கிப பார்க்க வேண்டும்: ஒன்று, வானிலை; மற்றையது, செலவு.

4. முக்காற் புள்ளி

(1) தலைவாக்கியத்தைத் தொடர்ந்து ஒரு விளக்கம் அளிக்கப்பட வேண்டுமாயின் அத்தலைவாக்கியமும் அதனைத் தொடரும் விளக்கமும் முக்காற் புள்ளியாற் பிரித்துக் காட்டப்படும்.
உதாரணம்: அந்த வேளையில் நாம் கண்ட காட்சி இது: இரத்த வெள்ளத்தில் ஓர் உருவம் துடித்துக் கொண்டிருந்தது. 3.(2) இன் உதாரணத்தையும் கவனிக்கவும்.

(2) பின்வருமாறு, கவனிக்க, உதாரணம் போன்ற சொற்களையும் அவற்றைத் தொடர்ந்து வரும் வாக்கியங்களையும் பிரித்துக் காட்டவும் முக்காற் புள்ளி பயன்படுத்தப்படும்.

5. கேள்விக்குறி/கேள்வி அடையாளம்

(1) இது வெளிப்படையான வினா வாக்கியங்களின் முடிவில் நிறுத்தப் பெறும். வினா வாக்கியங்கள் இருவகைப்படும்.
(அ) யார், எவன், எவள், எவர், எவர்கள், எது, எவை, ஏன், என்ன, எங்கு , எந்த, எப்பொழுது, என்று, எதற்கு, எவ்வளவு, எத்தனை, எத்தனையாவது, எவ்விதம் (எப்படி), எவ்வகை (எப்படிப்பட்ட) என்னும் வினாச் சொற்களைக் கொண்டு கேட்கும் வினாக்கள்.
(ஆ) ஆகார இடைச் சொல்லைக் கொண்டு ஆக்கும் வினாக்கள்.
உதாரணம்: யார் நாளைய கூட்டத்துக்குத் தலைவர்?
அவர் வருவாரா?

குறிப்பு: ஐய வினாக்களுக்கும் பிறர் கூற்று வினாக்களுக்கும் கேள்விக்குறி பயன்படுத்தப்படுவதில்லை.
உதாரணம்: மழை வருமோ தெரியாது.
சாப்பிட்டாயா என்று அம்மா கேட்டார்.

(2) சிலவகை ஐயப்பாடுகளுக்கும் கேள்விக்குறி பயன்படுத்தப்படும்.
உதாரணம்: இவர் 1650ல் (?) பிறந்து 1720ல் காலமானார்.

6. வியப்புக்குறி/ஆச்சரியக்குறி
இது வியப்புக்குரிய கருத்துகளை அல்லது கடும் உணர்ச்சிகளை அல்லது வாழ்த்துகளை அல்லது தூற்றுதல்களைத் தெரிவிக்கும் வாக்கியங்களின் முடிவில் நிற்கும்.
உதாரணம்: என்ன அழகான காட்சி!
போடா வெளியே!
பல்லாண்டு வாழ்க!
ஆழ்க தீயதெல்லாம்!

கவனிக்க: வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என அளவுக்கு மீறிய ஆச்சரியக் குறிகளைப் பயன்படுத்துவது பயனற்றதொன்று; தவிர்த்தல் வேண்டும்.

7. மேற்கோள் குறிகள்
இவை தலைகீழாக கவிழ்ந்து நிற்கும் காற்புள்ளிகள். அமெரிக்கர் இரட்டைப் புள்ளிகளாகவும் பிரித்தானியா ஒற்றைப் புள்ளியாகவும் கையாள்வர். ஆன்ற தமிழ் எழுத்தாளர்கள் மேற்கோள்களுக்கு இரட்டைப் புள்ளிகளையும் வாக்கியங்களில் வரும் இவ்வகைச் சொற்களைச் சிறப்பித்து அல்லது புறம்புபடுத்திக் காட்ட ஒற்றைப் புள்ளிகளையும் பயன்படுத்துவர்.
உதாரணம்: பிரதம விருந்தினர் பேசுகையில், "கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் 'தமிழர் தகவல்' தமிழ் மக்களுக்கு ஆற்றி வரும் சேவை அளப்பரியது" என்றார்.

8. அடைப்புக் குறிகள்
இவை மேலதிக தகவல்கள், ஐயப்பாடுகள், இலக்கங்கள், நினைவூட்டும் தகவல், அறிவுறுத்தல் போன்றவற்றை வாக்கியத்தின் இடையிற் சேர்த்துக் கொள்ளப் பயன்படுத்தப்படுகின்றன.
உதாரணம்: நான் அவரை முதன்முதலாக 1950ல் (என்று நினைக்கிறேன்) சந்தித்தேன்.
மேலை நாடுகளுள் கனடாவிலேயே இலங்கைத் தமிழர்கள் அதிகம் வாழ்கின்றனர் (அட்டவணை 3.2 ஐப் பார்க்கவும்).
இவ்விதமாக, கூச்சல் போட்டு (குடிவெறியில் இருந்தவர்கள்?) அவரைப் பேசவிடாது (பாவம்) தடுத்து விட்டனர்.

9. இடைக்கோடு
(1) இது மேலதிக தகவலை அல்லது குறிப்பை வேறுபடுத்திக் காட்டப் பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம்: பாடசாலை நாட்கள் - அந்தக் காலத்தில் - எனக்குக் குதூகல நாட்களாகவே இருந்தன.
(2) எழுத்தில் ஒரு வேகத்தை அல்லது விறுவிறுப்பைத் தோற்றுவிக்கும் வகையிலும் இது கையாளப்படுகின்றது.
உதாரணம்: அபாய ஒலி அலறியது. மக்கள் கடுகி நடந்தனர் - ஊரடங்குச் சட்டம் அமலாகுவதற்கு முன் தத்தம் வீடுகளை அடைவதற்காக.

10. பதவுரைக் கோடு
இடைக் கோட்டுக்கும் பதவுரைக் கோட்டுக்கும் வித்தியாசம் பலருக்குத் தெரிவதில்லை. நீளத்தைப் பொறுத்து பதவுரைக் கோடு இடைக் கோட்டின் சரி அரைவாசியாகும். வாக்கியத் தொடர்களைப் பிரிக்க இடைக்கோடு உதவுகின்றது. சொற்களைப் பிரித்துக் காட்ட பதவுரைக் கோடு பயன்படுத்தப்படுகின்றது. இது சொற்களின் பொருளை வலியுறுத்தவும் ஒரு சொல்லில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களுக்குப் பதிலாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
உதாரணம்: இறைவன் வாலறிவன் - தூய அறிவினன் - என்று போற்றப்படுகின்றான்.
உ_ம் (உதாரணம்)
ப_ரை (பதவுரை)

ஆரம்ப அனுபவங்கள் நிலைத்து நிற்கும்



திருமதி பூமணி துரைசிங்கம்

ஒரு தாய் பிள்ளைக்கு உணவு ஊட்டும் போது அன்போடும் ஆதரவோடும் பிள்ளையின் முகத்தைப் பார்த்து ரசிக்கிறார். ஒரு தந்தை பிள்ளையை குளிப்பாட்டி உடைகள் மாற்றும் போது, கொஞ்சிக் குலாவுகிறார். ஒரு பராமரிப்பாளர் பிள்ளையை தாலாட்டுப் பாடி தூங்க வைக்கிறார்.

உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியமாகிறது. அதே போல் வளமான மூளை வளர்ச்சிக்கு உடல் ரீதியான, உள ரீதியான அறிவுபூர்வமான அனுபவங்கள் ஆரம்ப காலத்தில் சாதகமாக இருத்தல் முக்கியம்.

கருவில் ஏனைய உறுப்புகள் போன்று சிசுவின் மூளையும் உருவாகி வளர்கிறது. பிறந்த பின் மூளையிலிருக்கும் நரம்புக் கலங்களுக்கிடையில் சரியான தொடர்பு ஏற்பட்டால் தான் சிந்தனை, ஞாபகம், உணர்வு, பிறருடன் பழகும் திறன், கல்வி முதலிய செயற்பாடுகள் மிகவும் திறமையாக அமையும். இது சாத்தியமாவதற்கு பிள்ளையின் அனுபவங்கள் முக்கியமாகின்றன. அதுவும் முதல் ஐந்து ஆண்டுகள் முதலீட்டுக் காலம் அல்லது உருவாக்க ஆண்டுகள் என்று கூறலாம். பிள்ளையின் வளர்ச்சிக்கு இந்தக் காலத்தில் அனுகூலமான சூழல் அமைக்கத் தவறி விட்டோமேயானால் ஆயுட் காலப் பாதிப்புகள் ஏற்படலாம்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது".
தாயுடனும் தந்தையுடனும் இருந்து வளர்ந்த குழந்தையை ஒரு பரமரிப்பவர் கையில் கொடுக்கும் போது அதன் முகம் வாட்டம் அடைவதைக் காணலாம். பராமரிப்பவர் பொறுமையாக, அன்பாக, ஆதரவாக கவனிக்கும் போது குழந்தைக்கு அன்பு, நம்பிக்கை, பாதுகாப்பு உறுதி என்கின்ற எண்ணம் உருவாகிறது. தனது பிஞ்சுக் கரங்களால் கட்டி அணைத்து முத்தம் கொடுத்து அன்பை வெளிப்படுத்துகிறது. மாறாக பராமரிப்பவர் விரக்தியுடன் கவனிக்கும் போதும் கோபத்தில் துன்புறுத்தும் போதும், தவறான 'செயல்களில் ஈடுபடும் போதும் குழந்தையின் உணர்வுகள் பாதிக்கப்பட்டு மனவளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகின்றது. இப்படியான குழந்தைகள் எதிலும் ஈடுபாடு காட்டாதவர்களாகவும், சந்தோஷமற்றவர்களாகவும் காணப்படுவார்கள்.

பிறந்த முதல் ஆண்டில் சூழலில் ஏற்படும் அனுபவங்களை பிள்ளைகள் எப்படி உணர்கிறார்கள்? பார்த்தல், கேட்டல், நுகர்தல், தொடுதல், ருசித்துப் பார்த்தல் மூலம் மூளையோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். பெற்றோர், சுற்றத்தார், காப்பக ஆசிரியர்கள், குடும்ப நண்பர்கள், பராமரிப்பாளர்கள் எவராய் இருந்தாலும் பிள்ளைகளின் சாதகமான வளர்ச்சிக்குத் துணையாக இருக்கலாம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்
மண்ணில் பிறக்கையிலே - அவன்
நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும்
அன்னை/பராமரிப்பாளர் வளர்ப்பினிலே."

இந் நாட்டுச் சூழலில் பராமரிப்பாளர்களே பிள்ளை வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.

ஆரோக்கியம் மிக்க, மகிழ்வோடு, மன உறுதியோடு கல்வி கற்கும் திறமை நிறைந்த பிள்ளைகளை எப்படி உருவாக்கலாம் எனச் சற்று ஆராய்வோம்.

1. அன்பு, ஆதரவு, அனுசரணை
இம் மூன்றும் கிடைக்கும் போது தான் ஒரு பாதுகாப்பு மிக்க, நிலையான இடத்தில் இருக்கிறேன் என்ற நம்பிக்கை பிள்ளைக்கு உண்டாகிறது. குழந்தைகளை தூக்கி வைத்திருப்பது, அணைத்துத் தடவிக் கொடுப்பது, அன்பு காட்டுவது, அவர்களின் தேவைகளை உடனுக்குடன் கவனிப்பது போன்ற செயல்கள் அவர்களின் பிஞ்சு மூளையைத் தூண்டி, வளர்ச்சிக்குத் தேவையான ஓமோன்களை சுரக்க வைக்கிறது. பிள்ளைகளைத் தூக்கித் திரிவது பிழையான செயல் என்று இளம் தாய்மார்கள் நினைப்பதுண்டு. இக் கருத்து தவறானது என நவீன ஆராய்ச்சிகள் கூறுகின்றன. பிள்ளைகளைத் தூக்கி உலாவி சூழலில் இருக்கும் பொருட்களை காட்டுவதும், அவை பற்றிக் கதைப்பதும் பிற்காலத்தில் நல்ல பழக்கங்கள் ஏற்படுத்தவும் அறிவு வளரவும் உதவும்.

2. சைகைகள், சமிக்ஞைகள் அறிந்து உடன் செயற்படல்
குழந்தைகள் விருப்பு, வெறுப்பு, தேவைகள், மனோநிலை முதலியவற்றை பார்வை, அசைவு, முகபாவம், சத்தம், அழுகை போன்ற சைகைகள், சமிக்ஞைகள் மூலம் பராமரிப்பவர்களுக்கு புலப்படுத்துகிறார்கள். கருவறையில் பசி, குளிர், தூக்கம் எதுவுமே சிசுவிற்குப் பிரச்சனையாக இருப்பதில்லை. பிறந்த பின் புதிய சூழலில் அதே வசதிகளை எதிர்பார்க்கிறது. கிடைக்காதவிடத்து அழுத்த ஓமோன்கள் சுரப்பதால் குழந்தை அழுகை மூலம் தனது தேவைகளை வெளிப்படுத்துகிறது. பராமரிப்பவர் இவைகளை அறிந்து உணர்ந்து தேவைகளை விரைவாக கண்ணியமாக பூர்த்தி செய்யும் திறன் உடையவர்களாக இருத்தல் நல்லது. உடனுக்குடன் தேவைகளை நிவர்த்தி செய்தல் குழந்தைகளின் சாந்தம் அடையும் திறனை வளர்க்குமேயன்றி அதிக சலுகை காட்டுவதாக ஒரு போதும் அமையாது.

3. கதைத்தல், வாசித்தல், பாடுதல்
பெரிய படங்கள் கொண்ட புத்தகங்கள் வாசிப்பது, எளிமையான சிறு பாட்டுகள் பாடுவது, கதைகள் சொல்லுவது, உணவு ஊட்டும் போதும் தினசரி நடவடிக்கைகள் செய்யும் போதும், சிறு விளக்கம் கொடுப்பது மூளை வளர்ச்சிக்கு உதவும், வாசிக்கும் பழக்கத்தையும் ஊக்குவிக்கும், உங்களோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்கு அருமையான சந்தர்ப்பமாகவும் அமையும். பிள்ளைக்கு விளங்காத வயதில் இவைகளை ஏன் செய்ய வேண்டும் என்று நினைப்பது தவறு. திரும்ப, திரும்ப அதே பாட்டுகளை பாடுதலும், அதே கதைகளை சொல்லுவதும் எங்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் சலிப்பு ஏற்படுத்துவதாய் இருந்தாலும், பிள்ளைகளின் பேச்சுத் திறன், மொழி வளம் விருத்தியடைய பெரிதும் உதவுகிறது. (மறுபக்கம் வருக)

4. காரியக் கிரமமும், வழிமுறைகளும்.
யன்னலின் திரைகளை தாய் மூடுகிறார், பாட்டு பாடத் தொடங்குகிறார் என்றால் நித்திரை நேரம் என்று பிள்ளைக்குத் தெரியும். பராமரிப்பாளர் பழரசம், பிஸ்கட் கொடுக்கிறார் என்றால் தந்தை அழைக்க வரும் நேரம் நெருங்கி விட்டது என்பது பிள்ளைக்குத் தெரியும். பிள்ளைகளின் தினசரி நடவடிக்கைகளில் இப்படிச் சந்தோஷமான உணர்வுகளுடன் ஒரு ஒழுங்கு இருப்பது குழந்தையின் மனதில் இருக்கும் பயத்தை அகற்றித் தன்னம்பிக்கையை உயர்த்தும்.

5. பாதுகாப்பான ஆராய்தலையும், விளையாட்டையும் ஊக்குவித்தல்.
முதல் சில மாதங்கள் தாய் தந்தையையே தனது உலகமாக பிள்ளை கருதுகிறது. பெற்றோர் - பிள்ளை உறவு பிற்கால வளர்ச்சிக்கும் படிப்பிற்கும் அடிப்படையாக அமைகிறது. குழந்தை தவழ, நடக்க ஆரம்பிக்கும் போது தானாகவே சூழலை அறிய முயல்கிறது. தனக்கு விருப்பமான விளையாட்டுப் பொருளுடன் விளையாட விரும்புகிறது. நாம் பிள்ளையைத் தடுத்து ஒரு இடத்தில் இருத்தி வைப்பது, விளையாட விரும்பும் நேரத்தில் தடுப்பது, சாதகமாக அமையாது. விளையாட்டு அறிவு வளர்ச்சிக்கும், படிப்பிற்கும் முக்கிய காரணியாகும். பலர் பிள்ளைகளை இருக்கையில் பூட்டி வைத்துவிட்டு வேலைகளை கவனிப்பது, விளையாட்டுக் கூடு, தொட்டில் போன்றவற்றில் நீண்டநேரம் விட்டு வைப்பது, பாதகமான உணர்வுகளை வளர்க்கும். தள்ளு வண்டியில் கொண்டு செல்வது, ஊஞ்சலில் விளையாட விடுவது, தூக்கித் திரிந்து உட்புற, வெளிப்புற சூழலை பார்க்க வைப்பது அவர்களின் சமூக இடைத் தாக்கத்தை விருத்தியடையச் செய்கிறது.

6. நல்லொழுக்கப்படுத்துவது எப்படி?
குழந்தைகள் நீங்கள் சொல்வதை எல்லா வேளைகளிலும் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு. அச்சுறுத்தினால் நிலத்தில் விழுந்து, புரண்டு அல்லது கத்திக் குளறி ஆர்ப்பாட்டம் செய்வார்கள். கோபமும், விரக்தியும், குழந்தையின் கட்டுப்படுத்தும் திறனை மிஞ்சும் போது இது நடக்கிறது. இப்படியான வேளைகளில் நீங்கள் அடித்தல், தள்ளி விடுதல், தலையை உலுக்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டால் பயம், அவமானம், ஆத்திரம் போன்ற உணர்வுகள் தூண்டப்படுவதோடு தன்னடக்க வளர்ச்சியும் தடைப்படலாம். குழந்தையுடன் அன்பாய் ஆதரவாய் கதைப்பது, வேறு விளையாட்டில் ஈடுபடுத்துவது, உங்கள் கண்டிப்புக்கு விளக்கம் கூறுவது, ஊக்குவிக்கும் வார்த்தைகளை கூறுவது முதலிய செயற்பாடுகள் மூலம் நல்லொழுக்கத்தை நிலைநாட்டலாம். உதாரணத்திற்கு

1. பூங்காவில் விளையாடும் போது, இனி விளையாடியது காணும் வா போகலாம் என்று கூறுவதற்குப் பதிலாக "நீ நன்றாக விளையாடுகிறாய் ஆனால் வீடு செல்லும் நேரமாகி விட்டதே" என்று சொல்லிப் பாருங்கள்.

2. சுவரில் கீறிப் பழுதாக்காதே என்பதிலும் பார்க்க, "நீ அழகாக கீறுகிறாய், இதோ வர்ணப் பென்சில், பேப்பர் கீறு பார்க்கலாம்" என்பது சிறந்தது.

7. ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானவர்கள். மனோபாவம், மனக் கிளர்ச்சி குழந்தைக்கு குழந்தை வித்தியாசப்படும். ஒரே குடும்பத்தில் ஒருவர் சுறுசுறுப்புடன் எல்லோரிடமும் எளிதில் பழகும் சுபாவமுடையவராகவும் மற்றையவர் கூச்ச சுபாவமுடையவராகவும் நேரம் கடந்து பழகும் பக்குவம் உள்ளவராகவும் இருக்கலாம். வளர்ச்சி கூட வித்தியாசப்படலாம். அவர்களைப் பற்றிய உங்கள் மனோபாவம் அமையும் விதம், அவர்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் பெருமளவில் பிரதிபலிக்கும்.

குழந்தைகள் தினசரி சவால்களில் வெற்றி காணும் போது நீங்கள் கூறும் உற்சாகமான வார்த்தைகள் அவர்களை மேலும் புதிய சவால்களில் ஈடுபடச் செய்யும். சுதந்திரமாக பிள்ளைகளை விளையாட விடுவது, தடை செய்யாது ஊக்குவிப்பது, தேவைகள் அறிந்து உதவுவது சாதகமான, சுயகௌரவம் நிரம்பிய பிள்ளைகளை உருவாக்கும்.

8. பராமரிப்பாளர் பற்றி
பிள்ளை பராமரிப்பு ஒரு அற்புதமானதும் முக்கியமானதும் சவாலாகவும் அமையும் தொழிலாகும். ஆரம்ப சூழலை பிள்ளைகளுக்கு அமைப்பவர்களாகிய நீங்கள் ஆரோக்கியமாகவும், மனத் திருப்தியுடனும் இருக்க வேண்டியது முக்கியம். களைத்து, எரிச்சலாக, விரக்தியாக அல்லது வேறு பல பிரச்சனைகள் மத்தியில் இருக்கும் போது பிள்ளையின் தேவைகளை கவனிப்பது கடினமாக இருக்கும். அந்த வேளைகளில் ஓய்வெடுப்பது, சுற்றத்தார் நண்பர்கள் மூலம் உதவி பெறுவதும், ஆலோசனை பெறுவதும் சாலச் சிறந்தது. பிழைகள் விட நேரிடலாம். அதற்கு பிராயச்சித்தம் செய்ய பல வழிமுறைகள் உள்ளன.

ஈழம் - ஆய்வு செய்யும்...

அரசியலிலும், சமயத்திலும் இதைக் காணலாம்.
பெரும்பான்மையினரும் றோமன் கத்தோலிக்க மதத்தினர். வார இறுதிகளில் அரசியல் ஆர்ப்பாட்டங்களுக்கும், சமய விழாக்களுக்கும் - அதாவது ஒன்றுகூடல் குறைவிருக்காது.

உலகின் பல பாகங்களிலுமிருந்தும் வரும் உல்லாசப் பயணிகளுக்காகவும் விழாக்களை நடத்துவார்கள். ஆனால் தமது உணர்வுகளால் மோல்ற்ராவை வாழ வைத்துக் கொண்டு வருகிறார்கள்.


நாடு சிறிதானாலும் எல்லாப் பொருட்களும் தாராளமாகக் கிடைக்கின்றன. பல மொழிகளைப் பேசுபவர்களையும் காணலாம். நினைத்த மாத்திரத்தில் நாட்டையே வலம் வந்து விடலாம்.

நான் நாட்டைச் சுற்றிப் பார்த்து வந்த போது ஒரு இடத்தில் விவசாயி ஒருவரைச் சந்தித்தேன். இன்னும் மாடுகள் பூட்டப்பட்ட கலப்பையால் வயலை உழுது கொண்டிருந்தார். அவருடன் சிறிது நேரம் பேசினேன். தான் தனது கிராமத்தை விட்டு வேறெந்தப் பகுதிக்கும் சென்றதில்லை எனக் கூறிய போது வியப்பாக இருந்தது. தேவைக்கு வேண்டிய அத்தனை பொருட்களும் அங்கேயே கிடைப்பதால் மற்றப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனவும் மனத் திருப்தியுடன் அவர் கூறி மகிழ்ந்தார்.

ஆனால் ஒன்று - மோல்ற்ரா உலக நாடுகளின் பார்வையில் இருப்பதற்கு ஒரு பின்னணி உள்ளது. அதுதான் அந்த நாடு மத்திய தரைக்கடலின் முக்கிய பகுதியில் அமைந்திருப்பது.

இனி நாம் எமது ஈழத்தைப் பற்றிச் சிந்திப்போம்; வாருங்கள்.

உளவளத்துணை சில அடிப்படைகள்
Counselling - Some Basics



எஸ். பத்மநாதன்

வளர்ந்து வருகின்ற தொழில் சார்ந்த சமூக அமைப்பில் ஒரு முக்கிய நடவடிக்கையாக இருப்பது உளவளத்துணை சார்ந்த பல்வேறு செயற்பாடுகள். பிரித்தானியாவில் 1971ல், The standing council for the advancement of Counselling (SCAC) என்ற நிலையமே முதலில் உருவாகியது. பின்பு இது பிரித்தானிய உளவளத்துணை சங்கம் (BAC) என மாற்றம் பெற்றது. 1977ல் 1,000 உறுப்பினர்கள் இதில் செயற்பட்டனரெனினும் 1992ல் 8,556 பேர் இருந்துள்ளனர். இதே போன்று அமெரிக்க உளவியல் சங்கம் இத்துறையில் நூற்றுக் கணக்கான பயிற்றப்பட்ட அல்லது பட்டம் பெற்ற ஆலோசகர்களை கொண்டுள்ளது. இதற்குள் தாதி தொழில், கற்பித்தல், கிறிஸ்தவ குருவானவர்கள், பொலிஸ் உத்தியோகத்தினர் போன்றவர்களும் இணைந்து செயல்படுகின்றனர்.

பொதுவாக 'உளவளத்துணை' என்னும் போது தனிப்பட்டவர்கள் அல்லது குழுவினர்கள் பற்றிய பிரச்சனைகளை விடுவித்தல், நெருக்கடிகளுக்கு உதவுதல், உளவியல் ரீதியில் ஆய்வு வழங்குதல், வழிகாட்டுதல் என்பவற்றில் செயல்படுவதாகும். ஒரு ஆலோசனை பெறுபவரது பல்வேறு தன்மைகளையும் ஆலோசகர் ஆய்ந்து திருப்திப்படுத்தக் கூடிய உதவி செய்யும் போதுதான் அது உளவளத்துணையாகின்றது. ஆலோசனை பெறுபவர் நல்ல பெறுமதியுள்ள, அர்த்தமுள்ள கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் போதே திருப்தி கொள்கின்றார். சிலவேளைகளில் உளவளத்துணை எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவியுள்ளன.

தற்போது உளத்தோடு சம்பந்தப்பட்ட தொழில்சார்ந்த உத்தியோகத்தவர் பலர் உளர். உள சிகிச்சையாளர் (Psychotherapist) உளவியலாளர்கள் (Psychologists) மனோவியல் சிகிச்சையாளர் (Hypnotherapist) உளமருத்துவர் (Psychiatrist) உள்ளனர். உளசிகிச்சை (Psychotheraphy) பொதுவாக மருத்துவத்துறை சார்ந்தது. வைத்தியத் துறையில் பட்டம் பெற்ற டாக்டர்கள் இதிற் செயல்படுவர். ஆனால் உளவியலாளர்கள் (Psychologists) சற்று வித்தியாசமான முறையில் உளவளத்திற்கு மட்டும் ஆலோசனை வழங்குபவர்கள். நரம்பியல் கூறுகளுடன் சம்பந்தப்பட்ட குறைபாடுகள் அல்லது ஒழுங்கீனங்கள் உளமருத்துவரால் கவனிக்கப்படுகின்றன. இது மிக நீண்ட காலம் செயற்படுவதுமாகும். எனவே உளமருத்துவ நிலையங்கள் (Psychiatric units) என்பதிலிருந்து உளவள நிலையங்கள் (Counselling Centres) சற்று வேறுபாடானவை. வைத்திய நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் இவை உள. உளவளத்துணை பல தொண்டர்களினாலும் நடத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இரண்டும் புத்தி கூறுதல், கவனித்தல், கற்பித்தல் என்பதில் வேறுபாடுள்ளவை.

சில இடங்களில் உளவளத்துணை உளவியலாளர் (Counselling Psychologist) என்ற சொற்பதமும் பயன்பாட்டில் உள்ளது. இவர்கள் உளவியல் பாடத்தினை படித்து பின்பு பல உளவியல் நெறிமுறைகளையும் மேலதிகமாக கற்று வரவேண்டும். இதற்குள் மேலும் பல உபபிரிவுகள் உள்ளன. உதாரணமாக மனவள ஆலோசகர் (Mental health counsellor) திருமண ஆலோசகர் (Marriage counsellor) மாணவ ஆலோசகர் (Student counsellor) போன்றவர்கள். இதற்கு கீழ் ஒரு ஆசிரியர் மாணவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல், அல்லது தாதியுடன் நோயாளி கருத்துப் பரிமாற்றம் செய்தல் போன்றவை நிகழும் போது ஆலோசனைகள் சில வழங்கப்படுகின்றன. எனினும், இவை ஆலோசனைகள் மட்டுமே தவிர உறுதியானவை அல்ல. காரணம் சிலவேளைகளில் இவ் ஆலோசனை மூலம் பல தீயவிளைவுகளும் ஏற்படலாம்.

ஒரு காலத்தில் மனோவசியம் (Hypnosis) கூட ஒரு உளவளத்துணையாக கருதப்பட்டது. சிலர் தங்களை மனோவசிய சிகிச்சையாளர் (Hypnotherapist) என்று கூறி வைத்தியம் செய்தனர். ஆனால் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதில் ஏற்பட்ட பல பொருத்தமற்ற செயற்பாடுகளே அதற்குக் காரணமாகும்.

1986ல் Karasu என்பவர் 400 இற்கு மேற்பட்ட உளவளத்துணை ஆலோசனை மாதிரிகளைக் கண்டறிந்தார். இதற்குள் உள இயக்கம், அறிவியல் - நடத்தையியல் - மனிதவியல் அணுகுமுறைகள் அடங்கியிருந்தன. அத்துடன் குடும்பங்கள் மூலம், கணவன் மனைவி மூலம், தொலைபேசி மூலம், எழுத்து மூலம் இவ் ஆலோசனைகள் வழங்கப் பெற்றன. தற்போதுள்ள சிக்கலான கலாசார, பொருளாதார, சமூக சக்திகள் இந்த ஆலோசனைத் துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. சிலர் தனியாகவும், சிலர் அரச மற்று கூட்டு நிலையங்களிலும் பணி புரிவதால் பொதுமக்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே பொதுமக்கள் இதுபற்றிய பூரண விளக்கங்களையும், ஆலோசகர்களின் தராதரங்களையும், அவர்கள் வேலை செய்யும் நிறுவனங்களையும் பற்றி தெரிந்திருக்க வேண்டும். சில இடங்களில் தொழில் வழிகாட்டிகள் (Vocational Guidance) செயற்படுபவர் - அது வேறு துறை சார்ந்தது.

தற்போது நிலவுகின்ற பல்வேறு ஆலோசனை முகவர் நிலையங்கள் மக்கள் வாழ்வில் ஏற்படுகின்ற திடீர் குழப்பங்களை அல்லது மாற்றங்களைச் சந்திக்கின்றன. இந்த வேளையில் சமூகத்தில் நிகழும் மாற்றங்கள் முன்னிலை பெறுகின்றன. பாலியல் வன்முறை, திருமண நிகழ்வுகள், குடும்ப உறவுகள், திருமண முறிவுகள் என்பன பற்றி ஆராயும் போது இதில் உதவுவதில் இந்நிலையங்கள் பல தனிப்பட்டவர்களுக்கு உதவுகின்றன.

இதேவேளையில் போதைவஸ்துப் பாவனை, மது பாவனை, மிதமிஞ்சிய உணவுப்

(மறுபக்கம் வருக)

பழக்கம், புகைப்பிடித்தல் என்பனவும் சமூக உறவுகளில் மாற்றம் செய்வன. இதில் சிலவேளை ஆலோசகர்கள் மிகுந்த கவனமாகவே செயல்பட வேண்டியுள்ளனர். ஒழுக்கவிதிகள், சட்டவிதிகள் இதில் பயன்படும். உதாரணமாக ஹெரோயின் (Heroin) போதைப் பொருள் பாவிப்பவருடன் செயல்படும் ஆலோசகர் சிலவேளைகளில் கூடிய கவனமெடுக்க வேண்டியுள்ளது. சில சமூக எதிர்ப்புகளுடன் போராடியே இவர்கள் செயற்பட வேண்டியுள்ளது. எனவே தனிப்பட்டவருடன் செயற்படும் போது சமூகத்துடன் போராட வேண்டிய சூழ்நிலை எழலாம். அண்மையில் பிரான்ஸ் நாட்டில் புகையிலை உற்பத்தியாளர்கள் சங்கம் ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தி தங்கள் கருத்தினை வலியுறுத்தினர். எனவே அரசு மட்டத்தில் வரிவிதிப்பு மூலமே பல விடயங்களை சரி செய்ய வேண்டியுள்ளது.

நல்ல ஆலோசகர்கள் நுண்ணறிவு (Insight), சுயவிழிப்புணர்வு (Self-awareness), சுய ஏற்பு (Self-acceptance), சுய புலப்பாடு (Self-actualization), அறிவுறுத்தல் செய்தல் (Enlightenment), பிரச்சனை தீர்வு (Problem-solving), உளவியல் கல்வி (Psychological education), சமூகத் திறன்கள் பெறல் (Acquisition of social skills), அறிவு மாற்றம் (Cognitive change), நடத்தை மாற்றம் (Behavior change), ஒழுங்கான மாற்றம் (Systematic-change), சுயஅதிகாரம் (Empowerment), மீட்டளிப்பு (Restitution) உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

எல்லாச் சமூகத்தில் உள்ளவர்களும் எல்லா வேளைகளிலும் மனஎழுச்சி அல்லது உளவியல் பிரச்சனைகளை அல்லது நடத்தையியல் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். சிலவேளைகளில் சமூகங்களுக்கிடையில் இதன் தன்மையில் மாறுபாடு உள்ளது. சமய நம்பிக்கை அல்லது பாரம்பரிய செயல்பாடுகள் இதில் இடம்பெறலாம். சிலவேளைகளில் பழமை மையப்பட்ட (Tradition-Centeres) செயல்பாடுகளும் உள்ளன. சிறு இடங்களில் வாழ்தல் என்பவற்றிற்கும் நகர அல்லது தொழில் பகுதிகளில் வாழ்தல் என்பவற்றுக்கும் வேறுபாடுண்டு. எனவே சமூக நியமங்கள் இதில் முக்கியம் பெறுகின்றன. முதலாளித்துவ சமூகமொன்றில் நிலவும் தனியாள், சமூகம் என்பவற்றில் பல உள்ளார்ந்த வேறுபாடுகள் உள்ளன. அத்துடன் அகதிகள் குடியேறியுள்ள நிலையுடன் முன்னர் உள்ள நிலையை ஒப்பிட முடியாது. கட்டிட வசிப்பிடங்கள், நிலக்கீழ் வசிப்பிடங்கள், தனி வீடுகள், புகலரண்கள் என்பவற்றிலும் வேறுபாடுண்டு. இங்குள்ள வாழ்வில் பல உள ஒழுங்கீனங்கள் மாறுபட்டுள்ளன. எனவே தற்போது இதற்காக தனியாள் மயப்பட்ட உளவளத்துணை (Person-Centered approach counselling) முக்கியமடைந்து வருகிறது.

அண்மையில் இவ்வகையான உளவளத்துணையில் இடம்பெறும் துஷ்பிரயோகம் அல்லது குறைபாடு பற்றித் தகவல்கள் வெளிவருகின்றன. உதாரணமாக பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை அப்பாவிப் பெண்களிடம் செய்துள்ளதில் சிலர் கண்டுபிடிக்கப்பட்டனர். உளவியல் ரீதியில் பாதிப்புற்றவர்களை இது மேலும் துன்பம் செய்தது. இதனால் இத்தொழில் செய்பவர்களிடையில் சில கஷ்டமான மனநிலை எழுந்ததும் உண்டு. 'மற்றவர்களின் கஷ்டங்களில் சுகமடைபவர்கள்' என்று சில பத்திரிகையாளரால் குற்றம் சாட்டப்பெற்றனர். சில ஒழுக்கக் கோவைகள் தயாரிக்கப்பட்டதும் உண்டு. சில இடங்களில் பாலியல் துன்புறுத்தலை எதிர்த்து ஊர்வலங்கள் நிகழ்ந்துள்ளன. எனவே, ஆலோசகர்களது ஒழுக்கம் என்பது தற்போது பெரிய சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. எனவே சிலவேளைகளில் குழுவாக ஆலோசனை வழங்க வேண்டிய தேவையும் நிகழ்கின்றது.

தற்போதுள்ள சமூகமொன்றில் பொதுவாக பொதுமக்கள் அல்லது ஆலோசனை பெறுபவர்கள் முதலில் வரும் போது இதுபற்றி சிறிய அளவே தெரிந்திருப்பர் எனினும், நாட்கள் செல்லச் செல்ல முழுமையான கருத்தினையும் புரிந்து கொள்வர். சிலர் மட்டுமே உளமருத்துவர் (Psychiatrist), உளவியலாளர் (Psychologist), ஆலோசகர் (Counsellor), உளசிகிச்சையாளர் (Pschyotherapist) பற்றித் தெரிந்துள்ளனர். ஏனையோருக்கு இதற்கு உள்ள வேறுபாடுகள் தெரிவதில்லை. ஆனால், உண்மையில் அனைவரும் இதுபற்றி தெளிவு பெற்றிருக்க வேண்டும். குறிப்பிட்ட ஆலோசனை முறைகள், செவ்வி முறைகள், பதில் கூறும் திறன்கள் பற்றி அறிவு ஆலோசனை பெறுபவருக்கும் அவசியமாகும். மாறிக் கொண்டு வரும் சமூகங்களில் புதிய தேவைகள் - ஆய்வுகள் எழுகின்றன.

Volunteering in Canada: Did you know...


Who volunteers?

* 13 million Canadians -- almost half the population -- do volunteer work, either on their own or through an organization.
* Almost 2 million Ontarians (26% of the province) volunteers.
* Women volunteer slightly more than men, although male volunteers tend to put in more actual hours.
* Two-thirds of today's volunteers work outside the home.
* Baby boomers are the group most likely to volunteer.
* Today's volunteers come from a wider range of the population than even a decade or two ago. A growing number of professionals, youths and new Canadians are part of Canada's volunteer corps.
* An increasing number of people with special needs want to get involved as volunteers.
* Employers in the corporate sector are developing policies and practices to support and encourage their employees in their volunteer work. Corporate voluntarism, where indi viduals volunteer under the auspices of their company, is also becoming more important.

What's volunteering worth?

* Canadians contribute over one billion hours in volunteer time each year to voluntary organizations -- the equivalent of 617,000 full-time jobs.
* If Ontario's volunteers were paid for their efforts, the value of their volun teer time would be $4.6 billion ($13.2 billion nationally) a year (based on the average wage in the service sector) -- more than the wage bill in major Canadian industries like forestry, agriculture or mining and oil.
* If volunteer work were a paid com mercial activity, it would be placed in the largest Canadian industry category -- the community, business and personal services sector -- and would account for one of every eight wage dollars received in that sector.

கணினித் தமிழ் முத்தமிழின் நான்காவது பரிமாணம்



குயின்ரஸ் துரைசிங்கம்

பல நெடுங்கால பண்டைத் தமிழியலில் இடம்பெறுகின்ற இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழின் நான்காம் பரிமாணமாக கணினித் தமிழ் கருதப்படுகிறது. கணினித் தமிழ் எனும் மின்செயலித் தமிழ் முத்தமிழின் புது இணைப்பாகி, நாற்றமிழ் என்று இனி அழைக்கப்பட வேண்டிய தேவையை அறிவுசார் தமிழுலகம் தற்போது ஆராய்ந்து முடிவு காண் நிலையில் உள்ளது.

இனிய தமிழ்மொழி மக்களிடம் சென்றடைகின்ற ஊடகங்களாக இயல், இசை, நாடகம் என்பவற்றைப் பண்டைத் தமிழ் அறிஞர்கள் முன்மொழிந்தார்கள். இருந்தாலும், பின்னர் புதிதாகப் பிறந்த மின்செயலியை, அப்போது அவர்கள் சேர்த்திருக்க வாய்ப்பிருக்கவில்லை. ஆனால், தற்போதைய தமிழ் அறிஞர்கள், கணினி என்றழைக்கப்படும் இந்த மின்செயலியை (Computer) நான்காவது மிக முக்கியமான பரிமாணமாக முன்மொழிந்துள்ளார்கள்.

உலகெங்கும் பரந்து வாழும் இனிய தமிழ் உலாவிகள் (viewers) அனைவரும் வலைப் பக்கங்களை (Websites) அவர்கள் விரும்பும் மொழிகளில், தமிழ் மொழி உட்பட, தற்போது நேரடியாகப் பார்க்கவும் படிக்கவும் முடிகிறது. தமிழ் எழுத்துருக்களைத் தரவிறக்கம் (Download) செய்து, அவற்றைப் பயன்படுத்தியே தமிழ் வலைகளில் தமிழைத் தமிழாகப் படிக்க முடிந்த காலம் தற்போது முற்றாக மாற்றப்பட்டு, தற்போது உலாவிகள் வலைப் பக்கங்களுக்குச் சென்றால், தமிழ் வலைகளிலுள்ள தமிழ் எழுத்துருக்களை (Font) எதுவித தரவிறக்கமுமின்றி, தன்னிச்சையாகத் தமிழில் படிக்க முடிகிறது.

பல வருடங்களாக இக் கணினித் தமிழ் பாவனையிலிருந்தாலும், இயல் இசை நாடகம் போன்ற அடிப்படைத் தமிழ் இயலிகளின் ஒரு புது இணையாக, மின்செயலியைக் கருத முடியாதிருந்ததற்கான அடிப்படைக் காரணம், இந்த தரையிறக்கம் செய்கின்ற பிரச்சனை தான். கணினியில் தமிழை நேரடியாகப் பார்க்க முடிவதில்லையே, அங்கே புதிய எழுத்துருவைப் பயன்படுத்தியே தமிழைப் படிக்க முடிகிறது என்பதால், கணினித் தமிழை முத்தமிழின் நான்காம் வடிவமாகப் பார்ப்பதில், மிகுந்த கருத்து வேற்றுமை இருந்தது.

தற்போது, யூனிகோட் முறையில் எதிர்கால உலகளாவிய தனித்தரத்திற்கான அமைப்பாக, தானிறங்கி (Dynamic) எழுத்துருவில் தமிழ் மொழியும் இணைக்கப்பட்டுள்ளதால், எந்தவொரு தமிழ் வலைப் பக்கத்தைத் திறக்கும் போதும், எழுத்துரு பற்றிய சிரமமெதுவும் இன்றி, தூய தமிழில் அனைத்தையும் படிக்கவும், மேலதிக அழுத்திகளைத் (Buttons) தமிழில் பார்க்கவும், செயற்படுத்தவும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

படிப்படியாகப் பல இணையத் தளங்கள் இத்தானிறங்கி தமிழ் எழுத்துரு முறையை நடைமுறைப்படுத்தி வருவதைப் பாவனையாளர்கள் அவதானிக்கலாம். ஏராளமான இணையத் தளங்கள், தற்போதும் பழைய எழுத்துருக்களைப் பாவித்து வந்தாலும், விரைவில் இத் தானிறங்கி (டைனமிக்) எழுத்துருவுக்குக் கடந்து செல்லவே பலவித முயற்சிகளையும் எடுத்து வருகிறார்கள். நிதிப் பிரச்சனை உட்பட, இது குறித்த தொழில்நுட்ப அறிவு மற்றும் உரிய வழிகாட்டிகள் கிடைக்காத காரணத்தால், நீண்ட காலமாகச் செயற்பட்டு வரும் பல தளங்கள், இத் தானிறங்கி எழுத்துருவுக்குக் கடந்து செல்லத் தாமதம் ஏற்பட்டாலும், ஒரு சில வருடங்களுக்குள், உலகளாவிய ஒரு தனித் தமிழ் எழுத்துரு, கணினி உலகிற்குக் கனிந்து வந்துள்ளதைத் தரவுகளும் ஆய்வுகளும் உறுதி செய்கின்றன.

எதுவித செயலறிவு, பாவனைப்பயன், தொழிலறிவு அற்ற தமிழர்களும் கூட, எவ்வித முன்னேற்பாடுகளையும் செய்து கொள்ளாமல், நீண்ட தரவிறக்க இலத்திரனியல் சிரமங்களுக்குள் தங்களைச் சிக்க வைத்துக்கொள்ளாமல், ஆங்கில இணையத் தளங்களை ஆங்கிலத்தில் பார்ப்பது போன்று, தமிழ் இணையத் தளங்களையும் தமிழில் நேரடியாகப் பார்க்க வகை செய்வதே இந்த செயலியின் நோக்கம். நீண்ட காலமாக, தமிழ் அறிஞர்கள் பலர், இதற்கான சர்வதேசத் தேவையை அழுத்தமாகச் சொல்லி வந்தாலும், பூனைக்கு மணி கட்டுவது யார் என்கின்ற ஒரு காரணத்துடன், இதற்கென ஒரு அறிஞர் குழுவை உருவாக்கி செயற்படுத்துவதில் உருவாகும் நிதிச் செலவை யார் பொறுப்பது என்பதில் நீண்ட கால இழுபறி இருந்து வந்தது.

சர்வதேச தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ் கணினி வல்லுனர்கள் தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த அழுத்தத்தினாலும், இதன் தேவை கருதிய புரிதலினாலும், இறுதியில் தமிழ்நாடு மாநில அரசு, இதற்கான ஒரு உயர்மட்ட செயற்குழுவை உருவாக்கி, அதற்கென ஓர் நிதியொதுக்கீட்டையும் செய்தது. இக்குழு, பலவித ஆய்வுகளையும் மேற்கொண்டு, ரி.எஸ்.சி. (TSC) எனப்படும் பொது எழுத்துருவை உருவாக்கி அவற்றை அனைத்து சர்வதேச தமிழ் இணையத் தளத்தினரும் பயன்படுத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்து வந்தனர். இதன் காரணமாக, பல வலைப்பக்கங்கள், இந்த எழுத்துருக்களைப் பாவிக்க ஆரம்பித்தன. அத்தோடு, உண்மைத் தர எழுத்துருக்களை (TTF Fonts or True Type Fonts) மட்டுமே பாவிக்கும் படியும் பொது வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

இருந்தாலும், அடிப்படைப் பிரச்சனை தீர்ந்தபாடாக இல்லை. எந்தவொரு எழுத்துருவையும் தரவிறக்கம் செய்யாமல், நேரடியாகத் தமிழில் இணையத் தளத்தை மேய்வதென்னவோ முயற்கொம்பாகவே இருந்து வந்தது. முரசு அஞ்சல் உட்பட உண்மைத்தர (TTF) எழுத்துருக்களும், மயிலை, இணைமதி, மயிலைசிறீ, ரிஎஸ்சீ எழுத்துருக்களும், இன்னும் பல இடைக்கால முயற்சிகளும் கண்டுபிடிப்புகளும் பலனளித்தாலும், எதுவித மேலதிக எழுத்துருவை அல்லது செயலியைத் தரவிறக்கம் செய்யாமல், தமிழை வலையில் பார்ப்பதென்பது முடியாத விடயமாகவே தென்பட்டது.

பலவித சர்வதேச நிபுணர்களின் ஆழமான ஆய்வுகள் தொடர்ந்தன. சர்வதேச தமிழ் அறிஞர்களும், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல சர்வதேச நாடுகளின்

(மறுபக்கம் வருக)

அறிஞர்கள் பலரும் ஒன்றிணைந்தும், தனிக் குழுக்களாகவும், இது குறித்து விவாதித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். எழுத்துச் சீர்மை குறித்த தமிழாராய்ச்சி ஈமெயில் கலந்துரையாடல்கள், சர்வதேச அறிஞர்களிடையே தொடர்ச்சியாக இடம்பெற்றதுடன், விரிவுரையாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், அறிஞர்கள், பாவனையாளர்கள், பாமரர்கள் என்று பல தரப்பட்டவர்களின் கருத்துகளும் சேகரிக்கப்பட்டு, எழுத்துச் சீர்மை ஆராய்ச்சி வேகமாகத் தொடர்ந்தது.

இவ் ஆராய்ச்சியின் போது, தொல்காப்பியர் காலத்திலும் திருவள்ளுவர் காலத்திலும் இருந்த விஞ்ஞான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதும் சரியானதுமான பாரம்பரிய தமிழ் எழுத்துத் தத்துவங்களைத் திரும்பவும் நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் பாவனைக்கு வந்த குதர்க்கம் நிறைந்த சில தமிழ் எழுத்துக்கள், மாணவர்களையும் கல்வி வாய்ப்புக் குறைந்தோரையும் பெரியளவில் இடர்படுத்தி, தமிழ் வளர்ச்சிக்குத் தடை போடுவதாகக் கருதப்பட்டது. ஒற்றைக்கொம்பு, இரட்டைக் கொம்பு போன்ற குதர்க்கமான குறியீடுகள் அண்மைக் காலத்தில் தவறாக அறிமுகமாகி, தேவைக்கதிகமாகப் பாவனையிலுள்ள குறியீடுகள் என்றும், அவை தவிர, தவறாக அறிமுகமாகி தற்போது பாவனையிலுள்ள உகர ஊகார உயிர்மெய் எழுத்துக்கள் (கு, கூ, சு, சூ, லு,லூ, டு, டூ.:), எழுத வாசிக்கத் தெரியாதோர் மற்றும் பகுதி நேரமாகத் தமிழ் பயில்வோரை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்குவது உணரப்பட்டு, பரவலாக இச்சிக்கலைத் தீர்க்க இணக்கப்பாடு காணப்பட்டது.

இதேவேளை எழுந்த ஓர் பிரதான கேள்வியே "கணினிக்காகத் தமிழா, அல்லது தமிழுக்காகக் கணினியா" என்பது. இந்த தமிழ் சீர்திருத்தம் கணினிக்காக அல்ல என்பதை அறிஞர்கள் உறுதி செய்தார்கள். கணினியின் இலத்திரன் (Electronic) செயற்பாட்டிற்கு, தர்க்க ரீதியான மொழியாண்மையுடன் ஒரு மொழி செயற்பட வேண்டும் என்பது அவசியமாக இருந்தாலும், இத்தகைய தர்க்க ரீதியான மையப்பாடு எந்த மொழிக்கும் இருப்பது அவசியம் என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதற்கு சான்றாக பல சிக்கல்கள் நிறைந்த சீனமொழி முற்று முழுதாக தர்க்க ரீதியாகச் செயற்படுவதை உதாரணம் காட்டியதோடு, தமிழ் மொழியில் காணப்படும் குதர்க்க ரீதியான தொழிற்பாடு களையப்பட வேண்டிய தேவையும் உணரப்பட்டது. 1935ம் ஆண்டு இராமசாமிப் பெரியார் முன்மொழிந்த தமிழ் எழுத்துச்சீர்மை தொடர்பான காரணிகளும் கோட்பாடுகளுமே தற்போது நடைமுறைப் படுத்தப்படுவதையும், னை, ணை, லை, ளை, னா, ணா, றா போன்ற ஐகார உயிர்மெய், ஆகா உயிர்மெய் போன்றவற்றை மாற்ற வேண்டிய தேவை குறித்தும் தர்க்க ரீதியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தார்கள் தமிழ்கூறு நல்லறிஞர்கள்.

இத்தகைய நீண்டகால ஆய்வின் மூலம், தானிறங்கி எழுத்துரு (Dynamic Font) முறையில், ஓர் உலகளாவிய தனித்தரமான எழுத்துருவை உருவாக்கி, அனைத்து வலைப் பக்கங்களுக்கும் இவ்வெழுத்துருவையே பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதன் அடிப்படையில் பலவித ஆராய்ச்சிகளையும் செய்து, இறுதியில் யூனிகோட் (Unicode) என்றழைக்கப்படும் இலத்திரன் முறையில் தமிழை மொழியாக்கம் செய்து, இயங்கு தளங்களில் உள்ளடக்கம் செய்யப்படுவதனால், மேலதிக தரவிறக்கம் அல்லது வேறு எதுவித முன்தேவைகள் இன்றி, வலைப்பக்கங்கள் தமிழில் தானாகவே திறக்க வாய்ப்புக் கிட்டியது. இதே தருணத்தில், அண்மைக் காலத்தில் தவறாக அறிமுகமான, தமிழ் எழுத்துக் குறியீடுகளான ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு, பின்-ஐக் குறியீடு, பின்-ஔக்குறியீடு போன்றனவும் உகர ஊகார மெய் எழுத்துக்களும் இந்த யூனிகோட் எனும் தகுதரத்தின் அடிப்படை வரையறுப்பில் நீக்கப்பட்டு, தமிழ் மொழியாண்மையின் தர்க்க ரீதியான கோட்பாடுகள் (Logical Structures) சீர்செய்யப்பட்டது.

உலகில் பாவிக்கப்பட்டு வரும் எல்லா மொழிகளையும் கணினியில் இயல்பாகப் பாவிக்க வகை செய்யும் யூனிகோட் எனும் உலகளாவிய தகுதரம் இன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உலகளாவிய யூனிகோட் தகுதரத்தின் அடிப்படைக் கோட்பாடும், தொல்காப்பியம் எனும் பழமை வாய்ந்த தமிழ் இலக்கணக் கோட்பாடும் விஞ்ஞான ரீதியிலும் தர்க்க ரீதியிலும் ஒன்றுபட்டவை என்பதை மொழியாராய்ச்சி ஆசிரியர் திரு.ஆவரங்கால் சின்னத்துரை சிறீவாஸ், தமிழ்மொழி ஆராய்ச்சியாளர் திரு.சுரதா போன்றோர் உட்பட பல தமிழறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதனடிப்படையில், இந்த யூனிகோட் தகுதரத்தில் தமிழையும் கணினியமைப்பில் இயல்பாக இணைக்கும் முயற்சியுடன், எழுத்துச் சீர்மையையும் இணைத்துச் செயற்படுத்தப்பட்டதனால், யூனிகோட் எனும் தகுதரத்தின் அடிப்படை வரையறுப்பில் குதர்க்க ரீதியான தமிழ் எழுத்துக்கள் களையப்பட்டு, நாளடைவில் தொல்காப்பிய இலகு இலக்கண மொழிமுறை மீண்டும் நடைமுறைக்கு வருவதற்கான வசதி உள்வாங்கப்பட்டது. மைக்ரோசொப்ற் நிறுவனம் தயாரித்து வழங்கும் விண்டோஸ் என்னும் கணினித் தொழிலியக்கியின் பல நிரலிகளிலும் செயலிகளிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியாமை ஒரு பெரும் குறையாக இருந்ததாலேயே, ஈ-கலப்பை (e-Kalapai) உட்பட ரிஎஸ்சீ (TSC) என அழைக்கப்பட்ட எழுத்துருக்களும், ரிரிஎஃப் (TTF) என அழைக்கப்பட்ட எழுத்துருக்களும் தரவிறக்கம் செய்து பாவிக்கப்பட்டாலும், தரவிறக்கமின்றி, ஏனைய மொழிகள் போல் தானிறங்கி முறையில் தமிழ்மொழியும் பாவனைக்கு வரவேண்டும் என்ற நோக்கோடு பன்நாட்டு அறிஞர்கள் கடுமையாக உழைத்ததனால் கிடைத்த பரிசே இந்த யூனிகோட் முறையிலான தானிறங்கி அல்லது கொண்டோடி (Dynamic) எழுத்துரு.

இத்தகைய மிகப் பெரிய கண்டுபிடிப்பின் மூலம், மிக நீண்ட காலமாக தமிழ் கூறு நல்லுலகில், கணினிப் பாவனையில்இருந்து வந்த எழுத்துரு குறித்த தொழில்நுட்பப் பிரச்சனைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இணையத்தில் கருத்துக்களங்கள், தமிழ் சொல்லாடல்கள், தமிழ் அரங்குகள், உரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள் அனைத்தும் ஆர்வமுள்ள அனைத்துத் தமிழர்களாலும் தமிழிலேயே நடத்துவதற்கு இந்தத் தானிறங்கி செயலி இலகுவாக வழிவகுத்துக் கொடுத்தது. கணினியின் பெரும்பான்மை உள்ளீட்டு சாதனங்களில் தமிழை லாவகமாகப் பயன்படுத்த யூனிகோட் முறை வழிகோலியது. குறிப்பேடு (Notepad), சொற்செயலி (Word Processor), தரவுத்தளம் (Database), விரித்தாள் (Spreadsheet), தூது போகு செயலிகள் (Messenger), திருப்பாளர் (HTML Editor), வலைப்பக்க வழங்கிகள், மெய் நிகர் (Chat line), தரவுக் கடத்திகள் (Protocol), மின்னஞ்சல் (E-Mail), ஒருங்கிணை எழுதி இன்னும் இன்னோரன்ன கணினியின் செயலிகளையும் நிரலிகளையும் இத் தானிறங்கி எழுத்துரு (கொண்டோடி எழுத்துரு) மூலம் தமிழில் பார்க்க படிக்க பயன்படுத்த வழி பிறந்தது.

தற்காலத்தில் மின்செயலியின் தேடுதளங்களில், தமிழ் தளங்களைத் தமிழில் தேடி, விரும்பும் தளங்களைத் திறந்தால், இயற்கையாகத் தமிழில் திறந்து, தமிழில் படிக்க வழிசெய்கிறது. வாங்கி - வழங்கி (Client Server) மூலமாக நாம் கொடுக்கும் இணையத்தள முகவரியை வாங்கி, மீண்டும் வழங்கும்

(எதிர்ப்பக்கம் வருக)

போது, தமிழ் எழுத்துரு வழங்கியில் இல்லாத காரணத்தால், இத் தகவல் பரிமாற்றம், கடந்த காலத்தில், இயல்பாகத் தமிழில் திறக்க வாய்ப்பிருக்கவில்லை. இப்போது, இத் தானிறங்கி அல்லது கொண்டோடி எழுத்துரு மூலம், வாங்கி எம்மிடமிருந்து பெறும் இணையத் தளத்தைப் பரிசீலித்து, அதிலே பாவிக்கப்பட்டுள்ள எழுத்துருவை ஈ.ஓ.ரி. (E.O.T) என்றழைக்கப்படும் யூனிகோட் வகைக்கு எழுத்தை உருக்கி (மாற்றி) வழங்கிக்கு வழங்கும் போது, எமது கணினியில் நாம் தமிழை, எதுவித தரவிறக்கமுமின்றி இயல்பாகப் பார்க்க முடிகிறது. தரவுகளின் கடத்தல் வடிவங்கள் புதிய யூனிகோட் முறையிலான எழுத்து உருக்கி மூலம் தகுதரத்திற்கு மாற்றமடைந்து, எவரும் எந்தக் கணினியிலும் எவ்வேளையிலும் தமிழைத் தமிழாகவே படிக்க இம்முறை பயன்படுகிறது.

முத்தமிழின் நான்காவது பரிமாணமாக துணிவுடன் தற்போது கணினித் தமிழையும் இணைக்கலாம் என்று தமிழ் அறிஞர்கள் கருத்துச் சொல்கிறார்கள். 2004ம் ஆண்டு நடக்கவுள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் அல்லது சர்வதேச தமிழ் அறிஞர்களின் சந்திப்பொன்றில், இந்த நான்காவது தமிழ் அலகை இணைப்பது குறித்து அவசியம் விவாதிப்பார்கள் என்று நம்பலாம். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் தமிழின் சிறப்புகளையும் தொன்மைகளையும் உலகெங்கும் எடுத்தியம்பி நின்றாலும், இந்த மூன்றும் எடுத்துக் கொள்ளும் கால அலகைவிட, இந்த நான்காவது தமிழ்ப் பரிமாணமான கணினித் தமிழ், தமிழ்மொழியின் சிறப்புக்களை மின்னல் வேகத்தில் உலகெங்கும் பரப்பி நிற்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆசியாவின் மூன்றாம் உலக நாடொன்றின் குக்கிராமத்தில் வறிய விவசாயி படைத்த ஒரு ஹைக்கூ கவிதையை, வடஅமெரிக்க முதலாம் உலக நாடொன்றின் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் பணியாற்றும் தமிழ் விஞ்ஞானி, மறு நிமிடமே படித்து விடக்கூடிய வாய்ப்பை மிக நுண்ணியமாக வழங்கி வரும் இக் கணினித் தமிழ் அவசியம் நான்காவது பரிமாணமாக இணைந்து கொள்ளும் என்பதில் ஐயமெழ வாய்ப்பில்லை. அதனால், இந்த உத்தியோகபூர்வமான நாற்றமிழ் அறிவிப்பு விரைவில் வரும் என்று நம்புவோம். அதுவரை காத்திராமல், எமது கணினித் தமிழ் அறிவையும் வேகமாக உயர்த்திட முயன்றிடுவோம்.



இன்ரர்நெற் பாவனையைக் கட்டுப்படுத்த பெற்றோரால் முடியும்

தொழில்நுட்ப ரீதியான ஒரு பார்வை

கலாநிதி த. வசந்தகுமார்

கற்றல், பொழுதுபோக்கு, தகவல் பரிமாற்றம் போன்ற இன்னோரன்ன பல துறைகளில் சிறியோர் தொடக்கம் முதியோர் வரை பயன்படக் கூடிய இன்ரநெற்றின் பல சேவைகளை நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றோம். அதேசமயம், அதே இன்ரர்நெற் தமது பிள்ளைச் செல்வங்களைத் தவறான வழிக்கு இழுத்துச் செல்கின்றதா என்ற கேள்விக் குறியிடனும் கவலையுடனும் சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது தத்தளிக்கின்ற பெற்றோர்களையும் நாம் காண்கின்றோம். மாணவர்களைப் பொறுத்த மட்டில், இன்ரர்நெற்றினால் ஏற்படும் தீமைகளை விட நன்மைகளே அதிகமென்ற உண்மையை பெற்றோர்கள் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதீத தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உருவாக்கப்பட்டதே Cyberspace எனப்படும் இணையவெளி. இது ஒரு புதிய உலகம். இந்த உலகில்தான் இன்ரர்நெற் இயங்கி வருகின்றது. நாம் வாழும் இந்த உலகத்திற்குப் பெற்றோர்கள் முதலில் புகுந்தமையால், தம்முடைய அநுபவங்களை அடிப்படையாக வைத்துத் தமது பிள்ளைகளை வழிநடத்துகின்றார்கள். ஆனால் இணையவெளி (Cyberspace) என்ற இந்த உலகம் பெற்றோர்களுக்கும் புதியது; பிள்ளைகளுக்கும் புதியது. இந்த நிலையில் இருவருக்குமிடையில் பிரச்சனைகள் தோன்றுவதில் வியப்படைய இடமில்லை. பிரச்சனைகள் தோன்றுவதைத் தவிர்த்து பிள்ளைகளை வழிநடத்த வேண்டிய பொறுப்பு பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

பிரச்சனைகளைத் தீர்ப்பதன் முதற்படியாக, பெற்றோர்கள் இந்தப் புதிய உலகத்துள் காலடி எடுத்து வைக்க வேண்டும். பிள்ளைகளின் உணர்ச்சியை மதிப்பதும், புரிந்துணர்வை மதிப்பதும் இரண்டாவது படி. சில பிள்ளைகள் அவர்களுக்கே உரித்தான அறிவார்வம் (Curiosity) காரணமாகவும், வேறு சிலர் அறியாமை காரணமாகவும், மற்றும் சில பிள்ளைகள் வேண்டுமென்றும் தமக்குத் தேவையற்றவைகளைச் செய்ய முற்படுகின்றார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் பிள்ளைகளைக் கண்காணிக்க வேண்டியதும், கட்டுப்படுத்த வேண்டியதும் பெற்றோர்களின் பாரிய பொறுப்பாகும்.

இன்ரர்நெற் பாவனையில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய சில சாதாரண கம்பியுட்டர் முறைகளையும், மென்பொருள் (Software) பாவனைகளையும் பெற்றோர்கள் அறிந்திருப்பது மூன்றாவது படியாகும். இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்:

இன்ரர்நெற் பாவனையில், பின்வரும் விடயங்களில் கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றது.

* மின்கணினிச் சம்பாஷணை (Computer Chat).
* பாலியல் நிர்வாணக் காட்சிகள் (Sex and Nude).
* வன்முறைக் காட்சிகள் (Violence).
* சூதாட்டம், போதைவஸ்து பற்றிய தகவல்கள் (Gambling and Drug)
* காழ்ப்புணர்ச்சி உரைகள் (Hate Speech)

தொழில்நுட்ப ரீதியாக மேற்படி விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பாவிக்கப்படும் தத்துவங்களையும், பின்பற்றும் முறைகளையும் இதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களையும் பற்றி அறிவது நல்லது.

(மறுபக்கம் வருக)

Internet Content Rating Association (ICRA)
ICRA என்பது சர்வதேச ரீதியில் சுதந்திரமாக இயங்கும் ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும். இதன் முக்கிய நோக்கங்களாவன:
* தீங்கு விளைவிக்கக்கூடிய விடயங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல் (Protect Children from potentially harmful material).
* இணையத்தில் பேச்சுச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் (Protect free speech in the internet)

இயங்கும் முறை:
ICRA நிறுவனமானது, மேற்படி விடயங்களை ஆராய்ந்து, இணையத் தளத்தில் (Web site) எந்த அளவுக்கு, எந்த வயதினருக்கு ஏற்ப விடயங்கள் அங்கு உள்ளடக்கியிருக்கின்றது என்பதை நிர்ணயிக்கும் வகையில் ஒரு விபரமான கேள்விக் கொத்து ஒன்றினைத் தயாரித்து வைத்திருக்கின்றனர். Web Authors என்று அழைக்கப்படுகின்ற இணையத் தளத்தைத் தயாரிப்பவர்கள் தங்கள் இணையப் பக்கங்களை (Web pages) மையமாக வைத்து விடைகளை ICRA இக்கு அனுப்புவார்கள். இந்த விடைகளின் அடிப்படையில் ஒவ்வொரு இணையத் தளமும் தரப்படுத்தப்பட்டு, தரத்துக்கேற்ப வெவ்வேறு அடையாளச் சின்னங்கள் (content label - a short piece of computer code ஒவ்வொரு தளத்துக்கும் வழங்கப்படும். இந்தக் குறியினை (code) வாசிப்பதன் மூலம் மின்கணினிகள் இணையத்தளத்திலுள்ள பாலியல் நிர்வாணம் போன்றவற்றின் தரங்களை நிர்ணயித்து, பெற்றோர்களாகிய நீங்கள் ஏற்படுத்திய settings க்கு அமைய அந்த இணையத் தளத்தைப் பார்க்கக் அனுமதி அளிப்பதையோ மறுப்பதையோ முடிவு செய்யும்.

அடுத்து, இத்தத்துவங்களைப் பாவித்து இன்ரர்நெற் பாவனையைத் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, பெற்றோர்கள் பின்பற்றக் கூடிய சில சுலபமான முறைகளைப் பார்ப்போம்:

அநேகமான கம்பியுட்டர்களில், இன்ரர்நெற்றைப் பார்ப்பதற்கு Internet Expolrer ஐப் பாவிக்கின்றோம். இதில் கீழே குறிப்பிட்டுள்ள படிகளைப் பின்பற்றி, பிள்ளைகளின் இன்ரநெற் பாவனையைக் கட்டுப்பாட்டுள் கொண்டு வரலாம்.

Start ➜ Settings ➜ Control Panel ➜ Internet Options (Double Click) இப்போது Internet Properties என்ற ஒரு புதிய Window திறக்கும். அதில் content ஐத் தெரிவு செய்து, content advisor இலுள்ள Enable ஐத் தெரிவு செய்யும் போது Content Advisor என்னும் ஒரு புதிய Window தோன்றும். இதில் language, Nudity, Sex, Violence என்ற நான்கு பிரிவுகளும், அதற்குக் கீழே நகர்த்தக்கூடிய ஒரு Slider உம் காணப்படும். உதாரணமாக, உங்கள் பிள்ளைகள் பார்க்கும் பாலியலினுடைய (Sex) தரத்தைக் கட்டுப்படுத்த விரும்பினால், முதலில் Sex ஐத் தெரிவு செய்த பிறகு, கீழே காணப்படும் Slider ஐ, இடமிருந்து வலமாக நகர்த்த, பின்வரும் level ஐ நீங்கள் காண்பீர்கள்.

Level 0 - ஒன்றுமில்லை (தீங்கான காட்சிகள் இல்லை)
Level 1 - இங்கிதமான முத்தம் (Passionate Kissing)
Level 2 - பாலுணர்ச்சி கொண்டு ஆடையுடன் சேர்த்துத் தொடுதல் (Clothed sexual touching)
Level 3 - ஒளிவுமறைவாகப் பாலுணர்ச்சியுடன் தொடுதல் (Non-explicit sexual touching)
Level 4 - அப்பட்டமான பாலுணர்ச்சி நடவடிக்கை (Explicit sexual activity)

இவற்றுள் எந்த level இல் உங்கள் பிள்ளைகளை அனுமதிக்க விரும்புகின்றீர்களோ அதில் slider ஐ நிறுத்தி, apply - OK யைத் தெரிவு செய்யவும். தொடர்ந்து pass word ஐயையும் தெரிவு செய்து நீங்களே அதை வைத்துக் கொண்டால், உங்களை அறியாமல் யாரும் இந்த setting ஐ மாற்ற முடியாது. விரும்பினால் approved sites ஐத் தெரிவு செய்து, அந்த address ஐ type செய்து Never என்பதனைக் click பண்ணி password ஐயும் கொடுத்து விட்டால் அவர்கள் அந்த site க்குச் செல்லவும் முடியாது; settings ஐ மாற்றவும் முடியாது.

இந்த முறையை விட, வேண்டத்தகாத இன்ரர்நெற் காட்சிகளைத் தடுப்பதற்காகவும் மட்டுப்படுத்துவதற்காகவும் அல்லது பிள்ளைகளைக் கண்காணிப்பதற்காகப் பல software கள் இன்று சந்தைப்படுத்தப்படுகின்றன. இவற்றிள் சில இலவசமானவை; சிலவற்றை நீங்கள் சிலகாலம் பாவித்துப் பார்த்த பின்னர் விரும்பினால் வாங்கலாம். உதாரணங்கள் சிலவற்றைக் கழே காணலாம்:

We-Blocker
We-Blocker என்ற இந்த software இலவசமானது. இதனை www.we-blocker.com என்ற விலாசத்துக்குச் சென்று down load பண்ணலாம். இதனைப் பாவிப்பதன் மூலம் உங்கள் பிள்ளைகள் வேண்டத்தகாத web site க்குச் செல்வதனைத் தடுக்கலாம்.

Cyber sitter (www.cybersitter.com)
இந்த software, பாலியல் காட்சிகள், போதை வஸ்து, காழ்ப்புணர்ச்சி உரையாடல் போன்றவற்றைத் தடைசெய்கின்றது. அத்துடன் chat, e-mail என்பவற்றை filter பண்ணுவதுடன், யாருடன் chat பண்ணியது, மற்றும் e-mail பற்றிய விபரங்களையும் பதிவு செய்து வைப்பதினால் பெற்றோரின் கண்காணிப்புக்கு உதவியாக இருக்கும்.

Cyber patrol (www.cyberpatrol.com)
இது பெற்றோர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய பல அம்சங்களைக் கொண்ட software ஆகும். இதனைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளைகள் இன்ரர்நெற் பாவிக்கும் நேரத்தைக் கட்டுப்படுத்தலாம். எந்தெந்த நாட்களில், எந்தெந்த நேரங்களில் பாவிக்க வேண்டிமென்பதனை set பண்ணிவிடலாம். அத்துடன், வெவ்வேறு பிள்ளைகளுக்கு வெவ்வேறு நேரத்தை set பண்ணி அவர்களுக்குரிய website ஐத் தெரிவதுடன், அவர்கள் எந்தெந்த websites க்குச் சென்றார்கள், யாருடன் chat பண்ணினார்கள் போன்ற இன்னும் பல விபரங்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

கம்பியுட்டரும் கவனிப்பும்



ராஜா சொக்கலிங்கம்

கம்பியுட்டர் இல்லாத வீடுகளே இன்று கிடையாது. அதன் பயன்பாடு அந்தளவுக்கு இன்றைய வளர்ச்சி பெற்ற உலகில் பெருகிவிட்டது. தனி மனிதனது சொந்த உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது PC (Personal Computer) என்னும் வகை கம்பியுட்டர்கள். இந்த PCயின் பயன்பாட்டினால் மனிதன் பெறும் இயந்திர லாபம் 60 சத விகிதம். எனவே அந்தளவிற்கு மனித வாழ்வின் செயற்பாட்டுக்கு உறுதுணையாக நிற்கும் இந்த PCயை நாம் கையாளும் முறை மற்றும் கவனிப்பு முறைகளைத் தெரிந்து வைத்திருப்பது மிக நல்லது.

நாம் பாவிக்கும் வாகனத்தை நன்கு கவனித்துப் பராமரித்து வந்தால் அது நமக்கு எந்த அளவிற்கு நன்மையையும் லாபத்தையும் தருமோ, அது போன்றதே இந்த PCயையும் கவனித்துப் பராமரித்து சிறந்த கையாள்மையில் வைத்திருந்தால், அது சிறந்த நண்பனாக என்றும் உதவியாகவிருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

இவ்விடத்தில் கம்பியுட்டர் பாவனை தொடர்பான சில விடயங்களைக் கவனிப்பது நல்லது.

- கம்பியுட்டர் வைக்கப்பட்டிருக்கும் மேசையையும், அமரும் இருக்கையையும் உங்கள் உடலுக்கும் அணிந்திருக்கும் உடுப்புகளுக்கும் வசதியாக அமையும்படியாக மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.

- அடிக்கடி நிறுத்தி, பலமுறை மின்னிணைப்பைத் துண்டித்து வைக்கப்படும் கணினியைவிட, தொடர்ந்து இணைப்பிலேயே இருக்கும் கணினி நீண்ட ஆயுள் பெறுகின்றது. தொடர்ந்து ஆறு மணித்தியாலங்களுக்கு மேலாக கணினியைப் பயன்படுத்தாத சந்தர்ப்பங்களில், மின்சேமிப்பு நோக்கில் கவனித்தால், அதனை முழுமையாக நிறுத்தி வைக்கலாம்.

- கணினியைப் பயன்படுத்த ஆரம்பிக்கும் போதும், அதனை நிறுத்தும் போதும் முறையாக அதன் இயக்கத்தைக் கையாள வேண்டும்.

- மொனிட்டர் (Monitor) எனப்படும் காட்சிப்பெட்டிகள் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வந்தவையைவிட இப்போது வருபவை மாறுபட்டுள்ளன. அப்போது வந்தவை கதிர்வீச்சினால் (Radiation) எமக்குத் தீமை விளைவிப்பவையாக இருந்தன. ஆனால், இப்போது விற்பனை செய்யப்படுபவைகளில் அந்த விடயம் சிறிதளவில் குறைக்கப்பட்டுள்ளது.

- இன்று தட்டை (சிலேட்) வடிவில் வரும் LCD - Flat Panel - திரைகள் எந்தவிதமான தீமையையும் நமக்கில்லாமல் பணி புரிகின்றது.

- இன்றைய புதிய வெளியீடுகளாக wireless - mouse & keypads எமக்குச் சுகமான, சுதந்திரமான இயக்கத்தைத் தருகின்றன.

- இவை எல்லாவற்றினையும்விட, கணினியின் உட்பகுதிகளாக இருக்கும் பொருட்களைப் பராமரிப்பது மிக அவசியம். Virus எனப்படும் நோய் Detection/Delete, Firewall எனப்படுபவை, பிறரின் கள்ளத்தனமான உள்ளீடுகளைத் தடுத்தல், மற்றும் Defrag எனப்படும் Data கருவூலத்தின் சிறு குறைபாடுகளைச் சரிசெய்து காத்து வருதல் போன்ற நல்ல பராமரிப்பு விடயங்களைக் கைக்கொள்ளுங்கள்.

- கணினியை வாங்குவதற்கும் மற்றப் பொருட்களை வாங்குவதற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு. உதாரணமாக, தொலைக்காட்சிப் பெட்டியையைக் கவனிக்கலாம். நாங்கள் பார்த்தலென்ன பார்க்கா விட்டாலென்ன தொலைக்காட்சி படங்களைக் காட்டிக் கொண்டேயிருக்கும். ஆனால் கணினியோ, நாங்கள் அதனுடன் தொடர்பு இல்லாதபோது தன் இயக்கத்தை நிறுத்திக் கொள்ளும். உயிருள்ள ஒரு மனிதன் போன்றதே கணினி. அதிலும் இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் பரவியிருக்கும் எந்தவொரு அறிவு விளக்கத்துக்கும், மனித அறிவிற்கும் சரியான உணவாகவும் சிறந்த நண்பனாகவும் உதவுவது இதுவே.

இனி, கணினியின் சில உதிரிப் பாகங்களைத் தெரிவு செய்யும்போது கவனிக்க வேண்டிய சில விடயங்களைக் கவனிப்போம்:


- Key Board எனப்படும் எழுத்துப் பலகையை நீங்கள் தெரிவு செய்யும்போது, அதன் பொத்தான்கள் இதமாக (soft) இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

- Mouse எனப்படும் குறியீட்டு உபகரணம், உங்கள் கையுக்குள் அடங்குவதாகவும், உருண்டையாக அன்றி, புதிய வகையான optical ஆக இருப்பது விரும்பத்தக்கது.

- பதிவு இயந்திரம் (Printer) தெரிவு செய்யும்போது அதன் மையின் (Ink/Toner) பிரத்தியேக விலையையும் அந்த மை கொண்டு எத்தனை பக்கங்களைப் பெறலாம் என்ற கணக்கையும் அவதானிப்பது சிறந்தது.

- CPU எனப்படும் கணினியின் பிரதான இயக்கப் பெட்டகமானது உங்களின் உபயோகம், திறமை தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக அமைய வேண்டும். அதாவது, பொருளாதாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக கணினி அமைவது நல்லதல்ல.

லண்டன் தமிழர்கள் வாழ்வும் வளமும்



ஈ.கே. ராஜகோபால்

ஆறாயிரம் மைல்களை மட்டுமல்ல - மொழி கலாசாரங்களைக் கடந்து அகதியாக லண்டன் மண்ணில் தஞ்சமடைந்து பத்தொன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. நிம்மதியில்லாத தாயகத்தில் அவலத்தோடு வாழ முடியாமல் வந்து ஒதுங்கி 'பிரிட்டிஷ் சிற்றிஷின்' களாகி விட்ட என்னைப் போன்றவர்கள் ஆயிரமாயிரம். சொந்தம் பந்தம் என்றும் சொத்து சுகம் என்றும் புலம்பெயர்ந்த ஒரு சில ஆயிரம் ஈழத் தமிழ் குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும், 'லண்டனில் தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள்?' என்ற கேள்விக்கு ஒரே வரியில் என்னால் பதில் சொல்லிவிட முடியாது.

திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும், ஏறக்குறைய ஒரு நூறாயிரம் பேர் அகதிகளாக வந்து சேர்ந்தார்கள் என்று வைத்துக் கொண்டாலும், படிக்கவும் தொழில் செய்யவும் முந்தி வந்த பழைய தமிழர்களோடு ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் தமிழர்கள் இப்போது லண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கலாம் என்று ஒரு கணக்கை வைத்துக் கொள்வோம்.

அப்படியானால் தமிழர்களின் நிலை இங்கு எப்படி இருக்கிறது? மீண்டும் அலசிப் பார்க்கிறேன்! தாயகத்தில் சமாதானம் வந்து விட்டது போன்ற ஒரு 'பொய்'த் தோற்றம் உருவான போது தமிழர்கள் அங்கு படையெடுக்கத் தொடங்கினார்கள். நிரந்தரமாக வாழ்வதற்காக அல்ல - பிறந்து வளர்ந்த மண்ணைத் தரிசிப்பதற்காக - உறவுகளைப் பார்ப்பதற்காக - தங்கள் மண்ணைத் தெரியாத தங்களின் பிள்ளைகளுக்குக் காட்டிப் பெருமைப்படுவதற்காக. அதில் தவறுமில்லை.

நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் அங்கு ஒட்டுமொத்தமாக எல்லோருமே போய்விடுவார்களா என்ற கேள்வியில் அர்த்தமில்லை. ஆனாலும் அங்கு போய் மீண்டும் வாழலாம் - அங்குமிங்குமாக வாழலாம் என்ற சிலரது உணர்வுகள் கூட மறைந்து கொண்டு போகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. சமாதானம் வரும் என்ற எண்ணத்தில் நம்பிக்கை இழந்து 'இனி என்ன நடக்குமோ?' என்ற கேள்வி மேலோங்கிவிட்டது.

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதால் மாவீரர் தினைவு தினத்தை தேசிய எழுச்சி நாள் என்ற பெயருடன் கடந்த டிசம்பர் 6ம் திகதி லண்டனில் பிரமாண்டமான புகழ்பெற்ற EXCEL மண்டபத்தில் நடத்திய போது - பன்னீராயிரம் மக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். இந்தளவு பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும். புலத்தில் வாழ்கின்ற நமது மக்களின் துயரமான உணர்வுகளை நாடி பிடித்துப் பார்ப்பதற்கு வெள்ளம் என லண்டனில் நாலா பக்கத்திலிருந்தும் திரண்டிருந்த தமிழர்கள் கூட்டம் சாட்சி பகர்ந்தது. தஞ்சமடைந்த மண்ணின் நீரோட்டத்தோடு இரண்டறக் கலந்து பிறந்த மண்ணை நம் மக்கள் மறந்து விட்டார்களோ என்ற கேள்விக்குப் பதிலாக அமைந்தது.

வன்னியில் எங்கள் தலைவன் நிகழ்த்திய மாவீரர் உரைக்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறிய விளக்கங்களை கூர்ந்து ஆவலோடு கேட்டார்கள். காலகாலமாக தமிழ்த் தலைவர்கள் சிங்கள அரசுகளுடன் நடத்தப்பட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகளின் கதி தான் மீண்டும் ஏற்படப் போகிறதா? என்ற கவலையோடு "சந்திரிகாவும் ரணிலும் ஒரே குட்டையில் ஊறிய இரு மட்டைகள் தான்" என்பதை முழுதாகப் புரிந்து கொண்டார்கள் புலத்துத் தமிழர்கள். பிறந்த மண்ணைப் பிரிந்து, அங்குள்ள அமைதியற்ற சூழ்நிலைகளிலிருந்து விலகி இங்கு வாழ்ந்தாலும் யாராவது தாயை மறப்பார்களா? அப்படித்தான் தாய் மண்ணின் நினைவோடு நம்மவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள பிரச்சனைகளோடு சிலருக்கு நேரம் போய்விட்டாலும் - இப்படியான நிகழ்வுகள் நடக்கிற போது நினைக்கத்தான் செய்கிறார்கள்.

இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஈழத்தில் நாம் பாடிப் பறந்து உறவுகளுடன் கூடிக் குலாவி மகிழ்ந்து வாழ்ந்த பொழுதில் சிங்கள் அரக்கர் படை வான் வழியாக வந்து குண்டுகளைப் பொழிந்தன; ஹெலிகள் வந்தன; ஷெல் அடித்தன. தாங்க முடியாமல் அகதி என்ற முத்திரை குத்தப்பட்டு லண்டன், ஐரோப்பா, கனடா என்று இறங்கினோம். இரவு - பகல் - வெயில் - மழை - பனி - குளிர் என்று ஒதுங்காமல் வேலை வேலை என்று தும்பு அடித்தோம். அடிக்கிறோம். எங்கள் மனைவியர், சகோதரிகள் கூட கடினமாக உழைத்து வீடு, கார் - டி.வி என்று வாழ்வின் வசதிகளை அனுபவிக்க ஆரம்பித்தோம். எங்கள் உழைப்பின் சிறு பகுதியையாவது நாட்டுக்கு அனுப்புகிறோம்.

எமது ஆசைகளில் மண்ணைப் போடுவது போல மீண்டும் வான் வழித் தாக்குதல் லண்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளிலுள்ள தமிழர்கள் மீது கடந்த ஆண்டிலிருந்து சரமாரியாக ஆரம்பமாகியிருக்கிறது. பல வருடங்களுக்கு இது தொடரலாம் என்று அஞ்சப்படுகிறது. இதன் நேரடி விளைவு - தமிழீழத்திலிருந்து புலம்பெயர்ந்து லண்டன் ஐரோப்பாவில் குடியேறியுள்ள எம் சொந்தங்கள் தமது கலை கலாசாரத்தை இழப்பர். எங்கள் குழந்தைகள் பேசும் மொழியை மறந்து தப்பான மொழி வழக்கில் தோய்ந்து தப்பான கலாசாரத்தை நிஜமென்று நம்பி, 'அவிற்ற மசாலையும் டபுள் கண்டிஷனர் சிக் ஷம்பூவையும்' தேடும் ஒரு தலைமுறையாக வளரும் ஆபத்து உருவாகிறது. தென்னிந்திய சினிமாக் குப்பைகளை இடைவிடாமல் காட்டி - சிரித்துக் குலுங்கும் சிங்காரிகளை வைத்து நிகழ்ச்சிகளை நடத்தி வரும் 'சன் டி.வி' லண்டன் ஐரோப்பாவிலுள்ள ஈழத் தமிழர்கள் மத்தியில் நுழைந்திருக்கிறது. இது மட்டுமா? ஜெயா டி.வி - ராஜ் டி.வி என்று பல டிவிக்கள் நம்மை எல்லாம் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் வடபுலத்துக் கடலில் நம்மவர் மீன் பிடிக்கத் தடை. ஆனால் இந்திய மீனவர்கள் வந்து - எம் மீன்களைப் பிடித்து - சுத்திகரித்து - வெட்டி - எமக்கு லண்டனுக்கும் ஐரோப்பாவுக்கும் அனுப்பி - எம்மைக் கொள்ளை அடிக்கிறார்கள். இந்த வரிசை நீண்டு கொண்டே போகிறது. தலைமையில் நிற்பது சன் டி.வி. லண்டன் போன்ற ஈழத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இது நிலையாக வேரூன்றுமானால் - 'ஈழத்தவன்' என்ற அடையாளம் அனைத்தும் அழிக்கப்பட்டு விடும். அதன் பின்னர் எல்லோரும் 'கோல்டு வின்னர் கோல்டு வின்னர்' என்றும், 'புள்ளி ராஜாவுக்கு எயிட்ஸ் வருமா?' என்றும் புலம்பித் திரிய வேண்டியது தான்.

லண்டனில் இப்போது எங்கும் பேசிக் கொள்கிற சங்கதி கோயில்கள். போகிற போக்கில் தமிழர் செறிந்து வாழ்கிற பகுதிகளில் ஒழுங்கைக்கு ஒரு கோயில் என்று வந்து விடுமோ என்றளவில் புதுப் புதுக் கோயில்கள் தோன்றிய வண்ணமிருக்கின்றன. சமீப காலமாக குறிப்பாக கடந்த வருடத்தில் மட்டும் பதினைந்துக்கு மேற்பட்ட கோயில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஏராளமான பிராமணர்கள் வந்து கோயில்களில் பணியாற்றுகிறார்கள். சில கோயில்களில்

குறிப்பிட்ட 2 வருடம் முடிவடைந்ததும் அவர்களைத் திருப்பி அந்த நிர்வாகம் எடுப்பதில்லை. இதனால் யாராவது வசதியானவர்களைப் பிடித்து புதிய கோயிலை ஸ்தாபிக்க வைத்து அதில் அர்ச்சகராகப் பணியாற்றுவதன் மூலம் இங்கு தொடர்ந்து நிற்கக் கூடிய வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கிறது. இன்னொரு வகை பிராமணர்கள் சொந்தமாகவும் கோயில்களை ஆரம்பிப்பது. ஸ்ரீ திருத்தணிகை வேல் முருகன் ஆலயம். இதனை ஆரம்பித்தவர் லண்டனில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட விம்பிள்டன் கணபதி கோயிலில் இளம் பூசகராக இருந்தவர். அங்கிருந்து விலகிய இவர் இந்த ஆலயத்தை நிறுவினார். இலவசமாக லண்டனிலிருந்து வரும் பத்திரிகை ஒன்றில் வித்தியாசமான விளம்பரம் போட்டார். "இந்த ஆலயம் அமைவதற்கு முன்பதாகவே இந்த இடத்தில் 'ஓம்' என்ற சின்னத்தில் வேல் அமைந்திருக்கும் அதிசயத்தைக் கண்களால் கண்டு அதிசயித்தோம். நீங்களும் அந்த அதிசயத்தைக் கண்டு மகிழ்ந்து முருகன் அருளைப் பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தாயகத்தில் கேள்விப்பட்டிருக்கிறோம். சீமையிலே இப்படி ஒரு அற்புதமா?

லண்டன் ஸ்ரீ முருகன் கோயில் தான் பழமை வாய்ந்தது. தமிழ் நாட்டவர்கள் பெரும்பான்மையாகவும் - ஒரு சில ஈழத்தவர்களும் நிர்வாகத்தில் இருக்கிறார்கள். இப்போது லண்டனிலே மிகப் பெரிய கோயிலாக கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல கோடி செலவில் கட்டப்படும் இக் கோயிலின் கும்பாபிஷேகம் இவ்வாண்டு (2004) இறுதியில் நடைபெறும்.

சில கோயில்களில் குத்து வெட்டுகளுக்கு குறைவில்லை. நிர்வாக சபைப் பதவிகளுக்கு போட்டா போட்டி. அரசியல் கட்சிகளை விட மோசம். குழி பறிப்பதில் வல்லவர்களும் நிபுணர்களும் 'பெரிய மனிதர்கள்' வேஷத்தில் நிறையவே இருக்கிறார்கள்.

லண்டனில் ஆச்வே முருகன் கோயில் - விம்பிள்டன் பிள்ளையார் கோயில் - ஈலிங் கனக துர்க்கை அம்மன் கோயில் - லூய்ஷியாம் சிவன் கோயில் - ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோயில் - ஸ்ரோன்லி அம்மன் கோயில் - வெம்பிளி ஈலிங் றோட் ஈழபதீஸ்வரர் கோயில் ஆகியவற்றுக்கு மக்கள் பக்தி சிரத்தையோடு சென்று வணங்குகின்றனர்.

ஆன்மீகப் பணியோடு அவலத்தோடு ஈழத்தில் வாழும் ஆதரவற்ற சிறார்களையும் - முதியோர்களையும் பராமரிக்கும் பொறுப்புகளையும், போர்க் கால சூழ்நிலை காரணமாக கால்களை இழந்தவர்களுக்கு பொய்க்கால் பொருத்துவதற்கும் வடக்கு கிழக்கு மலையகத்திற்கு கடந்த 37 மாதங்களில் 360 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை லண்டனில் ஈலிங் பகுதியில் அமைந்த ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் வழங்கி பெரும் சாதனைப் பணியைச் செய்துள்ளது. ஆலயத்தின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தின் ஒரு பகுதியே இதுவாகும். நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்தத் தாரக மந்திரத்தை மக்கள் முன் வைத்து நிர்வாக சபைத் தலைவராகத் தெரிவான சொ.கருணைலிங்கம் தனது குழுவினருடனும் அறங்காவல் சபையின் அனுசரணையுடனும் ஆரவாரமில்லாமல் இந்தப் பணிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அத்தோடு வடக்கு கிழக்கில் துர்க்கை அம்மன் பெயரால் இலவச கணினி பயிற்சி நிலையத்தையும் - தையல் பயிற்சி நிலையத்தையும் சமீபத்தில் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். ரூட்டிங்கில் அமைந்துள்ள ஆயிரம் பக்தர்கள் கூடியிருக்கக் கூடிய அருள் மிகு ஸ்ரீ லண்டன் முத்துமாரியம்மன் ஆலயம் லண்டனில் பிரமாண்டமான கட்டடத்தில் அமைந்துள்ளது. அருள்மிகு துர்க்கை அம்மன் தங்க விக்கிரகமாக அங்கு வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றாள்.

இவ்வாலயத்தை நிறுவியுள்ள அன்பர் சீவரத்தினம் தமிழீழ விடுதலை உணர்வுள்ளவர். தம்பியின் அன்பைப் பெற்றவர். யாழ் ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சை நிலையம் - கணவனை இழந்த விதவைகளுக்கு இலவச வீடுகள் - ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிகள் போன்றவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறார். இந்தப் பணிகளுக்கு எல்லாம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு உதவிக் கொண்டிருப்பவர் ஆன்மீகத்தினூடாக சமூக பணியாற்றி வரும் பிரபல பேச்சாளரும், துர்க்கை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் வாரிசுமான ஆறு திருமுருகன்.

ஆன்மீகம் ஒரு புறம் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்க, ஆடல் பாடல் நாடகம் இசை என்று முத்தமிழ் விழாக்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. பரத நாட்டிய, மிருதங்க, வாய்ப்பாட்டு அரங்கேற்றங்கள் சில சமயங்களில் வார நாட்களில் ஒரே நாளில் நான்கு வெவ்வேறு மண்டபங்களில் நடக்கும். நான்கு அழைப்பிதழ்களும் ஒரே நேரத்தில் வந்தால் தலையைப் 'பிய்க்க' வேண்டும் போல் இருக்கும். அதிகம் வேண்டியவர்களானால் இரண்டுக்கு 'வார் ஓட்டம்'. ஒன்றையும் ஒழுங்காகப் பார்க்காமல் தலையைக் காட்டிய நிம்மதி!

ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய பெரிய மண்டபத்துக்கு, நான்காயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ் வரை அறவிடப்படுகிறது. இது தவிர ஒரு நடன அரங்கேற்றமானால் அழைப்பிதழ், மலர், உடை போன்றவை தொடக்கம் கலைஞர்கள், சிற்றுண்டிகள் என்று எத்தனை செலவுகள். ஆக இல்லை இல்லை என்றாலும் 15 ஆயிரம் பவுண்கள் இருந்தால் தான் ஒரு அரங்கேற்றம். இப்படியான அரங்கேற்றங்களைச் செய்பவர்கள் வசதியுள்ளவர்களின் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள். இதனால் அந்தக் குழந்தைகளிடம் ஆற்றல் இல்லை என்று சொல்ல முடியுமா? அனேகமாக லண்டனில் வாழ்பவர்கள் வசதியானவர்களாக இருப்பதால் இப்படியான சர்ச்சைகள் லண்டனைப் பொறுத்தவரையில் இல்லை. தாயகமென்றால் இது ஒரு பிரச்சனை தான்.

நாடகம் என்றால் லண்டனில் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் ஒன்றுதான் அடிக்கடி அங்குமிங்குமாக நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. தாயகத்தில் ஆரம்பித்த இவர்களது பயணம் 25 ஆண்டுகளை இவ்வாண்டில் நிறைவு செய்கிறது. இந்த ஆண்டு இவர்கள் வெள்ளி விழா நாடக விழாவை நடத்தி வருகிறார்கள். பாலேந்திரா - ஆனந்தராணி தம்பதியினர் தமது குழுவினருடன் இணைந்து சாதனை புரிந்து வருகிறார்கள் என்றே கூறலாம்.

லண்டனில் தமிழ் ஊடகங்கள் எப்படி இயங்குகின்றன? இலவசப் பத்திரிகைகள் புதினம் - விடுதலை - வடலி - உதயன் ஆகியவற்றுடன் 'தமிழர் தகவல்' என்ற பெயரிலும் கடந்த ஆறுமாதமாக மாதம் ஒரு இலவச இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. பாரிஸிலிருந்து மூன்று வாரப் பத்திரிகைகள் வந்து கொண்டிருக்கின்றன. பங்குதாரர்களாக இருந்த நிர்வாகி பாலச்சந்திரன் - ஆசிரியர் குகநாதன் இருவரும் பிரிந்து 'ஈழநாடு' என்ற பெயரில் இரண்டு வெவ்வேறு பத்திரிகைகளாக வரும் வேடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது. விடுதலை உணர்வுள்ள 'ஈழமுரசு' சில காலம் வராமல் இப்போது வந்து கொண்டிருக்கிறது. ஈழத்தவர் தொலைக்காட்சிகள் இரண்டு லண்டனில் பிரபலமாக உள்ளது. ஒன்று ரிரிஎன் - மற்றது தீபம். ஈழத்தவர்களால் வெட்றன் (ஞானம்) என்ற மற்றொரு 24 மணிநேர தமிழ் தொலைக்காட்சியும் இலவசமாக நடந்து கொண்டிருக்கிறது.

இவைகளுடன் சன் டி.வி - ஜெயா டி.வி - ராஜ் டி.வி என்று தமிழகத்து டி.விக்கள் வருவதை கட்டுரையின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். லண்டன் தமிழர்கள் எந்த டி.வியை பார்ப்பது என்று திணறுகிறார்கள். வேலைக்குப் போகாமல் வீட்டிலிருக்கும் முதியோர்களுக்கும் பெண்களுக்கும் ஒரே கொண்டாட்டம். எங்கே போய் முடியுமென்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எத்தனை எத்தனையோ விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இளஞ் சந்ததியை 'உருப்படியான' தமிழ் கலாசாரங்களோடு வாழ வைக்க தமிழ் பாடசாலைகள் நகரமெல்லாம். ஒரு சனிக்கிழமை மட்டும் தமிழ் பாடசாலைக்குப் போனால் தமிழ் படித்து விட முடியுமா? வீட்டில் தமிழ் பேசினால் தான் தமிழை மறக்காமல் இருக்கலாம் என்பது நண்பர் ஒருவரின் வாதம்.

(மறுபக்கம் வருக)

சமீப காலமாக பதினாறு வயதிலிருந்து 25 வரையான தமிழ் இளைஞர்கள் தலையை அரைகுறையாக வழித்துக் கொண்டு - தோடு குத்தி - நீளக் காற்சட்டை அரையிலே இருந்து இறங்க இறங்க தரையிலே அது அரைய அரைய ஒரு விதமாக நடந்து கொண்டிருக்கிறவர்களைக் கண்டால் கண்டு பிடித்து விடுவீர்கள். இவர்கள் 'இளம் தறுதலைகள்' என்று சொல்லிக் கொள்வோமா? லண்டனின் பல பகுதிகளிலும் இந்தக் குழுக்கள் இயங்கின. தமிழ்ப் பெண்களைப் பின் தொடர்தல் - அவர்களைக் காதலிப்பது - இன்னொரு கோஷ்டியைச் சேர்ந்த 'தறுதலை' காதலிக்க - பின் 'ஹைபாட்' போட்டு கோடரி - அலவாங்கு - கத்தி - துப்பாக்கி சகிதம் காரில் சென்று வெட்டிக் கொல்வது.... இப்படிச் சில இளைஞர்கள் கொலையுண்டார்கள், பலர் பிடிபட்டார்கள். சமீபத்தில் பொலிஸ் பலரைக் கைது செய்ததுடன் - இவர்களிடமிருந்து கைப்பற்றிய பல ஆயுதங்களை ஊடகத்தினரை அழைத்துக் காண்பித்தனர். வெட்ட வெட்ட தழைப்பது போல இவர்கள் 'அட்டகாசம்' அவ்வப்போது நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனாலும் விகிதாசாரப்படி பார்த்தால் இவர்கள் ஒரு வீதம் கூட இல்லை. ஆனாலும் இந்தத் 'தறுதலை'களின் நடவடிக்கைகள் பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோரை கவலைக்குள்ளாக்கியிருக்கிறது. தாயக அவலங்களிலிருந்து தப்பி இங்கு வந்த எங்களுக்கு இப்படி ஒரு அவலமா? என்று பரிதவிக்கும் பெற்றோரைப் பார்த்திருக்கிறேன்.

இந்தத் 'தறுதலை'களை விட்டுத் தள்ளுங்கள் - எங்கள் தமிழ் பிள்ளைகள் லண்டனில் படிப்பில் வெள்ளைக்காரனை மிஞ்சி விடுகின்ற அளவுக்கு சக்கை போடு போடுகிறார்கள். ஜிசிஈ பரீட்சை முடிவுகள் வரும் போது தமிழ்ப் பிள்ளைகளின் முடிவுகளைப் பற்றி பத்திரிகைகளில் வரும் செய்திகள் - எடுத்த பத்துமே திறமைச் சித்தி... இப்படி எத்தனை எத்தனையோ சாதனைகளை நிகழ்த்துகிறார்கள்.

ஈழத்தமிழர்கள் லேசுப்பட்டவர்களா? லண்டனில் மூலை முடுக்கெல்லாம் கடை போட்டு கலக்குகிறார்கள். சாப்பாட்டுக்கடை, பலசரக்குக் கடை, அரிசி மாக்கடை, கோழிக் கடை என்றெல்லாம் போட்டு வியாபாரம் நடத்திய தமிழர்கள் இப்போது லட்சக் கணக்கான பணத்தை முதலிட்டு தங்க நகைக்கடை ஆரம்பிக்கிறார்கள். ஒருவர் இரண்டு இடங்களில் நகைக்கடை போடுகிறார். 'அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே' என்ற பாட்டு வரிக்கு ஏற்ப அண்ணனும் தம்பிகளும் அருகருகே நகைக் கடை போட்டு போட்டி போடுகிறார்கள். என்ன உலகமடா? ஏதோ மனதில் பட்டதை உங்களோடு பகிர்ந்து கொண்டேன். நல்லதைச் செய்வோம் - நடப்பதைப் பார்ப்போம் - எல்லாமே எப்போதோ முடிந்த கதை!



காட்டுத் தீ போல.....

விஜே குலத்துங்கம்

தமிழில் 'விஷயம் காட்டுத் தீ போல் பரவியது' அல்லது 'செய்தி காட்டுத் தீ போல் பரவியது' என்ற சொற்றொடர் உபயோகிக்கப்படும். பொதுவாக நெருப்பு அல்லது தீ விரைவாகப் பரவி அழிவை ஏற்படுத்தும். அதிலும் காட்டுத் தீ என்பது மிகவும் வேகமாக, பரந்த அளவில் பரவிச் சென்று பெரும் அழிவை ஏற்படுத்துகின்றது. கடந்த வருடம் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவிலும், அமெரிக்காவில் கலிபோர்னியாவிலும் காட்டுத் தீயினால் பெரும் அழிவுகள் உண்டாகின. சராசரியாக அமெரிக்காவில் மாத்திரம் வருடம் ஒன்றிற்கு 5 மில்லியன் ஏக்கர் காடுகள் தீயினால் அழிந்து போகின்றன.

காடுகள் அல்லது வனங்களின் முக்கியத்துவம் பற்றி நாம் அனைவரும் அறிந்து வைத்திருக்கிறோம். ஒரு நாட்டின் இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கும், சீரான காலநிலையை பெறுவதற்கும், சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதற்கும் காடுகள் அவசியமாகின்றன. அதைவிட பொருளாதாரம் கூட காடுகளில் தங்கியுள்ளது. கனடா போன்ற மரப் பலகைகளை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு இது அவசியமாகும். அதைவிட சில வனவிலங்குகள் அழிந்து போகாமல் தடுக்கவும், சில இனங்கள்,முற்றாக அழிந்து போகாமல் தடுக்கவும், காடுகளைப் பேணிப் பாதுகாப்பது மிகவும் அவசியம்.

காட்டுத் தீயினால் காடுகள் அழிவது மாத்திரமன்றி அதைத் தொடர்ந்து பல தீய விளைவுகளும் உண்டாகின்றன. காடுகள் எரியும் போது கரியமில வாயு போன்ற வாயுக்களும், மற்றைய வாயுக்களும் அடங்கிய புகை வெளிப்பட்டு, சுற்றாடலையும் வளிமண்டலத்தையும் மாசுபடுத்துகிறது. எரிந்த சாம்பல் மற்றும் கரி போன்றவை காட்டினூடாக பாயும் ஆறுகள், அருவிகள், நீரோடை மற்றும் ஏரி, குளம் போன்ற நீர்த் தேக்கங்களிலுள்ள நீரை அசுத்தப்படுத்துகின்றன. காடுகள் எரிந்து அழிக்கப்பட்டு நிலம் வெறுமையாக்கப்பட்டவுடன், மண் அரிப்பு மிகவும் அதிகமாகின்றது. முக்கியமாக மலைப் பிரதேசங்களில் மண் அரிப்பு, மண் சரிவு என்பன அதிகமாக ஏற்படுகின்றன.

இவ்வாறாக சுற்றாடலையும் பொருளாரத்தையும் பாதிக்கும் காட்டுத் தீ எவ்வாறு ஆரம்பிக்கின்றது என்பது பலரது மனதிலும் எழும் கேள்வியாகும். பலரின் எண்ணம் காட்டுத் தீ இயற்கையாக உருவாகின்றது என்ற தப்பான அபிப்பிராயம் ஆகும். பல ஆய்வுகளினதும், கருத்துக் கணிப்புகளின் படியும் 99 வீதத்திற்கு அதிகமானவை மனிதரின் நடவடிக்கைகள் காரணமாகத்தான் எனக் கூறப்படுகின்றது. மிகுதியான 1 வீதத்துக்கு குறைவானவையே இயற்கையாகவோ, மற்றைய காரணிகளாலோ உருவாகின்றது. புறக் காரணிகள் என்று கூறும் போது, காடுகளினூடாக செல்லும் தண்டவாளங்களின் மேலாக இரயில் வண்டிகள் ஓடும் போது, அவற்றின் சில்லுகள் தண்டவாளத்துடன் உரசும் போது, கிளம்பும் தீப்பொறிகளினால் அருகிலுள்ள சருகுகள் தீப்பிடித்துக் கொள்கின்றன. இயற்கைக் காரணிகள் என்று கூறும் போது, மின்னல் மரங்களின் மேல் விழும் போது அவை தீப்பற்றலாம். ஆனால் வழமையாக மின்னலைத் தொடர்ந்து மழை பெய்வதால் தீ பரவாமல் அணைந்து போவதற்குத்தான் வாய்ப்புகள் உண்டு. இன்னுமொரு இயற்கைக் காரணி எனக் கூறப்படுவது என்னவெனில், சூரியனின் ஒளி வீச்சினால் மரங்கள் சூடேற்றப்பட்டோ அல்லது கடும் காற்றினால் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து மரங்கள் தீப்பற்றுவதாகும். ஆனால் இவை நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

மேற்கூறிய இயற்கைக் காரணியால் ஏன் தீப்பற்றுவதற்கு சந்தர்ப்பம் இல்லையென்பதை விளங்கிக் கொள்ள ஒரு பொருள்

(எதிர்ப்பக்கம் வருக)

எவ்வாறு தீப்பற்றுகின்றது என்பதை அறிந்து கொள்வது அவசியம். எந்தப் பொருளும் தீப்பற்றுவதற்கு அந்தப் பொருள் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலைக்கு சூடாக்கப்பட வேண்டும். இந்த வெப்பநிலையை தமிழில் 'எரிபற்று நிலை' வெப்பநிலை எனவும் ஆங்கிலத்தில் 'Flash point' என்றும் கூறுவார்கள். ஒரு காய்ந்த மரம் தீப்பற்றுவதற்கு 300 C அளவிற்கு அதன் வெப்பநிலை உயர வேண்டும். அதாவது நீர் கொதிக்கும் வெப்பநிலையை விட அதாவது கொதிநீரை விட 3 மடங்கு வெப்பநிலையை அடைய வேண்டும். அனால் இது மரமும் மரமும் உராய்வதால் நடக்க முடியாததொன்று ஆகும்.

எனவே காட்டுத் தீ உண்டாவதற்கு முக்கிய காரணம் மனிதரின் நடவடிக்கைகள் தான். மனிதரின் நடவடிக்கைகளில் பெரும்பாலானவை வேண்டுமென்று தீ வைத்தல் ஆகும். வியாபாரப் போட்டி, பழிவாங்கல், விஷமத்தனம் போன்றவற்றால் தீ வைக்கும் நடவடிக்கை ஏற்படுகின்றது. அண்மைக் காலங்களில் விஷமத்தன்மை தான் முதலிடம் வகிக்கின்றது. அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் அண்மையில் நடந்த தீ விபத்திற்கு காரணம் புதிதாக தீயணைக்கும் படையில் சேர்ந்த ஒரு இளைஞர் தான் காரணம். படையில் சேர்ந்து தீயணைக்கும் சம்பவங்கள் எதுவும் நேராததால் தானே காட்டுத் தீயை வைத்துவிட்டு, பின்னர் தீயணைக்கும் படையினருடன் சேர்ந்து தனது வீர சாகஸத்தைக் காட்ட முற்பட்டார் எனப் பின்னர் அறிய வந்துள்ளது. காடுகளுக்கு அண்மையில் உள்ள வீடமைப்புத் திட்டங்களில் வசிக்கும் சிறுவர்கள் தீப்பெட்டிகளுடன் விளையாடும் போது அல்லது விளையாட்டிற்கு தீ வைக்கும் போது, தீப்பிடிக்கும் சம்பவங்களும் ஏற்படுகின்றன. புகை பிடிப்பவர்கள் வெவ்வேறு காரணங்களுக்காக காட்டினுள் செல்லும் போது புகை பிடித்த பின்னர் அடிக்கட்டையை அணைக்காமல் வெளியே எறியும் போது, சருகுகளில் விழுந்து அதில் தீ மூண்டு பின்னர் பெரும் அழிவைக் கொடுக்கின்றன. காடுகளினூடாக செல்லும் பாதைகளில் ஏற்படும் வாகன விபத்துகளில் நெருப்புப் பிடித்து பின்னர் அது காட்டுக்குள்ளும் பரவுகின்றது.

பொழுது போக்கிற்காக பலர் காடுகளுக்கு செல்வதுண்டு. காட்டுக்குள் வேட்டையாடச் செல்வது, Camping எனப்படும் கூடாரமடித்து காட்டுக்குள் தங்குவது, Picnic எனப்படும் வனபோசனம் போன்றவற்றின் போது சமையலுக்காக தீ மூட்டி முக்கியமாக Barbeque, Campfire போன்றவற்றின் மூலமாகவும் எஞ்சும் நெருப்பை சரிவர அணைக்காமல் விடுவதால், அவையும் காட்டுத் தீ உண்டாக காரணமாகின்றன. மின்சார வாள் போன்ற உபகரணங்களை உபயோகிக்கும் போதும் தீப்பொறி பறந்து தீப்பிடிக்கவும் சந்தர்ப்பம் உண்டு. இப்படியாக பல காரணங்களால் ஆரம்பிக்கப்படும் தீயானது தொடர்ந்து பரவி எரிவதற்கு பல காரணிகள் உண்டு. இவையான எரியக் கூடிய பொருள், எரிவதற்கு உதவும் வெப்பநிலை, எரிவதற்குத் தேவையான பிராணவாயு கொண்ட காற்று போன்றவை அவசியம். எரியக் கூடியதாக காய்ந்த இலைகள், காய்ந்த மரக் கிளைகள் போன்றவை அதிகம் இருக்க வேண்டும். பொதுவாக மரங்கள் வரண்டு காய்ந்த நிலையில் இருக்கும் போது எளிதில் தீப்பிடிக்கின்றன. காற்று பலமாக வீசும் போது, அது எரிவதற்கு தேவையான பிராணவாயுவைத் தொடர்ந்து வழங்குவது மாத்திரமல்ல, தீ விரைவாக மற்றைய இடங்களுக்குப் பரவவும் வழி செய்கின்றது. அதிக வெப்பநிலையுடன் கூடிய, வரண்ட கோடை காலத்தில் தான் காட்டுத் தீ சம்பவங்கள் அதிகம் நடக்கின்றன.

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த தீயணைக்கும் படையினர் பல்வேறு முறைகளைக் கையாளுகின்றார்கள். வீதிப் போக்குவரத்து வசதிகள் இருக்குமானால், தீயணைக்கும் படையினர் வாகனங்களில் சென்று தீயணைக்கும் பணியில் ஈடுபடுவார்கள். வீதிகள் வசதிகள் இல்லாவிட்டால், வான் வழியாகத்தான் தீயணைக்கும் படையினர் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இந்த வகையில் கனடா முதன்மை பெறுகின்றது. உள்நாட்டில் மாத்திரமன்றி மற்றைய நாடுகளுக்கும் சென்று உதவிகளைப் புரிகின்றது. ஒரு இயந்திரம் பூட்டப்பட்ட நிலைமையை ஆராயக் கூடிய சிறிய விமானங்களும், இரண்டு இயந்திரங்கள் பூட்டிய வேகமாகச் செல்லக்கூடிய விமானங்கள், ஆட்களைக் கொண்டு செல்லும் பெரிய ஹெலிகொப்டர்கள் ஆகியன கனடாவில் உபயோகிக்கப்படுகின்றன.

விமானங்களில் இரு வகையுண்டு. ஒன்று Scooper என்றும், மற்றையது Tankers என்றும் கூறப்படும். Scooper எனப்படுவது தரையிலும், நீரிலும், வானிலும் இயங்கக் கூடியது. நீரில் மிதந்து ஓடிச் செல்லும் போது, விமானத்தினுள் நீர் உறிஞ்சப்பட்டு சேமிக்கப்பட்டு, பின்னர் மேலாக பறந்து சென்று, காட்டுத் தீ பரவிய இடங்களில் சில இரசாயனப் பதார்த்தங்களையும் சேர்த்து விசிறிக் கூடியதாகவுள்ளது. நீர் எடுக்கக்கூடிய வசதியில்லாத இடங்களில் Tankers எனப்படும் விமானங்கள் உபயோகிக்கப்படும். இவை தீயை அணைக்கக் கூடிய, கட்டுப்படுத்தக் கூடிய இரசாயனப் பதார்த்தங்களை விசிறுகின்றன. இப் பதார்த்தங்களுள் முக்கியமானது சிவப்பு நிறமான தூள் வடிவத்தில் விசிறப்படும் பொஸ்பேற் உரமாகும். இப் பதார்த்தம் வெப்பநிலையைக் குறைத்து தீ பரவும் அளவைக் குறைக்கின்றது. தண்ணீர் வசதி கிடைக்கக் கூடிய நீர்த் தேக்கங்கள் உள்ள நியூபவுண்லாந்து, நோவா ஸ்கோஷியா, கியூபெக், ஒன்ராறியோ, மனிரோபா ஆகிய மாகாணங்களில் Scooper விமானங்களும், நீர்த் தேக்க வசதியில்லாத பிரிட்டிஷ் கொலம்பியா, நியூபிறண்ஸ்விக், யூகோன் பகுதிகளில் Tankers விமானங்களும், அல்பேர்ட்டா, சஸ்கச்சுவான், நோர்த் வெஸ்ற் ரெறிற்றரி பகுதிகளில் Scooper, Tankers இரண்டுமே உபயோகிக்கப்படுகின்றன.

விமானங்களால் விசிறுவதை விட, தரையில் Backfire என்னும் முறையும் அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும் என்பது போல, காட்டுத் தீயையும் தீயினால் அழிக்கும் முறை கையாளப்படுகின்றது. தீ பரவி வரக்கூடிய பாதையில் ஒரு இடத்தில் ஒரு பாதை போன்று சுற்றி வர ஒரு இடைவெளி இருக்கும் வகையில், ஒரு கட்டுப்பாடான தீ வைத்தல் மூலம் அந்த பாதையில் உள்ள மரம், கொடி, செடி, இலை அனைத்தையும் அழித்து விடுவார்கள். பரவி வரும் தீயானது தொடர்ந்து எரிவதற்கு இந்த இடைவெளியில் ஒன்றும் இல்லாத போது தீ அணைந்து விடும். இப்படியாக தீயணைக்கும் முறைகள் இருந்தாலும், மிகப் பெரியளவில் தீப்பற்றி எரியும் போது அதை இலகுவில் அணைப்பது முடியாது. எனவே தீ ஏற்படாமல் அதை தடுக்கும் வழிமுறைகளை காண வேண்டும்.

தொடர்ந்து காடுகள் அழிந்து வருவதால், அதை ஈடு செய்ய நாம் கிடைக்கும் வசதியான இடங்களில் எல்லாம் மரங்களை நட வேண்டும். இவ்வாறான பொதுப் பணிகளில் ஈடுபடும் ஸ்தாபனங்களின் மர நடுகை இயக்கத்தில் கலந்து கொண்டு சுற்றாடலை பேணிக் காப்பது மிகவும் அவசியம்.

இவர்கள் பெற்றோர் என் நோற்றார் கொல்!



குறமகள்

வள்ளுவன் சொல்லின் பொருளென்ன? "இத்தகைய பண்பும் ஒழுக்க நெறியும் கூடி உலகில் உயர்ந்து நிற்கும் இந்தப் பிள்ளையைப் பெற்றெடுக்க, பெற்றோர் என்ன புண்ணியம் செய்தனரோ" எனும் புகழ் வார்த்தைகளால் அதிசயித்து நிற்கும் மக்களையே பகைப்புலத்தில் காண்கிறோம்.

ஒழுக்கநெறியில் வளர்ந்த அறிவும் செல்வமும் பெற்று விளங்கும் பிள்ளைகள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அந்த நல்லவன் எனும் பெயர் அறிவையோ செல்வத்தையோ அடிப்படையாகக் கொண்டு வந்ததல்ல. அவனது பண்புகளும் சேரும் போது தான் நல்லவன் எனும் பெயர் கிடைக்கின்றது.

உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி, நுண்ணறிவு வளர்ச்சி, மொழி வளர்ச்சி என எத்தனையோ வளர்ச்சிகளை குழந்தை வயதிலிருந்து பதின்ம வயது வரை கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், சிலர் சொல்வது போல பிள்ளைகள் வெறும் கற்பலகையாகப் (Clean slate) பிறப்பதில்லை. அவர்கள் பரம்பரைக் காரணிகளாலான அறிவோடும் இயற்கையான ஆற்றலோடும் பிறக்கின்றார்கள். இவை சூழற் காரணிகளால் விரிவடைகின்றன.

இந்த வளர்ச்சிப் படிகளில் அறநெறிசார் பண்புக் கூறுகளைப் பற்றியே இங்கே எடுத்தாளப்படுவதால் விரிவஞ்சி மற்றையவற்றின் தொடர்புகளை இவற்றுடன் சேர்த்து ஆராயாது, ஒழுக்க நெறிப் பண்புகளை "அறஞ் செய விரும்பு" என்ற கட்டளை போலல்லாது, எமது நடத்தைகளால் வழி காட்ட வேண்டும். ஒரு குழந்தையின் ஒழுக்க நெறி, அதன் உள்ளார்த்தமான கூறுகளிற் சார்ந்து ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களில் ஆத்மார்த்தமான இடத்தைப் பிடிக்கிறது.

நீரளவேயாகுமாம் நீராம்பல் தான் கற்ற

நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுமாம் குணம்

என்பது ஔவையார் கூற்று. இங்கே 'குலம்' என்பது சாதியையோ அல்லது வேறேதும் இழிபொருளையோ குறிப்பதன்று. வள்ளுவம் கூறும் 'குடிப்பிறப்பும்', 'குலம்' என்பதும் ஒரே பொருளைத் தரும். வம்சம் - பரம்பரை - பரவணி - கோத்திரம் என்பவற்றைக் கூறும். ஒரே சாதிக்குள் பண்பட்ட குடும்பங்களையும் பண்பு கெட்ட குடும்பங்களையும் நாமே கண்கூடாகக் காண்கின்றோம். பெற்றோர் அவரின் பெற்றோர் மூதாதையர் என வழிவந்த ஒழுக்கக் கூறுகள் குழந்தையின் நடத்தையிலும் இடம்பெறுகின்றன. அதன் பின் சூழற் காரணிகள் அதன்மீது மோத விடுகின்றன. அப்போது குழந்தை அலமந்து போகிறது. அத்தருணத்திலும் பெற்றோர் வழிகாட்டல் அவசியம். எனவே குலம், குடிப்பிறப்பு என்பன சாதி, சமயம், ஏழை, பணக்காரன், ஆண், பெண் என்ற பேதங்களற்றதும் வம்சம் தொடர்பானதுமாகும். இதனைப் பெற்றார் உணர்ந்து தாமே ஊர் மெச்ச ஒழுக்கப் பாதையில் நடந்து செல்ல வேண்டும். குழந்தைக்கு ஒன்றைச் சொல்லிவிட்டு "எனக்கல்லடி பெண்ணே அது ஊருக்கடி கண்ணே" என்றது போல தாமே பிறழ்ந்து சொல்வதொன்று செய்வதொன்று என நடந்தால், குழந்தை உலகத்தையே நம்பாது.

உலகத்தைக் குழந்தை அவதானிக்கிறது. தாய், தந்தையரே அதன் முதல் ஆசிரியர். ஒழுக்கக் கூறுகளைச் செப்பனிடக் கூடியதாகத் தமது செயல்களைப் பெற்றோர் தீர்மானித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் எப்படி வரவேண்டும் என ஒரு குறிக்கோள் வைத்திருப்பர். அநேகமானோர் அறிவு, செல்வத்தோடு நற்குணன் எனும் பாராட்டைப் பெறுதலே சிறந்தது என் விரும்புவர். எனவே ஒரு குறிக்கோளை அமைத்து இதனை அடைவதற்கு ஊக்குவிப்பவை எவை? தடையானவை எவை? என்பதை வகுத்தறிந்து அவற்றின் பால் குழந்தைகளை ஈர்ப்பதற்குப் பல உத்திகளைக் கையாளலாம்.

முக்கியமாக நல்லவை எவை, தீயவை எவை எனப் பிரித்தறியும் சக்தியைத் தங்கள் செயற்பாடுகள் மூலமே பிள்ளைகளில் தோன்றச் செய்யலாம். தம்மையும் பிறரையும் அறிந்து புரிந்து கொள்பவராக - அதாவது பொற்சட்டங்கள் (Golden rules) சொல்வது போல "மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என நாம் விரும்புகிறோமோ அதையே நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும்" என நடந்து கொள்வதை விரும்புகிறார்கள்.

தெளிவான சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் அந்தப் பண்புக் கூறுகளை நாம் எவ்வாறு பிள்ளைகளில் தாக்கம் பெறச் செய்யலாம்.

1. பெற்றோர் எவ்வழி குழந்தைகள் அவ்வழி.
இதுவே மிக அடிப்படையான தத்துவம். முன்பு கூறப்பட்ட பரம்பரைக் காரணிகள் என்பவற்றோடு இந்தச் சூழற் காரணியாலும் தாக்கம் விளைகின்றது. "தாயைப் போல பிள்ளை" என்பது பெற்றோரின் பண்புகளைக் கொண்டு பிள்ளைகளை அனுமானிப்பதும் ஏதோ ஒரிரு இடங்களில் பொய்த்தாலும், சர்வ சாதாரணமாகிறது. இதையே மேற்கத்திய கலாசாரமும் உளவியலாளரும் ஒழுக்கவியலாளரும் அழுத்திக் கூறுகின்றார்கள். "நீ நேர்மையாளனாக, கபடமில்லாதவனாக, மதிப்பு மரியாதைக்கு உரியவனாக, பிறரில் கரிசனை உடையவனாக நடந்து கொள். அதனையே உன் குழந்தைகளும் பின்பற்றும். ஏனெனில் அவர்களுக்கு முதன்மையாகத் தொழிற்படுவது பின்பற்றாக்கமே" என்கிறார் உளவியலாளரான டேவிட் எல்கைன்ட்.

ஆனால் இந்த அவசரகால யந்திர யுகத்தில் இத்தகைய உதாரண பாத்திரங்களைப் பின்பற்றும் சந்தர்ப்பங்கள் வெகு குறைவாகவே

(எதிர்ப்பக்கம் வருக)

குழந்தைகளுக்குக் கிடைக்கிறது. ஆனால் இத்தகைய ஒழுக்க நெறிகள் ஒழுங்காட்சி (Disceplene) முறையால் வருவனவல்ல. நாளிலும் பொழுதிலும் சிறுகச் சிறுக வளர்ச்சி பெறுவனவாகும்.

2. வளர்ச்சிப் படிகளில் வாழும் முறை உளவியலறிஞர்களின் கருத்துப்படி ஒரு வயதுக்கும் இருவயதுக்கும் உட்பட்ட குழந்தைகள் கூடத் தமக்குச் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்பதை நன்கு அறிந்து கொள்கின்றன. அதே நேரம் பெற்றோரும் குழந்தைகள் அறிந்திருப்பதைத் தெரிந்து கொள்கிறார்கள். பெரியவர்கள் இருக்கும் போது அந்தக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தும், அவர்கள் இல்லாத இடத்து அதனை மறந்து கொண்டவர்கள் போலவும் நடந்து கொள்வர். உதாரணமாகக் கடதாசியைக் கிழிக்கக் கூடாது என்பதை அவர்கள் கிழிக்க எடுக்கும் போதெல்லாம் தடுத்து வந்தால் பின்னர் பேசாதிருப்பார்கள். பெற்றோர் அவ்விடத்தை நீங்கியதும் ஓடிச் சென்று கிழிப்பார்கள். கிழிக்கும் ஓசையில் ஓர் இன்பம்; துண்டுகள் ஆவதில் மகிழ்ச்சி; கசக்கும் போதெழும் கரங்களுக்குக் கிடைக்கும் பயிற்சி; ஒரு ஆனந்தம். "காக்கா கொண்டு போட்டுது"என்பதை நம்பினதற்கு அடுத்தபடி இது. ஆனால் இரண்டு வயதின் பின் பெற்றோர் இல்லாத இடத்தும் இது செய்யக்கூடாது எனும் நடத்தைக் கோலங்களைக் கற்றுக் கொள்வர்.

சில சமயங்களில் பெரியவர்கள் கூட ஒழுங்கு விதிகளை மீறி நடந்து விடுகின்றனர். (கார் ஓட்டும் போது வேக அதிகரிப்பு, அவசரத்தில் சிவப்பு விளக்கிலும் ஓடுதல் போன்றன) இதையும் பிள்ளைகள் அவதானிக்கின்றார்கள். அதைவிட அவர்களது விருப்பங்கள் கூடும் போது (சிறிது வளர்ந்த பின்) அளவுக்கு அதிகமாக சொக்கலேட் எடுப்பது, சூயிங்கம் சப்புவது, கண்ட இடத்தில் சலம் விடுவது போன்ற பல செயல்கள். உடனே அடி கொடுத்து ஒழுங்காட்சியில் வைப்பர் சிலர். அப்படிச் செய்வது தவறு. ஏனெனில் ஒழுங்காட்சி அறிவுபூர்வமாகவும் (Cognetive domain) உணர்வுபூர்வமாகவும் (Sensor motor) அதாவது முளையாலும் இதயத்தாலும் தெரிந்து கொள்ளும் தாற்பரியம் வளர்ச்சியடையவில்லை. 'சொல்லச் சொல்லச் செய்யிறான்' என அடி கொடுத்தால் சிலசமயம் அவர்களுக்கு வீம்பு வந்து மேலும் செய்வர். வளர வளர எவ்வளவு கஷ்டப்பட்டாலும் ஒழுக்கக் கூறுகளில் புகுத்திவிட முடியாது. எனவே பெற்றோர் சரியான பாதையை அவர்களுக்குக் காட்டி அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் சிந்தனைக்கு வளர்ச்சி கொடுக்கலாம்.

3. நடத்தைக் கோலங்களை அழுத்தும் வகை

நல்ல நடத்தைகளைப் புகழுங்கள், தட்டிக் கொடுங்கள், சிறு பரிசை அளியுங்கள். வெளியே அழைத்துச் செல்லுங்கள். ஆனால் மிதமிஞ்சிக் கண்டித்தல், தண்டித்தல், குற்றம் குறை சொல்லுதல் இவை தவிர்க்கப்படல் வேண்டும். வேலை செய்து களைத்து வரும்போது வீடெல்லாம் விளையாட்டுச் சாமான் இறைந்திருந்தால் முதுகில் மூன்று மொத்து விட்டு தன் கோபத்தையும் கூட்டி விடாமல், சிறுவரை அணைத்து பொருள்கள் இல்லாத ஒரு மூலையைக் காட்டி "அவ்விடம் அழகாக இருக்கிறது. அந்தப் பொருள்களை பைக்குள் போட்டு விட்டீர்களோ?" எனில் உங்களுக்கும் இரத்த அழுத்தம் குறைகிறது. பிள்ளையும் ஓடிச் சென்று Tidy up, Tidy up எனப் பாடிக் கொண்டே பொறுக்கிப் பையுள் போடும். கொஞ்சம் வளர்ந்து விட்டால் எங்களுக்குத் தான் சொல்லப்பட்டிருக்கிறதே 'சாம, பேத, தான, தண்டம்' என நான்கு முறைகளில் செயற்படுத்தலாம். இயல்பாகச் சொல்லுதல், இதைச் செய் அல்லது அதைச் செய்; இதனைச் செய்து முடித்தால் இதனைப் பரிசாகப் பெறுவாய்; செய்து முடிக்காவிட்டால் தண்டனை தரப்படும் போன்றவற்றைப் படிமுறையாகப் பயன்படுத்த வேண்டும்.

மேல்நாட்டிலும் இவற்றைத் தான் பயன்படுத்துகிறார்கள். பிள்ளைகளைப் பொறுத்தவரை தண்டனை என்பது மிகச் சிறிய அளவில் பிரயோகப்படுத்தல், ஒரு கோபப் பார்வை அல்லது வெறுப்புப் பார்வை; Time out என்று சொல்லப்படுகின்ற சிறிது நேரம் ஒரு இடத்தில் அமர்த்தி விடுதல், தனியே செயற்பாடுகள் ஒன்றும் இன்றி இருப்பது துருதுருவென ஊக்கமுடைய பிள்ளைகளுக்கு எப்படி இருக்கும். இவற்றிற்குக் கூட ஒரு காலவரை, எல்லை, 5 நிமிடம், 10 நிமிடம் என வகுக்கப்பட வேண்டும். கூடிப் போனால் அது குழந்தைகளின் இயல்பினைக் கடுஞ் சோதனைக்குள்ளாக்கும். எனவே மீறப்பட்டு விடும்.

4. நல்ல விழுமியங்களை நாமே தெரிவு செய்தல்

சாதாரண ஒழுக்க நெறிப் பண்புகளோடு சில அறநெறிசார் விழுமியங்களை (Values) தீர்மானித்து அப்பண்புகள் அவர்களிடம் வளர உதவி செய்தல் வேண்டும். அவை பரம்பரை அலகுகளில் இருந்து வருமாயினும், அவற்றைச் சூழ்நிலைச் செயற்பாடுகளால் வெளிக்கொண்டு வந்து துலக்க வேண்டும். பிறரை நேசித்தல், பிறரில் கரிசனம் கொள்ள வைத்தல், தானதர்மம் செய்தல் என்பன போன்ற நற்செயல்கள். உதாரணமாக பகவான் சத்ய சாயி நிறுவனம் சான்ட்விச், பழங்கள், பானங்கள், உணவு வழங்குவதற்குச் செல்கின்றது. நீங்கள் சான்ட்விச் செய்கிறீர்கள். சின்னவரை "இதை வைக்க ஒவ்வொரு பையாகத் தாருங்கோ" போன்ற சிறு பணிகள், வழங்கலின் போது அவரையும் சிலருக்கு வழங்க விடுதல் போன்றவை 4, 5 வயதிலேயே தர்மசிந்தனை வளர்ச்சியைக் கொண்டு வரும். இதனை குழந்தை வைத்திய நிபுணர்களின் அமெரிக்க அக்கடமித் தலைவர் யோசப் ஹேகன் என்பவரும் அழுத்திக் கூறுகிறார்.

5. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

இன்னும் சில விழுமியங்கள் அந்தந்தச் சந்தர்ப்பம் நேரும் போது எடுத்துக் கூறலாம். பாடசாலையில் அல்லது எங்கேயாயினும் ஒரு பொருளைக் கண்டெடுத்தால் "கண்டெடுத்தவனே சொந்தக்காரன்" எனும் தவறான கோட்பாட்டைத் தவிர்த்து விட்டு, குழந்தைக்கு அப் பேனாவின் பயன்பாடு அதன் அழகு பின்னர் அதன் பெற்றோர் கொடுக்கும் தண்டனை ஆகியவற்றைப் படிப்படியாகக் கலந்துரையாடினால் அவன் மீது இவனுக்கு கரிசனை உண்டாகும். அப்போது இதை அதிபரிடம் ஒப்படைத்தால் அவர் உரியவரிடம் கொடுத்து விடுவார் என்று சொன்னால் அது ஏற்றுக் கொள்ளப்படுவதோடு உள்ளத்திலும் நன்கு பதிந்து விடும்.

எமக்குக்கூட ஒரு சதங் கூட கண்டெடுத்தால்அதை கோயில் உண்டியலில் சேர்த்து விடும்படி தானே சொல்லித் தந்தார்கள். இங்கே சிறுவர்கள் நல உண்டியல், யுனைட்டட்வே எனப்பல தர்மஸ்தாபன உண்டியல்கள் இருக்கின்றன.

6. திறனறிந்து சொல்லுக சொல்லை

எங்கள் வார்த்தைகளை மட்டுமல்ல, தொடர்புச் சாதனங்களான வானொலி,

(மறுபக்கம் வருக)

தொலைக்காட்சி வார்த்தைகளையும் பிள்ளைகள் அவதானிக்கிறார்கள். சிலசமயம் அவைகளின் பொருள்களை அறிந்தும், சிலசமயம் அறியாமலும் அவ்வார்த்தைகளை அவர்கள் கிரகிக்கிறார்கள் பிரயோகிக்கிறார்கள். அவ்வார்த்தைகளைப் பெற்றோர் தவிர்ப்பதோடு, சிறுவரை அவதானித்து வழிநடத்த வேண்டும். ஒரு சிறு உதாரணம் 'நல்ல பண்பட்ட குடும்பம் ஒன்று புதிதாக வந்து ஒரு இடத்தில் குடியேறிய போது அயலில் ஒரு கூலிக்காரக் குடும்பம் ஒன்று இருந்தது. கணவன் நன்றாகக் குடித்துவிட்டு வந்து அடி உதை. அத்தோடு வேயன்னா வேயன்னா என்றும் பல தூஷண வார்த்தைகளை உபயோகித்தும் சத்தமிட்டு ஒரே ஏச்சுப் பேச்சு. 3ம் நாளே அந்த வீட்டுப் பெண் ஏதோ உதவியோ கடனோ கேட்க இவர்கள் வீடு வந்தாள். அந்தக் குடும்பத்து ஐந்து வயதுச் சிறுமி அடிபிடியை அவதானித்திருப்பாள் போலும். பயந்து ஓடி வந்து கை அலுவலாக இருந்த தாயைக் கட்டிப் பிடித்து "வேயன்னா வருகுது" என; ஏங்கிப் போன தாய் 'என்ன' என்று அதட்ட தான் சொன்ன பெயர் பிழையாக்கும் என நினைந்து வேயன்னாவுடன் தூஷணத்தையும் இணைத்துச் சொல்ல, தாய் பளார் என அடியும் சொண்டுக்கொரு சுண்டும் கொடுக்க, பிள்ளை அழக்கூடத் தெரியாமல் என்ன பிழை விட்டேன் என ஏங்கித் திகைக்க, கிட்ட வந்த அந்தப் பெண் 'குழந்தைக்கு என்னம்மா தெரியும், அவன் அப்படித்தானே என்னைக் கூப்பிடுகிறவன்' என வக்காலத்து வாங்க 'கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடாரி அருங்கதலித் தண்டுக்கு' என இந்தப் படியாத பெண்ணுக்குப் புரிந்தது தனக்குப் புரியவில்லையே எனச் சிறுமியைக் கட்டிக் கொண்டழ அவசர புத்தி. இன்னும் அந்தக் குற்ற உணர்வை மறக்க முடியவில்லை என்கிறாள் அந்தத் தாய். எனவே இந்த அழகான வார்த்தைகள் ரி.வி.யில் F என வந்து கொண்டேயிருக்கும். சிறிது பக்குவமாக 'கெட்ட வார்த்தை' எனச் சொல்லி விட வேண்டும்.

7. அவாவினை ஆற்ற, அறுப்போம்.
இன்னும் மனவளர்ச்சியைப் பாதித்து வன்முறைச் செயல்களுக்கு ஈடுபடுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை அதாவது வன்முறை, போர், பாலியல் வல்லுறவு, அடிபிடிச் சண்டை, மல்யுத்தம் போன்றவை பிள்ளைகள் விரும்பினாலும்அறநெறி சாராத பண்புகளை வளர்த்து வன்முறையாளன் ஆக்கிவிடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவை பற்றி ஒழுக்க நெறியும், பண்புக் கூறுகளும் துறையில் பொஸ்ரன் பல்கலைக்கழக முனைவர் கரன் போலின் ஒரு நூலே எழுதியுள்ளார். பிள்ளைகள் உணர்ச்சி வேகம் கூடியவர்களாகையால் (Impulsive) நல்ல ஒழுக்க நெறிக்கான வழிகாட்டுதல் தேவை என்பது அறியக் கிடக்கிறது. எனவே அவர்கள் தேடும் நிகழ்ச்சிகள், கொள்ளும் நட்புகள் பற்றி அவதானமாக இருப்போம்.

முடிவு எடுக்கும் திறனை வளர்ப்போம்.
இத்திறனால் பிள்ளைகளுக்குப் பொறுப்பும் தீவிரமாகச் சிந்திக்கும் தன்மையும், ஒழுக்கநெறியில் சரி, தவறுகளைக் காணும் ஆற்றலும் கூர்மையடையும். உதாரணமாக இன்றைக்கு மதிய உணவுக்கு மக்றோனியும் சீசுமா அல்லது சிக்கன் நூடில்ஸா? என்று கேட்டு அவரின் முடிவையே ஏற்று எல்லாரும் நடக்கலாம். தண்டனை கொடுக்கிலும் கூட '10 நிமிடம் ரைம் அவுட்டா அல்லது இன்று மாலை ரி.வி. பார்ப்பதை நிறுத்தட்டுமா?' என நல்ல விடயங்களிலும் சரி விருப்பமில்லாத விடயங்கள் திணிக்கப்படும் போதும் சரி முடிவெடுக்கப் பழகிவிட்டால், வளர்ந்து வரும் போது மதுபானம் அருந்தலாமா புகை பிடிக்கலாமா போன்றவற்றிற்குத் தீர்வு காணும் திறன் ஏற்பட்டு ஒழுக்க நெறிக் கூறுகள் பேணப்படும்.

9. மறுபக்கம் பார்த்தல்
ஏற்கனவே ஒரு இடத்தில் கூறப்பட்டு விட்டது எனினும் மாணவர், பிள்ளைகள் மத்தியில் ஒருவரை ஒருவர் கிள்ளி நுள்ளி அடித்து துன்புறுத்தல் நடைபெறும். உமக்குக் கிள்ளினால் எப்படி இருக்கும் அது மாதிரித்தானே அவனுக்கும் இருக்கும் என மறுபக்க நியாயங் காட்டல். நம்முரிலே ஒரு வாத்தியார் இருந்தார். ஒரு பையன் நெடுக நுள்ளிக் கொண்டே இருப்பான். அழுகை ஓலம். அவர் அப் பையனைக் கூப்பிட்டு முதுகில் தடவி நான் ஒரு கேள்வி கேட்பன் நீ சொல்ல வேண்டும் "கிள்ளும் நுள்ளும் சந்தைக்குப் போச்சினமாம், கிள்ளு கிணத்துக்கை விழுந்திட்டுதாம் மேலே நிற்பது யாரு" எனக் கேட்க; அவன் 'நுள்ளு' என, இவர் 'நுள்ளுறதோ' எனக் கேட்டு ஊன்றி நுள்ளி விட்டார், அவன் துடித்துப் போனான். அன்றோட இவ்வளவு நாளும் சொல்லுக் கேட்காத அவன் நுள்ளுகிறதை விட்டிட்டான். அப்படித் தண்டிக்க வேண்டும் என்பதில்லை சொன்னால் உணர்வார்கள். மன எழுச்சியாலும் அறிவாலும் அது தாக்கம் பெற்றுவிடும்.

10. பெற்றோருக்கு
பிள்ளைகளைப் பொய் பேசத் தூண்டுதல், பொருள்களைக் கவர்ந்து வந்தால் கண்டும் காணாமலும் விடுதல், அவர்கள் முன்னிலையிலேயே தாமே சில விதிகளையும் சட்டங்களையும் மீறி நடத்தல், சில சலுகைகளுக்காக வயதைக் குறைத்துச் சொல்லும்படி அவர்களைத் தூண்டுதல், செல்லம் பொழிந்து தவறுகளைக் கண்டு கொள்ளாமை, பாடசாலைக்குப் போகாவிடில் பொய்யான காரணங்களை எழுதிக்கொடுத்தல், விளையாட்டிடத்தில் நடுநிலையாளர் கவனிக்காது விடினும் முழங்கையால் இடித்தல் போன்ற பிழைகளைத் தாம் அவதானித்தும் பின்னர் பிள்ளைக்கு Sportsmanship எது என்பதை அறிவுறுத்தாமை, தாய் தந்தை பெரியோர்களைத் தாமே அவதூறாக ஏசுதல் போன்றவை. இவை பிள்ளைகளால் பின்பற்றப்படும் அல்லது பெற்றோர் ஒரு 'கெட்ட ஆசாடபூதிகள், கபட வேடதாரர்' எனும் இழிநிலை தோன்றும்.


என்னுரை

எழுதுவது யாருக்கும் சுலபம். நூலறிவும் அனுபவ அறிவும் சேரும் போது பக்கம் பக்கமாக எழுதுதல் சுலபம். ஆனால் அதைக் கடைப்பிடிப்பவர் பண்டிதர் தொடக்கம் பாமரர் வரை தானே. இந்த அவசர யுகத்தில் பெற்றோருக்கு பிள்ளைகளைக் காணும் சந்தர்ப்பமே குறைவு. தூக்கக் கலக்கத்தோடு பராமரிப்பு நிலையங்களில் விட்டு, இரவு தூக்கத்துடன் கொண்டு வந்து கிடத்தும் நிலைகளும் உண்டு.

இதனால் பிள்ளைகளின் நேரம் பாடசாலைகளிலும் பராமரிப்பு நிலையங்களிலுமாகச் செலவாகிறது. அதனாற் போலும் தற்காலச் சிறுவர்கள் நல்ல சமூகப் பழக்கம் உடையவராகவும், உறவு பந்த பாசங்கள் குறைந்தவராகவும் காணப்படுகின்றார்கள்.

யார் யாருடைய கைகளில் சிறுவர் தங்குகிறார்களோ அவர்கள் ஒழுக்க நெறிப் பண்பாட்டுக் கூறுகளில் துலக்கப் பெற்று நல்ல நடத்தைக் கோலங்களை அடைய மேற்கூறிய வழிவகைகளை இயன்றளவு கையாள வேண்டும் என்பதே நம் வேண்டுகோள்.

ஒன்ராறியோவில் தமிழ் மொழி வளர்கிறதா?



குரு அரவிந்தன்

ழத்தில் ஏற்பட்ட உள்நாட்டு அரசியல் பிரச்சனைகள் காரணமாக 1983ம் ஆண்டிற்குப் பின் பல தமிழர்கள் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். அப்படிப் புலம்பெயர்ந்த தமிழர்களில் சிலர் கனடா நாட்டிலும் தஞ்சம் புகுந்தனர். வேலை வாய்ப்புகள், வசதிகள் போன்ற காரணங்களுக்காக அனேகமானோர் ஒன்ராறியோ மாகாணத்தில் குடியேறினர். குடியேறிய இடத்தில் தங்கள் மொழி, பண்பாடு, கலாசாரம் போன்றவற்றைப் பேணிக் காப்பதில் அவர்கள் அதிக கவனம் செலுத்தினர். 'மொழி அழிந்தால் இனம் அழிந்து விடும்' என்பதைக் கவனத்தில் கொண்டு, தமிழ் மொழியைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில் பெற்றோரும், கல்விமான்களும் அதிக கவனம் செலுத்தி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

சர்வதேச தமிழ் கற்பிக்கும் திட்டத்தின் கீழ் கனடிய அரசாங்கம் பாரம்பரிய கல்வி கற்பிப்பதற்குச் சட்டமூலம் அங்கீகாரம் தந்து இருக்கின்றது. இதற்காக தாய் மொழியைக் கற்பதற்குப் பல வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றது. இந்த வசதிகளைப் பயன்படுத்தி முதன் முதலாக வடயோர்க்கிலும், பீல் பகுதியிலும் கல்விச் சபையால் தமிழை ஒரு பாடமாகக் கற்பிக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து இன்று ஒன்ராறியோவின் பல பகுதிகளிலும் தமிழ் மொழி ஒரு பாட-மாகக் கற்பிக்கப்படுகின்றது. ஒன்ராறியோ மாகாணத்தில் தாய் மொழி கற்பவர்களில் இன்று எண்ணிக்கையில் சீன மொழி கற்பவர்கள் முதலாவது இடத்தையும், தமிழ் மொழி கற்பவர்கள் இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கனடாவிற்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், ஆரம்பநிலைத் தமிழ் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த வளர்ச்சி பற்றிய விபரத்தைப் பார்ப்போம்:

கல்விச்சபை	நிலையங்கள்		மாணவர் தொகை	
	1998	**2003**	**1998**	**2003**
ரொறன்ரோ கிழக்கு	04	16	824	
வடக்கு	12	16	663	
தெற்கு	12	13	515	
மேற்கு	03	04	128	
மொத்தம்			**2730**	
பீல்	05	05	244	980
யோர்க் பிரதேசம்	01	04	50	800
கத்தோலிக்க சபை	04	06	311	850
டர்ஹம்	-	02	-	98
கிங்ஸ்ரன்	-	01	-	22
	41	**67**	**2735**	**5200**

ஒன்ராறியோ மாகாணத்தில் தமிழ் மொழி கற்கும் பிள்ளைகளின் தொகை அதிகரித்துக் கொண்டு போனாலும், இந்த மாற்றங்களில் உள்ள பல குறைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆரம்ப நிலை தமிழ் கல்வியில் தான் இந்த முன்னேற்றம் காணப்படுகின்றதே தவிர, இரண்டாம் நிலைத் தமிழ்க் கல்வியில் மந்த நிலையே காணப்படுகின்றது. இதன் காரணமாக பல பாடசாலைகளில் இயங்கி வந்த இரண்டாம் நிலை தமிழ் வகுப்புகள் மூடப்பட்டு விட்டன. நிதி பற்றாக்குறை காரணமாக வார இறுதி வகுப்புகளை இரவு நேரத்திற்கு மாற்றியதும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தாலும் பெற்றோரின் ஊக்கமின்மையும், மாணவரின் அக்கறையின்மையும் முக்கிய காரணங்களாகும். மூன்றாம், நான்காம், ஐந்தாம் வகுப்பு வரை ஒழுங்காகப் படித்து வரும் மாணவர்களில் அனேகர் ஆறாம், ஏழாம் வகுப்புகளில் பின்னடைவை எதிர்நோக்குவதை அவதானிக்க முடிகிறது. இவற்றில் இருந்து தப்பியவர்கள் எட்டாம், ஒன்பதாம் வகுப்புகளில் மீண்டும் விருப்பத்தோடு ஆர்வமாய் தமிழ் கற்கிறார்கள். தமிழில் விசேட சித்தி பெறலாம் என்பதும் அவர்களுடைய ஆர்வத்திற்கு ஒரு காரணமாய் இருக்கலாம். இலவச தமிழ் வகுப்புகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கே பின்னிற்கும் பெற்றோர்கள், பிள்ளைகள் படிப்பதற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்காக ஒரு பகுதிப் பணத்தை அரசாங்கம் பிள்ளைகளிடம் இருந்து அறவிடும் போது பிள்ளைகளைத் தொடர்ந்தும் தமிழ் படிக்க அவர்கள் அனுப்புவார்களா என்பது சந்தேகத்திற்குரியதே!

கல்விச்சபை நடத்திவரும் தமிழ் மொழிக் கல்வித் திட்டத்தைவிட ஒன்ராறியோவில் தனிப்பட்ட முறையில் பல இடங்களில் தமிழ் வகுப்புகள் நடைபெறுகின்றன. இவற்றில் முக்கியமாக தமிழ் கலை தொழில்நுட்பக் கல்லூரி, ஆதி அருள்நெறி மன்றம், இந்து மாமன்றம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். தமிழ் கலைத்தொழில்நுட்பக் கல்லூரியில் மட்டும் சுமார் 1500 மாணவர்கள் ஆரம்ப நிலைத் தமிழ்க் கல்வி கற்கிறார்கள். இரண்டாம் நிலைத் தமிழ்க் கல்வியை 684 மாணவர்களும், கலைமாணிப் பட்டப்படிப்பைத் தமிழில் 20 மாணவர்களும் தொடர்கிறார்கள். இதைவிட தனிப்பட்ட முறையிலும் பலர் ஆங்காங்கே தமிழ் வகுப்புகளை நடத்தி தமிழ் மொழியை வளர்த்து வருகின்றார்கள். தமிழ் மொழி இந்த மண்ணில் தொடர்ந்தும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் எடுத்து வரும் முயற்சிகள் தமிழ் மக்களால் கட்டாயம் பாராட்டப்பட வேண்டும்.

இந்த நாட்டில் தமிழ்மொழி தொடர்ந்தும் நிலைத்திருக்க வேண்டுமானால் கற்பித்தலில் உள்ள பல குறைகள் நீக்கப்பட வேண்டும். முக்கியமாக ஒன்ராறியோ முழுவதும் ஒருங்கிணைந்த பாடத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். பிள்ளைகளின் தாய்மொழித் தரத்தை அறிந்து அதற்கு ஏற்ற வகுப்புகளில் அவர்களை அனுமதிக்க வேண்டும். கல்விப் பகுதி ஆசிரியர் தேர்வின் போது போதிய தமிழ் அறிவும், அனுபவமும், ஆற்றலும் உள்ளவர்களையே

(மறுபக்கம் வருக)

ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். பிள்ளைகள் தமிழ் கற்பதில் பெற்றோர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பினால் மட்டும் போதாது. வாரத்தில் இரண்டரை மணி நேரம் மட்டும் தமிழ் கற்பதால் பிள்ளைகள் போதியளவு தமிழ் அறிவைப் பெற்றுவிட முடியாது. எனவே வீட்டிலும் பிள்ளைகள் தமிழ் கற்பதற்கு வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழ் ஆர்வலர் பலர் இங்கே தமிழில் ஒலி நாடாக்கள், ஒளி நாடாக்கள், பயிற்சிப் புத்தகங்கள் போன்றவற்றை தமிழ்ப் பிள்ளைகளின் நன்மை கருதி, தங்கள் பொன்னான நேரத்தைச் செலவிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். வீட்டிலே தமிழில் பேசுவதோடு மட்டுமல்ல, இதுபோன்ற தமிழில் வெளிவந்திருக்கும் சிறுவர்களுக்கான ஒலி, ஒளி நாடாக்களை, குறும் தட்டுகளை, பயிற்சிப் புத்தகங்களை வாங்கி வீட்டிலும் பிள்ளைகளின் தமிழ் மொழி அறிவை விருத்தி செய்யப் பெற்றோர்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்.

பழைய மாணவர் சங்கங்கள், ஊர் ஒன்றியங்கள், தொடர்பு சாதனங்கள் போன்றவை பிள்ளைகளுக்கு ஏற்ற நல்ல நிகழ்ச்சிகளைத் தமிழில் நடத்தி, பிள்ளைகளின் திறன்களைத் துலங்க வைத்து, அவர்களுக்குச் சிறந்த பரிசுகளைக் கொடுத்து, அவர்களின் தமிழ் ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.

தமிழர்களின் ஆங்கில அறிவும் தமிழ்மொழியின் அழிவிற்கு ஒரு காரணமாய் இங்கே இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கனடாவில் ஆங்கிலம் தெரிந்த அனேகமான தமிழர்கள் ஆங்கிலத்தை வீட்டு மொழியாகப் பாவிக்கத் தொடங்கியதால் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலமே வீட்டு மொழியாக மாறிவிட்டது. கனடா போல் அல்லாது தமிழர்கள் புலம்பெயர்ந்த அனேகமான ஏனைய நாடுகளில் ஆங்கில மொழி பாவனையில் இல்லாத காரணத்தால் தமிழையே தங்கள் வீட்டில் பேசும் மொழியாக இன்றும் அவர்கள் தொடர்ந்து பாவித்து வருவதை இங்கே கட்டாயம் குறிப்பிட வேண்டும். எனவே தமிழ் பெற்றோரும், கல்விமான்களும் தமிழ் மொழி வளர்ச்சியில் இன்னமும் கூடிய கவனம் செலுத்தினால் எங்கள் தாய் மொழியாம் தமிழ் மொழி இந்த மண்ணில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி. வாழ்க தமிழ் இனம்! வளர்க தமிழ் மொழி!



"உணவே மருந்து"

கலாநிதி பால. சிவகடாட்சம்

கிரேக்கத்தில் முதறிஞர் சிந்தனைச் சிற்பி சோக்கிரட்டீஸை அறியாதவர்கள் வெகு சிலர். இவர் வாழ்ந்த நூற்றாண்டில் கிரேக்கத்தில் வாழ்ந்த மற்றுமொரு பேரறிஞர் ஹிப்போக்கிரட்டீஸ். "மேலைத்தேய மருத்துவத்தின் தந்தை" என்று அழைக்கப்பெறும் இந்த மருத்துவப் பேரறிஞர் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி வைத்த சத்தியப் பிரமாண உறுதிமொழிகளைத் தான் இன்றைக்கும் டாக்டர்களாக வெளியேறும் மாணவர்கள் ஒப்பித்து வருகிறார்கள்.

ஹிப்போக்கிரட்டீஸின் பெயரில் இன்று அறுபதுக்கும் மேற்பட்ட நூல்கள் கிடைக்கப் பெறுகின்றன. எனினும் இவற்றுட் பெரும்பாலானவை இவரது பெயரில் வேறு சிலர் காலத்துக்குக் காலம் எழுதி வைத்த நூல்களே என்று கூறப்படுகிறது. கிரேக்கத்தில் ஹிப்போக்கிரட்டீஸின் பெயருக்கு இருந்த மதிப்பு இதன் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு நபர்களால் எழுதி வைக்கப்பட்ட மருத்துவம், சோதிடம், சமயம் மற்றும் இலக்கணம் தொடர்பான நூல்கள் யாவும் இன்று அகத்தியர் நூல்களாக வழங்கப்பெறுவதை இங்கு கவனத்திற் கொள்ளலாம். இந்நிலையில் ஹிப்போக்கிரட்டீஸை "கிரேக்கத்தின் அகத்தியர்" என்று குறிப்பிடுவதில் தவறேதுமில்லை எனக் கருதுகிறேன். கிரேக்கம் தந்த இந்தப் பேரறிஞரின் மருத்துவப் பொன்மொழிகள் உலகப் பிரசித்தி பெற்றவை. இந்தப் பொன்மொழிகளுள் ஒன்றே இக் கட்டுரையின் கருப் பொருளாக அமைகின்றது.

Let your medicine be your food
and your food, medicine" (Hippocrates B-C460?)
"உங்களுடைய மருந்து உங்களுக்கு உணவாகட்டும்
உங்களுடைய உணவு மருந்தாகட்டும்"

இதுவே இங்கு கவனத்தில் கொள்ளப்படும் ஹிப்போக்கிரட்டீஸின் பொன்மொழியாகும்.

ஒருவரின் உடல்நலத்தை நிர்ணயிப்பதில் அவர் உட்கொள்ளும் உணவின் இயல்பும் அளவும் ஆற்றும் பங்கை இதனை விட அழகாகவும் சுருக்கமாகவும் வேறு எவராலும் கூறி விட முடியாது.

"இயற்கையை (உடல் உள்ளிட்டு) தனித்தனி உறுப்புக்களால் ஆக்கப்பட்ட ஒரு சேர்க்கையாகக் கருதாமல் அதனை முழுமையானதொன்றாக நோக்க வேண்டும். அப்பொழுது தான் அதனை நாம் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்." என்பது ஹிப்போக்கிரட்டீஸின் மற்றுமொரு கருத்தாகும்.

இயற்கையின் ஒவ்வொரு அங்கமும், உடலின் ஒவ்வொரு உறுப்பும், ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புடையன. உறுப்புகளைத் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. இதனையே ஹிப்போக்கிரட்டீஸ் வலியுறுத்துகிறார்.

ஹிப்போக்கிரட்டீஸின் இந்தக் கருத்துப் பற்றி சோக்கிரட்டீஸிடம் அவரது மாணவர் விளக்கம் கேட்டார்.

"இந்தக் கொள்கையில் எனக்கும் உடன்பாடு உண்டு. அதேசமயம் ஹிப்போக்கிரட்டீஸ் சொல்லி விட்டார் என்பதற்காக மட்டும் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. எவர் எதனைக் கூறினும் அதனை ஆராய்ந்து உண்மையைக் கண்டறிவதே அறிவு" என்று மாணாக்கனின் கேள்விக்கு சோக்கிரட்டீஸ் பதில் அளித்ததாக அறிகிறோம்.

உடலின் ஒரு உறுப்பில் ஏற்பட்டிருக்கும் நோயினை ஆராயும் போது அந்த உறுப்பை

(எதிர்ப்பக்கம் வருக)

மாத்திரம் தனியே பார்க்காது முழு உடலையும் ஆராய்வதன் மூலமே அந்த நோய் பற்றிச் சரியாக அறிந்து கொள்ள முடியும் என்ற கருத்தை இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரேயே கூறி வைத்தவர் ஹிப்போக்கிரட்டீஸ். உடலின் வெவ்வேறு உறுப்புகளில் தோன்றும் நோய்களுக்கும் உடல் முழுவதையும் ஒருங்கே பேணும் உணவுப் பழக்கவழக்கங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதனை உணர்ந்து கொண்டால் நோய் ஏற்படாமல் தவிர்ப்பதிலும் நோய்ச் சிகிச்சையிலும் உணவுக் கட்டுப்பாட்டின் அவசியத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

இருதய வியாதிகள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, வாய்வு, மூலவியாதி, சலக்கடுப்பு, கல்லடைப்பு, பெருங்குடற் புற்றுநோய் போன்ற வியாதிகள் உடலின் வெவ்வேறு உறுப்புகளில் தோன்றினாலும் இவை அனைத்தும் தவறான உணவுப் பழக்கவழக்கங்களால் தோற்றுவிக்கப்படுகின்றன அல்லது தூண்டப் பெறுகின்றன என்பது இன்றைய மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்த உண்மை.

இன்று கனடா, ஐக்கிய அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகளில் வாழும் மக்கள் அளவுக்கு மீறி உண்ணுதல், கொழுப்புக் கூடிய உணவுகளை உண்ணுதல், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டுப் பதனிடப்பட்ட 'ரெடிமேட்' உணவுகளை உண்ணுதல் போன்ற தவறான உணவு முறைகளால் உடல் பருமன் (Obesity), இருதய வியாதிகள் போன்ற பலவற்றாலும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது மறைக்க முடியாத உண்மை.

"அற்றால் அளவறிந்து உண்பான் அ:துடம்பு
பெற்றான் நெடி துய்க்கு மாறு"

"ஒருவர் தாம் முன் உண்ட உணவு சமிபாடு அடைந்த பின்பு, தனது வயதுக்கும் உடல் உழைப்புக்கும் தேவையான உணவின் அளவை அறிந்து சாப்பிட்டால் இந்த உடம்போடு நீண்ட காலம் வாழலாம்" என்கிறார் திருவள்ளுவர்.

நாம் உண்ணும் உணவும் குடிக்கும் தண்ணீரும் மலசலம் ஒழுங்காகக் கழிவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும். மலம் பெருங்குடலில் நீண்ட நேரம் தங்கியிருப்பது உடல் நலத்திற்கு உகந்தது அல்ல. மலத்தில் இருக்கக் கூடிய கழிவு இரசாயனங்கள் பெருங்குடலைத் தாக்குவதற்கு அவகாசம் கிடைக்கின்றது. இதனால் பெருங்குடற் புற்றுநோய் (Colon Cancer) தோன்றும் அபாயம் உண்டு. மேலும் மலம் கழிக்கச் சிரமப்படுபவர்களுக்கு மூலவியாதி ஏற்படும் சாத்தியமும் கூடுதலாக உண்டு.

மலம் ஒழுங்காகக் கழிவதற்கும் உணவுப் பாதை சீராகச் செயற்படுவதற்கும் நார்ச்சத்து பெரிதும் துணை புரிகின்றது. இதனால் நார்ச்சத்து கூடுதலாக உள்ள காய்கறிகள், பழங்கள் என்பவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியமாகும்.

சிறுநீர் உரிய அளவில் வெளியேறாவிடின் சிறுநீர்ப் பாதையில் தொற்றும், சலக்கடுப்பு, கல்லடைப்பு போன்ற வியாதிகளும் ஏற்படுகின்றன. சிறுநீரை அடக்கி வைத்தல் கூடாது. அதேசமயம் போதியளவு சிறுநீர் கழிவதன் பொருட்டு தண்ணீர் அருந்துவது அவசியமாகும். ஒரு நாளைக்குக் குறைந்தது எட்டு கிளாஸ் தண்ணீராவது அருந்துவது அவசியம். தண்ணீரைக் கொதிக்க வைத்து ஆறிய பின் அருந்துவதால் தொற்றுக் கிருமிகள் தண்ணீருடன் உடலில் புகுவதைத் தடுக்க முடியும்.

கோடைகாலத்தில் வியர்வை அதிகமாக வெளியேறும் உடல்வாகு உடையவர்கள் தண்ணீருக்குப் பதில் மோரை இடையிடையே அருந்துவது நல்லது. வியர்வையுடன் உடலுக்குத் தெவையான உப்புச் சத்துகளும் வெளியேறுவதால் இவற்றை ஈடு செய்ய கனியுப்புகள் நிறைந்த மோர் பெரிதும் உதவுகின்றது.

'தேரையர்' என்று குறிப்பிடப் பெறும் பழந்தமிழ் மருத்துவ நூலாசிரியர் ஒருவரது பாடல் மேற்கூறப்பட்ட விடயங்களை வலியுறுத்தி நிற்கின்றது.

"திண்ணம் இரண்டு உள்ளே சிக்க அடக்காமல்
பெண்ணின்பால் ஒன்றைப் பெருக்காமல் - உண்ணுங்கால்
நீர் கருக்கி மோர் பெருக்கி நெய் உருக்கி உண்பவர் தம்
பேர் உரைக்கிற் போமே பிணி"

இப்பாடலில் 'திண்ணம்' என்பது மலம், சலம் என்னும் இரண்டையும் குறிக்கின்றது.

தயிர் ஒரு சிறந்த உணவு. தயிரில் எமது உடலுக்குத் தீங்கு விளைவிக்காத பக்ரீரியாக் கிருமிகள் நிறைந்துள்ளன. சுத்தமாகத் தயாரிக்கப்படாத உணவுடன் தீங்கு விளைவிக்கக் கூடிய பக்ரீரியாக்கள் எமது குடலில் சென்றடைகின்றன. இதனால் வயிற்றோட்டம், சீதபேதி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இந்த நோய்களை ஏற்படுத்தும் பக்ரீரியாக்கள் குடலில் பெருகி விடாமல் அவற்றை அழுக்குவதற்கு தயிரில் உள்ள நல்ல பக்ரீரியாக்கள் உதவுகின்றன. வயிற்றோட்டம் போன்ற வியாதிகளால் அவதிப்படுவோர்க்கு தயிர் மருந்தாக இருப்பதை இங்கு காண்கிறோம்.

நீரிழிவு நோயாளர்க்குப் பாகற்காய் நல்லதொரு உணவு என்பது நெடுங்காலமாகவே நம்மவர்கள் கூறி வரும் ஒரு விடயம். இன்று இது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல அமெரிக்காவில் பாகற்காய், சிறுகுறிஞ்சாய், வேம்பு உட்பட வேறு சில மூலிகைகள் அடங்கிய ஒரு தயாரிப்பு நீரிழிவு நோயாளர்க்கு ஏற்ற மூலிகை மருந்தாக அங்கீகரிக்கப்பட்டு காப்புரிமை (Patent) யும் பெற்றுவிட்டது. பாகற்காயில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பொலிபெப்ரைட் - P என்னும் புரதம் இன்சுலினைச் சுரக்கும் கணையத்தை ஊக்குவித்து சுரக்கும் இன்சுலினின் அளவைக் கூட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இங்கு பாகற்காய் என்னும் உணவு நீரிழிவைக் கட்டுப்படுத்தும் மருந்தாவதைக் காண்கிறோம்.

"உணவே மருந்து, மருந்தே உணவு" என்று கூறிய கிரேக்கப் பேரறிஞர் ஹிப்போக்கிரட்டீஸின் பொருள் நிறைந்த பொன்மொழியை நினைவு கூரும் அதே சமயம், தமிழ் மருத்துவப் பேரறிஞரான தேரையரின் 'நோயணுகாவிதி' என்னும் நூலில் வரும் பாடல் ஒன்றை இங்கே குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

பால் உண்போம் எண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகல் புணரோம் பகல் துயிலோம் பருவமுத்த
வேலம் சேர் குழலியரோடு இளவெயிலும் விரும்போம்
இரண்டடக்கோம் ஒன்றைவிடோம் இடதுகையிற் படுப்போம்
மூலம் சேர் கறிநுகரோம் மூத்த தயிர் உண்போம்
முதனாளில் சமைத்த கறி 'அமுதெனினும்' அருந்தோம்
ஞாலம் தான் மடைத்திடினும் பசித்தொழிய உண்ணோம்
தமனார்க்கு ஏதுவகை நாம் இருக்கும் இடத்தே.

இலண்டனிலிருந்து முழங்கும் தமிழோசை கனடாவிலிருந்து கிளம்பும் எதிரொலி



மணி வேலுப்பிள்ளை

பி.சி. தமிழோசை 1941/05/03 முதல் 62 ஆண்டுகளுக்கு மேலாக இலண்டனிலிருந்து முழங்கி வருகிறது. இலங்கை, இந்திய, உலகச் செய்திகளை அது வழங்கி வருகிறது. உலகத் தமிழ் வானொலி நிலையங்கள் அவற்றை அஞ்சல் செய்கின்றன. *தமிழோசையின்* சொல்லாட்சி தமிழ் நேயர்களிடையேயும் ஊடகங்களிடையேயும் பரவி வருகிறது. அதன் சொல்லாட்சி பெரிதும் பொருத்தமானதே. எனினும் அதன் தமிழாக்கங்கள் சில அறவே பொருந்தாதவை. அவற்றை மாத்திரம் சுட்டிக் காட்டுவதே எமது நோக்கம். *தமிழோசை* அவற்றைக் கருத்தில் கொள்ளுமாக:

1. பிரபாவின் *சுயசரிதையை ஆர். நாராயணசாமி எழுதியுள்ளார்* (2003/08/13). ஆர்.நாராயணசாமி எழுதியது பிரபாவின் சரிதை (biography) அதைப் பிரபா எழுதினால் தான், அது சுயசரிதை (autobiography)!

2. *யதார்த்த ரீதியான ஆபத்து* (2003/08/13). Realistic danger அல்லது Potential danger என்ற தொடர் அப்படி மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். *ஆபத்து ஏற்படும் வாய்ப்பு* என்பதே பொருத்தமான தமிழாக்கம் (3ம் குறிப்பைப் பார்க்கவும்).

3. Reality: இதனை The Concise Oxford Dictionary பல விதங்களில் எடுத்தாண்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் அவற்றைச் செவ்வனே தமிழ்ப்படுத்தியுள்ளது: *மெய்ம்மை, கற்பனையல்லாதது, மூலப்பண்புக்கூறு, உயிர்த்தோற்றம், பொருளின் மூல இயல்பு, வெளித் தோற்றங்கடந்த உள்ளார்ந்த தன்மை, புற இயல் மெய்ம்மை, மெய்யியல்பு...* இவ்வாறு மிகவும் நுண்ணிய கருத்து மாற்றங்களுக்கு இடங்கொடுக்கும் ஓர் அரிய சொல்லை ஒட்டுமொத்தமாக யதார்த்தம் என்பதில் அர்த்தமில்லை. மேற்படி சொற்களஞ்சியத்திலோ இலங்கை அரச சொல்தொகுதிகளிலோ யதார்த்தம் இடம்பெறவில்லை. *யதார்த்தம்* என்ற சொல்லை எடுத்தாள்வோர், கண்ணுறுவோர், செவிமடுப்போருள் பெரும்பாலானோர்க்கு இத்தகைய நுண்ணிய கருத்து மாற்றங்கள் புரிவதில்லை.

4. சிசிலுவின் விதவை மனைவி (2003/05/06).
கெலியின் விதவை மனைவி (2003/09/01).

விதவை என்ற சொல்லில் *மனைவி* என்ற பொருள் தொக்கி நிற்கிறது. எனவே *விதவை மனைவி* என்பது ஒருவகையில் கூறியது கூறல் அல்லவா? ஆங்கிலத்தில் widow என்பதை deceased's wife (இறந்தவரின் மனைவி) என்று குறிப்பிடும் முறை மேலோங்கி வருகிறது. தமிழிலும் *காலம் சென்ற சிசிலுவின் மனைவி* அல்லது *காலம் சென்ற கெலியின் மனைவி* என்று குறிப்பிடலாமே!

5. *அணு ஆற்றல்* (2003/09/09). ஆட்களுக்கும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இருப்பது ஆற்றல். சடப் பொருட்களுக்கு அது பொருந்தாது. சக்தி உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொருந்தும். Atomic Energy ஐ அணு சக்தி என்பதே பெரு வழக்கு. பொருத்தமும் கூட.

6. *ஈரான் அணு ஆயுதம் எதனையும் பெற்றில்லை* (2003/10/03). Iran hasn't got any nuclear weapons! *பெற்றில்லை* என்பது செய்யுள் நடைக்குப் பொருந்தக் கூடும். *ஈரான் அணு ஆயுதம் எதனையும் பெற்றிருக்கவில்லை* அல்லது *ஈரானிடம் அணு ஆயுதங்கள் எவையும் இல்லை* என்பதே உரைநடைக்குப் பொருந்தும்.

7. *வட கொறியாவின் அணு ஆற்றல் வல்லமை*
வட கொறியாவின் அணு சக்தி வல்லமை (2003/10/16).
Nuclear capabilities of North Korea என்பது மேற்கண்டவாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். *வட கொறியாவின் அணு ஆயுத வல்லமை* என்பதே அதன் பொருள். அவ்வாறே Nuclear warfare என்பது *அணு ஆயுதப் போராட்டம்* என்று பொருள்படுமே ஒழிய, *அணு ஆற்றல் போராட்டம்* என்றோ, *அணு சக்திப் போராட்டம்* என்றோ பொருள்படாது. சக்தி, ஆற்றல், வல்லமை மூன்றும் ஒத்த சொற்கள். ஆகவே *அணு ஆற்றல் வல்லமை, அணு சக்தி வல்லமை* இரண்டும் கூறியது கூறல்கள்!

8. *ஆயுதங்களும் ஆயுதத் தளவாடங்களும்* (2003/10/12). *ஆயுதங்கள், தளவாடங்கள்* இரண்டும் புரிகின்றன. *ஆயுதத் தளவாடங்கள்* என்பது புரியவில்லை. Military supplies அல்லது hardware அல்லது material அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். Military என்ற சொல்லைக் கண்டதும் *இராணுவ(ம்)* என்று இட்டுத் தொலைப்பதனால் விளையும் விபரீதம் இது. ஒரு படைக்கு வேண்டிய ஆயுதங்கள் அல்லது பொருட்கள் அல்லது அவை உட்பட அனைத்தும் *படைக்கலங்கள்* அல்லவா! போரியல் ஆய்வாளர் த. சிவராம் கூட இதனைக் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

9. *பாதுகாப்புச் செலவீனம்* (2003/10/12). Defence expenditure (spending)! *ஈனம்* என்பது *இன்மை* என்று பொருள்பட வல்லது (பலவீனம், சுகயீனம்). *இனம்* என்பது *வகை* அல்லது *தொகுதி* என்று பொருள்பட வல்லது (விலங்கினம், புள்ளினம்). *பாதுகாப்புச் செலவு* (cost) அல்லது *பாதுகாப்புச் செலவினம்* (expenditure) என்பதே சரி. *செலவினம்* என்பது பலவிதமான செலவுகளைக் குறிக்கும்.

10. *நீலப் படம்* (2003/09/24). Blue film! மறுதலையாக, *பச்சைத் தண்ணீரை* green water என்பதா? Blue film *ஆபாசப் படம்* அல்லவா!

11. *காஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றிக் கூறப் பாகிஸ்தானுக்கு இருக்கக் கூடிய உரிமையை அவர் (பிரதமர் வாஜ்பாயீ) கேள்வி எழுப்பினார்* (2003/10/18). He questioned Pakistan's right என்பது *பாகிஸ்தானுக்கு இருக்கக்கூடிய உரிமையை அவர் கேள்வி எழுப்பினார்* என்று ஆகியிருக்கிறது. *உரிமையை அவர் கேள்வி எழுப்பினார்* என்பது பொருந்தாது. *உரிமையைக் குறித்து அவர் கேள்வி எழுப்பினார்* என்பதே பொருந்தும்.

12. *அனுசரணையாளரான நோர்வே* (2003/07/31-2003/09/07)
அனுசரணையாளர் உயர்திணை, நோர்வே

அஃறிணை. ஆகவே *அனுசரணையாளரான நோர்வே* என்பது பொருந்தாது. *அனுசரணையாளரான நோர்வேஜியர், நோர்வேஜிய அனுசரணையாளர், அனுசரணை புரியும் நோர்வே, அனுசரணை புரியும் நோர்வேஜியர்* என்றெல்லாம் குறிப்பிடலாமே! Facilitator Norway என்பது ஆங்கிலத்துக்குப் பொருந்தும். அதை *அனுசரணையாளரான நோர்வே* என்பது தமிழுக்கு அறவே பொருந்தாது.

13. *சிறுபான்மை இனத்தவர் அரசால் தீங்கிழைக்கப்பட்டனர்* (2003/07/31). இதையே ஆங்கில நடையில் தமிழ் என்பது! The minorities were abused by the government போன்ற ஓர் ஆங்கில வசனம் அப்படியே தமிழாக்கப்பட்டுள்ளது. இது தமிழ் நடை அல்ல. *அரசு சிறுபான்மை இனத்தவருக்குத் தீங்கிழைத்தது* (செய்வினை) அல்லது *சிறுபான்மை இனத்தவருக்கு அரசால் தீங்கிழைக்கப்பட்டது* (செயப்பாட்டு வினை) போன்றவையே தமிழ் நடையில் அமைந்த வசனங்கள்.

14. *ஜெயலலிதா குறிப்புணர்த்தினார்... ஆட்சியாளர் எயிட்ஸ் பிரச்சனையில் அக்கறை கொள்கிறார்கள் என்பதை இது குறிப்புணர்த்துகிறது (2003/07/26).* உணர்த்துகிறது என்பதே அதே பொருளை உணர்த்துகிறது அல்லவா? அதை ஏன் *குறிப்புணர்த்துகிறது* என்று குழப்பியடிக்க வேண்டும்?

15. இலண்டனில் நிலைகொண்டிருக்கும் செய்தித்தாள் (2003/05/21). A newspaper based in London! நிலைகொள்வதோ நிலைகொள்ளாது அலைந்து திரிவதோ பெரிதும் உயிரினங்களுக்கே பொருந்தும். அது சடப் பொருட்களுக்குப் பொருந்துவது அரிது. அதை *இலண்டனிலிருந்து வெளிவரும் செய்தித்தாள்* என்று குறிப்பிடலாமே!

16. *சக்கர நாற்காலி* (2003/09/06). நான்கு கால்கள் கொண்டதே நாற்காலி. ஆகவே *சக்கர நாற்காலி* அறவே பொருந்தாது. கட்டில், மேசை போன்றவற்றுக்கும் நான்கு கால்கள் உள்ளனவே! கதிரை (chair) என்ற போர்ச்சுக்கீசியச் சொல் இலங்கை முழுவதும் வழங்கி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் கூட அது இடம்பெற்றுள்ளது. Wheel-chair என்ற ஒட்டுச் சொல்லுக்கு *சில்லுக் கதிரை* ஒரு பொருத்தமான தமிழாக்கம் அல்லவா?

17. *ஐ.நா. குழந்தைகள் நிதியம்* (2003/10/02). UNICEF என்பது *ஐ.நா. சிறுவர் நிதியம்* என்றே பொருள்படும் (18ம் குறிப்பைப் பார்க்கவும்).

18. *குழந்தைத் தொழிலாளர்* (2003/09/27). Child-labourer! குழந்தைகள் (infants) அல்ல, அவர்களை விட வயது கூடிய சிறுவர்களே (children) தொழிலுக்கு அமர்த்தப்படுகிறார்கள். அவர்களைப் *பால்யத் தொழிலாளர்* என்பதே பொருந்தும். ஏற்கனவே Child-marriage என்பது *பால்ய மணம் (பால்ய விவாகம்)* என்று வழங்கி வருகிறதே!

19. *முன்னுதாரணமற்ற ஆர்ப்பாட்டம்* (2003/09/22). Unprecedented demonstration! மாலைதீவில் இப்படி ஓர் ஆர்ப்பாட்டம் முன்னொரு போதும் இடம்பெறவில்லை. அதுதான் சங்கதி! மாலைதீவில் *முன்னொரு போதும் இடம்பெறாத ஆர்ப்பாட்டம்* இலண்டனில் வைத்து *முன்னுதாரணமற்ற ஆர்ப்பாட்டம்* ஆக்கப்பட்டுவிட்டது! மொழிபெயர்ப்பில் ஈடுபடும் பிற ஊடகங்களுக்குத் *தமிழோசை* முன்னுதாரணமாகத் திகழ வேண்டாமா?

20. *இரங்கநாதன் 56 பக்கங்களைப் படித்துவிட்டதாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்* (2003/09/20). Submit என்பது சமர்ப்பி, அடிபணி, பயபக்தியுடன் தெரிவி... என்றெல்லாம் பொருள்பட வல்லது. சட்ட மொழியில் (legalese) அதற்கு *பயபக்தியுடன் தெரிவி* அல்லது *பற்றுறுதியுடன் தெரிவி* அல்லது *பணிவுடன் தெரிவி* என்று பொருள். அதாவது *இரங்கநாதன் பயபக்தியுடன் தெரிவித்திருக்கிறார்*. அவர் *படித்துவிட்டதாக... தெரிவித்தார்* என்பது ஓரளவு பொருந்தும். *படித்துவிட்டதாக... சமர்ப்பித்திருக்கிறார்* என்பது அறவே பொருந்தாது.

21. *என்னுடைய கட்சியாளர்* (2003/10/02). My client! என்னை ஏற்படுத்தியுள்ளவர் அல்லது எனது சேவையைப் பெற்றுள்ளவர் என்பதே my client என்பதன் பொருள். நான் ஒரு வழக்குரைஞர் என்றும், என்னை ஒருவர் ஏற்படுத்தியுள்ளார் என்றும் வைத்துக் கொண்டால், நான் தான் அவருடைய கட்சிக்காரர் ஆகின்றேன். ஆகவே, நான் போய் அவரை *எனது கட்சிக்காரர்* என்பது எங்ஙனம் பொருந்தும்? இது ஓர் எதிர்மாறான பிரயோகம் அல்லவா? எனினும் *என்னுடைய கட்சிக்காரர்* என்ற தொடர் நெடுங்காலமாக இந்தியாவில் நிலைபெற்றுள்ளது! அத்தகைய *கட்சிக்காரரைப் போய்க் கட்சியாளர்* என்று மாற்றுவதால் எதுவித பயனும் விளையப் போவதில்லை.

22. *ஜனநாயக மதிப்பீடுகள்* (2003/09/10). இது democratic values என்பதன் தமிழாக்கம்! வேறு சிலர் இதனை *ஜனநாயகப் பெறுமதிகள், ஜனநாயகப் பெறுமானங்கள்* என்றெல்லாம் குறிப்பிடுவதுண்டு. *மதிப்பீடுகள், பெறுமதிகள், பெறுமானங்கள்* எல்லாம் பணம், பண்டங்களுடன் தொடர்புடையவை. ஜனநாயகம் பணமும் அல்ல, பண்டமும் அல்ல. ஜனநாயகம் ஒரு நெறி. நெறிகளுடன் தொடர்புறும் பொழுது value என்ற சொல் *பண்பு* அல்லது *விழுமியம்* என்றே பொருள்படும். Democratic values என்பதை *ஜனநாயக (அல்லது மக்களாட்சிப்) பண்புகள்* அல்லது *விழுமியங்கள்* என்பதே பொருத்தம்.

23. *இலங்கை சமாதான முயற்சிகளில் வெளிநாடுகள் சம்பந்தப்படுவதால் நாட்டின் இறைமை தொடர்பில் சமரசம் செய்ய நேரிடலாம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன* (2003/10/13). The sovereignty of the country may be compromised...! Compromise என்ற சொல் விட்டுக்கொடு(ப்பு), சமரசம் (செய்), ஒத்துமேவல் (ஒத்துமேவு), கோட்டைவிடு(கை) என்றெல்லாம் பொருள்பட வல்லது. சமரசம் ஒரு நல்ல சங்கதி. ஆகவே அது ஒரு குற்றச்சாட்டின் தோற்றுவாயாக அமைய முடியாது. இறைமையை விட்டுக்கொடுப்பது தவறு. ஆகவே இறைமையை விட்டுக் கொடுக்க நேரலாம் என்றுதான் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. சம்பந்தப்பட்ட ஆங்கில வசனத்தின் பொருள் அதுவே.

24. *இணை இராணுவப் படை* (2003/10/14). Paramilitary force! *இராணுவம், படை* இரண்டும் ஒத்த சொற்கள். ஒன்றில் *இணைப் படை* அல்லது *இணை இராணுவம்* என்று குறிப்பிடலாமே!

25. *ஈராக்கில் அமெரிக்கர் எதிர்நோக்கிய தொடர் பிரச்சனைகள்* (2003/10/18). A series of problems the Americans have faced in Iraq... அல்லது அத்தகைய வசனம் ஒன்று அவ்வாறு தமிழாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. *எதிர்நோக்கிய தொடர் பிரச்சனைகள்* என்பது ஆங்கில நடை. *தொடர்ச்சியாக எதிர்நோக்கிய பிரச்சனைகள்* என்பதே தமிழ் நடை.

தமிழாக்கத்தைப் பொறுத்தவரை இழைக்கப்படும் தவறுகள் மூன்று விதமானவை. அவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை: ***(மறுபக்கம் வருக)***

(1) தவறான சொல்லாட்சி (எ-கா: *விமர்சனம்* என்ற சொல்லை *கண்டனம்* என்ற பொருளில் எடுத்தாள்வது. அதற்குக் காரணம் Criticism! இது இவ்விரு பொருள்களிலும் இடம்பெற வல்லது என்பது புரிந்து கொள்ளப்படவில்லை).

(2) உருவகம் புரியாமை (எ-கா: *அமைதிப் படிமுறைத் திட்டம்* அல்லது *படிமுறை அமைதித் திட்டம்* (படிப்படியாக நிறைவேற்றப்படும் அமைதித் திட்டம்) என்று பொருள்படும் road map to peace என்ற உருவகத்தை *அமைதி வரை படம்* என்று முழிபெயர்த்தல்)

(3) ஆங்கில நடையைத் தமிழ் நடை ஆக்குதல் (எ-கா: Your favourite song என்ற தொடரை *உங்களுக்குப் பிடித்த(மான)* பாடல் என்று தமிழ்ப்படுத்துவதை விடுத்து, *உங்கள் விருப்ப (அபிமான) பாடல்* என்று ஆங்கில நடைப்படுத்தல்). அப்துல் ஹமீட் கூட இதே தவறை இழைப்பதுண்டு.

இரண்டு தமிழ்ச் சொற்கள் குழப்பியடிக்கப்படுவதற்கு ஓர் ஆங்கிலச் சொல் காரணமாய் அமைவது விசித்திரமாய் இருக்கிறது. கலப்படங்களுக்கு ஆட்சியாளரிடமிருந்து உரிமம் கிடைப்பதைப் போல, குழறுபடிகளுக்கு விமர்சகர்களிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கிறது. ஆதலால் மேற்படி தவறுகள் வேரூன்றி வருகின்றன.

இங்கு மேவியின் விதி (Murphy's Law) நினைவுக்கு வருகிறது. ஒரு காரியத்தை ஒன்றுக்கு மேற்பட்ட விதங்களில் செய்யலாம் என்று வைத்துக் கொள்வோம். அவற்றுள் ஒன்று கெடுதியான விதம் என்றும் வைத்துக் கொள்வோம். அப்படி என்றால் யாரோ ஒருவர் கெடுதியான விதமாகவே அந்தக் காரியத்தைச் செய்வார். அவர் பெயர் போனவராய் இருந்துவிட்டால், வந்தது ஆபத்து: பெயர் எடுக்கத் துடிக்கும் பேர்வழிகள் அவரைப் பின்பற்றி அந்தக் காரியத்தை முன்னெடுத்துச் செல்வார்கள்!

தமிழோசையின் சொல்லாட்சி பெரிதும் பொருத்தமானதே. எனினும் அதன் தமிழாக்கங்கள் சில அறவே பொருந்தாதவை. அவற்றை மாத்திரமே மேலே சுட்டிக் காட்டியுள்ளோம். *தமிழோசை* அவற்றைக் கருத்தில் கொள்ளுமாக.

மொழிபெயர்ப்பு



கே. ஜவஹர்லால் நேரு

உலக நாடுகளில் ஏற்படுகின்ற முன்னேற்றங்களையும், பிறமொழிகளில் உள்ள இலக்கியங்களையும் அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்று அறிந்து கொள்வதென்பது சாத்தியமற்ற விடயமாகும். அதனால் பிறமொழிகளில் பிரசுரிக்கப்பட்ட, பிரசுரிக்கப்படும் முக்கிய விடயங்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டிய கடமை தமிழ்க் கல்விமான்களுக்கு உண்டு. அதைப் போலவே எமது சரித்திரத்தை, கலாசாரத்தை, சாதனைகளை, இலக்கியங்களை பிற இனத்தவர்களும் அறிய வேண்டும் என்பதற்காக அவைகளை பிறமொழிகளில் மொழிபெயர்த்து வைக்க வேண்டிய கடமையும் அவர்களுக்குண்டு. மொழிபெயர்ப்பதில் உள்ள முக்கியத்துவத்தை குறைவாக எடை போடுவது எமது இனத்தின் அறிவு வளர்ச்சிக்குத் அணை போடுவதாக அமையும். அதிர்ஷ்டவசமாக, மொழிபெயர்ப்பின் முக்கியத்துவத்தை எமது மக்கள் உணர்ந்துள்ளனர் என்பதை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அடிக்கடி பிரசுரமாகும் மொழிபெயர்ப்பு தொடர்பான கட்டுரைகள், தொடர்க் கட்டுரைகள், அறிவுரைகள், முக்கிய குறிப்புகள் போன்றவைகளில் இருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

சிலர் இப்படித்தான் மொழிபெயர்க்க வேண்டுமென எடுத்துக் காட்டுவதற்காக ஆங்கில மூலத்தையும் அதற்கான தமது தமிழ் மொழிபெயர்ப்பையும் உதாரணங்களாகக் காட்டி தமது கட்டுரைகளை வரைந்துள்ளனர். இன்ன சொல்லிற்கு இது தான் கருத்து என மற்ற மொழிபெயர்ப்பாளர்களைக் கண்டித்தவர்களும் இருக்கின்றனர். இவை இரண்டும் வரவேற்கப்பட வேண்டிய விடயங்கள். ஆனால், அப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். தாம் எழுதுவதும் கூறுவதும் நூற்றுக்கு நூறு சரியானதென அறிந்த பின்னரே தமது கருத்துகளை எழுத வேண்டும், கூற வேண்டும். தீர ஆராயாமல் அப்படி எழுதுவதும் கூறுவதும் அறியாமையை விளம்பரப்படுத்துவதாகவே அமையும்.

நான் கூறுவதை விளக்குவதற்கு எத்தனையோ உதாரணங்கள் என்னிடம் இருந்தாலும், இரண்டே இரண்டு உதாரணங்களை மாத்திரம் இந்தக் கட்டுரையில் தருகின்றேன். சில விடயங்களை உதாரணங் காட்டாமல் விளக்குவது மிகமிகக் கடினம் என்பதால் இந்த உதாரணங்களைத் தருகிறேனேயன்றி யாரையும் புண்படுத்துவதற்காக அல்ல என்பதை முன்கூட்டியே கூறி வைக்க விரும்புகின்றேன். இந்த ஆண்டு ஜனவரி மாத 'தமிழர் தகவல்' சஞ்சிகையில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

"மொழிபெயர்ப்புத் தொடர்" என்னும் தலைப்பில் வெளியாகிய 19வது கட்டுரை அது. அந்தக் கட்டுரையில் ஆர்.கே.நாராயணன் எழுதிய ஒரு ஆங்கிலக் குறுங்கதை மறுபிரசுரம் செய்யப்பட்டு அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் தரப்பட்டிருந்தது. இது ஒரு சங்கீத வித்துவானுடைய கதை. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு பகுதியையும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் தருகின்றேன். அந்தப் பகுதியில் ஆங்கிலப் பிழையுடன் தமிழ் மொழிபெயர்ப்பிலும் பிழை காணப்பட்டது.

ஆங்கில மூலக்கதை எனக் குறிப்பிட்டிருந்த பகுதியில், "with a gold bead at his throat, living on his ancestral lands, and coming of long line of singers. He never thought that he needed anything more in life than to be left alone to sing," என்பது இரண்டு வசனங்களாக எழுதப்பட்டிருந்தது. இதில் உள்ள முதலாவது வசனத்தை

எடுத்துப் பாருங்கள். இது ஒரு அர்த்தமும் இல்லாத முடிவில்லாத அல்லது முடிக்கப்படாத ஒரு "தொங்கு வசனம்." இதனை ஆங்கிலத்தில் "dangling sentence" எனக் குறிப்பிடுவர். அதாவது இது ஒரு "incomplete sentence." இரண்டு வசனங்களுக்கும் இடையே காணப்படும் முற்றுப் புள்ளிக்குப் பதிலாக நிறுத்தற்குறி அல்லது காற்புள்ளி என தமிழ் அகராதியில் கூறப்பட்டுள்ள "comma" பாவிக்கப்பட்டு இந்த இரண்டு வசனங்களையும் ஒரே வசனமாக எழுதியிருந்தால் அதில் அர்த்தம் உண்டு. அதுவே ஆங்கில வசனங்களைக் கையாளும் முறையும் கூட. இந்த வசனம், "With a gold bead at his throat, living on his ancentral lands, and coming of a long line of singers, he never thought that he needed anything more in life than to be left alone to sing," என எழுதப்பட வேண்டியது.

இரண்டாவதாக, "With a gold bead at his throat," என்பதை கட்டுரையாளர் "அவருடைய தொண்டையில் ஒரு தங்க மணி தொங்கும்" என மொழிபெயர்த்திருந்தார். மனிதருடைய தொண்டையில் Adam's apple என்னும் ஒரு உறுப்பு இருப்பதையும், பேசும் போதும், பாடும் போதும் இந்த உறுப்பு விறுவிறுப்பாக அசைவதையும் அவதானித்திருப்பீர்கள். அந்த உறுப்பின் தமிழ்ப் பெயர் எனக்குத் தெரியவில்லை. அந்த உறுப்பு அசைவதால் குரல் உண்டாகின்றதா, அல்லது ஓசை எழும் போது அந்த உறுப்பு அசைகின்றதா என்பதும் எனக்குத் தெரியாது.

ஆனால், அந்த உறுப்பினால் ஓசை உண்டாகுவதாகவும், அந்த உறுப்பு தங்கத்தைப் போன்று உயர்ந்த ரகமாக இருந்தால் இனிமையான குரல் உண்டாகும் எனவும் மேலைத்தேய மக்கள் மத்திரமல்ல எமது மக்களும் நம்பினர். இப்படியான ஆதாரமில்லாத நம்பிக்கைகளை ஆங்கிலத்தில் folk wisdom என அழைப்பர். அதனால் நாம் "வெண்கலக் குரலோன்" எனக் குறிப்பிடுவதைப் போன்று இப்பொழுதும் இனிமையான குரலை ஆங்கிலத்தில் golden voice என வர்ணிக்கப்படுவதுண்டு. இதையே அந்த வசனம் குறிப்பிடுகின்றது. அவருடைய தொண்டையில் தொங்கும் பொருள் எதனையும் அல்ல.

எனது இன்னொரு அனுபவத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். திருமதி வசந்தா நடராஜன் எழுதிய "ஈழத்தமிழர் வரலாறு" என்னும் புத்தகத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தப் புத்தகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவன் என்னும் காரணத்தினால் எனக்கு அந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வசந்தா நடராஜனிற்கு, அவருடைய பெயரையும் அவர் தமிழ் மொழிக்கு ஏற்படுத்திய சுகந்தமான தாக்கத்தையும் ஒன்றிணைத்து "இலங்கையில் இருந்து வந்த வசந்தம்," என இந்தியப் பத்திரிகை ஒன்று புகழாராம் சூட்டியிருந்த பகுதியை நான் "The Spring breeze from Ceylon" என மொழிபெயர்த்திருந்தேன். நான் பாவித்த இந்த ஆங்கில சொற்பதத்தை அந்தப் புத்தக வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபர் தனது தலைமை உரையில் வெகுவாகப் பாராட்டினார்.

நான் இப்படிப் பாராட்டப்பட்டது அந்த விழாவில் பேச்சாளராகக் கலந்து கொண்ட ஒரு பெரியவருக்குப் பொறுக்கவில்லை.

இடைவேளையின் போது நான் சற்று வெளியே போய் வருவதற்காகச் சென்று கொண்டிருக்கையில் அவர் தனது ஆசனத்தில் இருந்தவாறே எனது கையை எட்டிப்பிடித்து என்னை நிறுத்தி "நீர் மொழிபெயர்த்தது தவறு, வசந்தம் என்பதற்கு spring என்பது தான் சரியான ஆங்கிலச் சொல்" எனக் கூறினார். நான், "அதைப் பற்றி பின்பு பேசிக் கொள்ளலாம்" எனக் கூறி விட்டுச் சென்று விட்டேன்.

சற்றே யோசித்துப் பாருங்கள். நான் "வசந்தம்" என்னும் சொல்லை "spring breeze" என மொழிபெயர்த்ததற்குக் காரணம் எனக்கு "வசந்தம்" என்றால் "spring" என்பது தெரியாததால் அல்ல. நாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது தமிழ் மொழி தெரியாதவர்களுக்காக. அப்படியான பிற இனத்தவர் ஒருவர் பெண்மணி ஒருவர் spring போன்றவர் என வர்ணிக்கப்படுவதை வாசித்தால் என்ன நினைப்பார் என யோசித்துப் பாருங்கள். இப்படியான உதாரணங்கள் எத்தனையோ.

இவற்றை நான் எதற்காகச் சொல்ல வருகிறேனென்றால், மொழிபெயர்ப்பாளர்களுக்கு சம்பந்தப்பட்ட இரண்டு மொழிகளிலும் சிறந்த, நிறைந்த அறிவுத் திறன் வேண்டும். அது மாத்திரமல்ல, மொழிபெயர்க்கப்படும் மொழியில் வருகின்ற பதங்களின் உட்கருத்துகளை நன்றாக அறிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் மொழிபெயர்க்கப்படும் மொழியின் நடை, மொழி மரபு, நடைமுறையில் இருந்து வரும் சொற்றொடர்கள் ஆகியவையும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

இப்படி எழுதுவதால் நான் எல்லாம் தெரிந்தவன் என விளம்பரப்படுத்துவதாக எண்ண வேண்டாம். அப்படி எல்லாம் தெரிந்த மனிதன் ஒருவனும் இதுவரை பிறக்கவில்லை. இனிமேல் பிறக்கப் போவதும் இல்லை. நாம் கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ உண்டு.

Why do people volunteer?

* The average volunteer devotes 191 hours a year to volunteer work.
* The most common types of volunteer activity are: fundraising, organizing special events, providing information, visiting the sick and elderly, helping with child care or homemaking services, and serving as a member of a board or committee.
* The main reason people choose to volunteer is to help others in need or to support a worthy cause. Other reasons include wanting to do something satisfying, meeting new people and acquiring added skills.
* Almost half of volunteers with paid jobs are able to apply the skills acquired through their volunteer work to direct use in their paid employment.

உங்கள் பாதுகாப்பு உங்கள் கைகளில்



நாகா இராமலிங்கம்

சென்ற வருடம் (2002) ஒன்ராறியோ மாகாணத்தில் வேலைக்குச் சென்ற இளம் வயதினர் எட்டுப் பேர் வேலையிலிருந்து உயிருடன் வீடு திரும்பவில்லை. இவர்கள் வீதி விபத்துகளிலோ அல்லது வேறு யாராவது கொலைகாரர்களின் கையில் சிக்கியவர்களோ அல்ல. இவர்கள் எட்டுப் பேரும் வேலைத் தலங்களில் தற்செயலாக நடந்த விபத்துக்களில் சிக்கி உயிர் இழந்தவர்கள். கடந்த மூன்று வருடங்களில் இப்படியாக இறந்தவர்களுள் 40க்கும் அதிகமானோர் 24 வயதிற்குட்பட்ட இளைய தலைமுறையினர். 2002ம் ஆண்டில் ஒன்ராறியோ வேலைத்தல பாதுகாப்பு மற்றும் காப்புறுதி சபை (Workplace safety and insurance board) க்கு கிடைக்கப் பெற்ற காப்புறுதி மனுக்களின் தொகையில் 50,000க்கும் அதிகமானோர் இளம் வயதினர். இவர்கள் யாவரும் தத்தமது வேலைத்தலத்தில் சேவையிலிருக்கும் போது விபத்துக்குள்ளாகி காயப்பட்டவர்கள். இவர்களில் மூன்றில் ஒருவர் மிகவும் பாரதூரமான காயங்களுக்குள்ளானவர்கள். இவர்கள் மீண்டும் தொடர்ந்து வேலைக்குச் செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டவர்கள்.

எம் நாட்டிலும் அமெரிக்காவிலும் வேலைத்தல பாதுகாப்பு பற்றி நடத்திய கணிப்பு விபரப்படி, 24 வயதிற்குக் குறைந்தவர்கள் மற்றவர்களை விட இரண்டு மடங்கு வேலைத்தலத்தில் விபத்துக்களுக்குள்ளாகிறார்கள் என்று கண்டிருக்கிறார்கள். இதில் 80 வீதமானோர் 11ம், 12ம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள். இவர்கள் தற்காலிக, பகுதி நேர வேலைகளுக்குச் சென்று தமது குடும்ப செலவுகளுக்காகவும், தமது கல்லூரி அல்லது சர்வகலாசாலை படிப்புக்குமாக பாடுபட்டு உழைப்பவர்கள். ஒன்ராறியோவில் மட்டும் வருடம் ஒன்றுக்கு 325,000இற்கும் மேலான உயர்நிலை பாடசாலை மாணவர்கள் (High School) இவ்விதம் கஷ்டப்பட்டு வேலை செய்கின்றனர். இன்றைய சராசரி குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் தமது சர்வகலாசாலை படிப்புக்கு ஓரளவுக்காவது பணம் தேட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். வருடா வருடம் ஏறிக்கொண்டு போகும் உயர்கல்விக் கட்டணங்களை சமாளிக்க முடியாமல் பலர் திண்டாடுகின்றனர். நான்கு வருட பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு வெளியாகும் ஒரு மாணவரின் தலையில் ஏகப்பட்ட பணச்சுமை. இடையில் வேலை செய்து பணம் ஏதும் தேடாதவிடத்து குறைந்தது 40,000 டாலர் OSAP கடனாளியாக அவர் இருப்பார். இந்த நிலையில் படிப்பதற்காக வேலை செய்யவே வேண்டும் என்பது பலருக்கும் ஒரு தவிர்க்க முடியாத யதார்த்தமாகி விட்டது.

ஏன் வயது குறைந்த இளைஞர்களே கூடுதலான அளவில் விபத்துக்குள்ளாகிறார்கள் என்பதற்கு பல காரணங்கள் உண்டு. அதிலும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் ஆண்களே மிகவும் கூடிய அளவில் பாதிக்கப்படுகிறார்கள். படிக்கும் இளவயதினர் அதிகமானோர் தற்காலிக, பகுதி நேர வேலைகளுக்கே போக வேண்டியுள்ளது. நிரந்தரமான முழு நேர வேலைக்குப் போவது என்பது முடியாத காரியம்.

உணவுச்சாலைகள், தொழிற்சாலைகள், கடைகள் ஆகியவற்றில் தான் பலரும் வேலை செய்கின்றனர். அதிக ஆபத்து விளைவிக்கக் கூடிய விபத்துகள் தொழிற்சாலை, Assembly Line, ஆகியவற்றிலேயே நடக்கின்றன. எப்படியாவது ஏதாவது ஒரு வேலைக்கு போயாகவே வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினால் பலர் தமது வேலைத் தலத்தில் சரியான முறையில் தொழிலாளர்களின் நலன் பாதுகாப்பு போன்றவை கவனிக்கப்படுகிறதா இல்லையா என்பது பற்றி அவ்வளவாக பொருட்படுத்துவது இல்லை. வேலை கொள்வோரும் இது பற்றி ஏனோ தானோ என்ற உதாசீனத்தோடு இருந்து விடுகிறார்கள். வேலையை வாங்குவது, லாபம் தேடுவது என்பது மட்டுமே அவர்கள் குறிக்கோளாக இருந்து விடுகிறது. பல வேலைத்தலங்களில் சாதாரண பாதுகாப்பு முறைகளான கை உறை பாவித்தல் (Safety hand gloves) சுவாசத்திரை (Mask) பாதுகாப்பு சப்பாத்துக்கள் (Safety shoes) தலைக்கவசம் (Helmet) ஆகியவை கூட அலட்சியப்படுத்தப்படுகின்றன. Work place hazardous materials என்று சொல்லப்படும் பல இரசாயன பொருட்கள், சுத்திகரிப்பு பொருட்கள் (Cleaning Materials, Bleach) போன்றவைகள் எமது தோலுக்கும், உடலுக்கும் ஊறு விளைவிக்கக் கூடியன. இவற்றை பாதுகாப்பான முறையில் கையாளாவிட்டால் அவற்றின் நச்சுத்தன்மை எமது உடலுக்கு கேடு விளைவிக்கும்.

மாணவர்கள் ஒன்றிலிருந்து இன்னுமொரு வேலைக்கு அடிக்கடி மாறிக் கொள்ளும் நிலைமை உள்ளதால், ஒரு குறிப்பிட்ட வேலையில் சில மாதங்கள் நிரந்தரமாகவிருந்து அதிலுள்ள வேலை நுணுக்கங்கள் பற்றியும் மற்றும் எப்படி பாதுகாப்பாக வேலை செய்வது போன்ற முக்கிய விடயங்களையும் கற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் மற்றைய நிரந்தர வேலையாட்களை விட அரிதாகவே கிடைக்கின்றது. இது ஒரு ஆபத்துக் காரணி. பல விபத்துக்கள் ஒரு வேலைக்குச் சேர்ந்த முதல் மாதத்திற்குள்ளேயே நடக்கின்றன என்ற புள்ளி விபரங்கள் இதை எடுத்துக் காட்டுகின்றன. இங்கு இன்னுமொரு விடயத்தையும் சொல்ல வேண்டும். எது எப்படி இருப்பினும் கனடாவைப் பொறுத்த மட்டில் எமது ஒன்ராறியோ மாகாணத்திலேயே தான் மற்ற மாகாணங்களை விட குறைந்த அளவு வேலைத்தல விபத்துக்கள் நடக்கின்றன

(எதிர்ப்பக்கம் வருக)

என்பது ஒரு ஆறுதல் தரும் தகவல். விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட கைத்தொழிற் பேட்டைகள், தொழிற்சாலைகள் நிரம்பிய சக்கச்சுவான் (Saskatchewan) மாகாணத்திலேயே அதிகக் கூடுதலான விபத்துகள் நடக்கின்றன.

எமது இளம் பிள்ளைகள் Summer Job அல்லது வேறு தற்காலிக வேலை வாய்ப்புகள் கிடைக்குமிடத்து அவ்வேலைத் தலங்களில் தொழில் புரிபவர்களின் நலன்-பாதுகாப்பு என்பன பற்றி வேலை கொள்பவர்களுக்கு போதிய அறிவு இருக்கின்றதா என்பதையும், எந்த அளவுக்கு இந்த நலன்-பாதுகாப்பு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பது பற்றியும் அறிந்து கொள்ளுதல் நல்லது. இது பற்றிய சந்தேகங்கள் இருப்பின் ஒன்ராறியோ மாகாண தொழிற்துறை அமைச்சு அல்லது வேலைத்தல பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபை (Workplace safety and insurance board) ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கமைய இந்த வேலை வழங்கும் ஸ்தாபனங்கள் அங்கு தொழில் புரிபவர்களின் நலன்-பாதுகாப்பு ஆகியவற்றை கவனிக்கிறார்களா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எந்த இடத்தில் வேலை பார்த்தாலும் எமது பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுடன் நாம் இருக்க வேண்டும். எமது தொழில் சம்பந்தமான உரிமைகளை நாம் வாதாடிப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றலை நாம் எம்மில் வளர்த்துக் கொள்ள வேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம். எமது நலனை-பாதுகாப்பை அடைவு வைத்து செய்யும் தொழில் ஆபத்தை கொண்டு வரும். எப்படி வேலை செய்வது அவசியமோ, அதே போன்று பாதுகாப்பான முறையில் ஆபத்தற்ற விதத்தில் வேலை செய்வதும் மிக மிக அவசியம். Prevention if better than cure என்பது இந்த விடயத்துக்கும் பொருந்தும். மேலே கூறப்பட்ட விடயங்கள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு

http://job-one.ccohs.ca
www.youngworker.ca
www.worksmartontario.gov.on.ca



கனடாவில் கால்சட்டை வாங்குவது

அ. முத்துலிங்கம்

சமீபத்தில் ஒரு தகவலைப் படித்தேன். காலம் கடந்து போய் இந்த தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ப.ஜீவானந்தம் பற்றியது. இந்த பெரியவரிடம் காக்கி கலரில் நாலு கட்டை கால்சட்டைகள் இருக்குமாம். இதையே அவர் மாறி மாறி அணிவார். பயணத்துக்கு வசதியானது. பெட்டி நிறைய உடுப்புகள் அடுக்கத் தேவையில்லை. ரயிலிலோ, பஸ்ஸிலோ தொற்றி ஏறி விடலாம். முதல் நாள் இரவு தோய்த்தால் அடுத்த நாள் காலை காய்ந்து விடும். பெட்டி போடும் அவசியமே இல்லை. மிகவும் சௌகரியமான இந்த ஏற்பாடுகளை வாழ்நாள் முழுக்க அவர் கடைப்பிடித்தார்.

ஆனால் அவருடைய சீடர்கள் இந்த அருமையான வழியைப் பின்பற்றவில்லை. எனக்கும் முன்பே தெரியாது. தெரிந்திருந்தால் இந்த உத்தியை பின்பற்றி பெரும் பணச் செலவையும், நேரச் செலவையும், உடல் செலவையும் என்னால் தவிர்த்திருக்க முடியும்.

கடைகளில் அலைந்து கால் சட்டை வாங்கும் தண்டனை எனக்கு சிறுவயதில் ஏற்பட்டது கிடையாது. எனக்கு மேலே நாலு அண்ணன்மார்கள். மூத்தவர் போட்டது அவருக்கு அளவு குறைந்ததும் இளையவருக்குக் கிடைக்கும். அவருக்கும் இறுக்கத் தொடங்கியவுடன் அடுத்தவருக்கு வரும். இப்படியாக படிப்படியாக இறங்கி என்னிடம் வந்து சேரும். அப்பவும் அது உறுதியாகவும், பொக்கட்டுகளில் ஓட்டை விழாமலும், இடுப்பு சைஸ் கொஞ்சம் பெரிசாகவும் இருக்கும். இடது கையாலோ வலது கையாலோ சட்டை கீழே விழாமல் இழுத்து பாதுகாத்தபடி நான் என் வேலைகளை செய்யப் பழகியிருந்தேன்.

அந்த நாட்களில், தீபாவளி சமீபிக்கும் போது இனிமேல் இல்லையென்ற ஒரு ஏழை தையல்காரன் எங்கள் வீட்டுக்கு கால்சட்டை அளவெடுக்க வருவான். நாங்கள் ஏழு பேர் வரிசையாக அளவு கொடுக்க நிற்போம். வாழ்நாளில் ஒருமுறை சரியான அளவில், நாரியில் இறுக்கிப் பிடித்து தானாகவே நிற்கும் கால்சட்டை போடலாம் என்பது ஆசை. ஆனால் ஐயாவுக்கு நாங்கள் மனதிலே நினைப்பது எப்படியோ தெரிந்துவிடும். டெய்லரிடம் 'ஒரு இரண்டு இன்ச் விட்டுத் தையப்பா. இவங்க காலம்பற ஒரு சைஸ், இரவு ஒரு சைஸ்' என்று சொல்லி விடுவார். அதாவது நாங்கள் அவ்வளவு வேகமாக வளர்கிறோமாம். எப்படியோ பெருத்து டெய்லர் உத்தேசித்த சைஸை பிடித்து விடுவோம் என்பதில் ஐயாவுக்கு நம்பிக்கை.

தீபாவளிக்கு முதல் நாள் இரவு என்னுடைய இருதயம் வெளியே வரத் துடிப்பது போல வேகமாக அடிக்கும். அன்று தையல்காரன் தைத்த உடுப்புகளைக் கொண்டு வரும் தினம். இவன் தொழில்நுட்பத்தின் உச்சத்தைத் தொட்டு விட்டவன் என்று சொல்ல முடியாது. இவன் எடுத்து வரும் கால்சட்டையைக் கூட நாங்கள் கட்டி முடிந்து தான் போடுவோம். கடைசி வரை அதன் பருமனையோ, நீளத்தையோ எங்களால் நிரப்ப முடியாது. அந்த சைஸை குறி வைத்து நாங்கள் பெருக்கு முன்பாக கால்சட்டை கிழிந்து போய்விடும். இப்படி கால்சட்டை அளவுகள் நெடுங்காலமாக எனக்கு பெரும் பிரச்சனையாகவே இருந்திருக்கின்றன.

கனடா வந்த போது இவை தீர்ந்து விடும் என்று நம்பினேன். மாறாக இன்னும் பெரிதான பிரச்சனைகள் கிளம்பின. பலர் எனக்கு தந்த எச்சரிக்கைகளில் முதன்மையானது பால் சாப்பிடு முன் கவனமாக இருக்க வேண்டும் என்பது. எங்கள் ஊர் மாடுகளில் கறக்கும் பால் தண்ணீராக இருக்கும். (மறுபக்கம் வருக)

பால்காரன் வேறு எங்கள் ஆரோக்கியத்தை உத்தேசித்து பாலை இன்னும் மெல்லிசாக ஆக்கி விடுவான்.

இங்கு கறவை மாடுகள் கட்டிப் பாலையே உற்பத்தி செய்யும். கொழுப்பு தளும்பும். இந்தப் பால் உடம்பில் சேர்ந்ததும் உங்கள் சிங்கார நாரி அளவு சீமைக்கிளுவை போல கொழுத்து விடும். அதனால் மாற்றி மாற்றி கால்சட்டை வாங்குவதற்காக கடைகளுக்கு செல்ல நேரிடும்.

கனடாவின் கடைகளில் உங்களுக்கு நீண்ட கால்சட்டை வாங்க வேண்டுமென்றால் அதற்கு தனியாக அரைநாள் ஒதுக்க வேண்டும். காரணம் ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி கால்சட்டைகளைப் போட்டு அளவு பார்க்க வேண்டும். அது பெரிய நேரத்தை வீணாக்கும் வேலை.

நாரி சைஸ் பொருந்தினால் கால் நீளம் சரி வராது. கால் நீளம் சரி என்றால் நாரி சைஸ் சரி வராது. கனடியர்களையே மனதில் வைத்து இவை உருவாக்கப்படுவதால் உங்கள் உடம்பு அளவுகள் வேகமாக அகப்படுவதில்லை.

அபூர்வமாக இரண்டு சைசும் அமைந்தால், கால்சட்டையின் நிறம் ஒத்துக் கொள்ளாது. அல்லது ஸ்டைல் சரியாக இருக்காது. முழங்காலில், கணுக்காலில், பின்னுக்கு, பக்கத்தில் என்று ஒன்பது பக்கெட்டுகள் வைத்த கால்சட்டையாக இருக்கும். ஒன்பது பக்கெட்டுகளுக்கும் சாமான்கள் சேகரித்த பின்னரே அப்படியான ஒரு கால்சட்டையை நீங்கள் தேடலாம்.

இதில் இன்னொரு சங்கடமும் இருக்கிறது. கால்சட்டை இடுப்பு அளவு ஒற்றைப்படையாக இருக்காது. உங்கள் இடை அளவு 31 அங்குலமாகவோ, 33 அங்குலமாகவோ இருந்தால் நீங்கள் துரதிர்ஷ்டசாலி. உங்கள் நாரியளவு இரட்டைப் படையாக கூட வேண்டும் என்று கனடிய அரசாங்கம் எதிர்பார்க்கிறது. 30 இன்ச், 32 இன்ச், 34 இன்ச் அப்படி நீங்கள் வளர வேண்டும் என்பது சட்டம். இது எப்படி கனடியர்களுக்கு மட்டும் சாத்தியமாகிறதோ எனக்குத் தெரியாது.

இந்த நிலைவரத்தில் என்னுடைய சைஸ் 33 1/2. அதாவது 33 சைசுக்கே நான் இந்தப்பாடு பட வேண்டியிருக்கிறது. இந்தக் கோலத்தில் இன்னும் அரை அங்குலத்துக்கு எங்கே போவது. அது எப்படி அனைத்து கனடியர்களும் தங்கள் நாரிகளை இரண்டு இரண்டு இன்சுகளாக வளர்க்கிறார்கள். இந்த மர்மத்தை நான் எப்படியும் விடுவிக்க வேண்டும்.

இரண்டு பக்கத்திலும் நிறைய கடைகள் இருந்தன. சில கடைகள் ஆண்களுக்கு மட்டுமேயானவை. நல்ல ஒரு கடவுளுக்கு வாகனமாகும் தகுதி படைத்த மூஸ் என்னும் பெரு விலங்கு கடை வாசலில் நிறுத்தப்பட்டிருந்தது. அங்கு ஆடைகளை விற்பதற்கு முறையாக சிங்காரம் செய்த, தங்கள் பெயர்களை மார்பிலே அணிந்த, இளம் பெண்கள் ஆர்வமாக இருந்தனர். உலகத்தில் உள்ள அத்தனை கலர்களிலும், அத்தனை டிசைன்களிலும், அத்தனை நீளங்களிலும், அகலங்களிலும், பளபளக்கும் கால்சட்டைகள் தங்கள் தங்களுக்கு விதித்த கொழுவிகளில் தொங்கியபடி காத்துக் கிடந்தன. அவற்றில் ஒன்று கூட என் இடைக்கோ, உயரத்துக்கோ, ரசனைக்கோ ஏற்றமாதிரி அகப்படவில்லை.

அந்த விற்பனைப் பெண்ணை எனக்குப் பிடித்துக் கொண்டது. கறுப்பு மஞ்சள் சீருடை அணிந்திருந்தாள். அநாதி காலம் தொட்டு உலகத்து கணிதவியலாளர்கள் வட்டத்தில் சதுரம் செய்யவோ, சதுரத்தில் வட்டம் செய்யவோ முயன்று கொண்டிருக்கிறார்கள். இந்தப் பெண் அதை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு தன்னுடைய வட்டமான முகத்திலே பல சதுரங்களை அடக்கி வைத்திருந்தாள். சதுரமான நெற்றி, சதுரமான தாடை, சதுரமான கன்னங்கள், மூச்சு காற்று தொடும் நெருக்கத்தில், ஏதோ கூச்சப்பட வைக்கும் விவகாரத்துக்கு அழைப்பது போன்ற குரலில் "உங்களுக்கு நான் உதவி செய்யலாமா?" என்றாள். இவள் ஒரு கிழக்கு ஐரோப்பிய நாட்டில் இருந்து வந்தவளாக இருக்கலாம். வாரத்துக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம் வாங்கும் தேநீர் ருசிப்பாளர் போல வார்த்தைகளை நாக்கிலே வைத்து உருட்டி அனுப்பினாள். அங்கே அடுக்கியிருந்த அத்தனை கால்சட்டைகளையும் ஒன்று மாறி ஒன்று எடுத்து எனக்கு முன்னால் விரித்துப் போட்டபடியே இருந்தாள்.

வாசனைத் திரவியம் விற்கும் பகுதியில் இவள் இதற்கு முன் வேலை செய்தவளாக இருக்க வேண்டும். என்னை நோக்கி வர முன்னரும், வந்த பின்னரும், என்னைக் கடந்து போன பிறகும் ஓர் அபூர்வமான, இதற்கு முன் அனுபவித்திராத நறுமணம் அங்கே நிறைந்தது. இவள் உண்டாக்கிய அந்த நறுமணக் கூடாரத்தினுள் நானும் இவளும் மட்டுமே இருந்தோம். இடது கையில் நாலு சட்டைகளும், வலது கையில் நாலு சட்டைகளும் ஏந்தியபடி ஒரு பறவை செட்டை விரித்து நடப்பது போல எனக்குப் பின்னால் வந்தாள். ஒரு பரிவாரம் பின்னே தொடரும் அரசனைப் போல நான் நடந்து சென்று உடுப்புகள் அளவு பார்க்கும் அறைக்குள் நுழைந்து கொண்டேன். அங்கே ஏற்கனவே நிலத்தில் குவிந்து போய் இருந்த ஆடைகளை அகற்றி அந்த இடத்தில் என்னை நிற்க வைத்தாள். பிறகு கதவை சாத்திக்கொண்டு போனாள். கால்சட்டையை ஒவ்வொன்றாக மாட்டிப் பார்த்தேன். ஒன்றுமே சரிவரவில்லை. 33 1/2 இடுப்புக்கு கனடாவில் உடுப்பு செய்ய மாட்டார்கள்.

இரண்டு கிழமையாக அந்தப் பெண்ணுடைய முகம் என்னை என்னவோ செய்தது. ஒரு மணித்தியால உழைப்பு வீணாகப் போனதில் அவளுக்கு பெரிய வருத்தம். முகம் சுருங்கிப் போனது. இப்பொழுது என்னுடைய நாரி இன்னும் கொஞ்சம் பெருத்துவிட்டது. கட்டாயம் 34 இன்ச் இருக்கும். இனி பிரச்சனையே கிடையாது. மறுபடியும் ஒரு முயற்சி செய்யலாம் என்று முடிவு செய்தேன்.

நான் திரும்பவும் மூஸ் காவல் நின்ற கடைக்குப் போனபோது கால்சட்டையை எப்படியும் வாங்கி விட வேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்தேன். அந்தப் பெண் அதே இடத்தில் அமர்ந்திருந்தாள். என்னைக் கண்டதும் எழும்பி வந்தாள். கறுப்பு மஞ்சள் சீருடை. ஆனால் முகத்தைப் பார்த்ததும் அவள் வேறு பெண் என்பது தெரிந்தது. அவள் நடையின் அங்க அசைவுகளும் வித்தியாசமாக இருந்தன. அவளைச் சுற்றி ஒரு நறுமணக் கூடாரம் உண்டாகவில்லை. அவள் வார்த்தைகளை நாவிலே வைத்து ருசி பார்த்து உருட்டவும் இல்லை. தங்க நிறம் பூசிய அதரங்களை அசைத்து "உங்களுக்கு நான் உதவி செய்யலாமா?" என்றாள். அந்த வார்த்தைகள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தன.

ஆளுமை வகைகள்
Personality types



லலிதா புரூடி

வெற்றிகரமான இன்ப வாழ்விற்கு எமது சூழலில் ஆரோக்கியமான உறவுகள் அமைவது அத்தியாவசியம். முதன் முதலாக எமைச் சிருஷ்டித்த பேரருட் சக்தியான இறைவனுடன் நாம் பக்திபூர்வமான நல்லதோர் உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக எம்பார்வையை எமக்குள்ளே திருப்பி, எம்முடனேயே நாம் சுமுகமானதோர் உறவை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நாமே நம்மை விரும்பி மதித்து நேசித்திட சிறுவயது முதல் நாம் மனித மேம்பாடுகளாகிய சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை, சேவை என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய தார்மீக வாழ்வு எமது தாழ்வு மனப்பான்மையை விரட்டி, எமது சுயமதிப்பை உயர்த்தி, எமது சுயநம்பிக்கையையும் ஆளுமை வளர்ச்சியையும் போஷித்துக் கட்டியெழுப்பும்.

நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். ஒருவருக்கு ஒருவர் வித்தியாசமானவர்கள். எமது குடும்பத்துடன் இணையும் ஒருவரை எம் விருப்பத்துக்கிணைய நாம் மாற்ற முயலும் போது தான் உறவு விரிசல்கள் ஏற்பட்டு பிரச்சனைகள் உருவாகின்றன. ஒவ்வொருவரின் ஆளுமை வித்தியாசங்களைப் புரிந்து, அவர்களை உள்ளபடியே ஏற்றுக் கொள்ள நாம் பழகினோமானால் பல உறவுப் பிரச்சனைகளை வருமுன் தடுத்து நிறுத்தலாம். பண்டைய SUFI கோட்பாடுகளைப் பின்பற்றி Don Richard Risso எனும் மதகுரு எழுதிய Understanding the Enneagram எனும் நூல், மக்களின் ஆளுமை வகைகளை எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இந்த எட்டுப் பிரிவுகளையும் துல்லியமாக வர்ணிக்கும் கோட்பாடுகள் பிரமிக்க வைக்கின்றன. ஏனெனில் வினாக்களுக்கு நாம் அளிக்கும் பதில்கள் மூலம் அந்த எட்டுப் பிரிவுகளில், நாம் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். எமது குறை நிறைகளை இவ்விதம் கண்டறிந்து நாமே நமது ஆளுமையின் குறைகளைத் திருத்தி நிவர்த்தி செய்யலாம். இப்போ Understanding the Enneagram என்பதைப் பற்றி அமெரிக்கர் பலர் பல நூல்களை எழுதியுள்ளனர். ஆகவே நூல் நிலையத்திலிருந்து Enneagram பற்றிய ஏதாவதொரு நல்ல புத்தகத்தை நீங்கள் எடுத்து வாசிப்பதால் உங்கள் ஆளுமை நிச்சயம் வளர்ச்சியடையும்.

மனோதத்துவ நிபுணர் Isabel Briggs Myers எழுதிய Personality Types எனும் நூலில் ஆளுமையை நான்கு ஜோடிகளாகப் பிரித்திருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் இந்த எட்டு பிரிவுகளுள் ஏதோ ஒன்றில் நிச்சயம் அடங்குவோம். எம் பிரிவை நாம் அடையாளம் கண்டதும் எமது உறவின் பிரிவை நாம் உணர்ந்து எதற்காக அவர் எம்மிலிருந்து வித்தியாசமாகச் செயற்படுகின்றார் என்பதையும் புரிந்து கொள்வோம். இப் புரிந்துணர்வு உருவாக்கும் விழிப்புணர்வு, எம் வித்தியாசங்களை நாம் ஏற்று சுமுகமாக வாழ நிச்சயம் வழி வகுக்கும். தம்பதிகள் ஒருவரை ஒருவர் தம் விருப்பத்திற்கிணங்க மாற்ற முயன்று தோல்வியடைந்து 911 அடித்துப் பிரச்சனைப்படுவது உளவளத்துணை நல்கும் எனக்கு நன்கு தெரிந்த விஷயம். காதலித்துத் திருமணம் செய்து மூன்று, நான்கு பிள்ளைகள் பெற்ற பின்பும் ஒருவரை ஒருவர் மாற்றத் தான் முயற்சித்துக் கஷ்டப்படுகிறார்கள் என்பது துக்ககரமான உண்மை.

நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் போது அன்பு வடிவங்களாகத் தான் பிறக்கின்றோம். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை காரணங்களால் எமது அன்பு வடிவத்தை மறந்து, கோபம், பொறாமை, சந்தேகம், அகங்காரம் போன்ற எதிர்மறை உணர்வுகள் நிறைந்தவராக மாறுகிறோம். வாழ்வில் அன்பைத் தான் நாம் தேடி அலைகிறோம். ஆனால் எமது தாரத்துள் மறைந்திருக்கும் அன்பை அடையாளம் காண்பதில்லை. எமது தாரத்தின் வித்தியாசத்தை உணர்ந்து அவளை உள்ளபடியே ஏற்று அன்புடன் நடத்தினால் அவர் தானாகவே மாறுவார். எம்மால் மற்றவரை மாற்ற ஒரு போதும் முடியாது என்பதை உணர்ந்து ஆளுமை வித்தியாசங்களைச் சற்றுக் கவனிப்போம்.

1. Extroverts - Introverts
   புறமுகிகள் - அகமுகிகள்
2. Thinkers - Feelers
   சிந்தனையாளர் - உணர்பவர்கள்
3. Sensing - Intuitive
   நுகர்தல் - உள்ளுணர்வால் உணர்பவர்கள்
4. Judging - Perceptive
   எடைபோடுதல் - புலப்பாடு - அறியும் சக்தி

இவ்வாறு ஆளுமை எட்டுவகைப் பட்டது என இவர் கூறுகின்றார்.

1. Extroverts எனும் புறமுகிகள் சதா செயற்பட விரும்புவார்கள். மற்றவர்களுடன் சுலபமாகச் சேர்ந்து நன்கு பேசிச் செயற்படுவதில் மிகவும் விருப்பமுடையவர்கள். கொஞ்சங் கூட யோசிக்காது அவசரப்பட்டு இவர்கள் சீக்கிரம் செயலில் இறங்கி விடுவர். மற்றவர்கள் எவ்வாறு வெவ்வேறு விஷயங்களை எப்படி எப்படிச் செய்கின்றார்கள் என்பதை அவதானித்து, தாமும் அவ்வாறு செயற்பட விரும்புவார்கள். தம் தலைவர்கள் எதை எதை விரும்புகின்றார்கள் என்பதை அறிந்து அதைப் பின்பற்றிச் செயற்பட விரும்புவார்கள்.

(மறுபக்கம் வருக)

2. Introverts எனும் அகமுகிகள் எந்த விஷயத்தையும் நன்கு நேரமெடுத்து யோசித்த பின் தான் செயற்பட ஆரம்பிப்பார்கள். எதையும் பேசுவதற்கு முன் கூட யோசித்த பின் தான் கதைப்பார்கள். எதையும் முதலில் அமைதியாகக் கிரகித்து பரபரப்பின்றி தனிமையாக, அல்லது ஒரு சிலருடன் மட்டும் சேர்ந்து செயற்படுவதைத் தான் விரும்புவார்கள். இவர்களுக்கு கூட்டங்கள் பிடிக்காது.

3. Thinkers எனும் சிந்தனையாளர் எந்த விஷயத்தையும் பற்றி நன்கு சிந்தித்த பின்னரே முடிவெடுக்க விரும்புவர். நீதி நியாயம் நிறைந்த முறையில் தம்மை மற்றவர் நடத்துவதை எதிர்பார்ப்பர். மற்றவர்களின் உணர்வுகளை தாம் தாக்குவதை அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை. மற்றவர்களைத் தாம் புண்படுத்துவதை அவர்கள் உணர்வதில்லை. மற்றவர்கள் எண்ணங்கள், அபிப்பிராயங்களுக்கு இவர்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை. மற்றவர்களின் உணர்ச்சிகளை மதிப்பதில்லை.

4. Feelers எனும் உணர்பவர்கள். இவர்கள் தாம் உயர்வாகக் கருதி மதிக்கும் கோட்பாடுகளிற்கு ஏற்ற மாதிரியே எந்த முடிவையும் எடுப்பார்கள். தமது முடிவுகள் சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தவையோ, தகாதவையோ என்பதைக் கவனிக்காது, தமது நம்பிக்கையின்படியே செயற்படுவார்கள். மற்றவர்களின் புகழ்ச்சியில் விருப்பமுள்ள இவர்கள் மற்றவர்களைத் திருப்திப் படுத்துவதில் நாட்டமுள்ளவர்கள். மற்றவர் திருப்தியில் இன்பம் காண்பவர்கள். மற்றவர்கள் உணர்வுகளை மதிப்பவர்கள். மற்றவர் இடத்திலிருந்து ஒரு சம்பவத்தைப் பார்வையிடும் வல்லமை கொண்டவர்கள். இசையில் விருப்பமுள்ள இவர்கள் சண்டை சச்சரவில் நாட்டமில்லாதவர்கள். மற்றவர்களின் உணர்வுகளை விளங்கிக் கொள்பவர்கள். சமாதான விரும்பிகள்.

5. Sensing எனும் நுகர்தல். இவர்கள் மற்றவர்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளில் கூடிய கவனம் செலுத்துவார்கள். தமது ஐம்புலன்களையும் நன்கு உபயோகித்து என்ன நடக்கின்றது என்பதைச் சரிவர அறிந்து கொள்வார்கள். சாதாரணமாகத் தீர்க்க முடியாத புதிய பிரச்சனைகளை அணுக விரும்ப மாட்டார்கள். புதிதான பிரச்சனைத் தீர்வு முறைகளைப் படிக்காது, தமக்குத் தெரிந்த யுக்தி முறைகளைக் கையாள்வதில் விருப்பமுள்ளவர்கள். சிறு விஷயங்களில் அமைதியான அவதானம், ஆனால் பிரச்சனை வரும் போது பொறுமையிழந்து கோபித்துக் கத்துவார்கள்.

6. Intuitive எனும் உள்ளுணர்வால் உணர்பவர்கள். கற்பனாசக்தி மிக்க இவர்கள், எதற்கும் மறைமுக அர்த்தங்களைத் தேடுவர். நன்கு யோசித்து பிரச்சனைத் தீர்வுகளைப் புதிய புதிய முறைகளில் கையாள விரும்புவர். சூழலில் எழும் புதிய பிரச்சனைகளைத் தீர்க்க விரும்புவர். திரும்பத் திரும்ப ஒன்றையே செய்வது விருப்பமில்லை. பற்பல புதிய திறன்களைக் கற்றிட ஆர்வம். ஆனால் ஒன்றையாவது பூரணமாகக் கற்று உபயோகிக்காது சில்லறை விஷயங்களில் பொறுமையுடன் ஈடுபட மாட்டார்கள். கஷ்டமான பிரச்சனைகளில் குறுக்கிட்டுத் தீர்வு காண ஆசை.

7. Judging எனும் எடை போடுதல். எதையும் திட்டமிட்டுச் செயற்பட விருப்பம். எதையும் முதலில் தீர்மானித்து முடிவெடுத்திட எண்ணுவர். திடீரென்று தலைதூக்கும் பிரச்சனைகளைச் சமாளிக்க கஷ்டப்படுவர். ஆரம்பிக்கும் முன் மனதில் முடிவெடுத்துக் கொண்டு, வெகு சீக்கிரம் தமது முடிவைச் சொல்வர்.


8. Perceptive எனும் ஞானப் புலப்பாடு/அறியும் சக்தி. தமது மனதில் இவர்கள் உறுதியான தீர்மானமெடுக்கக் கூடியவர்கள். சந்தர்ப்பத்திற்கேற்ப வளைந்து கொடுக்கக் கூடியவர்கள். உறுதியான திட்டத்துடன் சடுதியாகத் தலை தூக்கும் பிரச்சனைகளைச் சுலபமாகத் தீர்க்கும் வல்லமையுள்ளவர்கள். பிரச்சனையின் சகல பக்கங்களையும் சீர்தூக்கி அலசித் தீர்ப்பவர்கள்.

அன்பானவர்களே! ஆகவே எமது ஆளுமை குறைந்தது எட்டு வித்தியாசமான பிரிவுகள் கொண்டது என்பதை உணர்ந்து எம் சூழலிலுள்ள உறவுகளை, அவர்களை மாற்ற முயலாது, உள்ளபடியே ஏற்று அன்புடன் நடத்தினால், அவர்கள் தாமாகவே எம் விருப்பத்திற்கிணங்க மாறுவார்கள். அத்தகைய சக்தி வாய்ந்த அன்பை சரியான முறையில் உபயோகித்தால், பிரமிக்கத்தக்க நற்பயன்கள் உருவாகும். எம்மால் மற்றவர்களை ஒருபோதும் மாற்ற முடியாது. எம் ஒருவரைத் தான் எம்மால் மாற்ற முடியும். சுய அலசலினால் குற்றங்குறைகளை உணர்ந்து நாம் எம்மை மாற்றிக் கொள்ள உதவக் கூடிய பல மனோதத்துவ நூல்கள் உள்ளன. அவற்றை வாசித்து நாம் நற்பயனடையலாம்.

எமது எண்ணம், பேச்சு, செயற்பாடு மூன்றும் தான் எமது வாழ்க்கையின் நிகழ்வுகளை நிர்ணயிக்கின்றன. எம் வாழ்க்கையின் இன்பமோ, துன்பமோ, வெற்றியோ, தோல்வியோ எம்மில் தான் தங்கியுள்ளன. ஆனால் இந்த உண்மையை வழக்கமாக நாங்கள், ஏன் எங்களில் ஒருவர் கூட, ஒருபோதும் ஒப்புக் கொள்வதுமில்லை, நம்புவதுமில்லை. மற்றவர் அப்படிச் செய்ததால் தான், நான் இப்படிச் செய்தேன், தாயகத்தைத் துறந்து புலம்பெயர்ந்து இங்கு வந்ததால் தான் இந்த அவலம் எனக்கு வந்தது. அப்படி நடந்தபடியால் தான் எனக்கு இப்படி நேர்ந்தது. இவ்வாறு நாம் முற்று முழுதாக நம்பி, புறக்காரணிகளைக் குற்றம் சாட்டிக் கோபிப்பதால் தான் பல உறவு விரிசல்கள் ஆரம்பிக்கின்றன. சிறு சிறு பிணக்குகள் பூதாகரமாக மாறி உறவு முறிவுகள் ஏற்படுகின்றன.

பிரச்சனை இல்லாத வாழ்வு ஒருவருக்குமே அமைவதில்லை. இதை உணராது பலர் தம் வாழ்வை மற்றவர் வாழ்வுடன் ஒப்பிட்டு துக்கப்படுகின்றனர். எம் சூழலை ஏற்றுக் கொள்ளல் தான் இன்பத்துக்கு அத்திவாரம். இது தான் என் உருவம், என் உறவு, என் குடும்பம், என எம் சூழலை நாம் ஏற்றுக் கொண்டால் பிரச்சனை தலை தூக்காது. எம்மையும், எம் சூழலையும் ஏற்றுக் கொண்டு, எமது ஆரோக்கியமான நடுநிலை மனப்பான்மையும், எமது ஊக்கம் நிறைந்த விடா முயற்சியும், சூழலில் எமக்கமையும் இனிய உறவுகளும் தான் எமது வாழ்வின் வெற்றியையும் இன்பத்தையும் நிர்ணயிக்கின்றன என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

பண்டைத் தமிழரின் வானியல் அறிவு



அ.பொ. செல்லையா

வானியல் அறிவு மேலை நாட்டாருக்குச் சொந்தமானது எனச் சொல்லிக் கொள்வாரும், சோதிடவியல் அறிவு ஆரியரின் கண்டுபிடிப்பு எனப் பேசிக் கொள்வாரும் இன்னும் இருக்கின்றனர்.

காரணம், வானியலோடு சம்பந்தப்பட்ட சொற்கள் பல வடமொழி மயமாக்கப்பட்டும் வடமொழிச் சொற்களாகவும் உள்ளன. வீனஸ், மார்ஸ் என்ற ஆங்கிலச் சொற்களும் பயன்பாட்டில் உள்ளன.

வானியல் - சோதிடம் - சாத்திரம் என்றாகி, அவற்றில், பல கற்பனைக் கதைகளையும் உருவாக்கினர். வானியல் ரீதியான பல நிகழ்வுகள் தெய்வ நம்பிக்கையோடு இணைத்துத் தெய்வச் செயல்கள் ஆக்கப்பட்டன. சலுகைகள் பெறலாம் விமோசனம் அடையலாமெனப் பூசை முதலியன செய்யப்பட்டன. தோச (குற்றம்) நீக்கவென விரதங்கள் அனுட்டிக்கப்பட்டன.

எதிர்கால நடப்பு சொல்ல, திருமணப் பொருத்தம் பார்க்க, காதல் கைகூடுமா, தேர்வில் சித்தி கிடைக்குமா, வெளிநாட்டுப் பயணம் இருக்குமா என்றெல்லாம் வாழ்வியல் நடவடிக்கைகளுக்குக் கிரகபலன் சொல்லப்பட்டது.

இன்னும் கைரேகை, பல்லி சொற் பலன், எண் சாத்திரம் என வானவியலைத் தொடர்புபடுத்தி, எங்கும் எதிலும் எதற்குச் சோதிடம் பார்த்தல் வழமையாயிற்று. சோதிடம் வானவியலைத் தொடர்புபடுத்தியே சொல்லப்படுகிறது.

தமிழரின் கலைகள் பல ஆரியத்தால் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. அதில் வானவியலும் ஒன்று. திரிபுபடுத்தியதோடு அவற்றின் ஆதியும் ஆரியம் என்றே சொல்லிக் கீழ்நிலைப்படுத்தினர். அந்தளவுக்குத் தமிழரின் இனமான உணர்வு மழுங்கடிக்கப்பட்டிருந்தது.

மனித இனம் கண்டு போற்றிய அறிவுத் துறைகளில் வானியலும் ஒன்றாகும். பன்னெடுங் காலமாகத் தமிழர் வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். தமிழர் கண்டறிந்த உண்மைகள் பல உலகப் பேரறிஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. "தமிழருடைய வானநூற் கணித முறையே வழக்கிலுள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதானமானது" எனக் கூறியுள்ளனர்.

2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம் மற்றும் சங்க நூல்களில் வானியல் குறிப்புகள் உள்ளன. இவை திடீரெனக் கண்ட உண்மைகள் அல்ல.

பன்னெடுங்கால ஆய்வின் விளைவே அவை!

ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழர் வானியலில் முன்னேறி இருந்தனர். ஆரியர் வந்து 4000 ஆண்டுகள் ஆகின்றன.

பரதவர்கள் திங்களின் நிலையைக் கொண்டு சந்திரமானக் காலத்தைக் கணித்தனர். உழவர்கள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களின் இயக்கத்தையும் பருவங்களையும் அறிந்திருந்தனர்.

வியாழன் இராசி வட்டத்தினை ஐந்து முறை சுற்றி வருதலாகிய அறுபது ஆண்டுகள் கொண்ட ஆண்டுக் கணிப்புத் தமிழருடையது அதேபோல, 12 ஆண்டுகள் கொண்டதை மாமாங்கமாகக் கருதுவதும் தமிழருக்கே உரியது.

சமய விழாக்களின் காலமும் சூரியமான முறைக்கும் சந்திரமான முறைக்கும் இடையே ஏற்படும் கால வேறுபாட்டை ஒட்டியே ஏற்பட்டது. இது, சந்திரமானக் கணிப்பின்படி கொண்டாடப்படும் ஆரியர் சார்புள்ள இந்துப் பண்டிகைகளிலிருந்து பெரிதும் வேறுபடும்.

தமிழர் சூரியனை அடிப்படையாகக் கொண்டும், ஆரியர் சந்திரனைக் கொண்டும் காலத்தைக் கணித்தனர். இப்பொழுது இரண்டும் கலந்து மயங்கிய நிலையில் தேவைக்கேற்றவாறு கணிப்புகள் இடம்பெறுகின்றன.

தமிழ்நாட்டில் வானியலிலும் அதன் அடிப்படையில் எழுந்த சோதிடத்திலும் வல்லவர்கள் அறிவர், கணியன், கணி என அழைக்கப்பட்டனர். கணியன் பூங்குன்றனார், கணி மேதாவியார் போன்றோர் புலவர்களாக விளங்கியுள்ளனர்.

அறிவர், கணக்கர் பற்றிய சான்றுகளைத் தொல்காப்பியம், சிலப்பதிகாரத்தில் காணலாம். "மூவகைக் காலமும் நெறியினாற்றும் அறிவர்" எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

ஓராண்டினைத் தமிழர் ஆறு பெரும் பொழுதுகளாகப் பகுத்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும்.

ஆண்டு ஆவணியில் தொடங்கி ஆடியில் முடிந்ததாகத் தமிழர் அன்று கொண்டிருந்தனர் என்கிறார் நச்சினார்க்கினியர், சிங்கவோரையாகிய ஆவணி முதலாகக் கொண்டு கணக்கிடும் முறை கி.மு. 500 க்கு முற்பட்டது என்றும், சித்திரை முதலாகக் கொண்டு கணக்கிட்டது 2500 ஆண்டுகளாகத் தான் இருந்து வருகிறது என அறிஞர் கா.சுப்பிரமணிய பிள்ளை குறிப்பிடுகிறார்.

(மறுபக்கம் வருக)

தை முதல் நாளை ஆண்டுப் பிறப்பாகக் கொள்ளும் வழமையும் இருந்துள்ளது. தைப்பொங்கல் பற்றிய சிறப்பு உழவர் தினமாகப் பேசப்பட்டுள்ளது. சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கும் நாள் இதற்கு அடிப்படையாகிறது. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற கூற்றும் நோக்கற் பாலது.

சித்திரை முதல் நாள் இந்து சமயத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது. சூரியன் பூமத்திய ரேகையைத் தாண்டி வடக்கு நோக்கிச் செல்லத் தொடங்கும் நாள் புதுவருடமாகிறது. தீபாவளி நாளும் சில பகுதி இந்துக்களால் புதுவருடமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்துக்களாகத் தமிழர் மட்டும் இல்லை! இந்துக்கள் பல மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டுள்ளனர். இந்துக்கள் எல்லோரும் சித்திரை முதல் நாளைப் புது வருடமாகக் கொண்டாடுவதில்லை! மலையாள மக்கள் வேறு, தெலுங்கர் இன்னொன்று. ஹிந்தியர் வேறொன்று!. பௌத்தராகிய சிங்களவர் சித்திரை முதல் நாளைத் தமது ஆண்டுப் பிறப்பாகக் கொண்டனர். புத்தம் இந்துவின் ஒரு கூறு.

தை முதலுக்கும் சித்திரை முதலுக்கும் தொடர்பும் வேறுபாடும் இருக்கிறது. தை முதலில் தட்சணத்திலிருந்து வடக்கு நோக்கும் சூரியன், சித்திரை முதலில் பூமத்திய ரேகையைக் கடக்கிறது.

இப்பொழுது தை முதல் இனமானமாகவும், சித்திரை முதல் சமயப் பற்றாகவும் கொண்டாடப்படுகிறது. தை முதலே தமிழர் திருநாள் என்பர் அறிஞர்! எது எதுவானாலும் ஐரோப்பிய ஆட்சிப் பரம்பலின் விளைவால், உலக நிர்வாக ரீதியாக சனவரி முதல் நாள் சம்பிரதாய ரீதியான புத்தாண்டாகக் கொள்ளப்படலாயிற்று.

தை முதல் இனம், சித்திரை முதல் சமயம், சனவரி முதல் அரச நிர்வாகமெனத் தமிழரின் புத்தாண்டு அமைந்துள்ளது.

சங்க இலக்கியத்தில் எல்லா மாதங்களின் பெயர்களும் இடம்பெறவில்லை. எனினும் தை, மாசி, பங்குனி, கார்த்திகை என்பன பேசப்பட்டுள்ளன. எல்லா மாதங்களின் பெயர்களும் இ அல்லது ஐ-கார வீற்றுப் புணர்ச்சியில் முடியும் என்கிறார் தொல்காப்பியர்.

சூரியனைக் கொண்டு மாதங்கள் கணக்கிடும் முறை கி.பி. 7ம் நூற்றாண்டில் வராகமிகிரர் கொண்டு வந்தார். சந்திரனின் வளர்ச்சி தேய்வினை வைத்து மாதங்களைக் கணக்கிடும் முறை பழையது. அதனாற்றான் மாதத்தைத் தமிழர் திங்கள் என்றும் அழைத்தனர்.

ஆண்டினை ஆறு பருவங்களாகப் பகுத்தது போலத் தமிழர் ஒரு நாளையும் ஆறு சிறு பொழுதுகளாகப் பிரித்தனர். வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்பனவாகும். ஒரு நாளை அறுபது நாழிகைகளாகவும், ஒரு நாழிகையை 24 நிமிடங்களாகவும் கொண்டனர்.

தாமே ஒளி விடக் கூடியன நாண் மீன்கள் என்றும், ஞாயிற்றிடமிருந்து பெற்று ஒளித்தெறிப்பாக வருவது கோள் மீன்கள் என்றும் கூறினர்.

சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று ஒளிர்வன ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிழமைகளாகும். இராகுவும், கேதுவும் இராக் கோள்கள் அல்லது நிழற்கோள்கள் எனப்படும்.

தேய்பிறை வளர்பிறையானது சந்திரன் - சூரியன் - பூமி ஆகியன நிற்கும் நிலைகளால் ஏற்படுவதாகும்; பூமியும் ஒரு கோள் என்பதைத் தெரிந்திருந்தனர் தமிழர்.

நாள்மீன், கோள்மீன் பற்றிப் பல குறிப்புகள் உண்டு. ஆட்டுக் கிடாய்களும் சிவலைப் பறவைகளும் விண்ணில் விளையாடும் காட்சிகள் பற்றிய செய்திகள் பல உள்ளன.

ஒருவர் பிறக்கும் நாளில் விண்ணில் திங்கள் நின்ற இடத்தில் நிற்கும் மீனை நாள் மீன் எனப்பட்டது. ஒருவர் பிறந்த பொழுது ஆட்சி பெற்றிருந்த நாள்மீனின் அடிப்படையில் அவரவருக்குச் சில நிகழ்வுகள் - நன்மை தீமைகள் நடக்கலாம் என்பது சோதிடநூல் செய்திகளாகும்.

இவை பற்றிய பல செய்திகள் சங்க நூல்களில் உண்டெனினும், அவை இன்று விஞ்ஞான விளக்கம் வேண்டி நிற்கின்றன. எதிர்பார்த்த உளவியற் பாங்காக அவை விளங்குகின்றன.

சோதிடம் கணக்கியற் பாங்கானது. கணக்கியல் அடிப்படையில் சில நிகழ்வுகளை எதிர்பார்த்துக் கூறியிருக்கலாம்!

சனி கரிய நிறம், அதனால் கைம்மீன் என்றனர். செந்நிறம் ஆகையால் செவ்வாய், வெண்ணிறம் என்பதால் வெள்ளி என்றெல்லாம் துல்லியமாக இனங் கண்டனர்.

அனுடத்தின் வடிவமாகிய ஆறு நட்சத்திரங்களின் தொகுதி வளைந்த பனைமரம் போன்றிருந்ததால் முடப்பனை என்றனர்.

நட்சத்திரம் வீழின் என்ன நடக்கும், நட்சத்திரம் நகர்ந்தால் என்னென்ன நடக்கும் என்றெல்லாம் இனங் கண்டனர். இன்னின்ன காலத்தில் கடல் என்ன செய்யும், வானம் என்ன செய்யும் என்றெல்லாம் சொல்லினர்.

சூரியன் மற்றவற்றை ஈர்க்கும் ஆற்றல் உடையது. வானில் காற்றில்லா இடைவெளி உண்டு என்றெல்லாம் அறிந்திருந்தனர்.

அச்சுவினி, பரணி, கார்த்திகை போன்ற 27 நட்சத்திரங்களையும் மேடம், இடபம், மிதுனம் போன்ற இராசிகளையும் அவற்றின் வலிமைகளையும் அவற்றின் சிலவற்றின் கூட்டால் நடைபெறும் தீமைகளையும் அறிந்து சொல்லியுள்ளனர்.

ஆதலால், பண்டைத் தமிழரின் வானியல் வரலாறு பழைமை வாய்ந்தது. சிலேட்டர் போன்ற அறிஞர்கள் போற்றியுள்ளனர். அவற்றை அறிந்து நாமும் வானியல் அறிவில் முன்னேறுவோமாக! கிரகங்களுக்கும் போக முயற்சிப்போமாக!

அறுபதுகளின் எல்லை. அக்குவைனாஸ் பல்கலைக்கழகக் கல்லூரியில் விவசாயக்கல்வி பயிலும் காலம். வேற்றின மாணவர்களோடு கொண்டாடி மகிழ்ந்த கோலம் மறக்க முடியாதது. இனிய நண்பன் பெரேரா. றபர் எஸ்ரேற்றுக்கு அழைத்துச் சென்று சிக்கின் கறியுடன் சம்பா அரிசிச் சோறு தந்து உபசரித்ததை - அருமை நண்பன் அஸாம் மொஹமட் பொரளை வீட்டிற்கு கூட்டிச் சென்று பீவ் பொரியலுடன் புரியாணி பரிமாறியதை - பின்னர் அவர்களை இந்தோசிலோன் கஃபேக்கு நான் வரவழைத்து தோசை, வடை வாங்கிக் கொடுக்க அவர்கள் ஆசையுடன் பசியாறிய காட்சியைக் கண்டு ரசித்ததை..... நினைத்துப் பார்க்கிறேன்.

பொரளையில் உள்ளது அக்குவைனாஸ் பல்கலைக்கழகம். பணக்கார மாணவர்களின் பல்கலைக்கழகம் என பலரும் கூறுவார்கள். ஆங்கில மொழிப்படிப்பு. விவசாயப் பிரிவில் நான் மட்டுமே "ரமில் போய்"

மாலையில் வகுப்புகள் முடிந்ததும் முன் வீதியில் உள்ள பஸ் நிலையத்தில் காத்திருப்பேன் - கொள்ளுப்பிட்டி செல்லும் 175ம் இலக்க பஸ்ஸிற்காக.

இளம் கன்னியாஸ்திரி ஒருவரும் வந்து சேருவார் - அதே பஸ்ஸிற்காக. அவரும் அக்குவைனாஸ் தான். பாடநெறி வேறு. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். அடக்கமான புன்முறுவலோடு ஆரம்பிக்கும் எமது உரையாடல், கொள்ளுப்பிட்டி ரயில் நிலையம் சென்று பஸ் நிறுத்தப்படும் வரை தொடரும். சமுதாய நலன் குறித்த பல்வேறு விடயங்களை மனம் விட்டுப் பேசிக் கொள்வோம்.

"ஆங்கிலத்தில் சரளமாக உரையாட விரும்பினால் உன் மொழி தெரியாதோருடன் சேர்ந்து பேசிப் பழகுவதும் ஒரு நல்ல வழி" என யாரோ சொன்னது என் மனதில் பதிந்திருந்தது. கனடாவிலும் இந்தப் பழக்கம் தொடர்கிறது. இன்னும் இங்கிலீஸ் பேச வரவில்லை போல் தெரிகிறது என உங்களில் யாரோ கேட்பது புரிகிறது! இங்கு பல்லின மக்களுடன் நான் பேசிப் பார்ப்பது அவர்களின் பலதரப்பட்ட உச்சரிப்புகளை என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறதா என்று என்னையே நான் பரீட்சித்துப் பார்ப்பதற்காக!

கன்னியாஸ்திரி ஒருவருடன் கதைப்பதை பெருமையாக கருதியது அன்று என் மனம். நலிந்தோர் துயர் துடைப்பதில் கிறிஸ்தவ பாதிரிமார் முன்னின்று ஆற்றும் பணிகள் சிறுவயதிலேயே என்னைக் கவர்ந்திருந்தன. அப்போது அவர்களுடன் பேசுகின்ற பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கவில்லை. எனவே - இந்தக் கன்னியாஸ்திரி நான் பார்த்த எல்லாப் பாதிரிமாரினதும் ஏகப் பிரதிநிதியாக எனக்குத் தெரிந்தார். அவரின் முகத்தில் தவழ்ந்திட்ட அமைதி இன்றும் என் மனத்திரையில் வந்து மோதும். கிறிஸ்தவ பாதிரிமாருடன் மட்டுமல்ல - மாற்று இனத்தாருடன் மனம் விட்டுப் பழக வேண்டும் என்ற எனது ஆதங்கத்தை நீக்கும் களமாக அக்குவைனஸ் விளங்கத் தொடங்கியது.

நான் பிறந்த கிராமத்தில் கிடைக்காத பேறல்லவா அது. அங்கு "கமலா பிஸ்கற்" முதலாளி அப்புஹாமி இருந்தார். இருந்தும் என்ன பயன்? அழகு தமிழில் மட்டுமே அவர் பேசிக் கொள்வார்.

வைதீகமான சைவக் குடும்பத்தில் வந்தவன் நான். எனது கிராமத்தில் வெள்ளை ஒழுங்கைகளுக்குக் குறைவில்லை. அவற்றில் சிலவற்றினூடாக நடந்து கீரிமலை செல்லும் பிரதான பாதையை அண்மிக்கையில் ஒரு மாதா கோயிலைக் காணலாம். அரிகற்களால் எழுப்பப்பட்ட கட்டிடம். திரேசம்மா கோயில் எனப் பெயர். ஆனால் கல்வளையார் அதை "வேதக்காறற்றை கோயில்" என்றே குறிப்பிட்டார்கள். பயம் காட்டும் தோரணை ஒன்று அதில் தென்படும். "திருச்சொரூப வலம்" வருடாந்தம் வெளிப் பிரகாரத்தில் நிகழும். "கூடு சுத்துகிறார்கள் - அந்தப் பக்கம் பார்க்கவும் கூடாது" எனக் கூறி என்னவர்கள் அடுத்த வெள்ள ஒழுங்கையால் மெல்ல கூட்டிச் சென்று விடுவார்கள். மூன்று சகோதரிகளுக்கு நடுவில் பிறந்த நான் எதிர்காலத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலாவது நிலை தடுமாறினால் குடும்ப பாரம்பரியம் குலைந்து போய்விடுமே! எனக்கு ஏக்கமாக இருக்கும் - பார்க்காமல் போவதால். வர்ண வர்ண காகிதச் சோடனைக் கூட ஓரக் கண்ணாலேயே பார்த்து ரசிக்க வேண்டியிருந்தது. திரேசம்மா கோவில் தினமும் திறக்கப்படுவதில்லை. ஞாயிறு தினம் மட்டுமே ஒரு வேளை ஆராதனை நடத்தப்படும். ஏனைய நாட்களில் ஆலய வளாக பனஞ்சலாகை கேற் பூட்டியே இருக்கும். அல்லாவிடில் கட்டாக்காலி மாடுகளின் தொழுவமாக கோவில் மாறி விடுமே!



மதி..... மறப்பதில்லை!

வி. என். மதிஅழகன்

திரேசம்மாவை நேரில் ஒரு தடவை முழுமையாகப் பார்த்துவிட வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் வளர்ந்து கொண்டே வந்தது.

ஒரு நாள் - வெள்ள ஒழுங்கையால் சென்று கொண்டிருந்த நான் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு கோவிலுக்குள் சட்டென்று நுழைந்து விட்டேன். எரிந்தும் எரியாதிருந்த இரண்டொரு மெழுகு திரிகளின் பின்னணியில் மேரி மாதாவின் தரிசனம் கிடைத்தது. வெளவால்கள் சிலவும் தொங்கிக் கொண்டிருந்தன. என்னை அவை முழுசிப் பார்ப்பது போல் தெரிந்ததால் அதிக நேரம் அங்கிருக்கவில்லை. திரேசம்மா கோவிலைச் சேர்ந்தவர்களில் ஒருவராக 'லில்லி அன்ரி' விளங்கி வந்தார். வசீகரமானவர். ஏழைகளை தன்பால் ஈர்த்தவர். இளவாலைப் பக்கத்திலிருந்து போதகர்மார் மோட்டார் சைக்கிளில் லில்லி அன்ரியை வந்து பார்த்துப் போவார்கள்.

தம்பர் பள்ளிக்கூடமென அழைக்கப்பட்ட வாணி நிகேதன வித்தியாசாலை - எனது ஆரம்பப் பாடசாலை. அதற்கு முன்னாலேயே லில்லி அன்ரியின் வீடு. குரோட்டன் செடிகள் வளர்க்கப்பட்டு சீராக வெட்டப்பட்டிருக்கும். எனது வீட்டில் செவ்வரத்தம் பூச்செடிகள் தான் - அப்படியும் இப்படியுமாக கிளைகள் இருக்கும். அதிகாலையில் பூக்கள் வேண்டுமே!

பாதிரிமாரை வெள்ளை உடையில் - கறுப்புப் பட்டியில் கண்டால் எனக்கு உற்சாகம் பிறக்கும்.

1983ம் ஆண்டு பிளாக் ஜூலை. தமிழ் மக்களுக்கெதிரான வன்செயல்கள். கொழும்பில் வீடெரிந்து பஸ்பமானது. அகதி முகாமிலிருந்து யாழ் செல்கிறோம். காங்கேசன்துறை

(மறுபக்கம் வருக)

தொழும்பு தமிழச் சங்கம்

கடலில் நங்கூரமிடப்படுகிறது 'லங்கா முதித' கப்பல். உற்சாகம் மிகுந்திருந்த இளந்தாரிகள் படகுகளில் என்னையும், மனைவி - மகனையும் பரிவோடு இறக்குகிறார்கள். பச்சாதாபத்தோடு நடேஸ்வராக் கல்லூரி நோக்கிக் கூட்டிச் செல்கிறார்கள். அரசாங்க அதிபர் பஞ்சலிங்கம் கல்லூரி வாசலில் என்னைக் கட்டித் தழுவுகிறார். "மதிஅழகன் - இது நீயா? அல்லது உன் ஆவியா?" என்று ஒரு சிரிப்புடன் விசாரிக்கிறார். ஜூலை கலவர நாட்களில் தமிழக உணவு அமைச்சர் மதியழகனின் திடீர் மறைவு யாழ்ப்பாணத்தில் திரிபடைந்து ஒரு வதந்தியை வளர்த்துவிட்டது.

கல்லூரி மண்டபத்தில் வாழையிலையில் உணவு பரிமாறுகிறார்கள். பசியாறிய பின் கல்லூரியின் மற்றுமொரு அறைக்கு கன்னியாஸ்திரிகள் முவர் அழைத்துச் செல்கிறார்கள். உடுப்புக்கள் மலை போல் குவித்திருக்கின்றன. தேவையானவற்றை தெரிவு செய்து கொள்ளுங்கள் என்கிறார்கள். நன்றி. தாயார் எம்மை பராமரிக்க தயாராக இருப்பதால் வசதிகளுக்குக் குறைவிருக்காது. தேவையானோருக்கு கொடுங்கள் என்கிறேன் - பணிவுடன். 'சரி... அப்படியே நில்லுங்கள்' எனக் கூறி எம் நலன்களுக்காக முன்னே நின்று பிரார்த்தனை புரிந்த கன்னியாஸ்திரிகளே..... உங்களை நான் ஒரு போதும் மறவேன்.

நடிகமணி வி.வி.வைரமுத்து, "நடமாடி" இராஜரத்தினம் இருவரும் என்னை பார்க்கிறார்கள். கண்ணீர் பெருக்குகிறார்கள். உணர்வுகள் கொப்பளிக்கின்றன. கசங்கிய நோட்டுகளின் கற்றையொன்றை கரங்களில் திணிக்கிறார்கள். கன்னியாஸ்திரிகளுக்குச் சொன்ன அதே கதையை கலைஞர்களுக்கும் சொல்லி காசுக் கட்டைத் திருப்பிக் கொடுக்கிறேன். விண்ணுலகம் சென்றிட்ட கலைஞர்களே மண்ணுலகில் இருக்கும் வரை உங்களை மறப்பதற்கில்லை.

கல்வளையில் செத்த வீடோ, கல்யாண வீடோ, சாமத்தியச் சடங்கோ எது நடந்தாலும் லில்லி அன்ரி முன்னுக்கு நிற்பார் - சென்ற் வாசனை கமகமக்க. நாளாந்த வாழ்க்கைக்குப் போராடும் ஏழைகளும், புகழ் பெற்ற அரசியல்வாதிகளும், இறைபணி செய்யும் பாதிரிமாரும் வந்துபார்க்கும் லில்லி அன்ரி கல்வளையாரின் கண்களுக்கு மட்டும் வில்லி அன்ரியாக தெரிந்தார். கல்வளையாரின் வைதீகப் போக்கு அப்படி!

தம்பர் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பை முடித்துக் கொண்டேன். அம்மா, தான் படித்து முன்னேறிய மானிப்பாய் மெமோறியலில் என்னை சேர்த்துவிட முனைந்தார். தலைமை உபாத்தியாயராக விளங்கிய கரவெட்டி வேலாயுதச் சட்டம்பியாருக்கும் அம்மாவுக்கும் இடையில் பெரும் போராட்டம். "வேதக்காறரின்றை பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் இவனைச் சேர்க்க ஏன் இந்த அவசரம்" என் வெட்டொன்று துண்டு இரண்டாக கேட்டார் - வேலாயுத வாத்தியார். அம்மா மசியவில்லை. நூற்றுக்கு நூறு வாங்கும் மாணவனை இழக்க தலைமைச் சட்டம்பியார் விரும்பவில்லை. எப்படியோ - சேர்ட்டிபிக்கேற்றை அம்மா எடுத்து தான் பிறந்த மானிப்பாயின் வேதக்கார பாடசாலையில் சேர்த்து விட்டார்.

மெமோறியல் ஒழுங்கை முகப்பில் தான் இலங்கையின் முதல் பத்திரிகையான "உதய தாரகை" - Morining Star வெளிவந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அலுவலகம் இருந்தது. அது களையிழந்த நிலையில் இருப்பதைப் பார்த்து நான் அந்த வயதிலேயே கவலைப்பட்டதுண்டு.

"அன்பே பிரதானம் - சகோதர அன்பே பிரதானம்" என்ற வேதக்கார பாடலைப் பாடிப் பாடி என்னை வளர்த்தவர் என் அன்னை. ஆனால் மெமோறியலில் எனக்கு அந்த அன்பு கிடைத்தபாடில்லை. அன்னியமான ஒரு இடமாகவே தென்பட்டது. முதல் நாளில் என்னுடன் பேசினார் சின்னத்துரை மாஸ்ரர். "இஞ்சை வாடா. கேக்கிறன் என்று குறை விளங்காதை... நீ ஒரு பண்டாரப் பெடியனோ" எனக் கேட்டுத் தூளாவினார். "இல்லை" என்றேன். பண்டாரப் பரம்பரையினனாக என்னை ஏன் அவர் கண்டார் என்பது இன்றும் எனக்கு புரியாத புதிராகவே உள்ளது.

மார்கழி விடியலில் சங்கூதி தை பிறந்த வேளையில் நெல் சேர்க்கும் அளவெட்டிப் பண்டாரம் தெய்வீகமான தோற்றம் கொண்டவர். எமது ஒழுங்கைகளுக்கும் வந்து ஊதாவிட்டால் உமக்கே சங்கூதுவோம், எனச் சிலர் எச்சரித்த போது அதை ஏற்க அந்தப் பண்டாரம் மறுத்த கதை ஒரு தனிக்கதை. பழசுகளை கடுமையாக கிளறிப் பார்க்காமல் விடுவதும் நல்லது.

மானிப்பாயில் மதிப்புக்குரிய கிறிஸ்தவ குடும்பங்கள் பல வாழ்ந்து வந்தன. அவற்றிலிருந்து வந்த மாணவர்களுக்கும் மெமோறியல் ஆசிரியர்களுக்கும் இடையில் நிலவிய அந்நியோன்ய உறவு என் மனதில் ஏக்கத்தை வரவழைக்கும். அந்தத் தகுதி எனக்குக் கிடைக்கவில்லையே என்று ஆதங்கம் மனதில் அடிக்கடி வந்து போகும்.

வகுப்பில் ஜோர்ஜ் சிதம்பரநாதன் என்ற முடி சுருண்ட மாணவன் மட்டும் எனது நண்பனாக விளங்கினான். அவனது அமைதியான போக்கு என்னைக் கவர்ந்திருந்தது. ஆயினும் ஆர்னால்ட், மேத்தர், வில்லியம், யோசப் மந்தையில் கல்வளை செம்மறியாடு தனித்தே நின்றது.

வெள்ளிக்கிழமை தினமொன்றில் நான் பாட-சாலை செல்லவில்லை. திங்கள் - வெள்ளி வராத ஏனைய மாணவர்களுடன் அதிபரின் அறைக்கு அனுப்பப்பட்டேன். "ஏன் வரவில்லை?". "சந்நதி கோயிலுக்கு அம்மாவுடன் போயிருந்தேன்." "கோவிலுக்கு வெள்ளிக்கிழமை தான் போக வேண்டுமா? சனி, ஞாயிறு போனால் என்ன?" கேட்டதோடு விட்டிருந்தால் போதாதா! விழுந்தது ஒரு பிரம்படி. தம்பர் பள்ளிக்கூடத்தில் விழாத அடி! "அருமை" யான அடி! மறக்க முடியாதது.

ஒரே ஆண்டில் அப்பா என்னை மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு மாற்றிவிட்டார். செம்மறியாடு சொந்தமான மந்தைக்கு சென்று கொண்டது. சைவத் தமிழ்க் கலாசாரத்தின் உறைவிடம் அது. அங்கு எட்டாம் வகுப்பில் எனக்கு இட்டமான ஒரு நண்பனாக விளங்கியவன் ஜெப சுதந்திரன். அமைதியான சுபாவம். நாகரிகமான போக்கு! ஆனால் பாவம். அப்போது அவன் தான் மந்தை தவறிய செம்மறி. அடிக்கடி என்னைக் கேட்பான் - அவுஸ்திரேலியா போவோமா? இங்கிருந்து படித்து கஷ்டப்படத் தேவையில்லை என்பான். அங்கு போய் என்ன செய்வது? அப்பிள் புடுங்கினால் காசு நிறையக் கிடைக்கும். டடி சொன்னவர்! ஆசிரியர் சிலரின் டிசிப்பிளின் எங்களை இப்படிப் பேச வைத்தது. ஜெப சுதந்திரன் உம்மிடம் பைபிள் இருக்கிறதா? இருக்கிறது - ஆங்கிலத்தில். எனக்கு தமிழில் உள்ள பைபிள் தர முடியுமா? வாசித்துப் பார்க்க வேண்டும். டடியிடம் சொல்லி வாங்கித் தருகிறேன். அடுத்த வாரமே அழகான, அடக்கமான பைபிள்நூல் ஒன்றை ஜெப சுதந்திரன் எடுத்து வந்து அன்புடன் தந்தான். அகமகிழ்ந்து போனேன். "அன்பே பிரதானம்" பாடலை மனம் ஒரு தடவை மீண்டும் இசைத்தது. திருப்பித் தர வேண்டுமோ? சொந்தமாக்கிக் கொள்ள எனக்கு விருப்பம். உமக்குத் தான் சொந்தம். எடுத்துக் கொள்ளும். ஜெப சுதந்திரனின் கருணையே கருணை.

வகுப்பறையிலேயே புரட்டிப் பார்க்கத் தொடங்கினேன். மணி அடித்தது. பண்டிதர் மு.கந்தையா தமிழ் இலக்கிய பாடம் எடுக்க வந்தார். மதிஅழகன் எழும்பி வாசி என்றார். தலையை ஒரு ஆட்டு ஆட்டியபடி. அவருக்கு வார்த்தையை வெளியிடமுன் தலையை ஒரு மாதிரி ஆட்டிக் கொள்ள வேண்டும். அது ஒரு தனி ஸ்ரயில். பாரதச்

(எதிர்ப்பக்கம் வருக)

சுருக்கத்தை நான் எழுந்து நின்று வாசிக்க வாசிக்க அவர் விளக்கம் சொல்லுவார். சக மாணவர்கள் செவிமடுத்துக் கொள்வர்.

ஜெப சுதந்திரனின் விசேட வேண்டுகோளின்படி அன்று வாசிக்கும் Tone ஐ அவ்வப்போது மாத்தி மாத்தி வாசிக்கத் தொடங்கினேன். வழக்கம் போல் வாசித்துக் கொண்டிருக்க வேண்டும். தொடையில் அவன் இறுக்கி நுள்ளும் போது பலத்தும் இலேசாக நுள்ளும் போது மெல்லமாகவும் வாசிக்க வேண்டும் என்பது பணிப்புரை. பக்குவமாகச் செய்தேன். ஆசையோடு கேட்ட பைபிள் தந்த நண்பனல்லவா? கந்தையருக்கு வந்த கோபத்தை அன்று தான் கண்டேன். மதிஅழகன் - நி...ப்...பா...ட்டு. என்ன நடக்குது. ஜெப சுதந்திரத்தின் நுள்ளல் நின்றது. எனது மேசைக்கருகில் வந்து துள்ளி விழுந்தார் கந்தையர். என்ன புத்தகம் இது? கண்டு விட்டார் அன்பளிப்பை. பை....பி....ள்....சேர். இஞ்சை கொண்டா இதைத் தான் நானும் கன காலமாத் தேடிக் கொண்டிருக்கிறன். வாசித்து விட்டு தருகிறேன். அதிரடி நடவடிக்கை! - எடுத்துக் கொண்டார் பைபிளை. எனக்கு அளிக்கப்பட்ட தண்டனையாக அதைக் கருதினேன்.

ஜெப சுதந்திரனும் அதே ஆண்டு விலகிக் கொண்டான். வகுப்பில் கந்தையரை என்னுடன் புடுங்குப்பட வைத்த நண்பன் அவுஸ்திரேலியா சென்றானா? அப்பிள் பிடுங்கினானா தெரியவில்லை. நான் அட்வான்ஸ் லெவல் படித்து விலகும் வரை பைபிள் திருப்பித் தரப்படவேயில்லை. என்னிடமிருந்து கைப்பற்றும் வரை பண்டிதர் பைபிளை வாசிக்காதிருந்திருப்பார் என்று சொல்வதற்கும் இல்லை. தமிழ் அறிஞரான ஏழாலை பண்டிதர் மு.கந்தையா அவர்களும் அவரது மாணவனான நானும் கொழும்பில் மூன்று தசாப்த காலத்துக்குப் பின்னர் ஒரே மேடையில் சந்தித்துக் கொண்டோம். எதற்காக? சாஹித்திய விருது பெறுவதற்காக. மேடையில் அந்த மகானின் தாள் பணிந்து, பின்னர் அமைச்சர் பி.பி.தேவராஜ் அவர்களிடம் விருது பெற்றமை மறக்க முடியாத ஒரு நிகழ்வு. ஆனால் மனதுக்குள் பைபிளின் நினைவு, கேட்கவில்லை. கேட்டிருந்தால் இன்னும் படிக்காதிருக்கிறாயோ? என ஒரு பார்வையை வீசியிருப்பார்.

பண்டிதர் அவர்கள் கடந்த வருடம் மறைந்து விட்டார்கள். அவரது சைவத் தமிழ் நூல்கள் காலங்காலமாய் எமது கலாசாரத்தை பாதுகாத்துக் கொண்டேயிருக்கும்.

இளவாலை பாதிரிமார், மெமோறியல் ஜோர்ஜ் சிதம்பரநாதன், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஜெப சுதந்திரன் ஆகியோருடன் ஜெப சுதந்திரன் தந்த பைபிள், உதய தாரகை அலுவலகம் எல்லாம் அக்குவைனஸ் கன்னியாஸ்திரியில் எனக்குத் தெரிந்தன. ஆனால், இந்தக் கன்னியாஸ்திரி கூட ஒரு சில மாதங்களில் தமது சுருக்கமான பாடநெறியை முடித்துவிட்டு விலகிக் கொண்டார். பஸ்தரிப்பில் காண்பதில்லை. ஆனால் சொல்லியும் செல்லவில்லை. அவர் வருவாரா? என சில தினங்கள் எதிர்பார்த்தேன். வரவேயில்லை. இப்போது அவர் எந்த மடத்தில் இருக்கிறாரோ?

ஜோர்ஜ் சிதம்பரநாதன், ஜெப சுதந்திரன். நண்பர்களே! நீங்கள் இப்போது எந்த இடத்தில்?

அக்குவைனாசை விட்டகன்று ஊடகத்துறையில் கால் பதித்த பின்னர் - பரந்துபட்ட சமுதாய நதிகளில் நீச்சலடிக்கத் தொடங்கினேன். சைவத்தமிழ் கலாசாரத்தோடு கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த பண்பாடுகளையும் ஏற்றிப் போற்றி வளர்க்கவல்ல பொன்னான காலம் என்னை வந்தடைந்தது. அதி அற்புதமான - வெகு உன்னதமான பணிகள்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலும், கண்டி தலதா மாளிகையும், மன்னார் மடுமாதா தேவாலயமும், கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலும் எனக்கு ஒன்றாகவே தெரியத் தொடங்கின. பொங்கல் என்ன? றம்ழான் என்ன? நத்தார் என்ன? வெசாக் என்ன? அனைத்துமே அக்கறையோடு கவனிக்க வேண்டிய பணிகளாயின. தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் என்ற தகுதியில் குருக்கள், தேரர்கள், போதகர்கள், மௌலவிகள் தொடர்பு நாளாந்தம் இருக்கும். யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம். சமரச சன்மார்க்க நெறியை அரசாங்கத் தொழில் மூலம் பெற்றுக் கொண்டேன்.

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கை வருகை. பரிசுத்த பாப்பரசர் கலந்து கொள்ளும் அனைத்து புனித நிகழ்வுகளையும் நேரடி அஞ்சல் செய்ததை - காலி முகத்திடலில் இதமான காற்று வீச பழைய பாராளுமன்ற முன்றிலில் பாப்பரசர் வந்து சேர - அவர் அருகிலிருந்து உணர்ச்சிமயமாக வர்ணனை செய்ததை - பாப்பரசரின் அமைதியான பார்வை பட்டதை - மதிஅழகன் ஒரு கத்தோலிக்கரா என நேயர்கள் சிலர் பின்னர் உசாவிப் பார்த்ததை - கத்தோலிக்க திருச்சபை பாப்பரசரின் திருவுருவப் படத்துடன் பாராட்டு கடிதம் ஒன்று அனுப்பியதை மறப்பதற்கில்லை.

மறக்க முடியாத மற்றுமொரு கருமமும் நிகழ வேண்டும். வத்திக்கான் சென்பீட்டேர்ஸ் சதுக்கத்தில் ஆயிரமாயிரம் உலக யாத்திரிகர்களுடன் ஒருவனாக நின்று பரிசுத்த பாப்பரசரின் பாரம்பரிய புத்தாண்டு வாழ்த்துச் செய்தியினை பல்வேறு மொழிகளில் கேட்டு மெய்மறக்க வேண்டும்.

ஒரு தடவை கொழும்பிலுள்ள இஸ்லாமிய நிறுவனமொன்றின் பிரமுகர் ஒருவர் அதிகாலை வேளையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டது - இன்று ஒலிபரப்பான குமாரசுவாமி சோமசுந்தரனாரின் சைவநற்சிந்தனை வலு சோக்காக இருந்தது. அதன் பிரதியொன்றை தர முடியுமா? அலுவலகத்துக்கு அவரை அழைத்து பிரதியை கொடுத்த போது இஸ்லாமிய பண்புகளுக்கும் சைவநற்சிந்தனையில் சொல்லப்பட்டவைக்கும் இடையே காணப்பட்ட தொடர்புகளை அவர் விளக்கிய விதம் மனதில் பதிந்துள்ளது. கோவில் குருக்கள் ஒருவர் என்னிடம் விடுத்த வேண்டுகோள் - "போதி மாதவனின் போதனைகளை சுமணரட்ன என்பவர் ரொம்ப சுத்தமாக சொல்லுகிறாரே. அவரை நான் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தாரும்." கூட்டமொன்றில் அவர்களை நான் பரஸ்பரம் அறிமுகப்படுத்திய போது இருவரும் அடைந்த பரவசநிலை மனதில் நிழலாடுகிறது.

மாத்தளை மாரி அம்மனின் பஞ்சரத பவனி நகர வீதிகளில் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இஸ்லாமியர்கள் வீதிகளிலுள்ள தமக்குரிய பகுதிகளை கழுவி மஞ்சள் நீர் தெளித்து அம்மன் தனது பரிவார மூர்த்திகளுடன் பக்குவமாக வீதியுலா வர தொண்டு செய்வது மனதில் நிறைந்திருக்கிறது.

டி.ஆர்.நாணயக்கார செந்தமிழில் திருக்குறள் விளக்கம் தந்ததை, மரியம் சேவியர் அடிகளார் சைவசித்தாந்த உரை நிகழ்த்துவதை, கலைஞர் அஸீஸ் கண்டிய நடனம் ஆடியதை, கிழக்கு மாகாணக் கலைஞர் அக்பரின் கர்னாடகக் கச்சேரியை மனம் மிக நன்றாக பதிந்து வைத்துள்ளது.

"அன்பே பிரதானம் - சகோதர அன்பே பிரதானம்"
அன்பு வழி நின்று இன்ப நிலை காண்போம்!

கடன்பட்டார் நெஞ்சம் போல்....!



வசந்தா நடராசன்

அனுபவங்கள் மனிதனை மனிதனாக்குவதாகக் கூறிக் கொள்கிறார்கள். புலம்பெயர்ந்த நாட்டிலே தமிழ் மக்கள் பெறும் அனுபவங்கள் பல முகங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. சில கசப்பானவை. சில சுவையானவை.

இலங்கை வேந்தன் இராவணன், பல்வேறு துன்பங்களை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஒரு சந்தர்ப்பத்திலே ஏற்பட்டது. கவிச் சக்கரவர்த்தி கம்பர் இராவணனின் துன்ப எல்லையைக் கற்பனைக் கண் கொண்டு பார்த்த போது, கடன்பட்டார் நெஞ்சம் எப்படிக் கலங்குமோ அந்த உணர்வு நிலையை இராவணனின் துயருக்கு உவமானமாக்கினார். இதன் வெளிப்பாடாக, 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற கம்ப வரிகள் காலத்தால் அழியாத அனுபவ வரிகளாக நிலைத்து விட்டது. இவ்வரிகள் கடன் பட்டவர்களின் துன்ப எல்லையை எடுத்தியம்புவனவாகக் காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் ஒரு பெரியவர் பேசும் பொழுது, புலம்பெயர்ந்து கனடாவிலே வாழும் தமிழர்களைக் கடன் சுமையுள்ள ஒரு சமூகம் எனக் குறிப்பிட்டார். இக் கருத்து சிறுபொறியாக எனது மனதிலே தெறித்துப் பரவியது. என் நண்பர்களின் அனுபவங்கள் இப்பொறி பரவ உதவியது. தாயகத்திலே தமிழ் மக்களிடையே காணப்பட்ட ஏட்டிக்குப் போட்டியாகச் சொத்துகளைச் சேர்க்க எண்ணுதல், போலி மனப்பான்மை, விரலுக்கு மிஞ்சிய வீக்கம் போன்றவை புலம்பெயர்ந்த நாட்டிலும் இன்றுவரை தொடர்கின்றது. இந்த எண்ணத்திற்குத் தூபம் போட்டாற் போலக் கனடாவின் சில அடிப்படை கடன் வசதிகளும் காணப்படுகின்றன. இவ் வசதிகளைத் தேவைக்கு அதிகமாகவே பயன்படுத்தி, வாழ்வின் அடிப்படையான சுயதிருப்தி, மகிழ்ச்சி ஆகியவற்றை இழந்தவர்களாக எம் மக்களிற் பலர் காணப்படுகின்றனர்.

குறிப்பாகத் தமிழ் மக்களிடையே அண்மைக் காலமாகப் பெருகி வரும் பெரு விருப்புகள் வாழ்வு முறையில் பல மாற்றங்களை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. தாயகத்திலே காணி, வீடு போன்ற சொத்துகள் ஒருவரின் அந்தஸ்தை, கௌரவத்தை வெளிப்படுத்துவதான ஒரு எண்ணம் காணப்படுவதோடு, அவை கடன் பளுவற்ற சொத்துகளாகவும் காணப்பட்டன. ஆனால் கனடாவிலே வாகனம், வீடு போன்ற சொத்துகளை வாங்க முனைவோர் பெறுமதியில் சிறு பங்கினைப் போட்டு வாங்கி, வட்டியாகப் பெருந்தொகைப் பணத்தினை மாதா மாதம் கட்ட வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதனை ஈடு செய்யச் சராசரி உழைப்பான எட்டு மணித்தியால உழைப்பை பதினாறு மணித்தியாலமாக உயர்த்த வேண்டியுள்ளது. அத்தோடு கணவன் மனைவி இருவருமே இராப் பகலாக உழைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலை, உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றது. பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டிய அன்பும் பராமரிப்பும் கிடைக்காது போய்விடுகின்றது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற பழமொழி மாறி வாழ்க்கை உழைப்பதற்கே என்ற பழமொழி உருவாகும் நிலை பல குடும்பங்களிலே காணப்படுகின்றது. கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் சந்திப்பதோ அரிதாகின்றது. சமுதாயத்தின் முதுகெலும்பான இளஞ் சந்ததியினர், பெற்றோர் இல்லாத வேளையில் தவறான வழிகளில் செல்லும் நிலை ஏற்படுகின்றது.

பிறர் தம்மை உயர்வாக எண்ண வேண்டும் என்பதற்காக வீடு வாங்குவோர் ஒரு ரகம். தமது வருமானத்திற்கேற்ற வகையில் வீடு வாங்குவோர் இன்னொரு ரகம். இதில் மேலே குறிப்பிட்ட முதலாவது ரகத்தைச் சேர்ந்தோர் நிலைதான் கலங்கிய இராவணன் நிலை. இவர்கள் மற்றவர்கள் தம்மைப் புகழ வேண்டும், உயர்வாக எண்ண வேண்டும் என்பதற்காக தமது வாழ்க்கையை அழித்துக் கொள்பவர்கள்.

தேவைக்கேற்ற முறையில் வீடுகளை வாங்காது பிறருக்காக வாங்குவோர், பல்வேறு வழிகளில் தமது விருப்புக்களையும், அடிப்படைத் தேவைகளையும் கட்டுப்படுத்தி வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை ஏற்கின்றார்கள். எனது நண்பர்கள் சிலரின் அனுபவம் தெளிவாகவே இதனை உணர்த்துகின்றது.

நண்பரொருவர் தமது வீட்டிலே வளர்ந்த முளைக் கீரையை இன்னொரு நண்பரிடம் கொடுத்த போது அதனை வாங்க மறுத்து விட்டார். காரணம் அந்தக் கீரையை சுத்தம் செய்ய அதிக நீர் தேவைப்படும் என்பதால், தனது குடும்பத்தில் கீரை வகைகளைச் சமைப்பதில்லை என்று காரணம் கூறினார். இன்னொரு நண்பரின் அனுபவம் மிகவும் வித்தியாசமானது. மிகப் பெரிய வீட்டை வாங்கி, அவ் வீட்டிலே இரவு நேரத்திலே மின் விளக்கைப் பற்ற வைப்பதில் மிகச் சிக்கனமுடையவராகக் காணப்பட்டார். இவர்கள் தமது இரவுணவை மெழுகுவர்த்தி வெளிச்சத்திலே தான் உண்பார்கள். அவ்வாறே வீட்டிலுள்ள உடை கழுவும் இயந்திரம், உடை உலர்த்தும் இயந்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் செலவாகும் தண்ணீருக்கான செலவைக் கட்டுப்படுத்த, வாரத்தில் இருமுறை கணவனும் மனைவியும் மாறி மாறி பொது இடத்தில் உடைகளை துப்புரவாக்கி உலர்த்துவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

இவை யாவற்றிற்கும் மேலாக தமது பெற்றோரையும், முதியோரையும் அனேகமானோர் 'பேஸ்மென்ற்' என்று கூறப்படும் அடித்தள வீட்டிலே வாழ விடுகின்றார்கள். அதிக உஷ்ணமான காலத்திலே குளிரூட்டியைப் போடாமலும், மிகக் குளிரான பனிக் காலத்திலே உஷ்ணத்தைப் போடாது சிக்கனப்படுத்துவதாலும், பெரியவர்கள்

(எதிர்ப்பக்கம் வருக)

33054

பலர் சளிசுரம் என்ற நிமோனியாவால் அவதிப்படுவதோடு உயிர் துறந்துமுள்ளார்கள். இவ்வருத்தத்தினால் பலர் நிரந்தர நோயாளிகளாகவே காணப்படுகின்றனர்.

தமக்குப் பின் கனடாவில் குடியேறிய தமது நண்பர்கள் வீடு, கார் என வாங்கி டாம்பீகமாக வாழும் போது தாம் மட்டும் இன்னும் வாடகை வீட்டில் குடியிருப்பதாகக் குறை கூறி, கணவனுடன் வாதம் செய்து, இறுதியில் இருவருமே பிரிந்து இரு வேறிடங்களில் வாழும் கொடுமையும் எமது சமூகத்திலே காணப்படுகின்றது. தனி மனிதனாக உழைத்துக் குடும்பத்தை கனடாவிற்கு அழைத்து, அந்தக் கடன் சுமையைக் கட்ட இராப் பகலாக உழைக்கும் வேளையில், உண்மை நிலை உணராது மற்றவர்களின் வாழ்க்கையுடன் தமது வாழ்க்கையை ஒப்பிட்டுத் தம்மையே அழிப்போர் எத்தனை பேர்? இவ்வாறு சூழ்நிலையால் பெற்றோரின் அன்பை இழந்து தவிக்கும் சிறுசுகளை எண்ணும் பொழுது, "கோழி ஒரு கூட்டிலே, சேவலொரு கூட்டிலே கோழிக் குஞ்சு இரண்டும் இப்போ அன்பில்லாத காட்டிலே" என்ற சினிமா வரிகள் தான் நினைவிற்கு வருகின்றது. தமது வருமானத்திற்கேற்ப தமது தேவைகளை அமைத்துத் திருப்தி கொண்டிருந்தால் இந்நிலை ஏற்படுமா? சிந்திக்க வேண்டும்.

இவற்றைக் கூறுவதால் பொருட்களையோ சொத்துகளையோ வாங்கக் கூடாது என்பது அர்த்தமல்ல. சொத்துகளிலே மேலான சொத்து உடல் நலம். உடல் நலம் பாதிக்காத வகையில், வருமானத்திற்கும் தேவைக்குமேற்ப சொத்துகளை வாங்குவது கடன் பளுவிலிருந்து தப்ப உதவுவதோடு, அமைதியான நிம்மதியான வாழ்வையும் கொடுக்கும். அளவான தேவைகளோடு, நிறைவான வாழ்க்கை முறையை அமைப்பதென்பது ஒருவருக்குக் கிடைக்கும் மிகப் பெரிய வரம். இந்த வரத்தைப் பெற்றோர் கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கிய இராவணனின் நிலைக்கு நிச்சயமாகத் தள்ளப்பட மாட்டார்கள். குறைந்த தேவை நிறைந்த வாழ்வு. இதுவே ஒவ்வொரு மனிதரதும் தாரக மந்திரமாக அமைய வேண்டும்.



தாஜ்மகால் - ஒரு காதலின் சின்னம்
Tajmahal - A Symbol of love

கனகேஸ் நடராஜா

வருடா வருடம் கோடை விடுமுறைக்கு இந்தியாவிற்குச் செல்வது வழக்கம். சென்னையில் குடியிருந்த எனது தாயாரோடு சில நாட்களைக் கழித்துவிட்டு, பின் புட்டபர்த்திக்குச் சென்று ஒரு கிழமையை பகவான் சந்நிதியில் கழிப்பதோடு எங்கள் இந்திய யாத்திரை முற்றுப் பெற்று விடும். கடந்த விடுமுறைக்குச் சென்னை சென்ற போது எனது தாயார் இவ்வுலகில் இல்லை. அதனால் எங்கும் வெறிச்சோடியது போன்ற பிரமை. சென்னையில் நிற்கப் பிடிக்காது, வட இந்திய யாத்திரைக்கான ஆயத்தங்களைச் செய்தோம். பனிக்கர் ரவல்ஸ் என்ற பிரயாண ஒழுங்குகளைச் செய்யும் ஒரு நிறுவனம் பற்றி பலரும் சிலாகித்துக் கூறினார்கள். அவர்களிடம் ஒரு பயணப் பொதியை ஒழுங்கு செய்தோம். அதன் பிரகாரம் நானும் எனது கணவரும் புதுடெல்லிக்கு விமானம் மூலம் சென்ற பின்பு அங்கிருந்து அவர்களின் வாகனம் எங்களை ஆக்ரா, ராஜஸ்தான், ஹரித்துவார், ரிஷிகேஷ் அழைத்துச் சென்று காட்டுவார்கள். பின்பு புதுடெல்லியில் இருந்து சென்னை திரும்புவது எங்கள் பொறுப்பாகும். புதுடெல்லி சென்று இரவுப் பொழுதை ஒரு ஹோட்டலில் கழித்தோம். கார்ச் சாரதி எம்மை மறுநாட்காலை சந்திப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டார்.

ஒரு அரை மணித்தியாலம் பயணத்தின் பின்பு நாங்கள் தாஜ்மஹாலை அடைந்தோம். தாஜ்மஹாலுக்கு அரை மைல் தூரத்திலேயே எமது வாகனத்தை நிறுத்தி விடுவார்கள். அதற்கு அப்பால் சுற்றுலா இலாகாவிற்குச் சொந்தமான வாகனத்தில் தான் நாம் தாஜ்மஹாலின் வாசலை அடைய வேண்டும். இந்திய வாசிகளுக்குப் பிரவேசக் கட்டணம் மிகவும் குறைவு. வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்குப் பிரவேசக் கட்டணம் கிட்டத்தட்ட நான்கு மடங்காகும். வாசலில் எத்தனையோ அரசாங்க வழிகாட்டிகள் எங்களை அழைத்துச் செல்ல ஆயத்தமாக இருந்தார்கள். தங்களுக்குள்ளேயே எம்மை யார் அழைத்துச் செல்வது என்று தீர்மானிக்கும் ஒரு ஒழுங்கு முறையை வைத்துள்ளார்கள். எங்களுக்குக் கிடைத்த வழிகாட்டி மிகவும் அறிவு நிரம்பியவர். இந்தியாவின் சரித்திர வரலாறு, கட்டிடக் கலை, சிற்பக் கலை, பளிங்குக் கற்கள் பற்றிய அறிவு எல்லாமே இவருக்குத் தண்ணீர் பட்டபாடு.

தாஜ்மஹாலுக்குச் செல்லும் பாதையில் நாம் காலடி எடுத்து வைத்தவுடன் எமக்கு அறிமுகப்படுத்தப்படும் முதல் பேர்வழி ஒரு புகைப்படக் கலைஞர் தான். இவர் எங்களை தான் தாஜ்மஹாலைப் பின்னணியாக வைத்துச் சில படங்கள் எடுப்பதாகவும், அதில் மூன்று படங்களை மாத்திரம் தலா 80 ரூபா வீதம் வாங்கினால் சரி என்றும் பேரம் பேசி, தானே எங்களை எங்கு நிற்க வேண்டும், எப்படி நிற்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுவார். அதில் அவரின் புத்தி சாதுர்யத்தையும், வியாபாரத் தந்திரத்தையும் விளங்கிக் கொள்ளலாம். மொத்தமாக எங்களை ஏழு படங்கள் எடுத்தார். அதில் ஒன்று 'டயனா போஸ்' என்பதாகும். பிரிட்டிஷ் இளவரசி டயானா, தனது கணவர் சார்ள்ஸ் உடன் பிணக்கு ஏற்பட்ட ஆரம்ப காலத்தில் தாஜ்மஹாலின் முன் வந்திருந்து ஏக்கத்துடன் அதனைப் பார்த்தபடி கமெராவிற்கு முதுகுப்புறத்தைக் காட்டியபடி இருக்கும் போஸ் தான் அது. அதனை நம்மில் பலர் பத்திரிகைகளில் பார்த்து இருக்கிறோம். படம் எடுக்கும் படலம் முடிந்தவுடன் எமது வழிகாட்டி எமது தாஜ்மஹால் சுற்றுலாவினை ஆரம்பிக்கிறார். தாஜ்மஹால் சுற்றுலா முடிந்து நாம் திரும்பும் வழியில் இந்தப் புகைப்படக் கலைஞர் எங்கள் படங்களோடு எம்மை வரவேற்பார். அவர் எடுத்த படங்கள் எல்லாமே மிகவும் அற்புதமாக இருந்தன. ஈற்றில் பேரம் பேசியதை மறந்து 3 படங்கள் இல்லை 30 படங்கள் தந்தாலும் வாங்கி விடுவோம். மொத்தமாக எங்களை எடுத்த ஏழு படங்களையும் மறு பேச்சின்றி நாம் வாங்கினோம்.

தாஜ்மஹாலின் விபரங்களை விபரிக்கும் முன்பு இதனைக் கட்டி எழுப்பிய மொகலாயச் சக்கரவர்த்தி ஷாஜகானின் வாழ்க்கை வரலாற்றையும், சரித்திரப் பின்னணியையும் அறிதல் முக்கியமாகும். இந்தியாவின் அரச பரம்பரைகளுள் மொகலாய அரசர்கள் பெயர்

(மறுபக்கம் வருக)

போனவர்கள். இந்தச் சாம்ராஜ்யம் 1483ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1556ல் இதன் அரசனாக முடிசூட்டப்பெற்ற அக்பர் சக்கரவர்த்தியே இந்த அரச பரம்பரையை உலகறியச் செய்தவர். அக்பரின் அந்தப்புரத்தில் 300 மனைவிமார்கள் இருந்தனராம். இவரின் புதல்வர்களில் முத்தவர் தான் ஜகான்கீர். ஜகான்கீருக்கும் அவரது மனைவி நூர்ஜகானுக்கும் பிறந்த மூத்த ஆண் குழந்தை தான் தாஜ்மஹாலைக் கட்டி எழுப்பிய உலகம் புகழும் ஷாஜகானாகும். ஷாஜகான் 1592ல் அவதரித்தார். இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் Khuvran. ஷாஜகான் மிகவும் சிறுவயதிலேயே தனது தந்தை வழிப் பேரனாகிய அக்பர் சக்கரவர்த்தியை ஒத்திருந்தார். 1607ல் ஷாஜகானின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. பொதுவாக அந்தப்புரத்துப் பெண்களை ஆண்கள் பார்க்க முடியாது. மீனா பசார் என்ற ஒரு சந்தை அந்தப்புரத்தை அடுத்து இருந்தது. இது இன்றைய தாஜ்மஹாலில் இருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள Red Fort இல் இருந்தது. இந்தச் சந்தையில் மாதத்தில் ஒரு நாளோ, இரண்டு நாட்களோ அந்தப்புரத்துப் பெண்கள் வியாபாரம் செய்யும் பெண்களாக மாறுவார்கள். இத் தருணத்தை அரண்மனையைச் சேர்ந்த எல்லா ஆண்களுமே ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பார்கள். இத்தகைய ஒரு சந்தையில் தான் ஷாஜகான் தனது எதிர்கால மனைவி மும்தாஜைச் சந்தித்தார். மும்தாஜின் இயற்பெயர் Arjumand Banu. இச் சந்திப்பு நடக்கும் பொழுது ஷாஜகானுக்கு வயது 15, மும்தாஜிற்கு வயது அப்பொழுது 14 தான். மும்தாஜ், ஷாஜகானின் தாயார் நூர்ஜகானின் சகோதரன் அசாத்கானின் மகளாவார். அதாவது தாய் மாமன் மகள். இவளது தந்தை ஜகான்கீரின் பிரதமராக விளங்கினார். அந்த வயதிலேயே மும்தாஜ் பேரழகியாகவும், வாக்குச் சாதுர்யம் உள்ளவளாகவும் இருந்தாள். ஒரு சாதாரணக் கண்ணாடித் துண்டை மிகவும் விலை உயர்ந்த வைரக்கல் எனக் கூறி அதன் விலை 10,000 ரூபா எனவும், அதனை வாங்குவதற்கு 15 வயதான இளவரசரால் முடியவே முடியாது எனச் சவால் விடுகிறாள். அவளின் சவாலை ஏற்று, உடனேயே தனது மேலங்கியில் இருந்து அவள் கேட்ட பணத்தை அது வைரக்கல் அல்ல வெறும் கண்ணாடித் துண்டு தான் என்பது நன்கு தெரிந்தும் வாங்குகிறான். அந்தத் தருணத்திலேயே ஷாஜகானுக்கு மும்தாஜின் மேல் ஆராக் காதல் பிறக்கிறது. மும்தாஜின் பேரழகையும், பேச்சுச் சாதுர்யத்தையும் நினைத்த வண்ணம் அன்றைய பொழுதைக் கழித்த ஷாஜகான் அடுத்த நாட்காலை தன் தந்தையாகிய ஜகானகீரிடம் தனது காதலை வெளிப்படுத்துகிறான். ஜகான்கீர் மறுவார்த்தை பேசாது தனது வலது கையை உயர்த்தி தனது சம்மதத்தைத் தெரிவிக்கிறார். ஆயினும் இவர்கள் விவாகம் ஐந்து வருடங்களுக்குப் பின்பே கோலாகலமாக நடைபெறுகிறது. அந்த ஐந்து வருட இடைவெளியில் ஷாஜகானுக்கும், பாரசீக இளவரசியாகிய Quandri Gegum இற்குமே அரசியல் காரணங்களுக்காகத் திருமணம் நடைபெறுகிறது. வேறு ஒருத்திக்கு கணவனாகிய பொழுதும் ஷாஜகானுக்கு மும்தாஜின் மேல் இருந்த காதல் மேலோங்க வளர்ந்ததேயொழியக் குறையவில்லை. மும்தாஜ் தனது தந்தையின் சகோதரியும், கணவனின் தாயாருமாகிய நூர்ஜகானைப் பல விதங்களிலும் ஒத்து இருந்தாலும், மாமியாரைப் போல் அல்லாது மிகவும் இரக்க குணமும், தாராள மனமும் கொண்டவள். மும்தாஜின் இயற்பெயர் Arjumand Banu என்றாலும், 1627ல் ஷாஜகான் தான் சக்கரவர்த்தியாக வந்த பொழுது அவள் மேல் ஏற்பட்ட நம்பிக்கை காரணமாக அவளுக்கு அரச முத்திரையாகிய Muhr Ugal என்பதை வழங்கியதால் அவளின் பெயர் மும்தாஜ் என அழைக்கப்பட்டது. இந்த அரச முத்திரையை வழங்கிய பின்பு அரசன் மனம் மாறினாலும் அதனைத் திருப்பி எடுக்க முடியாது. ஆனால் மும்தாஜின் நற்குணங்களுக்கு எடுத்துக்காட்டு யாதெனில் அவள் இந்த அரச முத்திரையை ஒரு பொழுதும் துஷ்பிரயோகம் செய்யவில்லை. அதற்கு மாறாக ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், விதவைகளுக்கும் உதவவே இதனை அவள் பயன்படுத்தினாள்.

ஷாஜகானின் ஒவ்வொரு நாளும் விடியற்காலை 4 மணிக்கு தொழுகையுடன் ஆரம்பித்து இரவு 10 மணிக்குத் தான் முடிவடையும். எவ்வளவு வேலைகள் இருந்தாலும் அவன் மும்தாஜிற்காக சிறிது நேரத்தையாவது ஒதுக்கத் தவறியதில்லை. வேறு நாடுகளுக்குச் செல்லும் பொழுது கூட மும்தாஜையும் அழைத்துச் செல்வது வழக்கம். இணை பிரியாத இவர்களின் 19 வருட இல் வாழ்க்கையில் இவர்களுக்குப் பதினான்கு குழந்தைகள் பிறந்தன. 1630ல் ஷாஜகான் பெக்கான்பூர் என்னும் இடத்திற்கு போர் நிமித்தம் செல்கிறான். எவ்வளவோ தடுத்தும் நிறைமாதக் கர்ப்பிணியான மும்தாஜ் அவன் கூடவே செல்கிறாள். சுகப் பிரசவமாக ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளதாக போர்க் களத்திற்குச் செய்தி சென்றடைகிறது. ஆயினும் போர் காரணமாக ஷாஜகானால் மும்தாஜை ஒரு வாரம் வரை பார்க்கப் போக முடியவில்லை. திடீரென அவளின் உடல்நிலையில் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் ஷாஜகானை உடனடியாக வரும்படியும் அழைப்பு வருகிறது. ஷாஜகான் விரைந்து சென்று தனது அன்பு மனைவியின் பக்கத்தில் முழந்தாள் இட்டு அவள் கைகளைப் பற்றுகிறான். அவள் தங்களின் தூய காதலின் சின்னமாக ஒரு ஸ்தூபி கட்டும்படி வேண்டுகோள் விடுக்கிறாள். அத்துடன் அவளின் உயிர் பிரிகிறது. 39 வயதான ஷாஜகான் துணையை இழந்த அன்றில் பறவை போலத் துடிதுடித்து விம்மி, விம்மி அழுகிறான். தொடர்ந்து ஒரு வாரத்திற்கு அன்ன, ஆகாரமின்றி அறையைப் பூட்டியபடி இருக்கிறான். அறைக்குள் இருந்து சதா விம்மல் சத்தமே கேட்டபடி இருக்கிறது. ஒரு கிழமையால் அறையை விட்டு வெளியே வந்த ஷாஜகானை அடையாளம் காண முடியாத அளவுக்குத் துன்பம் மாற்றி விட்டது. முடி நரைத்து, உடல் தளர்ந்து வயோதிபர் போல் காட்சி அளிக்கிறான். அன்றிலிருந்து வெள்ளைத் துணியால் செய்யப்பட்ட சாதாரண ஆடைகளையே அணிகிறார். மொகலாயச் சக்கரவர்த்திகளுக்கேயுரிய மிடுக்குடன் தங்கமும், வைரமும், இரத்தினக் கற்களும் இழைத்த ஆடைகளையே என்றும் அணிந்தவர் ஷாஜகான். அவரின் உடைகளின் பாரம் அவரைத் தாக்காதவாறு அவரது அங்கவஸ்திரங்களை இரண்டு அடிமைகள் சதா தூக்கியபடியே செல்வதுண்டு. எனது வாழ்க்கையில் எல்லாமே முடிந்து விட்டது. "நான் ஒரு பிச்சைக்காரனாகவே வாழ ஆசைப்படுகிறேன் (fakir)" எனப் புலம்புகின்றார். அடுத்த 22 வருடங்களையும் தனது ஆருயிர் மனைவியின் இறுதி ஆசையை நிறைவேற்றுவதிலேயே தனது துன்பத்தை மூழ்கடிக்கிறார். மும்தாஜ் கூட இத்தகைய ஒரு உலக அதிசயமாக விளங்கப் போகும் ஒரு ஞாபகச் சின்னத்தை தனக்காகத் தன் கணவன் நிறுவுவான் என நினைத்திருக்க மாட்டாள். ஆனால் ஷாஜகானின் அன்புக் காணிக்கை என்றென்றும் அவர்களின் காதலைப் பறை சாற்றும் ஒரு சின்னமாக விளங்கும் வகையில் அவன் இரவு பகலாக மெய்வருத்தம் பாராது 22 வருட காலத்தை இதற்காகவே வாழ்கிறான்.

தாஜ்மஹால் கட்டிடக் கலையின் வியக்கத்தகு அதிசயங்களில் (Architechtural wonder) ஒன்றாகும். இதனை வடிவமைத்துக் கொடுத்த கட்டிடக் கலைஞர் யார் என்பது பற்றி சரியான விளக்கம் காணப்படவில்லை. ஷாஜகான் ஒரு மரத்தினால் தாஜ்மஹாலின் மாதிரியைச் செய்து சமர்ப்பிக்கும்படி வேண்டியதாகவும், துருக்கியைச் சார்ந்த Ustad Isa Afandi என்பவரின் மாதிரியையே அவர் தெரிவு செய்ததாகவும் சான்றுகள் உள்ளன. தாஜ்மஹால் போன்ற ஒரு சின்னத்தை ஷாஜகான் போன்ற ஒரு சக்கரவர்த்தியால் தான் கட்டி எழுப்ப முடியும் எனக் கருத வேண்டும். ஏனெனில் ஷாஜகானின் சொத்தை மதிப்பிடும்படி அவரின் மகன் ஔரங்கசீப் கேட்டதாகவும், அதற்கு நிபுணர்கள் அவ்வாறு செய்வதற்கு 14 வருடங்கள் பிடிக்கும் எனக் கூறியதாகவும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து ஷாஜகான் எத்தகைய செல்வத்திற்கு அதிபதியாக விளங்கினார் என்பது புலனாகின்றது. இந்தியாவின் பல

(எதிர்ப்பக்கம் வருக)

பகுதிகளிலிருந்தும் மாணிக்கக் கற்கள், 466.55 கிலோ தங்கம், உலகின் பல பாகங்களிலிருந்து வருவிக்கப்பட்ட இரத்தினக் கற்கள் இந்தப் பளிங்கு மண்டபத்தை நிர்மாணிப்பதற்குப் பாவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 20,000 தொழிலாளர்கள், 22 வருடங்களாக இரவு பகலாகத் தொழில் புரிந்தனராம். அவர்களைத் தவறாது ஒவ்வொரு நாளும் ஷாஜகான் சென்று மேற்பார்வையிடுவாராம். எங்கள் வழிகாட்டி நிர்மாண வேலைகள் நடைபெறும் காலத்தில் எவ்வளவு ஒரு சந்தடி கூடிய இடமாக அந்த இடம் காணப்பட்டிருக்கும் எனக் கற்பனை பண்ணிப் பார்க்கும்படி கூறினார். உண்மையிலேயே எவ்வளவு வேலையாட்களின் நடமாட்டம் அப்பிரதேசத்தில் 22 வருடங்களாக இருந்திருக்கும் என நினைக்கும் பொழுது மனித உழைப்பின் மேன்மையை வியக்காமல் இருக்க முடியாது.

ஜமுனா நதி அதன் போக்கிலிருந்து தாஜ்மஹாலின் அத்திவாரத்தை அரவணைத்துச் செல்லும் வகையில் திசை திருப்பப்பட்டது. அதனை தடுப்பதற்காகப் பாவிக்கப்பட்ட அணைக்கட்டின் கற்களைக் கழட்டுவதற்கு ஐந்து வருடங்கள் பிடிக்கும் எனக் கணக்கிட்டனர். ஆயினும் அதனைப் பிரிப்போர் தாம் பிரித்த கற்களைத் தாமே வைத்துக் கொள்ளலாம் என்று ஷாஜகான் அறிவித்தல் விடுத்தார். அறிவித்தல் விடுத்த மறுகணமே மக்கள் அதனைப் பிரிக்கத் தொடங்கி ஒரு இரவுப் பொழுதிலேயே எல்லாக் கற்களையும் பிரித்து எடுத்ததாகக் கூறப்படுகிறது.

தாஜ்மஹாலின் உள்ளே மும்தாஜினதும், ஷாஜகானினதும் நினைவு அறைகள் ஒரு சிறு பகுதியினையே பிடித்துள்ளன. பெரியதொரு வாயில்புற வட்டத்தினூடாகவே முதன் முதலில் நாம் தாஜ்மஹாலைக் காண்கிறோம். அந்த வில்லு வடிவமான வாசலின் ஊடாக முதன் முதலாக தாஜ்மஹாலைப் பார்க்கும் பொழுது ஏற்படும் உணர்ச்சி ஒரு விபரிக்க முடியாத உணர்ச்சியாகும். ஏகாந்தமாக, தனித்துவமாக அது வானளாவி நிற்கிறது. பெண்மை நிறைந்ததும், புனிதம் நிறைந்ததுமான ஒரு சின்னமாக அது தோன்றுகிறது. இந்த வாசல் வழியாகச் சிறிது தூரம் உள்ளே சென்ற பின்பு தாஜ்மஹாலை அடைகிறோம். அங்கும் ஒரு வில்லு வடிவமான பிரமாண்டமான வாசலை வெளிப்புறத்தில் காண்கிறோம். அந்த வாயிலில் அரேபிய மொழியில் குரானிலிருந்து வாசகங்கள் கறுப்பு நிறத்தில் எழுதப்பட்டுள்ளன. இதன் சிறப்பு அம்சம் யாதெனில் இவ் எழுத்துக்கள் மையினாலோ, பூச்சுக் கலவையினாலோ எழுதப்படவில்லை. காலத்தினால் அழிந்து போகாதவாறு எல்லா எழுத்துக்களும் கறுப்பு பளிங்குக் கற்களால் பதியப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி எல்லா எழுத்துக்களும் ஒரே அளவினதாக தோற்றம் அளிப்பதற்காக விகிதாசாரப்படி அடியிலிருந்து நுனிவரை கூட்டப்பட்டு ஒரே மாதிரி காட்சியளிக்கின்றன. 580 மீற்றர் உயரமும், 305 மிற்றர் அகலமும் கொண்ட இந்த பாரிய வாசலுக்கு மேலே 11 சிறு.கோபுரங்கள் உள்ளன. தாஜ்மஹாலின் 4 பக்கங்களிலும் நான்கு கோபுரங்கள் காணப்படுகின்றன. இது ஒரு இளவரசியைச் சுற்றி 4 சேவகப் பெண்கள் நிற்பது போன்ற பிரமையை உண்டு பண்ணுகின்றது.

தாஜ்மஹாலைக் கட்டப் பாவிக்கப்பட்ட பளிங்குக் கற்கள் மக்ரானா பளிங்குக் கற்கள் ஆகும். இவை தனித்தன்மை வாய்ந்தவை. சூரிய வெளிச்சத்திற்கேற்ப நிறம் மாறும் தன்மையுடையவை. நாங்கள் சென்ற சமயம் காலை 10 மணி இருக்கும். அப்பொழுது றோஸ் நிறமாகக் காட்சியளித்தது. வெள்ளை, சாம்பல், ஊதா, சிவப்பு, மென்கறுப்பு முதலிய நிறங்களாக இது சூரியனின் வெளிச்சத்திற்குத் தக்கபடி மாறிக் காட்சியளிக்கும். நாங்கள் சென்ற சமயம் ஒரு ஐரோப்பிய தம்பதிகள் தமது கைக் குழந்தையுடன் விடியற்காலை தொடங்கி ஒவ்வொரு முறை நிறம் மாறும் பொழுதும் புகைப்படங்கள் எடுத்தபடி இருந்தனர். தாங்கள் அன்றைய பொழுதை இவ்வாறு கழிக்கப் போவதாகச் சொன்னார்கள். இது ஒரு பெண்மையும், மென்மையும் நிறைந்து காணப்படுகின்றது (Utterly Feminine and Delicate). நடுவில் காணப்படும் கூம்பக வடிவம் பால் நிறைந்த ஒரு பெண்ணின் மார்பகத்தை ஒத்திருப்பதாக எமது வழிகாட்டி கூறினார்.

தாஜ்மஹாலின் நாலாபுறமும் அழகிய சோலை காணப்படுகின்றது. பின்பக்கத்தில் ஜமுனா நதி ஓடியபடி உள்ளது. முன்பக்கத்தில் 24 தண்ணீரை உயரப் பாய்ச்சும் குழாய்கள் (Fountains) காணப்படுகின்றன. இவை ஒரு நீள் சதுர தடாகத்துள் உள்ளன. தாஜ்மஹாலின் அழகிற்கு அழகூட்டும் வகையில் இத் தடாகம் அளவில் விகிதாசாரப்படி கட்டப்பட்டுள்ளது. அத்துடன் எந்நேரமும் தாஜ்மஹாலின் பிம்பம் இந் நீர் தடாகத்துள் விழுந்தபடி இருக்கிறது. தாஜ்மஹால் முழுவதும் மிகவும் நுண்ணிய நெருக்கமான பூ வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பூவிலும் எத்தனையோ நிறங்கள் காணப்படுகின்றன. அத்தனையும் வர்ண, வர்ண பளிங்குக் கற்களாகும். ஒரு இடத்திலாவது வர்ணப் பூச்சு காணப்படவில்லை. ஒவ்வொரு சிறு அம்சத்திலும் 20,000 தொழிலாளரின் 22 வருட உழைப்பின் மகோன்னதத்தையே காண்கிறோம். இந்தப் பெரிய கட்டடத்தில் ஒரே ஒரு செயற்கை விளக்கு மாத்திரம் காணப்படுகின்றது. அது எகிப்து நாட்டில் செய்யப்பட்டு உருவாக்கப்பட்டு மும்தாஜின் சமாதியின் மேல் தொங்கவிடப்பட்டுள்ளது. இந்த இரு சமாதிகளையும் சுற்றி ஒரு மறைப்புக் காணப்படுகின்றது. வெண் பளிங்குக் கற்களால் மிகவும் நுட்பமாக வெட்டு வேலை செய்யப்பட்டு யானைத் தந்தத்தினால் இழைத்ததோ என்ற பிரமையை இது ஏற்படுத்துகிறது. உலகிலேயே இத்தகைய ஒரு வெட்டு வேலை (Filigree work) இவ்வளவு நுட்பமானது, இங்கு தான் காணப்படுகிறதாம். ஷாஜகானின் சமாதியின் மேல் குரான் வாசகங்கள் ஒன்றும் எழுதப்படவில்லை. அவரின் புதல்வன் ஔரங்கசீப் அவ்வாறு இறை வாசகங்களை எழுதுவது சரியல்ல என்று கூறிவிட்டாராம். ஆனால் நூர்ஜகானின் சமாதியில் குரான் வாசகங்கள் காணப்படுகின்றன. 1658ல் அதாவது தாஜ்மஹால் கட்டப்பட்டு எட்டு வருடங்களின் பின்பு ஔரங்கசீப் தனது தந்தையாகிய ஷாஜகானை சிவப்புக் கோட்டையில் (Red Fort) சிறை வைக்கிறான். 1966ல் அதாவது தனது 74வது வயதில் 35 வருட காலம் மும்தாஜ் இல்லாமல் தனிமரமாக வாழ்ந்து ஷாஜகான் இவ்வுலகை விட்டு நீங்குகிறான்.

எந்த ஒரு பொருளின் சிறப்பும் பார்வையாளரின் உணர்ச்சிகளிலேயே தங்கியுள்ளது. தாஜ்மஹாலைப் பொறுத்தமட்டில் இது நூற்றுக்கு நூறு வீதம் பொருத்தம். இந்த உலக அதிசயத்தைப் பார்க்க நாளாந்தம் நூற்றுக் கணக்கான மக்கள் வந்து போனபடி இருக்கிறார்கள். 1652ல் தாஜ்மஹால் கட்டி முடிக்கப்பட்டது. அதாவது அதன் வயது இப்பொழுது 350 வருடங்கள் ஆகும். கோடனுகோடி மக்கள் அதனை இற்றைவரை பார்த்திருப்பார்கள். கட்டடக் கலையின் மகோன்னதத்தை பறைசாற்றும் ஒரு சின்னமாக இதனைச் சிலர் கருதலாம். பளிங்குக் கற்களின் சிறப்பினைக் காட்டும் ஒரு சின்னமாக இதனை வேறு சிலர் பார்க்கலாம். காதலின் மேன்மையைப் பிரதிபலிக்கும் ஒரு சின்னமாகவே இதனைப் பலரும் பார்க்கிறார்கள். ஒரு கணவன் தனது மனைவியின் மேல் கொண்ட ஆராக் காதல், தூய அன்பு, அளவிட முடியாத பாசம், பாரிய அன்னியோன்யம், அவள் இறந்த பின்பும் அவனை வாழ வைத்த அவள் பற்றிய உணர்வுகள், மனைவியின் இறுதி ஆசைக்கு ஒரு கணவன் அளித்த மதிப்பு, முக்கியத்துவம், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் இருவரும் இறந்தும் இற்றைவரை அவர்களின் அன்பை உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஒரு காதல் சின்னமாகவே இதனை நாம் பார்க்க வேண்டும். அந்தக் காலைப் பொழுதில் ஆக்ராவின் பனிப் புகாரின் பின்னணியில் பெண்மையோடும் மென்மையோடும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்தக் காதல் சின்னத்தில் இரு இளம் உள்ளங்களின் காதல் காவியத்தையே நான் கண்டேன்.

நம் தாய் நாட்டில் பெண்கள் வளர்ந்த விதம் வேறு, வாழ்ந்த வகை வேறு, கடைப்பிடித்த நெறிமுறைகள் வேறு. எத்தனையோ லட்சம் பெண்கள் அதே நாட்டில், அதே முறையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற போது, நம்மைப் போன்ற பல்லாயிரக் கணக்கான பெண்கள் தாய் நாட்டை விட்டும், தமிழ்ச் சூழ்நிலையை நீக்கியும் இப்படிப் பல்வேறு நாடுகளுக்குப் பல்வேறு சொந்தக் காரணங்களை முன்னிட்டு வாழ வந்து விட்டோம்.

'வந்து பிறந்து விட்டேன்! வாழத் தெரியவில்லை!' என்ற பழைய பாடல் வரி ஒன்று இதை எழுதும் போது நினைவிற்குள் ஓடுகின்றது. வெளிநாடுகளுக்குப் பயணப்படும் எல்லாப் பெண்களுமே உலக அறிவு மிகுந்தவர்களாகவோ, ஆங்கில அறிவிற் சிறந்தவர்களாகவோ, படித்துப் பட்டம் பெற்றவர்களாகவோ, தொழில் மேதைகளாகவோ, நாகரிக மேம்பாட்டைக் கற்றுத் தேர்ந்தவர்களாகவோ உருவெடுத்து வருவதில்லை. மேலைத்தேய நாகரிகங்களையும், வாழ்க்கை முறைகளையும் அறிந்து வந்துள்ளவர்களைப் பற்றிப் பிரச்சனையில்லை.

எதுவும் தெரியாதே! எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? என்ற கவலையுடன் இங்கு வந்து அந்தக் கவலையை மாற்றும் வழிகளைத் தேடாமல், அதற்குரிய முயற்சிகளில் சற்றும் ஈடுபடாமல், 'ஏன் வந்தேன் என்றிருக்கிறது, திரும்பவும் அங்கேயே போய் விடலாமா என்று யோசிக்கின்றேன்' என்று தளர்ந்த மனதுடன், நம்பிக்கையிழந்த குரலுடன் பேசிக் கொண்டிருக்கும் சகோதரர்களுக்குத் தான் இந்த உற்சாகக் கட்டுரை.

துணிவு: நாம் இங்கு வந்த பிறகு இங்குள்ள காலநிலை மாற்றத்திற்காகவோ, வெயிலின் கொடுமை, பனி, குளிர் பாதிப்பிற்கோ கலங்கிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. 'வந்து விட்டோம்; வாழத்தான் வேண்டும்' என்ற துணிவு நம்முள் உடனடியாகத் தோன்றி விட வேண்டும். துணிந்து நில்; தொடர்ந்து செல்; தோல்வி கிடையாது என்ற தாரக மந்திரத்தை உருப்போட வேண்டும்.

என்னுயிர்த் தோழி! கேளொரு சேதி!



விஜயா ராமன்

அன்றாட வாழ்க்கை முறை: வந்த நாட்டின் வாழ்க்கை முறைகளை நாம் படிப்படியாகக் கற்றுக் கொள்ளப் பழக வேண்டும். சட்டத்திற்கு மதிப்புக் கொடுக்க உறுதி எடுக்க வேண்டும். நமது நாட்டில் சனத்தொகைப் பெருக்கத்தால், படிப்பறிவின்மையால் பல முறையற்ற செயல்கள், ஒழுங்கின்மை ஆகியவை பொது வாழ்வில் இன்றும் இருக்கின்றன. நாம் வந்துள்ள இந்த நாடுகள் நாகரிக முன்னேற்றமும், சரியான சட்டதிட்டங்களும் கொண்டு சமுதாயத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றன. அதைச் சீர்கேடு அடையச் செய்யும் செயல்களை நாம் செய்யக் கூடாது. எடுத்துக் காட்டாக, சுத்தம் பற்றி நாம் மிகக் கவனமாக, அக்கறையுடன் சிந்தித்துச் செயல்பட வேண்டும். உணவுப் பொருள்களைச் சாப்பிட்டு விட்டு தூக்கி எறிவது, எச்சில் துப்புவது, வேண்டாத குப்பைகளைத் தயங்காமல் வெளியில் போட்டுச் செல்வது போன்றவற்றை இங்கு வந்த பெரும்பாலான புலம்பெயர்ந்தவர்கள் செய்கின்றனர். மூன்றாம் உலக நாடுகள் (Third world countries) என்று கேவலப்படுத்திப் பேசும் அளவிற்கு இந்த மக்களின் நடவடிக்கைகள் அமைந்து நமக்கு வெட்கத்தைத் தருகின்றன.

ஊரைத் திருத்த நம்மால் முடியாது. ஆனால் நாம் திருந்த முடியும். நமது அன்புக் குடும்பத்திற்கு நாம் இவற்றைப் பற்றி எடுத்துச் சொல்லித் திருத்த முடியும். எனவே எப்பொழுதெல்லாம் இப்படித் தவறு செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றனவோ, அப்போதெல்லாம் நாம் அதைத் தடுத்துச் சரிப்படுத்த வேண்டும்.

சாலை விதிகளை மீறி நடப்பது, தரக் குறைவான செயல்களைச் செய்வது, நம் சமுதாயத்தைப் பற்றித் தாழ்வாகப் பிறர் பேசும்படியான தவறுகளைச் செய்வது போன்றவற்றிலிருந்து நமது பெற்றோரையும், கணவரையும், குழந்தைகளையும் தடுத்து, கௌரவமான நடவடிக்கைகளில் ஈடுபடும்படி உணர்த்துவது நம் பெண்களின் அன்றாடக் கடமையாக ஆகி விடவேண்டும்.

பொறுப்பு: இப்படி மற்றவர்களைத் திருத்த வேண்டிய பொறுப்பில் இருக்கின்ற நாம், எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இது மிகப் பெரிய பிரச்சனை. இன்று புலம்பெயர்ந்த பெரும்பாலான குடும்பங்கள் அன்றாடம் சந்திக்கின்ற பிரச்சனை. இதைப் பற்றிக் கட்டாயம் பெண்களாகிய நாம் நடுநிலையில் நின்று, தெளிந்த மனதுடன் சிந்திக்கத் தான் வேண்டும்.

இங்கு வந்தபின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, வசதியான வாழ்விற்காகப் பொழுது போவதற்காக என்று பல்வேறு காரணங்களால் பெண்களும் வேலைகளுக்குப் போகின்றனர். சமுதாய வாழ்வில் ஈடுபடுகின்றனர். இது நம் நாட்டிலும் உள்ளது தானே என்று சொல்லலாம். ஆம்! ஆனால் இங்கு கூடுதலான பல பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. அதற்கு ஒரு பெண்ணால் எப்படி ஈடு கொடுக்க வேண்டியிருக்கும்?

இன்றைய தலைமுறையில் பெண்கள் வேலைக்குப் போகத் தொடங்கியவுடன் ஆண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை வந்துவிட்டது. இருவரும் வேலைகளைப் பங்கு போட்டுக் கொண்டு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் இதில் தான் சிக்கலே! இருவரையும் 'ஈகோ' படுத்தும்பாடு இருக்கிறதே! அது பல குடும்பங்களின் பிரிவிற்குத் தான் வழி வகுக்கின்றது.

இந்த நாட்டில் எல்லாவற்றிற்குமே அளவுக்கு மீறிய சுதந்திரம். யார் எதை வேண்டுமானாலும் செய்யலாம். எல்லோருக்குமே உரிமைகள் அதிகம். விவரமறியாத சிறுவர்கள் கூடத் துணிவாகச் சட்டத்தைத் துணைக்கழைத்துப் பெற்றோரைக் கூண்டில் நிறுத்தலாம். கணவனைத் துப்பறிய ஏற்பாடு செய்யும் மனைவிகளும், மனைவியைக் கண்காணித்துத் தகவலறிய அலையும் ஆண்களும், வீட்டிற்குத் தெரியாமல் குழுக்களில் சிக்கிச் சீரழியும் இளைஞர் சமுதாயமும், இவர்களைப் பாழாக்குவதற்கென்றே செயற்பட்டுக் கொண்டிருக்கும் 'மீடியா'க்களும் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இந்தச் சூழ்நிலையில் தான் பெண்களின் பொறுப்பு மும்மடங்காகப் பெருகுகின்றது. முதலில் ஒரு பெண் தான் நல்லவளாகத் தன் குடும்ப நலனை மனதிற் கொண்டு, சமுதாய மதிப்பைப் பெற வேண்டிய நோக்கத்தையும் மேற்கொண்டு, தனது தாய்நாட்டுக் கலாசாரத்தை வெளிப்படுத்தும் ஓர் அடையாளமாகவும் செயற்பட வேண்டியிருக்கிறது. இதைத் தான் திருவள்ளுவர், "தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற சொற்காத்துச்

(எதிர்ப்பக்கம் வருக)

சோர்விலாள் பெண்" என்று அன்றே குறளாக்கித் தந்துள்ளார்.

தலைமைப் பண்பு: ஒரு பெண் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரையும் தன் நெறியாக்கத்தில் இயங்கக் கூடியவர்களாக மாற்ற வேண்டும். அதற்கு அவள் பல்வேறு தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும். இதற்கு முதலாக இங்கு வாழும் பெண் சொல்லாலும், செயலாலும், சிந்தனையாலும் தான் ஒரு தமிழ்ப் பெண் என்ற உணர்வை எப்பொழுதும் கொண்டவளாக இருக்க வேண்டும். தனது பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றின் அடிப்படை நீரோட்டத்தை உணர்ந்தவளாகத் திகழ வேண்டும். கீதையின் பொருளைத் தன் குண இயல்பாகக் கொண்டவளாக விளங்க வேண்டும்.

இப்படிச் சொல்லியிருப்பதை ஆழ்ந்து சிந்தித்தாலே, திரும்பத் திரும்ப ஆராய்ந்தாலே நாம் வந்த இடத்தில் எப்படி வாழ வேண்டும் என்பது புலப்பட்டு விடும்.

சற்றே வெளிப்படையாகச் சொல்வதானால் சகிப்புத் தன்மையுடன் பொறுமையுடன், பொறுப்பு உணர்ந்து, அன்பை வெளிப்படுத்தி, அறவழி நின்று, நல்லனவற்றையே நாடி, அல்லாதவற்றை நீக்கி, கட்டளையிடாமல், தனது விருப்பத்தை வேண்டுகோளாக்கிப் பிறரையும் மதித்துச் சோம்பலின்றி, விட்டுக் கொடுத்து, சுயமதிப்புடன் வாழ, விழிப்புணர்ச்சியுடன் பயிற்சி செய்து கொண்டே இருந்தால் அந்தப் பெண் மட்டுமல்ல, அவளைச் சார்ந்த அனைவரும் நலம் பெறுவர்.

இறைபக்தி: எல்லாவற்றிற்கும் மேலாக, எவன் ஒருவன் தனது செயல்களையெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றானோ, தனக்கு வருபவை எல்லாம் தனது செயல்களின் விளைவே என்பதை உணர்ந்து, அதனை இறைவனின் அருட்பிரசாதமாக எண்ணி ஏற்று அமைதி அடைகிறானோ அவனுக்கு அல்லது அவளுக்கு இன்பமுமில்லை, துன்பமுமில்லை; எங்கும் வாழலாம். அப்படிப்பட்டவர்களை நான்கு பேராவது மதிப்பார்கள். அவர்களின் வாழ்க்கை அவர்களைப் பொறுத்தவரை நிறைவாழ்க்கையாகவே அமையும் என்பது உறுதி.

முடிவு: இவ்வாறு மனதைப் பக்குவப்படுத்தி, இனிமேலாவது நாம் தன் நிலை தாழாமல், சுயபச்சாதாபமோ (self pity) எதிர்மறைச் சிந்தனையோ (negative thoughts) ஒன்றுமில்லாததைப் பெரிதுபடுத்தித் தானும் கஷ்டப்பட்டு நம்மைச் சார்ந்தவரையும் துன்பத்தில் ஆழ்த்தி நொந்து வருந்தாமல், மலர்ந்த முகத்துடன் வருவதை ஏற்கப் பழகுவோம்! சரிதானே!

தமிழகத்தின் இசைப் பாடல்களை பற்றிய ஆய்வு இது எனக் கருதி ஆர்வத்துடன் படிக்க ஆரம்பிக்கும் வாசகர்கள் தயது செய்து பக்கங்களைப் புரட்டி விட்டு மற்றக் கட்டுரைக்குப் போய் விடுங்கள்... மற்றவர்கள் தொடர்ந்து படியுங்கள்.

ஆறு தசாப்தங்களுக்கு முன் 1940களில் கொடி கட்டிப் பறந்த நடிகர் - பாடகர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பாடிய பாடல் "தீன கருணாகரனே நடராஜா, நீலகண்டனே!" என்பது. பட்டிதொட்டியெல்லாம் முழங்கிய பாடல் இது. MKT என்று செல்லமாக குறிப்பிடப்பட்ட தியாகராஜ பாகவதர் பாடிய "மன்மத லீலையை வென்றார் உண்டோ" பாடலைப் பாடாத வாயும் வாயல்ல என்று கருதப்பட்ட காலம் அது. இப்படி நூற்றுக்கணக்கில் - அவர் பாடிய பாடல்கள் - 50 களில் அவர் மறைந்த பின்னர் - பாடல் தொகுப்புக்களாக வெளியிடப்பட்டு இன்றும் பலர் வீடுகளில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. "பலர்" என்று நான் குறிப்பிட்டது பாட்டாக்களை அல்ல, இன்று நடுத்தர வயதினராக இருக்கும் நமது தமிழீழ இசை ரசிகர்களையும் தான்.

தமிழ் நாட்டைத் தாய்நாடாகக் கருதும் அன்றைய தமிழீழ ரசிகர்கள் சினிமாவில் மெய்மறந்து திரிந்தார்கள். MKT அழுத போது அழுது, சிரித்த போது சிரித்து அவர் உயிர் துறந்த போது தாங்களும் - உயிர் துறக்க எத்தனித்தார்கள். தமிழக சினிமாவிடம் அவர்கள் தம்மை மட்டும் அடகு வைக்கவில்லை தமது எதிர்கால சந்ததியினரையே அடகு வைத்தார்கள். இன்று மீட்க முடியாத ஆழத்தில் சுமையுடன் மூழ்கிப் போயிருக்கிறார்கள் இன்றைய தலைமுறையினர்.

"இதென்னையா MKT என்கிறீர் - சந்ததி மூழ்கியது என்கிறீர் - யாருக்குக் காது குத்துகிறீர்?" என்று முணுமுணுக்கிறீர்களா? விஷயத்திற்கு வருகின்றேன். MKT, MGR, ரஜனி என்றும் சரோஜாதேவி, சிம்ரன், சிநேகா என்றும் ஈழத் தமிழர்கள் மீது ஒரு படை எடுப்பு. கல்கண்டு, குமுதம், பொம்மை, பேசும்படம், விகடன், ஜூனியர் விகடன் என்றொரு படை எடுப்பு! ஈழத் தமிழர்களின் தனியான கலை கலாசாரம் ரசனை என்று ஒன்று உருவாக விடாமல் தடுத்து



"தீன கருணாகரனே..." தொடக்கம் "மம்முத ராசா" வரை!

விமல் சொக்கநாதன்

தமது எண்ணங்களை, கலை உணர்வுகளை, தமது சிந்தனைகளை எம்மீது திணித்துக் கொண்டிருந்தார்கள் தென்னிந்திய வர்த்தகர்களான - வாசன், மெய்யப்பன், தமிழ்வாணன் போன்றவர்கள் அன்று.

இலங்கைத் தமிழர்கள் என்றொரு இனத்தவர் இருக்கிறார்கள், அவர்களுக்கும் உணர்வுகள் இருக்கின்றன, ரசனைகள் இருக்கின்றன என்று 1950/60 களில் சிந்திக்க மறுத்த தமிழக வியாபாரிகள் இலங்கைத் தமிழர்களை பர்மீயத் தமிழர் - மலேஷிய - சிங்கப்பூர் தமிழர் போல தமது சந்தைகளில் ஒன்றாகவே கருதினார்கள். "இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் சரியாக பேசத் தெரியாது. இலங்கை வானொலியில் பேசுவது பேசப்படுவது விசித்திரமான ஒரு தமிழ்..." என்றெல்லாம் கேலி செய்தார்கள் தமிழ் நாட்டவர்கள்.

50/60/70 களில் தமிழ்நாட்டு திரைப் படங்களும் - சஞ்சிகைகளும் இலங்கையில் பெருமளவில் வெற்றி பெற்றன. பெருந்தொகையான பணத்தைச் சுருட்டிக் கொண்டிருந்தன. இலங்கையில் திறமை மிக்க கலைஞர்கள் படைப்பாளிகள் தயாரித்த திரைப்படங்கள் தோல்வி கண்டன. எள்ளி நகையாடப்பட்டன. துடிப்பான இளைஞர்களால் பெரும் பணச் செலவில் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் ஒன்றன் பின் ஒன்றாக மண் கவ்வின. ஆமாம், இது கூட ஒரு போராட்டம் தானே! ஒரு பேரினவாதத் தாக்குதலை எதிர்கொண்ட வீரர்கள், புறமுதுகு காட்டி ஓடாமல் களத்தில் பலியாகி இன்று துயிலும் இல்லங்களில் தமிழீழத்தில் மட்டுமல்ல அதற்கு வெளியே கொழும்பில் கண்டியில் பேருவளையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் துயின்று கொண்டிருக்கிறார்கள்.

"தாய் நாடு" என்று கருதப்பட்ட தமிழ்நாட்டு சஞ்சிகைகளைப் போல, சினிமாப் படங்களைப் போல சஞ்சிகைகளை, சினிமாப் படங்களை தயாரித்து வெளியிட்டு, தங்கள் திறமைகளை

(மறுபக்கம் வருக)

வெளிக்காட்டலாம் என்று இளைஞர்கள் பலர் 60/70 களில் முன்வந்தனர். அவர்களுக்கு நிதி உதவி தர நல்லெண்ணம் கொண்ட செல்வந்தர்களும் முன்வந்தார்கள். ஆனால் என்ன பயன்? வெள்ளையர் காலத்தில் வாழ்ந்த எட்டப்பன்கள், விடுதலைப் புலிகளின் இன்றைய யுகத்தில் வாழும் எட்டப்பன்கள் - இடைநடுவில் 60/70 களில் இல்லாமல் போவார்களா? தமிழ்நாட்டு முதலைகள் வீசி எறிந்த எச்சில் உணவை ருசிப்பதற்காக ஈழத் தமிழர்களின் கலைத் தாகங்களை நசுக்கி பல தடைகளைப் போட்டார்கள். உதாரணம் - ஈழத்தவர் தயாரித்த தமிழ்ப்படம் கொழும்பில் திரையிடப்படும் முதல் நாளன்று எட்டப்பன் தியேட்டர்களில் புத்தம் புதிய எம்.ஜி.ஆர் படம் திரையிடப்பட்டது.

குமுதம் போல ஆனந்தவிகடன் போல கவர்ச்சியான பேப்பரில் அட்டை போட்டு ஈழத்தில் புதிய தமிழ் சஞ்சிகை வெளியிட்டாலும் கடைக்காரர்கள் - "பி.சி.சுந்தரம் அன்டு சன்ஸ்" என்ற ஏகவிநியோகத்தருக்குப் பயந்து ஈழத்து சஞ்சிகைகளை ஓரம் கட்டினார்கள். இந்தப் 'போராட்டம்' உச்சக் கட்டத்தில் இருக்கும் போது - சமுதாயம், தோட்டக்காரி - கடமையின் எல்லை, டாக்ஸி டிரைவர் - குத்துவிளக்கு, புதிய காற்று என்று ஈழத்துத் திரைப்படங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கும் போது இலங்கை வானொலியில் ஈழத்துப் பாடல்கள் என்ற ஒரு புதிய நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு - புதிய பாடகர்கள், புதிய இசை அமைப்பாளர்கள் பலர் தலை தூக்கத் தொடங்கினார்கள். ஆனால் அது கூட நீடிக்கவில்லை; நிலைக்கவில்லை.

85க்கும் 90க்கும் இடைப்பட்ட காலம், மக்கள் புலம்பெயர்ந்த காலம். அனைத்தையும் இழந்து ஏதுமே இல்லாமல் "ஏதிலிகளாக" ஐரோப்பாவில் கனடாவில் போய் இறங்கிய ஈழத் தமிழர்கள் - தமது கடின உழைப்பில் - செல்வந் திரட்டி வேருன்றத் தொடங்கினார்கள். கனடாவில், பாரிஸில், லண்டனில் தாமுண்டு தம் வேலையுண்டு என்று பல வருட காலமாக வாழ்ந்து வந்த இந்தியத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களின் திறமை பற்றி, பணபலம் - செல்வம் பற்றி, ஊடகத்துறை ஆதிக்கம் பற்றி தமிழ்நாட்டுக்கு தகவல் அனுப்பினார்கள்.

தமிழ்நாட்டு இளைய தலைமுறை வியாபாரிகள் ஏ.வி.மெய்யப்பனின் புதல்வர்கள், தமிழ்வாணனின் புதல்வர்கள், முரசொலி மாறனின் புதல்வர்கள் இந்த ஈழத் தமிழர்களின் பண பலத்தை தமக்கு சாதகமாக்கத் திட்டம் தீட்டினார்கள். எட்டப்பன்களின் உதவிகளை நாடினார்கள். முள்ளை முள்ளால் எடுப்பது போல வெற்றியுடன் திகழ்ந்த ஈழத் தமிழ் பத்திரிகைகளை, தொலைக்காட்சிகளை முறியடிக்க நசுக்கிவிட திட்டம் தீட்டினார்கள். இப்போது அதில் வெற்றி கண்டு வருகின்றார்கள். ஈழத் தமிழர்கள் இளிச்சவாயன்கள்! உண்மையான புலி வீரர்கள் வன்னியில் போராடுகின்றார்கள்.. "மேனாடுகளில் பணவசதியுடன், வாழும் ஈழத் தமிழனை இலகுவில் நசுக்கலாம்; ரம்பாவின் தொடை அழகை, "சின்னவீடா வரட்டுமா" போன்ற குலுக்கல் நடனங்களை, நர்த்தகி ரீமா சென்னின் பின்புறத்தை அவர்களுக்குக் காட்டி விட்டால் போதும் - பவுண்டுகளை, டாலர்களை, யூரோக்களை கொட்டி வருவார்கள்!" - என்று கணக்குப் போட்டு வைத்திருக்கிறார்கள் மாறன் புதல்வர்கள். தமது தமிழ்நாட்டு டி.வியை ஐரோப்பாவுக்கு கொண்டு வந்து 5 மாதம் இலவசமாக ஒளிபரப்ப - மற்ற நிறுவனங்களைத் தோல்வி காணச் செய்து இன்று ஐரோப்பாவில் ஏகபோக தமிழ் டி.வி நிறுவனமாக திகழ்கிறது இந்த தமிழ்நாட்டு டி.வி. ஐரோப்பாவின் முதலாவது தமிழ் தொலைக்காட்சி ரி.ஆர்.ரி தொலைக்காட்சி பாரிஸில் 1997ல் ஆரம்பமான போது பொதுமக்கள் இலவச ஆலோசகர்களாக மாறி "ஏன் ஐஸே இப்படிச் செய்தால் என்ன?" என்று அறிவுரைகளை கொட்டித் தீர்த்தார்கள். பின்னர் TTN தமிழ் தொலைக்காட்சி, தீபம் தொலைக்காட்சி போன்ற ஈழத்தவர் தொலைக்காட்சிகளுக்கும் இதே ஆலோசனை தான். இதோ இப்போது 24 மணி நேரம் தமிழ்நாட்டு சன் டி.வி ஐரோப்பாவில் இல்லங்களில் எல்லாம் முழங்குகிறது. ஆனால் ஆலோசனை வழங்குவோரைக் காணோம்.

சிக் ஷம்பூ, அவிட்டா மசாலா, வீக்கோ டர்மரிக், ஆவின் பால் - போன்ற நாம் பார்க்காத, கேட்காத, வாங்க விரும்பாத, தேவைப்படாத விளம்பரங்கள் எமது சுற்றாடலை களங்கப்படுத்துகின்றன. சன் டி.வி செய்தி அறிவிப்பாளர்கள் படிக்கும் தமிழ் - உச்சரிப்பு - செய்தி வாசிக்கும் தொனி, வயிற்றைக் குமட்டுகிறது.

ஆனால் என்ன செய்வது? புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பணபலத்தால் பெரும் பணம் திரட்டுவது தமிழ்நாட்டு வியாபாரிகள் தான்! தமிழ் நாட்டு சினிமாப் படங்கள் பூஜை போடும் போது இலண்டனில் வாழும் ஈழத் தமிழ் வர்த்தகப் பிரமுகர் ஒருவரை அழைத்து மாலை போட்டு அவருக்கு உலக உரிமைகளை விற்று அவர் வழங்கும் பிரிட்டிஷ் ஸ்ரேலிங் பணத்தில் தான் படத்தையே தயாரித்து முடிக்கின்றார்கள்!

70களில் ஈழத் தமிழர்கள் பேசத் தெரியாதவர்கள், பாடத் தெரியாதவர்கள், எழுதத் தெரியாதவர்கள் என்று ஏளனம் செய்த தமிழக வியாபாரிகள் இன்று ஈழத் தமிழர்களின் 'பிஸினஸ்' கிடைக்க வேண்டும் என்பதற்காக - குமுதம் பத்திரிகையில் "யாழ் மணம்" என்று நான்கு பக்கம். அத்துடன் இலங்கையின் கவிதைகள்! இப்படி ஈழத்தவரை கவர முற்படுவது சஞ்சிகைகள் மட்டுமல்ல சினிமாக்காரர்களும் தான். தெனாலி, நந்தா, கன்னத்தில் முத்தமிட்டால், நளதமயந்தி போன்ற அரை வேக்காட்டுத் தமிழ்ப் படங்களை எடுத்து ஈழத் தமிழர்களைக் கவர விரும்பிய சினிமா வியாபாரிகள் - ஈழத் தமிழர்களின் ஆத்திரத்தையே சம்பாதித்தார்கள். 'சன் ரிவி'யில் இரவு நேரங்களில் ஒரு நிகழ்ச்சி. அதன் பெயர் 'கமெடி ரைம்'. தமிழ்நாடு முழுவதிலுமிருந்து அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்படும் நேயர்கள், ஏதோ கமெடி என்ற பெயரில் சித்திரவதை பண்ணுகின்றார்கள். அந்த நிகழ்ச்சியில் தற்போது டென்மார்க்கிலிருந்து ஒரு குரல்; லண்டனிலிருந்து ஒரு குரல், ஜேர்மனியிலிருந்து ஒரு குரல் என்று நிறைய ஈழத்தமிழர் குரல்களைச் சேர்த்து, பலர் வெளிநாடுகளிலிருந்து பேசுவதாகக் காட்டுகின்றார்கள். இதற்குக் காரணம், அந்தந்த நாடுகளிலெல்லாம் ஈழத்தமிழர்கள் 'சன் ரிவி'யைப் பார்க்கின்றார்கள் என்று காட்டுவதற்காக - இது ஒரு வர்த்தக உத்தி.


நான் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரிட்டனில் - சரித்திரம் மீண்டும் திரும்பியதைக் கண்டேன். இந்திய சஞ்சிகைகளின் போட்டி தாங்க மாட்டாமல் ஈழத்து சஞ்சிகைகள் ஈழத்தில் 1970 களில் மண் கவ்வியது பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இங்கு லண்டனில் - ஈழத்தவர்கள் பலர் பெரும் பணச்செலவில் ஆரம்பித்த தமிழ் சஞ்சிகைகள் பல பத்திரிகைகள் பல ஒன்றன் பின் ஒன்றாக தோல்வி காணத் தொடங்கியதை இப்போது கண்டுகொண்டிருக்கின்றேன். "வேண்டாம் இந்த வேலை இனி நமக்கு" என்று முதலீட்டாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் கை கழுவி விட்டார்கள். தமிழ்நாட்டின் குங்குமம் - குமுதம் போன்ற சஞ்சிகைகளின் தாக்கமே இந்த விபரீதத்தை ஏற்படுத்துகிறது. புலம்பெயர்ந்து வாழும் தமிழீழத்தவர்கள் எப்போது விழித்துக் கொள்ளப் போகிறார்கள்?

எமது படைப்பு. எமது படைப்பாற்றல், எமது கவிதை, எமது நடனம், எமது ஒலிபரப்பாற்றல் ஆகியன எம்மோடு சேர்த்து மண்ணுக்குள் புதைக்கப்பட வேண்டுமா? ஒருவேளை அதுதான் எங்கள் தலை எழுத்தோ? எமது சுத்தமான தமிழ் உச்சரிப்பு விழலுக்கு இறைத்த நீராக மாறுவதா? நாங்களும் 'சன்' டி.வி போல, 'பென்கள்' 'பில்லைகள்' ''மணைவி' என்று பழக்கதோஷத்தால் பேசப் போகிறோமா?

சிங்களப் பேரினவாதியைக் கூட நாம் வெற்றி கண்டு வருகிறோம். ஆனால், கூட இருந்து "குலி" பறிக்கும் "தமில்" நாட்டு வியாபாரிகள் காலடியில் நாம் சரண் அடைய வேண்டுமா? ஈழத் தமிழன் தூக்கத்திலிருந்து விரைவில் எழாவிட்டால் "'ஈலத் தமிலன் எலுதப் பேச தெறியாதவன்" என்ற கூற்று உண்மையாகி விடும். அப்புறம் நாங்கள் அனைவரும் "மம்முத ராசா" பாடல் நடனத்தை ரசிப்பவர்களாக தனுஷின் புகைப்படத்தை வணங்குபவர்களாக மாற வேண்டியது தான்!!

சன் டியர்...!
Sun Dear...!



கனடா மூர்த்தி

கனடாவின் ஈழத்தமிழரின் சைவக் கோயில் ஒன்று. பலர் வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். வழமை போல இராக்கால பூஜை அமர்க்களமாக நடைபெறுகிறது. ஒரு வயதான அம்மையார் பூஜையின் போது இருப்புக் கொள்ளாமல் வழிபட்டுக் கொண்டிருக்கிறார். பூஜை முடிந்ததும் முடியாததுமாக அந்த வயதான அம்மையார் தன் மகனை அவசரப்படுத்தியவாறே புறப்படுகிறார். பூஜையின் போதே தன் தாயின் தவிப்பைக் கவனித்திருந்த மகனும் என்னவோ ஏதோ என அவசர அவசரமாக வீட்டுக்குப் புறப்படுகிறான். கோயில் வாசலைத் தாண்டும் போது தான் தாய் சொல்கிறார் "கெதியா வீட்டுக்குப் போவமடா மேனை.... இரண்டு நாடகம் எப்பவோ முடிஞ்சிருக்கும்... இப்ப மூண்டாவதும் தொடங்கியிருக்கும்."

'சன்' தொலைக்காட்சி கனடாவிலும் தெரியத் தொடங்கிய பின் இங்குள்ள ஈழத்தமிழ் மக்களிடையே நிகழ்ந்து கொண்டிருக்கும் பல்வேறு 'நிகழ்ச்சிகளில்' இதுவும் ஒன்று.

ஒரு காலத்தில் இலங்கை வானொலி உலகெல்லாம் வாழும் தமிழ் மக்களை கம்பீரமாக இணைத்தது நமக்கெல்லாம் ஞாபகமிருக்கலாம். பிபிஸியின் ஆளுமையின் பிரதிபலிப்பாகத் தேசிய சேவையும், தமிழில் ஜனரஞ்சக ஒலிபரப்புக்கு முன்னோடியாக வர்த்தக சேவையும் அமைந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமானது பிற நாடுகளில் இலங்கைத் தமிழருக்குப் புகழ் அள்ளித் தரும் தொடர்பு சாதனமாக விளங்கியது. கொழும்பிலிருந்து கேட்கும் வானலைகளைப் போல் ஒரு வானொலியைத் தமக்கென உருவாக்க முடியாமல் தமிழகத்து ஜாம்பவான்கள் திணறினர். ரேடியோ சிலோன் கேட்க முடிந்தால் தான் அது நல்ல ரேடியோப் பெட்டி என்ற எண்ணம் தமிழகத்தில் மட்டுமல்ல, ஆசிய சேவை மூலம் வட இந்தியாவிலும் சிங்கப்பூர் மலேசியாவிலும் பரவியிருந்தது. இந்திய திரைப்படப் பாடல்களை மட்டும் நம்பிக் கொண்டு இயங்கினாலும் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு ஒருகாலத்தில் ஒரு சகாப்தமாக விளங்கியது. ஆனால் வானொலிக்கு அடுத்த பரிமாணமான தொலைக்காட்சியில் இலங்கையர்கள் கோட்டை விட்டு விட்டார்கள். தமிழ் சினிமாவாலும், தமிழ் சஞ்சிகைகளாலும், தமிழ்ப் புத்தகங்களாலும் தன் மேலாண்மையை உலகத் தமிழர்களிடம் காட்டி வரும் தமிழகம் இன்று தொலைக்காட்சியிலும் தன் 'ஆளுமை'மையைக் காட்டி வருகின்றது. பதினொரு வருடங்களுக்கு முன் தான் இதற்கான விதை போடப்பட்டது. ஹொங்கொங்கின் ஸ்டார் தொலைக்காட்சி ஒளிபரப்பு இந்தியாவிற்கு தெரிய ஆரம்பித்த காலகட்டத்தில், தமிழகத்து முரசொலி மாறன் குடும்பத்தினருக்கு அரசியல் பிரச்சாரத்திற்காகச் செயற்கைக் கோள் தொலைக்காட்சி முறையை உபயோகித்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். ஸ்டாருக்கு மாற்றீடாக 'சன்' உருவானது. அதற்கு முன் பூமாலை என்ற பெயரில் தாம் நடத்திய வீடியோ சஞ்சிகையை, தமிழ்மாலை என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியாக்கி ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் விண்ணிலிருந்து தவழ விட்டார்கள். அந்த சூரியத் தொலைக்காட்சி ஒரு சூரன் போல ஆகி, இன்று சூரியன் அஸ்தமிக்காத தமிழ் சாம்ராஜ்யத்தையே வெற்றிகரமாகக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறது.

ஆனால் இந்த வெற்றி ஆரோக்கியமானதா என்பது தான் இன்றைய கேள்வி. உலகெங்கும் தெரிகிறது என்பது வெற்றியே அல்ல. அது தொழில்நுட்ப முன்னேற்றம் தான். அதற்கு பொருளாதார பலம் இருந்தாலே போதுமானது. அதிகம் பேர் பார்க்கிறார்கள் என்பது கூட வெற்றியாகுமா? அதிகம் பேர் வாக்களிக்கிறார்கள் அல்லது ஆதரிக்கிறார்கள் என்பதால் ஒரு விடயம் நல்ல தேர்வாகி விட முடியாதல்லவா... அது போலத்தான் இதுவும். 'தொகை' வேறு 'தரம்' வேறு. மக்களின் அசமந்தப் போக்கினைச் சாதகமாகப் பயன்படுத்தி ஒருவிதமான மாயை பல இடங்களில் உருவாகுமே அந்த வகை மாயை தான் இந்த 'சன்' தொகைக்காட்சியின் வெற்றி. தொலைக்காட்சிப் பெட்டியை இடியட்பொக்ஸ் என ஆங்கிலத்தில் செல்லமாக கொஞ்சுவார்கள். வீட்டுக்குள்ளேயே புகுந்து தன்னைப் பார்ப்பவரை மூளைச் சலவை செய்துவிடும் வல்லமை கொண்டது அது என்பதையே வஞ்சப் புகழ்ச்சியாக அப்படிச் சொல்வார்கள். 'சன்'னின் புலம்பெயர்ந்த ஈழத்தமிழருக்கிடையேயான வருகை இந்த இடியட்பொக்ஸ் 'வரைவிலக்கணத்திற்கு மிகப் பொருத்தமாகத் தென்படுகிறது. 'சன்' ஒளிபரப்பின் விளைவாக தொலைக்காட்சி ரசனை மூளைச்சலவை செய்யப்பட்டு மலினப்படுத்தப்படுகிறது. வளர்ந்த நாடுகளின் பெருந் தொகைக்காட்சிகளின் ஒளிபரப்புப் பாணியோடு 'சன்'னை ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் தர வித்தியாசம் அப்பட்டமாகத் தெரியும்.

உலகார்ந்த சகல தமிழர்களுக்காகவும் ஒளிபரப்பாகும் பெருந் தொலைக்காட்சியாக 'சன்'னைக் கருத முடியுமா என்றால் அதற்கு இல்லை என்பதே பதிலாக அமைகிறது. இதன் அர்த்தம் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களைக் குஷிப்படுத்தும் விதத்தில் அரசியல் செய்திகளோ அல்லது பொழுது போக்கு நிகழ்ச்சிகளோ அதில் இடம்பெறவில்லையே என்கின்ற வருத்தமல்ல. 'சன்'னின் ஒளிபரப்புப் பாணி தமிழ்நாட்டின் தமிழர்களுக்கு ஏற்றவிதமாக மட்டுமே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்தத் தொலைக்காட்சி தமிழ்நாட்டு மக்களுக்கே உரித்தானது என்ற எண்ணப்பாட்டைத் தான் 'சன்' தனது நிகழ்ச்சிகள் மூலம் உலகமெங்கும் தெளிவுபடுத்தி வருகிறது. 'சன்' தொலைக்காட்சி தமிழகத்தின் தமிழருக்கான ஒரு மாற்றுப் போதை மருந்தாகும். அது தமிழகத்தின் பரபரப்புப் பத்திரிகை, சஞ்சிகைகளினதும், தமிழக சினிமாவினதும் கூட்டு வடிசாராயமாகும். அதில் ஈழத் தமிழர்களும் கனடாவரை மயங்கியிருக்கிறார்கள் என்பது தான் யதார்த்தம்.

'இது நமக்கென்று ஓர் தொலைக்காட்சி' அல்ல என்று புரிந்து கொண்டு 'சன்' நிகழ்ச்சிகளின் உள்ளோட்டத்தைக் கவனித்தால் அதில் பொழுதுபோக்கு அம்சங்களுக்கே முதலிடம் தரப்படுவதும், செய்தியும், அறிவியலும் ஊறுகாய் போல இடப்படுவதும் கவனத்திற்படும். வியாபார அளவில் தொலைக்காட்சி வெற்றி பெற நிகழ்ச்சிகள் அப்படித்தான் இருக்கும் என்ற சமாதானத்தை ஏற்றுக் கொள்வோமாக. ஆனால் அப்படித் தரப்படும் நிகழ்ச்சிகளின் (மறுபக்கம் வருக)

உள்ளடக்கம் உலகார்ந்த தமிழ்த் தரத்திற்குப் பொருத்தமானதா என்றால் இதற்கும் பதில் இல்லை என்பதேயாகும்.

முதலில் செய்திகள்...! வளர்ந்த நாடுகளின் பெருந் தொலைக்காட்சி சேவைகள் வெறுமனே பொழுதுபோக்குக்காக இயங்கி வருபவை மட்டுமல்ல. ஆலயம், பாராளுமன்றம், நீதிமன்றம்,பத்திரிகை எனும் வரிசையில் வரும் ஒரு சக்தி வாய்ந்த ஐந்தாவது ஸ்தாபனமாக தொலைக்காட்சி கணிக்கப்படுகிறது. இந்த பெருமைக்குக் காரணம் மக்களுக்குத் தகவல் தருகின்ற தார்மீகப் பொறுப்பு தொலைக்காட்சிக்கு இருப்பதனாலாகும். இதனால் தான் வளர்ந்த நாடுகளின் பெருந் தொலைக்காட்சி நிறுவனங்கள் தாம் எந்த முதலாளியின் கீழ் இயங்கினாலும் தகவல்களை, நடப்புச் செய்திகளைத் தரும் போது, அவற்றை உலகத் தரத்துடன் கவனமாகவும், கட்டுக்கோப்புடனும், நடுநிலையாகத் தெரியக் கூடியதாகவும், பிரச்சாரம் இல்லாமலும் (அப்படியே பிரச்சாரத்தேவை இருந்தாலும் கூட அது முட்டாள்தனமாக அப்பட்டமாக வெளியே தெரியாத மாதிரியாகவும்) தயாரிக்கின்றன. இந்த வகையில் வரும் தகவல் தராதரமே அவற்றை ஒளிபரப்பு நிலையம் என்ற நிலையிலிருந்து பெருந் தொலைக்காட்சி நிறுவனங்களாக மாற்றி வைக்கின்றன.

உலகம் முழுவதும் ஒளிபரப்பப்படுவதன் மூலம் 'சன்' தன்னை ஒரு பெருந் தொலைக்காட்சி நிறுவனமாகப் பிரகடனப்படுத்தி வந்தாலும், 'சன்' தரும் தகவல்கள் மாறிவரும் சர்வதேச அரசியல், பொருளாதார மாற்றங்களை கணக்கில் எடுத்து உலகத் தரத்தோடு படைக்கப்படுவதில்லை. முன்னே குறிப்பிட்டது போல தமிழகத்தின் குடிமக்களுக்குப் பொருத்தமான வகையில் மட்டுமே 'சன்' தரும் தகவல்கள் அமைந்து இருக்கின்றன. அரசியல் செய்திகளைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கட்சியை முன்னேற்றும் வகையில் தான் 'சன்'னின் செய்திப் பார்வை இருக்கிறது. தனது செய்திகள் மூலம் திமுகவின் அரசியல் எதிரிகளை மட்டும் தட்டும் அவசரமும், திமுகவை அப்பழுக்கற்ற இயக்கமாக காட்டும் ஆசையும் 'சன்' செய்திகளில்வெளிப்படையாகத் தெரிகின்றன. தொலைக்காட்சிக்கு அரசியல் பின்னணி இருந்தால் நடுநிலை என்ற பேச்சுக்கே அங்கு இடம் இல்லை என்பது புரிந்து போவதால் 'சன்'னின் நம்பகத்தன்மை சுலபமாக அடிபட்டுப் போகிறது. அதுமட்டுமல்ல, செய்திகளைக் கவனித்துப் பார்த்தால் நக்கீரன், ஜூனியர்விகடன் போன்ற தமிழக சஞ்சிகைகள் தரும் பரபரப்பு புலனாய்வு செய்தியமைப்பு முறை தான் 'சன்'னின் செய்தியமைப்பு முறையாகவும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளை போன்றவற்றை 'சன்' விவரிக்கும் முறை அந்தப் பரபரப்புச் சஞ்சிகைகளை போட்டிக்கு இழுப்பது போல் இருக்கும்.

உள்ளடக்கத்தின் பின்னணி இப்படி இருக்கிறது என்றால், 'சன்'னின் படைப்புப் பாணியும் உலகார்ந்த தமிழ்த் தரத்திற்கு ஏற்றதாகத் தென்படுவதில்லை. மிரட்டுவது போன்ற 'சன்' செய்திகளின் அறிவிப்பு முறை ஆரம்ப காலத்தில் பலத்த எரிச்சல் மூட்டுவதாகவும், சிரிப்புக்கிடமானதாகவும் இருந்தாலும் இப்போது அந்த பாணி பழக்கப்பட்டு வருகிறது. 'சன்'னைப் பொறுத்தவரை செய்திகள் தமிழகத்தில் ஒரு குக்கிராமத்தில் சாதாரணமாக நடந்தாலும் சரி, உலக அளவில் பெரிதாக நடந்திருந்தாலும் சரி ஒரேவகையான அழுத்தத்தோடு தான் தெரிவிக்கப்படும். செய்திகளை வாசித்து முடிக்கும் போது 'பரபரப்பு ஏற்பட்டது', 'பீதி ஏற்பட்டது' என்று முத்தாய்ப்பு வைக்கும் போது தமாஷாக இருக்கும். தமிழரல்லாதவர்களின் பெயர்களை 'சன்'னில் செய்தி வாசிப்பவர்கள் உச்சரிக்கையில் இன்னும் வேடிக்கையாக இருக்கும். குறைந்தபட்சம், ஆங்கிலத் தொலைக்காட்சிகளைப் பார்த்தாவது வேற்றுமொழிப் பெயர்களின் பொதுப்படையான உச்சரிப்புகளைப் பயின்று கொள்ளலாமே எனத் தோன்றும். அதிகம் போவானேன்... அவர்களது இந்திய பிரதமரே இந்த உச்சரிப்புக் கொடுமையில் அடிக்கடி மாட்டுவார். சில செய்தி அறிவிப்பாளர்கள் வாஜ்பேயி என்பார்கள். சிலர் வாஜ்பாயி என்பார்கள். சிலர் வாஜ்பாய் என்பார்கள். சிலர் வாஜ்பேய் என்பார்கள். புவர் போஃய்.

ஆங்கிலக் கலப்பு என்ற குற்றச்சாட்டு தமிழக சினிமா மீது வீசப்படுவது போலவே 'சன்' உட்படப் பல தமிழகத்துத் தொலைக்காட்சிகள் மீதும் பலரால் அள்ளி வீசப்படுகின்றது. 'சன்' ஒரு தமிழ்த் தொலைக்காட்சி எனப்பட்டாலும் அதில் நாம் கேட்பது தனித் தமிழாக இல்லை. ஆயினும் இந்தக் குற்றச்சாட்டை 'சன்' மீது கண்மூடித்தனமாகச் சுமத்துவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. தமிழக வாழ்க்கை முறையில் பல ஆங்கிலச் சொற்கள் இன்று விகல்பமேயில்லாமல் புதுத் தமிழாக உருமாறி வருகின்றன. (உதாரணத்துக்கு சூப்பர், டென்ஷன், கரெக்ட்டு போன்ற சொற்கள்) இப்போது தமிழகத்தில் பரவலாகப் பாவனையிலிருக்கின்ற அந்தச் சொற்கள் சில நூற்றாண்டு தாண்டினால் முற்றுமுழுதாகத் தமிழ் என்றே எடுத்துக் கொள்ளப்பட்டாலும் ஆச்சரியமில்லை. இது தான் யதார்த்தம். இதற்குச் சாட்சியாக எந்த அளவுக்கு ஆங்கிலச் சொற்கள் அடிமட்டத்துத் தமிழக மக்களிடையேயும் எந்தவித பாரபட்சமுமின்றி வேரூன்றியிருக்கின்றது என்பதை 'சன்' நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது யாரோ ஒரு சாதாரண பட்டிக்காட்டுப் பொதுஜனம் எங்கோ ஒரு குக்கிராமத்திலிருந்து பேசும் போது கூட ஒரு வாக்கியத்தில் சாதாரணமாக எத்தனை ஆங்கிலச் சொற்களை இயல்பாகவே கலந்து பேசுகிறது என்பதைக் கவனித்துப் பாருங்கள். படித்தவர்கள், சினிமா நடிக, நடிகையர், தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் 'தமிங்கிலிஷ்' பேசும் போது ஒருவித கேலிப் புன்னகை புலம்பெயர்ந்த தமிழர்களிடம் பூப்பதை நாம் உணர்ந்தாலும், தமிழகத் தமிழரின் வாழ்க்கை முறையில் ஆங்கிலக் கலப்பு என்பது வேறு பரிமாணத்துக்கு போயிருப்பதையும் சிந்தித்து உணர வேண்டும். பலவேளைகளில் அவர்கள் உபயோகிக்கும் சொற்கள் நாம் அறியாத தமிழா அல்லது அறிந்த ஆங்கிலமா என்ற குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. சுருங்கச் சொன்னால், இந்த அவதானம் 'தமிழ் தோன்றிய மண்'ணின் யதார்த்தத்தை உணர்த்தும் ஒரு எச்சரிக்கை மணியாக மட்டுமே புலம்பெயர்ந்த தமிழர்களிடம் ஒலிக்க வேண்டும். கொடி அசைந்ததும் காற்று வந்ததா காற்று வந்ததும் கொடி அசைந்ததா என்பது கேள்வி அல்ல....பதில்!

அறிவியல் பஞ்சம் 'சன்' தொலைக்காட்சியில் நிறையவே உண்டு. இதைத் தீர்ப்பதற்காக அதில் ஒளிபரப்பாகும் திருக்குறளையும், சங்கத் தமிழையும் அறிவியல் என்றும் எடுத்துக் கொள்ளலாம். 'சன்'னில் விஞ்ஞான, மருத்துவ செய்திகள் இடம்பெற்றாலும் அது தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளின் தமிழ் அல்லாத தொலைக்காட்சிச் செய்திகளில் ஏற்கனவே எப்போதோ இடம்பெற்ற பழைய விபரங்களாகவே அவை இருக்கின்றன. அதைவிட வேடிக்கை என்னவென்றால் தமிழகத்தின் சிறுகிராமத்தில் நடக்கும் சம்பவங்கள் கூட விஎச்எஸ் கமராக்களாலாவது படம் பிடிக்கப்பட்டு 'சன்'னில் விளக்கமாகக் காண்பிக்கப்படுகின்றன. ஆனால் விபரமான உலகச் செய்திகளோ, நாளாந்த உலக செய்திகள் பற்றிய செய்திக் கண்ணோட்டங்களோ 'சன்'னில் இல்லவே இல்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் செய்திகளைக் காட்டிலும் செய்திக் கண்ணோட்டங்கள் அதிக தகவல்களை அள்ளித்தரும். ஒரு செய்தி பற்றி எதிர் எதிர் கருத்துகளைக் கொண்டிருப்பவர்களை வைத்து இரு பகுதி நியாயங்களையும் கேட்க நடுநிலையாக உருவாக்கப்பட்ட வடிவமைப்பு தான் செய்திக் கண்ணோட்டம். 'தெரிவிப்பது நீங்கள் - தீர்மானிப்பது நாங்கள்' என்ற நிலையில் பார்வையாளர்களை இருக்க வைக்க வேண்டியது செய்தி ஊடகம் எதுவாயினும் அதன் கடமை.

(எதிர்ப்பக்கம் வருக)

(தீர்மானிப்பதும், தெரிவிப்பதும் நாங்கள் என்றல்ல. அது சர்வாதிகாரம்) 'சன்'னில் இந்த முக்கியமான அம்சம் இல்லாமல் இருக்கிறது. ஆறுதல் தருவது போல கனடாவின் தமிழ் தொலைக்காட்சி ஒன்றில் செய்திக் கண்ணோட்டங்கள் இருந்தாலும்ம்ம்ம்ம்..... இதுபற்றி அடுத்த ஆண்டு மலரில் தான் விபரமாக எழுத வேண்டும்.

பொழுதுபோக்கு அம்சங்களுக்குத் தான் 'சன்'னில் குறைவேயில்லை. ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலே தான் சுகம் என்பது போல ஒரே கோலாகலம் தான். ஒரு 'மூவிநெட்வேர்க்' என வர்ணிக்கக் கூடிய அளவுக்கு தமிழ் சினிமா 'சன்'னின் நிகழ்ச்சிகளில் தாராளமான இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளில் கூட "கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா?" என்று 'சாமி'ப் பாட்டுக்கு மழலைகள் ஆடுகிறார்கள். தமிழ் சினிமாவும், தமிழ் சினிமாப் பாடல் காட்சிகளும் இந்தத் தொலைக்காட்சியில் திகட்டும் அளவுக்கு அதிகமோ அதிகம். உயரிய ஒளிப்பதிவுத் தரத்தோடு குறைந்த விலையில் கிடைக்கும் ஸாப்ட்வேர் (மென்பொருள்) என அதை அவர்கள் உபயோகிக்கிறார்களா அல்லது மக்களின் ரசனைக்கு இதுதான் சரியான தீனி என்று நினைக்கிறார்களா என்பது தான் பல வேளைகளில் புரிவதில்லை. பிள்ளையார் சதுர்த்தி, விஜயதசமி போன்ற சமயப் பண்டிகைகள் கூட தமிழ் சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் வருவதற்காகத்தான் உருவாக்கப்பட்டதோ என்கின்ற சந்தேகம் வருமளவிற்கு தமிழ் சினிமாவின் ஆதிக்கம் 'சன்' தொலைக்காட்சியில் மிகமிகமிக அதிகம்.

அடுத்து அதற்குப் போட்டியாக வருவது மெகா தொடர்கள் எனப்படும் நாடகத் தொடர்கள் தமிழகத்துச் சமையலறைகளில் சிக்கிய பெண்களுக்கான வடிகால் எனத் திட்டமிட்டு உருவாக்கப்படும் இத்தொடர்கள் இன்று தமிழகத்தில் தமிழ் சினிமாவுக்கான ஒரு மாற்றீடாகவும், கோடிக் கணக்கான ரூபாய்கள் புழங்கும் ஒரு தொழில்துறையாகவும் உருமாறி வருகிறது. வட அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற பல தமிழ் வீடியோ கடைக்காரர்கள் இத்தொடர்களை பதிவு செய்து வாடகைக்குக் கொடுப்பதன் மூலமே கணிசமான பணம் சம்பாதிக்கின்றார்கள் என்றால் புலம்பெயர்ந்த தமிழரிடையே கூட இத்தொடர்களின் பிரபல்யத்தை அறிந்து கொள்ளலாம். புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் தொலைக்காட்சிகள் கூட இத்தொடர்களை பட்டியலிட்டு பலத்த விளம்பரத்தோடு ஒளிபரப்புவதில் ஆர்வம் காட்டுகின்றன. இப்போதெல்லாம் தொலைக்காட்சியில் இத்தொடர்கள் ஒளிபரப்பாகும் போது குறிப்பிட்ட நேரத்தில் இவற்றைப் பார்ப்பதற்கென்றே வீட்டுக்கு விரையும் ஈழத்தமிழ் மக்களின் தொகையும் அதிகரித்து வருகிறது. பலர் இத்தொடர்களுக்கு ஒரு கொத்தடிமை போல மாறி வருவதும் கவனிக்கக் கூடியது. மேற்கு நாட்டுத் தொலைக்காட்சிகளிலும் "ஸோப்ஒபேரா" என அழைக்கப்படும் இவ்வகை நாடகத் தொடர்கள் இன்றுவரை பிரபல்யமாகவே இருக்கின்றன. வருடக் கணக்காக நடக்கும் இந்த "ஸோப்ஒபேரா'க்களின் வெற்றிக்கு ஆடை அலங்காரங்களில் கரிசனம், ஒப்பனை, சிகையலங்காரம், உயர்மட்ட வாழ்க்கை முறை, பாத்திரப் படைப்புகளின் சுவாரஸ்யம் என பல விடயங்களைக் காரணமாக சொல்வார்கள். ஆனால் தமிழக தொலைக்காட்சி நாடகத் தொடர்கள் ஒளிப்பதிவில் தரமோ கதையமைப்பில் புதுமையோ இல்லாத நிலையிலும், அழுகையோடு இழுவை என பலர் சலித்துக் கொள்ளும் வேளையிலும் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணம் இத் தொடர்களில் பெரும்பான்மையானவை நடுத்தரக் குடும்பங்களை கதை மையமாக வைத்து படைக்கப்படுவது தான். பார்வையாளர்கள் தம்மை இத்தொடரில் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். ஆறுதல் என்னவென்றால், தமிழ் சினிமா போல சண்டை, நடனம், இரட்டை அர்த்த வசனங்கள், ஆபாசம் என்பன இத்தொடர்களில் இல்லை. இத்தொடர்கள் போலவே நடுத்தரக் குடும்பத்தை மையமாக வைத்து மக்களை வசீகரிக்கும் தமிழ் நாடகத் தொடர்களின் முன்னோடியாகக் கூட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தான் திகழ்ந்தது என்பதை இவ்விடத்தில் நாம் மறந்து விடலாகாது. 'தணியாத தாகம்' போன்ற நாடகத் தொடர்கள் வானொலியில் ஒலிபரப்பான காலகட்டங்களில் லட்சக்கணக்கான மக்கள் வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிகளருகே காதை வைத்து காத்திருந்தோம் என்பதை இன்றும்பலர் ஞாபகம் வைத்திருப்பார்கள்.

'சன்' போன்ற தொலைக்காட்சியின் உலகளாவிய வெற்றிக்குக் காரணம் ஆலையில்லாத ஊரில் இலுப்பம் பூ சர்க்கரை என்ற நிலைமை தான் என்றால் அதில் தவறில்லை. 'சன்'னில் ஒளிபரப்பாகும் வர்த்தக விளம்பரங்களில் பெரும்பான்மையானவை உலகத் தரத்திற்குச் சமனாக தமிழில் உருவாக்கப்படுகின்ற காரணத்தால் 'சன்'னின் ஒளிபரப்பும் தரமானது போன்ற ஒரு மாயை இருக்கிறது. இந்த விளம்பரங்களால் மட்டும் 'சன்' ஒரு உலகத் தரமான தொலைக்காட்சி ஆகிவிட முடியாது. தொலைக்காட்சிக்கான இலக்கணம் 'சன்' தொலைக்காட்சியில் இல்லை என்பதை நாம் புரிந்து கொண்டாலும் இதற்கு மாற்றீடாக ஒரு தொலைக்காட்சியை புலம்பெயர்ந்த தமிழர்கள் உருவாக்கும் போது அதன் தரத்தையோ, தர்மத்தையோ நிர்ணயிப்பதற்கு பல காரணிகள் தடையாக இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. குறிப்பாக வர்த்தக ரீதியில் இயங்க பணம் ஒரு பிரச்சனை என பொதுவாகச் சொல்லப்படுகிறது. அட...! புலம்பெயர்ந்த தமிழர்களிடம் பணம் இல்லையா?! மிலலியன் கணக்கான டாலர்களை தமிழகத்து சினிமாத் தயாரிப்பாளருக்கு கொட்டிக் கொடுத்து.... போட்டி போட்டுக் கொண்டு வாங்கப்பட்டு பரபரப்பாகத் திரையிடப்படும் தமிழ் சினிமாக்கள் மட்டும் விநியோகஸ்தருக்கு இலாபம் கொடுக்கிறதே... அது எப்படி? அவ்வாறு தமிழ் சினிமா பார்ப்பதால் மில்லியன் டாலர் கணக்கில் பணத்தை அள்ளிக் கொடுப்பவர்கள் புலம்பெயர்ந்த இதே தமிழர்கள் தானே...?!

உலகத் தரத்திற்கு அமைவாக ஒரு மாற்றுத் தொலைக்காட்சி உருவாக முடியாமல் இருப்பதற்குப் பணம் நிச்சயமாக முதல் காரணியாக இருக்க முடியாது. தரம் தான் இதற்கான காரணம். ஈழத்தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும் வசதிகளை முறையாகக் கையாண்டால் உலகத் தரமான நிகழ்ச்சிகளை உருவாக்கித் தர புலம்பெயர்ந்த எமது தொலைக்காட்சியாளர்களாலும் நிச்சயமாக முடியும். எமது தொலைக்காட்சியாளர்கள் தேவையற்ற போட்டிகளில் நேரத்தை விரயம் செய்வதைத் தவிர்த்து விட்டு தரமான நிகழ்ச்சிகளைப் படைக்க தமது உழைப்பைச் செலவிடுவதே இதற்கு நல்ல மார்க்கமாகும். அவ்வாறு படைத்தோமேயானால் அவற்றை ஒளிபரப்ப இருபத்தினான்கு மணி நேரம் என்பது அதிக பட்ச வரப்பிரசாதமாகும். குறுகிய நேரமே ஒளிபரப்பினாலும் தொலைக்காட்சிக்குரிய வரைவிலக்கணத்தைப் புரிந்து கொண்டு சிங்கப்பூரில் தமிழ் நிகழ்ச்சிகளைத் தரமாகவும், வெற்றிகரமாகவும் செய்து காட்டி வருகிறார்கள். அரசியல் தொல்லைகளால் நல்ல வகையிலான தொலைக்காட்சியை நடத்துவது இந்தியா, இலங்கையில் சிரமமான காரியம் என்பது உண்மை தான். ஆனால் ஜனநாயகக் கனடாவில் அதை செய்து காட்ட நிச்சயமாக முடியும். அதன் மூலம் 'சன்' போன்ற தொலைக்காட்சிகளுக்கு உதாரணமாக மாறவும் நம்மால் முடியும்.

இந்த வெற்றியை எப்படித்தான் அடைவது?

நமது வாழ்க்கை எந்த அளவு நவீனத்துவம் பெற்றிருக்கிறதோ நமது சிந்தனைகளும் கண்ணோட்டங்களும் எந்த அளவு நவீனத்துவம் (மறுபக்கம் வருக)

கொண்டிருக்கின்றனவோ அந்த அளவுக்குத் தான் நமது கலைகளும்நவீனத்துவம் பெற இயலும். இதை இன்னொரு மாதிரியும் சொல்லலாம். ஒரு வாழ்க்கை எந்த அளவு நவீனத்துவம் பெற்றிருக்கிறது - ஒரு சமுதாயத்தின் சிந்தனைகளும், கண்ணோட்டங்களும் எந்த அளவு நவீனமுற்றிருக்கிறது என்பதை அந்த வாழ்க்கையின், அந்த சமுதாயத்தின் சமகால கலா முயற்சிகளிலிருந்து, இலக்கிய சாதனைகளிலிருந்து காணலாம். கலைகளின் உருவத்தில் மட்டுமல்லாமல் அவற்றின் உள்ளோட்டங்களிலும் அது புலனாகும்.

எனவே நமக்கென்று ஒரு தொலைக்காட்சி நன்கு அமைய நவீனத்துவம் குறித்த, உலகளாவிய தரம் பற்றிய பிரக்ஞை நமக்கு அவசியம். இதன் முதற்கட்டமாக 'தமிழீழக் கனடா'வின் ஊடகத் துறையைப் பொறுத்தவரை எந்த விடயத்தையும் கற்றுக் குட்டித்தனமாக செய்யும் போக்கிலிருந்து முதலில் நாம் விடுபட வேண்டியிருக்கிறது. நமது வளர்ச்சி பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கிறது என்பதற்காக நாம் செய்ய எடுத்துக் கொள்பவற்றின் தரமும் பூச்சியத்திலிருந்து தான் தொடங்கப்பட வேண்டும் என்பதில்லை. துரதிர்ஷ்டவசமாக எமது ஊடகவியலாளர்களில் அனேகமானோர் முறையான ஊடகம் சார் கல்வியோடோ அல்லது பின்னணியோடோ அல்லது அனுபவத்தோடோ தமது துறைக்கு வந்தவர்கள் அல்ல என்பதை அவர்களில் பலர் தத்தமது ஊடகத்தை கையாளும் முறைகளிலிருந்து காணக்கூடியதாக இருக்கிறது. அறியாமலிருந்தது ஒரு குற்றமல்ல, அறிய முயற்சிக்காமல் இருப்பது தான் வெட்கம். எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்களைத் தமிழுக்குக் கொணர்ந்து சேர்க்க அதிக தூரம் பயணம் செய்யத் தேவையில்லாத நிலையில் நாம் இருக்கிறோம். அதாவது நாம் புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் தான் தகவல் தரும் முறைகள் நன்கு வளர்ந்த நிலையில் சுற்றி வர இருக்கின்றனவே. அந்த வளர்ச்சியைக் கவனத்தில் எடுத்து - உள்ளடக்கத்திலும், படைப்பு முறையிலும் அவற்றை அப்படியே பிரதி பண்ணியாவது - தரமான விடயங்களை தமிழில் தருவதில் எதுவித சிக்கலும் இருக்கப் போவதில்லையல்லவா... அதையாவது நம் படைப்பாளிகள் செய்வதற்கு என்ன தடை? வானத்தைத் தொட முயற்சி செய்... சிகரத்தை இலகுவாகத் தொட்டு விடலாம்.... உன் படைப்பின் தரமும் ஆற்றலும் உயர்ந்து செல்லும் அதே நேரத்தில் படைப்பாற்றலுக்கு ஒரு வளர்ச்சி இருப்பது போலப் பார்வையாளனின் ரசனைக்கும் ஓர் ஆற்றலும், வளர்ச்சியும் உண்டு. தன் ரசனை உயர்வதை உணரும் பார்வையாளன் அதை கவனத்தில் எடுக்காத படைப்பாளியை அதற்கும் மேலான 'சிருஷ்டிகர்த்தா நிலையில் தன்னை வைத்து சுலபமாக நிராகரித்து விடுவான். எனவே நல்லதொரு மாற்று ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக 'சன்' போன்ற தொலைக்காட்சியின் தாக்கமும், ஆதிக்கமும் அதிகரிக்குமாயின் தரம் நோக்கிய நமது இலக்கு சிதைந்து தாழ்ந்து போய்விடும் சந்தர்ப்பம் மிக அதிகம்.

முன்பே குறிப்பிட்டது போல ஒரு தொலைக்காட்சியின் தார்மீகப் பொறுப்பு முறையான தகவல்களை வழங்குவதன் மூலம் மக்களை சுயமாகச் சிந்திக்கப் பழக்க வேண்டியதாகும். மக்களை மந்தைகளாக வைத்திருக்க அரசியல்வாதிகள் விருப்பப்படலாம். ஊடகவியலாளருக்கு அதை மறுக்கும் திராணி இருக்க வேண்டும். அதாவது சக்தி வாய்ந்த ஐந்தாவது ஸ்தாபனமாக தொலைக்காட்சி இருக்கின்றது என்ற பொறுப்புணர்வு தொலைக்காட்சியை நிர்வாகம் செய்பவர்களுக்கு இருக்க வேண்டியது மிக அவசியம். அத்தோடு தமிழருக்குத் தகவல் தருகிறோம் எனும் தார்மீகக் கவலை தொலைக்காட்சியை நிர்வகிப்பவர்களுக்கு இருக்க வேண்டும். ஆரோக்கியமான விடயங்களைச் சுவாரஸ்யமாகத் தரும் கலை அவர்களுக்கு கைவந்திருக்க வேண்டும். இவ்வகையில் பொழுதுபோக்கு, அறிவியல் நிகழ்ச்சிகள் வெற்றி பெற தரம் நோக்கிய தாகமும், தேடலும், அறிவும், ரசனையும் மிக அவசியம். செய்தி சார்ந்த நிகழ்ச்சிகள் வெற்றி பெற மாற்றுக் கருத்துகள், விமர்சனங்கள் என்பவற்றை சகிக்கவும், அனுமதிக்கவும் பழகுவது தான் முதல் கடமை.

ஆதங்கத்தோடு வெளியாகும் எந்த ஒரு ஆரோக்கியமான எண்ணக் கருத்தும் ஆற்றாமையாலோ அல்லது வயிற்றெரிச்சலாலோ செய்யப்படும் விமர்சனம் அல்ல. தமிழகத்து 'சன்' தொலைக்காட்சியை விமர்சிப்பதென்பது உலகளாவிய தொலைக்காட்சிச் சேவையை பெரும் தரம் கொண்டு நடத்துவதில் வல்லவர்கள் ஈழத்தமிழர்களின் ஒரு பகுதியினர் தான் என்று நிறுவுவதற்கு அல்ல. சுருங்கச் சொன்னால் 'சன்' தொலைக்காட்சியை பார்ப்பதன் மூலம் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஈழத்தமிழர்களைக் கவர்ந்து வருகிறது, எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை ஈழத்தமிழருக்குத் தரக் கூடாது என்பதை மட்டுமே உடனடியாக இங்குள்ள தொலைக்காட்சி ஊடகத்துறையினர் படித்துக் கொள்ளலாம்.

படித்தால் மட்டும் போதுமா?

EELAM TAMILS

Sri Lanka is situated at southern tip of India. Sri Lanka is the name of the island earlier known as Ceylon. "Ceylon" is the name by which the island came to be known to the outside world after Portuguese occupied it in the early 16th Century. It is a medium-sized island, and is strategically situated in the Indian Ocean. It was a trading port in the age of early European maritime adventure and a strategic naval base in the age of imperialism. Before 1500 AC there were two states in the island, the Tamil state and the Sinhala state.

The Tamils and the Sinhalese, the two indigenous peoples, called the country by various titles at different periods. The new name "Sri Lanka" was bestowed by the Republican constitution on 22 May 1972 by the Sinhala government. The Tamils continued to call the country "Ilankai". The Tamil consciousness led to the naming of the north and east of Sri Lanka, the Tamil traditional homelands as Tamil Eelam.

Sri Lanka is a country of heterogeneous culture, with two separate and distinct ethno-linguistic nations, namely the Sinhala nation and the Tamil nation and four great religions - Hinduism, Buddhism, Christianity and Islam. For reasons of history, the Sinhalese live in the west, south and centre, and the Tamils in the north and east. Until the administrative unification of the country by the British in 1833, this pattern of distribution was one of mutual exclusiveness. This was a natural result of differences in language, religion and culture and of political organisation from time immemorial under separate Sinhalese and Tamil kingdoms. The areas the Sinhalese and the Tamils occupied were their traditional and exclusive sovereign homelands, to which they owed their first loyalty.

புலம்பெயர்ந்து வந்து வேறு ஒரு நாட்டில் புதிய ஒரு சூழலில் வாழ்பவர்கள் முதலில் விட்டு வந்தவைகளை நினைத்து ஏங்குபவர்களாக இருந்து, காலப் போக்கில் அந்த சூழலுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் பரிச்சயப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால் முழுமையாக அதனோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள விரும்பும் அடுத்த தலைமுறையின் வருகையோடு தான் அவர்கள் தங்கள் அடையாளங்களை பேண வேண்டியதன் அவசரத்தை உணர்ந்து கொண்டு பரபரப்படைகிறார்கள். அதன் விளைவாக அவற்றை மீண்டும் தங்கள் இனத்தின் அடையாளங்களாக தங்கள் இளைய தலைமுறையினரிடம் வற்புறுத்திக் கையளிக்கிறார்கள். இளைய தலைமுறையினர் அந்த அடையாளங்களை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறார்கள் அல்லது ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பது சற்று சிந்தனைக்குரியதே.

இனத்துக்குரிய அடையாளங்களில் கலை வெளிப்பாடும் முக்கியமானது. பாரம்பரிய கலை வடிவங்களான கர்நாடக இசை, பரதநாட்டியம் என்பனவற்றை அட்சரசுத்தமாக வழிமுறை வழிமுறையாக வந்த வரைமுறைகளின்படியே கற்று, அவற்றை அப்படியே அரங்கேற்றி திருப்தி காணும் பிள்ளைகளும், பெற்றோரும் இங்கு நிறையவே உள்ளனர்.

இதற்கு விதிவிலக்காக மெல்லிசை, திரையிசை, நடனம், நாடகம், தொலைக்காட்சித் திரைப்படங்கள் என்றெல்லாம் முயற்சிகள் தொடரத்தான் செய்கின்றன. புத்தகங்கள், சீ.டி இசைத்தட்டு, வீடியோ நாடா வெளியீடுகள் கோடை கால வார இறுதிகளில் ஆரம்பித்து பனிக்காலம் வரை தொடர்கின்றன.

சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்கள் தவிர்ந்தால் இதே முயற்சிகளில் ஈடுபட்டவர்கள், ஈடுபடப் போகிறவர்கள் என்று குறுகிய வட்டத்துக்குள் அடங்கிய பார்வையாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் இந்த முயற்சிகள் அனேகமாக எல்லாமே குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடும் முயற்சிகளாகவே படுகின்றன.

எமது சமூகத்தின் உள்ளேயே ஒரு பரந்துபட்ட பிரிவினரைக் கூடச் சென்றடைய முடியாத நிலையில் இக் கலைமுயற்சிகள் தோன்றியதும், மறைந்ததுமாக போய்விடும் நிலையிருக்க, எங்கள் சமூகத்திற்கு வெளியே மற்றச் சமூகங்களால் அவதானிக்கப்படக் கூடிய அளவிற்கோ, அல்லது அதற்கும் வெளியே கனடிய தேசிய நீரோட்டத்தில் இடம்பெறுவதென்பது உடனடிச் சாத்தியமானதா? இவற்றுக்கென்ன அவசியம் என்று யாராவது வினாத் தொடுப்பார்களாயின் அவர்கள் தொழில்ரீதியான கலை வளர்ச்சியை எதிர்காலத்திலாவது நமது கலைஞர்களும், கலைப் படைப்புகளும் அடைய முடியாமல் செய்வதில் முன் நிற்கிறார்கள் என்றே சொல்வேன்.


என்ன செய்யலாம்?

யாருக்கும் நாம் சளைத்தவர்களல்ல என்று நமக்குள்ளே பழங்கதைகள் சொல்லிக் கொண்டிருப்பதை விட்டு, எமது படைப்புகள் மெருகிடப்படுவதில் அக்கறை காட்ட வேண்டும். அர்ப்பணிப்பு எதுவுமின்றி மேலோட்டமாக நாமும் ஏதோ செய்கின்றோம் என்ற மனப்போக்குடன் அரைகுறையாக படைப்புகளை வெளியிட்டு திருப்திப்படும் எமது போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். திறமையுள்ளவர்கள் தங்கள் ஈகோவை மறந்து ஒன்றுபட வேண்டும். அதன் வெளிப்பாடாக எங்கள் சமூகத்தின் அடையாளத்தை மற்ற இனத்தவர்களின் மத்தியிலும் பதிவு செய்யும் வகையில் அரிதாகவேனும் தரமுயர்ந்த படைப்புகள் உருவாக வேண்டும்.

மொழி கடந்த பரிமாணத்தை நமது படைப்புகள் அடைய வேண்டுமென்றால், நேரடியாக இல்லாவிடினும், ஆங்கிலத்தில் அவை மொழிமாற்றம் செய்யப்பட வேண்டும். எங்கள் யன்னல்களை திறந்து வைத்துக் கொள்வதோடு, மற்றவர்களின் யன்னல்களும் திறக்கப்பட இதுவே வழியாகின்றது.

கனடாவிலும், அமெரிக்காவிலும் தொழில்ரீதியாக கடும் போட்டி நிகழும் திரைப்படத்துறையில் கூட இவ்வாறு யன்னல்கள் திறக்கப்பட்டு, வேற்றுமொழிக் கலாசார, பண்பாட்டுக் காற்றுகள் வீசத் தொடங்கியிருப்பதை காண்கிறோம்.

சென்ற ஆண்டில் மில்லியன் டாலர்கள் முதலீடு செய்யப்பட்டு மிகுந்த ஆரவாரமான விளம்பரக் கோஷங்களுடன் வெளிவந்த ஹொலிவுட் திரைப்படங்களோடு போட்டி போட்டு வெற்றி கண்ட திரைப்படம், கனடியரான ஒரு சிறுபான்மை இனத்தவரின் My Big Fat Greek Wedding என்பது தான். கனடாவின் மனிற்றோபா மாநிலத்தில் பிறந்த ஒரு கிரேக்க இனப் பெண்ணான Nia Vardalos என்பவர் தனது இனத்துக்கேயுரித்தான பண்பாடுகள், பழக்க, வழக்கங்கள் அமெரிக்க கலாசாரத்தோடு முரண்படுவதை நகைச்சுவையாக தனி நடிப்பாக மேடையேற்றி, அதையே பின்னர் திரைப்படமாக உருவாக்கி மிகப் பெரிய வெற்றியைக் கண்டிருக்கிறார்.



வட்டத்திற்கு வெளியே...

கே.எஸ்.பாலச்சந்திரன்

முழுமையான சீனப் படைப்பாக, ஆங்கில உப தலைப்புகளுடன் வெளிவந்த Crouching Tiger, Hidden Dragon என்ற திரைப்படம் 100 மில்லியன் டாலர்களை வட அமெரிக்காவில் மாத்திரம் சம்பாதித்துக் கொண்டதோடு, ஒஸ்கார் விருதுக்கான போட்டி வரை சென்றது.

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் பிறந்த Mira Nair என்ற பெண் இயக்குனர் தனது Salam Bombay என்ற திரைப்படத்திற்காகச் சர்வதேச விருதுகளைப் பெற்றிருக்கிறார். தனது பஞ்சாபி கலாசாரத்தை கவிநயத்தோடு சித்தரிக்கும் இவரது Monsoon Wedding என்ற திரைப்படம், வட அமெரிக்காவில் பொருளாதார ரீதியாக பெரிய வெற்றியைப் பெற்றதோடு, மீண்டும் பல சர்வதேச விருதுகளை இவருக்குப் பெற்றுத் தந்திருக்கின்றது. இந்த திரைப்படமும் ஹிந்தி, பஞ்சாபி, ஆங்கில உரையாடல்களுடன், பெரும் பகுதி ஆங்கில உப தலைப்புகள் அமைந்த திரைப்படந்தான். கதைக்கருவும் மேற்கத்திய ரசிகர்களுக்கு பரிச்சயமற்ற இந்திய மாநிலத்தின் கதை தான்.
"தேசத்தின் எல்லைகளைக் கடந்து உலகளாவிய மானிடத்தின் பண்புகளை குதூகலத்துடன் சித்தரிக்கும் திரைப்படம்" என்றெல்லாம் ஆங்கில விமர்சகர்கள் இந்தத் திரைப்படத்தைப் பற்றி எழுதினார்கள்.

இன்னுமொரு இந்தியப் பெண் இயக்குனர் Gurinder Chadha - இங்கிலாந்தில் வசிப்பவர் - அங்கு வாழும் இந்தியர்களிடையே நிலவும்

(மறுபக்கம் வருக)

தலைமுறை இடைவெளியை சுவையாக சித்தரிக்கும் "Bend It Like Beckham." என்ற திரைப்படத்தை இயக்கித் திரையிட்ட பொழுது, அத் திரைப்படம் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் எதிர்பார்க்காத வெற்றியைப் பெற்றது.

18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த Jane Austen எழுதிய Sense and Sensibility என்ற நாவல் 1995ல் திரைப்படமாக்கப்பட்டது. அதை இயக்க அழைக்கப்பட்டவர் தாய்வான் நாட்டைச் சேர்ந்த Ang Lee என்ற இயக்குனர். மிகுந்த பாராட்டைப் பெற்ற திரைப்படமாக இது அமைந்தது.

16ம் நூற்றாண்டைச் சேர்ந்த இங்கிலாந்தின் அரசியான எலிசபெத்தின் வாழ்க்கை திரைப்படமாகிய பொழுது, அதை இயக்கியவர் சேகர் கபூர் என்ற இந்திய இயக்குனர். ஆங்கில வரலாற்றுப் பாத்திரத்தின் கதையைக் கூறும் இந்த திரைப்படத்தை இயக்க ஒரு இந்தியரை அழைத்தது சற்று வித்தியாசமான முடிவு தான். ஆனால் சேகர் கபூர் Elizabeth திரைப்படத்தை ஒஸ்கார் விருது பெறும் அளவிற்குக் கொண்டு சென்றார்.

எனவே தங்கள் வாழ்வை, கலாசாரங்களைச் சித்தரிக்கும் திரைப்படங்களோடு இவர்கள் நின்று விடவில்லை. தங்களுக்கு அந்நியமான சமூகச் சூழல் சார்ந்த திரைப்படங்களை படைப்பதிலும் வெற்றி கண்டிருக்கிறார்கள். திரைப்படத்துறையில் மாத்திரமல்ல, எழுத்துத் துறையிலும் தெற்காசியர் பலர், தாங்கள் விட்டு வந்த உலகினை மீண்டும் உயிர்ப்பிக்கின்றார்கள் என்று ஒரு கட்டுரையில் வாசித்திருக்கிறேன். அந்த படைப்புகளை அவர்கள் ஆங்கிலத்தில் எழுதுவதனால் அதற்கான பரந்த அங்கீகாரம் கிடைக்கிறது.

கனடாவில் படைக்கப்படும் நாவல்கள், சிறுகதைகள் என்பனவற்றில் உயர்ந்த கௌரவத்தைப் பெறும் படைப்புகளை தெற்காசிய எழுத்தாளர்களே எழுதியிருக்கின்றார்கள். Michael Ondaatje என்ற இலங்கையரான எழுத்தாளரின் The English Patient என்ற புகழ்பெற்ற நாவல், பின்னர் திரைப்படமாகி ஒன்பது ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது தனிக்கதை. இவரே இலங்கைப் பின்னணியில் Anil's Ghost எனும் நாவலை எழுதியிருந்தார்.

Rohinton Mistry என்ற இந்தியர், Such a Long Journey, A Fine Balance போன்ற சிறந்த நாவல்களில் தனது நாட்டு மக்களின் கதைகளையே சொன்னார்.

கனடாவில் வாழும் இலங்கையரான Shyam Selvadurai தனது Cinnamon Gardens என்ற நாவலில் அன்னலட்சுமி, பாலேந்திரன் போன்ற பாத்திரங்களையே ஆங்கில வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இவற்றையெல்லாம் நான் வரிசைப்படுத்திக் கூறுவதற்குக் காரணமிருக்கிறது. புதிய களங்களின் பின்னணியில் புதிய கதைகளைக் கேட்பதற்கு வடஅமெரிக்காவின் ஒரு பெரிய பகுதியினர் தயாராக இருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொள்ள ஆங்கில மூலப் படைப்புகளின் மூலம் எம்மவர் முனைப்பு காட்ட வேண்டும்.

ஆங்கில மூலத்தில் படைக்கப்படாதவிடத்தும் தரமான நாடகம், எழுத்து, சினிமா எதுவாகவிருந்தாலும், மொழிபெயர்க்கப்பட்டு அல்லது ஆங்கில உப தலைப்புகளுடன் மற்றச் சமூகங்களைச் சென்றடைய வேண்டும்.

மொழிபெயர்ப்பு என்ற வகையில் அரிதாக சில முயற்சிகள் நடக்காமலில்லை. ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியர் செல்வா கனகநாயகம், தெற்காசிய படைப்பாளிகளை மற்ற சமூகத்தினருக்கு அறிமுகம் செய்து வைக்கும் அவரது பணியின் ஒரு தொடர்ச்சியாக, Lutesong and Lament: Tamil Writing from Sri Lanka என்ற தொகுப்பின் மூலம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் குறிப்பிடற்குரிய கவிதைகளையும், சிறுகதைகளையும் ஆங்கில வாசகர்களுக்கு பரிச்சயமாக்கினார்.

இது மாத்திரம் போதுமானதல்ல.

இசையென்றவுடன் கர்நாடக இசை அல்லது சினிமா இசை மாத்திரமா? எமக்கு என்று தனியான இசை வடிவத்தை எங்கள் பாரம்பரிய வாத்தியங்களை வைத்து உருவாக்க முடியாதா? வெறும் தகர பீப்பாக்களைப் போல வைத்துக் கொண்டு நரம்புகளைத் துடிக்க வைக்கும் கரிபியன் இசைக் குழுவினரின் இசையைக் கேட்டால் புரியும்.

கிழமைக்கொரு சீ.டி இசைத்தட்டு வெளியீட்டு விழா. தென்னிந்தியப் பிரபலங்கள் பாடிய பாடல்கள். அங்கே மட்டும் இசையமைக்க முடிகின்ற விந்தைகள். நாங்கள் சிகரங்களைத் தொட்டு விட்டோம் என்ற சிலிர்ப்புகள். இனிப் போதுமே!

எமது இலக்கு எதுவென்பதை நாம் புரிந்து கொண்டு, குதிரையை குண்டுச் சட்டி என்ற வட்டத்திற்கு வெளியே கொண்டு வர வேண்டும்.

அதன் பாய்ச்சல் உற்சாகமானதாய் இருக்கட்டும்.

Tamil Culture


Tamil culture is nothing else but the Tamil way of life, a pat-tern of gracious living that has been formed during the centuries of Tamil history. It has been conditioned by the land, the climate, the language, the literature, the religions, the customs, the laws, the festivals, the food and the games of the Tamil people, by the clothes, the jewellery, traditional music and dance and musical instruments associated with them.

The Tamil Language and Tamil Literature

The Tamil Language has been spoken basically in its present form in the island for the last two thousand years and it continues even now to be the living language for forty to fifty million people - about forty million people in India, more than two million people in Sri Lanka and over two million people living scattered over Malaysia, Figi, Mauritius, South Africa, Vietnam and Indonesia and even Trinidad Tamil is as much a classical language as Greek, Latin or Sanskrit, with the difference that while her ancient contemporaries have changed beyond recognition or been long regarded as "dead", Tamil continues to be one of the most vigorous of modern languages, and perhaps offers the only example in history of an ancient classical tongue which has survived to this day yet remains young as it was two thousands years ago. The rich and hoary Tamil Literature has made definite contributions to world thought and letters. The love poetry of the Tamils is the produce of a people among whom the finest ideals of courtship and wedlock had long been cherished. The ethical poetry of the Tamils has been the wonder of all foreigners who have studied it.

If the English be the language of commerce, French the language of diplomacy, Italian the language of love and German the language of philosophy, then Tamil is the language of devotion. The tradition of Bhakthi and the ideal of tolerance explain the fact that nearly every world religion can claim in Tamil a voluminous literature. Tamil culture has been enriched by poetical works of Saivaites, of Vaishnavites, of Jains, of Buddhists, of Muslims, of Catholics and of Protestants. No other language in the world has been the vehicle of the epic poetry of so many different religions.

நிகழ்கலை - நாடகம்



ப. ஸ்ரீஸ்கந்தன்

கனடாவில் பல்வேறு அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழல்களில் சிக்குண்டு இருக்கும் எம்மவரின் கலைவெளிப்பாடுகளில் முக்கியமானது நிகழ்கலை ஆகும். நிகழ்கலையின் முதன்மைக் கலையான நாடகக் கலை இம்மண்ணில் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

தாயகத்தில் எழுபதுகளில் அம்பலத்தாடிகள் நாடக அரங்கக் கல்லூரி மூலம் யாழ்ப்பாணத்திலும் நடிகர் ஒன்றியம், அவைக்காற்றுக் கலைக்கழகம், கூத்தாடிகள் என்பன மூலம் கொழும்பிலும் பல தரமான நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. 83 ஆடிக் கலவரத்தின் பின்னர் பல கவிஞர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அந்தந்த நாடுகளில் தம் கால்களை அகலப் பதித்த சில வருடங்களில் சிறிது சிறிதாக கலைவெளிப்பாடுகளில் தமது பார்வையைச் செலுத்தினர்.

இந்த வகையில் கனடா நாட்டில் நிகழ்த்தப்பட்ட நாடகங்கள் பற்றிய குறிப்புகளை அல்லது தரவுகளை இங்கே முன் வைக்கிறேன். இவை முற்றுமுழுதாக நான் பார்த்த நாடகங்கள் என்பதால் இது முழுமையான நாடகப் பட்டியல் அல்ல என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1985ம் ஆண்டு கனடா தமிழீழச் சங்கம் நடத்திய ஆண்டுக் கலைவிழாவில் மேடையேறிய 'ஒரு ஆத்மா அழுகிறது' என்ற நாடகத்துடன் இக் கட்டுரையை ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்குமென நம்புகிறேன். தாயகத்து இளைஞன் ஒருவனின் மனப் போராட்டத்தை நவீன பாணியில் வெளிப்படுத்திய நாடகம் அது.

அதன் பின்னர் 1987ம் ஆண்டு உலகத் தமிழர் இயக்கம் நடத்திய நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற 'கைவிடப்படாதவை' எமது சாதிய வெறியைச் சாடி நின்றது. அப்போது கால்ரன் பல்கலைக்கழக மாணவனாக இருந்த சிவசோதி என்பவர் இதனை எழுதி, இயக்கி, நடித்தும் இருந்தார். இதே காலகட்டத்தில் புராந்தகன், செல்வக்குமார் இயக்கிய 'தொய்வு' என்ற நாடகமும் பலரதும் பாராட்டைப் பெற்றது.

1988ம் ஆண்டு தமிழ் இளைஞர் முன்னேற்ற மன்றம் நடத்திய கலைவிழாவில் ஞான ராஜசேகரன் எழுதிய 'மரபு' என்ற நவீன நாடகம் மிகவும் தரமாக மேடையேற்றப்பட்டது. இதனை பாலேந்திரா என்பவர் நெறியாள்கை செய்திருந்தார்.

1990ம் ஆண்டு தமிழர் வகைதுறை வளநிலையம் நடத்திய முதலாவது ஆண்டுவிழாவில் ஸீக்ஃப்ரீட் லென்ஸ் எழுதிய 'நிரபராதிகளின் காலம்' என்ற நாடகம் மேடையேறியது. அ. கந்தசாமி, முருகதாஸ், செல்வம் மற்றும் பலர் நடித்திருந்தனர். இதுவே இம் மண்ணில் முதன்முதலாக மேடையேற்றப்பட்ட மொழிபெயர்ப்பு நாடகமாகும்.

தொண்ணூறுகளிலும் அதன் பின்னரும் இம் மண்ணில் நாடகக் கலை வளர்ச்சிப் பாதையைக் கண்டது. 'வானவில்' நிகழ்ச்சியை நடத்தும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - குறிப்பாக சொர்ணலிங்கம், கேதீஸ்வரன் போன்றோர், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் மற்றும் தமிழர் வகைதுறை வளநிலையத்தினர் இவ்வளர்ச்சிப் பாதைக்குப் படிக்கல்லாக அமைந்திருந்தனர்.

1994ம் ஆண்டு இலண்டனில் இருந்து வருகை தந்த க. பாலேந்திராவின் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தினர் நடத்திய நாடக விழாவும், 1995ல் அ.தாசீசியஸ் நடத்திய நாடகப் பட்டறையும் இம் மண்ணில் நாடகக் கலைக்கு புத்துயிர் ஊட்டின.

இந் நாளில் தமிழர் வகைதுறை வளநிலையத்திலிருந்து கலையார்வம் கொண்ட பலர் சேர்ந்து மனவெளி கலையாற்றுக் குழு என்ற அமைப்பை ஆரம்பித்து 'அரங்காடல்' என்ற தமது முதலாவது நிகழ்வை 1996ம் ஆண்டு யோர்க்வூட் நூலக அரங்கில் நிகழ்த்தினர். பின்னர் மனவெளியில் இருந்து பிரபல நாடக எழுத்தாளரும், நடிகரும், இயக்குனருமான பா.அ.ஜெயகரன் வெளியேறி 'நாளைய நாடகப் பட்டறை' என்ற அமைப்பை ஆரம்பித்து நாடக விழாக்களை நடத்தி வருகின்றார். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். ஆனால் இவர்கள் இரண்டு பட்டதால் ரசிகர்களாகிய எங்களுக்குக் கொண்டாட்டம் தான். நிறையவே வித்தியாசமான நாடகங்களைப் பார்க்க முடிகிறது.

இனி 90க்குப் பின்னர் மேடையேறிய நாடகங்களை நாடக வகைப்படுத்தி இங்கே தருகின்றேன்.

பா நாடகங்கள் - மஹாகவியின் புதியதொரு வீடு என்ற பா நாடகம் திருமாவளவன் நெறியாள்கையிலும் நடிப்பிலும் இம் மண்ணில் முதன் முறையாக மேடையேறியது. இதன் பின்னர் செல்வனின் நெறியாள்கையிலும் கே.எஸ்.பாலச்சந்திரன், சுப்புலஷ்மி காசிநாதர், துஷி ஞானப்பிரகாசம் ஆகியோரின் நடிப்பிலும் 'புதியதொரு வீடு' மனவெளியின் அரங்காடலில் மேடையேறியது.

1971ம் ஆண்டு கொழும்பு வை.எம்.பி.ஏ மண்டபத்தில் அ.தாசீசியஸ் அவர்களின் நெறியாள்கையில் முதன் முறையாக இந் நாடகம் மேடையேற்றப்பட்டதாகக் குறிப்பு உள்ளது.

மஹாகவியின் இன்னுமொரு பா நாடகமான 'கோடை' மகாஜனாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினரின் கலைவிழாவில் மேடையேறியது. புராந்தகன் இதனை நெறியாள்கை செய்திருந்தார்.

மேலும் புராந்தகனின் உருவாக்கத்திலும் நெறியாள்கையிலும் முதலாவது அரங்காடலில் மேடையேறிய குறும்பா நிகழ்வும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இசை நாடகங்கள் - உலகத் தமிழர் இயக்க கலை பண்பாட்டுப் பிரிவினர் மேடையேற்றிய 'ஔவையார்' நாடகம் இம் மண் மறந்திட முடியாத நாடகம். அன்ரன் பீலிக்ஸ் அவர்கள் ஔவையாராக வேடமேற்றுப் பாடி மிக அற்புதமாக நடித்திருந்தார். நாடக முடிவில் தாயக மக்களுக்காக அவர் உதவி வேண்டி நின்ற போது பார்வையாளர்கள் தாம் அணிந்திருந்த நகைகளை மேடைக்குச் சென்று கொடுத்தது (மறுபக்கம் வருக)

நாடக வரலாறு காணாத சம்பவம். இம் மண் கண்ட மற்றுமொரு மகத்தான நாடகம் 'மயான காண்டம்'. வானவில் நிகழ்ச்சிக்காக சொர்ணலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் இந்த இசை நாடகம் மேடையேறியது. செந்தூரன் அரிச்சந்திரனாகவும் அருட்செல்வி அமிர்தானந்தர் சந்திரமதியாகவும் தோன்றி மிகவும் சிறப்பாகப் பாடி நடித்திருந்தனர். தாயகத்தில் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களால் ஆயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்ட இந் நாடகத்தை இங்கு பார்த்த போது மெய்சிலிர்த்தது.

நாட்டுக் கூத்து - அண்மையில் இங்கு விஜயம் மேற்கொண்டிருந்த வில்லிசைப் புலவர் சின்னமணி அவர்கள் இங்குள்ள நடிகர்களை இணைத்து 'காத்தவராயன்' என்ற சிந்துநடைக் கூத்தை இயக்கி நடித்திருந்தார். அந் நாளில் அம்மண்ணிலேயே அரிதாகிப் போன இந் நாட்டுக் கூத்தை மேலைத்தேய மண்ணில் புதிதான ஒரு சூழலில் அதுவும் இரு தடவையும் மண்டபம் நிறைந்த அவையில் நடத்தி எமது பழம்பெரும் கலைக்குப் புத்துயிர் ஊட்டிய சின்னமணி அவர்கள் நிச்சயம் வணக்கத்துக்குரியவர்.

சில மாதங்களுக்கு முன்னர் 'காலம்' செல்வம் அவர்களின் நெறியாள்கையில் 'நாட்கள் இதோ வருகின்றன' என்ற கூத்துவகை நாடகம் இடம்பெற்றது. உலகமயமாக்கல் என்ற இந்நாளின் புதிய கருவூலத்தை பழைய நாட்டுக் கூத்து வடிவில் சொல்லியிருந்தனர். பிரதியாக்கம் செழியன். ரெஜி மனுவேல்பிள்ளை, கிருபா ஆகியோரின் அடவுகளும், பாட்டும் மிக அற்புதமாக அமைந்திருந்தன.

தவிர எமது முதுபெரும் நாட்டுக் கூத்துக் கலைஞரான அழகையா அவர்கள் வானவில் நிகழ்ச்சிகளில் தோன்றி தனது கூத்தாற்றலால் அவையோரை மகிழ்வித்துள்ளார்.

சரித்திர நாடகம் - கனடா வன்னித் தமிழ்ச் சங்கம் நடத்தும் கொம்பறை என்ற கலை நிகழ்வில் "பண்டாரவன்னியன்" என்ற சரித்திர நாடகம் அரங்கேறியது.

நவீன நாடகங்கள் - ஈழத்து நாடக ஆசிரியர்களான குழந்தை ம.சண்முகலிங்கம், நா.சுந்தரலிங்கம் ஆகியோரின் நாடகங்கள் இங்கு மேடையேறியது பெருமைக்குரிய விடயமாகும். குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் 'எந்தையும் தாயும்' என்ற நாடகத்தை பி.விக்னேஸ்வரனின் நெறியாள்கையில் தமிழர் வகைத்துறை வளநிலையத்தினரும், அவரின் இன்னுமொரு நாடகமான 'அன்னை இட்ட தீ' நாடகத்தை ஞான ஆனந்தனின் நெறியாள்கையில் மனவெளியினரும் மேடையேற்றினர்.

நா.சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்' என்ற அபத்த வகை நாடகம் பி.விக்னேஸ்வரனின் நெறியாள்கையில் மனவெளியினரால் மேடையேற்றப்பட்டது. இந் நாடகம் 1968 இல் கூத்தாடிகள் தயாரிப்பில் கொழும்பு லும்பினி அரங்கில் முதன் முதலாக மேடையேறியதாக குறிப்பு உளது.

தென்னிந்திய நாடக ஆசிரியர்களைப் பொறுத்தவரை அ.இராமசாமியின் 'தண்டனை' என்ற நாடகத்தை ராஜன், செல்வன் ஆகியோர் இணைந்தும், ந.முத்துசாமியின் 'பாகப்பிரிவினை' என்ற நாடகத்தை இரா.சீவரத்தினமும், சுஜாதாவின் 'சரளா' நாடகத்தைப் புராந்தகனும் நெறியாள்கை செய்ய மனவெளியினரின் அரங்காடலில் அவை மேடையேறின.

குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய எமது ஒரு சில நாடக எழுத்தாளர்களில் செழியன் முக்கியமானவர். இவரின் புகழ்பெற்ற 'பெருங்கதையாடல்' மற்றும் 'வேருக்குள் பெய்யும் மழை', 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' ஆகிய நாடகங்கள் அரங்காடலில் மேடையேறியுள்ளன.

இம் மண்ணில் எமது நாடக வளர்ச்சியில் பா.அ.ஜயகரன் அவர்களின் பங்கு மிக முக்கியமானது. சிறந்த நாடக எழுத்தாளரும், நடிகரும், இயக்குனருமான இவர், தமிழர் வகைத்துறை வளநிலையத்துக்காக 'பொடிச்சி' என்ற நாடகத்தையும், மனவெளிக் கலையாற்றுக் குழுவினருக்காக 'எல்லாப் பக்கமும் வாசல்', 'இன்னுமொன்று - வெளி' ஆகிய நாடகங்களையும் மேடையேற்றியவர். பின்னர் நாளைய நாடகப் பட்டறை என்ற அமைப்பை ஆரம்பித்து இரு நாடக விழாக்கள் மூலம் ஏழு புதிய நாடகங்களை மேடையேற்றினார். தலைசிறந்த நாடக நடிகனான டிலீப்குமார் மற்றும் பாபு போன்றோர் நா.நா.பட்டறை நாடகங்களில் நடித்து வருகின்றனர்.

தவிர வானவில் நிகழ்ச்சிக்காக கேதீஸ்வரன் எழுதிய 'இது இப்படித்தான்' சொர்ணலிங்கம் எழுதிய 'இது எழுதாத விதியா' நாடகங்களும் குறிப்பிடப்பட வேண்டியவை. மற்றும் இளையபாரதியும் பல நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்திருக்கிறார்.

குறியீட்டு நாடகங்கள் - பிரேமின் என்ற தருமு சிவராம் எழுதிய கூட்டியக்கம் என்ற நாடகக் குறிப்புப் பிரதியை 'ஆதியுடன் அந்தமாகி' என்ற பெயரில் இரா.சீவரத்தினம் அவர்கள் அரங்காடலில் மேடையேற்றினார். வசனமே இல்லாத நாடகம். மேலும் நடிகர்கள் முகப்போலிகளை அணிந்து இருப்பதால் அபாரமான நடிப்புத் திறமை இங்கு அவசியமாகிறது. சபேசன், பகீரதன், சுகுணன் ஆகியோர் இந் நாடகத்தில் மிக அபாரமாக நடித்திருந்தனர்.

மிகவும் கடினமான நாடகங்களைத் தெரிவு செய்து இயக்கும் வல்லமை கொண்ட இரா.சீவரெத்தினம் அவர்கள் தொழிலாளர் பிரச்சனையை மையப்படுத்திய 'காலம்' என்ற குறியீட்டு நாடகத்தையும் அரங்காடலுக்காக மேடையேற்றியுள்ளார்கள்.

மொழிபெயர்ப்பு நாடகங்கள் - பிறமொழி நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து, நெறியாள்கை செய்து, மேடையேற்றியதில் ஞானம் லம்பேட் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அன்ரன் செக்கோவின் 'மறையாத மறுபாதி', சாமுவல் பெக்கட்டின் "கருக்கல் வெளியும் காத்திருப்பும்", ஜீன் ஜெனேயின் 'மடியும் உண்மைகள்' ஆகியன இவரது நாடகங்களாகும்.

இயுஜீன் அயனெஸ்கோவின் 'நாற்காலிகள்' நாடகத்தை பி.விக்னேஸ்வரன் அவர்கள் தரமாக மொழிபெயர்த்து திறமாக மேடையேற்றினார். சபேசன், சுமதி ரூபன் இருவரும் பாத்திரங்களுக்கு உயிரூட்டினர்.

அன்ரன் செக்கோவின் 'இரு துயரங்கள்' என்ற முருகையனின் தமிழ்ப் பிரதியை நா.சாந்திநாதன் நெறியாள்கை செய்து, மேடையேற்றினார். ஒரு கணமும் நெறி தவறாத நெறியாள்கைக்கு இந் நாடகத்தை உதாரணமாகக் கொள்ளலாம்.

மரே ஷிஸ்கல் என்பவரின் 'தள்ளுவண்டிக்காரர்' என்ற நாடகத்தை கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து மேடையேற்றினார்.

இத்தனை மொழிபெயர்ப்பு நாடகங்களும் மனவெளி கலையாற்றுக் குழுவினரின் அரங்காடல் நிகழ்ச்சிகளில் மேடையேற்றப்பட்டன.

அரசியல் நாடகங்கள் - 1991ம் ஆண்டு தமிழர் வகைதுறை வளநிலையத்தினர் சொல்லாத சேதிகள் என்ற தலைப்பிட்டு நடத்திய இரண்டாவது ஆண்டு விழாவில் ஜீவன் எழுதி, நெறிப்படுத்திய 'பலிக்களம்' என்ற நாடகம் முற்று முழுதாக விடுதலைப் புலிகளைக் கொச்சைப்படுத்தி இருந்தது.

(எதிர்ப்பக்கம் வருக)

இதே போல் சக்கரவர்த்தியின் 'யுத்த சந்யாசம்' என்ற நாடகத்தை இவர்கள் மேடையேற்றி மரணித்த வீரர்களைக் கூட அசிங்கப்படுத்தியிருந்தனர். மனவெளியினர் மேடையேற்றிய சபேசனின் 'யாழ்ப்பாணம் 84' நாடகமும் அரசியல் பின்னணியைக் கொண்டிருந்தது.

நகைச்சுவை நாடகங்கள் - கலகலப்பு தீசன் அவர்கள் அதிகளவு நகைச்சுவை நாடகங்களை இம்மண்ணில் மேடையேற்றி ரசிகர்களை கலகலப்பாக்கியுள்ளார். செந்தில், கரு - கந்தையா போன்றோர் இவருடன் நடித்து வருகிறார்கள். தவிர அச்சுதன்பிள்ளை, கணபதி ரவீந்திரன் - 'இது என்னடா கனடா', கே.எஸ்.பாலச்சந்திரன் - 'காரோட்டம்' போன்றோரும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக திரைமறைவில் நாடக அரங்கிற்கு உதவுபவர்கள் அநேகர். குறிப்பாக பின்னணி இசைக்கு திவ்வியராஜன், முல்லையூர் பாஸ்கரன், வர்மன் ஆகியோரையும் ஒளி, ஒலி அமைப்புக்கு சிவம், கருணா போன்றோரும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறு நான் பார்த்த நாடகங்கள் போக, பார்க்காத நாடகங்கள் அதிகமாகவே இருக்கும் என நம்புகிறேன். காரணம், ஒவ்வொரு வாரமும் விழாக்கள் நடைபெறுகின்றனவே.

ஆயினும் சென்ற வருடம் நாடக வரலாற்றில் ஒரு புதுமை நிகழ்ந்தது. இதுவரை பத்து அரங்காடல்களைக் கண்ட மனவெளி கலையாற்றுக் குழுவினர் மொன்றியலைச் சேர்ந்த டீசிறி டுனியா அரங்கு என்ற பிறமொழி நாடகக் கலைஞர்களுடன் சேர்ந்து ஒரு நாடக விழாவை நடத்தியது மட்டுமன்றி சுகந்தன், நளினா போன்ற கலைஞர்கள் அவர்களது நாடகத்தில் நடித்தும் இருந்தனர்.

இவ்வாறு இம் மண்ணில் நாடகம் அபரிமிதமான வளர்ச்சி கண்டு ஒரு புதிய பரிணாமத்தை அடைந்திருக்கிறது. இம்மாநகரின் பட்டி தொட்டியெல்லாம் பிறமொழியினரின் அற்புதமான நாடகங்கள் மேடையேறிக் கொண்டிருக்கின்றன. எத்தனை நாளைக்குத் தான் நாங்கள் சுத்திச் சுத்தி சுப்பற்றை படலைக்குள்.....

நாம் எமது பாரம்பரிய கலைகளை பாதுகாக்கும் அதேவேளை, புதிய சிந்தனையும், புதிய பார்வையும் எமது நாடகவுலகிற்கு அவசியத் தேவையாக உள்ளது.

பரதமும் சித்திரமும்



பிடித்து வைத்த பிள்ளையார் கூட
பிடித்த இடத்தில் இருக்க மாட்டார்

'வெற்றிமணி' மு.க.சு. சிவகுமாரன்

உடலுக்குள் உயிர் ஊஞ்சலாடிக் கொண்டு இருக்கிறது. அந்த ஊசலை ஊஞ்சலாக்க வல்லது கலை. ஒரு கலைக்கு இன்னுமொரு கலை பக்கத் துணையாக வருவதைக் காணலாம். இசையை எடுத்துக் கொண்டால் அங்கே பக்கவாத்தியங்கள் பக்கத்துணையாக இருக்கும். பரதத்தை எடுத்துக் கொண்டால் அது தாளத்துடன் ஒன்றி நிற்கும். நாடகத்தை எடுத்துக் கொண்டால் ஒப்பனைக்குள்ளால் முகம் காட்டும். சித்திரமும் சிற்பமும் கூட உலகின் எல்லாக் கலைகளையும் உள்வாங்கிக் கொள்ளும். இருப்பினும் தன் கலை சிறக்க வேறும் சில கலைகளைக் காதலிக்கவும் செய்வார்கள். வாழ்வில் காதலன், காதலி வாய்ப்பது போல், கலைஞர்களுக்கும் தன் கலைக்கு ஒத்த காதலனாக, காதலியாக பிறிதொரு கலை அவர்களுள் ஆட்சி கொள்ளும்.

காதல் என்றும் இளமையாக உள்ளது. அத்துடன் அந்த உணர்வுக்கு இருக்கும் சக்தி, உந்துதல் அளப்பரியது. எனவே ஒரு கலைஞனுக்குள் தென்றலாக, காதலாக, ஒரு பிற கலையும் அவனுள் வீசிக் கொண்டே தான் இருக்கும்.

சிலரைப் பார்த்தால் பாடிக் கொண்டே படம் வரைவார்கள். சிலர் பாடலைக் கேட்டுக் கொண்டே சித்திரம் தீட்டுவார்கள்.

கவிஞர்களைப் பாருங்கள் அவர்கள் இயற்கையோடு ஒன்றி நிற்கும் வேளையில் பிறக்கும் கவிதைகள் எவ்வளவு சக்தி மிக்கனவாகத் திகழ்கின்றன. கடற்கரையிலும், நதிக்கரையிலும் புலவர்கள் எழுத்தாணி கொண்டு கவிதை எழுதும் பண்டைக்கால ஓவியங்களைப் பார்த்திருப்பீர்கள்.

கடலில் அலைக்கும் நதியின் சலசலப்புக்கும் ஒரு ஜதிக்கட்டு உண்டு. காற்றின் விசைக்கு ஆடும் தென்னை மரத்தில்கூட ஒரு அடவுக் கணக்கு உண்டு. இடப்பக்கம் சாய்ந்து, வலப்பக்கம் சாயும் போது அதன் வீச்சில் ஒரு சீரான தூரமும் வேகமும் இருக்கும். கடல் அலை ஒன்று மேலெழுந்து கீழ் குதிக்கிறது என்றால், அந்த எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் ஒரு சீரான அளவு உண்டு. காட்சிகளை விடுங்கள் மனிதனின் இதயத் துடிப்பைப் பாருங்கள். அதன் துடிப்பில் சீர்நிலை குலையும் போது உடல் ஆரோக்கியம் குன்றுகின்றது. இது மனிதனுக்கு மட்டுமல்ல மனிதன் படைக்கும் கலைகளுக்கும் பொருந்தும். எனவே ஒரு கலைஞனை இந்தச் சீரான வீச்சுக்களே சீரோடு சிறப்போடு கலை படைக்க வைக்கின்றன.

பரதக்கலையை எடுத்துக் கொண்டால் பரதத்தில் ஒவ்வொரு அசைவுகளும் ஒரு லயத்தில் இருக்கும். காற்றின் அசைவில், ஒரு மலர் எப்படி அசையுமோ அதுபோல் பரதத்திலும் உடல் அசைவுகள் இருக்கும். இடது பக்கம் மூன்று அடைவும், வலப்பக்கம் நான்கு அடைவும் இருக்காது. இடை இடப்பக்கம் நெளிந்தால் அதன் எதிர்புறமாக வலப்பக்கத்தில் ஒரு வளைவு இடப்பக்கத்தில் ஏற்படுத்திய நெளிவுக்கு ஏற்ப இருக்கும்.

ஒரு பெண் பரதத்தில் பொட்டு வைக்கின்றாள் என்றால் அதில் ஒரு கரம் தலைக்குப் பின்னால் இருந்து நெற்றியைச் சுட்டி வரும். மறு கை மார்பின் முன்னே ஒரு வளைவாக வந்து கண்ணாடி பார்க்கும். இந்தக் காட்சியினை கண்முன் நிறுத்திப் பாருங்கள். அந்தப் பொட்டு உங்கள் நெஞ்சைத் தொட்டு நிற்கும். நிலவைப் பாடாத கவிஞனும் இல்லை. இந்தப் பொட்டு வைக்கும் காட்சியைத் தீட்டாத, செதுக்காத ஓவியனும் இல்லை, சிற்பியும் இல்லை.

பரதம் சித்திரத்திற்குள்ளும், சித்திரம் பரதத்திற்குள்ளும் ஒன்றாகக் கிடக்கிறது. பண்டைக் காலத்தின் பண்பாட்டுக் கோலங்களை (மறுபக்கம் வருக)

சிற்பங்களாகவும் சித்திரங்களாகவும் சித்திரக் கணினியில் பதித்து வைத்து இன்று பாதுகாப்பாகத் தந்த பெருமை இந்தச் சித்திரத்திற்கு உண்டல்லவா!

சின்ன வயதில் பாடசாலைக் காலத்தில் சின்னஞ்சிறு மலர்கள் பாடசாலையில் பரதம் பயிலும் வேளை அதில் மயங்கி நிற்பேன். அந்தச் சின்னஞ் சிறு பெண் போலே சிறறாடை தனை உடுத்தி சிவகங்கைக் கரையினிலே சித்திரமாய் நான் நிற்பேன். வகுப்பு நேரம் என்னடா! பெட்டையளைப் பார்த்துக் கொண்டு நிக்கிறியா? என்று என் சித்திர ஆசிரியர் ஓங்கி அடிமட்டத்தால் என் குண்டியில் ஒரு அடி. (மன்னிக்கவும் அந்தச் சொல்லைத் தவிர இந்த இடத்தில் எந்தச் சொல்லும் அந்த வயதிற்குப் பொருந்தாது.) திடுக்கிட்டுப் போய் சுயநினைவுக்கு வந்த என்னை, உள்ளே இருந்து பரத ஆசிரியர் அழைத்தார். பெண்களுக்கு பரதம் முடியும் வரை முழங்காலில் நிற்கும்படி பணித்தார். அவர் எனக்குத் தண்டனை தருவதாக எண்ணி அப்படிச் செய்தார். எனக்கு அது ஒரு பெருவிருந்தாகத் தெரிந்தது. முழங்கால் வலி கூடத் தெரியவில்லை. ஒவ்வொரு சின்னச் சின்ன அசைவையும் உள்வாங்கிக் கொண்டே இருந்தேன். அவர்களின் நடனத்திற்குப் பின்னால் சிவனின் பெரிய ஒரு சிவதாண்டவக் காட்சியும் இருந்தது. சிவனின் தலையில் இருபுறமும் அலையாகச் செல்லும் அந்தச் சடாமுடியின் அசைவும் கீழே பயின்று கொண்டு இருக்கும் மாணவிகளது கூந்தலின் அசைவை ஒத்திருந்தது.

வகுப்பு முடிந்து நான்காவது பாடமாக எனக்கு ஓவியப் பாடம் வந்தது. நீங்கள் விரும்பும் காட்சியினை வரையுங்கள் என்று எனக்கு அடிபோட்ட சித்திர ஆசிரியர் கூறினார்.

நேற்றுத் தான் பாடசாலையில் சரஸ்வதி பூஜை முடிந்து வாழை வெட்டும் நடந்திருந்தது. அது எல்லோரது நெஞ்சிலும் நிறைந்திருந்தது. சிலர் நவராத்திரிக்கு கொலு வைத்திருக்கும் பொம்மைகளையும் வரைந்தார்கள். சித்திரங்கள் யாவும் சரஸ்வதி பூஜையாகவே இருந்தது. எல்லோரது சித்திரங்களையும் பார்த்த ஆசிரியருக்கு என் சித்திரத்தைக் கண்டதும் வியந்து போனார். அப்படியே குனிந்து என்னை அணைத்துக் கொண்டு மன்னித்துக் கொள்ளடா, நான் நீ பெட்டைகளைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய் என்று அடித்துவிட்டேன். உன் மனசு எங்கு, ஏதில் இருந்தது என்பதைக் காட்டி விட்டாய், என்று சொல்லியபடியே என்னை உற்று நோக்கினார்.

அந்த நோக்கலில் அவரிடம் இருந்த அன்பு மட்டுமல்ல அவரது ஓவியக் கலையும், சிற்பக் கலையும் உருகி என்னுள் வார்க்கப்பட்டுக் கொண்டதை உணர்ந்து கொண்டேன். அந்த உன்னதக் கலைஞன் தான் என் குரு. ஈழத்தில் பிறந்து உலகுக்கு ஒளி பரப்பிய சித்திர சிற்பக் கலைஞர் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள்.

இச்சம்பவம் நடந்து 16 வருடங்களுக்குப் பின் களனிப் பல்கலைக்கழகத்தில் சித்திரமும் சிற்பமும் படிக்கின்ற வேளையில் எங்கள் விரிவுரையாளர்கள் எங்களைக் கடற்கரைக்கும், நதிக்கரைக்கும் பதிலாக அந்தக் கடலும் நதியும் சங்கமிக்கும் பரதக் கலைக்குள் எம்மை அழைத்துச் சென்றார்கள். மாதவியின் நடன ஆற்றலை வியந்து உரைப்பார்கள். மாதவியின் பரதக்கலை புறத்தை மட்டுமல்ல அகத்தையும் அலங்கரித்து விட்டது. அதனாலோ என்னவோ எனக்கு புனைபெயராக அந்த மாதவியே வந்து விட்டாள்.

பரதத்தைப் பற்றி பேசுவதற்குக் கூட பரதம் 2000 ஆண்டு பழமை வாய்ந்தது என்று மட்டும் தொடங்கத் தேவையில்லை. பரதம் புதுமை வாய்ந்தது என்றே தொடங்க வைத்தது.

தமிழில் தான் பரதம் சித்திரத்துடன் உறவாடுகிறது என்று பார்த்தால், சிங்களத்திலும், நடனம் தான் உறவாடியது. வாரத்தில் இருமுறை நடனத்தினைக் காண நுண்கலைக் கூடத்திற்குச் செல்வோம். அங்கே நடனமாடும் ஆண்களையும், பெண்களையும் வரைவோம். வியர்வைத் துளிகள் நெற்றியில் மணி மணியாக, அவளை அல்லது அவனை விட்டு நிலத்தில் விழுவோமா! இல்லை விடுவோமா! என்று துடித்துக் கொண்டு இருக்கும் அந்தக் கணத்தில், அவர்களின் முகத்தில் கூந்தலில் விடுதலை பெற்ற சில மயிர்கள் வந்து ஒட்டிக் கொள்ளும். இடையினில் இருந்த அந்த ஷாலை அவிட்டு முகத்தை ஒருமுறை ஒற்றிவிட்டு மீண்டும் இடையினில் வரிந்து கட்டிக் கொள்ளும் அந்த நிலையில், அங்கு பிரமன் படைத்த அத்தனை பெண்களுமே சிறப்புச் சித்தி அடைந்து விடுவார்கள்.

ஓவியங்களில் வர்ணங்களையும், கோடுகளே ஆட்சி புரியும். உயிரைத் தொட்டுச் செல்லும் அந்தக் கோடுகள் உருவத்தில் இருந்து புறப்பட்டு இயற்கையுடன் கலப்பனவாக, காட்சிகளுடன் சங்கமிப்பவையாக இருக்கும்.

பரதத்தையும், நடனங்களையும் இரசிக்கும் கலைஞனின் சிததிரமும், சிற்பமும் ஒருபோதும் அசையாத சித்திரங்களைத் தருவதில்லை. சித்திரமும் சிற்பமும் எப்பவும் அசைவனவாக இருக்க வேண்டும். பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி இருக்கக் கூடாது. உண்மையான கலைஞன் ஒரு பிள்ளையார் பிடித்தால் அந்தப் பிள்ளையார் கூட பிடித்த இடத்தில் இருக்க மாட்டார்.

EELAM TAMILS

Culinary Art

The Tamil food is comparatively simple and nourishing, besides being very healthy.

Rice is the staple food of the Tamils and it is cooked in numerous ways. "Rice" is a Tamil word.

Though majority of the Sri Lankan Tamils are Hindus, yet all of them are not vegetarians. Rice is eaten with dishes called "Kari" (The word "curry" is derived from the Tamil word Kari). As the Tamil homeland skirts the north-eastern coastal areas, fish has become an important part of the Tamil diet. A variety of food is made from rice flour and flour made from maize and millet. Coconut milk and spices form important ingredients in Kari. Pulses and leafy vegetables are commonly used. There are a few post prandial delicacies peculiar to the Eelam Tamils. "Rasa Valli Kilanku" (King Yam pudding) is one such delicacy.

Performing Arts

Folk drama called "Naadu Koothuthu" is the traditional form of art inherited particularly from Tamils of the eastern region This vibrant form of art is a blend of dance, music and dialogue, with dance as the key element. The basic orchestral instrument is the drum which is played generally by the producer/director of the play called the "Annaavi".

The drum, the main musical instrument is the herald of folk drama and is the pivot around which the whole folk play rotates. The measured and rhythmic beats of the drum guide the actors to dance, providing the required signals to them, to switch from one situation to another. The other instrument of the orchestra is a pair of cymbals. The musical notes of the cymbals are vital to prompt the actors to sing and the chorus to accompany them. The folk plays are staged in front of temples or in close proximity, because of availability of adequate space for a large open air theatre capable of accommodating audience from several villages and the religious flavour of plays staged.

பழமையில் கிடக்கும் பரதக்கலை புதியன படைக்குமா?



வ. திவ்யராஜன்

இன்னும் எவ்வளவு? எமது தமிழ் மொழி எந்த இடத்தில் வைக்கப்பட வேண்டும்? ஆங்கிலம் எவ்வாறு தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்?...

எல்லா மொழிகளுக்கும் அதற்குரிய அழகிருக்கும். ஓசை நயம் இருக்கும். அவரவர் கடந்து வந்த அனுபவங்களுக்குத் தக்கதாக அதனதன் ஆளுமையும் இனிமையும் அவரவரால் உணரப்படும். ஆடுபவர் தமிழர். ஆட்டுவிப்பவர் தமிழர். ஆடலைச் சுவைப்போரில் 90% மானோர் தமிழ் தெரிந்த தமிழர். இந்தச் சூழலில் எந்த மொழிக்கு முதன்மை அளிக்கப்பட வேண்டும் என்பது தான் கேள்வி.

அழைப்பிதழில் தமிழ் இல்லை. ஆசியுரையில் தமிழ் இல்லை. அறிவிப்பாளர் பெயர்க் கொலையையும் தமிழ்க் கொலையையும் அரங்கில் அச்சமில்லாமல் நடத்துகிறார். 'கஜானனம் பூத கணத்துடன்' தொடங்கும் நிகழ்ச்சி தெலுங்குக் கீர்த்தனை வர்ணத்துடன் நகர்ந்து இரண்டொரு தமிழ்ப் பதங்களையும் இணைத்துக் கொண்டு 'பவமான சுதுடுபட்டு பாதாரவிந்தமுலதோ' மங்களத்துடன் நிறைவடைகிறது. இதேவேளை பரதக்கலை மூலம் தமிழ் மொழியையும் தமிழ்க்கலை கலாசாரத்தையும் வளர்ப்பதாகப் பெரிதாகப் பேசிக் கொள்கிறோம். எதை வளர்க்கிறோம் என்று நாம் மீளச் சிந்திக்க வேண்டும். என்ன புதிய எண்ணங்களை இந்தக்கலை மூலம் விதைத்தோம் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கற்கை மொழி தமிழ் ஆகட்டும்!
அண்மையில் ஒரு கலந்துரையாடலில் ஒரு பிரபல நடன ஆசிரியை சமஸ்கிருதத்தில் உள்ள அழகு, தமிழில் இல்லை என்று கூறினார். இன்னொரு ஆசிரியை தான் சொல்லிக் கொடுத்த சமஸ்கிருதச் சொற்களை தனது பிள்ளை மிக நன்றாகச் சொல்வதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார். 'கலைக்கு மொழியில்லை;கலையே ஒரு பொது மொழி' என்பது பரதத்துக்கு மட்டுமன்றி எல்லா நுண்கலைகளுக்கும் பொருந்தும். பாவம், தாளம், அங்க அசைவு, முத்திரைகள், ஆட்டம் இவற்றால் உணர்த்தப்படும் (மறுபக்கம் வருக)

கை வழி நயனம் செல்ல
கண்வழி மனம் செல்ல
மனம்வழி உணர்ச்சி செல்ல
அதனின் சுவை பிறக்கும்

பரத முனிவரின் நாட்டிய சாத்திரம் சுமார் இரண்டாயிரம் ஆண்டு காலம் பழமைக் கலையாகப் பரதநாட்டியம் கருதப்படுகிறது. இன்று பரத கண்டத்திற்கும் அப்பால் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் இக்கலை பரந்து, விரிந்து வேரூன்றி நிற்கிறது. ஈழத்தமிழர் தமது சொந்தக் கலையாகவே சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு மேல் இவ்வரிய கலையைப் பயின்றும் போற்றியும் வருவதோடு, தாம் புலம்பெயர்ந்து வாழும் பிற தேசங்களிலும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

ஈழத்தமிழர் பேரளவில் பெயர்ந்து வாழும் கனடிய மண்ணில் எழுபதுக்கும் மேற்பட்ட நடன ஆசிரியர்கள் பரதநாட்டியப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர். சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான பெண் பிள்ளைகள் பரதக் கலையைப் பயின்று வருகின்றனர்.

கோயில்களில் தேவதாசிகளால் ஒரு காலத்தில் ஆடப் பெற்ற பரதம் இடைக் காலத்தில் இழிந்ததாகக் கருதப் பெற்று, பின் சாதாரண மக்களாலும், குறிப்பாக மத்திய தர அல்லது மேற்தட்டு மக்களாலும் கௌரவமான ஒரு கலையாக - ஓர் அந்தஸ்துக்குரிய கலையாக ஆடப்பெற்று வருகின்றது.

தெய்வீகக்கலை
தெய்வங்களைக் கருப்பொருளாகக் கொண்டு தெய்வ சந்நிதானங்களில் ஆடப்பட்டு வந்ததால் தெய்வீகக்கலை என்று அர்த்தப்படுத்திய பலரும் இத்தகைய சாதாரண லௌகீக விடயங்களுக்குள் வருவதை எதிர்த்தனர். அதனால் பரதக்கலையின் தெய்வீகத் தன்மையும், தூய்மையும், புனிதமும் கெட்டுவிடும் என்று கருதினர். மாற்றங்களைப் புகுத்துவதால், அது தனது சுயத்தை இழந்துவிடும் என்று அஞ்சினர். அதனால், கர்நாடக இசையைப் போன்றே பரதக்கலையும் கடவுள்களின் கதைகளுக்குள் இன்னமும் கட்டுண்டு போய்க் கிடக்கின்றது. புராணங்களுக்குள் புதைந்து போய் இருக்கும் இக் கலையை வாழ்வியலுக்குகந்ததாய் மீட்டெடுப்பதில் பல பரதக்கலை முன்னோடிகள் உழைத்து வந்துள்ளார்கள் என்பதை மறுக்க முடியாது ஆயினும், போதுமான மாற்றங்களை இன்னும் கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். 'வாசுகி எனும் பாம்பை நாணாகக் கொண்டு மேரு மலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைவதைப் போன்ற' பல புராணக் கதைகளே புலம்பெயர்ந்து வாழும் இந்த மண்ணில் நிகழும் கலை அரங்குகளிலும் நிகழ்த்தப்படுகின்றன. தெய்வங்களின் லீலைகள், அவதார மகிமைகள், அற்புதங்கள் இவைகளைக் கடந்து புதிய கதைகளையும், காவியங்களையும் நோக்கி பரதம் செல்ல முடியாதா என்ற கேள்வி எழுகின்றது.

வாழ்க்கையின் யதார்த்தங்களைப் பிரதிபலிக்காத, அல்லது பிரதிபலிக்கும் ஆற்றலை இழந்த எந்தக் கலையும் காலப் போக்கில் தனது வீரியத்தை இழந்து விடும்.

மாற்றங்களும், புதிய பரிமாணங்களும்
மாற்றங்களை மறுதலிப்போர் உலக இயங்கியலை மறுதலிப்போராவர். மாற்றம் இல்லாமல் இந்தப் பிரபஞ்சத்தில் எதுவும் இல்லை. வாழ்க்கை என்பதும் வளர்ச்சி என்பதும் மாற்றத்தின் பாற்பட்டதே. மனித வாழ்க்கையின் ஒரு கூறாக இருக்கும் கலை வடிவங்கள் இசை, ஓவியம், சிற்பம் எதுவாக இருந்தாலும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டே வளர்ந்து செல்லும். பரதக்கலை இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது. ஆடும் தில்லை நடராஜன் ஆட்டுவிக்க அண்ட சராசரங்களின் அசைவும் இயக்கமும் நடைபெறுவதாய் நம்புவோர் மாற்றங்களை மறுதலிக்க நியாயம் இல்லை.

விடுதலைப் போராட்டங்களும் - இணைந்த சமூக மாற்றங்களும் கலை, இலக்கியத் துறைகளிலும் புதிய வீச்சுகளை ஏற்படுத்துவது இயல்பு. ஈழத்தமிழர் தம் விடுதலைப் போராட்டங்கள் பரதநாட்டியத் துறையிலும் பல புதிய கீற்றுகளைப் பரப்பியது. போராட்ட அம்சங்களை உள்ளடக்கிய பல்வேறு புதிய நடனங்களை இது பரதத்துக்குள் கொணர்ந்தது. இவற்றில் அதிகமானவை விடுதலைப் பாடல்களுக்கான அபிநயங்களாகவே வந்தன. இவற்றோடு வாழ்வியலின் பல்லாயிரம் கூறுகளையும் உள்ளடக்கமாகக் கொண்டு வெளிப்படுத்தும் ஆற்றல் பரதக்கலைக்கு உண்டு. ஆகவே பரதக்கலை பெரிதும் வேண்டி நிற்பது உள்ளடக்க மாற்றமே!

பரதக்கலையின் மொழி எது?
எவருக்காக.... எவர்.... எங்கே.... இக்கலையுடன் சம்பந்தப்படுகிறார் என்பது தான் விடை. சமஸ்கிருத ஸ்லோகங்களும், தெலுங்குக் கீர்த்தனைகளும் இருக்க வேண்டிய இடம்

பரதக்கலைக்கு மொழி சேவகம் செய்யும் என்பது உண்மை. ஆனால் அந்த மொழி தெரிந்த மொழியாய் இருக்கும் போது உணர்வுகள் ஒன்றிய சுவைப்பு பொங்கிப் பிரவாகிக்கும் என்பதை எவரும் மறந்து விடலாகாது. மொழியும், கலையும் ஒன்றோடொன்று இணைந்து வருபவை. மொழியால் கலையும் கலையால் மொழியும் சிறக்கும், வளரும். தமிழ் மொழியை பரதக்கலையின் ஊடக மொழியாக வைத்திருக்கும் போது புலம்பெயர்ந்த மண்ணில் வளர்ந்து வரும் எம் சிறுவர்கள் தாம் பயிலும் கலையின் இருப்புமொழியாக தமிழைப் பயின்றும் புரிந்தும் தமது பரம்பரையின் வேரினை அறிந்து கொண்டு அறியாமல் பாதுகாப்பர். தமது தாய் தந்தை பேசிய மொழியைத் தமது சந்ததிக்கும் எடுத்துச் செல்வர். ஆகவே கலைகளின் கற்கை மொழி தமிழ் ஆகட்டும்!

பரதக்கலையில் ஈழத்தவர் மரபு

பரதக்கலையில் ஈழத்தவர் மரபு ஒன்று வலுப்பெற வேண்டும். இந்த மரபிலே சமஸ்கிருத ஸ்லோகங்களும், தெலுங்குக் கீர்த்தனைகளும் விலகிப் போக நல்ல தமிழ் விருத்தங்களும், கீதங்களும் முழங்க வேண்டும். ஈழத்தமிழரின் அடையாளங்களை, வாழ்வியல் அனுபவங்களை வெளிப்படுத்தும் புதிய காவியங்கள், புதிய ஆக்கங்களினூடாக பரதக்கலை புதுப் பொலிவு பெற வேண்டும். ஆடை அலங்காரங்கள் ஒப்பனைகள் அதன் உள்ளடக்கங்களுக்கேற்ப மாறுதல் அடைய வேண்டும். நவீன நாடகத்துறை அக்கறை காட்டுவது போல் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அரங்க அமைப்பிலும் ஒளிச் சேர்க்கைகளிலும் அதிக அக்கறை காட்டுதல் வேண்டும். சின்னஞ் சிறியோர் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் அவர்களின் பருவத்திற்கேற்ற விடயங்கள் கையாளப்பட வேண்டும். குறிப்பாக அவர் தம் ஒப்பனையில் 'குழந்தைமை' யைச் சிதைக்கக் கூடிய (பெரிய கொண்டை நீண்ட சடை, தலை நிறையப் பூக்கள், கழுத்து நிறைந்த ஆபரணங்கள்) அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும். பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்தமைந்த பாடல்கள் விலக்கப்பட வேண்டும்.

பரதநாட்டிய அரங்கேற்றங்களை ஒரு சடங்கு போல் ஆக்காது போதிய பயிற்சிகளை (கோட்பாடு, செயல்முறை, நட்டுவாங்கம்) அளித்து, நல்ல சுவைஞர்களைக் கூட்டி நல்ல கலைப் படைப்பு அளிக்கைகளாக வழங்க வேண்டும். வீண் ஆடம்பரச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும். கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், கூத்து முதலான ஈழத்தமிழர் தம் பண்டைய கலை வடிவங்களையும் இணைத்து எமது கிராமியக் கலைகளையும் அழியாமல் காக்க வேண்டும், வளர்க்க வேண்டும்.

பரதக்கலையில் புதியன படைப்போம்!

மசாலா சினிமாவுக்குள் தமிழ்ச் சினிமாவும் அதன் ரசிகர்களும்



கதிர் செல்வகுமார்

கறுப்பு வெள்ளைப் படங்களில் மௌனமாக தொடங்கிய சினிமா என்ற சக்தியின் பயணம், இன்று கணினி மயப்பட்டு வீரியம் மிகுந்து உலகை வியாபித்து நிற்கிறது. கற்பனைக் கதைகள், சரித்திரக் கதைகள், உண்மைச் சம்பவங்கள், பாதிப்பை ஏற்படுத்திய மனிதர்கள், எதிர்கால ஊகங்கள், விஞ்ஞான அதிசயங்கள், நிகழ்காலப் பதிவுகள் என்று பல முனைகளிலும் சினிமா பதிவு செய்யாத விடயங்களே இல்லை எனலாம். வாழ்க்கையின் பாதிப்புகள் தான் சினிமாப் படங்களின் கருவாகின்றது. அதே சினிமாதான் பல விடயங்களை பாதிக்கின்றது. ஒரு படைப்பாளிக்குள் உலகம் ஏற்படுத்திய தாக்கம் திரைக்கதையாகிறது. அதனால் உருவாகும் சினிமா பலருக்குள் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

"சினிமா என்பது ஒரு அற்புதமான ஆயுதம், ஆனால் தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை அது பல் குத்த மட்டுமே பயன்படுகிறது" என்கிறார் கவியரசு வைரமுத்து. எவ்வளவு பெரிய விசயத்தை இரு வரிகளுக்குள் அடக்கியிருக்கிறார் கவிஞர். இந்தியாவில் ஒரு வருடத்திற்கு 1,000 படங்களுக்கு மேல் வெளியாகிறது. ஆனால் இந்தியத் தேசபிதாவான மஹாத்மா காந்தியின் சுயசரிதையைப் படமாக்க "அட்டன்பரோ" என்ற அந்நியரால் தான் முடிந்திருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் 250 தமிழ் திரைப்படங்களுக்கு மேல் வெளியாகிறது. இந்தத் தொகை உலகில் வெளியாகும் மொத்தத் திரைப்படங்களில் மிகப் பெரிய தொகையாகும். ஆனால் தமிழ்த் திரைப்படங்களின் சாதனைப் பட்டியல் என்று தேடப் போனால் பட்டியல் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

1931 இல் முதல் பேசும்படம் "காளிதாஸ்" வெளியானது.
1934 இல் தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் படம் "ஸ்ரீநிவாச கல்யாணம்"
1937 இல் வெளிநாட்டில் (லண்டனில்) படப்பிடிப்பு செய்யப்பட்ட முதல் தமிழ்ப் படம் "நவயுவன்"

1943 இல் தமிழில் டப்பிங் செய்யப்பட்ட முதல் படம் "அரிச்சந்திரா" (கன்னடத்திலிருந்து)
1944 இல் வெளியான "ஹரிதாஸ்" திரைப்படம் 110 வாரங்கள் ஓடி சாதனை புரிந்தது.
1948 இல் முதன் முதலில் இருமொழியில் எடுக்கப்பட்ட முதல் தமிழ்ப் படம் "சந்திரலேகா" (தமிழ், ஹிந்தி)
1954 இல் "மலைக்கள்ளன்" திரைப்படம் இந்திய அரசின் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றது. இப் படம் ஒரே நேரத்தில் 6 மொழிகளில் தயாரிக்கப்பட்டது.
1959 இல் எடுக்கப்பட்ட "வீரபாண்டிய கட்டப்பொம்மன்" ஆபிரிக்க - ஆசிய படவிழாவில் திரையிடப்பட்டது. இதில் நடித்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு சிறந்த நடிகர் விருதும், இதற்கு இசையமைத்த ஜி.ராமநாதன் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதையும் பெற்றனர்.
1960 இல் வண்ணத்தில் வெளியான முதல் தமிழ் திரைப்படம் "அலிபாபாவும் 40 திருடங்களும்"
1964 இல் முதல் ஈஸ்ட்மன்ட் கலர் தமிழ்ப்படம் "காதலிக்க நேரமில்லை"
1973 இல் முதல் சினிமாஸ்கோப் படம் "ராஜ ராஜ சோழன்"
1977 இல் முதல் ஆர்.ஓ கலர் படம் "பட்டினப் பிரவேசம்"
1980 இல் முதல் தமிழ் 3டி படம் "மைடியர் குட்டிச்சாத்தான்"
------ ஒரே செட்டில் எடுக்கப்பட்ட முதல் தமிழ் திரைப்படம் "நெஞ்சில் ஓர் ஆலயம்"
------ நடிகை சுஹாசினி இயக்கிய "இந்திரா" படம் பெலாரஸ் நாட்டின் தலைநகரான மின்ஸ்க் நகரில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவில் சிறந்த இயக்குனருக்கான விருதைப் பெற்றுக் கொண்டது. இந்த விழாவில் 22 நாடுகளைச் சேர்ந்த 120 படங்கள் பங்கேற்றன.

(எதிர்ப்பக்கம் வருக)

------ தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் மொத்தம் 101 படங்களைத் தயாரித்த ராமநாயுடுவின் பெயர் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றது.
------ 11 இயக்குனர்கள் இயக்க 24 மணி நேரத்தில் எடுக்கப்பட்ட (கின்னஸ் ரெகார்டுக்காக) தமிழ் படம் "சுயம்வரம்"

இந்தியத் திரைப்படங்கள் என்ற தலைப்பில் சர்வதேசத் திரைப்பட விழாக்களில் கலந்து கொண்ட திரைப்படங்கள்.
1978 அவர்கள், அன்னக்கிளி, சில நேரங்களில் சில மனிதர்கள்
1979 ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், அக்ரகாரத்தில் கழுதை
1980 அழியாத கோலங்கள், உதிரிப் பூக்கள்
1981 தூரத்து இடிமுழக்கம், நிழல்கள்
1982 தண்ணீர் தண்ணீர், நெஞ்சத்தைக் கிள்ளாதே
1983 ஏழாவது மனிதன்
1984 ஒரு இந்தியக் கனவு
1985 அச்சமில்லை அச்சமில்லை
1986 முதல் மரியாதை
1987 மௌனராகம்
1989 வீடு, வேதம் புதிது, நாயகன்
1990 உச்சி வெயில்
1991 சத்தியாக்கிரகம், அஞ்சலி
1992 மறுபக்கம்
1994 ரோஜா

என்பதோடு அதன் சாதனைப் பட்டியல் நின்று விடுகிறது. 1931ம் ஆண்டு முதல் பேசும் படம் வெளியாகியது. இதுவரை 52 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தச் சாதனைப் பட்டியல் இந்தக் கட்டுரையில் பட்டியலிடும் அளவிற்கு இல்லாமல் ஒரு புத்தகமே அச்சேற்றும் அளவிற்கு நீண்டு நெடுத்திருக்க வேண்டும். ஆனால் மசாலா சினிமா வட்டத்திற்குள் சிக்கிவிட்ட தமிழ் சினிமா எழுந்திருக்க முடியாமல் தவிக்கிறது. இதற்குக் காரணம் படம் எடுப்பவர்களா? அல்லது படம் பார்ப்பவர்களா? அறுதியிட்டு விடை கூற முடியாத ஒரு கேள்வி இது. கண்டு கொள்ளப்படாமலே போன நல்ல திரைப்படங்கள் ஏராளம். அதே நேரம் இதில் என்ன இருக்கிறது என நினைக்க வைத்த படங்கள் ஓஹோ என்று ஓடி வசூலை அள்ளிக் குவித்திருக்கிறது.

ஹொலிவுட் திரையுலகம் சினிமாவை ஒரு நல்ல சவால் களமாக பயன்படுத்துகிறது. ஒவ்வொரு படமும் புதுமைகள் செய்யும் அவாவோடு வெளிவருகின்றன. ஒரு நடிகன் ஒரு கலையை திரையில் பிரதிபலித்தால் அந்தக் கலையில் அவன் தேர்ச்சி பெற்றவன் என்பதே அர்த்தம். நடனம் தெரியாத ஒரு கலைஞனை நடனம் ஆட ஹொலிவுட் திரையுலகம் அனுமதிப்பதில்லை. சண்டைக் கலையில் தேர்ச்சி பெறாத ஒரு கலைஞன் பத்துப் பேரை அடித்து காற்றில் விசிறும் கோமாளித்தனம் அங்கே இல்லை. குழந்தைகள் திரைப்படங்கள் விதிவிலக்கானவை. ஹொலிவுட் திரையில் ஒரு நடிகன் தோன்றுகிறான் எனில் அவன் தனக்கிருக்கும் திறமையை மட்டும் நம்பியே அந்தப் பாத்திரத்தில் தோன்றுகின்றான். இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் அரசியலில் இல்லாமல் போன நேர்மை கலைத்துறையிலும் இல்லாமல் போனது தான் கொடுமை.

ஒரு திரைப்படம் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டதும் முதலில் நாயகனின் கால்சீட்டுக்கு அலைகிறார்கள். குறிப்பிட்ட நடிகனின் கால்சீட் கிடைத்ததும் கதையில் 5 பாட்டும் 6 சண்டையும் ஒரு கவர்ச்சி நடனமும் நாயகனோடு கூட வர ஒரு கொமெடி ட்ராக்கும் என முடிவு செய்யப்பட்ட பின்னரே கதை தீர்மானிக்கப்படுகிறது.

அறுபது எழுபதுகளில் தமிழ் சினிமாவை ஆக்கிரமித்தவர்கள் சவாலைச் சந்திக்க துணிந்தவர்களாக இருந்தார்கள். தங்களைத் தாங்களே சோதனைகளுக்குட்படுத்தி வெற்றியும் கண்டார்கள். ஆனால் இப்போது கதையே வேறு. சுலபமாகப் பணம் பண்ணும் வழி தேடுகிறார்கள்.

சிவாஜி காலத்தில் செய்யப்பட்ட சோதனை முயற்சிகளின் தொகை இப்போது செய்யப்படும் சோதனை முயற்சிகளை விட அதிகமாக இருந்தது. இனறைய காலத்தில் கமல்ஹாசன், விக்ரம், விஜய், மணிரத்னம், பாலா, ஹரி, ஏ.ஆர்.ரகுமான் என்று ஒரு சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இவர்கள் செய்யும் ஓரிரு முயற்சிகளையும் உயர்ந்த எண்ணங்களையும் மற்றவர்கள் தவிடுபொடியாக்கி விடுகின்றார்கள். சர்வதேசத் தரத்தை எட்டும் நிலைக்கு தமிழ் சினிமாவை மேற்குறிப்பிட்டவர்கள் வழிநடத்த முற்பட்டாலும் கலை வியாபாரிகள் அதற்கெல்லாம் ஆப்பு வைத்து விடுகிறார்கள்.

இதுவரை காலமும் தமிழ்நாட்டு ரசிகர்கள் தான் இந்த மசாலா சினிமாவை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று என் மனம் நினைத்திருந்தது. ஆனால் புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழ் பட ரசிகர்களும் அந்தப் புண்ணியத்தைச் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்தது "புத்தரின் பெயரால்" திரைப்படத்தின் படுதோல்வி. ஒரு சோதனை முயற்சி, இல்லை எங்களைப் பற்றி பதிவு, இல்லை ஈழத் தமிழனின் சினிமா நோக்கிய பயணத்தின் பலமான முதல் சுவடு என்றாவது பார்ப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எல்லா எதிர்பார்ப்பையும் மண் கவ்வ விட்டு "வின்னர்" என்ற பழைய சாதமும் "அலை" என்ற அரைவேக்காடும் திரை அரங்கை நிரப்பியதே வேதனை. இறுதியாக வந்த பிதாமகனின் வெற்றி சிறிது பாலை வார்த்திருப்பது இயக்குனர் பாலாவிற்கு மட்டுமல்ல எங்களிற்கும் தான்.

சினிமா என்ற ராஜபாட்டையில் நடக்க தன்னை தயார்படுத்தி வருகின்றது ஈழத்துக் கலையுலகம். அதுவும் பீலாவிலும் புரட்டுகளிலும் சுயதிறமை இல்லாத கலைஞர்களால் சூழப்படுமா? அல்லது உலக அரங்கில் நிமிர்ந்து நிற்கக் கூடிய வகையில் உண்மையான கலையை உள்வாங்குமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். பொறுமை என்பது எத்தனை சந்ததிக் காலம் என்பது தான் தெரியவில்லை.

காலம்.... காலம்.... காலம்.....!

Tamils Clothes

Tamil women wear seelai (saree) and chaddai (blouse). Seelai is a piece of cloth six yards in length, usually of bright colour, made of cotton, silk or artificial thread. The seelai can be worn in many ways and the style may indicate the locality or the community of the woman. Tamil girls wear paavaaddai (long skirt) and thaavani (half saree). The traditional dress of the Tamil man is Verddi and Saalvai. Verddi is a piece of white cloth of 6 or 12 feet in length. On festive occasions the men wear silk verddi and saalvai and a collar-less shirt. Tamil men also wear a head dress called the thalaippa for protection from the heat.

ஊடகங்களில் உழைப்பு



தமிழ்ப்பிரியன்

உழைப்பு என்றவுடன் அர்த்தம் ஒன்றாக இருப்பினும் நாம் இருவகையில் அர்த்தப்படுத்திக் கொள்வது வழமை. அவரது உழைப்பிலேயே அந்த நிறுவனம் வளர்ந்தது என்ற சேவைசார் அர்த்தத்திலும், வெளிநாடு சென்று உழைத்ததில் கட்டிய வீடு என்று பணம் சேர்ப்பு என்ற அர்த்தத்திலும் எடுத்துக் கொள்ளப்படலாம். இவ்விரண்டுமே ஊடகங்களில் உழைப்போருக்கும் பொருந்தும். குறிப்பாக மேலைத்தேய தமிழ் ஊடகங்களுக்கு மிகவும் பொருந்தும். ஒரு புறம் பணம் சம்பாதிக்க ஆரம்பிக்கப்படும் ஊடகங்களும், மறுபுறம் தமிழர் தேவை என ஆரம்பிக்கப்படும் ஊடகங்களும் உண்டு. அத்துடன் பணம் சம்பாதிக்க, ஊடகங்களில் இணைந்து கொள்ளும் கலைஞர்களும், கலை ஆர்வம் மற்றும் சேவை மனப்பான்மை கொண்ட கலைஞர்களும் உண்டு.

பொதுமக்களின் பார்வையில் அவற்றின் பின்னணி பற்றித் தெரிய நியாயமில்லை. ஊடகங்களின் தரம் பற்றியும் அவற்றைத் தருவோர் பற்றிய விமர்சனங்களை மட்டுமே எதிர்பார்க்க முடியும். சிலவேளைகளில் இவை அனைத்தையும் ஒரே தராசில் போட்டு விமர்சனங்களை தரும் போது சேவை மற்றும் தமிழர் தேவை என்ற எண்ணத்தில் முயற்சிக்கும் மனங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. இது மட்டுமல்லாமல் இவர்களின் மேலதிக வளர்ச்சிக்கு தேவையான ஊக்கமும் தடுக்கப்படுகிறது.

ஊடகங்களில் மேலைத்தேய தமிழ் பத்திரிகைகளில் இன்னும் தொடர்ச்சியான தினசரிப் பத்திரிகைகள் வர முடியவில்லை. வாரப் பத்திரிகைகள் மட்டுமே போதியளவு வரக்கூடியதாக உள்ளது. பத்திரிகைகளைப் பொறுத்தவரை இன்னொருவரின் தயாரிப்பில் வரும் படம், பாடல் போன்றவற்றை வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி/ஒளி பரப்புவது போல் செய்ய முடியாது. சில திரைப்பட செய்திப் பகுதிகளுக்கு மட்டும் இவை உதவலாம். ஆனால் மற்றைய பகுதிகளில் "cut & paste" தந்திரம் முடியாது. அப்படிச் செய்தால் தனித்துவமும் பேணப்பட முடியாது, நீண்ட நாட்களுக்கு நின்று பிடிக்கவும் முடியாது. இதன் காரணமாக எழுதுதல் தேவை அதிகமாக இருப்பதால், அதற்கேற்ப போதியளவு வருமான வசதிகள் இல்லாதிருப்பதால் தினசரிப் பத்திரிகைகள் வருவதென்பதன் சாத்தியம் மிகக் குறைவு. வாரப் பத்திரிகைகள் கூட பல தமது செலவைச் சமாளிப்பதில் படும் சிரமம் அவற்றின் தர விட்டுக்கொடுப்புகளில் உண்டு. கூடியளவு விளம்பரங்களை பெறுவதன் மூலமே செலவை சமாளிக்க முடியும் என்ற காரணத்தினால் கூடியளவு வாசிப்போரைக் கொள்ளும் நோக்கில் இலவசமாக பத்திரிகைகளை விநியோகிக்க வேண்டிய அவசியமும் உருவாகிறது. இவர்களின் சிரமம் புரியாமல் இயெல்லாம் பத்திரிகையா என்று ஒட்டுமொத்தமாக ஒதுக்கித் தள்ளுவது நியாயமானதல்ல.

வானொலிகளில் கலைஞர்களின் பங்களிப்பென்பது அவர்களுக்கு சற்று உற்சாகமளிக்கக் கூடியது. பத்திரிகைகளில் பெயர் போட்டால் மட்டுமே எழுதியவர் யார் என்று தெரிய முடியும் (பிரபல எழுத்தாளர்கள் விதிவிலக்கு). "இது உங்களுடைய சொந்த எழுத்தல்ல; இன்னொருவருடையது" என்று சந்தேகப்படவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால், வானொலிக் கலைஞர்களை பொறுத்தவரை, தற்போதைய நிலையில் நிகழ்ச்சி தயாரிப்பாளர்களே அறிவிப்பாளராகவும் இருப்பதால் பேசும் குரல் மற்றும் தன்மையை இன்னொருவர் உரிமை கொண்டாட முடியாது. எனவே தமது கலை ஆர்வத்தில் வரும் கலைஞர்கள் தமது நிகழ்ச்சி வழங்கும் திறனைக் குரல் வடிவில் கேட்கும் போதும், மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போதும் திருப்தி பெறுகின்றார்கள். இதுவே பலருக்குப் போதுமான ஊதியமாகவும் உள்ளது. இதன் காரணமாகவும் பல வியாபார காரணங்களுக்காகவும் கனடாவில் 1995ன் பின் 24 மணி நேர தமிழ் வானொலிகள் தோன்றிய போது பல புதிய வானொலிக் கலைஞர்கள் உருவாகினார்கள். சிலர் பயிற்சியுடன் தமக்குச் சரியென்று தென்படுவதைச் செய்வதுமாக பல வித்தியாசமான கலைஞர்கள் உருவாகினார்கள். இலவசமாகக் கிடைத்த கலைஞர்கள் வானொலிகளின் செலவுக் கட்டுப்பாட்டுக்கு மிகுந்த உதவியாக இருந்தனர். வானொலி நடத்துனர்களும் இலவசக் கலைஞர்களையும் அவர்கள் கலையார்வத்தையும் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டனர். இதே வேளை கலைஞர்களும் தமது கலையார்வத்தை சிறிதளவேனும் பூர்த்தி செய்ய இவ்வானொலிகளைப் பயன்படுத்திக் கொண்டனர். எனவே இருசாரரும் யாரையும் யாரும் குறை சொல்ல முடியாது. நேரத்தைப் பணமாகப் பார்க்கும் இந்நாட்டில் கலையைக் கூட நீண்ட நாட்களுக்கு இலவசமாக வாங்கவும் முடியாது; கொடுக்கவும் முடியாது. இதன் காரணமாக பல நல்ல புதிய கலைஞர்கள் விலகிக் கொள்ள பல புதிய ஆர்வமுள்ள கலைஞர்கள் தோன்றத் தொடங்கினார்கள். இச் செயற்பாடு இப்போதும் தொடர்கிறது என்றே சொல்லலாம். வருமான வசதி குறைந்த நிலையில் இருக்கும் நிலையங்கள் கலைஞர்களை ஊதிய ரீதியாக திருப்திப்படுத்த முடியாவிட்டால் நிலையத்தினரையும் குறை சொல்ல முடியாது. ஆயினும் போதிய வருமானம் இருந்தும் அனுபவமுள்ள பல கலைஞர்களையும், வானொலி தரத்தையும் பேணாமல் போயிருந்தால் அது கவலைக்குரிய விடயம் தான். பல வருட அனுபவம் பெற்ற கலைஞர் நீண்ட காலத்தின் பின் சில "எதிர்பார்ப்பை"ப் பெறாவிட்டால் அங்கிருந்து விலகுகின்றனர். அல்லது அரைகுறை மனதுடன் விட்டுக் கொடுப்புத் தரத்துடன் சராசரி நிகழ்ச்சிகளை வழங்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

கனடாவைப் பொறுத்தவரையில் முழு நேர தொலைக்காட்சிகளின் வயது மிகவும் குறைவு தான். 2001ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று முழு நேரத் தொலைக்காட்சிகளும் ஒட்டுமொத்தமாக காணாமல் போய்விடாமல் இருப்பது ஒரு வகையில் ஆச்சரியம் தான். ஓர் முழு நேர தொலைக்காட்சியை அரசாங்கங்கள் ஆரம்பிப்பதற்கே தயங்கியிருக்கின்றன. தொலைக்காட்சி நடத்துவதன் செலவு மற்றைய ஊடகங்களுடன் ஒப்பிடுகையில் பல மடங்கு அதிகம். ஒப்பீட்டளவில் குறைந்த தமிழ் பார்வையாளர்களைக் கொண்ட மேலைத்தேய நாடுகளில் தனியார் தொலைக்காட்சிகளின் செலவு என்பது யானைக்கு தீனி போடுவது போன்றது. சரி, போதியளவு நிகழ்ச்சிகள் இல்லாவிட்டால் படமும் பாட்டும் போட வேண்டியது தானே என்று கூறுபவர்களும் உண்டு. அவற்றின் உரிமை கூட பணம் கொடுத்துத் தான் வாங்க வேண்டுமென்பதை மறந்து விடக்கூடாது. தற்போதெல்லாம் திரைப்படங்களின் வெளிநாட்டு உரிமைகளை பலர் போட்டி போட்டுக் கொண்டு வாங்குவதால் அவற்றின் விலைகள் கூட அதிகமாகி விடுகிறது. உள்ளூர் நிகழ்ச்சித் தயாரிப்பு செலவுகளுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டு தயாரிப்புகள் விலை குறைவாக

(எதிர்ப்பக்கம் வருக)

இருப்பினும், ஓர் மேலைத்தேய தமிழ் தொலைக்காட்சி நிறுவன வருமானத்துடன் பார்க்கையில் அதுவும் அதிகம் தான்.

மேலைத்தேய தமிழ் தொலைக்காட்சி நிலையங்களைப் பார்க்குமிடத்து அவை தொழில் வழங்கும் இடமாக இல்லை. அங்கு வேலை செய்பவர்களில் பெரும்பாலானோர் தொண்டு அடிப்படையிலோ அல்லது குறைந்த ஊதியத்துடன் கூடிய பளு கொண்ட வேலையையே செய்கிறார்கள்.

பொதுவாகவே இவர்கள் அனைவரது திருப்தியும் வருமானமல்ல. கலை மேலுள்ள ஆர்வமும் சமூகம் மேல் கொண்ட பற்றும் என்றே கொள்ளலாம். பார்வையாளர்களின் எண்ணத்தில் கலைஞர்களுக்கு கிடைக்கும் புகழ் காரணமாக ஈடுபடுகிறார்கள் என்று தோன்றலாம். இது சில வேளைகளில் சிறிய காலத்துக்குத் தோன்றி மறையும் கலைஞர்களுக்கு பொருந்தலாம். நீண்ட காலம் சேவையிலிருப்பவர்களுக்கு பொருந்துமென்று கூற முடியாது. ஏனெனில் அவர்களுக்கிருக்கும் சுமை இவையனைத்தையும் விட பல மடங்காகும். தொலைக்காட்சியில் பார்க்கும் சிறிது நேரம் தான் அவர்களை நாம் பார்க்கிறோம். ஆனால் அதற்கு அவர்கள் செலவிடும் மணி நேரங்கள் அல்லது நாட்களை மறந்து விடக்கூடாது.


எந்த ஊடகமாகவும் இருக்கட்டும் விமர்சனம் என்பது அவற்றின் இருப்பை உணர்ந்தே வழங்கப்பட வேண்டும். பல சந்தர்ப்பங்களில் இவை உணரப்படாமல் கொடுக்கப்படும் விமர்சனங்கள், சேவை மற்றும் தமிழர் தேவை என்ற உணர்வில் தமது பங்களிப்பை வழங்கும் கலைஞர்களின் உழைப்பை சோர்வடைய செய்யவோ அல்லது இல்லாமல் செய்யவோ வழிவகுத்து விடலாம். உதாரணமாக பல கோடிக் கணக்கான பார்வையாளர்களை கொண்ட தமிழ்நாட்டு தொலைக்காட்சி தயாரிப்புகளை மேலைத்தேய தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட முடியாது. விமர்சனங்கள் நிச்சயமாக தேவை தான். அவை ஆரோக்கியமானதாகவும் மேலும் வளர்ச்சிக்கு உதவுபவையாகவும் இருத்தல் வேண்டும். தற்போது இருக்கும் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சியை தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமா அல்லது ஒட்டுமொத்தமாக இல்லாதொழிக்க வேண்டுமா என யோசிக்க வேண்டும்.

எதுவுமே செய்பவர்களுக்குத் தான் அதிலுள்ள சிரமங்கள் தெரியுமென்று சொல்வார்கள். இது "ஊடக உழைப்பு"க்கும் பொருந்தும்.

ஆசிரியை: உனது தந்தையாரிடம் பத்து டாலர் இருக்கின்றது. நீ அவரிடமிருந்து ஐந்து டாலர் கேட்கின்றாய். எத்தனை டாலர் அவரிடம் மிச்சம் இருக்கும்?
மாணவன்: பத்து டாலர்
ஆசிரியை: உனக்குக் கணக்குத் தெரியாது!
மாணவன்: உங்களுக்கு என் அப்பாவைத் தெரியாது!

மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் மகிழ்ச்சியும் துக்கமும், இரவும் பகலும் போன்றவை. மாறி மாறி வந்து போகக் கூடியவை. ஆயினும் மகிழ்ச்சியின் ஒரு கதவு மூடும் போது இன்னொன்று திறக்கின்றது என்பதை உணரத் தவறும் மனிதன், மூடிய கதவையே நீண்ட காலம் பார்த்துக் கொண்டிருப்பதனால், திறந்தபடி காத்துக் கிடக்கும் மகிழ்ச்சியின் கதவைக் காணத் தவறி விடுகின்றான். மூடிய கதவுகள் போலத் தோன்றும் துக்கங்களும் துன்பங்களும் தோல்விகளும் பல வழிகளில் எம்மைப் பாதிக்கின்றன. இதனால் தான் "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?" என்று பாடப்பட்டுள்ளது போலும்! இது துன்பத்தின் மீதான வெறுப்பையும் வேண்டாமையையும், இன்பத்தின் மீதான விருப்பையும் வேண்டுதலையும் எமக்குச் சுட்டிக் காட்டுகின்றதல்லவா? "இடுக்கண் வருங்கால் நகுக" என்று வள்ளுவன் கூறினான். வாழ்க்கை கட்டு மீறிப் போகும் போது சிரித்தல், நிலைமையைக் கட்டுப்படுத்தத் தேவைப்படும் தைரியத்தைத் தரும் என்பதனாலேயே அவன் இவ்வாறு கூறினான். எனவே நல்ல இசையும் சிரிப்புக்கு வித்தாகும் நகைச்சுவையும் துன்பச் சுமையைக் குறைக்க வல்ல அருமருந்துகள் என்ற உண்மையை, மக்கள் இன்று நேற்றல்ல, ஆண்டாண்டு காலமாக உணர்ந்தறிந்து வைத்துள்ளனர்.

"சிரிக்கத் தெரியாதவன் ஒரு சிறந்த வியாபாரியாக இருக்கத் தெரியாதவன்" என்று சீனப் பழமொழி ஒன்று கூறுகின்றது. சிரிப்பு உங்களுக்குப் பல சிறப்புகளைத் தேடித் தரக்கூடியது. முகத்துக்கு அழகூட்டிப் பிறரை வசீகரிக்க அது உதவுகின்றது. எடுத்த காரியங்களில் இலகுவாக வெற்றியடையச் செய்கின்றது. உங்கள் சிரிப்பு உங்களுக்குப் புத்துயிரூட்டுவது



நகையும் நகைச்சுவையும்

க. நவம்

மட்டுமல்லாமல், பிறருக்குத் தெம்பையும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் தரக்கூடியது. குறிப்பாக மேடையேறி நிற்கும் சமயங்களில் நகைச்சுவை உங்கள் ஆளுமையை உன்னதமாக்கி, உற்சாகப்படுத்தும். நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, சிரிப்பு எப்பொழுதும் கைகொடுத்து உதவும். சபையோரைச் சௌகரியப்படுத்தும். சபையோருக்கும் உங்களுக்கும் இடையிலான தூரத்தைக் குறைக்கும். அத்துடன் கவர்ச்சியின்மையையும் அழகின்மையையும் மூடி மறைக்கும் ஆற்றலையும் அது கொண்டுள்ளது.

பறவைகளும் விலங்குகளும் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் அவை சிரித்ததை யாராவது பார்த்ததுண்டா? இருக்க முடியாது. மகிழ்ச்சியாகச் சிரித்துச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் மனிதனிடம் மட்டுமே உண்டு. சிரிக்காத மனிதனை விலங்குக்கு ஒப்பிடலாம் என்றும், அவன் முதிர்ந்த போது எண்ணிச் சிரிப்பதற்கு அவனிடம் எதுவுமே இருக்காது என்றும் கூறப்படுகின்றது. சிரிப்பு உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் தர வல்லது. தேகாரோக்கியம் மிக்கவர்கள் தினமும் சராசரியாக 100 தடவைகள் சிரிக்கின்றார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன. "சிரிக்கத் தெரிந்தவன் வறுமையென்னும் சிறுமைக்குள் ஒரு போதும் அகப்பட மாட்டான்" என்று Ralymond Hitchcock கூறியிருக்கின்றார். எனவே சிரிக்காத நாள் ஒரு வீணான நாள். வேலைப் பளு அதிகரித்து வருந்தும் போதும், தோல்வியுணர்வு மிகுதியால் மனம் சோர்ந்து வாடும் போதும், துன்பம் உங்களைக் கொன்று தின்று ஏப்பம் விடும் போதும் சிறிது நேரம் மனம் விட்டுச் சிரித்து மகிழப் பாருங்கள். நிச்சயம் புதுப் பிறவி எடுத்து வருவீர்கள்! வாய்விட்டு அழுதாலும் துன்பம் தீரும் என்ற சிலர் கூறக் கேட்டிருக்கின்றோம். அழுவதன் மூலம் துன்பம் கழுவப்படுகின்றது என்பது உண்மைதான்! ஆனால் சிரிப்பதன் மூலம் Dry Cleaning எனப்படும் "உலர் தூய்மையாக்கல்" நிகழ்த்தப்படுகின்றது என்ற உண்மையை எத்தனை பேர் அறிவார்?

(மறுபக்கம் வருக)

இங்கிலாந்தின் பிரதமர் பிட், "மூன்றாம் ஜோர்ஜ் மன்னருக்கு ஒரு கழுதையின் மூளை கூடக் கிடையாது" என்று பாராளுமன்றத்தில் பேசிய போது, "இராஜ துரோகம்! உடனே மன்னிப்புக் கோர வேண்டும்!" என்று சபையில் கூக்குரல் எழுந்தது. உடனே பிட் எழுந்து சொன்னார், "நான் சொன்னதை வாபஸ் பெறுகிறேன். அது தவறு தான்; மூன்றாம் ஜோர்ஜ் மன்னருக்கு கழுதையின் மூளை நிறைய இருக்கிறது"

சிரிப்பு நான்கு வழிகளில் எமக்கு உதவுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.
1. கவனத்தைத் திசை திருப்புவது
2. பதற்ற நிலையைக் குறைப்பது
3. எதிர்பார்ப்புகளை மாற்றியமைப்பது
4. இயற்கையாக உடலிலுள்ள நோய் கொல்லியான Endorphins எனும் இரசாயனப் பதார்த்தங்களின் உற்பத்தியை அதிகரிப்பது

சிரிப்பு உடல் வலியைக் குணப்படுத்திச் சமநிலைப்படுத்தும் ஆற்றல் கொண்டது. பக்க விளைவுகளற்ற அற்புதமான இயற்கை மருந்து. நாம் சிரிக்கும் போது Pitutory சுரப்பியிலிருந்து Endorphins எனப்படும் பதார்த்தங்கள் சுரக்கப்படுகின்றன. இவை Heroin, Morphine எனப்படும் போதை வஸ்த்துகளின் 'மைத்துனர்கள்' எனக் கருதப்படக் கூடிய இயற்கை இரசாயனச் சுரப்புகளாகும். நாம் சிரிக்கச் சிரிக்க மூளையில் Endorphins பதார்த்தங்களின் அளவு அதிகரிக்கின்றது. இதனால் வலியை அல்லது துன்பத்தை உணரும் தன்மையும் குறைகின்றது. ஆகவே உடனடி உபாதைகளை மறைக்க உதவும் Anesthesia வை எமது உடல் சுரப்பதற்கு சிரிப்பு காரணமாக இருக்கின்றது.

இவற்றுடன் வாய்விட்டு வயிறு குலுங்க நாம் சிரிக்கும் போது -
* முகத்திலும் அடிவயிற்றிலும் உள்ள தசை நார்கள் நன்கு விரிந்து சுருங்கி நன்மை தருகின்றன. அதேவேளை உடலிலுள்ள ஏனைய ஏராளம் தசைகளும் ஓய்வெடுத்து அமைதியடைகின்றன.
* சிரிப்பு எமது நோயெதிர்ப்புச் சக்தியை (Immunity) அதிகரிக்கச் செய்கிறது. சிரிக்கும் போது சுவாசத் தொற்றுக் கிருமிகளை எதிர்த்து அழிக்கும் Immunoglobulin என்ற ஓமோனையும் ஏனைய இயற்கை நோயெதிர்ப்புத் திரவங்களையும் உடல் சுரக்கின்றது.
* சிரிக்கும் போது இதயத் துடிப்பின் வேகம் அதிகரிக்கின்றது. இதன் போது மூளைக்கு மேலதிகமான ஒட்சிசன் எடுத்துச் செல்லப்படுகின்றது. இரத்தச் சுற்றோட்டமும் சீரடைகின்றது. இதனைத் தொடர்ந்து இதயமும் உடலும் ஓய்வு பெற்று அமைதி அடைகின்றன.

இவ்வாறான நன்மைகளுடன் குருதியைச் சுத்திகரிக்கின்ற காரியத்தையும் சிரிப்பு செய்கின்றது. மார்பை விரிவடையச் செய்கிறது. நரம்புகளுக்கு மின்னேற்றுகின்றது. மூளையில் சேரும் மயக்க வலைகளை அறுத்தெறிகின்றது. முழு உடற்றொகுதியையும் சீரமைத்துப் புத்துயிரூட்டுகின்றது.

சிரிப்பு உடலுக்கு மட்டுமல்ல மனதுக்கும் இதம் தரக்கூடியது. எங்களோடு பழகுபவர்களுடனும், இணைந்து செயற்படுபவர்களுடனும் மகிழ்ச்சியான, சுமுகமான உறவு கலந்த சூழலையும் ஏற்படுத்த சிரிப்பு உதவுகின்றது. தொழில் நிறுவனங்களிலும் கூட்டு முயற்சிகளிலும் சாதகமான பல பக்கவிளைவுகளைச் சிரிப்பு தோற்றுவிக்கின்றது. மேலும் எல்லோரும் ஒன்று கூடிச் சிரித்து மகிழும் போது காரண காரியங்களையும் தர்க்கீகங்களையும் ஒருவரும் கருத்தில் கொள்வதில்லை. அவ்வாறான சமயங்களில் அனைத்துலகுக்கும் பொதுவான அன்பு மொழி வழியாகவே நாம் பேசுகின்றோம். மனங்களால் இணைந்து நெருங்கிக் கொள்கின்றோம். இதற்கெல்லாம் பிரதான ஊக்கியாக விளங்குவது சிரிப்பு. இங்கு செவிப்புலன் ஊடாக உச்ச மகிழ்ச்சியை எமக்குத் தரவல்ல சங்கீதமாகச் சிரிப்பு செயற்படுகின்றது. இத்தகைய பெறுமதி மிக்க சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் தான் சிரிப்பை ஓர் "ஆடம்பரப் பண்டம்" என்றும் சிலர் விதந்துரைப்பர். ஆயினும் எவ்வித செலவுமின்றிப் பெறக் கூடியதென்பதால் இதனை "ஒரு மலிவான ஆடம்பரப் பண்டம்" என்றே கூற வேண்டும். எனவே சிரிப்பு உடலியல், உளவியல், சமூகவியல் ரீதியாக மட்டுமல்லாமல் பொருளியல் ரீதியாகவும் எமக்கு நன்மைகளைத் தேடித் தரும் பெறுமதி மிக்க சொத்தாகும்.

கிருபானந்தவாரியார் ஒரு முறை கதாப்பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். சபையில் சிலர் எழுந்து வெளியே போவதும் வருவதுமாக இருந்தனர். உடனே வாரியார், "'சொல்லின் செல்வர்' என்பது அனுமனைக் குறிக்கும். நான் சொல்லும் அருமையான விஷயங்களைக் கேட்கப் பிடிக்காமல் எழுந்து செல்லும் 'சொல்லின் செல்வர்' இங்கும் இருக்கின்றார்கள்" என்று சொன்னார். ஒரு சிரிப்பலையுடன் சபை தானாக அடங்கியது!

சிரிப்புக்குப் பிறிதொரு பெயர் நகை. முகத்துக்கு அழகு தரும் ஆபரணமாக அணிந்து கொள்ளலாம் என்பதனால் அது நகை என்று பெயர் பெற்றிருக்கக் கூடும். நகை எனப்படும் இந்தச் சிரிப்பைத் தோற்றுவிப்பது நகைச்சுவையாகும். நகைச்சுவையானது வாழ்வின் வெற்றிக்கான அடிப்படைப் பண்புகளில் ஒன்று. வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதருள் பலர் நகைச்சுவையைப் பெரிதும் விரும்பிப் பயன்படுத்தி வந்துள்ளனர். "நகைச்சுவை உணர்வு என்னிடம் இல்லாதிருந்தால் நான் எப்போதோ தற்கொலை செய்திருப்பேன்" என்று மகாத்மா காந்தியே ஒரு முறை கூறியிருந்தமை நினைவு கூரத்தக்கது.

உலக மக்கள் யாவரும் காலகாலமாக நகைச்சுவையை விரும்பி அனுபவித்து வந்துள்ளனர். நகைச்சுவையை வழங்குவதற்கென்று அரச சபைகளில் விகட கவிகளுக்கும் நாடகங்களில் விதூஷகர்களுக்கும் விசேட இடம் அளிக்கப்பட்டு வந்துள்ளது. கிருஷ்ண தேவராயர் அவையில் தென்னாலி ராமனும், அக்பர் அவையில் பீர்பாலும் அங்கம் வகித்து வந்துள்ளனர் என்பது வரலாறு. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த முல்லாவின் கதைகள் இன்றும் உலகில் பிரபலமானவை. ஆங்கில நாடகத்தின் பிதாமகரான ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நகைச் சுவைக்குப் பஞ்சமே இல்லை. தமிழ் இலக்கியத்தில் ஔவையார், இரட்டைப் புலவர்கள், ஒட்டக கூத்தர், காளமேகப் புலவர், ஏனைய சித்தர்கள் பலர் முதற்கொண்டு கல்லடி வேலன் வரையிலான ஏராளமான கவிஞர்கள் நகைச்சுவைக்கும் சிலேடைக்கும் பெயர் பெற்றவர்கள் ஆவர். சமகாலக் கவிஞர்களுள் அப்துல் ரகுமான், மகாகவி, முருகையன் போன்றோரின் கவிதைகளில் ஆங்காங்கே நகைச்சுவை இழையோடி இருப்பதைக் காணலாம். நகைச்சுவைக்கென்று நமது நாட்டில் வெளிவந்த சிரித்திரனையும் அதன் நாயகர்களான சவாரித் தம்பரையும் சின்னக்குட்டி அண்ணரையும் யார் தான் மறக்க முடியும்?

ஆங்கிலச் சினிமாவை எடுத்துக் கொண்டால் சார்லி சப்லின், ஜெறி லூயிஸ் போன்றவர்களிலிருந்து ஆரம்பித்து வூடி அலன், ஜிம் கெறி ஈறாக ஏராளமானோர் நகைச்சுவைக்குப் பெயர் பெற்ற நட்சத்திரங்களாக மதிக்கப்படுகின்றனர். தமிழ்ச் சினிமாவில் என்.எஸ்.கிருஷ்ணனிலிருந்து ஆரம்பித்து தங்கவேலு, சந்திரபாபு, நாகேஷ் என்று வளர்ந்த பட்டியல் இன்று செந்தில், கவுண்டமணி, வடிவேல் என்ற வகையறாக்கள் வரை அனுமான் வால் போல நீண்டு செல்லக் காணலாம். வில்லுப் பாட்டு வல்லாளர்களும் கிருபானந்த வாரியார் போன்ற கதாப்பிரசங்க விற்பன்னர்களும் மக்களை வென்றெடுக்க நகைச்சுவையையே ஏற்ற கருவியாக பயன்படுத்தி வந்துள்ளனர். மேற்குலகில் ஏப்ரகாம் லிங்கன், வின்ஸ்டன் சேர்ச்சில் போன்ற அரசியல் தலைவர்கள் முதலாக பேர்னாட்ஷோ போன்ற நாடக விற்பன்னர்களும் வாழ்வியல் மேதைகளும்

(எதிர்ப்பக்கம் வருக)

நகைச்சுவை மீது மிகுந்த நாட்டம் உடையவர்களாய் அதனை நன்கு பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஆன்மீகத்துறையிலும் நகைச்சுவைக்கு முக்கிய இடம் இருந்து வந்துள்ளதற்கான ஆதாரங்கள் ஏராளம் உண்டு. ஆண்டவனின் பிரதிநிதிகளாகப் பூமியில் வந்து பிறந்த அவதார புருஷர்கள் சொல்லாமலும் செயலாலும் மக்களைச் சீண்டிச் சிரித்து விளையாடி வந்துள்ளனர். தெய்வீகத் திருவிளையாடல்கள் மூலம் தமது பக்தர்களையும் பக்தைகளையும் திணற வைத்து வேடிக்கை பார்த்து விளையாடிச் சிரித்த கண்ணனின் லீலைகள் எமக்கு மிகவும் பரிச்சயமானவை. St.Nicholas எனப்படும் புனிதர் ஒருவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட Santa Claus எனப்படும் கற்பனா பாத்திரம், நத்தார் காலங்களின் போது சிறுவர்களுக்கு நகைச்சுவையூட்டி, வேடிக்கை காட்டி, உற்சாகமூட்டும் ஒரு முயற்சியே. பரமார்த்த குருவும் சீடர்களும் பற்றிய நகைச்சுவைக் கதைகளை எழுதிய வீரமா முனிவர், பெஸ்கி என்ற பெயருடைய ஒரு இத்தாலி தேசத்து கத்தோலிக்க மதகுரு ஆவார். பெருமானார் முகமது நபி அவர்கள் நகைச்சுவை உணர்வு மிக்க காரியங்கள் பலவற்றை செய்துள்ளார் என்பதுடன் நகைச்சுவையுடன் கூடிய ஏராளம் கதைகளையும் கூறியுள்ளார்.
குழந்தைகளுக்கும் வளர்ந்தவர்களுக்கும் வேடிக்கை காட்டிச் சிரிக்க வைத்து இரசித்து மகிழ்பவர் சத்யசாயி பாபா. இவை யாவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல விளங்கும் மகிழ்ச்சியும்
நகைச்சுவையுணர்வும் மனிதனது உடல், உள, ஆன்மீக விருத்திக்கு அவசியமான இரு தெய்வீகக் குணங்கள் என்பதை இவை யாவும் எமக்கு உணர்த்துகின்றன.

ஆசிரியை:
அமெரிக்காவில் ஏன் இன்னமும் ஒரு பெண் ஜனாதிபதியாகவில்லை?
மாணவன்:
அமெரிக்காவில் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் ஜனாதிபதியாக முடியும்!

இவ்வாறான சிறப்புகள் மிக்க நகைச்சுவை உணர்வை எவ்வாறு தூண்டலாம்? ஒழுங்கும் செய்நேர்த்தியும் துல்லியமும் கூடிய வழிமுறைகள் மூலமாகவே நகைச்சுவை உணர்வை ஏற்படுத்த முடியும் என்பது பலருக்குத் தெரியாது. உலகப் பிரசித்தி பெற்ற ஓவியர் லியனாடோ டார்வின்ஸி ஒரு சிறிது காலம் நகைச்சுவைத் துணுக்குகளை எழுதி, மேடைகளில் தானே நடித்து வந்த ஒருவராவார். மின்குமிழைக் கண்டுபிடித்த விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசன் பல நூற்றுக் கணக்கான குறிப்புப் புத்தகங்களில் தமது விஞ்ஞானப் பரிசோதனை முடிவுகளை பதிவு செய்து வந்தார். அதேவேளை அவற்றுள் பல ஏராளமான நகைச்சுவைத் துணுக்குகளும் கதைகளும் நிரம்பி இருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மித மிஞ்சிய உடல் உழைப்பினால் ஏற்பட்ட களைப்பினைப் போக்குவதற்கென அவர் தமது நகைச்சுவை அட்ரீனலினை தூண்டும் ஒரு வழியாகவே அவற்றை இரசித்தும் எழுதியும் வந்துள்ளார். நகைச்சுவைகளைத் தாமே இரசித்தது மட்டுமல்லாமல், சக தொழிலாளர்களுடனும் அவற்றை எடிசன் பகிர்ந்து, கூடிச் சிரித்து மகிழ்ந்திருக்கின்றார். இதன் பயனாக அவராலும் அவரது சகாக்களாலும் நீண்ட நேரம் கடுமையாக உழைக்க முடிந்திருக்கின்றது.

இத் தகவல்கள் எமக்கு பல உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. ஒழுங்கும் செய்நேர்த்தியும் துல்லியமும் கூடிய வழிமுறைகள் மூலமாகவே நகைச்சுவை உணர்வை ஏற்படுத்த முடியும் என்பது அவற்றுள் முக்கியமானது. நகைச்சுவையாளர்கள் வெளிப்பார்வைக்கு கோமாளிகள் போலத் தோற்றமளித்தாலும், அவர்கள் மிகுந்த புத்திக் கூர்மையும், அதீத நகைச்சுவையுணர்வும் உடையவர்களாக இருக்க வேண்டும். பட்டறிவும், வாழ்க்கை பற்றிய பரந்த நோக்கும், சற்றே தத்துவார்த்த ரீதியான அணுகுமுறைகளும், சமூக சூழலை முழுமையாக உணர்ந்த நிலையும் ஒரு நகைச்சுவையாளனுக்கு இருக்க வேண்டும். அவர்களது நகைச்சுவை வெளிப்பாடுகள், சொல்லாலும் செயலாலும் மிகுந்த கட்டுப்பாடுகளுடன் கூடிய நெறிமுறைகள் சார்ந்தவையாகவும் நேர்த்தியான வடிவமைப்புகளைக் கொண்டவையாகவும் இருக்க வேண்டும். நல்லதொரு கவிதையில் காணப்படுவது போன்று, உயிர்ப்புடன் கூடிய படிமம் நகைச்சுவையிலும் இருக்க வேண்டும். பட்டறிவும், வாழ்க்கை பற்றிய பரந்த நோக்கும், சற்றே தத்துவார்த்த ரீதியான அணுகுமுறைகளும், சமூக சூழலை முழுமையாக உணர்ந்த நிலையும் ஒரு நகைச்சுவையாளனுக்கு இருக்க வேண்டும். மிகுந்த தேர்ச்சியும் பயிற்சியும் கொண்டு, கயிற்றில் நடப்பது போன்ற அவதானம் இருக்க வேண்டும். இவை இல்லாதவிடத்து நகைச்சுவை முயற்சிகள் தோல்வியில் முடிந்து விடுகின்றன. சில சமயங்களில் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன.

ஒரு விடயம் தொடர்பாக மிகைப்படுத்தி, குறைவுபடுத்தி, வார்த்தை ஜாலங்களைப் பயன்படுத்தி, சிந்தனை ஓட்டத்தை திடீரென இடைவெட்டித் துண்டாடி, வேடிக்கையான ஓசையை எழுப்பி, கோணல் மாணலாக அங்க அசைவுகளை நிகழ்த்தி, சிலேடையான சொல்லாடல்களைப் பயன்படுத்தி, பிறரின் வெகுளித் தனங்களை வெளிப்படுத்தி நகைச்சுவைக் கதைகளையும் துணுக்குகளையும் நடிப்புகளையும் அத்துறை சார் நிபுணர்கள் தயாரித்து வெளிப்படுத்துகின்றனர். பேச்சு மொழியாலும் பேசா மொழியாலும் நகைச்சுவை ஊட்டி வருகின்றனர். இதே போன்று குழந்தைகளின் கள்ளங் கபடமற்ற பேச்சுகளிலும் செயல்களிலும் கூட ஒப்பற்ற நகைச்சுவை சில சமயங்களில் பொதிந்து கிடக்கக் காணலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கு மனிதனிடம் இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று எதிர்த்துப் போராடுவது, மற்றையது தப்பி ஓடுவது. நவீன யுகமான இந் நாட்களில் இதற்கு மூன்று வழிகள் உள. எதிர்த்துப் போராடுவது அல்லது தப்பி ஓடுவது அல்லது வெறுமனே சிரிப்பது!

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி பாஷ்யம் அய்யங்கார் ஒய்வு நேரத்தில் அவரது நண்பராய் இருந்த ஆங்கிலேய கனவான் ஒருவரின் வீடு சென்று அவருக்கு சமஸ்கிருதம் போதித்து வந்தார். ஒரு நாள் அந்த பங்களாவில் அவர் நுழைந்ததும் நாய் துரத்தி ஓடிவந்து பாய்ந்து பாய்ந்து குரைக்கத் தொடங்கியது. பீதி அடைந்த அய்யங்கார் ஓட ஆரம்பித்தார். அதைக் கண்ட கனவான், "என்ன அய்யங்கார், குரைக்கிற நாய் கடிக்காது என்ற பழமொழியை மறந்து விட்டீர்களா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். "அந்தப் பழமொழி உங்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியும். ஆனால் அந்த நாய்க்குத் தெரியாதே!" என்று பதில் சொன்னர் அய்யங்கார்.

நகைச்சுவை உணர்வைத் தூண்டும் போது சில சந்தர்ப்பங்களில் பாதகமான விளைவுகளும் ஏற்படுவதுண்டு. அவற்றைத் தவிர்க்கும் பொருட்டு சில விதிமுறைகளை கவனத்தில் கொள்ளல் அவசியம். மனிதரது அங்கவீனங்கள், உளவியல் குறைபாடுகள் போன்றன நகைச்சுவைக்கான கருப்பொருட்களாக ஒரு போதும் கைக்கொள்ளப்படல் ஆகாது. இவை மனிதாபிமானமற்ற துன்புறுத்தல்களாகவே கருதப்படும். வாழைப்பழத் தோலில் ஒருவன் வழுக்கி விழுதல் நகைப்புக்குரிய விடயம் அல்ல. அதன்போது வாய் பிளந்து அட்டகாசமாகச் சிரிப்பது அநாகரிகமான ஒரு செயலாகும். இவை போன்று இனம், மதம், நிறம், சாதி, மொழி, பிரதேசம், நாடு, நம்பிக்கை போன்ற காரணிகளின் அடிப்படையில் நகைச்சுவை முயற்சிகளை மேற்கொள்ள முற்படுவதும் பண்பற்ற செயலாகவே கருதப்படும்.
நகைச்சுவையை ஆனந்தித்து அனுபவிக்க வேண்டுமேயன்றி, ஆயுதமாக அதனை ஒரு போதும் உபயோகித்தலாகாது. மேலும் இடம், நேரம், காலம், சூழல் என்பவற்றை உணராமல் நகைச்சுவையை ஏற்படுத்த முயற்சிப்பதும் சிலவேளைகளில் கெடுதியான விளைவுகளுக்கு வழிவகுத்து விடும். மரண வீட்டில் சிரிப்பூட்டுவதும் மண வீட்டில் அழுகையூட்டுவதும் பொருத்தமற்ற செயல்களாகுமல்லவா? "சின்னச் சின்ன விடயங்களுக்காக மனம் வருந்தக் கூடாது என்று கூறுபவர்கள் (மறுபக்கம் வருக)

நுளம்புகளுடன் ஒரே அறையில் ஒரு நாளும் படுத்தெழும்பாதவர்கள்" என்று கூறுவதில் நியாயம் உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

சிரிப்பு சிந்தனையைத் தூண்டும் ஆற்றல் கொண்ட சித்த வைத்திய லேகியம்! அரசியல், சமூக அழுக்குகளை கழுவியெடுக்க வாய்ப்பான சுத்திகரிப்புக் கருவி! நோகாமல் நோயகற்ற உதவும் அனெஸ்தீஸியா! சமூக விரோதிகளைக் கண்டறிந்து களையெடுக்க உகந்த காத்திரமான களை கொல்லி! தனி நபரிடமும் சமூகத்திடமும் புரையோடிக் கிடக்கும் கழிவுகளை வெளியேற்ற உதவும் இனிப்புப் பூசிய பேதி மருந்து! சிறந்த ஒரு சமூக விமர்சன சாதனம்! இவை காரணமாகவே தற்காலத் தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இணையத் தளங்களிலும் நகைச்சுவை தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக இடம்பெற்று வருகின்றது.

இன்றைய நவீன உலகின் அவசர வாழ்க்கைச் சகடத்தில் சிக்கித் தவிக்கும் நாம் மன நிம்மதியுடன் கூடிய மகிழ்ச்சியை அனுபவிக்கத் தவறியவர்களாக அலைந்து திரிகின்றோம். அளவு கடந்த துன்பச் சகதியில் வீழ்ந்து வருந்தி வாழ்கின்றோம். பெரும்பான்மையானோரது வாழ்வில் வரட்சி நிலவி வருகின்றது. இவ்வாறான மனநிலையிலிருந்து எங்களை மீட்டெடுக்க வல்ல ஆற்றல் மிக்க காரணிகளுள் நகைச்சுவை முக்கியமானது. நோய் வாய்ப்பட்டிருப்பவர்களுக்கு ஒரு நல்ல சிகிச்சை தேவைப்படுமாயின் "Humour Therapy" எனப்படும் நகைச்சுவைச் சிகிச்சையைத் துணிந்து சிபார்சு செய்யலாம். இது மலிவானது. ஆயினும் வலிமையானது, திறமையானது. உடல் நோயினதும் மனவருத்தங்களினதும் ஆணிவேரைக் கண்டறிந்து அகற்ற உதவும் ஒரு இதமான சிகிச்சை முறையே இந்த நகைச்சுவை.

ஆசிரியை: கடவுள் எங்கே இருக்கிறார் என்று யாராவது சொல்லுவீர்களா?
*மாணவி: எங்க வீட்டு Wash room*ல்
ஆசிரியை: ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?
மாணவி: Wash room இற்குள் யாராவது இருக்கும் போதெல்லாம் அப்பா அவசரமாக வந்து கதவில் குத்திச் சத்தம் போடுவார், "My god, are you still in the wash-room?"

பேச்சுக்கலை - மேடைப் பேச்சு



சித்திரா பீலிக்ஸ்

உலகச் சுழற்சிக்கு ஆதார அச்சாக விளங்குவதே பேச்சுத்தான். இன்றைய உலகில் பேச்சே வாழ்வின் மூச்சாக விளங்குகிறது. சுவாசிக்காமல் வாழ முடியாதது போலவே, பேச்சுள்ளவன் பேசமால் வாழ முடியாது. பேச்சு என்பது அரிய பெரிய கலையெனலாம். கற்றாரையும் கல்லாதோரையும் கவரவல்ல கலை அது. ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கும், அரசியல் மாற்றத்துக்கும், சமய விளக்கங்களுக்கும், சமுதாயச் சீர்திருத்தங்களுக்கும், பேச்சுக்கலை அவசியமாகின்றது.

பேச்சுக்கலை பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாவை போன்ற இலக்கியங்களில் காண முடிகிறது. நாநலமே சிறந்த நலம் என்பதனை வள்ளுவனாரும் திருக்குறளில்;
நூலறிவின்றி அவையில் ஒருவர் பேசுதல்
அரங்கின்றி வட்டாடுதல் போன்றது என்றும்,
கல்லாதவன் பேச விழைதல் பெண்தன்மை
இல்லாதான் இன்பம்பெற விழைவதை ஒக்குமென்றும்;
முறைப்படுத்திச் சொல்ல வேண்டுவதைச் சொன்னால்
உலக மக்கள் விரைத்து கேட்பர்
என்றும் பேச்சுத்திறன் பற்றி விளக்கியுள்ளார். பேச்சுக்கலைக்கு முத்தாய்ப்பான இடம் மேடைப் பேச்சாகும்.

மேடைப்பேச்சு வளர்ந்த வரலாற்றைச் சிறிது நோக்கின்; மொழி அறிவாளர் கலைகளை ஆராய்வதற்கும் வாது புரிவதற்கும் உரியதாக பட்டி மண்டபங்கள் அக்காலத்திருந்தன. சிலப்பதிகாரத்தில் இவை பற்றிய குறிப்புகள் உள்ளன. தண்ணிழற் பந்தரிலும், ஊர் அம்பலத்திலும் அறிஞர் பெருமக்கள் உரை நடத்தியுள்ளனர். சமயவாதிகள் பட்டி மண்டபம் ஏறிப் பகைமை இன்றி வாது செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. முற்றக் கற்றறிந்த முதறிஞர்கள் சொற்போர் புரிந்துள்ளதை பட்டினப்பாவை குறிப்பிடுகின்றது. அக்காலப் பேச்சுக்கலையில் சொற்பொழிவு முறையை விட, பாட்டுரை விளக்கமும், சமய வாதப் பேச்சுக்களும், உபதேசம் வழங்கலுமே இருந்துள்ளன. ஐம்பெருங்குழு என்ற அவையிலும், எண்பேராயம் என்ற அவையிலும் வாதிடும் வகையில் பேச்சுக்கலை சிறந்துள்ளது.

கிரேக்க நாட்டில் கி.மு. நான்காம் நூற்றாண்டில் குடியாட்சி இருந்த வேளை, 'டெமாஸ்தனிஸ்' என்ற நாவலாசிரியர் தமது நாவன்மையால் பல வெற்றிகளைக் கண்டாரென்கிறது கிரேக்க வரலாறு. கி.மு. இரண்டாம் ஆண்டில் குடியாட்சி நிலவிய ரோம் நாட்டில் தமது பேச்சுத் திறனால் சிறந்த நாவன்மையாளரெனப்பட்டார் 'மார்க்ஸ் - டல்லியஸ் சிசிரோ.' தமது சொற்பொழிவை 'வீடு பேறிழப்பு' (Paradise Lost) என்ற காப்பியமாக வடித்திருந்தார் பெருங்கவிஞர் 'மில்ரன்'. இதேபோல் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் 'பார்க்' என்ற நாவலரெழுதிய சொற்பொழிவு இலக்கியங்கள் இன்றும் தத்துவக் களஞ்சியங்களாக மிளிர்கின்றன.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் கீர்த்தனைகள், கதாகாலட்சேபங்கள் மக்களைக் கவர்ந்ததனால், சமயவாதப் பேச்சு இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அருகத் தொடங்கியது. இசை இணைவதையே மக்கள் பெரிதும் விரும்பினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியினால் ஆங்கிலப் பேச்சுக்கலை தோன்றியது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் காங்கிரஸ் விடுதலைக் கிளர்ச்சிக்காக மேடையில் தமிழ்மொழி பயன்படுத்தப்பட்டது. அதனால் மேடைப் பேச்சு வளர்ந்தோங்கியது.

(எதிர்ப்பக்கம் வருக)

இத்தகைய சிறப்புக்குரிய மேடைப் பேச்சில் உள்ள பேச்சுத் திறனுக்கு இயற்கையாய் அமைந்த திறமை, விடாமுயற்சியினால் பெறும்பலன் என இருவகையாய் நோக்கலாம். புலவரெல்லாம் பேச்சாளராகார்; பேச்சாளரெல்லாம் புலவராகார்.

"ஆர்த்த சபை நூற்றொருவர்
ஆயிரத்து ஒன்றாம் புலவர்..."

என்று தொடங்கும் வெண்பா மூலம் ஔவையார் உயர்ந்த பேச்சாளராய் அமைதல் கருவிலே அமைந்த திரு என்கிறார். ஆனால்,

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

என பட்டினத்தடிகள் குறிப்பிடும் பொழுது முயற்சி செய்தால் மதிக்கத்தக்க பேச்சாளராய் யாரும் மிளிரலாம் என்கிறார்.

மேடைப் பேச்சின் சிறந்த இலக்கணம் எனப்படுவது மறக்க முடியாத பேச்சு. மழை நன்றாக இருக்கிறது என்பதற்காக, ஓயாமல் பொழிந்து கொண்டிருப்பது நல்லதல்ல. பேச்சும் அது போல் தான். அறிவாளி என்பதற்காக அறுக்கிறார் என்று சொல்ல வைக்கக் கூடாது. சிலரது பேச்சு மீண்டும் மீண்டும் கேட்க விருப்பமாயிருக்கும். தலைசிறந்த பேச்சாளரது பேச்சைக் கேட்க பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வருவர்.

மேடைப் பேச்சுக்கலைக்கு தமிழில் அத்திவாரமிட்டவர் நாவலர் திரு.வி.கல்யாணசுந்தரனார். இவரே மேடைப் பேச்சின் தந்தை எனப்படுகிறார். திரு.வி.க., திரு.க.வே.ரா. பெரியார், பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், ம.பொ. சிவஞானம் ஆகியோரது பேச்சுகளிலே அமைந்துள்ள பண்பு, அவர்களது பேச்சுக்களைக் கேட்க ஆவல் ஏற்படக் காரணமாகியது. வீசும் வாசனையைக் கொண்டு பூக்கள் உணரப்படுவது போலவே, பேசுகின்ற வார்த்தைகளைப் பொறுத்தே மனிதர்கள் மதிக்கப்படுவார்கள்.

அழகிய சொற்களை அடுக்கிப் பேசுவதோ, கடல்மடை திறந்தாற் போல சொல் மாரி பொழிவதோ, இடையிடையே இசைபாடி இனிக்கப் பேசுவதோ சிறந்த பேச்சாகாது. சிறந்த பேச்சை யார் பேசுகிறார், என்ன பேசுகிறார், எப்படிப் பேசுகிறார் என்பது கவனிக்கற்பாலது. பேச்சாளர்கள் தாம் யாருக்குப் பேசுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டு, தமது சொந்தச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் பொழுது தான் அந்தப் பேச்சு தனித்தன்மை பெற்றுத் திகழும். இதை விடுத்து மேடையில் திரைக்குப் பின்னால் நின்றபடி நிற்பாட்டச் சொல்லியும், நேரக்குறிப்பெழுதி அனுப்பியும் ஒலிவாங்கியைப் பலவந்தமாக மீளப்பெற படுகின்ற அவதியை ஏற்படுத்துவோர் உண்மையான பேச்சாளராக முடியாது.

சொல்லும் கருத்துகள் தெளிவாக அழகான சொற்களில் கொடுக்கப்பட்ட கருவிற்கோ, தர்க்க முறைக்கோ மாறுபடாது; நேரக் கணிப்பிலிருந்து வழுவாது, அனுபவத்துடன் எடுத்துக் காட்டுகளோடு கேட்பவர் உள்ளத்தில் ஊடுருவுமாறு கேட்போர் உணரும்படி பேச்சு அமைந்திருப்பது பேச்சின் இன்னுமொரு சிறந்த இலக்கணமாகும். பேச்சாளர்க்கு தமது பேச்சுக் கருத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையும், மாற்ற முடியாத உறுதியுமிருந்தால் உணர்ச்சி தானாக வரும். உணர்ந்து பேசும் பேச்சைப் போலவே சிறந்த பேச்சுக்கு இன்றியமையாத ஒரு பண்பு கருத்துத் தெளிவாகும். கருத்துத் தெளிவோடு பேசுவதற்கு ஆழ்ந்த நூலறிவும் அனுபவ அறிவும் இன்றியமையாதன. தமது பேச்சு மூலம் எதையாவது சாதிக்க வேண்டும் என்பது போய், யாரையாவது பாதிக்க வேண்டுமென்ற உணர்வோடே பலர் பேசுகின்றார்கள்.

பேச்சுக்கலை என்பது மேடையில் பேசுவது மட்டுமல்ல. வீடுகளில் பேசுவதும், வீதிகளில் பேசுவதும், பயணங்களில் பேசுவதும், பணி புரியும் இடங்களில் பேசுவதும் கூட ஒரு கலை தான். சமாதானத்தைக் கொண்டு வருவதும், யுத்தங்களைத் தோற்றுவிப்பதும் இப் பேச்சுத்தான். தேவைக்கேற்ற விதத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே நாக்கு என்ற கருவி, வாய் என்ற உறைக்குள் வைக்கப்பட்டுள்ளது.

சிறந்த கருத்துகள், நேர மதிப்பீடு, அளவான உணர்ச்சி, கவனத்தை ஈர்த்தல், மொழியழகு, சொற் பிறழாமை, இனிமை, அளவான எடுகோள் போன்ற பண்புகள் மேடைப் பேச்சிற்கு அவசியமானவை மேடைப் பேச்சுப் பயிற்சி பெறுவோர் சிறந்த பேச்சுக்குரிய இலக்கணங்களை உள்ளத்தில் உள்வாங்கி பேசத் தொடங்கினால் சிறந்த பேச்சாளராகி விடலாம்.

The National Ethnic - Conflict


After a century of colonial rule and colonial plantation economy the British withdrew from Ceylon at independence in 1948. leaving the two nations yoked together under a Westminster-model constitution in a unitary state structure. After independence, the Sinhalese bourgeois political leader-ship, through the arithmetic of the ballot-box and gerrymandering, denied citizenship and franchise rights to one million Tamil plantation workers (one half of the Tamil people). The successive Sinhalese governments, by a policy of state-financed Sinhalese colonisation of the traditional Tamil areas, sought to end the Tamils' exclusive occupation of their homelands in the north and east. Then in violation of the policy of governments from as early as 1930 to make Sinhala and Tamil the official languages of the country, Sinhala was made the only official language by the government. The Tamils were administered in another's language and given the oppressive stamp of a subject people.

The doors of government employment were closed to the Tamils. This discrimination was extended to the security services, public corporations and other services, and to the private sector, where proficiency in the official language was an obvious premium.

Educational Imbalance

Tamil parents and educationists resisted the imposition of Sinhala on their children, fearing that they would lose their separate national-ethnic identity as Tamils and would face assimilation and extinction For the benefit of the Sinhalese students, the Sinhala government introduced a partial system whereby the Tamil students were required to obtain higher grade marks to enter the university compared to their Sinhala counter parts. This eliminated the competition and so flagrantly and unjustly excluded the Tamil students from entering universities and prevented them from achieving their aspirations. Religious Intolerance Of the four prevailing religions, Buddhism at first became the de facto state religion of Sri Lanka. The successive governments made further amendments to their constitutions in 1972 and 1978 directing the state " to protect and foster the Buddha Sasana". i.e.. to include not only the religious doctrine but also the Buddhist sects, monasteries and monks.

பண்பாடும் பத்திரிகைகளின் நிலைப்பாடும்



தங்கராசா சிவபாலு

பண்பாடு என்பது ஒரு இன அல்லது குழு மக்கள் சார்ந்த காலாகாலமாக பின்பற்றப்பட்டு வந்த அந்தந்தச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நற்பழக்க வழக்கங்கள். கலை, கலாசார, மத நடவடிக்கைகள், உடை, மொழி சமூக பெறுமானங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு ஒட்டுமொத்தமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

ஒவ்வொரு இனக் குழுமங்களுக்கிடையே பின்பற்றப்பட்டு வருகின்ற பண்பாட்டு அம்சங்களில் காலத்திற்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளமையும் மறுப்பதற்கில்லை.

திராவிடப் பண்பாடு நிலைக்களன் எனக்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் ஆரியர்களின் வருகையினால் ஆரிய மையப்படுத்தப்பட்ட நிலை அல்லது ஊடுருவல் திராவிட பண்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளமையை இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை நோக்கும் போது புலனாகின்றது. எடுத்துக் காட்டாக கேரளம், கன்னடம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருந்த மொழி மாற்றங்கள் பண்பாட்டு மாற்றங்களைத் தழுவிக் கொள்ள ஆரிய ஆதிக்கம் காலாகியது என்பது வரலாறு. இவ்விதமே கைபர் கணவாய் ஊடாக இந்திய உபகண்டத்தினுள் புகுந்து கொண்ட அராபியர்களின் ஆக்கிரமிப்பும் இந்தியப் பண்பாட்டு அம்சங்களில் மாற்றங்களை விழுங்கிக் கொள்ளக் காரணமாக அமைந்துவிட்டது. இந்தியாவில் தோற்றம் பெற்ற புத்த மதப் பண்பாட்டு உருவாக்கம் இடம்பெறவும் காலாக அமைந்தது.

மேலைநாடுகளில் இருந்து வந்து தமது ஆதிக்கத்தினை மேற்கொண்ட ஐரோப்பியர்களின் தாக்கம் எமது நாடுகளில் பல்வேறு மட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தின என்பது வெள்ளிடை மலை. ஆங்கிலேயரின் வருகையின் பின்னர் பத்திரிகைத் துறை வளர்ச்சி பெறுவதற்கு அச்சியந்திரம், அச்சுத்தாள் என்பன அறிமுகம் செய்யப்பட்டமையும் கீழைத்தேய நாடுகளில் பல மாற்றங்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்தியது.

விடுதலை வேட்கையின் பயனாக அதிகமான பத்திரிகைகள் ஆங்கிலத்திலும் சுதேச மொழிகளிலும் வெளிவரலாயின. இவ்விதம் பத்திரிகைகள் வெளிவருவதற்கு அதன் வாசகர்கள் தொகை அதிகரித்தமைக்கு இந்தியாவில் காமராசர் அவர்கள் அறிமுகப்படுத்திய இலவச கல்வித்திட்டம், மதிய உணவுத் திட்டம் என்பனவும் இலங்கையில் கன்னங்கராவின் இலவச கல்விக் கொள்கையும் காலாக அமைந்தன எனலாம். சாதாரண ஏழை மக்களின் பிள்ளைகளைப் பள்ளிக்குச் செல்ல வைத்ததோடு பாடசாலைகள் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தப்பட்டமையும் எழுத வாசிக்கத் தெரிந்தோரின் தொகையை அதிகரித்தது. இவை இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி வாசகர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவு அதிகரித்தது. இதனால் நாளிதழ்கள், வார இதழ்கள், மாதாந்த இதழ்கள் என பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

இதன் காரணமாக பத்திரிகைகளின் பயன்பாடு காலத்திற்குக் காலம் பெருகி வந்துள்ளமை நாம் அறிந்ததே. ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராக விடுதலை வேட்கை கொண்ட கற்றறிந்தவர்கள் பத்திரிகைகள் மூலம் தமது கருத்துகளையும், கொள்கைகளையும் பரப்பும் முயற்சி இடம்பெற்றது. தமிழகத்தில் 50களில் ஆனந்தவிகடன், குமுதம், கல்கி ஆகியனவாக இருந்த சஞ்சிகைகள் 80களில் இதயம் பேசுகிறது, தினமணிக் கதிர், குங்குமம், ஜூனியர் விகடன், தராசு, கமலம், தாய், வசந்தம் வருகிறது, நக்கீரன், நமது நிருபர், விசிட்டர் லென்ஸ், தீம்திரிகிட, துக்ளக், மக்கள் பிரச்சனை, உதயம், சுஜாதா, சாவி, பொம்மை, மங்கை, அம்புலிமாமா, ராணி, ராணி காமிக்ஸ், ராணிமுத்து, தேவி, வண்ணத்திரை, முத்தாரம், குங்குமச் சிமிழ், சினிமா எக்ஸ்பிரஸ், பேசும்படம் போன்ற பல நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் வெளிவந்தன.

இக்கட்டுரை இன்றைய பண்பாட்டு நிலைப்பாட்டில் பத்திரிகைகள் கொண்டுள்ள தாக்கம் அல்லது அழுத்தம் எத்தன்மையானது என்பது பற்றிய சில கருத்துகளை மேலெழுந்தவாரியாக நோக்குவதாக அமைகின்றது.

பண்பாட்டுத் தாக்கத்தில் பத்திரிகைகள் மட்டும் தான் பங்கு கொள்கின்றனவா? என்னும் கேள்வியும் எம்முன் எழத்தான் செய்கின்றது. தொலைத் தொடர்புச் சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, கணினி வலையமைப்பு தொடர்புகள், திரைப்படம், நாடக அரங்குகள் என்னும் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் பண்பாட்டு அம்சங்களில் பாரிய தாக்கத்தினைக் கொண்டுள்ளமையை நாம் தட்டிக் கழிக்க முடியாது. இவை அனைத்துமே மக்கள் மத்தியில் கருத்துகளை உருவாக்குகின்ற சக்தி படைத்தனவாக உள்ளன. எனினும் பண்பாட்டு நிலைப்பாட்டில் பத்திரிகைகள் ஆற்றும் பங்களிப்பு எத்தகைய தாக்கத்தினை அல்லது அழுத்தத்தினை அல்லது கருத்து ஆக்கத்தினைக் கொண்டுள்ளன என்பதனை மட்டுமே நாம் இக்கட்டுரையின் கருப்பொருளாகக் கொள்கின்றோம் என்பதனை வாசகர்கள் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

நாளிதழ்கள், வார ஏடுகள், மாதாந்த ஏடுகள், காலாண்டுச் சஞ்சிகைகள், ஆண்டுச் சஞ்சிகைகள் போன்றன அனைத்தையும் பத்திரிகைகள் என்ற பதத்தினால் உள்ளடக்கியுள்ளோம். இன்று தமிழன் உலகெங்கும் பரந்து வாழ்கின்றான். அவன் வாழும் இடங்களில் இருந்து பலவாறான செய்தி ஊடகங்கள் கருத்துகளை மக்களுக்கு அள்ளி வழங்கிக் கொண்டே இருக்கின்றன. கனடா, ஜேர்மனி, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சுவிஸ் போன்ற தமிழர்கள் குடியேறி வாழுகின்ற மேற்குலக நாடுகளிலிருந்து அண்மைக் காலங்களில் பெருந்தொகையான பத்திரிகைகள் வெளிவருவதனை நாம் காண்கின்றோம். இவை தவிர கணினி மூலமாக மின் அஞ்சல், வலையமைப்புப் போன்றன பெருமளவில் தொடர்புகளைக் கொண்டுள்ளமையும் பண்பாட்டுக் கருவூலங்களில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(எதிர்ப்பக்கம் வருக)

பத்திரிகைகள் பல்துறை சார்ந்தும் தமது கருத்துகளை, செய்திகளை, தகவல்களை மக்களுக்கு முன் தருகின்றன. சில பத்திரிகைகள் அரசியல் சார்ந்து தாம் கொண்ட அரசியற் கொள்கை அடிப்படையில் தமது கருத்துகளுக்கு முதன்மை கொடுப்பனவாகவும் அவை சார்ந்த பண்பாட்டு நிலையினை ஊக்குவித்து அதற்கான அபிப்பிராயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதையும், சில பத்திரிகைகள் சிறுவர் பத்திரிகைகளாக அவர்களுக்கான தேவைகள், கருத்துகள் என்பனவற்றைப் பிரதிபலிப்பனவாகவும், சில பத்திரிகைகள் நாவல் இலக்கியங்களை முன்னுரிமைப்படுத்தும் நாவல் இதழ்களாகவும், சிறு பத்திரிகைகள், பெண்கள் பத்திரிகைகள், விளம்பரப் பத்திரிகைகள், மதம் சார்ந்த மத நிறுவனங்களால் அல்லது அவற்றை ஒட்டிய நிறுவனங்களால் வெளியிடப்படும் பத்திரிகைகள் தமது கருத்துகளுக்குப் பிரச்சாரத்தனமாகப் பத்திரிகைகளைப் பாவிப்பதனையும் நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இந்தியாவிற்கு வெளியே இந்துக்கள் அதிகமாக வாழும் இடங்களான கனடாவில் அன்பு நெறி, சைவ நீதி போன்றனவும் பெரிய பிரித்தானியாவில் கலசம் போன்றனவும் மதம் சார்ந்த பத்திரிகைகளாக வெளிவருகின்றன.

இந்திய உபகண்டத்தில் வெளியாகும் தமிழ் பத்திரிகைகளை நோக்கும் போது ஆனந்த விகடன், குமுதம், துக்ளக், இன்றைய இந்தியா, குங்குமம், ராணி, ராஜம், ஜனரஞ்சனி, மங்கையர் மலர் போன்ற நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இவற்றில் சினிமா துறை சார்ந்து வரும் பத்திரிகைகளும், அவற்றுக்கு முக்கியத்துவம் தரும் பத்திரிகைகளும் அதிகம் என்றே சொல்ல வேண்டும். அண்மையில் எல்லாப் பத்திரிகைகளுமே நடிகை சிம்ரனின் திருமணத்திற்கு முக்கிய இடமளித்திருந்ததை அவதானிக்க முடியும். அது உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் பத்திரிகைகளிலும் காணப்பட்டதை அவதானிக்கலாம். இதிலிருந்து இந்திய தமிழ் சினிமாத்துறை எந்த அளவிற்கு பத்திரிகைகளில் முதன்மை பெறுகின்றது என்பதை உணர வைக்கின்றது. தனது திருமணத்தை பம்பாயில் உள்ள தனது பிறந்த மண்ணில் செய்யத் தீர்மானித்து அங்கு தனது குடும்ப உறவினர்களுடன் மட்டுப்படுத்திக் கொண்ட திருமண நிகழ்வைப் பெரிதுபடுத்திச் சில ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளமை கருத்திற் கொள்ளத் தக்கதே.

இவ்வித பத்திரிகைகள் எமது பண்பாட்டுக் கருவூலங்களைப் பாதுகாத்து எமது எதிர்காலச் சந்ததியினரை நல்ல குடிமக்களாக, எமது பண்பாட்டைப் பேணி நடப்பவர்களாக வளர்த்தெடுப்பதற்கு எத்துணை முக்கியத்துவம் அளிக்கின்றன என்பது தெளிவு.

இன்று பத்திரிகைகளில் வெளிவரும் கதைகளில் பெரும்பாலான அம்சங்களும் தனி மனிதனது தணியாத ஆசைகளுக்குத் தீனி போடும் வகையில் மறைந்து ஒடுங்கிக் கிடக்கும் கீழ்த்தரமான உணர்வுகளைத் தட்டி எழுப்பக் கூடியனவாக அமைந்தும் காணப்படுகின்றன. இவ்விதமான கதை அம்சங்கள் இலேசாக பாலியல் உணர்வுகளையும், குறுக்கு வழியில் பொருள் தேடும் தன்மையையும் இளைஞர்களிடையே மறைமுகமாக வளர்த்து வருகின்றன.

இன்று தமிழகத்திலும் சரி உலகின் பல பாகங்களிலும் குடியேறி வாழும் தமிழர்களின் மத்தியிலும் சரி பண்பாட்டு உருவாக்கம் என்பது மாறுபட்ட கருத்துகளைத் தொனிப்பனவாகவே காணப்படுகின்றன. முனைவர் கேசவன் அவர்கள் பண்பாடு என்பது ஒவ்வொரு மனிதனிடமும் இரண்டு வழிகளில் பதிந்துள்ளது எனக் குறிப்பிடுகின்றார்.

"ஒன்று பொருளியல் நடைமுறையின் மூலம் தனக்கென உருவான வாழ்நிலைக்கு ஏற்ப சுயமாகவே ஒவ்வொரு மனிதனிடத்திலும் படிந்துள்ள பண்பாடு. இது இயல்பாக உள்ளமைந்த பண்பாடு. இரண்டாவது சில பண்பாட்டு மதிப்புகளை வெளியிலிருந்து திணித்தல் மூலமாக உருவாக்கப்பட்ட பண்பாடு இது வெளியில் இருந்து புகுத்தப்பட்ட பண்பாடு."

முனைவர் கேசவன் அவர்களின் கருத்துப்படி இரண்டாவது வகையே பண்பாட்டு உருவாக்கத்திற்குத் துணை போகின்றது எனலாம். மனித சமூகத்தின் சில பிரிவினர் தத்தமக்கென உள்ள சுய பண்பாட்டை இழந்து சுய அடையாளம் இழந்தவர்களாக மாற்றுப் பண்பாடுகளை உட்கொள்வதனைக் காணலாம். இதனை உருவாக்குவதற்கு இன்று பல சமய நிறுவனங்கள் முனைப்புக் கொண்டு செயற்படுவதனை நாம் அவதானிக்கலாம். எமது பண்பாட்டு நிலைக்களன்களான உடைகளை, மாற்றுவதோடு, மங்கல விளக்குகளை வீட்டில் வைத்திருத்தலே பாவம் அது சாத்தானின் இருப்பிடம் எனப் போதித்து தமிழர்களின் வீடுகளில் இருந்து அவற்றை வெளியே எடுத்து வீசுகின்ற தன்மையும், பொட்டு வைத்தல், மலர் அணிதல் எல்லாம் சமயம் சார்ந்த அம்சங்களாகப் போதிக்கப்பட்டு மாற்றுப் பண்பாட்டை திணிக்கும் நிலைமையினை நாம் அவதானிக்கலாம்.

எனவே இதற்கு மாறாக எமது பண்பாட்டை மாற்றாத வகையில் பண்பாட்டு உருவாக்கத்தினை பத்திரிகைகள் செய்து வரவேண்டும். குறிப்பாக சுய பண்பாட்டை இழந்த சமூகத்தினருக்கு தம் சுய அடையாளத்தைப் பெறுவதற்கு ஏற்ற விதத்தில் பண்பாட்டு மதிப்புக்களை உருவாக்குவதில் இவை எந்தளவிற்குப் பங்கு கொள்கின்றன என்பது முக்கியமானதாகும்.

பண்பாட்டு உருவாக்கத்தில் பத்திரிகைகள் எல்லோரையும் சென்றடையக் கூடிய ஒரு ஊடகமாக இருந்தாலும் அதனை வாசித்து விளங்கக் கூடியவர்களுக்கே அவை தமது கருத்துகளை எடுத்துச் செல்கின்றன. இதனால் ஒப்பீட்டளவில் கல்லாதோரிடமும் தமது பண்பாட்டு ஆக்கத்தினை மேற்கொள்ளக்கூடிய பணியை ஆற்றக்கூடியன தொலைக்காட்சி, வானொலி, திரைப்படத் துறைகள் என்பனவே. இவற்றின் பணியை விட பண்பாட்டு ஆக்கச் செயற்பாட்டில் பத்திரிகைகள் குறைந்தளவே மேற்கொள்கின்றன என்பதில் தவறில்லை. எனினும் தமது பங்களிப்பில் பத்திரிகைகள் பண்பாட்டுச் சீரழிவிலிருந்து மக்களைத் தடுப்பதற்கு அல்லது பண்பாட்டை வளர்ப்பதற்கு எந்தளவு உதவி வருகின்றன என்பது தனித்துவமான செயற்பாடுகளாகவே காணப்படுகின்றன. பண்பாட்டு உருவாக்கத்தில் இன்று பெண்கள் பத்திரிகைகள், மாதர் பகுதி, மாதர் மஞ்சரி, மாதர் இதழ் போன்ற பகுதிகள் நாள் இதழ்களில் இடம்பிடித்துள்ளமை போன்று சமயம் சார்ந்த வரலாற்று அம்சங்களையும் எடுத்துத் தருவதற்கு முன்வருகின்றன. எனினும் இவை எத்தகைய வாசகர்களைச் சென்றடைகின்றன என்பது கேள்விக்குறியே. பொதுவாக வாசகர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமையை எல்லா ஊடகங்களும் எடுத்தியம்புவதோடு ஆங்கிலப் பத்திரிகைகள் கூட இதற்கான கணக்கெடுப்புகளை மேற்கொண்டு உண்மையை ஒத்துக் கொண்டுள்ளன. பத்திரிகைகள் வாசகர்களைப் பெருக்கும் நோக்குடன் பண்பாட்டு உருவாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் பார்க்க வாசகர்களின் இரசனைக்கே முக்கியத்துவம் கொடுக்க முனைவது கண்கூடு. இவற்றை கதை, சிறுகதை, கட்டுரைகள் என்பன உருவாக்குகின்றன.

(மறுபக்கம் வருக)

அரசியல் சார்ந்த பத்திரிகைகள் அல்லது அரசியல் விமர்சனங்களை, எதிர்ப்புகளைக் காட்டும் பத்திரிகைகளும், இனம், இனக்குழுமம் சார்ந்த பத்திரிகைகளும் பண்பாட்டு உருவாக்கத்தில் முக்கியம் வகிப்பதனைக் காணலாம். சிங்களப் பத்திரிகைகள் சிங்களவர், சிங்கள தேசம் என்னும் கருத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பதோடு பல உண்மைத் தகவல்களை மக்கள் மத்தியில் தரத் தவறியமையால் இனவிரோதச் செயல்களில் ஏதும் அறியாத அப்பாவி மக்கள் தூண்டப்பட்டார்கள். இதனால் அங்கு ஒரு பக்கச் சார்பான பண்பாட்டு உருவாக்கம் இடம்பெற்றது. இதன் கொடுமைகளால் அதனை எதிர்ப்பதற்கான கருத்துகளும் முன்வைக்கப்பட்டமையால் அதற்கான ஒரு பண்பாட்டு உருவாக்கத்தினையும் பத்திரிகைகள் செய்யத் தவறி விடவில்லை.இந்த நிலைமைகள் எல்லா நாடுகளிலுமே காணப்படுகின்றன. எந்த இனம் ஆட்சியில் இருக்கின்றதோ அந்த இனம் உயர்ந்தது என்னும் பண்பாட்டு நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் திணிப்பதற்கு அவை தவறுவதில்லை.

பண்பாட்டு உருவாக்கத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் பத்திரிகைகள் பல தடவைகள் பல எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டிருந்தன. இதனால் பல பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதோடு அவர்களின் பத்திரிகை நிலையங்களும் தாக்கப்பட்ட சம்பவங்கள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் கடந்த கால சம்பவங்கள் சான்று பகர்கின்றன.

உருவாக்கம் என்பது இனம், மொழி, மதம், அரசியல், வர்க்க நிலை சார்ந்த அம்சங்களை, கருத்துகளை, கொள்கைகளை உள்ளடக்கியனவாகக் காணப்படுகின்றன. இதனால் இவற்றில் தமது கருத்தாக்கங்களை ஊன்றி வளர்க்கும் பணியினைப் பத்திரிகைகள் செய்து வருகின்றன. இதற்கு மாறாகச் சில பத்திரிகைகள் பண்பாட்டுச் சீரழிவிற்கும் காரணிகள் ஆகின்றன. எது சமூகத்திற்கு ஏற்றது, எதனை மக்கள் பின்பற்ற வேண்டும் என்பதில் அவை கண்ணும் கருத்துமாகச் செயற்படத் தவறி வாசகர்களின் இரசனையை இலகுவான வழியிற் தூண்டும் தன்மையில் தமது கருத்துகளை உருவாக்கம் செய்து அபிப்பிராயங்களை வளர்க்க அல்லது தம் பக்கம் கவர முனைவதனால் பண்பாட்டின் எதிர்மாறான அம்சங்களை வளர்ப்பதாக அமையும் என்பதனை அவை புறம் தள்ளி, பத்திரிகையின் முதன்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பது கவனிக்கத் தக்கதே.

வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களுக்கும், சில நிகழ்வுகளின் படங்களுக்கும் பல பத்திரிகைகள் முன்னுரிமை கொடுத்து வருவது பண்பாட்டு ஆக்கத்தின் பாற்படுவதாக அமையாது விளம்பரங்கள் பத்திரிகைகளை வாழ வைக்கும் பொருளியற் சாதனமாகப் பயன்படுத்தப்படுவதனால் இலவச பத்திரிகைகள் அவற்றைத் தவிர்க்க முடியாதது உண்மை. ஆனால் அவை வாசகர்களுக்கு வேண்டியவற்றையும் தருதல் இன்றியமையாததாகும். என்னதான் ஒரு படம் ஆயிரம் கதை சொல்லும் என்ற கருத்தை முன்வைத்தாலும் அவை பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு மாறாக எதிர்மாறான கருத்துகளையே பெற்றுத் தருவதாக அமைந்தும் விடுகின்றன.

தமிழகத்தில் வெளியாகும் பத்திரிகைகள் பலவற்றுள்ளும் இன்று வேற்றுமொழித் தாக்கம் அளவுக்கு விஞ்சிய விதத்தில் அதிகரித்துள்ளமை கண்கூடு. இதனால் மக்கள் மத்தியில் பண்பாட்டு உருவாக்கம் வேற்றுத் திசையில் திருப்பப்பட பத்திரிகைகளும் காலாக அமைகின்றன. ஆங்கில மொழி உபயோகம், இந்தி மொழி உபயோகம் என்பன இந்திய திரைப்பட உலகைப் பீடித்துக் கொண்டமை போன்று தமிழ் பத்திரிகைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை பண்பாட்டுச் சீரழிவிற்கு இட்டுச் செல்வதாக அமைந்துள்ளது. நாளாந்தப் பத்திரிகைகளும் சரி, வாராந்த, மாதாந்தப் பத்திரிகைகளானாலும் சரி அவை ஆங்கில, இந்திச் சொற்களின் பிரயோகத்தை வேண்டும் என்றே வலிந்து உபயோகிப்பதை அவதானிக்கும் போது, மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்றுரைத்த பாரதியை எண்ணத் தோன்றுகின்றது. தமிழகத்தில் வெளியாகும் பத்திரிகைகளை விட ஈழத்திலும், மேற்குலக நாடுகளிலும் வெளிவரும் பத்திரிகைகளில் ஆங்கில மோகம் மிகக் குறைந்தளவே காணப்படுவது பாராட்டப்பட வேண்டியதே. இத்தகைய மேலை நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளையாவது தமிழகப் பத்திரிகையாளர்கள் முன்மாதிரியாகக் கொண்டு தமது பத்திரிகைகளில் இடம்பெறும் ஆங்கிலப் பதங்களுக்குத் தமிழ்ப் பதங்களை உபயோகிக்க முன்வரவேண்டும்.

பத்திரிகைகள் காத்திரமாக பண்பாட்டு உருவாக்கத்தில் செயற்படும் நாள் வருமா? அல்லது அத்தகைய ஏக்கம் தான் மிஞ்சுமா? என்னும் கேள்வி பலர் மனதிலும் எழுவது வியப்பல்ல இவற்றில் பத்திரிகைத் துறையில் ஈடுபாடுள்ள அனைவருமே சிந்தித்துச் செயற்படுவார்களா என்பதே எமது ஆதங்கமாகும்.

Tamil National Liberation Struggle

Currently there is a war of national liberation in Sri Lanka. Tamils of the North have been rendered homeless and hapless. The Sinhala government continues its economic blockade so as to starve the Tamils to death. The sick and maimed Tamils have no access to medical treatment because of restriction on medical supplies. Movement of international relief agencies and journalists are curtailed. There is complete censorship imposed on all military and police news and the outside world is kept in the dark.?The successive Sinhala governments not only failed to safeguard the Tamils interests, their language and culture, but actively discriminated against them because of their Tamil birth. To the Tamils, the unitary state became a monstrous irrelevance which served only to perpetuate their disadvantaged condition. The goal of the Sinhala governments was to achieve the conquest of the Tamil nation and its lands by the force of majority legislative power, executive edicts and military repression. In fact. the Tamils have no state now; hence the urge and the just need to create a state, called Tamil Eelam in their own homelands.

Tamil Refugees

The refugee crisis in Sri Lanka became acute after the major violence against the Tamil community in July 1983 when over 2,000 Tamils were killed and over 200,000 displaced. In the following years the Sri Lankan government began military operations in the Tamil areas and large number of Tamils were arrested under the Prevention of Terrorism Act (PTA) and the Emergency regulations. As torture and disappearances continued unchallenged many Tamils fled abroad. It is estimated that over 65,000 Tamils have been killed up to now in the ongoing violence against the Tamil people. The number of Tamil refugees in India is around 150,000. Over 600,000 tamils have also sought asylum in Canada, Australia, Austria, Belgium,Denmark, Finland, France, Germany, Italy, Netherlands, Norway, Russia, Sweden, Switzerland, United Kingdom and the USA.

நாம் யாராக இருந்தாலும் சரி, வாழும் சூழ்நிலை எதுவாக இருந்தாலும் சரி, நாம் எல்லோரும் இந்த வாழ்வை ஆனந்தமாக வாழ முடியும் என்று ஒருவர் கூறும் பொழுது அது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதுடன், உடனடியாக ஏற்றுக் கொள்வதும் சிறிது கடினமாகவே தோன்றுகின்றது. பல்வேறு காலங்களில், பல்வேறு நாடுகளில் வாழ்ந்த, பல்வேறு கலாசாரங்களைச் சார்ந்த மகான்கள் பல்வேறு மொழிகளில் ஒரு பொதுவான விடயத்தைக் கூறிச் சென்றிருக்கிறார்கள். "உன்னையே நீ அறிவாய்" என்று கிரேக்க நாட்டு சோக்கிரட்டீஸ் கூறினார். அதே பொருள்பட "உடம்பினுள்ளே உத்தமனைக் காண்" என்று திருமூலர் கூறினார். "அழிவற்ற பொருள் உங்கள் உடலினுள் குடிகொண்டிருக்கின்றது" எனக் கூறினார் வட இந்தியாவில் வாழ்ந்த கபீர்தாசர். இவைகள் எல்லாம் எதனை எடுத்துக் கூறுகின்றது?

"நீங்கள் எதனைத் தேடுகின்றீர்களோ, உங்கள் வாழ்வில் எதனைத் தேடினீர்களோ அது உங்கள் உள்ளேயே உள்ளது" என்ற மகராஜியின் கூற்று பல்வேறு நாட்டில் வாழும் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவர் பேச்சளவில் மட்டுமல்லாது தான் கூறும் அந்த அமைதியை, அன்பை, ஆனந்தத்தை ஒவ்வொருவரும் தமது வாழ்வில் செயன்முறை ரீதியாக அனுபவிப்பதற்கான வழிமுறையை கொடுக்கின்றார். அதனை அவர் "ஞான வழிமுறை" என அழைக்கின்றார். அண்மையில் அவர் US Business Review எனும் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் சில பகுதிகளை இங்கே காண்போம்.

U.S.B.R: 'அமைதியை' உண்மையில் எவ்வாறு விபரிப்பீர்கள்?
மகராஜி: 'அமைதி' என்ற சொல்லிற்கு எவ்வளவோ விளக்கங்கள் இருக்கலாம். ஆயினும் அமைதி என்பதை ஒரு உணர்வாகப் புரிந்து கொள்வதே மேலானதாகும். உள்ளார்ந்த திருப்தியான, எம் ஒவ்வொருவரினதும் உள்ளே உள்ள எளிமையைக் கண்டு கொள்ள விரும்பும் உணர்வாக புரிந்து கொள்வதே மேலானதாகும். ஒரு பொருளால் கொடுக்க முடியாத ஒன்றை, அதிலிருந்து பெறுவதற்கு முயற்சித்தால், அது ஏமாற்றத்திலேயே முடியும். இம்மாதிரி இவ்வுலகத்தில் அதிகம் நடைபெறுகிறது. அந்த ஆனந்தம், அந்த எளிமை, அந்த மகிழ்ச்சி, அந்த அமைதி இவையெல்லாம் நம்முள் இருக்கும் பொழுது மக்கள் இவைகளை வெளியே பல பொருட்களில் தேடுகிறார்கள்.

U.S.B.R: ஆனந்தம், எளிமை, அமைதி - இவை இன்றைய சுறுசுறுப்பான சமுதாயத்தில் விலை மதிக்க முடியாதவை. இவைகளை எவ்வாறு சமநிலைப்படுத்த முடியும்?
மகராஜி: அதைப் பற்றித்தான் மக்களிடம் நான் பேசுகிறேன். உங்கள் தொழிலில் அடையும் சாதனைகளால் நீங்கள் நிச்சயம் பெருமை அடைவீர்கள். அது உங்கள் தொழில் கொடுக்கக் கூடிய ஒன்று. ஆனால் நீங்கள் ஆனந்தம், அமைதி அல்லது எளிமையைத் தேடுகிறீர்கள் என்றால் அது உங்களுள் இருக்கிறது என்பது தான் என்னுடைய செய்தியின் கருப்பொருள்.

நமது தொழிலில் நாம் எதுவரை முன்னேறி இருக்கிறோம் என்று நாம் மீண்டும் மீண்டும் மதிப்பிடத் தயங்குவதில்லை. "எனது தொழிலில் இம் மாதிரி தவறுகள் உள்ளன. அதனாலேயே இலாபம் கிடைப்பதில்லை. நான் இந்த மாற்றங்கள் செய்ய வேண்டும்" என்று மறுபரிசீலனை செய்யத் தயங்குவதில்லை. ஆனால் நமது சொந்த வாழ்க்கையில் இம்மாதிரி செய்வது அபூர்வம். நமது சொந்த வாழ்க்கையை கவனித்து "கொஞ்சம் நில்! நான் உண்மையில் சாதிக்க விரும்புவதை சாதிக்காததன் காரணம், நான் எங்கு தேட வேண்டுமோ அங்கு தேடாதது தான்" என்று கூறுவதில்லை.

U.S.B.R: தமது தொழிலில் உள்ள கோளாறுகளை சரி செய்ய மக்கள் அறிந்துள்ளார்கள். ஆனால் தங்களைப் பற்றி அவ்வாறு செய்ய இயலாத மக்களுக்கு உங்கள் ஆலோசனை என்ன?
மகராஜி: நாம் எப்படி தொழிலுக்கு திட்டம் தீட்டுகிறோமோ, அவ்வாறே நமது வாழ்க்கைக்கும் திட்டம் போட முடியும். அப்பொழுது தான் ஒருவன் தன் வாழ்க்கையைப் பார்த்து, "நான் இதோ உயிருடன் இருக்கிறேன். அதற்கு தனி மதிப்பு உள்ளது. இந்த வாழ்க்கையில் எனக்காக உள்ள இந்த நேரத்தை எவ்வாறு எனக்கு சரியானதாக, ஆனந்தமாக, எளிமையானதாக்க முடியும், எவ்வாறு நான் உயிருடன் இருக்கும் ஒவ்வொரு நாளும் நன்றி, இந்த வாழ்க்கைக்கு நன்றி, என்னிடம்



நீங்கள் எதனைத் தேடுகிறீர்களோ அது உங்கள் உள்ளேயே உள்ளது

மகராஜி

உள்ளவைகளுக்காக நன்றி" என்று உண்மையில் கூற முடியும்.

அநேகருக்கு இது நடைமுறையில் சாதிக்க முடியாத குறிக்கோளாகத் தோன்றலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை இதில் தேர்ச்சி பெற முயல்வது மிகவும் உகந்த திட்டம் ஆகும். ஏனெனில் வாழ்க்கை விலை மதிக்க முடியாதது. வாழ்க்கை ஒரு வியாபாரச் சரக்கு இல்லை. 'வங்கிக்குச் சென்று மேலும் கொஞ்சம் வாழ்வு எடுத்துக் கொள்ளலாம்' என்பது முடியாது. உங்களிடம் இருப்பது தான் உங்களுடையது. அதை முழுப் பயனுள்ளதாகச் செய்து கொள்ள வேண்டும்.

நாம் தொழில் சம்பந்தமாகச் செய்யும் எவ்வளவோ விடயங்களில் சிலவற்றை நமக்காகவே உபயோகித்தால் அது அதிசயிக்கத்தக்கதாக இருக்கும் என்றுதான் கூறுகிறேன்.

U.S.B.R: பல வருடங்களுக்கு முன், இம்மாதிரி நிறைவைத் தேடுவதைப் பற்றி ஒருவர் கூறினால், அது அவர் சமூகத்திலிருந்து விலக முடிவெடுத்ததாகத் தோன்றும். ஆனால் மக்கள் தன் தொழில், வாழ்வில் இருந்து கொண்டே இந்தப் பாதையில் செல்ல முடியும் என்று கூறுகிறீர்களா?
மகராஜி: முற்றிலும் அப்படியே என் கருத்து. ஏதாவது தியாகம் செய்ய வேண்டும் என்றால் அது முழுமை ஆகாது. அமைதியைக் கண்டுபிடிக்க நாம் செய்யும் எல்லாவற்றையும் நிறுத்தி விட்டு இமயத்தின் சிகரத்தில் குடியிருக்க வேண்டும் என்றால், அது நடக்கவே நடக்காது. எது நடக்க வேண்டுமோ அது மனிதனுடைய சூழ்நிலையிலேயே நடக்க வேண்டும்.

(மறுபக்கம் வருக)

தொழில் செய்பவர்கள் முன்னேற ஆசையுடன் இருந்து, பெரிய தொழிலிலும் இருந்து கொண்டு மேலும் முன்னேற விரும்பினால், அப்படி செய்யத்தான் வேண்டும். ஆனால் தங்களையே கவனிக்காமல் 'சரி என்னுடைய தொழிலுக்காக, என்னையே தியாகம் செய்கிறேன்' என்று தங்களையே விட்டு விடக் கூடாது.

U.S.B.R: ஒரு பயனுள்ள வாழ்க்கைக்கு அடிப்படைத் தகுதிகள் எவை என்று விபரிப்பீர்களா?
மகராஜி: ஒவ்வொரு மனிதனும் தனது உணர்வின்படி "நான் ஆனந்தத்தை கண்டு கொண்டதாக உணருகிறேனா, திருப்தியை உணருகிறேனா, அமைதியை உணருகிறேனா" என்று தீர்மானிக்க வேண்டும் என நான் எண்ணுகிறேன். வேறொருவர் வந்து, "சரி நீங்கள் ஏ, பி, சி, டி படித்து விட்டீர்கள், அதனால் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள்" என்பது இல்லை. நீங்களே அளவுகோலை வைத்து, நீங்களே தீர்மானிக்க வேண்டும். உங்களுக்கு நீங்களே தான். "ஆம் அந்த உள்ளத்தின் அனுபவத்தை உணருகிறேன், நான் அமைதியுடன் இருக்கிறேன், இது எனக்குப் பிடித்திருக்கிறது" என்று சொல்லிக் கொள்ள வேண்டும். வேறொருவருக்கல்ல, உங்களுக்கே தான்.

U.S.B.R: உங்களை சாதாரணமாக யார் நாடுகிறார்கள்?
மகராஜி: அது ஒரு மிகவும் விரிவான சமூகம். சமூகத்தின் பெரும்பாலான பகுதிகளைக் கொண்டது. பல வளமுடைய வழக்கறிஞர்கள், அரசியல்வாதிகள் இம் மாதிரி வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த மக்கள் இதில் இருக்கிறார்கள்.

U.S.B.R: இந்த கொந்தளிப்பான காலத்தில் மக்களுக்கு உங்கள் புத்திமதி என்ன?
மகராஜி: கொந்தளிப்பான காலங்கள் வருகின்றன, கொந்தளிப்பான காலங்கள் செல்கின்றன. ஆனால் உள்ளத்தின் திருப்தியைப் பொறுத்தவரை அவ்வாறு இல்லை. மக்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் உங்கள் வாழ்க்கையில் அந்த திருப்தியை அடைய நீங்கள் ஏதாவது முயற்சி செய்ய வேண்டும். உங்களின் உள்ளே தேட ஆரம்பித்து, உள்ளே கவனம் செலுத்தத் தொடங்கி, அந்த தாகத்தை கண்டுபிடிக்க வேண்டும். அந்த உணர்வை அனுபவிக்க வேண்டும்.

நீங்கள் உண்மையில் அந்த தாகத்தை கண்டுபிடித்தால், அந்த அமைதி உங்கள் வாழ்வில் வேண்டும் என்று தீர்மானித்தால், உங்களை மேலும் நிறைவான, மேலும் முழுமையான ஒருவராகக் காண்பீர்கள் என எண்ணுகிறேன். ஏனெனில் உங்கள் வாழ்க்கையில் மேலான சமநிலையைக் காண்பீர்கள். மேலான திட்டங்கள் இருப்பதையும், தினந்தோறும் அதிசயிக்கத்தக்க ஒன்று இருப்பதையும் உணர்வீர்கள். உங்கள் தொழிலில் மோசமான நேரமாக இருந்தால் உங்கள் வாழ்க்கையிலும் எல்லாமே அந்த மோசமான நேரத்தால் பாதிக்கப்பட்டு, நாணயத்தின் ஒரே பக்கம் போன்று இருக்காது. அது அப்படியானதல்ல.

ஒரு காலகட்டத்தில் நாம் தொழில் செய்பவர்களாக இருந்ததில்லை. நாம் சிறு குழந்தைகளாக இருந்தோம். மூச்சு வந்து கொண்டிருந்தது. திருப்தியுடன் இருக்க ஒரு விருப்பம், ஒரு உணர்வு இருந்தது. நாம் திருப்தியாக இல்லாதபோது உரக்க அழுதோம். தாயோ, தந்தையோ வந்து நம்மைத் தூக்கிக் கொண்டார்கள். திருப்தியை மீண்டும் அடைந்ததும் அழுகையை நிறுத்தினோம். எல்லாமே எளிமையாக இருந்தன. ஏனெனில் நாம் வெளியே பார்த்து "எல்லாமே தவறாக இருக்கின்றன. வெளியே என்ன நடக்கிறது என்று கவனி" என்று கூறவில்லை. நம் உணர்வுகளுக்குத் தான் அதிக முக்கியத்துவம் இருந்தது. வெளியில் இருப்பது சரியோ, இல்லையோ என்பதை நாம் பொருட்படுத்தவில்லை. நாம் என்ன அனுபவித்தோமோ அது தான் பொருட்டாக இருந்தது.

இது அடிப்படை விடயங்களுக்கு திரும்புவது பற்றியது. உங்களுள் என்ன உணர்கிறீர்கள்? நீங்கள் எவ்வளவு முழுமையாக இருக்கிறீர்கள்? இந்த வாழ்வில் எம்மாதிரியான தளத்தில் நிற்கிறீர்கள்? அது உறுதியானதா? உங்கள் உள்ளிருந்து வருகிறீர்களா? ஏனெனில் வெளிப்புறம் மாறிக் கொண்டே தான் இருக்கும். மாறிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் அவ்வாறு மாறுவது நம் சிலருக்குப் பிடிப்பதில்லை. ஆனால் மாறுதலே இல்லாத, தடுமாற்றம் இல்லாத ஒன்று, நம் ஒவ்வொருவர் உள்ளும் இருக்கிறது - ஒரு நங்கூரம், புயல் அடித்தால் நமக்கு செல்ல ஒரு இடம், ஒரு பாதுகாப்பான துறைமுகம், ஒரு பத்திரமான இடம் உங்கள் உள்ளே உள்ளது. உங்களுக்கு வேண்டிய அமைதியை, உங்களுக்கு வேண்டிய ஆனந்தத்தை கண்டு கொள்ளலாம்.

மகராஜியையும் அவர் வழங்கும் ஞான வழிமுறையையும் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு 416-431-5000 எனும் தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலம் வீடியோக்களை இரவலாகப் பெற்றுக் கொள்ளலாம்.

Toronto Food Bank Facts

* 1,796 food bank recipients took part in the survey including 46.2% single individuals, 24.1% single parents, 20% two-parent families and 9.7% couples without children.

* Children were over-represented in food bank lines with 36.3% of all recipients under the age of 19. In comparison, 26% of the population is 19 years of age or younger.


* 39.3% of food bank recipients had not completed high school, 19.9% had graduated from high school, 20.3% had some post-secondary education or training and 21.5% had a college or university degree.

* More than 70% of all food bank recipients had household incomes that were less than half of Statistics Canada's Low Income Cutoff, a measure used to assess poverty.

* $593 - the median monthly income for individuals living alone $580 - $891 range of average rents for one-bedroom apartments in the study communities

* Almost 70% of food bank recipients were on provincial social assistance programs - 49.5% on Ontario Works and 20.2% on Ontario Disability Support Program.

Rebels Without a Cause!



Nimal Navarathinam First Year Student - York University

சமவயதிலுள்ள எங்கள் சமுதாயத்தினர், தங்கள் முதிய காலங்களைச் சீரமைப்பதற்கு ஆவன செய்வது எப்படி என்பதை மேற்கூறிய அனுபவங்களிலிருந்து வித்திடலாம். "Snow Birds" என்று ஆங்கிலத்தில் விவரிக்கப்படும் கனடிய முதியோர், உறைபனியைத் தவிர்க்க புளோரிடா போன்ற இடங்களுக்குச் செல்வார்கள். அதற்காகத் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிப்பார்கள். அதுமட்டுமல்ல, ஒரு வயதின் பின் பிள்ளைகளை விட்டு முதியோர் இல்லங்களிலும், வெளிநாட்டுப் பிரயாணங்களிலும் செலவழிப்பார்கள். "உரோமுக்குப் போனால் உரோமரைப் போல் வாழ்" என்பது ஒரு பழமொழி. அதுமட்டுமல்ல எங்கள் வாழ்க்கையை நாங்களே அமைக்க வேண்டும். உலகமே ஒரு நாடக மேடை. எங்கள் பங்கு என்ன? Extras அதாவது நடிப்பதற்கு இடம் கிடையாதவர்கள் காத்திருக்கத் தேவையில்லை.

சிந்திப்போமா?

IMMIGRATION LITIGATION



Jegan N. Mohan - Senior Barrister at Law

The "concept of litigation" has been introduced and incorporated into the immigration process in Canada. In recent days, the Canadian immigration process has become adversarial and litigious. The Adjudicators, the Immigration and Refugee Board, the Appeal Division and the Federal Court of Canada are increasingly looking for evidence to prove a fact in their respective forums. It is in this context the immigration process has become a litigation as understood in the spheres of civil and criminal law litigation. Often it was said in immigration law the rules of evidence did not apply, but lately the rules of evidence has been introduced in the immigration law process through back door. When you say litigation, upon making a claim at a court of law there is a contest and the person asserting or denying must establish his or her case on the admissible evidence presented at the court. Simply put, credible and trustworthy evidence must be adduced in a court of law by the litigants.

The burden of proof in the refugee protection claims is on the claimants. The claimants must provide evidence to prove his or her claim. The claimants are required to provide a written narrative of the incidents in chronological order in their Personal Information Form (PIF) to establish their "well founded fear of persecution" in their country of origin or nationality. The words, "well founded fear of persecution" imports the evidentiary foundation for the fear. Evidence has to be submitted to prove their well foundedness of the fear. In addition, to support their written narrative, the claimants are required to provide documentary evidence as to the country conditions under which they fled their country. The written narrative usually provided incidents of persecution, which the claimants have encountered, which led to their flight from their country of origin or residence. Lately, it has become a practice of the Immigration and Refugee Board (IRB) to look for corroborative evidence to support the written narrative. For example, if the claimants have gone to the police or being arrested and detained by the police, the IRB is demanding the production of police reports as to the complaints made or reports of the arrest and detention. These documents are impossible to obtain when the agent of persecution is the state authorities. However, the IRB as a specialized tribunal, has knowledge of the claimants from the source country providing documents as to the police arrest and detention. Using their specialized knowledge failure of a refugee claimant to provide police reports are held against him leading to a drawing a negative inference resulting in the claim being rejected as not credible or trustworthy because the claimant has failed to provide corroborative evidence. Similar findings of not credible and untrustworthy evidence are drawn when hospital records for medical treatment as corroborative evidence are not provided to the IRB. The claimants are required to provide details of all significant incidents in their written narrative of their PIF. When evidence as to any incidents, which have been omitted in the PIF when given in the oral testimony are held by the IRB as contradictions in evidence. This omission of evidence in the PIF leads to negative credibility finding results in the refugee claim being denied.

The refugee claimants are asked to provide identity documents to prove that they are the persons, whom they claim to be. In this instance, national identity cards from Sri Lanka, copies of passport, driver's license, postal identity cards, birth certificates and marriage certificates are considered to be identity documents acceptable to the tribunal. These documents when produced, are at times subject to verification for authenticity. These documents also may be forwarded to RCMP laboratories for forensic testing. When the identity documents cannot be produced, family members, friends and relatives are called as witnesses to testify at the hearings to determine the identity of the refugee claimants.

In all refugee claims there are two components, "subjective" and "objective". The subjective component involves evidence relating to the personal circumstances of the refugee claimant leading to the claim for convention refugee status. The objective component involves evidence from sources other than the refugee claimant. The evidence from the other sources, which are considered objective evidence include Amnesty International Reports, Human Rights Watch Report, U.S. Department of State Annual Reports on Country Conditions and News Paper Articles. These documents have evidentiary value and are scrutinized by the decision-maker carefully to determine whether the subjective fear of the refugee claimant is objectively supported.

The rules of the Immigration and Refugee Protection Board has stipulated strictly as to the disclosure of evidence to all parties involved in the immigration process. There is a strict time limit for the disclosure of documents. There is no room for hearing by ambush. The rules require that all documentary evidence must be disclosed to the other parties within a time frame. Failing which the documentary evidence will not be admitted in the hearing. There is also a rule that evidence will not be admitted after the conclusion of the hearing unless permission is given to do so at the conclusion of the hearing.

The Immigration and Refugee Protection Act (IRPA)and Regulations, which came

(visit next page)

into force on June 28, 2002 has created a new legislative scheme known as "Pre-Removal Risk Assessment" (PRRA). Under this scheme, prior to a removal from Canada, the failed refugee claimants are given an opportunity to present "new evidence" for risk assessment. There are certain exceptions to it. The PRRA officers are restricted to review only the new evidence. The new evidence must be given to the PRRA officer, which may include incidents affecting the refused refugee claimants in their own country, for example, if anyone in your close family has left the country subsequent to your leaving and has been accepted as a refugee in Canada or elsewhere or any significant incidents happening in your country subsequent to your original claim, which may impact on your current situation leading to a fear to return to your country. The new evidence may also include information from publicly available sources such as Human Rights Package, Lawyers' Committee on Human Rights; U.S. Department of State Country Reports on Human Rights Practices, Reports of Amnesty International, World Europa and Human Rights World Report and documents obtained from internet research.

In a case I was retained involving Sri Lankan Tamil couple, who is 83 and 79 years of age, new evidence relating to country situation in Sri Lanka was submitted for a pre-removal risk assessment. The PRRA officer ignored this vital evidence in making a negative decision. The documentary evidence was that the Sri Lankan government and the LTTE has urged the foreign governments not to return the refugees to Sri Lanka because the situation in Sri Lanka was not conducive for the return of the refugees. An application for leave for judicial review challenging this decision was commenced. In the mean time, the enforcement unit of the Citizenship and Immigration Canada has made removal arrangements and directed the elderly couple to report for removal to Sri Lanka. In order to prevent the removal, it was essential to bring a motion for stay of removal before the Federal Court of Canada seeking a relief ancillary to the leave application for judicial review. In order to succeed at a motion for stay of removal, the claimants must satisfy the court firstly, there is a serious issue to be tried by the court. Secondly, irreparable harm would be caused to the applicants in case they are removed. Thirdly, the balance of convenience favours the claimants. In this case, it was the claimants' contention, that the serious issue to be argued was that the PRRA officer ignored the vital evidence as to the Sri Lankan country condition, particularly the Sri Lankan government and the LTTE asking refugees not be returned to Sri Lanka because the conditions were not conducive. The court agreed on my argument and the stay of removal was granted. This illustrates the importance of providing relevant and crucial evidence vital to a determination of a fact to support the assertion articulated by the litigants. If this is not done, the courts and tribunals will reject a claim or relief sought for lack of relevant evidence.

The Pre-Removal Risk Assessment is the last step where a refused refugee claimant has an opportunity to have his case reviewed before removal from Canada. The new evidence has to be submitted for consideration by the PRRA officer. The least known provision in the IRPA is that even after a PRRA officer makes a negative decision, and before removal, a refugee claimant can make another PRRA application and submission if there is new evidence to support his risk to life. Again, the importance of evidence is emphasized. All determinations by the PRRA officer are based on the evidence the claimant submits and the evidence from public sources available to the PRRA officer. In a recent case in which I appeared as a Counsel on a Stay of Removal matter of a Sri Lankan family, the Federal Court of Canada granted an interim stay of removal and requested for additional evidence and submissions as to the current country situation in Sri Lanka for its evaluation. Subsequent to the granting of interim stay of removal, the Counsel for the Minister agreed to have the new evidence be submitted to a PRRA officer for consideration. New evidence and submissions analyzing as to the current country situation in Sri Lanka and its impact on my clients were submitted, which led to a positive determination. Mere submission of new evidence is not sufficient. An analysis of the evidence and its relevance to the claimant are always essential.

The IRPA provides for making of applications for immigration to Canada on humanitarian and compassionate (H&C) grounds from within Canada. The humanitarian and compassionate factors are assessed to decide whether to grant an exemption from certain legislative requirements to allow an application for permanent residence to be processed from within Canada. In order to obtain exemption, an applicant must satisfy the test that he or she faces unusual, undeserved, or disproportional hardship not of one's own making meriting an H&C determination granting exemption to consider the application from within Canada. In order to establish that an applicant faces an unusual, undeserved and disproportionate hardship, evidence has to be provided. Without clear and convincing evidence of hardship, exemption for processing of the application from within Canada will not be granted. In determining the H&C applications, another factor is considered. The factor being the establishment of the applicant in Canada evidence as to the degree of establishment must be provided. Further, the impact of the disruption to the applicant must also be provided. Once again, the importance of the documentary evidence directly relevant to the issue to be determined is emphasized.

In my years of experience as an Immigration Lawyer, handling immigration appeal cases at various levels of appeal, I have seen numerous failed refugee claims as well as other immigration cases due to lack of evidence. The reason I have called this article "Immigration Litigation" is because the immigration lawyers are expected to be litigators as in criminal and civil law practice. The courts have always looked for evidence in support or against in determining the cases before it, the Immigration Law is no exception to this rule. The enforcers of the Immigration Law, whether they are Immigration Officers, Tribunals or Courts, are increasingly looking for credible and trustworthy evidence, to determine the issues, which the are called upon to do in accordance with the law.

கனடாவில் இனவாரியாக விபரம் திரட்டல்
Racial Profiling in Canada



பொ. கயிலாசநாதன் கனடிய வழக்கறிஞர்

இனவாரியாக விபரம் திரட்டல் (Racial Profiling) என்னும் சொற்பதம் நீண்ட காலமாகவே எமது அண்டை நாடான அமெரிக்காவில் விமர்சிக்கப்பட்டு வருகின்ற போதிலும், கனடாவில் மிக அண்மைக் காலத்திலேயே இது மக்கள் கவனத்தை ஈர்ந்துள்ளது. 1990ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே கனடாவில் இனரீதியாக விபரம் திரட்டல் நடைமுறையிலுள்ளது என உணரப்பட்ட போதிலும், வெளிப்படையாக எவரும் அதனைக் குறைகூறவோ அன்றி விமர்சிக்கவோ முன்வரவில்லை. ஆனால் இன்று நீதிமன்றம் உட்படப் பல நிறுவனங்களாலும் இனரீதியாக விபரம் திரட்டல் பகிரங்கமாக விமர்சிக்கப்படுகின்றது.

முதலில், இனரீதியாக விபரம் திரட்டல் என்றால் என்ன என்பதை மேலெழுந்த வாரியாகப் பார்ப்போம். இதற்கென ஒரு வரைவிலக்கணம் இல்லாத போதிலும், 1999ம் ஆண்டு R.V.Richards என்ற வழக்கில், ஒன்ராறியோ மேல் நீதிமன்றம் இனரீதியாக விபரம் திரட்டல் என்றால் என்ன என ஆபிரிக்க கனடிய சட்ட நிறுவனம் (African Canadian Legal Clinic) சார்பில் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணத்தை ஏற்றுள்ளது. "Racial policing is criminal profiling based on race. Racial or colour profiling refers to that phenomenon whereby certain criminal activity is attributed to an identified group in society on the basis of race/colour resulting in the targetting of individual members of that group. In this context race is illegitimately used as a proxy for the criminality or general criminal propensity of an entire racial group" என இவ்வழகில் முன்வைக்கப்பட்ட வாதம் ஏற்கப்பட்டுள்ளது.

இது எதனைக் காட்டுகின்றது என்றால், குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சேர்ந்தவரை (பொதுவாக சிறுபான்மை இனம், குறிப்பாக கறுப்பினத்தவர்கள்) எவ்வித சந்தேகமோ, அல்லது நியாயமான காரணமோ இல்லாது அவர் அக்குறிப்பிட்ட இனத்தவர் என்பதற்காகப் பொலிசார் தடுத்து வைப்பதையும் அவரது உடைமைகளைத் தேடுதல் நடத்தி அவர் ஏதாவது குற்றச்செயலைப் புரிந்துள்ளார் என உறுதிப்படுத்துவதுமாகும். அதாவது, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்படுகின்றது. இதன் மூலம், கனடிய அரசியற் சாசனத்தின் ஓர் அங்கமான உரிமைப் பட்டயம் (Canadian Charter of Rights) நாகரிகமாக மீறப்படுகின்றது. குற்றச் செயலைத் தடுப்பதற்காக சாதாரண பிரசை எவரையும் தடுக்கவும், விசாரணை நடத்தவும் பொலிசாருக்கு உரிமையுண்டு. இந்த முகமூடியைப் பயன்படுத்தியே சிறுபான்மை இனத்தவரின் உரிமைகள் மீறப்படுகின்றன.

இதற்கு உதாரணமாகப் பின்வரும் சம்பவத்தினைப் பார்க்கலாம்: 1996ம் ஆண்டின் இலையுதிர் காலப் பகுதியில் காட்டர் எனப் பெயர் கொண்ட கறுப்பினத்தவர் ஒருவர், ரொறன்ரோவிலுள்ள உணவு விடுதியொன்றில் தனது நண்பர்களுடன் இரவுப் போசனத்தை முடித்த பின்னர், வாகனத் தரிப்பிடத்தில் நின்ற தமது காரை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அப்போது அடையாளமிடப்படாத நான்கு (4) கார்கள் அவரைச் சூழ்ந்து கொண்டன. சிவில் உடை தரித்த இருவர். துப்பாக்கியுடன் அவரது காரின் இரு பகுதிகளிலும் நின்றனர். காட்டரிடம் எக்காரணமும் கூறப்படாமல் கை விலங்கிடப்பட்டார். கைது செய்யப்பட்டார். காரணம் கூறப்படாது அவரது பென்ஸ் கார் பொலிசாரின் சோதனைக்குள்ளானது. முடிவில் பொலிசாரால் ஒரு சாட்சியத்தையும் காணமுடியவில்லை.

கறுப்பினத்தைச் சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க மூக்குக் கண்ணாடி அணியாத ஒருவர் போதைப் பொருள் விற்பனை செய்கின்றார் என்ற தகவலே பொலிஸாரின் இத்தகைய நடத்தைக்குக் காரணம். தேடப்படுபவர் கறுப்பு இனத்தவர் என்ற ஒரே காரணத்துக்காக அறுபது வயதான மூக்குக் கண்ணாடி அணிந்த காட்டர் பொலிசாரின் துன்புறுத்தலுக்கு ஆளாக நேர்ந்தது. பின்னர் அவ்விடத்தில் வைத்தே காட்டர் விடுவிக்கப்பட்டார். இது எதனைத் தெரியப்படுத்துகின்றது என்றால், தெளிவான தகவல்கள் பொலிஸாரிடம் இருந்தாலும், இன அடிப்படையிலான விபரங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, சாதாரண பிரசைகளைத் துன்புறுத்துகின்றனர் என்பதாகும். இவ்வாறான சம்பவங்கள் பல இடம்பெற்றள்ளன.

1990ம் ஆண்டுகளில் கனடா உயர் நீதிமன்றத்தில், சிறுபான்மை இனத்தவர்கள் என்ற காரணத்திற்காக பொலிசார் வாகனங்களை வீதிகளில் மறித்துத் தேடுதல் நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டபோது, பெரும்பான்மை நீதிபதிகள் பொலிசாரின் நடத்தை கனடிய உரிமைச் சாசன பட்டயம் - பிரிவு 1ன் கீழ் சட்டப்படியானதே எனத் தீர்ப்பளித்தனர். உயர் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான Sopinka தமது தீர்ப்பில், பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பானது பொலிசாரின் சட்டமுறையற்ற நடவடிக்கைகட்கு முகமூடி போடுவதாக அமையுமெனவும், கனடிய உரிமைச் சாசனப் பட்டயத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகளை இலகுவில் மீற வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

அண்மைக் காலங்களில் இனரீதியாக விபரம் திரட்டல் பற்றிப் பல மட்ட நீதிமன்றங்களிலும் விசாரணை நடத்தப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகின்றது. இனரீதியாக விபரம் திரட்டல் இருப்பதாக நீதிமன்றங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால், இதனைத் தடுப்பது பற்றி, நீதிமன்ற மட்டத்திலோ அல்லது அரச மட்டத்திலோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில், சிறுபான்மை இனத்தவர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து இனரீதியான விபரத் திரட்டலுக்கு எதிராகக் குரல் கொடுத்து எமது அடிப்படை உரிமைகள் தேவையற்ற முறையில் மீறப்படாது இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

கனடாவிலுள்ள இலங்கைத் தமிழ் இளைஞர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதை நாம் மறுக்க முடியாது. இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் எக்காரணங்களால் அவ்வாறு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள் என்பதை நாம் இனங்கண்டு அதற்குப் பரிகாரம் காணவேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற தமிழ் இளைஞர்கள் காரணமின்றி ஏதாவது ஒரு வகையில் அதற்குள் இழுத்துச் செல்லப்படுபவர்களாகவே இருக்கின்றார்கள். எனவே இவர்களை மாற்றுவது சுலபமானதாக இருக்கும். இதற்கு முக்கியம், எம் மத்தியில் இவர்களை வழிநடத்தக்கூடிய தலைமையை உருவாக்க வேண்டும். நாம் இதைச் செய்யத் தவறினால், எம்மினத்தையும் இனவாரியான விபரத் திரட்டலில் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்புண்டு. அவ்வாறு நடக்குமாயின், நாம் எங்கும் எப்படியும் பொலிசாரால் தடுக்கப்படலாம். காரணமின்றி எமது உடமைகள் தேடுதலுக்கு உட்படுத்தப்படலாம். தேவையற்ற குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாக்கப்படலாம்.

(இந்த விடயத்தை நான் எழுத எண்ணியதன் நோக்கம் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே. இல்லையாயின், துன்புறுத்தலுக்கும் அவமரியாதைக்கும் ஆளாக்கப்படலாம்).

பெற்றோரின் பிரிவும் பிள்ளைகளின் பாதிப்பும்
Parent's Separation & Children's Reaction



தெய்வா மோகன் கனடிய வழக்கறிஞர்

பெற்றோர் ஒற்றுமையாக இருந்து வரும் குடும்பங்களில் வளரும் பிள்ளைகள் ஆரோக்கியமாக, விவேகமாக வளருவார்கள் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். ஆனால், தினமும் நாய், பூனை போல சண்டை பிடிக்கும் குடும்பத்தில் வளரும் பிள்ளைகளின் மனவளர்ச்சி, உணர்ச்சிகள் பாதிக்கப்படுகின்றது. அதுவும் பெற்றோர் பிரிந்து விவாகரத்து கோரும் நிலையில் பிள்ளைகளின் உணர்ச்சிகளையும் உரிமைகளையும் பாதுகாப்பது மிக முக்கியம். அது தான் நீதிமன்றங்கள் எப்போதும் பிள்ளைக்கு எது நன்மை (Best interst of the child) என்ற அடிப்படையிலே Custody Access போன்ற விடயங்களில் முடிவு எடுக்கின்றன.

அண்மையில், விவாகரத்து சம்பந்தமாக 9 வயது மகளுடன் ஒரு பெண்மணி வந்திருந்தா. அவவுக்கு துணையாக அவரின் தந்தையும் வந்திருந்தார். பொதுவாக சிறு பிள்ளைகளின் முன்பு குடும்பப் பிரச்சனைகளை கதைப்பதில்லை. அதனால் பிள்ளையை வரவேற்பறைக்குக் கூட்டிப் போகுமாறு அவவின் தந்தையிடம் கூறினேன். போவதற்கு முன்பு அந்தப் பிள்ளை என்னைப் பார்த்து "என் அப்பாவை உங்களுக்குத் தெரியுமா? எனக்கு அவரைப் பார்க்க ஆசை, ஆனால் அம்மா சொன்னா அப்படி நான் அப்பாவிடம் போனால் இந்தியாவுக்குக் கூட்டிப் போய்விடுவார், பிறகு அம்மா, தாத்தாவைப் பார்க்க முடியாது" என்றா கலங்கிய கண்களுடன். அப்பிள்ளை சொன்னது இன்னும் என்கண் முன் நிற்கிறது. அப்படியெல்லாம் நடக்காது, உங்களுக்கு அப்பாவை பார்க்க வேண்டுமென்றால் அதற்கேற்ற ஒழுங்குகள் செய்யலாம் என்று அப்பிள்ளையை சமாதானப்படுத்தி அனுப்பி விட்டு தாயுடன் இனிமேல்

இப்படி பிள்ளையின் மனதில் தேவையில்லாத பயத்தை உண்டாக்க வேண்டாம். அப்படி அவர் பிள்ளையை வேறு ஊருக்கு கொண்டு போகாமல் பாதுகாக்க சட்டத்தில் இடமிருக்கிறது. ஆனால் பிள்ளையை தகப்பனுடன் பழக விடாமல் தடுப்பது தவறு, அதனால் பாதிக்கப்படுவது பிள்ளை தான்.
பெற்றோருக்கிடையில் இருக்கும் கோப தாபம், பழிவாங்கல் உணர்வுகளை ஒதுக்கி வைத்து விட்டு பிள்ளைக்கு எது நல்லது என்று நடக்க வேண்டுமென புத்தி சொல்லி, மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பற்றி விளங்கப்படுத்தி அனுப்பினேன்.

இந்த அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது அண்மையில் ஒரு விவாகரத்து சம்பந்தமான புத்தகத்தில் "பிள்ளைகளின் பாதிப்பு (Children's Reaction) என்ற ஒரு கட்டுரை ஞாபகத்துக்கு வந்தது. அதில் பிள்ளைகளை எப்படி பெற்றோரின் பிரிவு பாதிக்கின்றது என்பதை விபரித்து எழுதியிருந்தார்கள். அதில் குறிப்பிட்ட சில முக்கியமான விடயங்களை உங்களுக்கு 'தமிழர் தகவல்' மூலமாகச் சொல்ல விரும்புகிறேன்.

விவாகரத்து எடுத்த, அல்லது பிரிந்து இருக்கும் பெற்றோருக்கு அவர்கள் அந்த பிரிவால் எவ்வளவு பாதிக்கப்பட்டார்கள் என்று தெரியும். ஆனால் பெரியவர்களை விட பிள்ளைகள் தான் அந்தப் பிரிவால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பாதிப்பு அவர்களின் எதிர்கால வாழ்க்கையையே பாதிக்கலாம்.

பெற்றோரின் பிரிவால் பிள்ளைகளின் மனதில் ஒரு பயம், அதுவும் சிறிய பிள்ளைகள் என்றால் தன் தாயை தந்தை விட்டு விட்டு போனதைப் போல தன்னையும் எல்லாரும் விட்டு விட்டு போய்விடுவார்கள் என்று பயப்படுவார்கள். இதனால் தாய் வேலைக்குப் போகும் பொழுது வேறு யாரிடமாவது பிள்ளையை விட்டால் அழுது அடம்பிடிக்கலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் தாய் அன்பாக, பொறுமையுடன் நடக்க வேண்டும். வேலையிலிருந்து தொலைபேசி மூலம் பிள்ளையுடன் கதைக்கலாம். தன் கணவன் மீது என்ன கோபம் இருந்தாலும் அப்படியான சந்தர்ப்பங்களில் கணவனுக்கு வேலையில்லாவிடின், பிள்ளையை தந்தையிடம் விட்டுப் போகலாம். கொஞ்சம் வயது போன பிள்ளையென்றால் தனது கவலையை கோபத்தினால் வெளிப்படுத்துவார்கள். இந்த நேரத்தில் பிள்ளையுடன் இருக்கும் தாயோ, தந்தையோ தானும் கோபப்படாது பொறுமையாக அன்பாக நடக்க வேண்டும். தேவைப்படின் ஏதாவது Counselling இற்குக் கூட்டிச் செல்லலாம்.

என்னதான் கணவன்/மனைவி மீது கோபம் என்றாலும் அவர் என்ன பிழை விட்டிருந்தாலும் ஒருவரைப் பற்றி மற்றவர் பிள்ளைகளின் முன்பு கேவலமாக கதைக்கக் கூடாது. அப் பிள்ளைக்கு தாமிருவரும் தாய், தந்தை என்பதை மறக்கக் கூடாது. பிள்ளைகள் கவலையாக இருந்தால் அவர்கள் ஏன் அப்படி இருக்கிறார்கள், என்று அவர்களின் உணர்ச்சிகள் பற்றி அவர்களுடன் கதைக்கலாம். அதை விட்டுவிட்டு மற்ற பெற்றோரைத் தூற்றுவதால் நீங்களும், உங்கள் பிள்ளைகளின் முன்பு மரியாதை இழப்பீர்கள் என்பதை மறக்க வேண்டாம்.

ஆண்பிள்ளையென்றால் அழுவது கூடாது எனப் பெற்றோர் கூறக் கூடாது. பிள்ளைகள் அழுதால் அவர்களை கொஞ்ச நேரம் அழவிட்டு, பின்பு ஆறுதல் சொல்லி தேற்றி, அவர்கள் விரும்பிய

(எதிர்ப்பக்கம் வருக)

விளையாட்டில் ஈடுபடுத்தி உற்சாகப்படுத்தலாம்.

சில சமயங்களில் பெற்றோர் பிரிந்தது தங்களால் என ஒரு குற்ற உணர்வுக்கு ஆளாவார்கள். தாய் தகப்பனுடன் எதிர்த்து பேசியபடியால் தான் அப்பா வீட்டை விட்டு விட்டு போனார், சோதனையில் நன்றாகச் செய்திருந்தால் அம்மா அப்பாவுக்கிடையில் வாக்குவாதம் நடந்திருக்காது --- என தங்களில் பிழையைப் போட்டு வருந்துவார்கள். இந்த நேரங்களில் நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் மிக கவனமாக கதைக்க வேண்டும். "நீ பள்ளிக்கூடத்தில் சண்டை பிடித்து கைது செய்யப்பட்டதால் தான் அப்பா கோபித்துக் கொண்டு போனார்" என்று சொல்லக் கூடாது. தங்களது பிரிவுக்கு தங்களிடையே உள்ள பிரச்சனைகள் தான் காரணம், பிள்ளைகளின் நடத்தை அல்ல என்பதை தெளிவாக அவர்களுக்கு சொல்லவும்.

பெற்றோர் ஒருவரை ஒருவர் வெறுப்பது போல தங்களையும் ஒதுக்கி விடுவார்கள் என்றும் சில பிள்ளைகள் கலங்குவார்கள். இந்த சமயங்களில் பெற்றோர் இருவரும் பிள்ளைகளின் மீதுள்ள பாசம், அன்பு, உறவு என்றும் மாறாமல் இருக்கும். தாங்கள் பிரிவதால் பிள்ளைகளுடன் உள்ள உறவு பிரிவதில்லை என்பதை பிள்ளைகளுக்கு உணர வைக்க வேண்டும். தாயுடன் பிள்ளைகள் இருந்து தந்தை பிரிந்து இருந்தால் தந்தையின் பொறுப்பு கூடியதாக இருக்கும். பிள்ளைகளுடன் இயலுமான நேரம் செலவழிக்க வேண்டும். அவர்களின் படிப்பு, விளையாட்டு போன்றவற்றில் பங்களிக்க வேண்டும். தாபரிப்பு பணம் கட்டினாலும் பிள்ளைகளுக்கு விசேடமாக ஏதாவது (Sky, Soccer boots) தேவைப்படின் வாங்கிக் கொடுக்கலாம். பிள்ளைகளுக்கு செய்யும் கடமைகளை சட்டத்தின் கண்ணில் செய்யாமல் அவர்களுக்காக செய்யுங்கள். தாயும் பிள்ளைகளுடன் தகப்பன் பழகுவதை தடுக்கக் கூடாது.

பிரிவு ஏற்பட்டவுடன் கணவன், மனைவி இருவருக்குமிடையே ஒரு கோபம், பழிவாங்கும் உணர்வுகள், ஒருவரை ஒருவர் பார்த்தவுடனே ஏதோ ரத்தக் கொதிப்பு வந்தவர்கள் போல பதட்டமாக, ஆத்திரமாக நடப்பார்கள். ஆனால் பிள்ளைகளின் நன்மை கருதி இந்தக் கோபத்தைக் குறைத்து இருவரும் நண்பர்களாக பழகினால் பிள்ளைகளுக்கும் நல்லது அவர்களுக்கும் நல்லது. இதனாலேயே நீதிமன்றத்தில் Custody & Access விடயங்களில் சிலவேளைகளில் பெற்றோரையும், பிள்ளைகளையும் Counselling அனுப்புவார்கள்.

பெற்றோர் இருவருமே பிள்ளைகள் மீது அன்பாக இருந்தாலும், அக்கறையாக இருந்தாலும் அவர்கள் இருவரும் வாக்குவாதப்பட்டால் நீதிமன்றம் Joint Custody வழங்காது. Joint Custody என்றால் இரு பெற்றோரும் பிள்ளைகள் வாழ்க்கையில் சமபங்கு எடுத்து வளர்ப்பது, பிள்ளை யாருடன் எப்போது இருப்பது என்பதை அவர்களே கதைத்து தீர்மானிக்கலாம். பிள்ளைகள் சம்பந்தமான எல்லா விடயங்களிலும் - கல்வி, விடுமுறை, மருத்துவம், தண்டிப்பது, எதிர்காலம் - இரு பெற்றோரும் சேர்ந்து முடிவெடுக்கும் உரிமையையும் தருவது Joint Custody.

நீதிமன்றம் பொதுவாக வழங்குவது Sole Custody. பிள்ளையின் பொறுப்பு முழுவதும் ஒரு பெற்றோருக்கு - தாய்க்கு அல்லது தந்தைக்கு வழங்குவது. இந்தவிதமான Custody இன் கீழ் பிள்ளை தாய் அல்லது தந்தையுடன் மாத்திரம் வசிப்பது மாத்திரமல்ல, அப்பிள்ளை சம்பந்தமான முடிவுகளும் Custody உள்ள பெற்றோரே எடுக்கலாம். மற்ற பெற்றோர் கல்வி, மருத்துவம் போன்ற முக்கிய விடயங்களில் பகிர்ந்து கொள்ள நீதிமன்றம் உத்தரவு வழங்கும்.

பெற்றோர் பிரிந்த பின் பிள்ளையின் Custody பற்றி நீதிமன்றம் தீர்மானிக்கும் போது "Best interest of the child" என்பதையே முதல் கவனிக்கும். அத்துடன் பிள்ளைக்கு இரு பெற்றோருடனும் இயன்றளவு தொடர்பு இருக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் எடுக்கும். அதைவிட பிரிவதற்கு முன்பு யார் பிள்ளைகளை கவனித்துக் கொண்டார், யார் பள்ளிக்கூட விடயங்களில் பங்கு கொண்டார், பிள்ளைக்கும் பெற்றோருக்கும் உள்ள Bonding, பெற்றோராக இருப்பற்கு உள்ள திறமை, அவர்களின் மனநிலை, உடல் நிலை, வீட்டில் பேரன் பேத்தி போன்றோர் உதவிக்கு இருக்கிறார்களா, என்பதெல்லாம் பார்த்துத் தான் நீதிமன்றம் பிள்ளையின் Custody பற்றி முடிவு எடுக்கும். இறுதியாக பிள்ளையின் விருப்பம் (There is no fixed age at which a child has the right to decide where he is going to reside) ஆனால் பிள்ளை வளர வளர பிள்ளையின் விருப்பத்துக்கு ஏற்ப நீதிமன்றம் தீர்மானிக்கும்.

பொதுவாக Custody சம்பந்தமான விடயங்களில் Trial (விளக்கம்)க்கு போவதை நீதிமன்றமோ பெற்றோரோ விரும்புவதில்லை. அப்படிப் போவது பிள்ளைக்கும் பெற்றோருக்கும் மிகவும் மனவேதனையான விடயம். அத்துடன் வீண் பணச்செலவும், இதற்காகவே இப்போது Family mediator என்று இருக்கிறார்கள். பொதுவாக Mediator இப்படிப்பட்ட பிரச்சனைகளை தீர்ப்பதற்கு என விசேடமாக பயிற்சி பெற்றவர்கள். பெற்றோர் இருவருடனும் இருந்து பேசி சுருக்கமான முறையில் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள உதவுவது. அல்லது ஒரு வழக்கறிஞருடன் போய் உங்கள் பிரச்சனைகளை கதைத்தால் அவர் எப்படி ஒரு separation agreement அல்லது வேறு வழிகளில் உங்கள் பிரச்சனைகளை தீர்க்கலாம் என உதவுவார். அல்லது ஒரு குடும்ப வைத்தியர் (Child psychologist) பிள்ளைகளின் மனோதத்துவ நிபுணர் போன்றவர்களுடன் கதைத்துப் பார்க்கலாம். எப்படியிருந்தாலும் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு இரு பெற்றோரோருடனும் அன்பாக பழகுவது, இரு பெற்றோரின் பங்களிப்பும் மிக முக்கியம் என்பதை மறக்க வேண்டாம்.

சொத்தின் உறுதிக்கு உரித்துப் பெயர் தெரிதல்
How Should one take title to the Property?



யசோ சின்னத்துரை கனடிய வழக்கறிஞர்

வீடு கொள்முதல் செய்யும் ஒவ்வொருவரும் தமது பெயரை என்ன காரணத்திற்காக வீட்டின் உரித்தில் சேர்க்கின்றார் என்ற நோக்கத்தைத் தெளிவாக சிந்தித்து, விளங்கி, அதற்கேற்ப செயற்பட வேண்டும். தகுந்த சட்ட ஆலோசனை பெற்று அதற்கேற்ப செயலாற்றுவதன் மூலம் எதிர்பாராத விளைவுகள், ஆச்சரியங்கள், ஏன், மேலதிக சட்டச் செலவுகளையும்கூட தவிர்த்துக் கொள்ளலாம் என்பது எனது அபிப்பிராயம்.

ஒருவர் கனடாவுக்கு வந்த காலத்திலிருந்து தமக்கெனச் சொந்தமான ஒரு வதிவிடம் வேண்டுமென்ற நீண்டகால விருப்பத்தை நிறைவு செய்வதற்கு இன்னமும் சில நாட்கள்தான் இருக்கின்றன. அவர், வீட்டு முகவர் ஒருவர் ஊடாகத் தன்னால் இயலக்கூடிய (affordable) தொகைக்கு ஒரு வீட்டை வாங்குவதற்கு ஒப்பந்தம் (agreement of purchase and sale) செய்து கொண்டிருக்கிறார். Downpayment அவரது வங்கியில் வைப்பிலிடப்பட்டு இருக்கின்றது. மிகுதிப் பணத்திற்கு வங்கிக்கு விண்ணப்பம் செய்து வீட்டினை ஈடு (mortgage) வைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுத்தாகிவிட்டது. வீடு விற்பவருடன் செய்துகொண்ட அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி வீட்டு உரிமையையும் திறப்பையும் குறித்த தினத்தில் பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு Real Estate சட்டத்தரணியை நியமனம் செய்து விட்டார்.

ஒரு வீடு வாங்கும்போது உறுதியில் கொடுக்கப்பட வேண்டிய சட்டபூர்வமான முழுப் பெயர் (Legal Name), பிறந்த தினம், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி போன்ற விபரங்களைக் கொடுப்பதற்கும்

மிகவும் அடிப்படையான அத்தியாவசியமுமான முக்கியமான விபரங்களைக் கையளிப்பதற்கும் சட்டத்தரணியைத் தொடர்பு கொள்கிறார். அந்த விபரங்களில் மிக முக்கியமானது உறுதி எவ்வகையில் எழுதப்பட வேண்டும் என்பதுவே (How title to the property is taken).

மேலே குறிப்பிடப்பட்ட ஆள் திருமணமாகாதவர். தன்னுடைய பெயரில் மட்டும் வீட்டைக் கொள்முதல் செய்கிறார். ஏனெனில் அவரது பெயரில் மட்டும் வங்கி அவருக்கான கடனை அங்கீகரித்துள்ளது (This is an uncomplicated straightforward situation). இது இலகுவான சிக்கலற்ற தெளிவான ஒரு நிலைமையாகும்.

இன்னொருவரை எடுத்தால், இவர் திருமணமானவர். மனைவியுடன் சேர்ந்து வீட்டைக் கொள்முதல் செய்ய விரும்புகின்றார். வங்கி இருவரது வருமானத்தையும் கணக்கிலெடுத்து கடனை அங்கீகரித்துள்ளது. இவர்களது விருப்பம் கணவரில்லாதவிடத்து மனைவிக்கும் மனைவி இல்லாதவிடத்து கணவருக்கும் இந்த வீடு சென்றடைய வேண்டும் என்பதாகும். (இருவரும் இல்லாதவிடத்து சொத்து பிள்ளைகளுக்குச் சென்றடைய வேண்டுமென்பதும் விருப்பம். இந்த விருப்பத்தை நிறைவேற்றுவது ஓர் உயில் மூலமேதான்). இந்த நிலைமையும் முதற் கூறியதைப் போன்று இலகுவானது.

இனி இன்னொன்றினைப் பார்ப்போம். அதே 'ஒருவர்' மனைவியுடன் வீடு கொள்முதல் செய்ய விரும்புகின்றார். இருவரும், ஒவ்வொருவர் இல்லாதவிடத்து மற்றவரை வீடு சென்றடைய வேண்டும் என்று விரும்புகின்றார்கள். ஆனால் அவர்களது திருமணம் இன்று பதிவு செய்யப்படவில்லை. சமயாசார முறைப்படி கோவிலில் திருமணம் செய்து common law spouses ஆகப் பல வருடங்கள் வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் உறுதியில் பெயர்களைப் போடும்போது திருமணம் பதிவு செய்தவர்கள் போலவே போட முடியுமா அல்லது வேறு வழிகளில் உரித்து எடுக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது.

எவ்வாறு வீட்டில் உரித்து எடுக்கப்படுகின்றது என்பது தெளிவாக, திட்டவட்டமாகத் தீர்மானித்து போடப்பட வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து வீடு கொள்முதல் செய்யும்போது ஒன்றில் 'Joint tenants' ஆக, அல்லது 'Tenants in common' ஆக உரித்து எடுப்பார்கள்.

Joint tenants ஆகக் கொள்முதல் செய்திருந்தால் ஒவ்வொருவருக்கும் அந்த வீட்டில் சொரியல் பங்கு (undivided interest) இருக்கலாம். அவர்கள் சேர்ந்து வாங்கிய வீட்டில் இவ்வாறான சொரியல் உரிமை இருப்பதற்கு, வீட்டுச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் ஒரே நேரத்தில் உரிமை பெற்றிருக்க வேண்டும். (Each title holder must have taken title at the same time). ஒரே உறுதியானால் கொள்முதல் செய்திருக்க வேண்டும் (by the same conveyance). எல்லோருக்கும் சம பங்கிருக்க வேண்டும் (Each must have the same interest)

இருவர் 'tenants in common' என்று வீடு கொள்முதல் செய்தால் அவர்களுக்கும் 'joint tenants' போல வீட்டில் சொரியல் பங்கு இருக்கும். ஆனால், சமபங்குதான் இருக்க வேண்டும் என்றில்லை. Fraction ஆக இருக்கும். உதாரணமாக, 99% அல்லது 1%, அல்லது 66% மும் 34%மும் என்று எந்த விகிதத்திலும் title பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வசிப்பதற்கு ஒருமித்த உரிமை (unity of possession) இருக்கின்றது. ஆனால், உரிமை வேறானது (but title is separate).

Joint tenants ஆக கொள்முதல் செய்திருந்தால், ஒருவர் இல்லாதவிடத்து (after death), உரிமை மற்றவரைச் சென்றடையும்.

(எதிர்ப்பக்கம் வருக)

ஆனால், tenants in common என்றால், காலமானவரின் சட்ட உரித்தாளரே (heirs) அவருடைய பங்குக்கும் உரிமையாளர் ஆகின்றார். தமது பங்கினை அவர் வேறாக எதுவும் செய்யலாம் (deal with his interest separately).

உதாரணமாக, கணவன் மனைவி joint tenants ஆக வீட்டைக் கொள்முதல் செயதால் கணவர் இல்லாத காலத்தில் வீடு மனைவிக்கு மட்டும் சென்றடையும். மனைவி இல்லாதவிடத்து கணவரைச் சென்றடையும். இல்லாமற் போனவர் முன்னரே ஒரு உயில் (will) எழுதி, அதில் முரண்பாடான ஒரு விருப்பத்தைத் தெரிவித்து இருந்தால் அது செல்லாது. ஆனால், tenants in common ஆகக் கொள்முதல் செய்யும் வீட்டின் சொரியல் பங்கு உயில் எழுதுவதன் மூலம் விரும்பியவருக்கு எழுதப்படலாம். Joints tenants ஆக உரிமை (title) எடுக்கும் சந்தர்ப்பத்தில் தெளிவாக, திடமாக நோக்கத்தை கருத்தில் கொண்டு உரித்து எடுக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர் வீடு வாங்கும்போது உறுதியில் ஒன்றும் போடாவிட்டால் அது tenants in common ஆக கொள்முதல் செய்ததாகவே கருதப்படும்.

மேலும் சில உதாரணங்கள்:
பெற்றோர் தங்கள் பெயரிலும் திருமணமான மகள், மருமகள் பெயரிலும் சேர்ந்து வீட்டைக் கொள்முதல் செய்ய விரும்புகின்றார்கள். சம பங்கானாலும், அது தாங்கள் இருவரும் இல்லாத காலத்திலேயே மகளுக்கும் மருமகனுக்கும் சென்றடைய வேண்டுமென்பது அவர்கள் விருப்பம். இந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு title எடுக்கலாம்?
தகப்பனும் தாயும் சொரியலாகத் தங்களுக்கு 50 வீதத்தை joint tenant ஆகவும் எடுத்துவிட்டு, மிகுதிச் சொரியலான ஐம்பது வீதத்தையும் மகளுக்கும் மருமகனுக்கும் joint tenants ஆகவும் உறுதி எழுத வேண்டும்.

கணவருடைய வருமானத்தை மட்டும் கணக்கிலெடுத்து வங்கி கடனை அங்கீகரித்துள்ளது. ஆனால் கணவரோ மனைவியின் பெயரில் மட்டும் வீட்டை எழுத விரும்புகின்றார். முடியுமா?
வங்கிகளின் சம்மதம் இதற்குத் தேவை. மனைவியின் பெயரில் வீட்டை வாங்க அனுமதித்தால் கணவடை உத்தரவாதியாக (Guarantor) போட வேண்டியிருக்கும். அல்லது கணவர் பெயரைச் சேர்க்குமாறு அல்லது கணவர் பெயரில் மட்டும் வாங்கும்படி அறிவுறுத்தும்.

கணவர் - மனைவி என்று இருவரும் சேர்ந்து வீடு கொள்முதல் செய்கிறார்கள். இருவரது மொத்த வருமானத்தைக் கணக்கிலெடுத்தும் வங்கி, அவருடைய கடனுக்கான விண்ணப்பத்தை வருமானப் பற்றாக் குறையினால் நிராகரித்து விட்டது. வருமானம் காட்டுவதற்காக அவர்களது குடும்ப நண்பர் ஒருவர் தனது வருமானத்தையும் சேர்க்குமாறு வங்கிக்கு விண்ணப்பிக்கின்றார். ஆனால் வங்கியோ அந்த நண்பரது பெயரும் உறுதியில் இடம்பெற வேண்டும் என்கிறது. நண்பர் அந்த mortgage கட்டப்போவதுமில்லை. Downpayment போடப் போவதுமில்லை. அந்த வீட்டில் வசிக்கப் போவது கூட இல்லை. உதவிக்காகத்தான் titleஇல் இடம்பெறச் சம்மதிக்கின்றார். கணவர் மனைவிக்கும் நண்பரின் பெயர் உறுதியில் போவது விருப்பமில்லை. High Ratio mortgage இல்லாவிடில் சில சந்தர்ப்பங்களில் நண்பரை guarantor ஆக அனுமதித்திருக்கும். இந்தக் கட்டத்தில் இந்த கணவர் மனைவி, நண்பன் எவ்வாறு title எடுக்க வேண்டும் என்பது தெளிவாகச் சிந்தித்து [illegible]

மனைவியின் பெயரில் மட்டும் வீடு வாங்க விரும்பிய ஒருவரது மனைவியின் வருமானம் பற்றாத காரணத்தினால் கடன் விண்ணப்பத்தை வங்கி நிராகரித்துவிட்டது. தவிர்க்க முடியாத காரணங்களினால் [illegible] உறுதியில் சேர்க்க முடியாத ஒரு நிலைமை. வீடு [illegible] வாங்க வேண்டும். வேறு வழியின்றி அரச நிதியுதவியில் (Family Assistance) இருக்கும் வயதான பெற்றோரை வங்கியின் அனுமதியுடன் உறுதியில் சேர்த்து வீடு கொள்முதல் செய்யப்படுகின்றது. சில வருடங்கள் செல்கின்றது. வயதான பெற்றோர். தமது ஊருக்குத் திரும்பிச் செல்ல விரும்புகின்றார்கள். அப்படியான வேளையில் உறுதியில் பெயர் எப்படிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்?

உறுதி எழுதும்போது அறிந்து கொள்ள வேண்டிய சில விடயங்கள்:

முதன்முறையாக, புதிய வீடொன்றினை builder இடமிருந்து (Primary residence) குடும்பமாக வசிப்பதற்கு ஒரு வீடு வாங்கும்போது, பொதுவாக வீடு வாங்குபவர் செலுத்த வேண்டிய land transfer tax இல், முதல் 2000 டாலருக்கு வரி விலக்குள்ளது. ஒருவர் இந்த வகையான வரிவிலக்கைத் திரும்பவும் பெற்றுக் கொள்வதற்காக முதலில் தன்னுடைய பெயரில் மட்டும் title எடுக்க விரும்புகின்றார். காரணம் என்ன? பின்பு மனைவி பெயரில் அடுத்த புதிய வீடு வாங்கும்போது 2000 டாலர் வரி விலக்கு அப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம் என நினைக்கிறார். ஆனால் மனைவிக்கு வரிவிலக்கு கிடைக்காது. அதற்காக இப்பொழுது இரு பெயர்களிலும் வாங்காமல் இருப்பதினால் நன்மையில்லை.

ஒருவர் வீடு கொள்முதல் செய்யும்போது ஒன்றில் தனது பெயரில் மட்டும் அல்லது மனைவி பெயரில் மட்டும் வீட்டைக் கொள்முதல் செய்கின்றார். ஆனால் கணவர் அல்லது மனைவி, இருவரில் யாருடைய பெயரில் title எடுக்கப்பட்டாலும் அந்த வீடு குடும்ப வீடாகப் (matrimonial home) பாவிக்கப்பட்டால், உறுதியில் மறுபெயர் போட்டாலென்ன போடாவிட்டாலென்ன கணவருக்கு அல்லது மனைவிக்கு அந்த வீட்டில் 'உரிமை' இருக்கின்றது.

ஒருவர் வீடு ஒன்றினைக் கொள்முதல் செய்து உறுதி முடிப்பதற்கு முன்னராக, தமக்குப் பிறகு யாருக்கு வீட்டின் உரித்துச் சென்றடைய வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அதற்கேற்றபடி உரித்து எழுதவேண்டும். அத்துடன் mortgage காரணத்திற்காகப் பெயரளவில் மட்டும் உறுதியில் இன்னொருவரது பெயரைச் சேர்க்கும்போது அவருக்கும் உண்மையாக வீட்டில் உரித்துள்ளவருக்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் தகுந்த சட்ட ஆலோசனை பெற்று வீட்டைக் கொள்முதல் செய்வது அத்தியாவசியமானது.

விவாகரத்தும் சீதனமும்



மனுவல் ஜேசுதாசன் கனடிய வழக்கறிஞர்

திருமணமாகும் ஒரு ஆணும் பெண்ணும் தமது திருமண நாளில் செய்து கொள்ளும் வாக்குத்தத்தம் எல்லோர் வாழ்விலும் நீடிப்பதில்லை. சிலரது குடும்ப வாழ்வு விவாகரத்தில் முடிவதை நாம் காண்கிறோம். நமது தாயகத்திலும் பார்க்க நமது சமூகத்தவரிடையே கனடாவில் விவாகரத்து அதிகமாக ஏற்படுவதை விபரப்புள்ளி காட்டுகிறது.

குடும்பச் சட்டத்தில், குறிப்பாக விவாகரத்து விடயத்தில் சட்டசேவை புரிந்து வரும் நான் நமது சமூகத்தவரிடையே விவாகரத்து வயது அடிப்படையின்றி ஏற்படுவதைக் கண்டு ஆரம்பத்தில் வியப்படைந்தாலும் நாளடைவில் விவாகரத்து எவர் வாழ்விலும் என்றும் ஏற்படலாம் என்ற மனநிலையை அடைந்துள்ளேன். எமது சமூகத்தைச் சேர்ந்த 65 வயதுக்கு மேற்பட்ட கணவன் மனைவியரின் விவாகரத்து வழக்கை நடத்தி விவாகரத்து பெற்றுக் கொடுத்துள்ளேன். சில கணவன் மனைவியினர் ஒரு நாள் கூட கணவன் மனைவி உறவு கொள்ளாத நிலையிலும் விவாகரத்துப் பெறுகிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் நமது சமூகத்தவரிடையே விவாகரத்து மலிந்து போனதற்கான காரணம் என்ன என்பதை அனுபவ ரீதியாக ஆராயும் பொழுது பின்வரும் காரணங்கள் முன்வருகின்றன.

* பெற்றோர் சகோதரங்களின் தலையீடு
* உளவியல் ரீதியான முரண்பாடு
* பொருளாதார எதிர்பார்ப்புகளால் ஏற்படும் ஏமாற்றம்
* பாலியல் முறைகேடு (Adultry)

மேற்கூறப்பட்ட காரணங்களுக்காகப் பிரிந்து செல்லும் கணவன் மனைவியினர் விவாகரத்துப் பெற முன்வரும் வேளையில் அறிந்து கொள்ள வேண்டிய சட்டரீதியான விடயங்களைப் பற்றி சுருக்கமாக ஆராய்வது தான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

கனடா விவாகரத்து சட்டத்தின் கீழ் ஒரு கணவன் தனது மனைவியையோ அல்லது மனைவி தனது கணவனையோ பின் கூறப்படும் காரணங்களுக்காக மட்டும் விவாகரத்து செய்யலாம்.

1. ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்து பிரிந்து வாழுதல் (Separation)
2. பாலியல் முறைகேடு (விபச்சாரம்) (Adultry)
3. துன்புறுத்திக் கொடுமைப்படுத்தல் (Cruelty)

ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்து பிரிந்து வாழுதல் (Separation)

ஒரு கணவனும் மனைவியும் ஒரு வருடத்துக்கு மேலாக எந்தக் காரணங்களுக்காகப் பிரிந்து வாழ்ந்தாலும் இருவரில் ஒருவர் விவாகரத்து வழக்கைத் தாக்கல் செய்யலாம். பிரிந்து செல்வதற்கு எவரின் செய்கை தூண்டுதலாக இருந்தது போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறமாட்டா. உதாரணத்திற்கு ஒரு சூழ்நிலையை எடுத்துக் கொள்வோம். கணவனின் கொடுமை தாங்க முடியாமல் மனைவி பிரிந்து செல்லும் வேளையில் பிரிந்து சென்று ஒரு வருடத்தின் பின் கணவன் விவாகரத்து வழக்கைத் தாக்கல் செய்யும் தருணத்தில் கணவனின் கொடுமை தாங்க முடியாத காரணத்தால் தான் பிரிந்து சென்றதைக் குறிப்பிட்டு, பிரிவுக்குக் கணவன் தான் காரணம் ஆகவே மனைவி விவாகரத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கணவனின் விவாகரத்து மனுவிற்கு எதிர்வாதம் தாக்கல் செய்ய முடியாது.

பிரிந்து வாழுதல் என்ற சட்ட பதத்தை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு ஒரு வருட காலத்திற்கு மேலாகக் கணவன் மனைவி தொடர்ந்து பிரிந்து வாழ்ந்திருத்தல் அவசியம். ஒரு வருட காலத்தைக் கணக்கிடுவதற்கு கணவன் மனைவி திருமண வாழ்க்கையை ஆரம்பித்த பின் பிரிந்து வாழத் தொடங்கிய திகதி விவாகரத்திற்கு முக்கிய திகதியாக அமைகிறது. பிரிவு ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்திருக்க வேண்டும். சட்டம் எதிர்பார்க்கும் பிரிவை நிறுவுவதற்கு கணவன் மனைவி வேறு வேறு இல்லங்களில் பிரிந்து வாழ வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரே கூரையின் கீழ் கணவன் மனைவியும் பிரிந்து வாழ்ந்துள்ளார்கள் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (பிரிவு - Separation பற்றி நீதிமன்றங்கள் வழங்கிய சட்ட விளக்கம் (Interpretation) பற்றி விபரமாக ஆராய்ச்சி செய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல என்ற காரணத்தால் "பிரிந்து வாழ்தல்" நிரூபிப்பதற்கு என்ன சட்ட நியதிகள் அவசியம் என்பவை பற்றி இக்கட்டுரையில் விவாதிக்கப்படவில்லை.)

ஒரு வருடத்திற்கு மேலாகத் தொடர்ந்து பிரிந்து வாழவேண்டும். "தொடர்ந்து" என்ற பதம் கவனத்திற்குரியது. உதாரணமாக ஐந்து வருட காலத்திற்குள் மொத்தம் ஒரு வருட காலம் இடை இடையே பிரிந்து வாழ்ந்தால் அந்த ஒரு வருட காலம் விவாகரத்து பெறுவதற்கான பிரிந்து வாழ்ந்த காலமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பாலியல் முறைகேடு (விபசாரம்) (Adultry):

சட்டப்படி திருமணமான கணவன் மனைவியினர் வேறு நபருடன் பாலியல் உறவு கொள்வது பாதிக்கப்பட்ட சம்சாரம் (Spouse) தமது திருமணத்தைக் கலைப்பதற்கான காரணமாக அமைகிறது. பாலியல் முறைகேடு புரிந்தவர் விவாகரத்து மனுவாளராக மனுதாக்கல் செய்ய முடியாது. பாலியல் முறைகேடு (விபசாரம்) காரணமாக விவாகரத்து மனு தாக்கல் செய்யும் பொழுது தனது சம்சாரத்துடன் பாலியல் முறைகேட்டில் தொடர்பு கொண்ட மறுநபரையும் எதிர் மனுதாரராக விவாகரத்து மனுவில் சேர்க்க வேண்டும்.

துன்புறுத்திக் கொடுமைப்படுத்தல் (Cruelty)

துன்புறுத்திக் கொடுமைப்படுத்தும்

(எதிர்ப்பக்கம் வருக)

சம்சாரத்துடன் (Spouse)
கொடுமைப்படுத்தப்படும் சம்சாரம் ஒரு நாள் கூட சேர்ந்து வாழ வேண்டிய அவசியமில்லை. மறுநாளே விவாகரத்துக் கோரி துன்புறுத்தப்படும் சம்சாரம் மனுதாக்கல் செய்யலாம். ஆனால் "துன்புறுத்தல்" நிரூபிக்கப்பட வேண்டும். துன்புறுத்தல் என்ற பொய்யான முறைப்பாட்டின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட முடியாது. விவாகரத்து வழங்குவதற்குக் காரணமாக அடையக் கூடிய துன்புறுத்தல் எத்தகையவை என்பது பற்றி இக்கட்டுரையில் நீதிமன்ற தீர்ப்புக்களின் அடிப்படையில் விவாதிக்கப்படவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக விவாகரத்துப் பெறலாமே தவிர இந்தக் காரணங்கள் நடந்தேறிய மறு நிமிடமே விவாகரத்து தன்னிச்சையாக (Automatically) பெறப்பட்டு விட்டது என பலரும் கருதுவது தவறானது. உதாரணமாக தொடர்ச்சியாகப் பிரிந்திருந்த கணவன் நீதிமன்றக் கட்டளையின்றி விவாகரத்துப் பெற்றுவிட்டதாகவோ அல்லது பாலியல் தவறு இழைக்கப்பட்ட மறுகணமே அல்லது கொடுமைப்படுத்திய குற்றத்திற்காக ஒரு சம்சாரம் குற்றவியல் தண்டனை பெற்ற நிமிடத்திலிருந்தே விவாகரத்து நிறைவேற்றப்பட்டதாக கருதுவது தவறானது. ஆகவே மேற்கூறப்பட்ட காரணங்களில் ஒரு காரணத்துக்காகவெனினும் ஒரு சம்சாரம் விவாகரத்து மனு ஒன்றை நீதிமன்றில் தாக்கல் செய்து எதிர் மனுதாரருக்கு மனுவில் பிரதியை முறைப்படி சேர்ப்பித்து மனுவை எதிர்ப்பதற்காக வேண்டிய அவகாசம் கொடுக்க வேண்டும். நீதிமன்றம் விவாகரத்துக் கட்டளை வழங்கும் வரை விவாகரத்து நிறைவேற்றப்படுவதில்லை.

விவாகரத்து கட்டளையின் முன் தீர்மானிக்கப்பட வேண்டியவை:
விவாகரத்து வேளையில் கணவன் மனைவியரிடையே தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் பல உண்டு. அவற்றுள் மிக முக்கியமானவை; 1. கணவன் மனைவியருக்கு குழந்தைகள் இருந்தால் அக்குழந்தைகளின் நலன்கள் முதலில் நீதிமன்றத்தால் கவனத்திற் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். குறிப்பாக குழந்தைகளின் பாதுகாப்பு (Custody), பாதுகாப்புப் பொறுப்பு வழங்கப்படாத மற்றப் பெற்றோராயின் குழந்தைகளைச் சந்திக்கும் உரித்து (Access), பிள்ளைகளுக்கான தாபரிப்பு (Support) போன்ற விடயங்கள் பற்றிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்; 2. சொத்துக்கள் பிரித்தல் (Division of properties).

குழந்தைகளின் நலன்
கணவன் மனைவி நிரந்தரமாக பிரிந்து வாழ எத்தனிக்கும் வேளையில் முதல்படியாக குழந்தைகளின் பராமரிப்பைப் பொறுப்பேற்கும் பெற்றோர் முதலில் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்து பின்வரும் கட்டளைகளைப் பெற வேண்டும்:
* பிள்ளைகளில் பாதுகாப்புக் கட்டளை (Custody order)
* பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு மற்றப் பெற்றோரிடமிருந்து தாபரிப்பு பணம் பெறுவதற்கான கட்டளை (Support order);
* பிள்ளைகளின் பாதுகாப்பு உரிமை பெறாத மற்ற பெற்றோர் தனது பிள்ளைகளுடன் தொடர்பும், உறவும் கொள்ள விரும்பில் பிள்ளைகளைச் சந்திக்கும் கட்டளை (Access order) பெற வேண்டும்.

விவாகரத்து மனுவுடன் பிள்ளைகளின் நலன் சம்பந்தமான மேற்கூறிய நீதிமன்றக் கட்டளைகள் இணைக்க வேண்டும். அவ்வாறு கட்டளைகள் இணைக்கப்படாத பட்சத்தில் விவாகரத்துக் கட்டளை வழங்கப்பட மாட்டாது.

சொத்துகள் பிரித்தல் (Division of properties):
கனடாக் குடும்பச் சட்டத்தின் கீழ் கணவன் மனைவி விவாகரத்து பெறுவதற்கு முன் அவர்களுடைய சொத்துகள் அவர்களுக்கிடையில் பிரிக்கப்பட வேண்டும். இருப்பினும் விவாகரத்து வேளையில் கணவனோ அல்லது மனைவியோ தமக்குச் சேர வேண்டிய சொத்துகளை அல்லது அச் சொத்தில் ஒரு பகுதியை மற்றவருக்கு மனமுவந்து அளிக்கலாம். மேலும் தமக்குள்ளே தமது சொத்துகள் சம்மதத்துடன் "பிரிவு ஒப்பந்தத்தின் மூலம்" (Separation Agreement) பிரித்துக் கொள்ளலாம். சச்சரவு ஏற்படும் பட்சத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் சொந்தமான சொத்துகள்; கணவனுக்கு மட்டும் சொந்தமான சொத்துகள் (தனிப்பட்ட உடமைகள் தவிர்த்து), அதே போன்று மனைவிக்கு மட்டும் சொந்தமான சொத்துகள் (தனிப்பட்ட உடமைகள் தவிர்த்து) யாவும் ஒன்றாக்கப்பட்டு இருவருக்கிடையிலும் சமமாகப் பிரிக்கப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் திருமணத்திற்காக பெண்ணின் பெற்றோர்களால் கணவனுக்குக் கொடுக்கப்படும் சீதனம் என்னவாகிறது என்ற கேள்வி எழுகிறது. இது கனடா குடும்பச் சட்டத்தின் கீழ் ஆராயப்படும் வேளையில் சீதனப் பணமாகக் கணவனுக்குக் கொடுக்கப்பட்டு கணவன் அப்பணத்தைச் செலவு செய்திருந்தால் அப்பணத்தை விவாகரத்து வேளையில் மனைவி மீளத் தரும்படி கோர முடியாது. ஆனால் சீதனப் பணம் மூலம் சொத்துகள் வாங்கப்பட்டிருந்தால் முன்பு கூறியது போல் அந்தச் சொத்து இருவருக்குமிடையில் சரிபாதியாகப் பிரிக்கப்பட வேண்டும். கணவனுக்கும் அதில் பங்குண்டு என்பதை இங்கு அவதானிக்க வேண்டும்.

மாறாக ஒரு வீடு சீதனமாகக் கொடுக்கப்பட்டால் அந்த வீட்டில் சீதனம் பெற்ற பெண்ணும் அவளது கணவனும் சேர்ந்து குடும்பமாக வாழாது தமக்குச் சொந்தமான வேறு வீட்டில் அவ்வாறு வாழ்ந்து வந்தால் சீதனமாகக் கொடுக்கப்பட்ட வீடு குடும்ப வீடாக (Matrimonial Home) அமையாது. ஆகவே சீதனமாகக் கொடுக்கப்பட்ட வீட்டில் விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் தவிர்ந்து கணவன் உரிமை கோரி பங்கு கேட்க முடியாது. சீதனமாகக் கொடுக்கப்பட்ட வீட்டைத் திருத்துவதற்காக கணவன் பணம் செலவு செய்திருந்தால் அல்லது அந்த வீட்டின் ஈடு பணம் கட்டுவதற்கு கணவன் பணம் பங்கீடு செய்திருந்தால் இது விதிவிலக்கான சந்தர்ப்பமாகக் கருதப்பட்டு அந்த வீட்டில் கணவன் உரிமை கோரலாம். இது மனைவிக்கும் அவரின் பெற்றோருக்கும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் கொடுக்கும் என்பது திண்ணம்.

திருமணத்திற்கு நிபந்தனையாக சீதனம் வாங்குவது ஆண் வர்க்கத்தை தரக்குறைவாக்குவது, ஒரு சமூகச் சீர்கேடு; பெண்மையை மனிதத்துவமற்றதாக்கல் (Dehumanise) என்பதை இன்று நாம் உணர்ந்தும் ஆண்களின் பெற்றோர்கள் பெண்களின் பெற்றோர், சகோதரர்களிடம் சீதன நிர்ப்பந்தம் செய்வதும் அதற்கு ஆண்களும் ஊக்கமளிப்பதும் கவலைக்குரியது. அப்பேர்ப்பட்ட ஆண்களும் அவர்களது பெற்றோரும் தங்களைத் தாழ்த்திக் கொள்கிறார்கள்; தங்களைத் தாமே மனிதத்துவத்திலிருந்து பிரித்துக் கொள்கிறார்கள். பெண்களும் பெண்களின் பெற்றோர்களும் தங்களை மனிதத்துவத்திலிருந்து எவரும் மாற்றுவிப்பதை அனுமதிக்கக் கூடாது.

எங்கள் ஆரோக்கியம் எங்கள் கைகளில்
Brush, Floss + Regular check up



டாக்டர் செ. யோகேஸ்வரன்

வட அமெரிக்காவில் இளம் பிள்ளைகள் வயதிற்கும் அதிகமாக நிறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். Over weight, obesity தற்போது பெருகி வரும் சுகாதாரத் தலையிடி. அரசாங்கங்களுக்குப் பெரிய பணச் செலவை ஏற்படுத்தப் போகிறது.

குழந்தைகள் 'கொழு கொழு' என்று இருந்தால் பார்க்க அழகுதான். ஆனால் அவர்கள் இளம் பிராயத்தை அடையும் போது தேகாரோக்கியம் பாதிப்படையாமல் இருக்க தகுந்த நிறையுள்ளவர்களாக மாற வேண்டும். இல்லாவிடில் பிற்காலத்தில் நீரிழிவு - Diabetes
இரத்தக் கொதிப்பு - High Blood Pressure
இருதய நோய் - Heart Disease என்பவற்றால் பாதிப்படைய வாய்ப்புள்ளது என்கிறது புள்ளி விபரம்.

இங்கு உணவிற்கு பஞ்சமே இல்லை. எது, எப்போது வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். கட்டுப்பாடில்லாமல் உணவை உட்கொண்டு உப்பி பெருப்பதனால் என்ன பயன். மேற்குறிப்பிட்ட நோய்களினால் எமது இளம் சமுதாயம் பாதிக்கப்பட்டு, நோய் வாய்ப்பட்ட, தேகாரோக்கியம் குன்றிய ஒரு சமுதாயமாக வாழுவதனால் நமக்கென்ன பயன்? நாட்டுக்கு என்ன பயன்? இந்த நிலை மாற யார் பொறுப்பு?

நாமும் எமது ஆரோக்கியத்தை நிர்ணயிக்க வேண்டும். பொறுப்பேற்க வேண்டும். ஆரோக்கியமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

McDonalds ஐ கண்டால் என் பிள்ளை Humburger வாங்காமல் வரமாட்டான்". McDonalds மட்டுமல்ல எந்த Fast Food உம் ஆரோக்கியமானதல்ல. இப்படியான உணவுகளை நாங்கள் குறைவாகவே உண்ண வேண்டும். முடியுமானால் முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

Fast food, புகைத்தல், மதுபானம், அதிகளவு மாமிசம். 'மாமிசம் இல்லாவிட்டால் இறங்காது. சைவச் சாப்பாடு எப்படித்தான் சாப்பிடுகிறார்களோ' என்று கூறுபவர்களும் ஆச்சரியப்படுபவர்களும் எம்மிடையில் இல்லாமல் இல்லை. இவர்கள் தங்கள் மனக் கட்டுப்பாட்டை ஒரு முறை பரிசீலனை செய்ய வேண்டும்.

"இருப்பதோ கொஞ்சக்காலம். இருக்கும் மட்டும் அனுபவிப்போம்" என்று கூறிக் கொண்டு, நாவின் ருசியை கட்டுப்படுத்த முடியாமல் மனம் போன போக்கில் உண்டு களித்து இறுதியில் மேற்குறிப்பிட்ட நோய்களினால் பீடிக்கப்பட்டு, வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் செத்துக்கொண்டே வாழ்பவர்கள் பலர். அவர்களோடு எல்லோரும் கூட்டுச் சேரத் தேவையில்லை.

இன்னொரு முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். உடற்பயிற்சி: 'இலங்கையில் வாழ்ந்த போது ஒரு நோயுமில்லை. இங்கு வந்து தான் எல்லாம். அங்கு என்ன உடற்பயிற்சி செய்தோம்' என அங்கலாய்க்கிறவர்களும் இருக்கிறார்கள். அங்கு எங்கு சென்றாலும் நடப்பது அல்லது துவிச்சக்கர வண்டியை மிதித்துக்கொண்டு போவது. இங்கு மோட்டார்; எதற்கும் வாகனம், படிகளால் இறங்குவதில்லை Elevators. உடம்பு எப்படி பயிற்சி பெறும்!

பல் வைத்தியர் பற்களின் ஆரோக்கியம் பற்றி எழுதாமல் தேகாரோக்கியம் பற்றி எழுதுகிறாரே என்று எண்ணத் தோன்றுகிறதா? ஆரோக்கியம் என்பது பொதுவான ஒன்று தானே!

* நீரிழிவு உள்ளவர் முரசு வியாதியால் பாதிக்கப்படுகிறார்.

* முரசு வியாதியுடைய கர்ப்பிணிகளுக்கு குறைந்த மாதத்தில் சிசு பிறக்க வாய்ப்புண்டு.

* முரசு வியாதியுடையவர்களுக்கு இருதய நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

* இரத்தக் கொதிப்பு மருந்து எடுப்பவர்களுக்கு முரசு வியாதி ஏற்படலாம்.

பற்களின் ஆரோக்கியத்திற்கும் தேகாரோக்கியத்திற்கும் நாங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.

Brush, Floss, Regular check up - இதுவே பற்களின் ஆரோக்கியத்திற்கு தாரக மந்திரம். இவற்றைச் செய்வது ஒரு மனக்கட்டுப்பாடு. அதைத் தொடரும் செயல்பாடு.

* என் (பல்) ஆரோக்கியத்திற்கு நானே பொறுப்பு....

* Brush, Floss, Regular check up

You may have heard lots of confusing things about braces. But wearing them doesn't have to be a big deal. Here are some straight answers to some common questions.

1. When should treatment start?
The best time to start treatment depends on your problem. Majority (90%) at about 10 years of age. But small amounts of problems needs to start little early (eg.Cross bites). But don't worry even if treatment doesn't start early your problem most often can still be corrected.

2. What's involved in treatment?
During the treatment, you will most likely wear braces, wires and elastic. You may also have other appliances, such as headgear, bionator. All of this put pressure on your Jaws and teeth to guide them into the right place. Treatment doesn't work overnight. Most people who have orthodontic treatment thinks the results are worth it.

3. How long do I have to wear braces?
On average about 2 years. A lot depends on you. The better you take care of your teeth and braces, the sooner you will be able to get your braces off.

4. Can't I just get a retainer?
Retainers don't work the same way braces do. Retainers are best for holding your teeth in place once your braces come off.

5. Do braces hurt?
Your teeth might be a little sore after your braces are adjusted. But most of the time, you probably won't even notice the braces are there.

6. Will I have to wear headgear?
Not everyone has to wear headgear. But even if you do, you will probably only need to wear it at home and while you are sleeping.

7. Do I have to get teeth pulled?
Only if it will help your teeth and jaws fit together better. But don't worry; If you do need teeth removed, the spaces will be closed. No one will even notice. You may also need to have your wisdom teeth removed. Removing the teeth not going to affect your health or functions. It is done uneventfully, with minimum discomfort. Nowadays even put you sleep with medication and done.

8. Whether braces can be removed for a function for a day or two. Braces are glued to the teeth until the treatment is done. If removed teeth can move opposite direction that delayed overall treatment time. Can damage the outer coating of the teeth.

9. Can save the cost or money if started the treatment in Sri Lanka or India?
Probably no.. Cost of the appliance is very minimum when compare the labour cost in western world, remember average duration of the treatment means approximately 24-25 visits. 1 or 2 visit doesn't reduce the cost significantly. Braces size and design may not compatible what available or used here. But if the considerable amount of result is achieved, only to finish the treatment can be done if come with the proper referring letter and records.

10. Is there is any invisible braces available?
By wearing Ceramic or Plastic brackets can reducing the prominence of the braces, but it breaks easily therefore preferable for caring or responsible adults.



Dr. M. Illango

Orthodontics

Art and Science of making beautiful Smile.

Get the Facts about Bracesa

Invisalgn may be used for minor correction only, Invisalgn are clear plastic trays or plates, but expensive too.

11. How much it will cost?
On average 3500-4500, in Toronto and surrounding area.

12. What are the benefits of orthodontic treatment?
1. You will have a beautiful smile
2. With better look, you may have more Self-Confidence
3. Your teeth will be easier the take care of.
You will be less likely to have tooth decay, gum disease or Jaw problems.
4. Your teeth will be less likely to chip or break.
5. You will have a better ability to chew

Your Dentist should be able to clarify if you have detail question about these facts. Also from our office staff.

கனடாவில் தற்போது நடைமுறையிலுள்ள தடுப்பூசிகள்



டாக்டர் விக்டர் ஜே. பிகராடோ

இன்று கனடாவில் பிறக்கும் பிள்ளைகளுக்கும், இலங்கை போன்ற வேறு நாடுகளிலிருந்து கனடாவிற்குக் குடியேற வரும் பிள்ளைகளுக்கும், இங்கே வாழ்ந்து வரும் பெரியவர்களுக்கும், கிருமிகளினால் ஏற்படக்கூடிய நோய்கள் பரவுவதையும் தாக்குவதையும் தடுப்பதற்காகப் பல தடுப்பூசிகள் கிரமமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்பதைக் கனடிய அரசின் சுகாதார அமைச்சு வலியுறுத்தி வருகின்றது. வந்த பின் தீர்ப்பதை விட வருமுன் காப்பது நல்லது என்ற கருத்தினை அடிப்படையாக வைத்தே இந்தத் தடுப்பு மருந்துத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதன் பலாபலனை நாங்கள் அட்டவணைப்படுத்திக் காட்ட முடியும்.

கனடாவில் காணப்பட்ட நோய்கள்

நோய்	தடுப்பு மருந்து வருமுன் கனடாவில் நோயாளிகளின் எண்ணிக்கை	2001 ஆண்டில் நோயாளிகளின் எண்ணிக்கை
போலியோ (Polio)	20,000	0
தொண்டைக்கரப்பான் (Diphtheria)	9,000	0
ஜேர்மன் சின்னமுத்து (Rubella)	69,000	23
கூகைக்கட்டு (Mumps)	52,000	73
இன்புளூவென்சா B (H.Influenza B)	2,000	41
குக்கல் (Whooping cough)	25,000	2,477
சின்னமுத்து (Measles)	300,000	33

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட சில தடுப்பூசி மருந்துகள் பாவனையிலுள்ள போதிலும் அரச தடுப்பு மருந்து உதவித் திட்டத்தின் கீழ் அமையாத காரணத்தினால் அவ்வூசி மருந்துகளைத் தங்களுக்கோ, அல்லது தங்கள் பிள்ளைகளுக்கோ ஏற்றிக் கொள்ள விரும்புபவர்கள் அதற்கான செலவினைப் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. எனவே பொதுவாகத் தற்போது நடைமுறையிலுள்ள தடுப்பு மருந்துகளைப் பற்றிய விபரங்களை உங்களுடன் பரிமாறிக் கொள்வதன் மூலம் யார்யாருக்கு எப்பெப்போ இம் மருந்துகளை ஏற்றிக் கொள்வது என்பதை நீங்கள் தீர்மானிக்க உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

முதலில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும், இதுவரை தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்படாத 7 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குமான தடுப்பூசி மருந்துத் திட்டத்தைப் பார்ப்போம்.

வயது — தடுப்பு ஊசி

2 மாதம் - ஐங்கூட்டு - *செங்கண்மாரி, *நிமோனியா, *மூளைக்காய்ச்சல்
4 மாதம் - ஐங்கூட்டு - *செங்கண்மாரி, *நிமோனியா, *மூளைக்காய்ச்சல
6 மாதம் - ஐங்கூட்டு - *செங்கண்மாரி, *நிமோனியா, *மூளைக்காய்ச்சல
12 மாதம் - மூவகை (கூகைக்கட்டு, சின்னமுத்து, ஜேர்மன் சின்னமுத்து) *பொக்கிளிப்பான்
18 மாதம் - நாற்கூட்டு
4 - 6 வயது - முக்கூட்டு + மூவகை
14 - 16 வயது - இரு கூட்டு அல்லது முக்கூட்டு
10 வருடங்களுக்கு ஒருமுறை சீவிய காலம் வரை - இரு கூட்டு

* இந்த அடையாளமிடப்பட்டவை அரச திட்டத்துக்கு அமைந்தவையல்ல. உங்கள் விருப்பத்திற்கேற்ப சொந்தச் செலவில் போடப்பட வேண்டியவை.

ஒரு வயது முதல் 6 வயது வரையுள்ள இதுவரை தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்படாத சிறுவர்களுக்கும் ஏறத்தாழ இதே மாத இடைவெளிகளில் தடுப்பூசிகள் கொடுக்கப்படும். ஆனால் நிமோனியா, மூளைக்காய்ச்சல் தடுப்பூசிகள் 3 முறைகளுக்குப் பதிலாக ஒரு முறை மட்டும் ஏற்றப்படும்.

7 வயதுக்கு மேற்பட்ட இதுவரை தடுப்பூசிகள் ஏற்றப்படாதவர்களுக்கு

கிரமம்
தடுப்பு ஊசி
முதல் முறை - நாற்கூட்டு அல்லது முக்கூட்டு + மூவகை *பொக்கிளிப்பான், *நிமோனியா, *மூளைக்காய்ச்சல்
2 மாதத்தின் பின் - நாற்கூட்டு அல்லது முக்கூட்டு + மூவகை
6 - 12 மாதத்தின் பின் - நாற்கூட்டு அல்லது முக்கூட்டு
10 வருடங்களுக்கு ஒருமுறை - இருகூட்டு

இங்கு குறிப்பிட்டுள்ள தடுப்பூசி மருந்துகள் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்:

ஐங்கூட்டு (Pentacel) - தடுப்பூசி மருந்து என்பது தொண்டைக்கரப்பான், குக்கல், ஏற்பு, போலியோ, இன்புளூவென்சா B ஆகிய ஐந்து நோய்களுக்கெதிராகக் கொடுக்கப்படும் மருந்து. இது ஒன்ராறியோ மாகாணத்தின் ஒவ்வொரு பெரும்பாகத்தின் சுகாதாரப் பகுதியின் பணிப்புகளுக்கு ஏற்ற வகையில் இதன் தேவை சிறிதளவு வேறுபட்டாலும் கூட அனேகமாக ஒன்ராறியோவில் பாடசாலைகளுக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட நாள் கவனிப்பு - டே-கெயார் (Cay care) களுக்குப் போகும் பிள்ளைகள் எல்லோரும் இத் தடுப்பு மருந்துகளைப் பெற்றிருக்க வேண்டும்.

இதிலே இன்புளூவென்சாவிற்குரிய மருந்து தவிர்ந்து நாற்கூட்டு

(எதிர்ப்பக்கம் வருக)

(Quadracel) மருந்தாகும். இதிலே போலியோவிற்கான மருந்தும் தவிர்ந்திருந்தால் அது முக்கூட்டு (Triple Tdp) எனப்படும். அதிலே குக்கலுக்குரிய மருந்தும் தவிர்ந்திருந்தால் அது இருகூட்டு (Td) எனப்படும்.

மூவகை (MMR) எனப்படும் தடுப்பு மருந்து சின்னமுத்து, கூகைக்கட்டு, ஜேர்மன் சின்னமுத்து ஆகிய 3 நோய்களுக்கும் எதிராகக் கொடுக்கப்படும் ஊசி மருந்தாகும்.

இந்தத் தடுப்பு மருந்துகளினால் என்னென்ன நோய்களிலிருந்து பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்கிறோம் என்பதைப் பற்றிச் சற்று ஆராய்வோம். குக்கல் என்பது இருமும் போது அல்லது தும்மும் போது வெளியேறும் திரவத் துகள்களிலுள்ள கிருமிகள் மூலம் பரவும் ஒரு நோயாகும். இக் கிருமிகளினால் குக்கல் நோய் ஏற்படுவதோடு அதன் விளைவு நோய்களான நிமோனியா, வலிப்பு, மூளைப் பாதிப்பு என்பவற்றாடு மரணமும் ஏற்படலாம்.
தொண்டைக்கரப்பான் எனப்படுவது மூக்கு, தொண்டை, தோல் என்பவற்றைத் தாக்கும் ஒரு நோயாகும். இதன் விளைவுகளாக மூச்சுத் திணறல், இருதய செயலிழப்பு, காய்ச்சல் தொண்டை நோ, நரம்புகளில் தாக்கம் என்பன ஏற்படலாம். இந் நோய் ஏற்படுபவர்களில் 10 பேருக்கு ஒருவர் எள்ற அளவில் மரணமடைய வேண்டி ஏற்படும். இதுவும் தும்மல், இருமல் மூலம் பரவும் தொற்று நோயாகும்.
ஏற்பு என்பது பொதுவாகப் புழுதியில் காணப்படும் ஒரு கிருமியினால் பரவும் ஒரு நோயாகும். ஏற்பு ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றும் நோயல்ல. சிறு காயங்கள் அல்லது புண்களூடாக ஒருவருக்குள் வந்து சேரலாம். அக்கிருமி அதிலிருந்து ஒரு நஞ்சினைத் தோற்றுவிக்கும். இந்த நஞ்சு தசைகளை இறுக வைக்கும். சுவாசத்தொகுதியோடு சம்பந்தப்பட்ட தசைகள் இறுக்கமடையும் போது, மூச்சுத் திணறி மரணம் ஏற்படலாம். இந்நோயினால் பாதிக்கப்படுபவர்களில் 10 பேருக்கு 2 பேர் என்ற அளவில் மரணமடைய வேண்டி வரலாம்.
போலியோ நோய்க் கிருமி நீர் அல்லது உணவு மூலம் பரவும் ஒரு வைரசாகும். இது நரம்புகளையும் அதன் மூலம் செயலாற்றும் தசைகளையும் செயலிழக்கப் பண்ணுவதனால் நோயை உருவாக்குகிறது. இதுவும் சுவாசத்தொகுதி, சமிபாட்டுத் தொகுதித் தசைகளைப் பாதிக்கும் போது மரணம் ஏற்படலாம். இன்புளூவென்சா B. இது பெயருக்கேற்ப புளூ (Flu) எனக் கூறப்படும் இன்புளூவென்சா காய்ச்சலை ஏற்படுத்துவதென எண்ணிவிட வேண்டாம். மாறாக இது மூளைக் காய்ச்சலை ஏற்படுத்தி அதன் விளைவாக மூளை வளர்ச்சியில் பாதிப்பு, செவிட்டுத் தன்மை, குருட்டுத்தன்மை, நிமோனியா விழுங்குவதில் அல்லது சுவாசிப்பதில் சிக்கல் போன்றவற்றை ஏற்படுத்தலாம். இது 20 பேருக்கு ஒருவர் என்ற அளவில் மரணத்தை ஏற்படுத்தலாம்.

தடுப்பு ஊசிகள் குக்கலுக்கு 85%, தொண்டைக்கரப்பானுக்கு 85%, ஏற்பு வலிக்கு 95%, போலியோவுக்கு 99%, இன்புளூவென்சாவுக்கு 90% என்ற அளவில் எதிர்ப்புச் சக்தியைத் தரவல்லன. இந்த ஊசி போடப்படுமிடத்தில் சிறிது வலி, வீக்கம் என்பவற்றைத் தோற்றுவிக்கலாம். சிலருக்குக் காய்ச்சல் தோல் அழற்சி (Rash), பசியின்மை, சோர்வு என்பவற்றைத் தற்காலிகமாக ஓரிரு நாட்களுக்குத் தோற்றுவிக்கலாம். எந்தத் தடுப்பூசி மருந்தினாலாவது காய்ச்சல் ஏற்பட்டால் தைலனோல் (Tylenol) அல்லது அசற்றமைனோபின் (Acetaminophen) போன்ற மருந்துகள் கொடுக்கலாம். ஆனால் அஸ்பிரின் (Asprin) கொடுக்கக் கூடாது. இத் தடுப்பூசி மிக மிக அரிதாக மூளைச்சவ்வு அழற்சியினை (Encephalopathy) ஏற்படுத்தலாம். தடுப்பூசி மருந்தினைத் தொடர்ந்து 40 C அல்லது 104 F இற்கு அதிகமான காய்ச்சல், 3 மணித்தியாலங்களுக்கு மேலான வீரிட்ட அழுகை, மயக்கம், உடல் வெளிறல், கடியுடன் கூடிய தோல் அழற்சி, முகம் அல்லது உதடு வீக்கம், சுவாசிப்பதில் கஷ்டம் போன்ற தாக்கங்கள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற வேண்டும். உயர் வெப்பநிலையோடு காய்ச்சல் இருப்பவர்களுக்கும், இம் மருந்துகளுக்கு ஒவ்வாமை (Allergy) உடையவர்களுக்கும் இத் தடுப்பு மருந்துகள் கொடுக்கக் கூடாது.

சின்னமுத்து, கூகைக்கட்டு, ஜேர்மன் சின்னமுத்துக்கெதிரான மூவகைத் தடுப்பூசி (MMR) பிள்ளையின் முதலாவது பிறந்தநாளுக்குப் பிறகு கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சின்னமுத்து இருமல், தும்மல் மூலம் பரவும் ஒரு வைரசு நோயாகும். இதன் விளைவாகக் காய்ச்சல், தடிமல், தோல் அழற்சி, நிமோனியா போன்றவை ஏற்படலாம். அதனைத் தொடர்ந்து வலிப்பு, மூளைப் பாதிப்பு, செவிட்டுத்தன்மை போன்றவற்றை ஏற்படுத்தலாம். 1000 இற்கு ஒருவர் என்ற அளவில் மரணமுமேற்படலாம். கூகைக்கட்டும் இது போல இருமல், தும்மல், முன்னின்று பேசுதல் மூலம் பரவும் ஒரு வைரசு நோயாகும். இதனால் தலையிடி, காய்ச்சலோடு கன்ன உமிழ்நீர்ச் சுரப்பியில் வலியுடன் கூடிய வீக்கமும் ஏற்படும். 200 இற்கு ஒருவர் என்ற அளவில் இதனால் மூளைக்காய்ச்சல் தோன்றலாம். ஆனால் இது பொதுவாக நிரந்தரப் பாதிப்பை ஏற்படுத்தாமல் குணமடைந்து விடும். சிலவேளை செவிட்டுத் தன்மை இதனால் ஏற்படலாம். பாதிக்கப்படும் ஆண்களில் 4 பேருக்கு ஒருவரின் விதையில் பாதிப்பு ஏற்படலாம். அது போல பெண்களுக்கு 20 பேருக்கு ஒருவரின் சூலகத்தில் பாதிப்பு ஏற்படலாம். பொதுவாக இதனால் நிரந்தரப் பாதிப்பு ஏற்படாவிட்டாலும் சிலவேளைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதன் விளைவாக மலட்டுத் தன்மை ஏற்பட வாய்ப்புண்டு.

ஜேர்மன் சின்னமுத்து. சிறியவர்களை விட பெரியவர்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நோய். இதனால் காய்ச்சல், தொண்டை நோ, கழுத்தில் நெறி போடுதல், முகத்தில் தோல் அழற்சி போன்றவை ஏற்படலாம். இதுவும் இருமும் போது, தும்மும் போது அல்லது பேசும் போது திரவத்துகள் மூலம் பரவக்கூடிய ஒரு நோய். இளம் பெண்களில் பலருக்கு இது மூட்டுவலி அல்லது மூட்டுவாதத்தை (Arthritis) ஏற்படுத்தலாம். கர்ப்பமான பெண்களுக்கு இந்நோய் தொற்றினால் அதன் விளைவாக வயிற்றிலுள்ள சிசுவுக்குக் குருட்டுத்தன்மை, செவிட்டுத் தன்மை, மூளைப்பாதிப்பு, இருதய பாதிப்பு என்பன ஏற்படலாம்.

(மறுபக்கம் வருக)

மூவகை (MMR) தடுப்பு மருந்து சின்னமுத்துக்கு 99%, கூகைக்கட்டுக்கு 95%, ஜேர்மன் சின்னமுத்துக்கு 98% என்ற அளவில் எதிர்ப்புச் சக்தியை வழங்குகின்றது. இத் தடுப்பு மருந்தின் பக்க விளைவாக மிகச் சிலருக்குத் தற்காலிக தோல் அழற்சி, காய்ச்சல், வலிப்பு, மூட்டுவலி போன்றவை ஏற்படலாம். 65,000 பேருக்கு ஒருவர் என்றளவில் தற்காலிக மூளைக் காய்ச்சல் ஏற்படலாம். ஆனால் இவை நிரந்தரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை. இவையெல்லாம் மிக அரிதாகத் தடுப்பூசி ஏற்றி 1 - 2 நாட்களிலிருந்து 2 - 3 வாரங்கள் வரை ஏற்படலாம். கர்ப்பமான பெண்களுக்கு இத் தடுப்பு மருந்து ஏற்றக்கூடாது. கர்ப்பமடைய விரும்பும் பெண்கள் இம் மருந்து ஏற்றி 1 - 3 மாதம் வரை பொறுத்திருந்த பின் கருத்தரிப்பதே நல்லது.

இப்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளைப் பற்றிப் பார்ப்போம்.

நிமோனியத் தடுப்பு மருந்து - பிரெவ்னார் (Prevnar) Pneumococcal vaccine)

நிமோனியா - உணவு, பானம், தும்மல், இருமல், விளையாட்டுப் பொருட்கள், தொடுகை என்பவற்றால் பரவும் இந் நோய் காது அழற்சி (Ear infection), குருதி அழற்சி (Blood infection), நிமோனியா, மூளைக் காய்ச்சல் போன்றவற்றை ஏற்படுத்தக் கூடியது. 5 வயதுக்குட்பட்ட குறிப்பாக 2 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அதிகமாகவும் பாரதூரமாகவும் பாதிக்கக்கூடிய ஒன்று. இக் கிருமிகள் விரைவாகத் தற்போது நடைமுறையிலிருக்கும் (Antibiotics) மருந்துகளுக்கு எதிர்ப்புத் தன்மையை உருவாக்கி வருவதனால், இந் நோய் 97% வராமல் தடுக்கும் தடுப்பூசி முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது. இது வயது குறைந்த குழந்தைகள், வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி குன்றிய பிள்ளைகள், நாள் கவனிப்பு (Day care) நிலையங்களுக்குப் போகும் பிள்ளைகள் ஆகியோருக்கு இம் மருந்து மிக உகந்தது.

இம் மருந்தினால் மிக அரிதாகப் பக்க விளைவுகளாக, உடல்வலி,வீக்கம், காய்ச்சல், வாந்திபேதி, தோல் அழற்சி போன்றவை தற்காலிகமாக் ஏற்படலாம். இம் மருந்து ஒரு முறை ஏற்றிக் கொள்ள $100 டாலர்கள் செலவிட வேண்டி வரும்.

மூளைக் காய்ச்சல் தடுப்பூசி (Meningitis vaccine)

இது சாதாரண, ஆரோக்கியமானவர்களில் மூக்கு, தொண்டை என்பவற்றில் காணப்படக்கூடிய கிருமி ஒன்றினால் பரவும் நோய். இது மூளைக் காய்ச்சல், குருதி அழற்சி போன்றவற்றை ஏற்படுத்தக் கூடியது. 5 வயதுக்குட்பட்ட குறிப்பாக 1 வயதுக்குட்பட்ட சிறுவர்களும், 13 - 19 வயதுக்குட்பட்ட வாலிப வயதுடையவர்களும் இந் நோயினால் அதிகம் பாதிக்கப்படுவது அவதானிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த வயதெல்லைகளுக்கு உட்பட்டவர்களுக்கு மண்ணீரல் (Spleen) அகற்றப்பட்டவர்களுக்கும் இம் மருந்து உகந்தது.

சில மருந்துகள் அல்லது நோய்கள் காரணமாக நோய் எதிர்ப்புச் சக்தி குன்றியவர்களுக்கும், கர்ப்பவதிகளுக்கும் பாலூட்டுபவர்களுக்கும் இம் மருந்து கொடுக்கக் கூடாது. இம் மருந்தின் பக்கவிளைவுகள் மிக அரிதானவை. ஊசி ஏற்றிய இடத்தில் சிறிது வலி, வீக்கம் என்பன ஏற்படலாம். சிலருக்குத் தலையிடி, கைகால் உளைவு, பசியின்மை, பேதி, காய்ச்சல், சோர்வு, வாந்தி, நித்திரையின்மை என்பன தற்காலிகமாக ஏற்படலாம். இம் மருந்து ஒருமுறை ஏற்றிக் கொள்ள அண்ணளவாக $120 டாலர்கள் செலவாகும்.

பொக்கிளிப்பான் (Chicken Pox)

இது காற்று மூலம் அல்லது தொடுகை மூலம் இலகுவாகப் பரவக்கூடிய ஒரு நோய், இது பொக்களங்களை ஏற்படுத்துவதோடு அதைத் தொடர்ந்து நிமோனியா, மூளைக் காய்ச்சல் போன்ற பாரிய தாக்கங்களையும் ஏற்படுத்தக்கூடியது. இது சிறுவர்களை விடப் பெரியவர்களைப் பாரிய அளவில் பாதிக்கும் ஒரு நோய். ஒரு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் இதற்கான தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்ளலாம். இது 90 - 95% எதிர்ப்புச் சக்தியினைக் கொடுக்கிறது. இதுவும் நோய் எதிர்ப்புச் சக்தி குன்றியவர்களுக்கும், கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டுபவர்களுக்கும் கொடுக்கப்படக்கூடாது. இதனைப் பெறும் பெண்கள் தொடர்ந்து வரும் 3 மாதங்களுக்குள் கருத்தரிக்காமல் இருப்பது நல்லது.

இதன் பக்கவிளைவாக ஊசி ஏற்றப்படும் இடத்தில் சிறிதளவு வலி, வீக்கம் என்பன ஏற்படலாம். காய்ச்சல் பொக்கிளிப்பான் நோயில் வருவது போன்ற ஓரிரு தோல் அழற்சிப் புண்கள் போன்றவையும் ஏற்படலாம். இப் புண்களிலிருந்து சக்தி குன்றிய வைரசுக்கள் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதனாலும், இவ் வைரசுக்கு நோய் எதிர்ப்புத் தன்மை குன்றியவர்களைப் பாதிக்கக் கூடிய சந்தர்ப்பமிருப்பதாலும், இவ்வாறான புண்கள் ஏற்பட்டவர்கள், பாதிக்கப்படக்கூடியவர்களைக் குறிப்பாக எயிட்ஸ் (AIDS), புற்றுநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், புதிதாகப் பிறந்த குழந்தைகள், கர்ப்பவதிகள் போன்றவர்களை அணுகாமலிருப்பது நல்லது. இந்த மருந்து ஏற்றிக் கொள்ள ஒரு முறைக்கு ஏறத்தாழ $80 டாலர்கள் செலவாகும்.

செங்கண்மாரி (Hepatitis B)

இது உடல் நீர்த் திரவங்கள், ஊசிகள், நெருக்கமான தொடுகை போன்றவற்றால் பரவக்கூடிய நோயாகும். இதன் விளைவாக ஈரல் செயலிழப்புடன் கூடிய உருமாற்றம், ஈரல் புற்றுநோய் என்பன ஏற்படலாம். ஒன்ராறியோ மாகாணத்தில் இது பாடசாலைகளில் 7ம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. இது இலங்கை போன்ற இந் நோய் அதிகம் காணப்படும் நாடுகளில் இருந்து வந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 7 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு இலவசமாக ஏற்றிக் கொள்ள அரசு உதவி செய்கிறது.

இவற்றைவிட புளூ தடுப்பூசி (Flu vaccine) வயதானவர்களுக்கான நிமோனியா தடுப்பூசி என்பன இங்கு நடைமுறையிலுள்ளன. இவற்றை விட இங்கிருந்து இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்குப் பிரயாணம் செய்பவர்கள் ஏற்றிக் கொள்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகளும் நடைமுறையில் உள்ளன. இவ்வாறான பிரயாணங்களுக்கு முன் ஏற்றிக் கொள்ள வேண்டிய தடுப்பு மருந்துகள் பற்றிய விபரங்களை 2003ம் ஆண்டு மார்கழி மாதம் "வன்னி விழாவில்" வெளியிடப்பட்ட "கொம்பறை" மலரில் எழுதியுள்ளேன். எனவே தேவைப்படுபவர்கள் அம்மலரில் வெளிவந்த கட்டுரையிலிருந்து விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்



தமிழர்களின் பெயர் வழிமுறையும் அண்மைக்கால மாற்றங்களும்

அருள் எஸ். அருளையா

'பெயர்' என்பதை விட ஒருவருக்கு முக்கியமான ஆள் அடையாளம் வேறொன்றாக இருக்க முடியாது. தனி ஒருவரிலிருந்து தன் சமூகத்தைச் சாரும்போது அச்சமூகங்கள் தங்களுடைய பாரம்பரிய முறைகளுக்கு ஒப்ப பெயர் வைக்கும் முறையைப் பின்பற்றுகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய ஆசிய சமூகங்களில் தொழில் ரீதியான (trade names) பெயர்கள் இருந்துள்ளன. அநேக ஐரோப்பிய நாடுகளில் இவ்வழமை மருவி, பின்னர் அவை குடும்பப் பெயர்களாக மாறியிருக்கின்றன. Goldsmith இனர் Mr. Gold or Mr. Smith என்று மாறியுள்ளனர். இச்சமூகங்களில் இம்முறையான மாற்றங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டு விட்டன.

நெப்போலியனின் பாட்டனினதும் பூட்டனினதும் குடும்பப் பெயர் 'நெப்போலியன்'தான். அதேபோன்றுதான் மாட்டின், மல்ரூனி, கென்னடி, நேரு, காந்தி, விக்கிரமசிங்கா குடும்பத்தினர்களும். காரணம்: அச் சமூகங்கள் குடும்பப் பெயர்வழி முறையில் அமைந்திருப்பதால் ஆகும்.

பரம்பரை பரம்பரையாகத் தமிழர் சமூகம், மற்றும் தென்னிந்தியச் சமூகங்கள் உட்பட பரம்பரைப் பெயர்கள் யாவும் முதலில் சின்னம் அடங்கிய பெயராகவும் (சிங்கம், லிங்கம் போன்றவை), பின்னர் பல குலப்பெயர்கள் (Clan names) கொண்ட சமூகமாகவும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு குலப்பெயர்களுக்குள்ளும் உள்ள மக்கள் யாவரும் அக்குலப் பெயரினைப் பாவிக்கின்றனர். உதாரணமாக, தேவர் குலம் என்றால் அக்குலத்தினைச் சேர்ந்த யாவரும் 'தேவர்'தான். செட்டியார், ஐயர், நாயக்கர் வம்சங்களும் அப்படியேதான்.

ஈழத்தில், முக்கியமாக யாழ்ப்பாண வழக்கத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்தக் குலப்பெயர் பாவனை வம்சாவழியிலிருந்து அற்றுப் போய்விட்டது. அல்லது தனிப் பெயருடன் இணைந்து விட்டது. பிள்ளை என்பது அவ்வாறான ஒரு குலப்பெயர்; கணபதி + பிள்ளை அல்லது பார்வதி + பிள்ளை.

கிராமங்களிலும் சிறு பட்டினங்களிலும் அநேகமான மக்கள் முன்னர் வாழ்ந்தனர். அப்பொழுது ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குத் தெரிந்தவர்கள். ஆகையால், ஒரு பெயர் மட்டும் போதியளவாக இருந்தது. இதனால், சொந்தத் தலைமுறைக்குள் திருமணம் செய்வது தடுக்கப்பட்டது. உதாரணமாக, ஒரு கிரெச்சியன் குடும்பம், இன்னொரு கிரெச்சியன் குடும்பத்தில் திருமணம் செய்வது இலகுவாகத் தடுக்கப்படுகின்றது.

எமது இன்றைய சமுதாயம் முன்னர் போலன்றி, பிற நாடுகளில் குடியேறியவர்களும் தங்கள் தங்கள் தாயகத்தில் வாழுபவர்களும் வெவ்வேறு இடங்களில் வாழுகின்றனர். இதனால் வெளிநாடுகளில் மட்டுமன்றி, தாயகத்திலும் இந்தப் புதிய நூற்றாண்டில் ஒரு குடும்பப் பெயரிணைந்த சமூகப் புனரமைப்பு அத்தியாவசியமாகின்றது.

இவ்வாறான ஒரு தேவை தமிழினம் தவிர்ந்த மற்றும் பல சமூகத்தினருக்கும் உள்ளது. தனிப்பெயர் பாவிக்கும் மலையாள மக்களும், பர்மிய, யவன, எத்தியோப்பிய, சோமாலிய மக்களும் இதில் அடங்குவர்.

தமிழ் நாட்டிலும் கால கெதியில் குலப்பெயர் பாவனை முழுவதுமாகக் கைவிடப்படும் என்பது உறுதி. அப்பொழுது அச் சமூகத்தைச் சேர்ந்தவர் குடும்பப் பெயர் வழியாகவே அடையாளம் காணப்படுவர்.

மேலும், குடும்பப் பெயர் வழி இல்லையென்றால் பின்னர் வரும் சந்ததியினர் தம் வம்சாவழியைத் தெரிந்துகொள்ள முடியாது. காந்தியின் பேரன் காந்தி. ஆனால், காமராஜ் நாடாரின் பேரன் (அப்படியொருவர் இருந்தால்) காமராஜ் என்றிருக்க மாட்டார். குடும்ப வழிப் பெயர் ஒன்றினை ஆரம்பிக்காமல் இருந்து விட்டால், கருணாநிதியின் பேரனும் கருணாநிதியாக இருக்க மாட்டார். பிரபாகரனின் பேரன் பிரபாகரன் என்று குடும்பப் பெயருடன் போகும் பொழுதுதான், ஒரு தொடர்ச்சி தெரியப்படுத்தப்படும்.

இதனால் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும், வெளிநாட்டிலும் சரி தத்தமது தாயகத்திலும் சரி இவ்வழிமுறைகளைச் சிந்தித்துச் செயற்படுவது மிக முக்கியம்.

இன்றைய எமது சமுதாயச் சூழ்நிலை

வெளிநாடுகளில் வேரூன்றியுள்ள தமிழ்க் குடும்பங்கள் இவ்வழியில் விரும்பியோ விரும்பாமலோ ஆரம்பகர்த்தாக்களாக மாறுகின்றனர். எமது பெயர்களை இங்குள்ள வழமை முறைக்கு ஏற்றவாறு அணுகவேண்டியது கட்டாயம். மூன்று தசாப்பதத்துக்கு முன்னர் பிரித்தானியாவில் மாணவராக இருந்தவேளை, "உனது குடும்பப் பெயர் என்ன" என்று ஆசிரியர் கேட்டபோது, என்ன பதில் சொல்வதென்று தெரியாதிருந்தது. இதே நிலைதான் நம்மவர் பலருக்கு இப்பொழுதும் இருக்கின்றது.

இன்று கனடாவில் பலரதும் குடும்ப பெயர்ப் பாவனையில் மிகுந்த குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது தவிர்க்க முடியாததாயிருக்கலாம். எப்பெயர் எமது குடும்பப் பெயராக வம்சாவழி முறையில் வரவேண்டும் என்பதனை தீர்மானித்து நாம் அதனைத் திருத்தி அமைக்க வேண்டும். இதற்கு முக்கியம்: இங்குள்ள பெயர் நடைமுறை பாவனையை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியது.

குடும்பப் பெயர்:

பாரம்பரியமாகத் தொடர்ந்து வைத்திருக்கும் பெயர். ஒரு குழந்தை பிறக்கும் பொழுது அக்குழந்தையின் குடும்பப் பெயர் (மறுபக்கம் வருக)

மாற்றம் ஏற்படாமல் அப்படியே நிர்ணயிக்கப்பட்டு இருக்கும். இதுவே Family name, Surname அல்லது Last name என்று அழைக்கப்படும். இவை **யாவும்** ஒன்றுதான். குடும்பப் பெயரைக் கடைசியாக எழுதுவதால், இது Last name என்றும் அழைக்கப்படும்.

முதற் பெயர் (கொடுக்கப்படும் பெயர்):
ஒரு பிள்ளை பிறந்தவுடன் அப்பிள்ளைக்குக் கொடுக்கப்படும் பெயர் (Given names). அது ஒரு பெயராக இருக்கலாம். அல்லது இரண்டு மூன்று பெயர்களாகவும் இருக்கலாம். இதில் முதலுள்ள பெயர் முதற் பெயர் (First name); மற்றப் பெயர்கள் நடுப்பெயர்கள் (Middle names) ஆகும்.

ஒருவரின் பெயர்
முதற் பெயர் நடுப் பெயர் குடும்பப் பெயர் என்ற முறையில் இருக்கும்.
(First name) (Middle name) (Family name)

அநேகமான பெயர்களில் நடுப்பெயர் இல்லாமல் இருக்கும். ஆனால், முதற் பெயரும் குடும்பப் பெயரும் கட்டாயம்தான்.

முதற் பெயரானது First name அல்லது Given name அல்லது Christian name (ஞானஸ்நானம் எடுக்கும் பெயர்) அல்லது Forename (முன்னுக்குள்ள பெயர்) என்றும் அழைக்கப்படும்.

ஒரு இடத்தில் First name உம் Surname உம் என்பார்கள். இன்னொரு இடத்தில் Given name உம், Family name உம் என்பார்கள். இரண்டினது கருத்தும் ஒன்றேதான்!

வழமையாக, குடும்பப் பெயர் கடைசியாக எழுதப்படும். ஆனால், பத்திரங்கள் வைக்கும் முறை குடும்பப் பெயரின்படி. இதனால் சில இடங்களில் குடும்பப் பெயர் முதல் எழுதப்படும். அப்படியான வேளையில் ஒரு காற் தரிப்பு (Comma ',') ஒன்று அப்பெயருக்குப் பின்னால் போடப்படும். அதன் பின்னர் முதற் பெயர் எழுதப்படும். உதாரணமாக உங்கள் சமூக காப்புறுதி இலக்க அட்டையை (Social Insurance Number) பார்த்தால் அதில் முதற் பெயர் முதலில் இருக்கும். அதேசமயம், சாரதி அனுமதிப் பத்திரத்தில் (Driver's License) குடும்பப் பெயர் முதலில் இருக்கும். உற்றுப் பார்க்கும் பொழுது அந்த ',' தெரியவரும். இதனால் ஒருவரின் பெயரை இரு வழியில் எழுதமுடியும். (BC or C,B). இரண்டும் ஒன்றுதான்.

நண்பர்கள் உறவினர்தான் முதற் பெயரால் (First name) ஒருவரை அழைப்பர். மற்றையோர் பண்புடன் குடும்பப் பெயரால் அழைப்பர் - (Mr or Mrs or Ms. A).

எமது பெயர்ப் பாவனையில் இங்குள்ள சில குழப்பங்கள்
காரணம்: நாங்கள் ஒரு குடும்பப் பெயர் தெளிவாக நடைமுறையில் பாவிக்க முடியாமல் இருப்பது. ஒருவர் தமது கையெழுத்துக்குப் பாவிக்கும் பெயர் குடும்பப் பெயராகும். ஆனால், நாம் கொடுக்கும் குடும்பப் பெயர் ஒன்றாகவிருக்கும். கையெழுத்துப் போடுவது மற்றப் பெயராக இருக்கும்.

ஒருவருடைய பெயர் C என்றும், அவருடைய தந்தை பெயர் B என்றும் இருந்தால், நாம் தாயகத்தில் BC என்று எமது பெயரை எழுதி, அவ்வாறே கையெழுத்தும் வைப்போம். அது எமது வழமையான முறை. இங்கு குடிவரவுத் திணைக்களம் கேட்பது, எமது குடும்பப் பெயரை. ஆனால், நாம் கொடுப்பது எமது தந்தையின் பெயர். இதுதான் இந்தக் குழப்பத்தினை ஆரம்பித்து வைக்கும் முதல் அத்தியாயம்.

உதாரணமாக, A என்ற வம்சத்தில் இருந்து வந்தவரின் பெயர் B. அந்த B யின் மகன் C. இங்குள்ள முறைப்படி B யின் பெயரை BA என்றும் C யின் பெயரை CA என்றும் எழுதப்படும். நாம் அங்கு எழுதுவது AB என்றும் BC என்றுமாகும். இந்த BC யில் 'A' யின் நாமமே இல்லை.

ஆனால், நாம் இங்கு எழுதுவது BC என்று. திணைக்களம் கேட்பது A என்ற குடும்பப் பெயர். ஆனால், எங்களிடம் முற்கூறிய காரணங்களினால், வம்சாவழிக் குடும்பப் பெயர் கைவசம் இல்லை. என்ன செய்வது?

எங்களிடம் இரண்டு பெயர்கள் **உள்ளன.** இங்குள்ள முறையின்படி இரண்டு பெயர்கள் தேவை.

இதனால், நாம் ஒரு பெயரை குடும்பப் பெயராக ஸ்தாபிக்கின்றோம். மற்றப் பெயர் உடனடியாக முதற் பெயராக மாறுகின்றது. இந்த குடும்பப் பெயர்தான் இனிமேல் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து வரும் பெயராகும். எமது தலைமுறையில் மட்டும் இந்த மாற்றத்தைச் (adjustment) செய்தால் போதும். அடுத்த பரம்பரையினருக்குப் பிரச்சனை இல்லாமலிருக்கும்.

எப்பெயரைக் குடும்பப் பெயராக்குவது?
விரும்பிய பெயரை (B அல்லது C) எடுத்துக்கொள்ள முடியும். கருத்துள்ள சிறிய பெயராகவிருந்தால் மிகவும் வசதியாக இருக்கும். அநேகமாக கையெழுத்துப் போடும் பெயரை குடும்பப் பெயராக வைப்பது முறையாகவிருக்கும். இன்னொரு வழியாகப் பார்க்கையில், குடும்பப் பெயரின்படி கணவன் மனைவி Mr & Mrs என்று எப்படிப் போக விருப்பமோ அதன்படி நிலைநிறுத்துவது வசதியாக இருக்கும். மனைவி Mrs. C என்றால் கணவரும் Mr. C என்றுதான் முறைப்படி போக வேண்டும்.


இங்குள்ள அநேகமான தமிழ்க் குடும்பங்களின் பெயர்களைப் பார்க்கும்பொழுது, மனைவியும் பிள்ளைகளும் Mrs. C அல்லது Ms. C என்றும், தந்தை Mr. B என்றும் போக வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இதனைச் சட்டப்படி பெயர் மாற்றம் செய்வதன் மூலம் நிவர்த்தி செய்ய முடியும். (மேற்கூறிய உதாரணத்தில் A என்பதை ஆறுமுகம், P என்பதை பாலன், C என்பதை செல்லையா என்று தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.)

எப்படிப் பெயர் வைக்க வேண்டும் என்பது நன்கு ஆலோசித்துச் செய்ய வேண்டிய செயல். இது பற்றி நன்கு விபரம் தெரிந்தவர்களுடன் ஆலோசிப்பது அவசியம். ஏனெனில் வம்சாவழிக்கு நல்லதொரு அத்திவாரப் பெயர் போடுவதைத் தவிர முக்கியமானது வேறொன்றாக இருக்க முடியாது.

அத்துடன், குடும்பப் பெயர் ஒன்றினை வேர் ஊன்ற வைக்கின்றீர்கள். அதில் கவனம் செலுத்த வேண்டியது மிக முக்கிய கடமையாகும்.

முதலாளித்துவம்

பல இன்னல்கள் மத்தியிலும் விளங்கும் சக்தி



அகஸ்தின் ஜெயநாதன்

இவ்வுலகில், கடந்த மூன்று நூற்றாண்டுகளில் வளர்ந்து, முன்னேறி, பலமுடன் இன்று ஆழ்ந்து வரும் சக்தி முதலாளித்துவம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. பல நாடுகளில் இயற்கையால் உருவாக்கப்பட்ட சாதனைகளை, உறுப்புப் பண்டங்களாக மாற்றி, மனிதத் திறமைகளை, அபிவிருத்திக்கு உதவக்கூடிய முறையில் பயன்படுத்தி, மனிதக் குலத்தின் முன்னேற்றத்துக்கு வழியைத் திறந்து வைத்தது முதலாளித்துவம் தான். ஆனால் அதன் ஆரம்பத்தில் தொடங்கி, இன்று மட்டும் அதன் கோளாறுகளைப் பற்றி நாம் படித்திருக்கிறோம், அறிந்திருக்கிறோம், ஓரளவு அனுபவித்திருக்கிறோம். நூறாண்டுகளுக்கு முன், கார்ல் மாக்ஸ், முதலாளித்துவத்தின் கெடுதிகளை எதிர்த்து, அதன் வீழ்ச்சி நெருங்கிவிட்டது என்று முழக்கமிட்டார். அதைத் தொடர்ந்து அனேக நாடுகளில் அதை எதிர்க்கும் சக்தியாகப் பொதுவுடமைக் கொள்கை பரவி, அரசாங்கங்களை கைப்பற்றி, முதலாளித்துவத்தை நசுக்க பலவித முறைகளில் முயற்சி எடுத்தது. ஆனால் சென்ற 20 வருடங்களில் பொதுவுடமைக் கொள்கையே தன்னுடைய பலத்தையும் செல்வாக்கையும் இழந்து, சரித்திர வரலாற்றில் மறைந்து போய்க் கொண்டிருக்கும் இயக்கமாக மாறிவிடும் நிலையில் இருக்கிறது.

அதே நேரத்தில் நமது மனதில் எழும்பும் கேள்வி என்னவென்றால் முதலாளித்துவம் இவ்வளவு காலம் வளர்ந்து நீடித்திருப்பதற்கு காரணம் என்ன? முதலாவது, முதலாளித்துவம் மனித சுபாவத்திற்கு பொருந்திய ஒரு சக்தி. மனிதன் எப்போதும் தன்னுடைய வாழ்வில் முன்னேற்றத்தையும், நிறைவேற்றுதலையும் விரும்புகின்றான். தன்னுடைய எதிர்பார்த்தல்களுக்கு வழி காணக்கூடிய வாய்ப்புகள் முதலாளித்துவ முறையில் தான் என பலரும் உணர்கிறார்கள். அதி முக்கியமாக, மனிதன் தனது அடிப்படையாக விரும்பும் சுதந்திரமும், சுயேச்சையான அந்தஸ்தும் முதலாளித்துவ வழிகளை கைப்பிடிக்கும் சமூகத்தில் தான். கடந்த மூன்று நூற்றாண்டுகளில், முதலாளித்துவம் உலகிற்கு கொடுத்த நன்மைகளில் சிலவற்றைப் பற்றி நாம் சிந்திப்பது நல்லது. முக்கியமாக, எல்லா நாடுகளிலும், பல்வேறு கலாசாரங்களிலும் நாம் ஆங்கிலத்தில் அழைக்கும் "Entrepreneur", அதாவது தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி, சமூகத்துக்கு கொடுத்த நன்மை முதலாளித்துவத்திற்கே உரியது. அவர்களை "துணி முயற்சியாளர்" என்று அழைத்தால் அது மிகப் பொருந்தும். அவர்களைப் பற்றி எழுதிய நூல்களிலெல்லாம் அவர்களின் குணாதிசயங்களைப் பற்றியே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றைப் பற்றி நாம் இங்கு குறிப்பிடலாம்.

1. துணிச்சல் நிறைந்த மனப்பான்மை
2. தன்னம்பிக்கை
3. இடையூறுகளை சகிக்கும் வல்லமை
4. விடாமுயற்சி
5. உற்சாகம்
6. தொடங்கிய முயற்சியை நிறைவேற்றி வைக்கும் திறமை.

இக்குணாதிசயங்களைக் கொண்ட சிறந்த மனிதர் தான் முதலில் ஐரோப்பிய நாடுகளிலும் அதன் பின் வடஅமெரிக்காவிலும் தோன்றி முக்கியமாக வர்த்தகத் துறையிலும், கைத்தொழிலிலும் பிரமாண்டமான முன்னேற்றத்தை நிறைவேற்றினார்கள். அவர்களின் ஊக்கத்தினால் விஞ்ஞான ஆராய்ச்சி வளரத் தொடங்கியது. அந்த ஆராய்ச்சியின் பலன்களை அவர்கள் சந்தைப்படுத்தி மக்களின் சீவிய நிலையை உயர்த்தினார்கள். இந்த நூற்றாண்டிலே ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களிலும் துணி முயற்சியாளர் அநேகர் தோன்றி தங்களுடைய சொந்த நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சிக்கு காரணகர்த்தாவாக இருக்கிறார்கள்.

முதலாளித்துவத்தை எதிர்ப்பவர்கள், அதன் கீழ் வளர்ந்து வரும் "துணி முயற்சியாளர்" பணத்தில் பேராசை கொண்டவர்களென்றும், அவர்களின் செயல்களால் தான் உலகில் பெரும்பான்மையோர் தரித்திரத்தில் சீவிக்கிறார்களென்றும் கூறுவது வழக்கம். இதற்கு மறுமொழியாக கூற வேண்டியதென்னவென்றால் "பணத்தில் பேராசை" துணி முயற்சியாளர்களில் மட்டுமல்ல, எல்லா மக்களிலும் ஓரளவிற்கு இருக்கிறது. ஆனால் "துணி முயற்சியாளர்" எப்பொழுதும் பணமுயற்சியால் தூண்டப்படுவதில்லை. அதிகமாக "துணி முயற்சியாளர்" தாங்கள் தொடங்கிய முயற்சி சரிவர நிறைவேற்றப்பட வேண்டும் என்ற ஆவலால் தூண்டப்படுகிறார்கள். அவர்களில் பெரும்பான்மையோருக்கு, முயற்சியில் வெற்றி பெறுவது தான் வாழ்வின் முக்கிய நோக்கம். பண லாபம் "நிறைவேற்றுதலின்" அறிகுறியாக விளங்குகிறது. மேலும், உலக வரலாற்றில் மக்கள் மத்தியில் தோன்றும் ஏற்றத்தாழ்வு எல்லாக் காலத்திலும் இருக்கும். இந்த நிலையை மாற்றுவதற்கு பொதுவுடமைக் கொள்கை பலாத்கார முறைகளைப் பாவிக்க முயன்றது. ஆனால் அது தோல்வியடைந்து, உலகில் எல்லாப் பகுதிகளிலும் தன் செல்வாக்கை இழந்துவிட்டது.

இன்றைய உலகில், முதலாளித்துவம் பல நாடுகளில் ஏற்கப்பட்டாலும், அதன் சக்தியால் உருவாக்கப்பட்ட சில வலிமைகள் அதோடு சம்பந்தப்பட்ட கோளாறுகளைத் தவிர்த்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றைப் பற்றி சில சிந்தனைகளைப் பரிமாறுவது பொருத்தமாயிருக்கும். முதலாவதாக, விஞ்ஞான ஆராய்ச்சியின் பலனால் இன்றைய உலகம் குறுகிவிட்டது. சென்ற நூற்றாண்டுகளில், ஐரோப்பா, வடஅமெரிக்காவில் தோன்றி வளர்ந்த பொருளாதார அபிவிருத்தி, 21ம் நூற்றாண்டில் அநேகமாக ஆசிய நாடுகளாகிய இந்தியா, சீனாவில் தோன்றி அந்த நாடுகளின் முன்னேற்றத்தை தீவிரப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பலனாக ஆசிய நாடுகளில் சீவிக்கும் மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்து கொண்டேயிருக்கும். இதைத் தொடர்ந்து, ஆபிரிக்கா, தென்னமெரிக்கா நாடுகளிலும் சிந்தனை வளர்ச்சி தோன்றும். படிப்படியாக, வருங்காலத்தில் உலகில் எல்லா நாடுகளிலும் ஓரளவிற்கு மக்களின் சீவியம் சிறப்புடையதாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். சுருங்கச் சொல்லப் போனால், இவை யாவையையும் இயங்கச் செய்தது முதலாளித்துவத்தின் சக்தி தான்.

வருங்காலத்தில், முதலாளித்துவத்தை அழிக்கக்கூடிய சக்திகள் ஒன்றும் தோன்றுவதாயில்லை. ஆனால் பல நூற்றாண்டுகளாய், உலகம் முழுவதிலும், அதற்கிருந்த வலிமையும், செல்வாக்கும், வேறுகாரணங்களால் குறைந்து போகலாம். முதலாளித்துவத்தின் பலம் மனிதருக்கு அத்தியாவசியமாயிருக்கும் பொருளாதார முன்னேற்றத்தை வளர்ப்பதில் தான் அடங்கியிருக்கிறது. வருங்காலத்திலும் இச்சேவை

(மறுபக்கம் வருக)

அவசியம். ஆனால் காலகட்டத்தில் உலகம் முழுவதும் வேறு பிரமாண்டமான சமூக நெருக்கடிகளும் கூடிக் கொண்டு வருகின்றன. இவற்றில் சில, உலகம் முழுவதிலும் கூடிக் கொண்டு போகும் சட்ட மீறுதல், பலாத்காரம், போதை வஸ்து பாவித்தல், சுற்றாடல் பாதிப்பு, புதிதாகத் தோன்றும் நோய்கள், அத்துடன் செல்வந்தருக்கும் வறுமையாளருக்குமிடையில் வளர்ந்து வரும் பிளவு. இக்கேடுகளை நீக்க அரசாங்கமோ, முதலாளித்துவத்தின் கீழ் இயங்கும் பொருளாதார ஸ்தாபனங்களோ இயலாத நிலையில் இருக்கின்றன. இந்த நிலையில் தொண்டர் ஸ்தாபனங்களை அடிப்படையாகக் கொண்ட (Social sector) சமூகத்துறை, சென்ற 30 வருடங்களாய் எல்லா நாடுகளிலும் வளர்ந்து வருகின்றது. வடஅமெரிக்கா தொடங்கி ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, தென்னமெரிக்கா போன்ற வெவ்வேறு நாடுகளிலும், கலாசாரங்களிலும் மக்களால் உருவாக்கப்பட்டு, அவர்களால் நடத்தப்பட்டு வரும் பல்வேறு இயக்கங்கள், முதலாளித்துவத்தை எதிர்த்து நடைபெறவில்லை. ஆனால் அவற்றின் பலத்தால், முதலாளித்துவம் தன்னுடைய கொள்கைகளையும் சில முறைகளையும் மாற்ற வேண்டிய நிலைமை வரும்

இன்று புதிதாக தோன்றும் சமூகத் துறையில் (Social sector) மிக ஆர்வம் காட்டுபவர்கள் தொழில், வர்த்தக ஸ்தாபனங்களில் பயிற்சி பெற்றவர்கள் தான். தாங்கள் தற்போது ஊழியம் புரியும் தொண்டர் ஸ்தாபனங்களை உன்னத நிலைக்கு எழுப்புவதற்கு தொழில் வர்த்தக ஸ்தாபனங்களில் தாங்கள் பயின்ற/திறமைகளையும், சாமர்த்தியங்களையும் தொண்டர் ஸ்தாபனங்களில் ஊட்டுவது அதிமுக்கியம் என அவர்கள் உணர்கிறார்கள். அவர்களை இந் நாட்களில் (Social Entrepreneurs), அதாவது 'சமூக துணி முயற்சியாளர்' என அழைக்கிறார்கள். அமெரிக்காவில் இந்த முயற்சியில் ஈடுபடுவோர்க்கு உற்சாகமும், அங்கீகரிப்பும் வழங்குவதற்கு ஒரு தேசிய ஸ்தாபனம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதன் பெயர் "National Centre For Social Entrepreneurs" இந்த ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கம் என்னவென்றால் வர்த்தக அல்லது தொழில் துறைகளில் வெற்றி கண்டவர்களை என்ன வழிகளில் சமூக முன்னேற்ற துறையில் வெற்றி காணக் கூடியவர்களாக மாற்றலாம் என்பது தான்.

ஆகவே வருங்காலங்களில் முதலாளித்துவம் என்னவிதமான மாற்றங்களை எதிர்பார்க்கலாம், என்ன முறைகளில் சமுதாயத்திற்கு வேறு நன்மைகளை அளிக்கலாம் என்று முன் கூறுவது கஷ்டம். அதிவேகமாக மாறிக் கொண்டு போகும் சூழ்நிலையில், மக்களின் விழிப்புணர்ச்சியே வெற்றியடையும்.



The Tamil Canadian of the 21st Century

Anton Kanagasooriar

This is not 1867 Ontario. This is 21st centuryOntario'. These were the words of Premier Dalton McGuinty at a campaign appearance with ethnic journalists in Toronto during the provincial election of 2003. These words have a very deep meaning and purpose and clearly express the Premier's vision for a new kind of future for multi-cultural Ontario. The election signs of the Ontario Liberal Party featured the different faces of Ontario's ethnic and cultural diversity. This in itself demonstrates the commitment of the current Ontario government to building an inclusive, tolerant, and compassionate society with the real meaning of 'equal opportunity for all' being translated into concrete action.

Now comes the all-important question for us. Where do we Tamil Canadians stand in this equation? Having a government that is working towards giving Ontario a new face is one of the greatest advantages we Tamil Canadians have at this moment in history and I feel it is imperative on our part to exploit the advantage we have to the best benefit of our community. Although many Tamils had made Canada their home since the 1960's, over a quarter million Tamils have settled in Ontario during the last 20 years producing an entirely new generation in this province. Former Premier Bob Rae described the Tamil Canadian community as the fastest growing ethnic community in Ontario in the early 90's. Today this community is approaching the fullness of its growth and provides Ontario with its newest ethnic face and I am very hopeful that today's premier Dalton McGuinty will give this new face its due recognition.

Given the levels of success we have achieved in the various professions and businesses and the levels of excellence our students have reached in their schools, colleges and universities, we Tamil Canadians can be proud of our accomplishments as a community. The large number of awards and citations that members of our community have received from various organizations including the provincial government, is a testament of our contribution to Canadian society. The ethnic origins of Tamil Canadians come from one of the oldest civilizations of this world. The richness of our language, heritage, culture and traditions are subjects of academic research by universities around the world. We are indeed proud to be what we are and we must make every effort to make Canada proud of its Tamil citizens.

As is common with any new first generation of immigrants we also have our share of problems. One major problem we face as a community is that the expression of our solidarity with the political aspirations of the Tamil people in Sri Lanka is being misrepresented with a damaging twist by some sections of the media. We as a community must take up this challenge and engage ourselves to dispel the misconceptions that prevail, not only among some sections of the media but also among some Canadian politicians.

Tamil history provides numerous examples of leadership and pioneering. I wish that the opening pages of Tamil Canadian history in this century would speak of us as the leaders and pioneers of 21st century Ontario. Let us make Canada's largest province, proud of its newest ethnic face.

வீடு விற்பனை முகவரின் சேவையும் அதன் அவசியமும்



திரவி முருகேசு

அண்மைக் காலங்களில் சில வீட்டுரிமையாளர்கள் தமது வீடுகளைத் தாமாகவே விற்பனை செய்வதையும், இன்னும் சிலர் தமக்குத் தேவையான வீடுகளை தாமாகவே வாங்கிக் கொள்வதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இச் செயற்பாடுகள் தொடர்பான பூரண முன் அனுபவம் இல்லாததால் சிலர் சில தவறுகளை சந்தித்த பின்னர் அவற்றில் இருந்து விடுபடும் நோக்குடன், வீடு விற்பனை முகவரை அணுகி ஆலோசனை பெறுவதற்கு முற்படுகின்றனர். காலம் கடந்து தமது தவறுகளை உணர்வதனால் அவற்றினை நிவர்த்தி செய்வதும், அவற்றுக்கான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதும் மிகவும் சிரமமானதாக அமைவதுடன், பெரும் பணச் செலவு நிறைந்ததுமாகக் காணப்படுகின்றது. எல்லோர் வாழ்க்கையிலும் அவரவர்க்கு உகந்த வீட்டைத் தேர்ந்தெடுத்து வாங்குவதென்பது மிகப் பெரிய மூலதனமாக அமைவதுடன் ஆவல் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அது தொடர்பான நிறைவான பயிற்சிகளைப் பெற்ற வீடு விற்பனை முகவரின் சேவை மிகவும் அவசியமானதாகும்.

முதன் முறையாக வீடு வாங்குவோர் தமக்குத் தேவையான வீட்டைத் தேடுவதற்கு முன்னர், வீடு விற்பனை முகவருடன் அது தொடர்பாக கலந்தாலோசித்தல் வேண்டும். குறிப்பாக வீடு வாங்குபவர்களின் வருமானம், மாதாந்தம் எவ்வளவு தொகைப் பணத்தை வீட்டிற்கென செலவிட முடியும், வீடு வாங்குபவரின் கடன் வரலாறு, கடன் பெறும் தகுதி, எவ்வளவு தொகைப் பணத்தை முற்பணமாகச் செலுத்த முடியும், வீடு வாங்குவதற்கான மேலதிகச் செலவுகள், முதல் முறை வீடு வாங்குவோர்க்கு அரசு வழங்கும் சலுகைகள், வீட்டின் விலை, வீடு வாங்குவோருக்குத் தேவையான ஏனைய சலுகைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிக்க வேண்டும்.

வீடு விற்பனை முகவர் நீங்கள் வாங்கும் பல்வேறு தகவல்களை கருத்தில் எடுத்து உங்களுக்கு உகந்த வீடுகளை நீங்கள் பார்வையிடுவதற்கு ஒழுங்குகள் செய்வதுடன் அவற்றை வாங்குவதற்கான சகல ஆலோசனைகளையும் வழங்குவார். நகரின் எப் பகுதியில் உங்களுக்கு உகந்த வீட்டை வாங்கலாம் என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சாதகமான தகவல்களை வழங்குவார். அத்துடன் நீங்கள் வாங்கத் தீர்மானித்திருக்கும் வீட்டின் சுற்றாடல், பாடசாலை, போக்குவரத்து, வழிபாட்டு நிலையங்கள் என்பனவற்றின் வசதியுடன் Crime rate தொடர்பான தகவல்களையும் வழங்குவார்.


நீங்கள் வீட்டைத் தேர்ந்தெடுக்கும் போது அதன் வெளிப்புறத் தோற்றம் மாத்திரமன்றி அதன் உட்புறத் தோற்றம், அறைகள், சமயலறை, குளியலறை என்பனவற்றின் அமைப்பு, வீட்டை நிர்மாணிப்பதற்குப் பாவிக்கப்பட்ட பொருட்களின் தரம், வீட்டின் வெளிப்புற நிலத்தின் அமைப்பு என்பன போன்ற முக்கிய விடயங்களை கவனிக்க வேண்டும். இது தொடர்பான சிறப்புப் பயிற்சி பெற்ற வீடு விற்பனை முகவர்களாலேயே மேற்குறிப்பிட்ட விடயங்களை சரியாகக் கவனிக்க முடியும்.

உங்களுக்கு உகந்த வீட்டை தேர்ந்தெடுத்த பின்னர் அதன் சந்தை நிலையை ஒரு வீடு விற்பனை முகவராலேயே தீர்மானிக்க முடியும். உங்கள் வீடு விற்பனை முகவர் நீங்கள் வீட்டைத் தேர்ந்தெடுத்த பகுதியில் அது போன்ற வீடுகள் அண்மைக் காலங்களில் என்ன விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பது போன்ற தகவல்களை வழங்கி வீட்டின் விலையை நிர்ணயிப்பதை இலகுவாக்குவார். வீடு வாங்குவதற்கான Offer ஐ தயாரிப்பதுடன் வீட்டின் கொள்வனவு விலையை நிர்ணயிப்பதற்கு உங்கள் சார்பில், வீட்டுரிமையாளர்களுடன் பேரம் பேசுவார். வீடு வாங்குவதற்குத் தேவையான Mortgage ஐ குறைந்த வட்டி வீதத்தில் பெறுவதற்கான ஆலோசனைகளையும் வழங்குவார். அத்துடன் Home inspection செய்வதற்கான ஒழுங்குகளையும் செய்து தருவார். Offer இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படாது விட்டால், அல்லது வீட்டில் பாரிய குறைபாடுகள் காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பார். வீடு விற்பனை முகவர் அல்லாதோரால் இத்தகைய சேவைகளை செய்ய முடிவதில்லை.

வீடு விற்பனை செய்யும் போது, மிகக் குறைந்த காலத்தில் ஆகக் கூடிய விலைக்கு விற்பனை செய்யக்கூடிய முறை Open House ஆகும். இது தொடர்பான சகல ஆலோசனைகளையும் வழங்கி வீட்டை விரைவில் விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்வதுடன் வீட்டின் தகவல்களை பல்வேறு ஊடகங்களுக்கு ஊடாக விளம்பரங்கள் செய்து விற்பனையை ஊக்குவிப்பார்.

வீட்டுரிமையாளர்கள் தாமே தமது வீட்டை தனிப்பட்ட முறையில் விற்பனை செய்வதானால், வீடு விற்பனை முகவருக்குச் செலுத்தும் கட்டணத்தை மட்டுமே சேமிக்க முடியும். ஆனால் வீடு சரியான சந்தை விலைக்கு விற்கப்படுகின்றதா, சட்ட நடவடிக்கைகள் எடுக்கக் கூடிய தவறுகள் தவிர்க்கப்படுகின்றனவா என உறுதிப்படுத்த முடியாது. எனவே நம்பிக்கையான ஒரு வீடு விற்பனை முகவரின் சேவையைப் பெற்றுக் கொண்டால் உங்கள் எதிர்காலம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும்.

புதிய வீடு



கரு கந்தையா

சந்தோஷமா? சங்கடமா?
நம்மவர்களில் பலரும் இப்போது புதுவீடு வாங்கும் மோகத்தில் திளைத்திருக்கும் இத்தருணம், அதிலுள்ள சங்கடங்களையும் அறிந்திருப்பது நல்லது என்ற நோக்கமே இக்கட்டுரையின் நோக்கம்:

புதிதாகக் கட்டிய வீடு ஒன்றை வாங்குவதில் உள்ள சந்தோஷமான விடயங்களை முதலில் பார்ப்போம்:

* முற்பணம்: வீடு வாங்கத் தேவைப்படும் முற்பணத்தின் (Deposit) இன் அளவு குறைவு. அதையும் சிறிது சிறிதாக 3 அல்லது 4 தடவை தவணை முறைகளில் அதை வீடு கட்டுபவர்களிடம் கையளிக்க கால அவகாசம் தரப்படுகிறது.
* கிரகப் பிரவேசம்: புதிய வீட்டில் முதன் முதலில் குடியிருக்கப் போவது நீங்கள் என்பதால் அது மனதுக்கு சந்தோஷமான ஒரு விடயமே. கிரகப் பிரவேசம் தடபுடலாக செய்து குடியேறலாம்.
*பார்த்து மகிழ்தல்: வீடு கட்டத் தொடங்கியதும் அடிக்கடி அந்த வீதியில் போய் நின்று தாங்கள் வாங்கும் அந்த வீடு படிப்படியாக கட்டப்பட்டு உயர்வதைப் பார்த்து மகிழ்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.
* ரசனைக்கேற்ப: புதிய வீடு என்பதால் கட்டுபவர்களைக் கொண்டு உங்களுக்குப் பிடித்த நிறத்தில் சுவருக்கு வண்ணம் பூசவும், Carpet ஐப் பிடித்த நிறத்தில் தெரிந்தெடுக்கவும், குசினிக்கான அலுமாரிகளை நீங்களே தெரிவு செய்யவும். இப்படி பல விடயங்களை ரசனைக்கேற்ப உங்கள் வீட்டுக்கு நீங்களே தெரிவு செய்யக் கிடைப்பது ஒரு சந்தோஷமான விடயம்.
* அந்த வீட்டில் அமைக்கப்படும் Furnace (வெப்ப உபகரணம்) Air Conditions (குளிரூட்டும் உபகரணம்) Hotwater Tank (வெப்ப நீர்த்தாங்கி) என்பன நவீனமானவையாதலால் எரிபொருள் செலவு குறைவாக இருக்கும்.
* சில மாற்றங்கள் (Modifications): சில சிறிய மாற்றங்கள் வீடு கட்டுபவரின் ஊடாகவே வீட்டில் செய்ய வசதி உண்டு. சிலர் மேல் தளத்தில் கூடுதலாக ஒரு குளியலறை பொருத்திய சந்தர்ப்பம், வேறு சிலர் மேலதிகமான யன்னல், பிரத்தியேக வாசல் என்பனவற்றை கீழ்த்தளத்திற்கு (Basement) அமைத்த சந்தர்ப்பங்களும் என் அனுபவத்தில் பார்த்ததுண்டு.
* காணி மாற்று வரி: (சேமிப்பு) முதன் முறையாக வீடு வாங்கும் ஒருவர் புதிதாகக் கட்டப்பட்ட வீடு ஒன்றை வாங்கும் சந்தர்ப்பத்தில் காணி மாற்று வரி (Land Transfer Tax) இல் ஆகக் கூடியது $2,000 வரை சேமிக்க இடமுண்டு.
* எதிர்காலத்தில் திருத்த வேலைகள்: புதிய வீடு என்பதால் 15 - 20 வருடங்களுக்கு திருத்த வேலைகள் எதுவும் வருவதற்கான வாய்ப்புக் குறைவு.
* விலை ஏற்றம்: அதிகமான சந்தர்ப்பங்களில் நீங்கள் ஆரம்பத்தில் ஒப்பந்தத்தில் எழுதிக் கொள்ளும் விலையிலும் பார்க்க வீடு கட்டி முடியும் தறுவாயில் அந்த வீடுகளின் விலை அதிகமாகவே இருக்கும்.

இனி, சங்கடங்களைப் பார்ப்போம்:

1. ஒரு வரைபடத்தில் உள்ள வீட்டின் படத்தைப் பார்த்து அதை வாங்க ஒத்துக் கொண்ட பின் கட்டி முடியும் போது எதிர்பார்த்தது போல அந்த வீடு அமையாது போனால் அது ஏமாற்றத்தைத் தரலாம். பலருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டதை நான் அறிந்திருக்கிறேன்.
2. வீட்டின் முன் காணியில் ஏதாவது ஒரு பெட்டி (Telephone or Utilities Box, Fire Hydro தீயணைப்புக்கு பயன்படும் நீர்க் குழாய்க் கம்பங்கள் அமையலாம்) அமையும் சந்தர்ப்பத்தில் அந்த வீட்டின் முன் அழகை அது குறைக்கலாம். இப்படி ஏதாவது பெட்டிகள் வீட்டின் பின் காணியில் அமைக்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.
3. நாம் எதிர்பார்த்து போல் அறைகளுக்கு போதிய வெளிச்சம் வராது போகலாம். அதற்கு அருகில் அமையும் வீடுகளின் அமைப்பு அதற்குக் காரணமாக அமையலாம். இதை வீடு வாங்க ஒத்துக் கொள்ளும் போது எதிர்பார்த்திருக்க முடியாது.
4. வீட்டின் கீழ்த்தளம் (Basement) உடனடியாகப் பாவனைக்குத் தேவைப்பட்டாலும் கிடைக்காது. வீட்டை வாங்கி 2 வருடங்களுக்கு Basement ஐ முடிக்க முடியாது. காரணம் வீட்டின் அத்திவாரச் சுவர்களில் வெடிப்புகள் ஏற்பட்டு நீர்க்கசிவு காணப்பட்டால் முதல் இரு வருடங்களின் பின் அதைத் திருத்தித் தர வீட்டைக் கட்டியவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆகவே வீடு Basement முடித்து மறைக்கப்படாது இருந்தால் வெடிப்புகளை உத்தரவாத காலம் முடியுமுன்னரே நேரத்துக்கே கண்டுபிடித்து கட்டியவர்களைக் கொண்டே அதைத் திருத்திக் கொள்ளலாம்.
5. புதிய வீடு கட்டும் பகுதிகளில் போக்குவரத்து வசதிகள், பாடசாலைகள், கடைகள், மருத்துவ வசதிகள், வங்கிகள் அமைக்கப்பட சில வருடங்கள் செல்லும்.
6. புதிதாக வீடு கட்டப்படும் பகுதி ஓரிரு வருடத்துக்கு சேறும் சகதியுமாக இருக்கும். புற்கள் பதிக்கப்பட்டிருக்காது. DriveWay செப்பனிடப்பட்டிருக்காது. அது மாத்திரமல்ல சிலசமயங்களில் தொடர்ந்தும் அப்பகுதியில் வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தால் வீடு கட்டப்படும் இரைச்சலும் இருக்கலாம்.
7. வீடுகளின் விலைகள் இறங்கும் சந்தை நிலை இருந்தால் புதிய வீடுகளின் விலை தான் முதலில் கூடுதலாகப் பாதிக்கப்படும். காரணம் அந்தப் புதிய சுற்றாடலில் வீட்டுச் சொந்தக்காரனுக்கு ஒரு ஈடுபாடும் ஏற்பட்டிராத காரணத்தினால் இந்த வீட்டை வீட்டின் விலைகள் நன்கு இறங்கு முன்னர் கட்டி முடியுமுன்னரே எளிதாகப் புறக்கணிக்கும் மனநிலை இருக்கும்
8. புதிய வீட்டில் புதிய செலவுகளுக்கு இடமுண்டு.
* GST: வீட்டின் அடிப்படை விலையுடன் GST உம் சேர்த்தே விலை குறிக்கப்படும்.
* Ontario New Home Warranty Program:

(எதிர்ப்பக்கம் வருக)

புதிய வீட்டுக்கான உத்தரவாதப் பத்திரச் செலவு $800 வரை.
* புதிய வீட்டுக்கு Hydro & Gas Meters பொருத்தும் செலவு $800 வரை.
* புதிய மின் உபகரணங்கள் (Fridge, Stove, Washer, Dryer, Dishwasher, Air conditioner) வாங்கும் செலவு.
* புதிய யன்னல் சீலைகள்: (Window Covering) செலவு.
* வேலி (Fence) செலவு.
* Upgrades: மேலும் ஏதும் நீங்கள் வீடு கட்டுபவனிடமிருந்து விசேடமாக மேலதிகமாகக் கேட்டிருந்தால் அதன் செலவு.
* DriveWay க்கு 2வது தரம் Paint அடிக்கும் செலவு.

9. அயலவர் யாரென்று தெரியாமலே வாங்க வேண்டிய சங்கடம்.
10 வீடு வாங்கும் ஒப்பந்தம் எழுதும் போது வீட்டின் உண்மையான இலக்கம் தெரிய வராது. காணியின் இலக்கம் (Lot No) ஆல் குறித்து ஒப்பந்தத்தில் குறிக்கப்படும். நம்மில் பலர் அதிர்ஷ்ட இலக்கம் பார்த்து வீடு வாங்குபவர்கள். அதில் சிலர் Lot No ஐ வீட்டு இலக்கம் என நினைத்து வாங்கி ஏமாந்தவர்களும் இருக்கிறார்கள்.
11. சில சமயங்களில் நீங்கள் கேட்டுக் கொண்ட மாற்றங்களை (Modifications) வீடு கட்டுபவர்கள் உங்கள் வீட்டில் செய்ய மறக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. அப்படி நடந்தால் அதற்கென வசூலித்த பணத்தைத் திருப்பி அவர்கள் தந்தாலும், நீங்கள் அதைப் பின்னர் செய்து முடிக்க அதற்கு மேலான தொகை செலவாகும். சில சமயம் அவர்கள் ஒத்துக் கொண்டு செய்யாமல் விட்டது ஒரு முக்கியமான விடயம் எனின் இக் காரணத்தைக் காட்டி நீங்கள் ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளலாம்.
12. முற்பணம்: ஒருவேளை வீட்டைக் கட்டுபவர் பாதியில் நிறுத்திவிட்டு ஓடி விட்டால் உங்கள் முற்பணத்தில் $20,000 மாத்திரமே திருப்பிக் கிடைக்கும். ஆகவே $20,000 க்கு மேலாக முற்பணம் கேட்கும் வீடு கட்டுபவர்களைப் பற்றி நன்கு அறிந்த பின்னரே முற்பணம் கொடுக்க வேண்டும்.
13. வீடு கைக்கு கிடைக்கும் திகதி (Closing Date): நிச்சயமாக இந்த திகதியை சரியாக கூற முடியாது. வீடு தருவதாக ஒத்துக் கொண்ட திகதியிலும் பார்க்க ஆகக் கூடியது 120 நாட்கள் பின்போட வீடு கட்டுபவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் சரியான அறிவித்தல் வாங்குபவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். தவறின் நாளொன்றிற்கு $100 படி அபராதம் அதிக பட்சம் $5,000 வரை வாங்குபவர்களுக்கு உரிமை இருக்கிறது. 120 நாட்களுக்கு மேலாக பின் போட முற்பட்டால், வீட்டை வாங்க ஒத்துக் கொண்டவர், வாங்க மறுத்து தனது முற்பணத்தைப் பெற்று விடைபெற உரிமையுண்டு. வேலை நிறுத்தம் காரணமாக திகதி பின் போடப்படுவதைக் கணக்கில் எடுக்க முடியாது.
14. சிலசமயங்களில் வீடு கட்டப்படும் பகுதி மாநகர சபையால் அங்கீகரிக்கப்படாத நிலையில் நீங்கள் வீட்டைத் தேர்ந்தெடுத்திருந்தால் அது பின்னர் அங்கீகரிக்கப்படாமல் போனால், வேறு வீட்டை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு நீங்கள் தள்ளப்படலாம்.
16. பல தடவை வீடு கைமாறும் திகதி பின்போடப்படும் போது சில சமயம் வீட்டுக் கடன் உத்தரவாத தவணைக்காலம் (Mortgage Commitment Period) முடிந்து போயிருக்கலாம். இதனால் சிலசமயம் புதுத்தலையிடி எற்படலாம். காரணம் தற்சமயம் வட்டி வீதம் கூடியிருந்தால் கூடிய வட்டிக்கே உங்களுக்கு இனிக் கடன் தரப்படும். அது மாத்திரமல்ல கூடிய வட்டிக்கணக்கில் மாதக் கட்டுப்பணம் கூடுமாதலால் சிலசமயம் உங்கள் வருமானம் அதற்குப் போதுமானதாக இல்லாது போனால் கடன் எடுக்க முடியாமல் போகலாம்.

புதிய வீடு வாங்கும் சிந்தனை ஏற்பட்டதுமே நீங்கள் எந்தச் சட்டத்தரணியை இந்த வீடு வாங்கும் விடயத்தில் ஈடுபடுத்தப் போகிறீர்கள் என்பதையும் முடிவெடுத்தல் நல்லது. உங்களுக்கு அறிமுகமானவர்களாகவும் புதிய வீடு வாங்கும் விடயத்தில் அனுபவமுள்ளவர்களாகவும் இலகுவில் உங்கள் கேள்விகளுக்கு பதில் பெறக்கூடியவர்களாகவும் தேர்ந்தெடுத்தால் அது எந்தச் சிக்கலையும் தீர்க்க உதவும்.

ஒப்பந்தப் பத்திரத்தை உடனடியாக சட்டத்தரணி இடம் காட்டி அபிப்பிராயம் பெறுவது முக்கியம். அதற்காக அதையும் ஒரு நிபந்தனையாக ஒப்பந்தத்தில் போட்டுக் கொள்வது நல்லது. காரணம் வழக்கத்தில் பழைய வீடுகளை வாங்கும் போது அந்த ஒப்பந்தப் பத்திரம் ஒரு Real Estate Agent ஆல் எழுதப்படுகிறது. அந்த ஒப்பந்தம் விற்பவரையும், வாங்குபவரையும் பாதுகாக்கும் வண்ணம் எழுதப்பட்ட ஒன்றாகும். ஆனால் புதிய வீடு வாங்கும் போது அந்த ஒப்பந்தம் வீடு கட்டுபவர்களினால் தயாரிக்கப்படும் ஒன்றாதலால் கூடுதலாக அவர்களது நலனைக் கருத்தில் கொண்டே அது எழுதப்பட்டிருக்கும்.

வழமையில் எழுத்தில் குறிப்பிட்ட அளவுக்கு 5%க்கு மேல் பிழையிருந்தால் அதற்கு நட்டஈடு பெற வாய்ப்புண்டு. வீட்டின் காணியின் அளவு 5%க்கு மேல் குறைந்திருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வீட்டைக் கட்டுபவர் அதில் குறிப்பிட்டிருக்கவும் சந்தர்ப்பமிருக்கிறது. கல்விக் கட்டண வசூல் (Education Levy) வீட்டை வாங்குபவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எழுதப்பட்டிருக்கலாம். அதை ஆகக் கூடியது இன்ன தொகை (Maximum Limit) என்று திருத்தி எழுதிக் கொள்ளுதல் நல்லது.


Builders Mortgage ஐ எடுப்பதாக எப்போதும் ஒத்துக் கொள்ள வேண்டாம். நீங்களாகவே வங்கியிடம் செல்லும் உரிமையையும் வைத்துக் கொள்ள வேண்டும்.

Pre-Delivery Inspection (PDI): வீடு கைக்கு மாறும் முன்பாக செய்யப்படும் பரிசோதனையை ஆறுதலாகச் செய்யுமாறு பரிசோதகரைக் கேட்க வேண்டும். வேகமாகச் செய்யப்பட்டால் சில தவறுகளைக் கண்டுபிடிக்க இயலாது போய் விடலாம். புதிய வீட்டில் தண்ணீர் கசிந்த அடையாளங்கள், அறைச் சுவரில் வெடிப்புகள், நிலத்தில் வெடிப்புகள், கீறுகள், Carpet இல் ஏதும் கறைகள் இருந்தால் கவனித்து எதையும் எழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் வாங்குவது புதிய Condo எனின் உங்கள் Unit க்கு வெளியே நீங்கள் பாவிக்கும் பொது இடங்கள் (Lobby, Pool, Rec.Room, Gym Room போன்றன) சரியாக முடிக்கப்பட்டிருக்கின்றனவா எனப் பார்க்க வேண்டும்.

புதிய வீடு வாங்குபவர்கள் ஒப்பந்தத்தை உடனடியாக சட்டத்தரணியிடம் கொண்டு போவதே நல்லது. Condo வாங்குபவர்கள் முதல் 10 நாட்களுக்குள் எந்தக் காரணமும் சொல்லாமலே அதை வேண்டாம் என்று சொல்ல உரிமை உண்டு.

சங்கடங்களைத் தீர்த்துக் கொள்ளும்படியான வழிகளையும் அறிந்து கொண்டு புதிய வீட்டை வாங்கினால் அது சந்தோஷமே.

அங்கும் இங்கும்



பீற்றர் ஜோசப்

நீங்கள் இன்னுமொரு நாட்டிலோ, அல்லது கனடாவின் வேறு ஒரு மாகாணத்திலோ இருந்து கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்துக்கு புதிதாக குடிவருபவராகவோ, அல்லது தற்காலிகமாக தங்கி இருப்பவராகவோ, இங்கு வருகை தந்து இருக்கும் காலப் பகுதியில் வாகனம் ஓட்டும் எண்ணம் உங்களுக்கு இருப்பின் நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய முக்கியமான பல விடயங்கள் இருக்கின்றன. குறிப்பாக நீங்கள் வசித்து வந்த நாட்டிலோ அல்லது தேசத்திலோ உங்களுக்கு சாரதி ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அவை தற்போது பெறுமதியானதாக இருப்பின் அதற்குரிய அத்தாட்சிகளையும் நீங்கள் உங்களுடன் கொண்டு வந்திருப்பின், இங்கு வந்த நாள் முதல் தொடர்ந்து வரும் 60 நாட்களுக்கு அதே சாரதி அனுமதிப்பத்திரத்தை (Driver's Licence) ப் பாவித்து இங்கும் ஒன்ராறியோ மாகாணத்தில் நீங்கள் வாகனம் ஓட்ட முடியும்.

ஆனால் நீங்கள் இங்கு புதிதாக வந்து தொடர்ந்தும் 60 நாட்களுக்குப் பின்னரும் வாகனம் ஓட்டும் எண்ணமிருப்பின் நீங்கள் ஒன்ராறியோ மாகாணத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய புதிய Driver's Licence ஐ பெற்றே ஆக வேண்டும். அத்துடன் ஒன்ராறியோ மாகாணத்தில் கனடாவில் நீங்கள் உங்கள் சொந்தப் பெயரில் ஒரு வாகனம் வாங்குவதாக இருப்பின், அதற்குரிய (Number plate) இலக்கத் தகட்டை உங்கள் பெயரில் நீங்கள் பதிவு செய்வதாக இருப்பின் அந்த நாளில் இருந்து 30 நாட்களுக்கு முன்னதாகவே நீங்கள் ஒன்ராறியோ சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றவராக இருக்க வேண்டும்.

நீங்கள் கனடாவின் ஏனைய மாகாணங்களில், அல்லது அமெரிக்க நாடுகள், ஐப்பான், கொரியா, ஒஸ்ரியா, ஜேர்மனி அல்லது சுவிட்ஸர்ல்ாந்து போன்ற நாடுகளில் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் பயிற்சி பெற்ற சாரதியாக இருந்திருந்தால், அங்கு உங்களுக்கு தற்போது Valid Driver's Licence இருக்குமாயின், நீங்கள் இங்கு ஒன்ராறியோ மாகாணத்துக்கு வந்ததும் முழுத்தகுதி பெற்ற Class - G, சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் சலுகையைப் பெறுகின்றீர்கள். கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் Class - G பெறுவதற்கு தேவைப்படும் காரணிகளில் பொதுவான வாகனம் ஓட்டுதற்குரிய Knowledge test, அல்லது Road test போன்ற கோரிக்கைகளிலும் இருந்தும் விதிவிலக்கு வழங்கப்படுகின்றது.

ஆனால் முக்கியமான தேவைகளில் வைத்திய பரிசோதனைகளும் அவற்றில் தகுதி பெறும் நிலைகளும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக கண்பரிசோதனையில் Vision test இல் தகுதி உடையவர் என்பதும் நிர்ணயிக்கப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அத்துடன் வெளிநாட்டில் உங்களுக்கு வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தின் அத்தாட்சியும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இங்கு உறுதி செய்யப்படவும் வேண்டும். இவற்றுடன் Driving experience, வாகனம் ஓட்டியதற்குரிய காலத்துக்கான பயிற்சிகள், அனுபவங்களையும் நிரூபிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். இவ்வகையான கோரிக்கைகள் சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா, மற்றும் கனடாவின் ஒன்ராறியோ மாகாணங்களிலும் இருந்து வரும் மோட்டார் சைக்கிள் ஓட்டும் சாரதிக்குரிய அனுபவம் பெற்றவர்களுக்கும், அதற்குரிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்களுக்கு பொருந்துகின்றன.

ஐப்பான், கொரியா, ஒஸ்ரியா, ஜேர்மனி போன்ற நாடுகளுக்கும் இங்கேயும் இறுதியாகக் கூறப்பட்ட பொருந்தக் கூடிய ஒப்பந்தங்கள் எதுவும் கிடையாது. ஆனால் ஐப்பான், கொரியா, ஒஸ்ரியா, ஜேர்மனி நாடுகளில் இருந்து வந்தவர்கள் ஒன்ராறியோ மாகாணத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் அனுமதிப்பத்திரமான Class - M எனப்படும் Licence இற்கு விண்ணப்பிக்கும் போது, அந்த நாடுகளில் கிடைக்கப்பெற்ற மோட்டார் சைக்கிள் ஓட்டியதற்கான தகுதிகள், அனுபவங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு அதற்குரிய Credit in experience வழங்கப்படுகின்றன.

ஏனைய நாடுகளில் இருந்து இங்கு புதிதாக வந்தவர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும் போது, அந்தந்த நாடுகளில் இரண்டு வருட கால எல்லைக்குள் அல்லது அதற்குக் குறைவாக அனுபவமுடையவர்களாக இருப்பின் உங்களுக்குரிய வாகனமோட்டும் அனுமதிப்பத்திரம் Class - G - 2 எனப்படும் படிமுறை இரண்டு எனப்படும் தகுதி காண் காலப்பகுதிக்குரியதாகவே வழங்கப்படுகின்றது. இவ்வாறு வழங்கப்பட்ட Driver's Licence தொடர்ந்து இரண்டு வருடங்கள் தகுதி காண் காலப்பகுதிக்குரியதாக இருக்கும். இரண்டு வருடங்கள் முடிவில் வீதிப்பரீட்சை நிலை இரண்டுக்கான Road test ல் சித்தியடைந்ததும் முழுத்தகுதி பெறும் சாரதியாக வருவதற்குரிய நிலையை அடைகின்றார்.

நான் மேற்கூறிய ஏனைய நாடுகளில் இருந்து வந்து சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க விரும்பின், மருத்துவப் பரிசோதனைகளில் ஒன்றான Vision test என்பவற்றுடன், ஒன்ராறியோ மாகாணத்துக்கான வீதி விதி முறைகளையும், Traffic sign ஐப் பற்றி தெரிந்து வைத்திருப்பதாகவும் இருப்பது முக்கியமாகும். ஏற்கனவே நான் கூறியபடி Class - G - 2, நிலையில் இருந்து அதற்குரிய வீதிப்பரீட்சையில் இரண்டாவது வருட முடிவில் சித்தியடையத் தவறின், அவர்கள் தகுதி காண் காலப்பகுதியின் முதல்படியான Class - G - 1 நிலைக்குத் தள்ளப்பட்டு, பின்னர் ஒரு வருட முடிவில் Class - G - 1 க்குரிய பரீட்சையிலும் சித்தியடைந்தால் மட்டுமே Class - G - 2 நிலைக்கு வருவதற்கு தகுதியுடையவராகின்றார்.

வெளிநாட்டில் இருந்து வருபவர் தன்னுடைய Driver's Licence ல் அங்கு வாகனம் ஓட்டியதற்கான அனுபவ காலப்பகுதி குறிக்கப்பட்டிருந்தால் மட்டுமே அவை அனுபவத்துக்குரிய காலம் என ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு குறிக்கப்படாத போது நீங்கள் வசித்த நாட்டில், உங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கிய பகுதியின் அதிகாரிகளிடம் இருந்து எழுத்து மூலமான அத்தாட்சி கோரப்படுகின்றது. இவ்வாறு ஒரு அத்தாட்சியை சமர்ப்பிக்க முடியாவிடில் அதற்கான அனுபவ காலப்பகுதி கணிக்கப்பட்டு Credit for licence experience வழங்கப்படும். அல்லது Driver's examination centre இல் கணினியில் மாகாணங்களுக்கிடையிலான Interprovincial record exchange ஆய்வு நடத்தப்படும். இதற்கு முன்னர் ஒருபோதும் நீங்கள் வாகனம் ஓடாதவராக இருப்பின், அல்லது இதற்கு முன்னர் ஒருபோதும் Driver's Licence பெறாதவராக இருப்பின், அல்லது இதற்கு முன்னர் மூன்று வருடங்களுக்கு முன்னதாக உங்களுக்கும் Licence இருந்து, அது ஏற்கனவே மூன்று வருடங்களுக்கு முன்னர் காலவதியாகிய திகதியில்

(எதிர்ப்பக்கம் வருக)

இருப்பின், இங்கு ஒன்ராறியோ மாகாணத்தில் நீங்கள் புதிய சாரதியாகவே கணிக்கப்படுவீர்கள். புதிதாக நீங்கள் ஒன்ராறியோ மாகாணத்தில் Driver's Licence பெற விரும்பின் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டிய பிரதானமான ஆவணங்களில் சிலவற்றை இங்கு தருகின்றேன்.
1. உங்கள் பெயரையும் பிறந்த திகதியையும் உறுதிப்படுத்தும் ஒரு ஆவணம் (உதாரணம்: Passport). 2. உங்களுடைய கையொப்பத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் (உதாரணம்: குடிவரவு ஆவணம்). 3. செலுத்த வேண்டிய பணம். 4. ஏனைய நாடுகளில் உங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இருந்திருந்தால் அதற்கான அத்தாட்சி. 5. அத்துடன் உங்கள் கண் பரிசோதனையும் அங்கு நடத்தப்படும்.

பாதுகாப்பாக வாகன ஓட்டுதல் என்பது தன்னுடைய அறிவு, பயிற்சி முறைகள், சாரதியின் மனோநிலை போன்றவற்றில் தங்கியுள்ளது. இவற்றுடன் வாகன போக்குவரத்து வீதி விதி முறைகளும் பாதுகாப்பான வாகனமும் இன்றியமையாததாகும். சாரதியின் உடல்நிலை நன்றாக இருப்பதுடன் மனநிலையும் நன்றாக அமைவதும் பாதுகாப்பாக வாகனமோட்டுவதற்கு அவசியமாக அமைகின்றது. நாட்டுக்கு நாடு வாகன உற்பத்தி மாதிரிகளும் வேறுபட்டு அமைகின்றது. Fuel ignition system, Anti-lock brakes, 4 - wheel drive, system for traction control and stability control போன்றவையும் வேறுபாடுகளில் அமைகின்றன. புதிய சாரதிகள் இவற்றைக் கவனிப்பதும் முக்கியமாகும்.

புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்கள் Class - G1 எனப்படும் ஆரம்பநிலை அனுமதிப்பத்திரம் பெற்று 12 மாதங்கள் பொறுத்திருந்து அந்த காலப்பகுதியில் பெற்ற சாரதிப் பயிற்சி அனுபவங்களுடன் 12 மாதகால முடிவில் Class - G1 Licence வீதிப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இந்த வீதிப்பரீட்சையில் சித்தியடைந்தால் Class - G2 தகுதி காண் காலத்திற்கான இரண்டாவது படிநிலை சாரதியாக தகுதி பெறும் வாய்ப்பு கிடைக்கின்றது. இவ்வாறான படிமுறை இரண்டில் தொடர்ந்தும் 12 மாத காலம் இருந்து பயிற்சியை முடித்துக் கொண்டதும் 12 மாத காலப் பகுதியில் Class - G2 Licence இன் Road test நடைபெறும். அதிலும் சித்தியடைந்தால் நீங்கள் முழுத் தகுதி பெற்ற "Full class - G Licence" சாரதியாக மாறும் சலுகையைப் பெறுகின்றீர்கள். வாகனமோட்டுதல் என்பது எமக்கு வழங்கப்படும் சலுகையே தவிர அது எங்களுக்கு வழங்கப்படும் உரிமை அல்ல. Drive safely. வீதிப் பாதுகாப்பு என்பது எங்களுடனேயே ஆரம்பமாகின்றது.



Reviewing Literary Texts

Professor Chelva Kanaganayakam

Similar to the practice in many universities across North America, the graduate program in the Department of English at the University of Toronto too includes a course entitled "Professing Literature" designed to prepare students for the task of actively participating in academic life. Conferences, articles, presentations, pedagogy, and a host of other topics constitute the substance of this course. A contentious aspect of this preparation is the art of reviewing – contentious because not everyone agrees whether reviewing is a necessary first step for would-be academics. It is difficult to decide whether an over-zealous graduate student is likely to shoot himself/herself in the foot by writing an impressionistic or an honest but tactless review. Nothing is likely to be more awkward for a student than denouncing a critical text and, a few months later, sitting across from a search committee which includes the author of the text that the student had so mercilessly criticized. Writing positive reviews can be counterproductive too, for they could make the student look wimpy and eager to please. A student who has no opinion to offer is not much better off than one who is thoroughly opinionated. The fact is, however, that reviews are a necessary aspect of academic and cultural life, and they are relatively easy to accomplish. Particularly for graduate students and young academics whose resumes are likely to be slim, claiming a number of published reviews will help to establish some measure of credibility. In general, reviews have become a crucial part of academic life and more generally of literary culture. Publishers often maintain a file for reviews and send copies of relevant reviews to the author. Grant applications sometimes require a sampling of reviews to aid the process of evaluation. Librarians check reviews before placing orders. General readers scan the literary arts page of local newspapers to seek out an informed opinion. As author, student or reader, it is difficult not to recognize the significance of reviews as a way of signposting whether a text, critical or creative, is worthy of serious attention.

Graduate students are not the only ones forced to acknowledge the need for and danger of reviews. As a scholar's expertise increases, there will be a corresponding demand from institutions and publishers to the scholar to express an opinion on the latest text. Academics, editors, and even authors are often called upon to offer a point of view about a creative or critical text. The tradition, of course, is a long-standing one, going back to the eighteenth century, and the process is as controversial now as it was then. Whereas long articles tend to be more comparative and comprehensive, reviews are often the first point of reference for most readers. The New York Times Book Review, the Times Literary Supplement, and World Literature Today, to name three, are favorite resources for those who need a preview before investing on a book. Particularly with fiction, where the financial investment of a publisher can be substantial, a positive or negative review can have a significant impact on sales and readership. Articles take long to write and longer to publish, and the kind of analysis that shapes an essay determines the overall long-term effect of a critical text. With reviews the impact is more immediate. As Wayne Booth puts it: "Texts matter. They can make us or break us. Reviewers are more likely to acknowledge their importance, in the heat of the moment, than are critics – at least those critics who have been taught that what makes criticism more serious than reviewing is its comparative desiccation" (279).

Given the significance of the practice of reviewing, it is hardly surprising that so much has been written on different aspects of this exercise. Step-by-step guides, manuals and handbooks appear routinely to educate the neophyte reviewer. From the time that Virginia Woolf wrote her monograph on reviewing to the more recent essays by authors such as Booth and

(visit next page)

Jonathan Culler, there has been a consistent attempt to evaluate the practice of reviewing. In fact, Virginia Woolf's monograph includes an after word by Leonard Woolf who offsets the former's sustained critique of reviewers by suggesting a more moderate approach. Virginia Woolf's essay is, nonetheless, an important one in that it discusses the long history of reviewing, the agony it has caused, and its effects on major writers such as Tennyson and Dickens. The analogy of a shop window with which she begins her essay captures vividly the implied voyeurism of the whole process of reviewing. As she rightly points out, "the eighteenth century rings with the screams and catcalls of the reviewer and his victim" (6). The situation is hardly different today. Most academics, for instance, are both practitioners and recipients of reviews. They praise and denounce, and are often elated or annoyed when negative appraisal happens to them.

The present inquiry is into reviewing as it relates to postcolonial studies. Suggesting a separate niche for postcolonial texts may well be overkill, since postcolonial texts are often published by the same companies that publish "mainstream" literature and often function, in academic circles, within the framework of primary departments. That said, postcolonial literature as a corpus is a recent phenomenon, going back only to the sixties. Even today, after postcolonial studies has been acknowledged as a legitimate discipline in all universities, critical studies in the field tend to be relatively few, with the consequence that academics, authors and students rely heavily on reviews to decide what to buy, what to teach, and what to include in the canon. The postcolonial network also constitutes a small world, with authors, critics and students encountering each other in conferences, readings, and committees of various kinds. Even junior scholars have at least a casual acquaintance with a large number of authors and scholars who publish regularly. And yet, postcolonial literature needs validation and legitimacy through exacting standards. As universities expand their course offerings and faculty hiring to include postcolonial studies, there is an urgent need to refrain from valorizing everything that appears on the market and establishing standards for measuring quality. Needless, to say, the role of the reviewer is crucial to this process. In the very first issue of the CRNLE Reviews Journal, the editors Haydn Moore Williams and Paul Sharrad make the important observation that "the New Literatures because they are new and therefore often surprising and sometimes provocative, present a challenge to the conventions and traditions of 'Old Literatures" in English ..." (3).

In addition to the relative infancy of postcolonial studies, there are other considerations: the field has grown in ways that emphasize interdisciplinarity. Those from other disciplines often review texts that are written by authors who belong to one discipline. When such hybridity occurs, there is often little consensus about acceptable standards. Historians reviewing novels are likely to focus on aspects that are not always germane to literary critics. Texts themselves flaunt a texture that borrows from different disciplines, and ideal reviewers for such texts are difficult to find. More importantly, texts written in English may well draw from traditions that are indigenous and intersect with texts that are written in other languages. Oral traditions matter a great deal in the way certain texts are constructed. Dialects and nation languages intervene to subvert Standard English. Frames and boundaries consistently change in ways that are confusing. For texts that draw from different disciplines, finding competent reviewers, let alone excellent ones, can be an onerous task. When deadlines have to be met, compromises are made, with results that are sometimes far from satisfactory. Inept reviewers, for example, reveal their ignorance of even the most basic facts, such as the author's gender or national affiliation.

The political scene in postcolonial nations is such that ideologies get in the way of objective assessment. In the process of evaluating a text, critics are quick to recognize that the stakes are much higher than belonging to one critical school or another. A mainstream text that pays little attention to economic realities may well be taken to task by a Marxist critic, but such evaluations, for the most part, reveal at the very outset their ideological stance. Postcolonial critics who are self-conscious about their stances carefully mask their ideological positions, since an open admission of their perspective would be tantamount to acknowledging their complicity in furthering a political or cultural agenda. Reviewers of postcolonial texts sometimes begin with certain strongly-held views about what is right and wrong, and the moment a text diverges from their ideological position, they are condemned as reactionary, wrong-headed or simply worthless. Such reviewers are hardly ever up-front about their ideological convictions. As Anne Burke comments in another context: "Please remember, reviewers can and may have an axe to grind..." (44). Much of the debate about The God of Small Things, for example, was not really about the literary merit of the novel. Rather, the reviewers were concerned about the distortion of Communism in India or the deliberate attack on Christianity in Kerala. Such concerns are necessary, but they also point to how battle lines are drawn in postcolonial nations. Even a cursory reading of the reviews of Michael Ondaatje's Anil's Ghost reveals that reviewers were more conscious of their own stances regarding the ethnic strife in Sri Lanka than the literary merit of the text itself. As different perspectives converge on a literary text, the reviewer all but ignores the text in order to further a political or social agenda. One of the principal strengths of postcolonial writing is its engagement with referential realities. Such involvement also runs the risk of obliterating the literariness of the text.

A number of authors, particularly established ones, have taken the path of least resistance, by refusing to read reviews. Of course, some form of review takes place in the initial stages when the manuscript is read by external readers, editors, and so forth. Often, in these instances, authors are compelled to pay heed and even make alterations in order to meet the expectation of the editor. The process, however, is different in that it is not "public" and is not likely to hurt the ego of the author as much as a public review. In fact, Virginia Woolf draws attention to this "private" process as a possible alternative to the public indulgence of vituperative reviews. As she puts it, "an hour's talk with a critic of his [or her] own choosing would be incalculably more valuable than the five hundred words of criticism mixed with extraneous matter that is now allotted him" (21). However, once this process is completed, the author is free to ignore the views of reviewers and concentrate on his or her next book. Such adamant refusal probably protects the author's ego, but it does not safeguard sales or public recognition. A book that fares badly in sales is bound to catch up with the author, sooner or later. In other words, reviews and reviewers are here to stay as a constitutive aspect of the manner in which a text establishes a relation with the reading public.

Some of the most passionate controversies have, in the long run, had beneficial effects. V.S. Naipaul and Salman Rushdie, for example, and to a lesser extent, Michael Ondaatje and Arundhati Roy, have generated wildly contradictory reviews, and they have forced readers to think carefully about ideo

(visit opposite page)

logical positions. Passionate reviews lead to more thoughtful essays and monographs, and the study of individual authors and the field in general benefits in the end. The reader of a Rushdie novel today tends to be a lot more informed and judicious than he or she was in the early eighties. Admirers of Ondaatje, for instance, are more objective about the claims of "universal" standards than they were fifteen years ago. Multiple perspectives may thus have salutary effects, although that can hardly be offered as an excuse for writing reviews that are blatantly biased or subjective.

The danger with subjective positions is that reviewers of postcolonial texts often get labeled as experts, not because they have published extensively or been immersed in the field for a long period of time, but because they have ethnic or religious or national affiliations that give them legitimacy. Their so-called capacity to draw on "local knowledge" gives them a place of eminence that few would dare to challenge. Affiliation and expertise tend to get conflated, with the consequence that prejudice is often camouflaged. The reviewer thus masquerades as an objective critic, and most readers are in no position to call the bluff. And more often than not, it is impossible to expose the reviewer without falling into a similar binarism that does not serve the cause of literature. The expert is not always one who has acquired specialized knowledge by studying a literary tradition so much as one who is able to flaunt a nativist claim. By default, the reviewer who claims to belong also masquerades as the one who knows. In such instances, reviews can be positively misleading. There is a curious irony in the fact that a pervasive essentialism flourishes in a field that spends so much energy trying to avoid the pitfalls of essentialism.

Contentious as it may seem, one needs to admit that one of the blind spots of postcolonial studies is the neglect of aesthetic standards. Postcolonial nations tend to move from one political crisis to another, with the consequence that what is uppermost in the minds of readers is the ongoing political strife. If one nation is torn apart by ethnic strife another is plagued by religious fundamentalism and a third by tribal conflict. Texts, then, are seen to be reflectors of these conflicts, and depending on the ideological stance of the reader, the text is treated with respect or disdain. Despite the fact that when writers write, they are concerned with structure and style, and with the manner in which the text holds together, the process is forgotten when the book gets published. When the writer works with an editor, sometimes for several months, the dominant concern is with how a page or a chapter achieves unity in style, structure and perspective. At this crucial stage, the outside world is of little consequence. And yet, a few months later, the reviews completely ignore this process and focus on the relation between the text and the reality outside. What is brought to the text from outside becomes more important than the struggle of the text itself to express a particular dimension of meaning.

To make this claim is not to be an apologist for universalism. The idea of universalism can easily lead to stances that are colonial, European or hegemonic. Early reviews of postcolonial authors that appeared in the West now appear to be as prejudiced and subjective as the more overtly biased reviews that have appeared in the recent past. In practice, the distinction between universal standards and European standards is difficult to establish, and to be unmindful of it is to slip into fallacies that have been overcome. But "European" and "universal" are not synonymous, and critical practice needs to recognize the difference. Unfortunately, the predominant interdisciplinary trend in postcolonial studies often goes against this norm and becomes increasingly entrenched in tendentious positions. It may well be that reviewers need to foreground their own stances more overtly, but jettisoning the idea of universal standards is not likely to be productive. Reviews are, in the final analysis, about standards, even if there is no easy agreement about what constitutes a standard.

That said, it is also necessary to admit that many reviews have played a crucial role in creating an educated reading public. Reviews have contributed substantially to the process of establishing a measure of sophistication in critical response. If Michael Ondaatje and Rohinton Mistry are now household names, the credit is at least in part due to reviews that helped establish them as major writers rather than "national" or "ethnic" ones. And that is probably why there is general consensus that the practice of reviewing, with all its limitations, must not be allowed to die. Jonathan Culler claims that "the most vicious polemic will contain clues to the nature of the author's enterprise, and even egregious misreporting will provoke the reader – is this perhaps the true telos of reviewing? – to mention the book to other people, to ask them whether they have seen it, and thus to prolong the current of discussion on which the impact of a book greatly depends" (299).

At its best, reviews have fostered intellectual debate, cultural sensitivity, and depth of understanding. They recognize the power of literature in a global culture that confuses literary truth with referential accuracy. Reviewers have served as a necessary filter between author and reader, to ensure that the author does not falsify or distort empirical realities to a point that destroys the integrity of literature. Defending the outbursts of intolerance among reviewers, Booth says that "[reviewers] know in advance that all good scrimshaws are created by artists of a certain kind..., and when they discover that the work in hand looks superficially like a scrimshaw but is in fact a very poor scrimshaw, they cannot resist protesting their betrayal" (278). Derek Walcott's review of Naipaul's Enigma of Arrival, which appeared in The New Republic, despite all its blind spots, serves the purpose of forcing the reader to think not only about the text but also the issues surrounding the text and the intentionality of the author.

Intentionality continues to be a major issue with reviews, far more than with critical articles. Particularly in reviews of postcolonial texts, prior knowledge of the author's ethnic, religious or tribal affiliations serves as an entry point for critics. The assumption that flows from such knowledge is often a flawed one in that reviews assume that because an author has certain affiliations, he or she must, inevitably, position himself or herself along certain lines. The reviewer then scans the text quickly for evidence to prove an authorial bias, and the supposedly subjective position of the author becomes the target for the reviewer who is in fact indulging in his or her own bias. The reviewer knows that, for the most part, the author is in no position to respond to the criticism. And even if he or she does, the damage is often done and cannot be reversed. Labels stick easily in politically charged climates, and authors, once identified in a particular way, continue to bear that stigma. Particularly in postcolonial studies, certain labels are easily appropriated by reviewers to praise or damn authors. Racism, exoticism, marginality, transgression, otherness, manicheanism, essentialism, and a host of other terms have gained currency and tend to be used indiscriminately as a way of evaluating texts. Often authors are blissfully unaware of what these terms mean,

(visit next page)

and reviewers are indifferent to the responsibility of contextualizing these terms carefully. Thus terms that have been germane to defining and framing postcolonial literature have now become handy tools for hasty and ill-informed criticism. In short, obfuscating jargon has supplanted the quest for a genuine discourse.

Globalization has contributed significantly to a burgeoning of reviews. Now more than ever, standards are difficult to establish since electronic publications proliferate without quality control. If it is possible to argue that such proliferation trivializes the role of reviewing, it is equally to possible to assert that reviewers of postcolonial texts need to be aware of their role in shaping a field that has come a long way but has not entirely convinced skeptics who see postcolonial literature as a transient phenomenon. Commenting on the Australian context, Williams and Sharrad point out that "the need has often been voiced for critics whose analyses and comments, both laudatory and deprecatory, can furnish a critical setting, within which a creative tradition can be formed, thus supplying as well the mirror in which writers see themselves as others see them" (3-4). The notion of the ideal review as both a mirror and a lamp is as valid today as it was twenty years ago.

Works Consulted and Cited

Booth, Wayne C. "Three Functions of Reviewing at the Present Time." The Horizon of Literature. ed. Paul Hernadi. London: University of Nebraska Press, 1982: 262-281.

Burke, Anne. "'Skin and Beads': Or How I Got Into Book Reviewing and How Book Reviewing Can Get Into You (If You Aren't Careful)." Reviewing: Women, Writing on Writing, 1996. Toronto: Feminist Caucus of the League of Canadian Poets, 1996: 35-46.

Culler, Jonathan. "The Uses of Uncertainty Reviewed." The Horizon of Literature. ed. Paul Hernadi. London: University of Nebraska Press, 1982: 299-306.

Dalton, Mary. "Colyumnists and Collanders of Zeitgeist: Some Thoughts on Poetry Reviews and Reviewing." Reviewing: Women, Writing on Writing, 1996. Toronto: Feminist Caucus of the League of Canadian Poets, 1996: 13-18.

Walford, A.J.ed. Reviews and Reviewing: A Guide. Phoenix, Arizona: Oryx Press, 1986.

Woolf, Virginia. Reviewing. The Hogarth Press, 1939. Note added by Leonard Woolf.

Walcott, Derek. "The Garden Path." Review of Enigma of Arrival. The New Republic, April 13, 1987: 27-31.

Williams, Haydn Moore and Paul Sharrad. "Editors' Remarks." CRNLE Reviews Journal, 1 (1979): 3-4.



கனடாவின் தேசிய விளையாட்டுகள்

எஸ். கணேஷ்

கனடாவில் பொன்னான செய்திகளுடன் வெளிவரும் முத்தான தகவல் சஞ்சிகையான "தமிழர் தகவல்" ஆண்டு மலரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வருடம் இதன் ஆசிரியர் திரு.திருச்செல்வம் அவர்கள் ஒரு அன்பான வேண்டுகோள் விடுத்தார். கனடாவின் முக்கிய விளையாட்டான 'Hockey' ஐ எமது தமிழ் சமுதாயத்திலிருந்து பல வயதுத் தரப்பினர் விரும்பிப் பார்க்கின்றனர். ஆனால் இதனுடைய சட்டங்களைப் பற்றிப் பலருக்கும் விளக்கக் குறைவாகவே இருக்கின்றது. ஆகவே சற்று ஆழமாகவும், கனடாவின் இந்த பாரம்பரியத்தை விளக்குமுகமாகவும் எழுதுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.

கனடாவில் தேசிய விளையாட்டாக Hockey, Base ball, Foot ball, Basket ball ஆகிய விளையாட்டுகள் திகழ்ந்தாலும், Hockey விளையாட்டே முன்னணியிலும், ஒவ்வொரு கனடிய பிரஜையும் தங்கள் பாரம்பரியம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் அளவிற்கு குளிர் நாடான கனடாவில், ஐஸ் தரையில் விளையாடும் விளையாட்டாக Hockey திகழ்கின்றது. இந்த விளையாட்டில் தற்போது அமெரிக்க கழகங்கள் தங்கள் பணபுழக்கத்தின் மூலம் உலகில் உள்ள திறமையான வீரர்களையெல்லாம் பணத்திற்கு வாங்கினாலும், ஒரு காலத்தில் கனடிய கழகங்களே கொடி கட்டிப் பறந்தன என்பது வரலாறு சொல்லும் உண்மை. இந்த வரலாறு காணும் Stanley cup ஐ வெல்லுவதற்கான போட்டியில் எவ்வளவு பணம், எவ்வளவு திறமை எவ்வளவு ரசிகர்கள் ஆதரவு அப்பப்பா! எவ்வளவு! எவ்வளவு!!

1892ம் ஆண்டு March 18ˇ திகதி Ottawa Amateur Athletic சங்கத்தின் இராப்போசன விருந்தில் Ottawa பரிசு பெற்ற விளையாட்டு வீரர், கனடாவின் Governor general of Canada வும் Preston உம் ஆகத் திகழ்ந்த மகிழ்ச்சிக்குரிய "Lord Stanley" அவர்களின் பெயரால் ஒரு கிண்ணம், கனடாவின் தேசியப் போட்டிக்குரிய கிண்ணமாக வழங்கப்பட வேண்டும் என தெரிவித்தார். இந்த கருத்தைக் கேட்ட மதிப்புக்குரிய Lord Stanley அவர்கள் 7 1/2 அங்குலம் அகலமும் 11 1/2 அங்குலம் உயரமும் உடைய வெள்ளிக் கிண்ணத்தை அன்பளிப்பு செய்து கனடாவின் "Govern the annual competition" கிண்ணமாக திகழ வேண்டும் என கேட்டுக் கொண்டார். இதில் இருந்து இது ஒரு தேசிய கிண்ணமாக கனடா, அமெரிக்கா நாடுகளுக்கிடையே புகழ் பரப்பி வருகின்றது. முதலாவது Stanley கிண்ணத்தை 1893ம் ஆண்டு (AAA) பிரிவைச் சேர்ந்த Montreal Amateur Hockey கழகம் வென்றெடுத்தது. அதிலிருந்து தொடர்கின்றது வரலாறு 111 வது வருட World's most presticious கிண்ணமான Stanley கிண்ண வரலாறு!! NHL rule book என்று வர்ணிக்கப்படும் இதன் விளையாட்டு விதிமுறைகளில் முக்கியமானவற்றை இங்கு தருகின்றேன். முதலாவது விதியாக விளையாடப்படும் மைதானம் "Rink" என அழைக்கப்படுகின்றது. 220 அடி நீளமும், 85 அடி அகலமும் உடைய இந்த Rink இன் நாலு மூலைகளும் வளைவு படுத்தப்பட்டிருக்கும். 40 அங்குலத்திற்கு குறைவாக "Boards" மூலமும் 48 அங்குலத்திற்கு நீட்டப்பட்டதாக Fiber Glass ஆலும் இந்த Rink சூழப்பட்டிருக்கும்.


ICE Area இல் இரண்டு கோல்களுக்கு இடையில் இருக்கும் பகுதி 3 பகுதியாக பிரிக்கப்பட்டு Blue lines என வரையறுக்கப்பட்டிருக்கும். விளையாடும் பகுதி சொந்த கோல்களுடன் உள்ள பகுதி "Defending zone" ஆகவும், மத்திய பகுதி "Neutral zone" ஆகவும், முன்பகுதி Attacking zone ஆகவும் பிரிக்கப்பட்டிருக்கும். "Boarding" என வழங்கப்படும் பனால்டிகள் இருவகை. 1. Minor 2. Major ஒரு விளையாட்டு வீரரை வேண்டும் என்று Board உடன் அடிபட தள்ளுவது Minor பனால்டி ஆகவும் ஒரு வீரரின் தலை அடிபட வேண்டும் என்று Board உடன் தள்ளுவதோ, அடிப்பதோ Major penalty ஆகவும் கருதப்படும். விளையாடும் பந்தை "Puck" என்று குறிப்பிடப்படும். பனால்டிகள் Minor, Major, Misconduct ஆகியவை ஒரு வீரர் தன்னுடன் "Puck" கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆதிக்கத்தை தெளிவுபடுத்தும். இதனுடைய தன்மையை பொறுத்து காலம் நிமிடங்கள் தீர்மானிக்கப்படும். இதில் முக்கியமாக "Icing" என்ற குற்றத்தைப் பார்ப்போம். சிகப்பு நிறத்தால் இரண்டு பகுதிகளாக (Center red line) பிரிக்கப்படும் Rink இல் ஒரு விளையாட்டு வீரர் தன்னுடைய Own hale இல் அதிகளவு செக்கனுக்கு Shoot, Bat அல்லது Deflect படும் Puck ஐ தன்னுடைய சொந்த பகுதியில் இருந்து, எதிராளியின் கோல் பகுதிக்கு (எதிர்ப்பக்கம் வருக)

பின்புறம் Puck அனுப்புவாரானால் இதை "Icing" என்ற குற்றமாக கருதப்படும். அடுத்து முக்கியமான Off-side குற்றத்தைப் பார்ப்போம். ஒரு வீரர் Blue line இல், அல்லது Red line இல் அல்லது இதை தாண்டியோ Involved in play, அது அவர் பாவிக்கும் தடியானாலும் சரி, வீரரானாலும் சரி அதை தனக்கு சாதகமாக உபயோகிப்பவராக கருதப்பட்டால் Off - side குற்றமாக கருதப்படும். ஆட்டங்கள் யாவும் 3*20 நிமிடங்களாக மூன்று Period ஆக ஆடப்படும். ஆட்டத்தின் போது இது குழுக்களுக்கும் 30 செக்கன் Time - out (இடைநிறுத்தம்) பெறும் அனுமதியுண்டு. மூன்று Regular period இலும் சரி, சமனான கோல்கள் போடப்பட்டால் இரு குழுக்களும் 5 நிமிடத்திற்கு மேற்படாத Over time இல் பிரவேசிக்கும். இதில் எந்த குழு முதல் கோலை போடுகின்றதோ அது வெற்றி பெற்ற குழுவாக கருதப்படும். மேலே குறிப்பிட்ட விதிகளில் பலவற்றை குறிப்பிட முடியாவிட்டாலும் மிக முக்கியமான விதிகளை குறிப்பிட்டுள்ளேன்.

Stanley கிண்ணப் போட்டிகளில் அமெரிக்காவும், கனடாவின் கழகங்களுமாகச் சேர்ந்து Eastern conference மூன்று பகுதிகளாக 3*5 15 கழகங்களும், Western conference 15 கழகங்களும் மோதிக் கொள்ளும். இதில் முக்கியமாக Toronto Maple Leafs கழகமும், Montreal Canadiens விளையாட்டு கழகங்களும் பெற்ற வெற்றிகளையும், சாதனைகளையும் எந்தவொரு அமெரிக்க கழகங்களும் எட்டிப்பிடிக்க முடியாத சாதனைகளை இந்த 111 வருட கால சரித்திரத்தில் படைத்துள்ளன என்றால் மிகையாகாது.

ரொறன்ரோ Maple Leafs இதுவரை 13 தடவைகள் Stanley cup champions ஆகவும் 5 தடவைகள் Division champions ஆக வெற்றி ஈட்டியுள்ளனர். 63 தடவைகள் Play - Off இற்கு தெரிவாகியுள்ளனர். 13 தடவைகள் Champion Ships:- 1918, 1922, 1932, 1942, 1945, 1947, 1948, 1949, 1951, 1962, 1963, 1964, 1967 ஆகிய ஆண்டுகளாகும்.

மொன்றியல் Canadiens இதுவரை 24 தடவைகள் Stanley cup champions ஆகவும், 7 தடவைகள் Conference champions ஆகவும், 20 தடவைகள் Division champion களாகவும், 74 தடவைகள் Play off க்கும் தெரிவாகியுள்ளார்கள். 24 தடவைகள் Champion ships:- 1916, 1924, 1930, 1931, 1944, 1946, 1953, 1956, 1957, 1958, 1959, 1960, 1965, 1966, 1968, 1969, 1971, 1973, 1976, 1977, 1978, 1979, 1986, 19993 ஆகிய ஆண்டுகளாகும். இதில் இருந்து இந்த இரண்டு நகரங்களும் கனடாவின் தேசிய விளையாட்டான Hockey இல் எவ்வளவு ஆண்டுகள் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தி வந்துள்ளன என்பது தெரிய வருகின்றது. Hockey விளையாட்டு கனடிய சாதாரண பிரஜையின் ஒரு பாரம்பரியமாகும் என்ற உண்மை புலனாகின்றது.



பொருள் வேண்டுமா? வாசித்துச் செயற்படுத்துங்கள் பொருளைப் பெற்று - பெருவாழ்வு வாழ்வீர்கள்!

ம. செல்வராஜா அலெக்ஸ்சாந்தர்

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்று, என்னைச் சற்றுச் சிந்திக்கத் தூண்டியது. பொருள் எல்லோருக்கும் இருக்குமானால், இவ்வுலகம் பூலோக சொர்க்கமாகும். இதற்கு ஏதும் வழிகள் உண்டா எனச் சிந்தித்தேன். பலரின் வாழ்க்கைப் பாதைகளை வாசித்தறிந்தேன். "பொருள்" வேண்டும், வேண்டும், அதைப் பெறுவதை உதாசீனம் செய்யாதே என்றும், பொருள் சேர்ப்பது உன் கைகளிலே தங்கியிருக்கின்றது என்றும், பொருளை ஏற்றபடி பயன்படுத்தி எல்லோரும் பயன்பெற வாழ்வது உனது வழி என்றும் , பல்வேறு நூல்களின் சாரம் என் செவிகளில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. "நாய் தின்னாக் காசு, அவன்ரை காசு அவனோடு" என்றெல்லாம் கூறிப் பொருள் சேர்ப்பதில் அக்கறை இல்லாதிருந்த பலரை நான் அறிவேன். பிரபல தமிழ் எழுத்தாளர், பல சாகித்தியப் பரிசில்கள் பெற்ற அகிலனின் வாழ்க்கைச் சம்பவங்கள் சில "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதை எடுத்தியம்பும்.

பொருள் மீது நாட்டம் வைப்பது, தனது இலட்சிய வாழ்க்கைக்கு இடையூறாக முடியும் எனத் தனது நாற்பதாவது வயது வரை எண்ணி; பொருளை உதாசீனம் செய்து வாழ்ந்தவர் அகிலன். அதனால் அவருக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட அவலங்கள் அநேகம் ஆகும். பல வேளைகளில் தன்னையே நொந்து, என்ன வாழ்க்கை! என்று ஏங்கித் தவித்ததும் உண்டு. அகிலன் குடியிருந்த வீட்டுச் சொந்தக்காரர், வீட்டை விட்டு எழுப்ப வழக்குப் போட்டார். வீட்டுச் செலவு, கடன் பளு, கடன் வாங்கியவர்களுக்குத் தவணை கூறுவது, இப்படிப்பட்ட பிரச்சனைகளால் எழுத்துத் துறையையே, திறம்படச் செய்ய முடியாத நிலை அகிலனுக்கு ஏற்பட்டது. இந்த நிலையிலே தனது பொருள் இலட்சிய வாழ்க்கைக்கு இடைஞ்சல் என்ற பொய்யான மனமயக்கத்திலிருந்து மீண்டு பொருள் எல்லோரும் தேட வேண்டும் என்று கூறுகிறார். தான் மட்டுமல்லாது, தன்னை நம்பியிருக்கும் மனைவி மக்களும் நிம்மதியாக வாழ, பொருள் வேண்டும் என்கிறார். ஆதலினால் பொருள் தேவையில்லை என்ற போலி எண்ணத்திலிருந்து எல்லோரும் மீண்டு, பொருளாதார விடுதலை எல்லோரும் பெற வேண்டும் என்பது புலனாகின்றது. பொருளைக் காசு என்றும் கூறுவர். "கா" என்பதன் கருத்து பாதுகாப்பு, 100 பலம் கொண்ட அளவு (வலிமை), பூ முதலியன இரும்பெட்டி போன்ற பல்வேறு கருத்துகளை அகராதி தரும். அதைப் போல "சு" என்பது நன்மை, மங்கலம் போல்வன குறிக்கும். ஆகவே 'காசு' என்பது பாதுகாப்பு, வலிமை, மங்கலம், மலர்ச்சியின் இருப்பிடம், நன்மை போல்வன வாழ்க்கைக்கு அளிக்கும். இவ்வளவு கருத்தும் தரும் பொருளைக் தேடாது விடில், வாழ்க்கையில் மலர்வும், சுபீட்சமும், நிம்மதியும் உண்டாகுமோ என எண்ணத் தோன்றும்.

"இருள் இருள்" என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட்டு ஒரு மெழுகுதிரியைத் தேட முயற்சி செய்யுங்கள் என்ற ஞானி கொன்பியூசியசின் கூற்று, வறுமை, வறுமை என்று கூறுவதை விட்டு, அதனை அகற்ற ஆகவேண்டியவற்றைச் செய்ய வேண்டுமென்று எம்மைத் தூண்டுகின்றது. புதுமணத் தம்பதிகளை வாழ்த்தும் பெரியார்கள் வாழ்த்தும் மொழி கூடப் "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்று கூறுகிறது. இந்தப் பதினாறு செல்வங்களும் என்ன எனச் சிந்திக்க, அபிராமிப்பட்டர் பாடல் துணை புரியும்.

"கலையாத கல்வியும், குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும், கன்றாத வளமையும், குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும், சலியாத மனமும், அன்பகலா மனனைவியும்
தவறாத சந்தானமும், தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத
கொடையும், தொலையாத நிதியமும்
கோணாத கோலும் - ஒரு துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும், உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி துயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம்
அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

(மறுபக்கம் வருக)

பதினாறு பேறுகளும் எவை என நோக்கில் வாழ்விற்கான கல்வி, நீண்ட ஆயுள், நம்பிக்கையான நட்பு, குறையாத செல்வம், உழைப்புக்குத் தவறாத உடல், நோயற்ற வாழ்வு, தளராத மனம், அன்புற்று வாழும் துணைவன் அல்லது துணைவி, அறிவு ஆற்றல், ஒழுக்கம் ஆகியவற்றிலிருந்து தவறாத குழந்தைகள், மேலோங்கும் புகழ், வாய்மை/நேர்மை கடைப்பிடித்தல் உழைப்புக்கான ஊதியம் தொடர்பாகக் கிடைத்தல், உழைத்த பொருளை இடாம்பீகச் செலவு செய்யாது சேமிக்கும் பழக்கம், நேர்மையான அரச ஆட்சி, பெரியாரோடு தொடர்பு, இறையன்பும் பிறர் அன்பும் ஆகிய பதினாறும் ஆகும். இவற்றிலே பல பொருளைத் தேடிச் சேமித்து வாழ்வதையே அடிப்படையாகக் கொண்டவையாகும். மற்றவற்றை நோக்கினால், பொருள் ஈட்டிய வழி பெறக்கூடிய பேறுகளையே காட்டி நிற்கின்றன. பொருள் இருந்தாலே மனிதன் உடல் விருத்தி, உள்ள விருத்தி, சமூக விருத்தி, சன்மார்க்க விருத்தி ஏற்பட வழியாகும். பசியாய் இருப்பவனுக்கு அன்பையும், ஆன்மீகத்தையும் இதமாகக் கூறினாலும், என்ன நடத்தைகளைக் காட்டுவான் என எண்ணினால், உண்மை விளங்கும். அதனாற் போலும் மஸ்லோவின் தேவைக் கொள்கை, விளங்கவும் விளக்கவும் பொருந்தும் வெண்பா உள்ளது.

"மானங் குலங்கல்வி வண்மை அறிவுடமை
தானம் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசிவுந்த வல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்போம் பறந்து"

பசி வந்திட்டால் உலக இன்பம் அத்தனையுமே தேடுவாரற்றுப் போய்விடும். "பசி"யின் தாக்கத்தை உணர்ந்த உளவியலார் செய்த ஆய்வின் கதைப்பேறு இதனை உணர்த்தும்.

ஐம்பது நன்கு கற்றறிந்த சான்றோர்கள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் இருந்த மண்டபத்திற்கு வெளியே விடாது கூட்டம் நடத்தப்பட்டது. முதல் வேளை அவர்களுக்கு 30 பேருக்குரிய உணவு வழங்கப்பட்டது. இரண்டாவது வேளை 15 பேருக்குரிய உணவு வழங்கப்பட்டது. மூன்றாவது வேளை 10 பேருக்குரிய உணவு வழங்கப்பட்டது. முதலாவது வேளையின் போது ஆறுதலாக வந்து பண்பாக உண்டனர். இரண்டாவது வேளையின் போது விரைந்து வந்து கிடைத்ததை விரைவாக எடுத்துச் சற்று தள்ளி நின்றுண்டனர். மூன்றாவது வேளையின் போது அங்கு பலத்த இழுபறி ஏற்பட்டு அடிபிடியும் ஏற்பட்டது. இங்கு முதற் தேவையின் ஒன்றான உணவுக்குறைவு ஏற்பட்டதால், கற்ற சால்புடையவர்களே கண்டபடி ஒழுங்கீனமாய் நடந்து கொண்டனர். பசி வந்திடப் பத்தும் பறந்து போம். பசி தீர்க்கப் பொருளில்லாதவிடத்து, நாம் நல்ல சமூகத்தை, ஒழுங்கான சமூகத்தை, சன்மார்க்கத்தை எதிர்பார்க்க முடியாது. இன்று பொருள் இல்லை, ஆதலின் இன்றைய சாப்பாட்டை விட்டு விடு, இன்று பொருள் உண்டு இரண்டு நாட்களுக்குத் தக்கதாய்ச் சாப்பிடுகிறேன், என்று எமது வயிற்றை நாம் கேட்டாலும், அது பொறுக்குமா! மறுக்குமோ! அல்லது பசியைத் தாங்குமோ! எமது வயிறு எம்மோடு இருக்கும் வரை, எமக்கு ஏற்படும் பசி போக்க நாம் பொருளை ஈட்ட வேண்டும். எமக்கு மட்டுமல்லாது, எம்மோடிருக்கும் மனைவி மக்களின் தேவைகள் தீர்க்க, சீரான வாழ்வை ஏற்படுத்த பொருள் இவ்வாழ்வில் வேண்டும். அஃதில்லையெனில் இவ்வுலக வாழ்வு இல்லவே இல்லை.

பொருளியலில் பொருள் அல்லது பணம் என்பதைக் கொள்வனவு செய்யும் சக்தி என்பர். பொருள் உள்ளவர் எவ்வித சேவைகளையோ பண்டங்களையோ பொருள் கொடுத்து வாங்கி விடுவர். பொருள் இல்லார் அடிமை போல் கைகட்டிச் சேவகம் செய்வர். "கல்வி" என்ற அதிகாரத்திலே வள்ளுவப் பெருந்தகை எழுதிய குறள் கூடப் பொருள் இல்லாதான் நிலையை மிகத் தெளிவாய்க் காட்டுகிறது.

"உடையார்முன் இல்லார்போல் எக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"
குறள் - 395

செல்வர் முன் வறுமையுடையோர் நாணிக் கோணி நிற்கும் பரிதாப நிலை சமூகத்தில் இருப்பதைக் காட்டி நிற்கிறது. பொருளாதார சுபீட்சமே மனித சுதந்திரத்திற்கு அடிப்படையானது. பல மேதைகள், தமது இலைமறை காய் போல் இருக்கும் அறிவை, ஆன்மாவின் தவிப்பைப் பொருளில்லாத காரணத்தால் அச்சுவாகனம் ஏற்ற முடியாது அவலப்படுகின்றனர். கருதிய பொருள் தன்னை விளக்க, அறிவை மேம்படுத்த, ஆய்வு செய்ய அனைத்துக்குமே மூலகாரணம் என்பதை எவரும் மறக்கக் கூடாது. பொருள் இல்லாது நியாயம் பேசுபவர் வெறும் வாயை சப்புபவர் போலாவர். பொருள் உண்டேல், அவன் எஜமான், முதலாளி என்ற பெயர்களையும் பெற்று, எதற்கும் முன்நிற்கும் பேற்றையும் பெறுகிறான். கருணை என்பானின் கதை, பொருளினால் ஏற்படும் சமூக நிலையை விளக்கும்.

கருணை என்பான் மிக ஏழையாக இருந்த காலத்தில் அவனோடு வேலை செய்த சிலரே அவனது நண்பர்களாய் இருந்தனர். அவன் கடும் உழைப்பினால் செல்வந்தன் ஆனான். அப்போது அவன் வீதியால் செல்லும் போது, அவனை அறியாதோர் கூட, தலைசாய்த்துச் சிரித்து, வணக்கம் கூறுவர். பதிலுக்குக் கருணையும் இறுமாப்புடன் சிரிப்பான். மற்றவர்களின் தலைசாய்ப்பில் அடிமைத்தனம் தோன்றும். இத்தகைய செயற்பாட்டைக் கொடுத்தது எது? பணம், பணம் என்று கருணை சொல்ல வேண்டுமா? ஆனால் கருணை வீடு சென்ற பின், தனது பணப்பெட்டியைத் திறந்து, பணமே! இன்று ஒருவர் (பெயர் கூறி) உன்னைக் கௌரவப்படுத்தினார், இன்னார் உனக்காகச் சிரித்தார், இன்னார் உனக்குத் தலைசாய்த்தார் என்று குறைந்தது 10 நிமிடமேனும் சொல்லுவான். பணத்தின் பெருமை சொல்வோமா! அன்றேல் கருணையின் சுயம் தளம்பாத நிலைமையைச் சொல்வோமா! வாசகர்களே, இதன் தாற்பரியத்தை அறிய உங்களை விட்டு விடுகிறேன். உங்கள் பதிலென்ன?

புலம்பெயர் நாட்டிலிருந்து யாழகம் சென்று வரும் தமிழர் கூறும் கூற்றும் சிந்திக்கற்பாலது. வெளிநாட்டில் கிட்டிய உறவினரோ, மற்றவர்களோ இருப்பவர்கள் பாடு பரவாயில்லை. அப்படி வெளிநாட்டு உதவியற்றவர்கள், வறுமையில் வாடுகிறார்கள் என்றும், பலர் ஒழுங்காக உண்பதில்லை எனவும், பொதுவாகக் கூறுகிறார்கள். இதற்கெல்லாம் பணமே காரணம் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா! பழந் தமிழ்ப் பாடலின் அடி பணத்தின் பெருமையைச் சமூக நிலையுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறது. "இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல்" இத்தகைய பொருளே உலகை, சமூகங்களை இனங்களை, குடும்பங்களை, தனிப்பட்டவர்களை ஆட்டிப் படைக்கிறது. இத்தகைய பொருள் தேட முடியாத ஒன்றா? என்ற கேள்வியை உங்கள் முன்னிலையில் வைத்தால், உங்கள் மறுமொழி என்ன? இதற்கான பதில் உங்கள் மனத்திண்மையைப் பொறுத்தது. உங்களால் முடியும், முடியும் என்று எண்ணிச் செயற்பட்டால், பொருள் வந்து சேரும். "முடியாது என்ற வார்த்தை நெப்போலியனின் அகராதியில் கிடையாது" என்னால் முடியும், முடியும் என்று மனதுள் அடிக்கடி கூறுங்கள். பொருள் சேர்க்க வழி காண்பீர்கள்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்தும் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" (குறள் - 666)

என்ற குறளும், எங்களால் முடியும் என்பதை எடுத்தியம்புகிறது. எடுத்த கருமத்தில் உறுதியுடன் செயற்படில் எண்ணிய பொருள் எண்ணியபடியே பெறலாம். "டாம்பீக வாழ்வு கொண்டு வரும் தாழ்வு" என்பதை எழுத்தாளர் அகிலன் அறியாதவரல்ல. அவர் சென்னையில் குடியேறிய பின்பு, நண்பர்கள் நயக்க ஆடம்பரமாக வாழ முற்பட்டார். அதனால் கஷ்டப்பட்டுப் பல்வேறு இன்னல்களுக்குட்பட்ட பின்னரே பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. "மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்" என்ற அடியும், "காணி நிலம் வேண்டும் - பராசக்தி காணி நிலம் வேண்டும்
அந்தக் (எதிர்ப்பக்கம் வருக)

காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித்தர வேண்டும்" என்ற அடியும் கஷ்டப்பட்ட அகிலனைச் செல்வம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி, அதுவும் தனக்குத் தெரிந்த தொழிலான, எழுத்தினால் ஏற்படுத்த வேண்டும் என்ற உத்வேகத்தை ஏற்படுத்தின. செல்வம் வேண்டுமென்ற ஆசை மட்டும் போதாது. அதனைச் செயற்படுத்தும் மனத்திடனும் காரியமாற்றும் ஆற்றலும் வேண்டும். அறிவிலும் சிந்தனையிலும் செல்வம் தோன்றத் தொடங்க, வாழ்விலும் வந்து சேர்ந்து விடும். பழைய ஆடம்பர வாழ்வை விட்டார். மனங் கொண்டு எழுதினார், தங்கடனெல்லாம் தீர்த்துப் பின், வசதியாக மனை அமைத்து வாழ்ந்தார்.

பெண்கள் இல்ல மாதாந்த சஞ்சிகை 70% ஆன பிரச்சனைகள், பணம் சீவிக்கப் போதாத காரணத்தாலேயே ஏற்படுகின்றன என்று கூறுகின்றது. அநேகர் தம் வருமானத்தைப் பத்து வீதத்தால் அதிகரித்தால் பணப் பிரச்சனை தீர்ந்து விடும் என்று கருதுகின்றனர். சிலருக்கு அக் கூற்று சரிவந்தாலும், பலருக்கு அது சரிவருவதில்லை. பல நிதி ஆலோசகர்களின் கருத்துப்படி, வருமானம் கூடும் போது செலவும் கூடுகிறது என்பதாகும். இவ்வேளை திருக்குறள் கூறும் கருத்து மிகவும் சிந்திக்கற்பாலதாகும்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை." (குறள் - 51)

இல் வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புடையவள் ஆகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவளே வாழ்க்கைத் துணையாவாள். இது எங்கு வாழ்பவருக்கும் அடிப்படையான சிந்தனையைத் தந்து, வருவாய்க்கு ஏற்ப வாழ்ந்து, சிறிதேனும் சேமித்து வாழ வழிகாட்டி நிற்கும். வருமானத்தைக் கூட்டுவதிலல்ல, எவ்வளவு வருமானம் வரினும், அதனைத் திட்டமிட்டுச் செலவு செய்து, சேமித்து வாழ்வதிலேயே, வாழ்வின் வெற்றி தங்கியிருக்கின்றது.

கடன் வாங்கிச் சீவியத்தை நடத்திக் காசு வரும் போது கொடுக்கலாம் தானே என்ற எண்ணம் ஏற்படலாம். ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியரின் கூற்று எமக்கு உதவும். "கடன் கொடுக்காதீர்கள், கடன் வாங்காதீர்கள்" என்கிறார்; ஏனெனில் கொடுத்த கடனையும், அதனை வாங்கிய நண்பனையும் இழக்க வேண்டிய நிலை வரும். கடன் வாங்குவதால் எப்போதும் நிம்மதியற்ற நிலை ஏற்படும். "கடன் பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற கம்பரின் பாடல் அடி. கடன் வாங்கியவரின் நிலையை இராமாயணம் கண்ட போது, இராவணன் உள்ளத்தில் பட்ட துயரோடு ஒப்பிடுகிறார். கடன் கேட்பவர், தக்க காரணத்திற்குக் கடன் கேட்கிறார் என அறிந்தால், உம்மால் கொடுக்க முடிந்தால் உதவலாம்.

கடன் வாங்கினால், கடன் பெற்றவர் மனத்திலே ஓர் அடிமைத்தனம் குடி கொண்டு விடும். அப்படி மிக அவசியம் ஏற்படின் வங்கியிலே கடன் பட்டால் கொஞ்சம் கொஞ்சமாகக் கடனைக் கட்டித் தீர்த்து விடலாம். கடன் வாங்கினால் அது பழக்கமாகி விடும். பழக்கம் ஏற்படின் அதை மாற்றுவது மிக மிகக் கடினம். சிலர் ஒருவரிடம் பெற்ற கடனை, இன்னொருவரிடம் வட்டிக்கு வாங்கித் தீர்ப்பர். இவ்வாறே அவர்கள் தம் வாழ்க்கை முழுவதும், கடன் வாங்குவதும் வட்டி கொடுப்பதும், மீண்டும் மீண்டும் கடன்படுவதாயும், நிம்மதியற்று நாணிக் கோணி வாழும் பலரை நீங்களும் நானும் யோசித்தால் அறியலாம்.

வறுமை என்ற பகைவன் மிகவும் தீங்கிழைப்பவன். வறுமையை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை அற்றவரை, அவன் வீழ்த்தி விடுவான். வறுமையில் வாழப் போவதில்லை என்று மனத்திலே திடசங்கற்பம் கொள்ளுங்கள். உழைப்பு என்ற உமது ஆயுதம் கொண்டு, வறுமை என்ற எதிரியை ஓட ஓடத் துரத்தி விடலாம். ஆதலினாற் போலும் முயற்சிக்கு முன்னாகும் ஸ்ரீதேவி அயர்ச்சிக்கு முதேவியாம் என்ற பழமொழி வழங்குகிறது. வறுமையைப் போக்கும் கருவிகளாக, நம்பிக்கை, தெளிந்த சிந்தனை, திட்டமிடுதல், செயலாற்றிச் சீர்தூக்கி உழைத்தல் உண்டானால் வறுமை பின்வாங்கி விடும்.

டாக்டர் மு.வரதராஜனின் வாழ்வியல் இதற்குச் சிறந்த உதாரணமாகலாம். அவர் ஆரம்ப காலத்தில் இலிகிதராகப் பணியாற்றினார். அவருக்கு ஏற்பட்ட நோய் அவரை வறுமையில் ஆழ்த்தியது. அவர் அதைக் கண்டு பயந்தாரில்லை. ஓய்வு நேரத்தில் படித்து தமிழாசிரியர், முதுகலைச் சித்தி, ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் ஆகியவை பெற்றார். பள்ளியாசிரியராய் இருந்தவர், கல்லூரி ஆசிரியராகி, பல்கலைக்கழகப் பேராசிரியராகி துணைத் தலைவரானார். டாக்டர் வரதராஜன் தானும் உயர்ந்து தமது மாணவரையும் உயர்த்தி, படைப்பிலக்கியம் படைத்துப் பெரும் பொருள் ஈட்டினார். அதனைத் தேவையறிந்து மற்றவர்களுக்கும் உதவிப் பெரும் புகழுடன் வாழ்ந்தவர் ஆனார். முயற்சி உயர்ச்சி தருவதால், ஸ்ரீதேவி வாசம் முயற்சியில் உண்டு.

சேமிப்பு வெற்றியின் அத்திவாரம்

பொருள் வேண்டுமாயின் அதை அடையும் வழிகளில் சேமிப்பு மிக முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது. சேமிப்பினால் ஏற்படும் பயன் ஒவ்வொருவரும் அறிதல் வேண்டும். பிரபல எழுத்தாளரான அகிலனின் வாழ்வில் ஏற்பட்ட சம்பவம் சேமிப்பின் அவசியத்தை விளக்கி, எல்லோரும் சேமித்து வெற்றி பெற வழிவகுக்கும். கஷ்டப்பட்டு வாழ்க்கை வாழ்ந்த அகிலனுக்கு, அவரது மனைவியின் சிறிய தாயார், ஒரு சிறிய வீடு எழுதிக் கொடுக்க விரும்பினார். அதை அவர் அகிலனுக்கு எழுதாவிடின், கடன் கொடுத்தோர் அவ்வீட்டை எடுத்து விடுவர். வீட்டை எழுதிப் பதிவதற்கு ஐந்நூறு ரூபாய் வேண்டும். அவ்வூரிலுள்ள தனது பணக்கார உறவினர்களுக்கு கடனாக ஐந்நூறு ரூபாய் பெற எழுதினார். அவர்கள் தருவதாக வாக்களித்தபின், வீட்டை எழுதுவிக்கக் கிராமமான கருருக்குச் சென்றார். வாக்களித்த தனவந்த உறவினர்கள் அப்போது தர வசதியில்லை எனக் கூறி விட்டனர். என்ன செய்வதென்று அறியாது அகிலன் தளம்பி நின்றார். பலரிடம் பணம் கேட்டுப் பணம் கிடைக்காத போது, அகிலனின் சிறிய தாயாரின் மகன் வேலாயுதம் வந்தான். அவன் சிறிய தேநீர்க்கடை வைத்திருப்பவன். அவன் அகிலனிடம், "பணம் எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டான். வேலாயுதம் மிகச் சிறிய கொட்டிலில் அக்காலத்தில் பத்து ரூபாய் வாடகை கொடுத்துச் சிறிய தேநீர்க்கடை வைத்திருந்தான். அக்கடையில் ஒரு "பொயிலர்", சின்னக் கண்ணாடிக் கூட்டில் சில "பாண்கள்", இவையெல்லாம் சேர்த்துக் கணித்தால் அப்போதைய நிலையில் 200 - 300 ரூபாக்கிடைப்பட்ட முதலே தேறும். வேலாயுதம் பணம் எவ்வளவு வேண்டும் என்று கேட்டபோது, இவனுக்கு எவ்வாறு இவ்வளவு பணம் சேர்ந்தது என்று அகிலன் வியப்படைய, வேலாயுதம் கூறிய பதில் அகிலனை வியப்படையச் செய்து சிந்தனையைத் தூண்டியது. ஒவ்வொரு மாதமும் வேலாயுதம் ஒரு சிறிய பகுதியைக் கட்டாயமாக வங்கியில் சேமித்தான். அச் சேமிப்பு அப்போது ஐயாயிரம் ரூபா வரை சேர்ந்துள்ளதாகக் கூறினான். அகிலனுக்கு ஐந்நூறு ரூபாயும் கிடைத்தது. அகிலன் வாழ்க்கைப் பாதையில் வேலாயுதம் கூறியது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அன்றிலிருந்து அகிலன் அநாவசியச் செலவுகளை விட்டபடியாலும், கட்டாயச் சேமிப்புச் செய்ததாலும், பின்பு வளம் பெருக்கி வெற்றி வாழ்வு வாழ வழியாகிற்று.

குறைந்த உழைப்பிலும், செலவு கூட விடாது சமாளித்து, மிச்சப்படுத்தி, திட்டமிட்டு வாழ்வது உயர்வு தரும். இதையறிந்து சேமித்து வாழ்வோர் வளர, மற்றையோர் தேய்வர். சேமிப்பால் வளம் பெருகின் மற்றவர் முன் நாணவோ! கோணவோ! தேவையில்லை. மனித மானத்தைச் சேமிப்புக் காத்து, தன்னம்பிக்கையைக் கூட்டும். சிறுதுளிகளே பெருவெள்ளம் ஆகும். சிறுகச் சேமித்தால், பெருஞ்செல்வப் பேறுண்டாகும். பொருளுண்டேல் கொள்வனவுச் சக்தி கூட, சுயதொழில் ஆரம்பிக்கலாம். தன்னைச் சார்ந்த குடும்பத்தினருக்கு நிம்மதியாக அச்சமின்றி, தேவை தீர்த்து வாழ வழி வகுக்கலாம். புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்வோர் சேமித்து வாழ வழியுண்டா என எண்ணத் தோன்றும். இங்கு பல வழிகளில் சேமித்து வளம் பெருக்கும் வழிகள் உண்டெனினும், (மறுபக்கம் வருக)

அநேகர் கையாண்டு வெற்றி பெறும் வழியை மட்டும் இங்கு கூறுதல் பொருந்தும். பல இழப்புக்கள் அடைந்து வந்த பலர் பொருட் செல்வமும், கல்விச் செல்வமும் பெற வாய்ப்புக்கள் உண்டு. கனடிய நாட்டிலே எம்மூர் போல் சீட்டுப் பிடித்துச் சேமிக்க இயலாது. இங்கு சீட்டுக் கட்டிய பலர் தமது பணத்தை இழந்த கதைகள் அறியலாம். சீட்டுக்காசை முறையிட்டும் பெற இயலாது. சீட்டுப் பிடிப்பவர்களில் நூற்றுக்கொருவரே நிதானமாக நடத்துவார். பலர் தமது வருவாய்க்கேற்ற, வீட்டை 5% அல்லது 10% முதலுடன் வங்கியில் கடன் பெற்று வாங்கி, வளம் பெருக்கியுள்ளனர். இந்த நாட்டிலே வீட்டு வாடகை அதிகம். வாடகை கட்டுவதை விடச் சிறிது கூடக் கட்ட வேண்டி வரலாம். பல வருடம் வாடகை வீட்டில் இருந்த பலர், தாம் வாடகையாகக் கட்டிய தொகையை சில வருடங்களுக்குள்ளேயே கூட்டிப் பார்த்து, வீடு தம் வருமானத்துக்கேற்றபடி வாங்கி முதல் வளர்த்து வளமாய் வாழும் கதைகள் உண்டு. ஆண்டு கழியக் கழியக் கட்டும் தொகையும் குறையும். இப்படி எழுதும் என்னை வீடு வாங்க உதவும் முகவர் என்று எண்ண வேண்டாம். பலர் கூறியதிலிருந்தும், அவர் தம் முதல் வளர்த்த வழியும் நான் அறிந்த மட்டில், சிறந்த சேமிப்பு வழிகளில் ஒன்றென்பதால் எழுதுகிறேன். நீங்கள் ஆராய்ந்து, உங்களுக்கேற்ற வழியில் செயற்படில் இதுவும் சிறந்த சேமிக்கும் வழிகளில் ஒன்றாகும்.

கனடாவிற்குப் புலம்பெயர்ந்த சங்கரின் கதையை இங்கு கூறுதல் சாலவும் பொருந்தும். கனடாவுக்குப் புலம்பெயர்ந்த சங்கர், 1200 டாலர்கள் மாதாந்த வாடகை கொடுத்து ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தான். 5 வருடங்களின் பின் தான் கொடுத்த வாடகையே 72,000 டாலர்கள் என்பதை உணர்ந்தான். பின்பு 10% ஆகிய 20,000 டாலர்கள் கொடுத்து, மிகுதியை வங்கியில் கடனாகப் பெற்று ஒரு வீடு வாங்கினான். காலப்போக்கில் வங்கிக் கடனும் குறைந்து வீட்டின் விலைவாசியும் கூடியது. பின்பு அவ்வீட்டை விற்றுப் பெற்ற இலாபத்தில், புதிய வீட்டிற்கான 50% கட்டித் தன் வேலைத் தலத்திற்கும், பிள்ளைகளுடைய படிப்பிற்கும் ஏற்ற இடத்தில் இல்லம் வாங்கினான். இத்தகைய முதலீடு, நாமறியாமலே சேமிப்பால், எம் முதலைப் பெருக்கி விடும். இவை போன்ற பல்வழிகள் தொழிலைப் பெருக்க, வளம் கூட்ட வசதிகள் பல உண்டு. இதனை நன்கு சிந்தித்துப் பயன்படுத்தி வளம் பெருக்கலாம்.

பொருள் ஈட்டுவது மற்ற மனிதரை அடக்கி ஆள்வதற்கல்ல். நாமும் வாழ்ந்து மற்றவருக்கும் உதவி வாழ்வதற்காகும். பணம் எஜமானனல்ல. மனிதனே அதற்கு எஜமான் என்பதை எவரும் என்றும் மறக்கக் கூடாது.
"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

இக்குறள் அறத்தின் வழி பொருள் சேர்க்க வேண்டும் என்றும், தீதின்றிச் சேர்த்த பொருளால் அறமும் இன்பமும் பெருகும் என்றும் குறிப்பிடுகிறது. அறன் வலியுறுத்த, யாழ்-நீர்வேலிப் பண்டிதர் துரைசிங்கம் அவர்கள், பண்டித வகுப்பிலே கூறிய கதையைக் கூறுதல் சாலவும் பொருந்தும். நீர்வேலிக் கிராமத்தில் இரு சாதியினரிடையே சண்டை ஏற்பட்டது. ஒரு பக்கத்தினர் கள்ளிறக்கும் தொழிலாளர்களின் பாளைகளை வெட்டிக் கள்ளிறக்கும் தொழிலைப் பாதிப்படையச் செய்தனர். மற்றப் பக்க நிலச்சுவாந்தர் ஒருவரின் பாரிய வாழைத் தோட்டமும், புகையிலைத் தோட்டமும் வெட்டிப் பயன்படுத்த முடியாதவாறு அழிக்கப்பட்டது. தோட்டத்தில் நட்டம் ஏற்பட்ட நிலச்சுவாந்தர், தனக்கு இத்தகைய நட்டம் ஏற்பட்டதற்கு "அறமே" காரணம் என்று சில நண்பர்களுக்குக் கூறியுள்ளார். அது என்ன அறம் என எங்கள் எல்லோருக்கும் சிந்தனை தோன்றும். நிலச்சுவாந்தர் ஆசுப்பத்திரிக்கு (வைத்தியசாலை) பால் கொடுக்கும் ஒப்பந்தம் எடுத்தவராம். சில அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தண்ணீர்ப் பால் கொடுத்துப் பொருள் ஈட்டினார். இப்படித் தீய வழியில் வந்த காசைக் கொண்டு தோட்டத்தை விருத்தி செய்தார். ஈற்றில் அறம் வென்றது என்பதை அவரே கூறியுள்ளார். "களவினாலாய ஆக்கம் அளவியும் ஆவது போலக் கெடும்" என்ற வள்ளுவனின் வாக்கும் இங்கு சிந்திக்கற்பாலது.

எமது தமிழ் நூல்களான சிலப்பதிகாரமும், கம்பராமாயணம், மனோன்மணியம் போல்வனவும் அறமே வெல்லும் என்றும், அறத்தின் வழி நில்லாதவிடத்து அதுவே அழிவுக்குக் காரணம் ஆகிவிடும் என்கிறது. உலகில் கடும் வட்டி வாங்குபவனையும், பொருளைக் கொண்டு அதர்மம் செய்பவனையும் கோயிற் சொத்தை அபகரிப்பவனையும் அறம் வந்து உகுத்தும் எனத் தமிழர் தம் செவி வழிச் செய்தி கூறுவதிலும் உண்மை இல்லாமல் இல்லை என்பது சிந்தித்தால் விளங்கும்.

பொருளை ஈட்டுவது மட்டுமன்றி, அதனை ஏற்ற வழியில் செலவு செய்து பெரும்புகழ் ஈட்டிய உலகக் கோடீஸ்வரர் "றொக்பெல்லரின்" வாழ்வு வழியும் எமக்கு நல்ல பாடம் புகட்டும். "பணம் பணம்" என்று என்றும் சிந்தித்த உலகக் கோடீஸ்வரரானறொக்பெல்லர் தனது 53வது வயதிலேயே உலகக் கோடீஸ்வரர் ஆகிவிட்டார். அவர் வந்த வழியிலே காசு செலவு செய்ய அஞ்சிய மனிதராய், வீண் விரயம் என்ற வழியிலே கஞ்சத்தனமாய்ப் பணத்தைச் சேர்த்தார். மனிதத்தை விட, பணத்தை மிகவும் நேசித்த றொக்பெல்லர், தொழிலாளர்களையும் கூட்டாளிகளையும், பணம் மீதமென்று கருதினால் நீக்கிவிடுவார். இலஞ்சம் கொடுத்து அரச அதிகாரிகளை வசப்படுத்தி அநியாயமான வழிகளில் அவரது வியாபார எதிரிகளை விழுத்தியும் பணம் சம்பாதித்ததும் அவர் வழிகளில் ஒன்றென்பர். அற்ப இழப்புக்களையும் தாங்காத இலையும் இருந்தது. ஒரு முறை 40,000 டாலர் பெறுமதியான கோதுமையை கப்பலில் ஏற்றி பெரிய வாவிகள் ஊடாக அனுப்பினார். காப்புறுதிக்கு 150 டாலர்கட்டுவது வீண்செலவு எனக் கருதியவர், புயல் வீசும் செய்தி கேட்டு, தனது காரியாலயத்திற்கு விடியற்காலை சென்று, தனது கூட்டாளியான ஜோஜ் காடனர் என்பவரை அனுப்பி உடன் காப்புறுதி செய்வித்தார். கோதுமைக்கப்பல்கள் போக வேண்டிய இடத்திற்குப் போய்விட்ட செய்தி கேட்டு, 150 டாலர் காசு வீணாகி விட்டதே என வருந்தினார். இத்தகைய றொக்பெல்லர், வாரந்தோறும் 1 மில்லியன் டாலர்களை நிகர வருமானமாகப் பெற்றவர், ஒரு வார உணவிற்கு அவரது உணவுச் செலவு இரண்டு டாலர் தான் ஏற்பட்டது. இதற்குக் காரணம் அவர் உணவு விடயத்தில் காட்டிய கருமித்தனம் அல்ல. அவர் பணம் பணம் என்று ஓடித் திரிந்ததால் தனது நோயற்ற வாழ்வு என்ற செல்வத்தைக் கவனிக்கவில்லை. இதனால் நித்திரை குறைந்த, உணவுண்ண முடியா நோயாளியானார். டாக்டர்கள் ஓய்வாக இருங்கள், நிம்மதியாக வாழுங்கள் என்று ஆலோசனை கூறினார்கள். றொக்பெல்லர் சிந்தித்தார். தனது வாழ்வு வழியை மாற்றினார். மக்களோடு பழகாத றொக்பெல்லர், மக்களோடு மனதாரப் பேசினார், பாடினார், மற்றவர் வாழ்வில் எவ்வாறு ஒளியேற்றலாம் என எண்ணினார். ஈட்டிய பொருளை மனித மேம்பாட்டுக்கு அள்ளி அள்ளி வழங்கினார். உலகமெங்கும் உள்ள ஆய்வு நிலையங்கள், கல்வி நிலையங்கள், கோயில்கள், வைத்திய நிலையங்கள் இவரின் 'நிதியேற்பாட்டு நிறுவனம்' மூலம் நிதி பெற்றன. ஒரு காலத்தில் 150 டாலர்கள் இழப்பை எண்ணி வருந்திய இவர், தனது செல்வத்தை தகுந்தபடி வாரி வழங்கிய வள்ளலானார். அவரது நோயும் பறந்தது. வாழ்வு சிறந்தது. உலகு உயர்ந்து, அவரது கீர்த்தியைப் புகழ்ந்தது.

பொருளை முயற்சி செய்து ஈட்டினாலேயே இவ்வுலக வாழ்வுண்டு. வேண்டியவிடத்து முடிந்தளவு வழங்க வேண்டும். தனது மனைவி மக்கள் நியாயமான வாழ்வின் தேவைகள் பெற்று வளரத் தன் பொருள் உதவ வேண்டும். தேவையானவர்களுக்கு மிக உதவி தேவைப்படும் போது உதவி வாழப் பொருள் உதவுமானால் இல்லறம் நல்லறமாகி, எல்லோரும் இன்புற்று வாழ வழி பிறக்கும். பொருள் உண்டேல் இவ்வுலக வாழ்வுண்டு. இவ்வுலக வாழ்வை வளம்பட, பயன்பட வாழின் மெய்ப்பொருள் வாழ்வும் வழியாகும்.

யோகா
Yoga



ராஜ் ராஜதுரை

இன்று கனடா உட்பட வடஅமெரிக்காவில் எங்கு திரும்பினாலும், "Yoga" (Wyeke) என்ற நான்கு எழுத்துக்களை பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

இது ஒரு மேலை நாட்டுக் கலையா என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் படிப்பவர்களும் அவர்களே அதனைப் படிப்பிப்பவர்களும் அவர்களே. இன்னும் அதனை உற்று நோக்கினால் எம்மவர்கள் கூட அவர்களிடம் சென்று கற்கத் தொடங்கியுள்ளார்கள். எல்லா உடற்பயிற்சி நிலையங்களிலும் இதை ஒரு உடற்பயிற்சியாகவே கற்பிக்கிறார்கள். காரணம் மேலை நாட்டவர்கள் இந்தியா சென்று சில மாதங்கள் படித்து ஆசிரியர்களாக உள்ளார்கள்.

ஒரு காலத்தில் யோகா என்றதும், ஒரு தாடி முடி வளர்ந்த அரை நிர்வாணமான ஒருவர் இமாலயத்தின் அடித் தளத்தில் நிஷ்டையில் இருப்பது தான் எங்கள் கண்முன் தோன்றும். ஆனால் இன்று இது மேலை நாட்டவர்களின் சர்வ சாதாரண-மான பெயராக மாறிவிட்டது.

எங்கள் ஞானிகள் விட்டுச் சென்ற இந்த அரிய கலையை இன்று நாங்கள் மேலை தேசத்தவர்களிடம், மேலை நாட்டில் படிக்க வேண்டி இருப்பதை எண்ணி அழுவதா சிரிப்பதா என்றே புரியவில்லை.

உடல் மனம் ஆத்மா என்ற மூன்றையும் (Body, Mind, Sole) ஒரு வழிப்படுத்துவது தான் யோகா. இதனை நம் சான்றோர்கள் பல பிரிவுகளாகப் பிரித்துக் கற்பித்தார்கள். ஆனால் சிறு குழந்தைகளை உற்று நோக்கினால் அவர்களின் அசைவுகள் எல்லாம் யோகாசனத்திற்குக் குரு அவர்களே என எண்ணத் தோன்றும். பிறந்து சில தினங்களிலேயே அவர்கள் சிறிது சிறிதாக எல்லாவிதமான யோகப் பயிற்சிகளையும் ஆரம்பித்து விடுவார்கள். உடலில் உள்ள ஒவ்வொரு பாகங்களையும் பயிற்சி செய்வதைப் பார்க்கலாம்.

மனிதன் வாழ்வதற்கு இன்றியமையாதது மூச்சு. குழந்தைகள் தூங்கும் போது கூட அவர்கள் சரியான முறையில் சுவாசப் பையின் கீழ் உள்ள Diaphoram தை பாவித்து சுவாசிப்பதைக் காணலாம். அவர்கள் சுவாசிக்கும் போது (தூங்கும் போது) வயிறு மேலேயும் கீழேயும் போய் வருவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. Diaphoram சரியாக தொழில் செய்யும் போது தான் இது நடக்கும்.

இச் சிறு குழந்தைகள் வளர்ந்து வரும் போது Material World என்று கூறப்படும் வெளி உலக ஆசா பாசங்களுக்கு அடிமையாக சரியாகச் சுவாசிக்க மறந்து விடுகிறார்கள்.

நாம் எல்லோருமே எங்களுக்குத் தேவையற்ற நாம் ஒன்றுமே செய்ய முடியாத கவலைகளை எங்களுக்குள் வளர்த்து மேலோட்டமான (Serface Breathing) சுவாசத்தையே செய்கிறோம். இதனால் சுவாசத்தில் இருக்கும் அசுத்த காற்று சரியாக வெளியே செல்வது இல்லை. அது சுவாசப்பையின் உள்ளேயே நின்று Toxin ஆக மாறி புதுப்புது நோய்களை எங்களுக்குக் கொண்டு வருகிறது.

இது மாத்திரமா! புதிதாகப் பிறக்கும் அப்பாவிக் குழந்தைகளுக்கும் இந் நோயை வஞ்சகம் இல்லாது இலவசமாகக் கொடுத்து விட்டுச் செல்கிறோம். ஒன்றுமே அறியாத இக் குழந்தைகள் பிற்காலத்தில் தாய் தந்தையர் கொடுத்த பொருட்செல்வத்துடன் இந் நோய்ச் செல்வத்தையும் அனுபவிக்க வேண்டியதாகிறது.

யோகாவின் முதற்படி "மூச்சு" தான். கைகளை மேலே உயர்த்தும் போது கூட மூச்சை உள்ளே இழுத்து அதன் உதவியுடன் கைகளை மேலே உயர்த்த வேண்டும். பூமியை நோக்கி எந்த ஒரு உடல் பாகம் சென்றாலும் அது மூச்சை வெளியே விட்டு புவியீர்ப்பு சக்தியை பாவித்து தான் செல்ல வேண்டும்.

இனி உடலைப் பொறுத்தமட்டில் பயிற்சி மாத்திரமன்றி நாம் உண்ணும் உணவும் மிக முக்கியம். "What you eat that is what you are" என்பார்கள்.

நாம் உண்ணும் உணவின் அளவும் மிக முக்கியம். அளவிற்கு அதிகமாக உணவு அருந்தி விட்டு மூச்சு விட கஷ்டப்படும் பலரை நாம் கண்டிருக்கிறோம்.

எமது உடலில் (1/3) மூன்றில் ஒரு பகுதியை உணவாலும், (1/3) மூன்றில் ஒரு பகுதியை தண்ணீராலும், கடைசி (1/3) மூன்றில் ஒரு பகுதியை காற்றாலும் நிரப்ப வேண்டும். இம் மூன்றும் நாம் உயிர் வாழ்வதற்கு மிக முக்கியம்.

சிறு குழந்தைகள் இவை மூன்றையும் சமமாகத் தான் எடுக்கிறார்கள். இதை விட சூரிய ஒளியும் மிக முக்கியம். இதற்காகத் தான் சிறு குழந்தைகளை எண்ணெய் பூசி சூரிய ஒளியில் விடுவார்கள் எம் முன்னோர்கள். யோகாவில் கூட சூரிய நமஸ்காரத்திற்கு முதலிடம் கொடுக்கிறார்கள்.

இனி என்ன உணவை உண்ண வேண்டும், எப்போது உண்ண வேண்டும் என்பவற்றைப் பார்ப்போம். நாங்கள் உண்ணும் உணவு நாங்கள் வாழ்கின்ற சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப இருக்க வேண்டும். இலங்கையில் நாம் மூன்று நேரமும் அரிசியினாலான பொருட்களையே உட்கொள்கிறோம். இங்கு வந்தும் நாங்கள் அப்படியான உணவுகளை உட்கொண்டால் பல வியாதிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஆகையால் இங்கு விளையும் தானியங்களுக்குத் தான் முதலிடம் அளிக்க வேண்டும். கஷ்டம் தான் ஆனால் அதை விடக் கஷ்டம் கனடிய வைத்தியசாலை வாழ்க்கை. எங்களை வைத்தியசாலையில் விட்டு விட்டு வேலை சுமையால் சிலவேளைகளில் தான் எங்களைப் பார்க்க வருவார்கள். அதுவும் "சார்ஸ்" போன்ற வியாதிகள் இருக்கும் காலத்தில் அதுவும் இருக்காது. அவர்களும் பாவம் தான் என்ன செய்வார்கள்? தங்கள் இயலாமையை மறைக்க ஒரு அழகான மலர்ச் செண்டுடன் பார்க்கச் செல்வது மாத்திரமன்றி, சிலவேளைகளில் நோயாளியையும் வேதனைப்படுத்தி விட்டு சென்று விடுவார்கள்.

இவைகளில் இருந்து விடுபட இலை, குழை வர்க்க உணவுகளையும், Desert என்ற பெயரில் பல வகைப் பழங்களையும் உண்பதே சிறந்த வழி. Balance diet மிகவும் முக்கியம்.

(மறுபக்கம் வருக)

உண்ணும் உணவை உணர்ந்து உண்ண வேண்டும். T.V. முன் இருந்து ஏனோ தானோ என உணவை அருந்துதல் கூடாது. யோகப்பியாசம் செய்ய முன் உணவு அருந்துதல் கூடாது.

உணவை வேளா வேளைக்கு அருந்துதல் மிகவும் முக்கியம். முக்கியமாக இரவில் உணவு அருந்தியவுடன் படுக்கப் போவதைத் தவிர்க்கப பழக வேண்டும். உணவு அருந்தி கடைசி இரண்டு மணித்தியாலங்களின் பின்பாவது படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

இனி எங்கள் காலை, மாலைக் கடன்களை ஒழுங்காகச் செய்கிறோமா? Canada இல் மிக முக்கியமாக வீட்டில் வாசலுக்குக் கிட்டேயே Powder Room என வைத்து விடுவார்கள். நீங்கள் வெளியே போகும் போதும், வரும் போதும் அதனைப் பாவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு கழிவுப் பொருட்களை நாம் உடம்பிலிருந்து விரைவாக அகற்றுகிறோமோ அவ்வளவிற்கு அவ்வளவு நாம் சுகமாக வாழ வழி செய்கிறோம். Canada இல் அது ஒரு கொடை என்று தான் கூற வேண்டும். நாம் போகும் இடமெல்லாம் Rest Room என்ற பலகையைக் காணக் கூடியதாக இருக்கும்.

இனி மனதைப் பார்ப்போம். இது ஒரு குரங்கு என்று கூறுவார்கள். குரங்கு கூட ஒரு இடத்தில் இருந்து இன்னும் ஒரு மரத்திற்குப் பாயும். ஒரு சில வினாடிகள் தன்னும் ஒன்றும் பிடிக்காமல் இருக்கும். ஆனால் எங்கள் மனம் எப்போதும் ஏதாவது ஒரு சிந்தனையில் இருக்கும். இப்படிப்பட்ட மனதை அது அடக்கும் முறையைத் தான் தியானம் (Meditation) என்று கூறுவார்கள். யோகா நாள் முழுக்கச் செய்தாலும் எங்கள் மனம், மனம் போன போக்கில் போனால் யோகாவின் முழுப் பலனையும் நாம் பெற முடியாது. இப்படிப்பட்ட மனதை அடக்குவது எங்கள் கைகளில் தான் இருக்கிறது. நாம் சிறுவயதிலேயே மனதை ஆழ்நிலைக்கு ஏற்ப பதப்படுத்தி (Condition) வாழப் பழக வேண்டும். அப்படியாயின் அது வாழ்நாள் முழுக்க வந்து விடும்.

"தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்ற பதத்திற்கு இசைய நாம் வாழப் பழக வேண்டும்.

வருடங்கள் மாற வயது மாறும். ஆனால் எங்களை நாங்கள் மாற்ற மறந்து விடுகின்றோம். ஒவ்வொரு வருடப் பிறப்பிலும், நாங்கள் எங்களை ஒரு சிறுமாற்றம் செய்து எமது பிறப்பின் பலனை அறிந்து வாழ்க்கையைச் சந்தோஷமாக வளப்படுத்துவோமாக!



ஜனநாயகம் அபிப்பிராய பேதங்களுக்குத் தான் தீர்வு; சரி பிழை உண்மைகளுக்கல்ல

இலங்கையன்

உலக மன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும், நகர மன்றங்களிலும், கிராம மன்றங்களிலும், சமூக மன்றங்களிலும், பிரச்சனைகள் பற்றிய தீர்மானங்கள் ஜனநாயக முறைப்படி இன்றைய நாகரிக உலகில் நிறைவேற்றப்படுவதை நாம் அறிவோம். இந்த வகையில் ஆட்சிமன்றங்கள் தீர்மானங்களை நிறைவேற்றி ஆட்சி செய்வதனால் என்னவோ, மனிதன் இன்றைய உலகை நாகரிக உலகென்று சொல்லிக் கொள்கின்றான் போலும். இம்முறையை நாகரிகமான, பண்பான, பகுத்தறிவுக்குகந்த முறையென்று அரசியல் விஞ்ஞானிகளும், அரசியல்வாதிகளும், சமூகவியலாளர்களும், சமூகவாதிகளும் கூறிப் பெருமைப்படுவதையும் நாம் அறிவோம். இம்முறைப்படி உருவாக்கம் பெற்ற அரசுகள் தான், இன்று உலகிலுள்ள பெரும்பான்மையான நாடுகளை ஆளுகின்றன. இம்முறையைப் பரப்புவதற்கும், இம்முறையால் உருவாக்கம் பெற்ற அரசுகளை தக்க வைப்பதற்கும் என்று கூறி, தங்களை ஜனநாயகத்தின் காவலர்கள் என்று கூறிக் கொண்டு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் பொருளாதார, ஆயுத படைப்பல உதவிகளை அளிப்பதுமல்லாமல், ஜனநாயகத்திற்கு மாறான பயங்கரவாதச் செயல்களுக்குத் துணை போகும் அரசுகளையும், தேசிய இன விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்கள் என்று கூறிக் கொண்டு' அவற்றையும் ஒழித்துக் கட்டுவதற்கு தன்னிச்சையாக போர் தொடுத்து வருவதையும் நாம் அறிவோம். இது தான் பலஸ்தீனத்திலும், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் இடம்பெற்று வரும் குழப்பங்களாகும்.

ஜனநாயகம், உறுப்பினருக்கிடையேயும், குழுக்களுக்கிடையேயும், கட்சிகளுக்கிடையேயும் எழும் பிரச்சனைகளை குழப்பமின்றி சுமுகமாகத் தீர்ப்பதற்கென அறிமுகஞ் செய்யப்பட்ட தந்திரோபாயமாகும். ஆனால் அது பிரச்சனைகளைத் தீர்த்ததாகத் தெரியவில்லை. பதிலாக பல பிரச்சனைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

இலங்கையில் நடப்பதென்ன? ஜனநாயக முறைப்படி உருவான நாடாளுமன்றமும், ஜனாதிபதியுந்தானே ஆளுகின்றன. பிரச்சனைகள் ஏன் தீரவில்லை? உலகில் மிகப் பெரிய ஜனநாயக ஆட்சி என்று கூறப்படும் இந்தியாவில் நடப்பதென்ன? இந்திய நாடாளுமன்றத்திலுஞ் சரி, மாநில ஆளுமன்றங்களிலுஞ் சரி பிரச்சனைகள் அமைதி முறையில் தீர்க்கப்பட்டு தாமும், மாநிலங்களும் சகல துறைகளிலும் அபிவிருத்தி அடைகின்றனவா? இல்லையென்றே கூறவேண்டும்.

தொண்ணூறுகளில், சோவியத் நாட்டிலும், கிழக்கைரோப்பிய நாடுகளிலும், தனிக்கட்சி அரசியல் முறைக்கெதிராக மக்கள் போராடி ஜனநாயக முறையிலான அரசுகள் நிறுவப்பட்டு ஆட்சி நடைபெற்று வருகின்றன. இந் நாடுகளில் பிரச்சனைகள் தீர்ந்து அமைதியான முறையில் சகல துறைகளிலும் அபிவிருத்தியும் சுபீட்சமும் காணப்படுகின்றனவா? இல்லையென்று தான் கூற வேண்டும்.

உலக அரசியலிலுஞ் சரி, நாடுகளின் அரசியலிலுஞ் சரி, வலுப்பெற்று, அரசியல் விஞ்ஞானிகளாலும், அரசியல்வாதிகளாலும் சமூக விஞ்ஞானிகளாலும் சமூகவாதிகளாலும் உரத்துப் பேசப்படும் பிரபல்ய அரசியல் ஆயுதமாகிய "ஜனநாயகம்" எப்பொழுது ஏன் பயன்படுத்தப்படுகின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒருமுறை ஆசிரியர் ஒருவரின் வகுப்பு மாணவர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஒரு முக்கிய பிரச்சனை பற்றி மாணவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, ஒரு ஏகோபித்த தீர்மானத்தை மாணவர்களால் எடுக்க முடியாதிருந்தது. பிரச்சனை பற்றி இருவேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஆசிரியர் பிரச்சனை பற்றி தனது கருத்தைத் தெரிவிக்க முற்பட்ட பொழுது, (எதிர்ப்பக்கம் வருக)

மாணவர்கள் எவரும் அதை விரும்பாது, வாக்கெடுப்புக்கு விடும்படி ஏகோபித்து குரல் எழுப்பினார்கள். அதற்கமைய வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட பொழுது, 15 மாணவர்கள் ஒரு கருத்தையும், 10 மாணவர்கள் மற்றைய கருத்தையும் ஆதரிக்க, 5 மாணவர்கள் வாக்களிக்காது இருந்தார்கள். வாக்களிக்காத 5 மாணவர்களை, ஏன் வாக்களிக்கவில்லை என்று கேட்டபொழுது, தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் சரி பிழையைத் தங்களால் காண முடியவில்லை என்று கூறினார்கள். 15 மாணவர்கள் அதாவது பெரும்பான்மையான மாணவர்கள் ஆதரித்த கருத்துக்கமைய பிரச்சனை தீர்க்கப்பட்டது. இம்மாதிரியான தீர்ப்பைத் தான் ஜனநாயக முறையிலான தீர்ப்பு என நாம் கூறுகின்றோம்.

இத் தீர்ப்பின் படி 15 மாணவர்கள் ஆதரித்த கருத்தை சரி என்றும், 10 மாணவர்கள் ஆதரித்த கருத்தைப் பிழையென்றும் நாம் கூற முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. அத்துடன் 5 மாணவர்கள் இரு கருத்துக்களின் சரி பிழையைத் தங்களால் ஏன் காணமுடியவில்லை என்ற கேள்வியும் ஆசிரியர் பிரச்சனை சம்பந்தமான தனது கருத்தைக் கூற முற்பட்ட பொழுது, மாணவர்கள் ஏன் ஏகோபித்து மறுத்தார்கள் என்ற கேள்வியும் எழுகின்றன. இக் கேள்விகளுக்கு ஜனநாயகம் விடை பகருமா?

இன்னொரு சந்தர்ப்பத்தில், அதே மாணவர்களுக்கு, கணித பாடத்தின் பொழுது, அதே ஆசிரியர் கணிதப் பிரச்சனை அதாவது உத்திக் கணக்கொன்றை (Math Problem) க் கொடுத்து, அதை விடுவிக்கும்படி பணித்தார். 12 மாணவர்கள் ஒரு விடையையும், 8 மாணவர்கள் இன்னொரு விடையையும் பெற, மீதியானோர் விடுவிக்க முடியாமலும் இருந்தார்கள். இவ்விடைகளில் எது சரி எது பிழை என்பதைக் கேட்டுவிட்டு, அன்று மாணவர் சங்கக் கூட்டத்தில் எழுந்த பிரச்சனையை விடுவித்த மாதிரி விடுவிக்கலாமே என்று கூறிய பொழுது, மாணவர்கள் எல்லோரும் ஆசிரியரைப் பார்த்து ஒரு மாதிரி சிரித்தார்கள். இப் பிரச்சனையை ஜனநாயகம் விடுவிக்காது, நீங்கள் தான் விடுவித்து சரி பிழை சொல்ல வேண்டும் என்று மாணவர்கள் ஏகோபித்துக் கூறினார்கள். அதற்கு ஆசிரியர் நான் ஒரு சர்வாதிகாரியா என்று கேட்டுவிட்டுச் சிரித்தார். அதற்கு மாணவர்கள், "நீங்கள் இக் கணிதப் பிரச்சனையை விடுவிப்பதற்கான அறிவையும், திறனையும், வழிமுறைகளையும் நன்கு அறிவீர்கள். அந்தவகையில் உங்கள் தீர்ப்பு நூற்றுக்கு நூறு வீதம் சரி என்று நாங்கள் ஏற்றுக் கொள்வோம்" என்று கூறினார்கள். ஒரு மாணவன் சில சர்வாதிகாரிகளும் மக்கள் பிரச்சனைகளை இந்த முறையில் விடுவித்ததற்கான சந்தர்ப்பங்களும் உள என்று மிக மிடுக்காகச் சொன்னான். "நான், உங்கள் கூட்டப் பிரச்சனை சம்பந்தமாக எனது கருத்தைக் கூற வந்த பொழுது, நீங்கள் ஏன் அதை மறுத்தீர்கள்" என்று ஆசிரியர் கேட்ட பொழுது, உங்கள் கருத்து அது பற்றிய ஒரு அபிப்பிராயமாகவே இருக்குமே அல்லாமல், ஒரு வழிமுறையின் அடிப்படையில் வந்த யதார்த்தமான தீர்ப்பாய் இருக்க முடியாது என்று மாணவர்கள் கூறினார்கள்.

கணிதப் பிரச்சனை போன்றவற்றை, ஏற்கனவே நிறுவப்பட்ட காலத்தோடு, இடத்தோடு, ஆளோடு மாறாத புறவயமான அடிப்படைத் தத்துவங்கள், தேற்றங்கள், விதிகளின் அடிப்படையில் தூரீதியாக அதைக் கற்றவர்களே விடுவிக்கின்றார்கள். அத்துடன் விடுவித்துப் பெறப்பட்ட முடிவை அதாவது விடையை சரியா, பிழையாவென வாய்ப்பும் பார்க்கலாம். உதாரணமாக 2+5=7 எனும் கணிதச் சமன்பாட்டின் உண்மையை, அதாவது அது சரியோ பிழையோ என்பதை, "எண்ணல்" (Counting) எனும் அடிப்படைக் கணிதத் திறனைக் கொண்டு உண்மையெனக் காட்டலாம். அதே போல் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை, விஞ்ஞானத் தத்துவங்கள், கொள்கைகள், விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில், அதைக் கற்றவர்களால் விடுவிக்க முடியும். பெற்ற பெறுதிகளையும், விளைவுகளையும், முடிவுகளையும், செய்முறை மூலம் வாய்ப்புப் பார்க்கலாம்.

ஆகவே, கணிதம், விஞ்ஞானம் சம்பந்தமான பிரச்சனைகளை விடுவிப்பதில் பிரயோகிக்கப்படும் வழிமுறைகள், செய்முறை ரீதியாகவும் தர்க்கரீதியாகவும் நிறுவிப் பெறப்பட்ட இடம், காலம், ஆள் ஆகியவற்றோடு மாறாத, அழியாத புறவய உண்மைகளை உள்ளடக்கிய படிமுறைகளைக் கொண்டவையாயிருப்பதால், இவ்வகைப் பிரச்சனைகளை விடுவித்துப் பெறப்படும் பேறுகள் முடிவுகள், காலம், இடம், ஆள் ஆகியவற்றைப் பொறுத்தில்லை. அதாவது அவை மாறாத் தன்மையுடையன.

மாணவர் சங்கப் பிரச்சனை போன்றவற்றைப் பொறுத்தவரையில், அவை அகவயமானவை. அவற்றை விடுவிப்பதில் முன்வைக்கப்படும் வாதப் பிரதிவாதங்கள் காலம், இடம், ஆள் ஆகியவையைப் பொறுத்துள்ளன, மாறக் கூடியன. அதாவது அவை, அவற்றை முன்வைக்கும் தனி ஒவ்வொருவருடைய, அல்லது ஒவ்வொரு கட்சிகளுடைய அபிப்பிராயங்களே. ஆகவே இவ் அபிப்பிராயங்கள் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள் 2+5=7 என்ற சமன்பாட்டு உண்மை போன்று இருக்க முடியாது. அத்துடன் அவற்றை 2+5=7 என்ற உண்மையை வாய்ப்பு அதாவது சரி பார்ப்பது போல சரி பார்க்க முடியாது. ஆகவே இம் முடிவுகள் சரியோ பிழையோ என்பது கேள்விக்குறிதான்.

எனவே தான் உலக மன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும், சமூக மன்றங்களிலும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்ற முடியாதிருக்கும் பொழுது, உறுப்பினர்களுக்கிடையேயும், கட்சிகளுக்கிடையேயும் வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையில் ஏற்படக்கூடிய மோதல்களைத் தவிர்க்கும் பொருட்டும், சுமுகமான முறையில் தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டே ஜனநாயக முறை எனப்படும் வாக்கெடுப்பு முறை அறிமுகஞ் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இம் முறையினால் சரி, பிழை, நன்மை, தீமை, நியாயம், அநியாயம், உண்மை, பொய்மை தீர்மானிக்கப்படுகின்றன என்று எப்பொழுதும் நாம் கொள்ள முடியாது. சில சந்தர்ப்பங்களில் சரி பிழையென்றும், நன்மை தீமையென்றும், நியாயம் அநியாயமென்றும், உண்மை பொய்மையென்றும் தீர்மானிக்கப்படுவதுமுண்டு. இம்முறையினால் தற்காலிகமான தீர்வே சாத்தியம். பிரச்சனைகள் திரும்பவும் அரங்கேறி முன்னைய தீர்வுக்கு எதிர்மாறான தீர்வும் சாத்தியம் என்பது நாம் அறிந்ததே.

ஜனநாயக முறைப்படி அதாவது வாக்கெடுப்புக்கு விட்டுத் தீர்க்கப்படும் பிரச்சனைகளின் காரண காரியங்களும் காரணிகளும் அவற்றிடையே உள்ள தொடர்புகளும் தெளிவற்று அல்லது பூரணமாக இன்று வரையுந் தெரியாத நிலை இருப்பதனாற்றான், இப் பிரச்சனைகள் அறிவியலாளர்களின் ஆய்வு சார்ந்த தீர்வுக்காக விடப்படுவதில்லை. சுருங்கக் கூறின், பிரச்சனைகளின் காரண காரியங்களும், காரணிகளும் அவற்றிடையே நிலவும் தொடர்பும் பற்றிய முழு உண்மைகளும் தெரியாதவிடத்துத் தான், அவற்றிற்குத் தற்காலிக தீர்வு காண்பதற்கே ஜனநாயக முறை தேவைப்படுகின்றது. பிரச்சனைகளின் காரண காரியங்களும், காரணிகளும் முழுமையாகத் தெரிந்தவிடத்து, அறிவியலாளர்களே ஆய்வின் அடிப்படையில் தீர்வு காண முடியும். உதாரணமாக, ஒன்ராறியோ மாகாணத்தின் எந்தப் பிரதேசத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவலாம் என்பதை ஒன்ராறியோ மாகாண ஆளுமன்றம் ஜனநாயக முறைப்படி தீர்மானிக்க முடியாது. ஒன்ராறியோ மாகாண அறிவியலாளர் மன்றந்தான் ஆய்வின் அடிப்படையிற் தீர்மானிக்க முடியும்.

இப்பொழுது ஜனநாயக முறைப்படி தீர்மானிக்க வேண்டியிருக்கும் பிரச்சனைகளின் காரண காரணிகள் சம்பந்தமான உண்மைகள் எல்லாம் காலவரையில், (மறுபக்கம் வருக)

அறிவியல் வளர்ச்சியின் போக்கில் தெரிய வரும் பொழுது, பிரச்சனைகளுக்கு அறிவியலாளர்களே அறிவியல் முறைப்படி தீர்வு காண்பார்கள். ஜனநாயக முறை தேவைப்படாது, இன்னொரு வகையிற் கூறுவதாயின், அறியாமை தான் ஜனநாயக முறைக்கு மனிதனை இட்டுச் செல்கின்றது என்று கூறின் அது பிழையாகாது.

எனவே அறிவியல் நிரப்பாத இடத்தைத் தான் ஜனநாயம் தற்காலிகமாக நிரப்பிக் கொண்டிருக்கின்றது. அறிவியல் வளர்ச்சியில், ஜனநாயகத்தின் பிரயோகம் அருகிக் கொண்டே போகும். அறிவியல் முறையே மனித சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கான ஆயுதமென்றே கூற வேண்டும். அந்தவகையில் சமூக தேசிய உலக நிறுவனங்கள் அனைத்தும் அறிவியல் வளர்ச்சிக்கான சகல முறைகளையும் மேற்கொள்வதே, மனித சமுதாயத்திற்குச் செய்யக்கூடிய மிகப் பெரிய சேவையாகும். அறிவியல் தொழில்நுட்பத் துறையில் மிக வளர்ச்சியடைந்து வரும் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கும், இவ்வளர்ச்சியை கண்காணிக்கும் உலக மன்றமாகிய ஐக்கிய நாட்டுச் சபைக்கும்; அறிவியலை வளர்ப்பதிலும், அதை மற்றைய வளர்ச்சி பெறாத நாடுகளுக்குப் பரப்புவதிலும் பெரும்பங்குண்டு.

அறிவியல் வளர்ச்சியை ஒரு காலத்தில் மட்டந் தட்டிய மத ஸ்தாபனங்கள், இன்று அறிவியல் வளர்ச்சிக்கேற்றவாறு தங்கள் போதனைகளையும் சாதனைகளையும் மாற்றியமைத்து வருவதை நாம் அறிவோம். இம் மாற்றங்கள் மேலைத் தேசங்களிற் தான் இடம்பெற்று வருகின்றது. இந்தியா போன்ற கீழைத் தேசங்களில் அறிவியலின் தாக்கமும் செல்வாக்கும் அவ்வளவு ஏற்பட்டதாக இல்லை. இதற்கான முக்கிய காரணம் ஆழ்ந்த மத நம்பிக்கைகளால் ஏற்பட்ட மூட நம்பிக்கைகளே. இவற்றை, அறிவியல் தொழில்நுட்பம் மிக வளர்ச்சியடைந்த கனடா நாட்டிலும் எம்மக்கள் விட்டபாடில்லை. இம்மூட நம்பிக்கைகளால், சமயசாரம் கலாசாரம் என்ற போர்வையில், பணத்தைத் தான் விரயமாக்குகின்றார்கள். இதற்கும் ஜனநாயகம் துணை போகின்றது என்றே கூற வேண்டும். அண்மைக் காலங்களில் விஞ்ஞான இயற்கை நியதிகளும் ஜனநாயகத்திற்குச் சோரம் போவதை நாம் அறியாமலில்லை. இவையெல்லாம் தற்காலிகமானதே.



என் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை சேர்க்கலாமா?

சிவா கணபதிப்பிள்ளை

பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகளின் எதிர்காலப் பொருட் தேவைகளுக்குத் திட்டமிடுவதில் பெற்றோருக்கும் பெற்றோரின் பெற்றோருக்கும் அதிக ஈவு அளிக்கும் நோக்கத்துடனேயே கனடாக் குழந்தைகள் கல்வித் தாபன நம்பிக்கை நிதியம் நிறுவப்பெற்றது. இந்த மூலத்தாபனத்தின் ஊடாகச் சாதாரணமாக ஒரு விசேஷ சேமிப்புக் கணக்கை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் 18 வயதை எட்டியதும் உங்கள் சேமிப்பை முற்றாக மீளப் பெற்றுக் கொள்ள முடிகிறது. இந்த சேமிப்பை குழந்தைகளின் முதலாவது ஆண்டுப் படிப்பிற்கு உபயோகிக்கும் தீர்மானம் தாய் தந்தையர்களைச் சாரும். பிள்ளைகள் தொடர்ந்து படிக்கும் பொழுது எங்கள் தாபனம் அவர்களுக்குக் கொடுபட வேண்டிய புலமைப்பரிசில் கொடுப்பனவுகளைச் செய்யும்.

இங்கு கிடைக்கப்பெறும் மற்றைய திட்டங்களை விட கனடா குழந்தைகள் கல்வி நம்பிக்கை நிதியம் ஈவளிப்பதும் ஆக்கபூர்வமானதுமாகும். இப் பதிவு செய்யப்பட்ட கல்வி நம்பிக்கை நிதியம் பெற்றோருக்கும் பெற்றோரின் பெற்றோருக்கும் மற்றையோருக்கும் உயர்கல்விப் பொருட்தேவைகளுக்குச் சேமிப்பதற்கு அனுசரணையாக அமையவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் இலாப நோக்கற்ற கனடாக் குழந்தைகள் கல்வித் தாபனத்தின் ஆதரவில் உருவானது.

முக்கியமும் தனித்துவமும் வாய்ந்த குறிப்பிட்ட நம்பிக்கை நிதியச் சிறப்பு அம்சங்களோடு கனடாக் குழந்தைகள் கல்வி நம்பிக்கை நிதியத்தை தேர்ந்தெடுப்பதற்கான வேறு காரணங்களாவன:

உங்களுடைய சேமிப்பு அனைத்தும் உறுதியான பாதுகாப்புடன் இருக்கும்.

குழந்தைகள் கல்வி நம்பிக்கை நிதியத்தில் பெருகி வரும் சேமிப்பு ஏகமும் திட்டத்தின் பூரண காலம் வரை வரிவிலக்கு அனுபவிக்கும்.

வழங்குபவரின் (பெற்றோர் பெற்றோரின் பெற்றோர் ஆகியவர்) சேமிப்புக்கு வரிவிலக்கு எங்கள் பதிவு செய்யப்பட்ட கல்விச் சேமிப்புத் திட்டத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அபூர்வ வரிவிலக்காகும்.

உலகில் எப்பகுதியிலும் அமைந்திருக்கும் அங்கீகரிக்கப் பெற்ற கல்லூரி, பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்கல்வித் தாபனம், தனியார் தொழிற் பயிற்சித் தாபனம் ஆகிய எவற்றிலும் உங்கள் பிள்ளை பேரப்பிள்ளைகள் படிப்பை மேற்கொள்ளலாம்.

இந்த சேமிப்பு முதலீட்டுப் பணத்திற்கு கிடைக்கும் கூட்டு வட்டித் தொகையுடன் பிள்ளைகளுக்கு வருடா வருடம் $400 டாலர் அரசமானியமாகக்கிடைக்கும் பணமும் வைப்பிலிடப்படும். மிகவும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விசேட நன்மை மற்றைய தாபனங்களிலும் பார்க்க கனடாவிலேயே (எதிர்ப்பக்கம் வருக)

அதிக தொகை புலமைப் பரிசில் பணம் எமது கனடா சிறுவர் கல்வி நிதியமான The Children's Education Trust Of Canada ஆகும். கடந்த 7 வருடங்களாக மற்றைய தாபனங்களுடன் ஒப்பிடுகையில் அதிக தொகை புலமைப் பரிசில்களை வழங்குபவர்கள் எமது தாபனம் தான் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

மேலும் வைப்பீடு செய்பவர் எவராவது ஒருவருக்கு நிரந்தர உடல்வலுக் குறைவு (Disability) ஏற்படும் போதோ இறப்பு ஏற்பட்டாலோ நீங்கள் கட்ட வேண்டிய மிகுதித் தொகைகளும் Insurance Company மூலமாக உங்கள் பிள்ளைகளின் வைப்பீட்டில் கட்டப்படும் சேவையும் உண்டு என்பதால் இந்தச் சேவை உங்களுக்கு மன நிம்மதியையும் ஆறுதலையும் கொடுக்கும். மேலும் ஒரு புதுமைத் திட்டமாக எங்கள் தாபனத்தின் புலமைப் பரிசில் திட்டத்துடன் இணைந்து Air miles என்ற விமானப் பயணப் புள்ளிகளை வழங்கும் விசேஷம் எங்கள் திட்டங்களில் செயற்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் மற்றைய RESP திட்டங்களில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. You can earn Air Miles Reward Miles by enrolloing your children with E.E.T.

நீங்கள் எப்போதும் மேற்படி தாபனத்தின் www.educationtrust.ca என்ற இணைய முகவரி மூலம் தேவையான விபரங்களை அறியலாம். உங்களுக்குத் தேவையான மேலதிக விபரங்கள் பெற கீழ்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொள்ளலாம். 416-438-0660, 416-438-3478, 416-899-6044. உங்களுக்கு நம்பிக்கையான சேவையை வழங்க நான் எப்போதும் தயாராக உள்ளேன். email: sivakana16@hot-mail.com

கார்த்திகைப் பூ எமைக் காப்போரின் பூ

தமிழீழ தேசியப் பூவாக பிரகடனம் செய்யப்பெற்றுள்ள கார்த்திகைப் பூ முன்னட்டையின் வலது மேல் மூலையில் இடம்பெற்றுள்ளது

கௌரி

அதன் அற்புத எழில் காட்டானான என்னைக் கவரும் என்றால் காட்டுப் பூக்களான அந்தத் தியாக உள்ளங்களில் தீரா இடம் பிடித்ததில் வியப்பில்லை. அழகழகான மெல்லிய நீண்ட விரல் போன்ற அல்லிகள் ஆறு. அவை உள்வெளியாக வளைந்து நிற்கின்றமையால் சற்றே மறைந்தபடி நிற்கும் வெண்பச்சைப் புல்லிகள் மூன்று வெளியே நீட்டியபடி நிற்க, ஆணகத்தின் இழைகளோ பெரிய மகரந்தப் பைகளைச் சுமக்க முடியாமல் சுமந்தபடி, தாங்க முடியாமையால் சற்று வெளிப்புறமாக வளைந்து நிற்க, முனையில் பெண் குறியுடன் கிடை நிலையிலே காணப்படும் சூல் தண்டோடு கூடிய பூ பார்க்கவே பரவசமூட்டும் கொள்ளை அழகு. உண்மையிலே வேறு எத்தனையோ பூக்கள் தமது வாசனையால் நம்மைக் கிறங்க வைக்கலாம். ஆனால் பூ எனப் பார்த்தால் கார்த்திகைப் பூவிற்கு நிகர் கார்த்திகைப் பூ தான். அல்லிகளின் மஞ்சள் நிறமான கீழ்ப் பகுதியும் செந்நிற மேற்பகுதியும் தேர்ந்த ஓவியனால் கூட வெளிக்கொணர முடியாத அற்புத நிறச் சேர்க்கைகள். அவை வெளிர் நிறங்கள். கண்ணுக்கு முன்னாலேயே சிறிது சிறிதாக நேரத்துக்கு நேரம் வர்ணஜாலம் காட்டும் (Spectrum of colours) மாய்மாலம் அப்பூவில் உள்ளது முகிழ்கின்ற போது வெளிர் பச்சீசயில் இருந்து வெளிர் மஞ்சளாக மாறி மலர்ந்தது முதல் உதிர்கின்ற வரை சிறுகச் சிறுக அடர் நிறமாகும் அற்புத அழகினை அங்கே காணலாம்.

காரணப் பெயர். அதன் எழிலை மேலை நாட்டவன் மிகவும் ரசித்தமையால் தான் அதற்கு Gloriosa Superba என தாவரவியல் பெயரிட்டான். தாவரவியல் பெயர் எப்பொழுதும் இரு கூறுகளை உடையதாக இருக்கும். முன் உள்ளதை இனப் பெயர் என்போம். பின் உள்ளதை சாதிப் பெயர் என்போம். கார்த்திகைப் பூவினுக்கு தாவரவியல் பெயரிட்டோர் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை எல்லாம் வீதியில் எறிந்து விட்டு அதன் அழகால் பரவசப்பட்ட நிலையில் இனப்பெயராக வியத்தகு (Gloriosa) என்பதையும் சாதிப் பெயராக நேர்த்தியான (Superba) என்பதையும் இட்டமை அவர்களையும் இதன் அழகு ஆட்கொண்டு விட்டது என்பது தானே அர்த்தம். கார்த்திகைப் பூ இந்தியா, தமிழீழம், நைஜீரியா, நியூசிலாந்து போன்ற அயன மண்டல பிரதேசங்களில் காணப்படுகிறது. எமது நாட்டிலும் தமிழ் நாட்டிலும் கார்த்திகை மாதத்தில் பூக்கின்ற இக் கொடி நைஜீரியாவில் ஆடி மாதத்திலும் நியூசிலாந்தில் தை மாசியிலும் பூக்கிறதாம்.

எமது ஊரிலேயும் நைஜீரியாவிலேயும் காட்டிலே தான் தோன்றியாக முளைத்துத் தன்னிச்சையாக வளர்ந்து, தனித்துவமான பூக்களைத் தந்த பின் கடமை முடிந்தது என கண்ணில் இருந்து மறையும் இந்த மகோன்னத தாவரத்தை வீட்டுக்கு இட்டு வந்து தொட்டியில் இட்டுத் தாலாட்டிச் சீராட்டப் பல முறை முயன்ற நான் கண்டது தோல்வியே. வன்னியில் செழிப்பாக இதனை வளர்த்துள்ளார்களாம். நம் இளைஞர்கள் கைகள் என்றுமே வெற்றியின் பிடியில் எனக் கூறவும் வேண்டுமோ.

கார்த்திகைப் பூ தாவரத்தில் பல அதிசயிக்கத்தக்க தனிச் சிறப்புகள் அவர்கள் போன்று உண்டு. காலம் தவறாமை ஒன்று. பருவம் மாறினாலும், வருணன் ஏய்த்தாலும், தருணம் பார்க்காமல் வெளிவரும் கடமை உணர்வுடன் மண்ணின் கீழ் உள்ள கிழங்கில் இருந்து முளைக்கும் இக் கொடி மென்தண்டுடையது. அது படர்வதற்கு இன்னொரு தாவரம் தேவையாகும். மென்மையான இதன் இலை ஈட்டித் தலை உருவான (Lanceolate) அமைப்புடையது. இலையின் நுனி நீண்டு ஒரு சுருளியாகின்றது. அச் சுருளியின் உதவியால் தான் கொடி வேறொரு தாவரத்தைப் பற்றி நிற்கிறது. இதன் கிழங்கு வேர்த்தண்டு வகையினைச் சார்ந்தது என்பர். நச்சுத் தன்மை வாய்ந்தது என்றும் தற்கொலை செய்வோர் கிழங்கினை அவித்துச் சாப்பிடுவார்கள் எனவும் கேள்விப்பட்டுள்ளேன்.

மொட்டுக்கள் புல்லிகளால் மூடப்பட்டு பச்சை நிறத்தவையாய் காணப்படும். பின்னர் மலர்கின்ற பொழுது அல்லிகள் முதலில் பச்சையாக கீழ் நோக்கி வளைந்தபடி நிற்கும். சிறிது சிறிதாகப் பூ நன்கு மலரும் போது அல்லிகள் நீட்சியுறுவதோடு இரு பக்கங்களிலும் அலை அலையாய் நெளிந்து படிப்படியாகப் பின்னோக்கி வளைகின்றன. நிறத்திலும் சிறிது

(மறுபக்கம் வருக)

சிறிதாக மஞ்சளும் சிகப்பும் அதிகமாகி இறுதியில் முழுமையாகச் செந்நிறமாக மாறி விடுவதும் உண்டு.

பொதுப் பெயர்

வெவ்வேறு நாடுகளிலே இதற்கு வேறு பெயர்கள் உண்டு. நமது மூதாதையர் கார்த்திகைப் பூவினைக் காந்தள் பூ என அழைத்தார்களாம். சங்க இலக்கியத்திலே காந்தள் பற்றி நிறையவே உள்ளது. அதிகமாக எல்லோருக்கும் பரிச்சயமானது காந்தளைப் பெண்களின் விரல்களுக்கு ஒப்பிடும் குறுந்தொகைப் பாடல் தான். அது

முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்,
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந்து அட்ட தீம் புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

கூடலூர் கிழார் முல்லை - 167

ஒடுங்கிய நெடிய ஆறு இதழ்கள் என அழைக்கப்படும் அல்லிகள், கீழ்ப் பகுதி மஞ்சள் நிறமாகவும் மேற்பகுதி செந்நிறமாகவும் நிறம் பூசிய நகங்களைக் கொண்ட வெண்டைக்காய் விரல்களுக்கும் கச்சிதமான ஒற்றுமையே.

சங்க இலக்கியத்திலே காந்தள் பற்றி குறுந்தொகையிலேயே அதிகம் சொல்லப்பட்டுள்ளது. அக் காலத்திலே றோசாச் செடிகள் எமது பூக்களின் பட்டியலில் இருந்ததில்லை எனவே, கவிஞர்களின் கற்பனைகளுக்கு முத்தாய்ப்பாக இருந்தவை காந்தள், மல்லிகை, முல்லை, குவளை போன்றவையே. குறுந்தொகையிலிருந்து நிறையவே காந்தள் பற்றிய தகவல்களைப் பெறக் கூடியதாக உள்ளது.

வாழிடம்

நற்றிணை எனும் சங்க இலக்கியத்திலே தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் மலைச் சாரலில் நிறையக் காந்தள் மலர்கள் கமழ்ந்தபடி காணப்படுகின்ற வனப்பை தோழிக்குத் தலைவி கூறுவதாகக் கூறுவதிலிருந்து இத்தாவரம் சாரல்களிலே காணப்பட்டமை தெரிகிறது.

_____ தோழி! - காந்தள்
கமழ் குலை அவிழ்ந்த நயவருஞ் சாரல்
கூதள நறும் பொழில் புலம்ப, ஊர்வயின்
மீளுவம் போலத் தோன்றும் - தோடு புலர்ந்து
அருவியின் ஒலித்தல் ஆனா
கொய்பதம் கொள்ளும், நாம் கூடம் தினையே.

குறிஞ்சி - 313

காந்தளை வேலியாகக் கொண்ட மலை நாடு என்றே கிள்ளிமங்கலக் கிழார் என்ற புலவரும் பாடியுள்ளார். வளவுகளின் எல்லைகளாக அமைந்த வேலிகள் எல்லாம் காந்தள் கொடிகளாலேயே நிரவிக் காணப்பட்ட காட்சியை எண்ணப் பரவசம் ஏற்படுகிறது.

காந்தள் வேலி ஓங்கு மலை நல் நாட்டுச்
செல்ப என்பவோ கல்வரை மார்பர் _____

கிள்ளிமங்கலக் கிழார் குறிஞ்சி - 76

காந்தளே இயற்கை வேலியாகக் கொல்லி மலையில் அமைந்திருந்தது என பிரபல புலவர் கபிலரும் கூறியுள்ளார்.

அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பரு இலைக் குளவியொடு பசு மரல் கட்கும்
காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி _____

கபிலர் குறிஞ்சி - 100

மலரைப் பற்றி

காந்தள் மலரின் அழகுத் தோற்றத்தை மதுரை அறுவை வாணிகன் இளவேடனார் எவ்வளவு அழகாக வருணிக்கிறார். பல கீற்றுகளையுடைய பாம்பினது படம் ஒடுங்கியதைப் போலக் குவிந்து கீழ்க் காற்றால் வீழ்த்தப் பெற்றுக் கிடக்கின்ற ஒளி வீசும் செந்நிறமான காந்தள் என்கிறார். அவர் செந்நிறமான காந்தள் என்பதிலிருந்து அம்மலர் முதிர்வடைந்து கூம்பிய நிலையில் உள்ளது எனத் தெரிகிறது. அதனாலே தான் அதனைப் படம் ஒடுங்கிய பாம்பின் தலைக்கு வருணிக்கிறார் போலும். புலவர்கள் பிழைக்கார்கள். பிழைக்கத் தெரிந்தவர்கள்.

தோழி! பல் வரிப்
பாம்பு பை அவிந்தது போலக் கூம்பி,
கொண்டலின் தொலைந்த ஒண் செங்காந்தள்

குறிஞ்சி - 185

அவர் செங்காந்தள் என்பது முதிர்ந்த மலர்கள் செந்நிறமாக மாறியதைக் கண்டு என எண்ணலாம். அல்லிகளில் சிவந்த புள்ளிகள் உள்ள சில உப இனங்களும் காந்தளில் உண்டு எனவும் தெரிய வருகிறது.

கிழங்கு

காந்தள் கிழங்கின் மூலமே பரவுகிறது என்பதையும் அதன் மெலிந்த இலை பற்றியும் கபிலர் வருணித்துள்ளார்.

காலை வந்த முழுமுதற் காந்தள்
மெல் இலை குழைய முயங்கலும்,
இல் உய்த்து நடுதலும் கடியாதேனோ
கபிலர்

குறிஞ்சி - 361

காந்தளுக்கு உலர் பழமும் அதனுள்ளே நிறைய விதையும் உள்ளது எனவும் அந்த விதைகள் மூலம் காந்தளைப் பயிரிடலாம் எனவும் சொல்கிறார்கள். நான் விதைகளைக் காணவில்லை. அவர்கள் எப்படிப் பயிரிட்டார்களோ தெரியவில்லை. தும்பி கூட அதன் ரசிகனாம். காந்தளின் அழகை நாம் மட்டுமா ரசித்தோம். அதன் அழகை ரசிக்க அது மலர்கின்ற வரைக்கும் பொறுமை பேணும் நிலை வண்டுகளுக்கும் கூட இல்லையாம். அவை அந்த மலரை தானாக மலர விடாமல் தாமே திறந்து விடுகின்றனவாம்.

காந்தள்அம் கொழுமுகை, காவல்
செல்லாது
வண்டு வாய் திறக்கும் பொழுதில்
கருவூர்க்
கதப்பிள்ளை குறிஞ்சி - 265

வாசம் உள்ளதா? காந்தள் பற்றிக் கவிஞர்கள் கூறிய வருணனைகளில் ஒன்று மாத்திரம் தான் சற்றுச் சந்தேகத்துக்கிடமாய் உள்ளது.

ஆசிரியன் பெருங்கண்ணனார் "மணம் வீசுகின்ற அசைகின்ற கொத்துக்களை உடைய காந்தள் பூவின் நறிய மகரந்தத்தை ஊதுகின்ற தும்பி எனும் வண்டு" என்கிறார். நான் அறிந்த வரையில் கார்த்திகைப் பூவினுக்கு மணம் இல்லை.

கமழும் அலங்கு குலைக் காந்தள்
நறுந் தாது ஊதும் குறுஞ் சிறைத் தும்பி

குறிஞ்சி - 239

சங்க இலக்கியப் புறநானூறு கண்ட புலித் தலைவன் என்றார் முத்தமிழ் வித்தகர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள். சங்க இலக்கியத்தில் பெருமையுடன் திகழ்ந்த காந்தள் மலரைத் தேசிய மலராக்கியது சிறந்த ஒரு தேர்வு தான்.

தன்னார்வ சமூகப் பற்றாளர்



யோகி தம்பிராஜா

13வது ஆண்டு விருது

1980ன் பிற்பகுதியிலும் 1990களின் முற்பகுதியிலும் கனடாவில் வசித்த தமிழர்களுக்கு நன்கு அறிமுகமானவர்களில் ஒருவர் திரு. யோகி தம்பிராஜா. இதற்குக் காரணம், சமூகத்தின் முன்னணிச் சேவையாளர்களில் ஒருவராகவிருந்து இவர் ஆற்றி வந்த பணிகளே.

1986ம் ஆண்டில் புதிய குடிவரவாளராகக் கனடா வந்த யோகி அவர்கள், தாமுண்டு தமது குடும்பமுண்டு என்று வாழ விரும்பவில்லை. புதிய நாட்டில் குடிபுகுந்த புதிய இனத்தின் வாழ்விலும் வளத்திலும் அக்கறை காட்ட விரும்பியதால், தனது சொந்த வாழ்வின் சில மணித்துளிகளைச் சமூகத்தின்பால் செலவிட விரும்பினார்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பட்டயக் கணக்காளராகப் பணியாற்றிய இவரது நாட்டம் நிதித்துறை மற்றும் முதலீடு சம்பந்தமாக மாறியதால், கனடியத் தமிழர்களின் எதிர்கால சுபீட்சத்துக்கு நிதி எவ்வளவு முக்கியமானது என்பதை முற்கூட்டியே உணர முடிந்தது.

இதனால், தமிழில் இது தொடர்பான நூலொன்றினை எழுதி வெளியிட விரும்பினார். எழுத்து மறம்மும் வெளியீட்டுத்துறை ஆகியவைகளில் முன்அனுபவமில்லாத நிலையிலும் துணிவே துணையாகக் கொண்டு தமது கன்னி முயற்சியில் கால் பதித்து இரண்டு வருடங்களில் 'கனடாவில் நிதி வளர' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இது, 1988ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சி. அவ்வேளையில் தமிழர்களின் சனத்தொகை கனடாவில் இன்றுபோல் இல்லையாயினும், தமிழ் மக்கள் இயற்கையாகவே சேமிப்பு மற்றும் முதலீடு சம்பந்த விடயங்களில் அக்கறையானவர்களாக இருந்ததால், நூலின் சகல பிரதிகளும் சில மாதங்களில் முடிந்து விட்டன.

சமூகத்தன் மீது இவருக்கிருந்த அக்கறையைத் தெரிந்துகொண்ட கனடா முதுதமிழர் மன்றம், இவரது சேவையைப் பயன்படுத்த விரும்பியது. யோகி தம்பிராஜா அவர்களது நாட்டமும் அதுவாகவே இருந்ததால், 1988-1989 காலப்பகுதியில் அதன் செயலாளரானார். முதுதமிழர் மன்றத்தின் ஆரம்ப காலமது. இன்றுபோல் அங்கத்தவர் தொகை ஆயிரக் கணக்கில் இருக்கவில்லை. நூறு வரையானவர்களே இருந்தனர். இதனால் மன்றத்தின் உயர்ச்சிக்கும் சேர்த்துக் கடுமையாக உழைக்க நேரிட்டது. முதுதமிழர் மன்றம் இன்று கனடிய மண்ணில் மிக ஆழமாக வேருன்றி நிற்கின்றதென்றால் அதற்கு உரமிட்டு நீர் பாய்ச்சியவர்களில் போகி அவர்கள் முக்கியமானவர்.

அதேகாலத்தில் 'சேக்கம்' (SACEM) அமைப்பிலும் தம்மை ஒருவராக இணைத்துக்கொண்டார். இலங்கைச் சிறுபான்மையினர் நலன்பேண் மன்றம் என்ற 'சேக்கம்' அமைப்பின் தலைவர் பதவி 1992ம் ஆண்டில் இவரை நாடி வந்தது. அதனை ஓர் அலங்காரப் பதவியாகப் பார்க்காது, சேவைக்கான சந்தர்ப்பமாகக் கருதியதால் தமது பதவிக் காலத்தைப் பொன்னெழுத்துகளால் பொறித்துச் சென்றுள்ளார்.

கனடாவில் குடியேறும் புதிய தமிழர்களின் குடியமர்வுச் சேவையினை கனடா தமிழீழச் சங்கம் கவனித்து வந்ததால், ஒரே பணிக்குள் புகுந்து தேவையற்ற நெருக்கடியைச் சமூகத்தில் ஏற்படுத்த விரும்பாத நிலையில், அப்போது முளைவிட ஆரம்பத்திருந்த தமிழ் வர்த்தக முயற்சியை நெறிப்படுத்த 'சேக்கம்' அமைப்பு விரும்பியது. இதன் முதற் கட்டமாக வர்த்தகக் கருத்தரங்கொன்றை 'சேக்கம்' அமைப்பின் ஊடாக யோகி தம்பிராஜா அவர்கள் ஏற்பாடு செய்தார். இலங்கையில் வங்கித்துறையில் பல வருடங்கள் பணியாற்றிய அனுபவஸ்தர்களான அகஸ்தின் ஜெயநாதன், 'ஆர்.ஜி' நிறுவன செல்வரத்தினம் ஆகியோர் இதன் பின்னணியில் நின்றுழைத்தவர்கள்.

இந்தக் கருத்தரங்கில் கருத்தரித்த குழந்தையே கனடாத் தமிழர் வர்த்தக சம்மேளனம் என்பதை இப்போது சம்மேளனத்தில் இருக்கும் பலர் அறியமாட்டார்கள். யோகி அவர்களை வர்த்தக சம்மேளனத்தின் செவிலித்தாய் என்றும் சொல்லலாம். இதன் காரணத்தால் வர்த்தக சம்மேளனத்தின் இரண்டாவது தலைவர் பதவியையும் இவரே ஏற்க நேர்ந்தது.

'சேக்கம்' நிறுவனத்தின் தலைவர் பதவியை முடித்துக்கொண்டபின் 1994ல் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் பதவியை ஏற்ற இவர் தமது பதவிக் காலத்தில் வருடாந்த வர்த்தகக் கண்காட்சியை மேலும் விருத்தி செய்வதில் வெற்றி கண்டார். அவ்வேளையில் ஸ்காபரோவிலுள்ள பாடசாலை மண்டபங்களில்தான் இந்த வர்த்தகக் கண்காட்சி வருடாந்த வைபவமாக நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு. யோகி தம்பிராஜா அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவன். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1958ம் ஆண்டில் கலைத்துறைப் பட்டம் பெற்றவர். 1962ம் ஆண்டில் பட்டயக் கணக்காளர் பட்டம் பெற்றவர். கொழும்பில், Ford Rhodes Thronton, Shaw walker & Hedge, Union Carbide, Pfizer ஆகிய நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவசாலி. பின்னர் உலக வங்கியின் நிதிக் கட்டுப்பாட்டாளர் (Finance Controller) பதவியைப் பெற முடிந்தது.

1986ம் ஆண்டு வரையும் மேற்கு ஆபிரிக்காவின் லைபீரியா, கானா, நைஜீரியா ஆகிய நாடுகளில் விசேட செயற்திட்டங்களில் பணியாற்றும் சந்தர்ப்பமும் இவருக்குக் கிடைத்தது. 1986ம் ஆண்டு ஜூலையில் கனடா வந்தபின் Mutual Fund Advisor மற்றும் Life Insurance Agent ஆகியவைகளில் லைசென்ஸ் பெற்று அத்தொழிலில் தம்மை ஈடுபடுத்தினார்.

கனடாவில் 1988ம் ஆண்டில் Fortune Financial Corporation இல் முதலீட்டு ஆலோசகராகச் சேர்ந்து, பின்னர் அந்த நிறுவனத்தின் உபதலைவராக உயர்வு பெற்றார். 1998 முதல் 2000 வரையும் Merryl Lynch Canada நிறுவனத்தின் நிதிஆலோசகராகவும் உபதலைவராகவும் கடமையாற்றினார். 2000லிருந்து இன்று வரையும் CIBC Wood Gundy யில் முதலீட்டு ஆலோசகராகவும் உபதலை-லவராகவும் பணியாற்றி வருகின்றார்.

திரு. யோகி தம்பிராஜா அவர்கள் தொழிற்றுறை முன்னோடியாக இருக்கின்ற அதேசமயம், சமூகத்தின் மீதான அக்கறை காரணமாக அவர் ஆற்றியுள்ள பொதுப்பணிகளுக்காக இவ்வாண்டுக்கான தமிழர் தகவல் விருதும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் மாணவர் தலைவனாகவிருந்த செல்வன் அகிலன் திருச்செல்வம் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது.

திரு



செல்வி
சாந்தா பொன்னுத்துரை

13வது
ஆண்டு
விருது

பரதக்கலா வித்தகி

பரதக் கலையுலகில் சாந்தா பொன்னுத்துரை என்ற பெயர் மிக அழுத்தமாகவே பதிந்துவிட்ட ஒரு முத்திரை. இந்த முத்திரை இணையற்றது. இந்த அளவுக்குத் தாயகத்துக் கலைஞர் வேறு எவரும் இந்தியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா என்று உலகளாவிய ரீதியில் பரதத் தேரிலே பவனி வரவில்லை.

இதையிட்டு நாளாந்தம் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பது சாந்தாவைப் பெற்றெடுத்த பதி யாழ்ப்பாணத்து நல்லூர். தந்தையார் திரு டானியல் பொன்னுத்துரை அவர்கள் தாயார் பேள் கிருபை மலர். பெற்றோரின் உந்துதலால் நான்கு வயதிலேயே நடனத்தைப் பயிலத் தொடங்கினார் சாந்தா. இவரது சின்னக் கால்கள் அக்காலத்தில் யாழ்நகரில் திரு. இராசநாயகம் என்பவரால் தொடங்கப் பெற்ற நாட்டியக் கல்லூரியில் மின்னத் தொடங்கின. இந்தியாவிலிருந்து வந்த நடன ஆசிரியர்களாகிய செல்லப்பன், பவானி தம்பதிகள், சுகுமார் ஆகியோரும் குழந்தை சாந்தாவின் கூத்துக் கால்களுக்கு கொலுசுகள் அணிந்தனர். பிரபல ஈழத்து நாட்டியக் குருமணி ஏரம்பு சுப்பையா அவர்களிடமும் நடனத்தைத் தொடர்ந்து கற்றார்.

இவரது கலையார்வத்தையும் அதீத திறமையையுங் கண்டு வியந்த பெற்றோர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இந்தியாவுக்கு அனுப்பிப் பரதக் கல்வியைத் தொடர வழிவகுத்தனர். இந்தியாவில் திருமதி ருக்மிணிதேவி அருண்டேல் உருவாக்கிய கலாஷேத்திரத்தில் 1962 - 1967 வரை முழுநேர மாணவியாகக் கற்று 'டிப்ளோமா' பட்டத்தை அதி திறமைச் சித்தியுடன் பெற்றுக் கொண்டார்.

செல்வி சாந்தா பொன்னுத்துரையின் அரங்கேற்றம் 1968ம் ஆண்டு யாழ் நகரசபை மண்டபத்தில் கலாஷேத்திர பின்னணி இசைக் குழுவினருடன், பிரபல கலைஞரும் அப்போதைய யாழ் மாவட்ட அரசாங்க அதிபருமான திரு. வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்றது.

சாந்தாவின் ஆசிரியப்பணி 1967ல் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகியது. பின்னர் பேராசிரியர் கைலாசபதியின் முயற்சியால் யாழ்ப்பாண வளாகத்தின் ஒரு பிரிவாக இராமநாதன் நுண்கலைக் கூடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் நடனத்துறைக்குத் தலைவராகவும் விரிவுரையாளராகவும் சாந்தா நியமனம் பெற்றார். இக்காலப் பகுதியில் நாடகத் துறையுடன் இணைந்து சமூக சீர்திருத்த நாட்டிய நாடகங்கள் பலவற்றைத் தயாரித்தார். நுண்கலைக் கூடத்தின் பொறுப்பதிகாரியாகவும் பதவி உயர்வு பெற்றார்.

வட இலங்கைக் கீழைத்தேச சங்கீத சபையின் பரிட்சகராகவும் இலங்கைக் கல்வி அமைச்சின் நடன பாடப் பரீட்சகர் குழுவில் ஒருவராகவும் நடனத்துக்கான பாடவிதான திட்ட வல்லுநராகவும் இவர் பணிபுரிந்திருக்கின்றார். வட இலங்கைச் சங்கீத சபையில் நடனம் ஒரு பாடமாகச் சேர்க்கப்படுவதற்கும் அதற்கான பாடவிதானம் வரைவது முதலான விடயங்களைச் சீராக்குவதற்கும் சாந்தா ஊன்றுகோலாக விளங்கியிருக்கின்றார்.

இவ்விதமான பன்முகப்பட்ட பணிகளாற் பெற்ற பட்டறிவுக்குப் பின்னரும் பரதக்கலையை மேலும் கற்க வேண்டும் என்னும் வேட்கையினால் பம்பாய் (மும்பை) பல்கலைக்கழகத்தின் நாளந்தா நிருத்திய மகாவித்தியாலத்தில் மேற்படிப்பை மேற்கொண்டு முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

சாந்தாவின் புகழ் பிறந்த மண்ணிலன்றிப் பிறநாடுகளுக்கும் எட்டியது. சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கூடம் சாந்தாவை அழைத்தது. ஈழத்தவர் அவரது சேவையை இழந்தாலும், ஈழத்தவர் புகழ் தென்கிழக்காசியா வழியாக வையகம் எங்கும் பரவியது.

சாந்தா ஈழத்திலும் சிங்கப்பூரிலும் கலைவிழாக்களுக்காகவும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காகவும் பல நாட்டிய நாடகங்களை இயக்கியுள்ளார். லவகுச, ராஜ நர்த்தகி, விசுவாச ஒளி, ஜீவ ஒளி, ஓவியன் கனவு, நெளகா விஹாரம் (நாட்டிய விழா - 1987), ஷியாமா (நாட்டிய விழா - 1991), கண்ணப்ப நாயனார், இராமாயணம், காளிங்க நர்த்தனம், ராகத்வனி, அறுவடை நடனம் (சிங்கப்பூர் இளைஞர் விழா - 1991), ருது மகாத்மியம் (சிங்கப்பூர் தேசிய கலைவிழா, ஹொங்கொங் சர்வதேச நாட்டாரியல் விழா - 1992), மக்டலீன் மரியம் அமைதிக்கான கூறுகள் (ஆசிய நடன விழா - 1996) ஆகிய படைப்புக்கள் சாந்தாவின் திறமைக்கு மலைவிளக்குகளாக விளங்குகின்றன.

உலகப்புகழ் கலாவித்தகர்களான பத்மா சுப்பிரமணியம், பேராசிரியர் C. சந்திரசேகர், தனஞ்செயன் ஆகியோருடன் இணைந்து சிங்கப்பூரில் இவர் மேடையேற்றிய ருது மகாத்மியம், பஞ்ச மஹாபூதம், சங்கமித்திரா ஆகிய நாட்டிய நாடகங்கள் பெயர் பெற்றவை.

இலங்கை, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளில் சாந்தா பல அரங்கேற்றங்களைச் செய்து புகழ் ஈட்டியவர். இன்று அவரது மாணவர்கள் உலகின் பல பாகங்களிலும் உன்னத கலைஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் பரதக்கலைக்குப் பணிபுரிந்து வருகின்றனர்.

இத்துணைப் புகழ் வாய்ந்த பரதக்கலா வித்தகி 1992 முதல் வின்னிபெக் நகரின் நடன - சங்கீத - நாடகத்துக்கான இந்தியக் கல்லூரியின் ஆலோசகராகவும் நடனத்துறையின் பொறுப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இங்கும் ரொறன்ரோ சுருதி லயா நுண்கலைக் கூடத்தின் பரதக்கலை இயக்குனராக 1999 இலிருந்து பணிபுரிந்து வருகின்றார். பல்கலைக்கழகத்துக்கான புள்ளியீட்டும் பாடவிதானத்துக்குரிய நடனக் கற்கை நெறி ஆலோசகராகவும் விளங்குகின்றார்.

செல்வி சாந்தா பொன்னுத்துரை அவர்கள் கண்டிப்பும் கண்ணியமும் மிகுந்த ஓர் ஆசிரியை. தான் அறிந்த கலை நுணுக்கங்களைத் தனது மாணவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் பரந்த மனப்பான்மையுடையவர். பரதக்கலையின் பண்புக் கூறுகளைக் கட்டிக் காக்க வேண்டும் என்னும் கருத்துடையவராயினும் காலத்துக்கேற்ற வளர்ச்சிக்கு உகந்த மாற்றங்களைத் தழுவும் புதுமைவாதியாகவும் சாந்தா விளங்குகின்றார்.

(154ம் பக்கம் வருக)

வி. கந்தவனம்

சோர்வற்ற சேவையாளர்



இரத்தினேஷ் சண்முகநாதன்



"நான் சமூகத்துக்கு என்ன செய்தேன் என்பதவிட, சமூகத்திடமிருந்து நான் எவற்றைப் பெற்றுக் கொண்டேனோ அதுவே நான் சமூகப் பணியாளராவதற்கு உதவியது" என்று சொல்பவர்கள் வெகுசிலரே இருக்கும் இந்த உலகில், எம்மத்தியில் வாழும் திருமதி இரத்தினேஷ் சண்முகநாதனும் ஒருவர்.

தினசரி குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிச் சமூகப் பணியாற்றி அதனால் மகிழ்வுறும் ஒரு வகையினர் உள்ளனர். நேரம் கிடைக்கும் வேளையில் சமூகப் பணியாற்றுபவர்கள் என்று இன்னொரு வகையினர் உண்டு. இவர்களில் முதலாம் வரிசையைச் சேர்ந்தவர் இந்த வருடம் சமூக சேவைக்கான - குறிப்பாக முதியோர் சேவைக்கான 'தமிழர் தகவல்' விருதினைப் பெறும் இரத்தினேஷ் சண்முகநாதன் அவர்கள். இவர் சமூகத்திலும், நண்பர்கள் மத்தியிலும் 'ரட்ணேஷ்' என்ற பெயரால் பிரபல்யமானவர்.

தமது கணவரின் தொழில் நிமித்தம் 1985ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டு வரை மலேஷியாவில் வாழ்ந்த இவர், கணவரின் திடீர் மறைவினையடுத்து தமது மகனுடன் இணைவதற்காக கனடாவில் குடியேற நேர்ந்தது. அவ்வேளையிலேயே இவரது பார்வை இங்கு பல பிரச்சனைகளின் மத்தியில் வசித்துக் கொண்டிருந்த தமிழ் முதியோர் பக்கம் திரும்பியது. அவர்கள் நலன்களைக் கவனிப்பதற்காக முதலில் முதுதமிழர் மன்றத்தின் சாதாரண உறுப்பினர்களில் ஒருவராக இணைந்து கொண்டார்.

"சங்கத்தின் உறுப்பினராக அதன் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய வேளையில் பல விடயங்களை நான் அறிய முடிந்தது. இவற்றுள் முக்கியமானது ஒரு தனிமனிதரால் சமூகத்தின் வளர்ச்சிக்கு எவ்வாறு பங்காற்ற முடியுமென்பது. அடுத்தது, தமிழ் முதியவர்களின் பல தேவைகள் கவனிக்கப்படாதும், நிறைவேற்றப்படாதும் இருக்கின்றது என்பது. இதனால் முதியோருக்காகப் பணியாற்றுவதில் என்னையறியாமலே அக்கறை அதிகரித்தது" என்று தமது ஆரம்பகால உணர்வுகளை அடக்கமாக எடுத்துச் சொல்கிறார் ரட்ணேஷ் அவர்கள்.

இவரிடமிருந்த ஆர்வத்தினையும் அக்கறையையும் அறிந்துகொண்ட முதுதமிழர் மன்றம், முதலில் உபதலைவராக்கி அதன் நிர்வாகத்துள் சேர்த்துக் கொண்டது. அப்பதவியை வகித்த இரண்டாண்டுகள் அவரது சேவா மனப்பான்மையை அனைவரும் அறிவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியது. அதனால், பின்னர் முதுதமிழர் மன்றத்தின் தலைவரானார். இப்பதவியையும் இரண்டு வருடங்கள் வகித்தார்.

முதுதமிழர் மன்றத்தின் பணிகள் மற்றைய சமூக அமைப்புகள் போன்றதன்று. சிறுகுழந்தைகள் போன்று புதிய உலகத்துள் நுழைந்திருக்கும் முதியவர்களின் உணர்வுகளைப் பாதிக்காதவாறு அவர்களுக்குச் சேவையாற்ற வேண்டும். அவர்களின் பாரம்பரிய கலை கலாசாரங்களைப் பாதுகாத்து அவர்கள் அதனூடாக வாழ வழிவகுக்க வேண்டும். அவர்களை மகிழ்விக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயற்பட்டார்.

பட்டதாரி ஆசிரியரான தமது பதவியையே தமது குடும்ப வாழ்வுக்காகத் தியாகம் செய்த ரட்ணேஷ் சண்முகநாதன் அவர்களுக்கு, முதியோர் பணி மனதுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை வழங்கியதால் மிகுந்த உற்சாகத்துடன் இரண்டாண்டுகள் தலைவர் பதவிக்கான சேவைகளை இவரால் ஆற்ற முடிந்தது.

தமிழீழத்தில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை முடித்த பின்னர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உயர் வகுப்புக் கல்வியை மேற்கொண்டார். பொருளாதாரம் மற்றும் சரித்திரம் (Economics & Double History) ஆகிய பாடங்களில் 1958ல் பட்டதாரியான இவர், தமது ஆசிரியப் பணியை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பித்தார். சில வருடங்களின் பின்னர், திருமணமாகித் தாயுமானதால் கற்பித்தலிலிருந்து விடைபெற நேர்ந்தது.

முதிய பிரஜைகளுக்கான சேவையுடன் மட்டும் இவர் தமது பணிகளை முடித்து விடவில்லை. ஸ்காபரோ சட்ட உதவி (Scarborough Community legal Services) நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவராகவிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் சேவையாற்றியுள்ளார். தற்போது, ஸ்காபரோ கிறேஸ் வைத்தியசாலையின் Ontario Breast Screening நிகழ்ச்சித் திட்டக் குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்து செயற்படுகின்றார்.

இருபதாவது ஆண்டு விழாவினை இவ்வருடம் கொண்டாடும் 'சேக்கம்' அமைப்பின் இயக்குனர்களில் ஒருவராக இவர் இருப்பது குறிப்பிடப்பட வேண்டியது.

முதியவர்கள் நிறைந்து வாழும் '50 Tuxedo Court' உயர்மாடிக் கட்டிட சமூக கிளப்பின் (Social Club) தலைவராகவும், ஸ்காபரோ பிராந்திய முதியோர் சுகாதார குழுவின் உறுப்பினராகவும் தற்போது இருந்து வரும் ரட்ணேஷ் அவர்கள் தமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் முதியவர்களை வைத்தியர்களிடமும், வைத்தியசாலைகளுக்கும் அழைத்துச் சென்று அவர்கள் நலன்களைக் கவனிப்பதில் மனநிறைவு பெறுகின்றார்.

இவ்வாறு பல்துறைச் சேவைகளிலும் தம்மை ஈடுபடுத்தி வரும் ரட்ணேஷ் சண்முகநாதன் அவர்கள் பொதுச் சேவைக்கான இவ்வருட 'தமிழர் தகவல்' விருதுடன், பிரபல வழக்கறிஞர் திருமதி தெய்வா மோகன் அவர்கள் தமது பெற்றோர் கதிர்காமசேகரம் - பாலாம்பிகை தம்பதியர் ஞாபகார்த்தமாக வழங்கும் தங்கப் பதக்கத்தினையும் பெறுகின்றார்.

றஞ்சி



வீ. துருவசங்கரி

13வது ஆண்டு விருது

துருவி ஆராயும் வித்தகர்

தமிழீழத்தில் இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வீரசிங்கம் துருவசங்கரி அவர்கள் கல்விக்குப் பெயர் பெற்ற குடும்ப விருட்சத்தின் பலமான ஒரு கிளையாகத் திகழ்பவர். "யாதானும் நாடாமால் ஊதாமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாத வலது" என்ற வள்ளுவர் பெருமானின் வாய்மொழிக்கு இலக்கணமாக வாழ்பவர். மொஸ்கோ லுமும்பாப் பல்கலைக்கழகத்தில் M.Sc (Eng.Agronomist) பட்டமும் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் M.Phil (Agric) பட்டமும் பெற்றவர். கனடாவில் மக்கில் பல்கலைக்கழகத்தில் Ph.D பட்டப் படிப்பையும் மேற்கொண்டுள்ளார்.

இவ்விதம் இன்றும் கற்றுக் கொண்டேயிருக்கும் துருவசங்கரி அவர்கள் 1979 - 82 காலப் பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாயப் பொறியியல் துறையில் ஆய்வாளராகப் பதவி வகித்தவர். மகாவலி அபிவிருத்தித் திட்டம் காலநிலையிலும், நீரியலிலும் ஏற்படுத்தக் கூடிய சுற்றுப்புறத் தாக்கம் குறித்த பல ஆய்வுகளை நடத்தியவர். வடிகால் அமைப்பு முறையிற் பல மாற்றங்களைக் கொண்டு வந்தவர். இலங்கையில் முதன் முதலாகத் தரை கீழ் வடிகால் ஒழுங்குமுறையை அறிமுகப்படுத்தியவர். இத்துறைப் பட்டதாரி மாணவர்களுக்கு உதவியாகவும் வழிகாட்டியாகவும், பயிற்றுனராகவும் மேற்பார்வையாளராகவும் இருந்தவர்.

இலங்கை விவசாய அமைச்சின் நில - நீர் பாவிப்புப் பிரிவில் பேராதனையில் ஆய்வளாராக 1982 - 83இல் இவர் பணியாற்றிய காலத்தில் வெள்ள நீரில் தொங்கி வரும் பொருட்களை அளப்பதற்கு ஒரு கருவியையும், மண்ணின் பொறியியற் பகுப்பாய்வதற்கு ஒரு கருவியையும் அமைத்துச் சாதனை படைத்திருக்கின்றார்.

ஆகஸ்ட் 1983 முதல் மே 1990 வரை கிளிநொச்சியில் இருந்த விவசாய அமைச்சின் பிராந்திய ஆய்வகத்தின் தலைவராகவும் முது ஆய்வாளராகவும் பணிபுரிந்துள்ளார். இக்காலத்தில் சிக்கனச் செலவிற் பாவிக்கக் கூடிய வெப்பக்கதிர்ப் பொறி ஒன்றை இவர் தயாரித்தமை குறிப்பிடத்தக்கது. ஆய்வுக் குழுவினரை வழிப்படுத்தி, மண் - நீர் நிர்வாகந் தொடர்பான பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளையும் விதந்துரைத்துள்ளார்.

கனடாவில் 1990 ஜூலை முதல் ஸ்காபரோவில் உள்ள PIRO எனப்படும் ஆய்வும் அபிவிருத்தியும் தொடர்பான தனியார் நிலையம் (Private Institute for Research and Development) ஒன்றில் இயக்குனராகவும் ஆய்வாளராகவும் பணியாற்றியுள்ளார். வெவ்வேறான மண் வகைகளிலும் காலநிலைகளிலும் தரைக்கீழ் நீரின் இயல்புகளை ஆராய்ந்து, வகைப்படுத்தி விளைவுகளைப் புத்தகமாக்கி இந்நிலையத்துக்குக் கொடுத்திருக்கின்றார்.

மேலும் சில புதிய கருவிகளை உருவாக்கி அவற்றுள் மூன்றினுக்கு காப்புரிமைப் பட்டயமும் (Patent Rights) பெற்றிருக்கின்றார். அவை
Microscope/Telescope
Tree Climber/and vehicle
Rain Meter/Recorder

இவை மூன்றுமே (பெயர்களுக்கேற்ப) இரு பயன்பாட்டுக் கருவிகளாகும் (Two-in-one instruments)

1998ம் ஆண்டு ரைடல் (Tidol) கூட்டுத் தாபனத்தில் வடிவமைப்பாளர் (Designer) ஆகவும் ஆய்வாளராகவும் நியமனம் பெற்றார். இந்தத் தாபனத்திற்குச் சவர்க்காரத் தூளைப் பொதியாக்கும் இயந்திரம் ஒன்றை வடிவமைத்து அதன் முதல் உருவத்தைச் செய்து கொடுத்துள்ளார்.

இவ்விதம் ஆய்வுத் துறையிலும் கண்டுபிடிப்பு - வடிவமைப்பு முயற்சிகளிலும் தனது தனித்துவ முத்திரையைப் பதித்துள்ள பொறியியலாளரும் சூழலியல் விஞ்ஞானியுமாகிய திரு துருவசங்கரி அவர்கள் எழுத்தாற்றல் கைவந்த தமிழ் அறிஞராகவும் விளங்குகின்றார். சில காலம் இங்கு கனடாவில் சக்தி - சுயாதீன ஊடக வெளியீடுகள் என்னும் அமைப்பில் இணை ஆசிரியராகவும் பணிபுரிந்து விஞ்ஞானம், புதைபொருளியல், வரலாறு, சமயம் ஆகிய துறைகளில் கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். நூலாசிரியராகவும் தமது எழுத்து வன்மையை நிலைநாட்டியுள்ளார். இதுவரை இவரது ஆக்கங்களாக
1. பனைமரம் (1979)
2. Lost Aviation Technology (1997)
3. என் மொழியின் கதை (2003)

ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. மேலும் இவரது ஆய்வுகள் சில நூலுருவம் பெறவுள்ளன.

தமிழ், சிங்களம், ஆங்கிலம், ரஷ்ய மொழி ஆகியவற்றில் தேர்ச்சிமிக்க பல்மொழியாளராக விளங்கும் துருவசங்கரி அவர்கள் இஸ்ரேல் நாட்டிலும் நீர்ப்பாசன மண்ணியல் நிர்வகிப்புத் துறையில் விசேட பயிற்சியும் பெற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து 1999ம் ஆண்டு முதல் ஆய்வாளராகச் சொந்தமாகத் தொழில் பார்த்து வருகின்றார்.

தாயகத்திலே பொறியியலாளர்களைச் சூழ பல வேலையாட்கள் இருப்பர். அவர்களைக் கொண்டு வேலைகளைச் செய்விப்பது அங்குள்ள ஒரு நடைமுறை. கனடாவில் நிலைமை வித்தியாசமானது. இங்கு பொறியியலாளர்களே தமது வேலைகளைப் பெரும்பான்மையும் செய்து முடித்தல் வேண்டும். அதற்கு அறிவாண்மையோடு உடல்வன்மையும் வேண்டும். இங்குள்ள நிலைமைகளுக்கேற்பப் பணியாற்றி வெற்றி காண்பதில் துருவசங்கரி திறமையுள்ளவராகப் பவனி வருகின்றார்.

இவர் ஒரு மரபு ரீதியான பொறியியலாளருமல்லர். நாமுண்டு நமது தொழில் உண்டு என்றில்லாது 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்னும் வள்ளுவர் பெருமானின் வாக்குக்கேற்பக் கற்ற அறிவை நடைமுறையில் மக்களுக்குப் பயன்படும் வகையில் செயற்படுத்தி வரும் சிறந்த விஞ்ஞானியாகவும் விளங்குகின்றார்.

தாமாகப் பல கருவிகளைக் கண்டுபிடித்து வடிவமைத்துச் சாதனை புரிந்த ஒரு சரித்திர விற்பன்னர் இவர். இப்பொழுதும் புதிதாகக் கருவிகளை

(154ம் பக்கம் வருக)

கவிநாயகர்

சேவையால் ஓங்கி நிற்கும் மண்ணை மறவாத மருத்துவர்



டாக்டர்
சண் கே. சுந்தர்

13வது ஆண்டு விருது

மாதகல் அவர் பிறப்பால் பெருமையுற்ற பதி என்றால் கலிபோர்னியா அவர் பணியால் உயர்வு பெற்ற தலம். தமிழீழம் அவர் தொண்டால் வளர்ச்சியுறும் தேசம். பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலையில் வித்தியாரம்பம் செய்து ஆரம்பக் கல்வி கற்று தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் அரவணைப்பால் உயர்ந்து அதிசிறந்த மாணவனாக பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவத்துறை புகுந்து 1968ம் ஆண்டிலே மருத்துவப் பட்டப்படிப்பை சிறப்புத் தேர்வுடன் பெற்று பெருமையுடன் கொழும்பு மாநகரில் சில வருடங்கள் நற்றொண்டாற்றிய டாக்டர் சண் கே.சுந்தர் அவர்கள் தன் வாழ்வின் உயர்வு கருதி 1970ம் ஆண்டிலே நியூயோர்க் நகர் ஏகினார்.

நியூயோர்க் நகரிலே அமைந்த Mr. வேர்னொன் வைத்தியசாலையில் உள்ளக மருத்துவப் பிரிவில் முதலில் சேவையாற்றிய டாக்டர் சண் அவர்கள் நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் தனது மருத்துவப் புலமையை வளர்த்தமையால் 1975ம் ஆண்டிலே இதயவியல்துறை கழக உறுப்பினர் எனும் சிறப்பும் கிடைத்தது. பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரியிலும் போதனாசிரியர் பதவி எட்டியது. வாழ்வில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டும். அதற்குச் சுயமாக தொழில் செய்வதே சிறந்தது என எண்ணிய டாக்டர் சண் தனது இளம் மனைவியுடன் 1975ம் ஆண்டிலே கலிபோர்னியா மாநிலத்திற்குக் குடிபெயர்த்து அங்கே இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

டாக்டர் சண் தனது அறிவாற்றலினால் தானாகத் தனித்தும், வேறு அறிஞர் பெருமக்களுடன் இணைந்தும் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதி மருத்துவ அறிஞர் பேரவைகளில் வழங்கியதுடன் பிரசுரித்தும் உள்ளார். இவற்றில் குறிப்பிடக் கூடியவை The Diagnosis of Ventricular Tachycardia with Ventriculoatrial Conductior Acta Cardiologica (Shah, Anilkumar, SunderK & Dolgin. M) Constructive Pericarditis in Protocainaminede - Induced Lupus Erythematosus Syndrome (SunderK., Shah, Anilkumar)

டாக்டர் சண்ணின் அறிவு ஆற்றலையும், அர்ப்பணிப்பான சேவையையும் கண்டதன் விளைவாக அவர் American Board of Internal Medicine இல் 1973 இலும் American Board of Internal Medicine, Subspecialty, Cardiovascular Diseases இல் 1975 இலும் நியமிக்கப்பட்டுள்ளமை எமக்கெல்லாம் பெருமை பயப்பதாக அமையும் என்றால் அவரை அங்கத்துவம் வகிக்கச் செய்து தனது பெருமையை உயர்த்திய பேரவைகள் பின்வருபவை எனலாம்.

American College of Cardiology
American Society of Internal Medicine
American Heart Association
American Society of Echocardiography
Southern California Society of Interventional Cardiac Angiography
American Society of Cardiiovascular Interventionists

ஆஹா! இவை எல்லாவற்றையும் வைத்து நாம் டாக்டர் சண் பற்றிப் பெருமைப்படலாம். ஆனால் புளகாங்கிதம் அடைய வைப்பவை அவரது சமூக ஈடுபாடு, சமய வளர்ச்சிக்கான நல்லுதவி, தாயகத்தின் வளர்ச்சிக்கான தாராள பங்களிப்பு. கலிபோர்னியா வாழ் தமிழர்களின் அமைப்புகளின் மூலம் அங்கு வாழ்வோரின் முன்னேற்றத்துக்காக உழைப்பதோடு மட்டுமல்லாமல் TRRO மூலமாக தாயகத்து அகதிகள் புனர்வாழ்வுக்காக அளப்பரிய சேவைகள் ஆற்றிய நற்றொண்டனாக எல்லோரது உள்ளம் முழுக்க நிரம்பிக் காணப்பட்ட வள்ளல் டாக்டர் சண்.
தான் கற்ற பாடசாலைகள் யாவற்றினதும் துரித வளர்ச்சிக்கு இன்று நேற்றல்ல சென்ற 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து பேருதவி செய்து வரும் டாக்டர் சண் அண்மையில் அங்கே பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளுக்கு கணினி விநியோகம் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவுதலையும் மேற்கொண்டுள்ளார்.

வன்னிப் பிரதேச மக்களின் உடல்நலம் பேணலில் அதீத அக்கறை காட்டும் டாக்டர் அங்கே மகப்பேறு மருத்துவ வசதியும், இதய அறுவைச் சிகிச்சைக்கும் தேவையான நவீன உபகரண வசதிகள் பெரும் தொகை செலவில் செய்வதில் தீவிர முயற்சியும் தற்சமயம் மேற்கொண்டுள்ளார். இந்த நாட்களில் இந்தப் பணிக்காக அவர் அடிக்கடி தாயகத்துக்கு விஜயங்களை மேற்கொண்டு வருகின்றார். இதனால் தமிழீழ வைத்திய உலகு பெரும் நன்மையடைகின்றது.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் டாக்டர் சண் சமய வளர்ச்சியிலும் தீவிர ஈடுபாடுடையவர். ஹவாய் தீவில் உள்ள சன்மார்க்க இறைவன் ஆலய நிர்மாணத்திலும் வளர்ச்சியிலும் அதீத அக்கறை எடுக்கும் டாக்டர் சண் அமரர் சிவாயசுப்பிரமணிய சற்குருவிலும் அவரின் வாரிசு சிவாய போதிநாத சுவாமியிலும் பெரும் பக்தி கொண்டவர். ஆலயசபையின் வெளியீடான "Hinduism Today" எனும் அற்புத சஞ்சிகையின் வெளியீட்டில் டாக்டர் சண் அவர்களின் பங்களிப்பும் சொல்லும் தரமன்று.

வலது கரம் கொடுப்பதை இடது கரம் அறியக்கூடாது என்ற கொள்கையுடன் செயற்படும் டாக்டர் சண் கே. சுந்தர், பாதிக்கப்பட்ட மக்களினதும், நோயினால் துயருறுபவர்களினதும் உண்மை நிலையைப் புரிந்தவர் என்பதை அவர் தெரிந்தெடுத்தாற்றும் சேவைகள் ஊடாகக் காணமுடிகின்றது,

தனது அன்பு மனைவி திலகாவுடனும், பிள்ளைகள் லக்கி மற்றும் ஆனந்தனுடனும் இல்லறம் என்னும் நல்லறம் மேற்கொண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழும் டாக்டர் சண் கே. சுந்தர் அவர்கள் தமிழர் தகவலின் இவ் வருடத்துக்கான அதியுயர் சேவை விருதினைப் பெறுவதுடன், கனடாவில் வதியும் டாக்டர் அ. சண்முகவடிவேல் அவர்கள் தமது தந்தையார் எஸ். கே. அம்பலவாணபிள்ளை ஞாபகார்த்தமாக வழங்கும் தங்கப் பதக்கத்தையும் பெறுகின்றார்.

கனக்ஸ்



மாத்தளை சோமு



இலக்கிய உலகில் பிறந்தகங்களின் பெயர்களைச் சுமந்து அதற்குப் புகழ் பெற்றுக் கொடுக்கும் எழுத்தாளர்கள் பலருளர். சில்லையூர் செல்வராஜன், காவலூர் ராஜதுரை, நீர்வை பொன்னையன், தெளிவத்தை ஜோசப் என்று தொடரும் இந்தப் பட்டியலில் முக்கியமான ஒருவர் மாத்தளை சோமு அவர்கள்.

இலங்கைப் பொருளாதாரத்தின் அச்சாணியாக விளங்கும் மலையகத்தின் முக்கிய நகர்களில் ஒன்று மாத்தளை. இதன் மைந்தன் எழுத்தாளர் சோமு. சில வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவுக்குத் தமது மனைவி பிள்ளைகளுடன் குடிபெயர்ந்தார். தற்சமயம் பிள்ளைகளின் கல்விக்காக தற்காலிகமாக தமிழகத்தில் வாசம் கொண்டுள்ளார்.

மிக இளவயதில் எழுத ஆரம்பித்தவர் மாத்தளை சோமு. அதனால் இதுவரை பதின்மூன்று நூல்களை

உதாசனன்

உலகம் சுற்றும் இலக்கியஞானி

இவரால் படைக்க முடிந்துள்ளது. இவற்றை விபரமாகப் பார்ப்போமானால், நான்கு சிறுகதைத் தொகுதிகள், நான்கு நாவல்கள், ஒரு குறுநாவல் தொகுதி, பயணக்கதைகள் மூன்று, குட்டிக்கதைத் தொகுதி ஒன்று என்று அவை விரியும்.

1991ல் இவரது 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' நாவல் இலங்கை சாகித்திய விருதினைப் பெற்றது. 1994ல் இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பு வழங்கிய சிறந்த நாவலுக்கான 'விபவி' விருதினை இவரது 'எல்லை தாண்டா அகதிகள்' பெற்றது. தமிழ்நாடு வில்லி தேவசிகாமணி இலக்கிய விருது 1995ம் ஆண்டில் இவரது 'அவர்களின் தேசம்' சிறுகதைத் தொகுதிக்குக் கிடைத்தது. 1988ல் இலங்கை சுதநதிர இலக்கிய அமைப்பு வழங்கிய சிறந்த நாவலுக்கான 'விபவி' விருதினை இரண்டாவது தடவையாகவும் பெற்றார். இவரது 'மூலஸ்தானம்' நாவலுக்காக இது வழங்கப்பெற்றது. அத்துடன், மலேஷியாவின் ஈப்போ நகரிலுள்ள 'மலேஷிய பாவாணர் மன்றம்' வழங்கிய 'புதினத் தென்றல்' விருது இவருக்கு வழங்கப்பெற்றது.

சோமு அவர்களால் எழுதப்பெற்ற 'சிட்னி முதல் நோர்வே வரை' (2002), 'லண்டன் முதல் கனடா வரை' (2000) ஆகிய இரண்டு பயண நூல்களும் உலகளாவிய ரீதியில் பெருமதிப்புப் பெற்றவை.

இந்த வருடம் வெளிவந்த மலேஷியத் தமிழ் எழுத்தாளர்கள் சிறுகதைகள் வெளியீட்டின் தொகுப்பாசிரியரும் இவரே. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்காக 'புலம் பெயர்ந்த தமிழர்' என்னும் நூலின் வெளியீட்டாளராகவும் அமர்ந்து இந்த அரிய படைப்பினை வெளிக்கொணர்ந்துள்ளார்.

இதுவரை மலேஷியா, சிங்கப்பூர், பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்திரியா, நோர்வே, சுவீடன், டென்மார்க், சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய ஒரு டசின் நாடுகளுக்கு எழுத்துப் பணி நோக்கிய சுற்றுலா மேற்கொண்ட மாத்தளை சோமு அவர்களை உலகம் சுற்றும் இலக்கியஞானி எனலாம்.

பழந்தமிழரின் அறிவியல், ஆஸ்திரேலிய ஆதிவாசி கறுப்பின மக்கள் வரலாறு, இலங்கை - மலையக மக்கள் குடியேற்றம், புலம்பெயர் மக்கள் ஆகிய துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்ட இவர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் மொழியாக்கம் சம்பந்தமான விரிவுரைகள நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

வெளியீட்டுத் துறையிலும் சோமு அவர்களுக்கு நிரம்பிய அனுபவமுண்டு. நவரசம் என்னும் மாத இதழின் ஆசிரியராகவும், சென்னை மக்கள் மலரின் உதவி ஆசிரியராகவும் இருந்துள்ளார். லண்டன் 'புதினம்' பத்திரிகையின் வெளிநாட்டுச் செய்தியாளர்களில் இவரும் ஒருவர். பல்வேறு பன்னாட்டுக் கருத்தரங்குளில் பேராளராகக் கலந்து கொண்டுள்ளார். 2001ம் ஆண்டு கனடாவுக்கு வருகை தந்த வேளையில், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் கௌரவத்தைப் பெற்றார்.

ஆஸ்திரேலியாவில் சிட்னி தமிழ்க்குரலின் தலைவராகவும், மலேஷியாவிலுள்ள உலக சிலம்ப மாமன்றத்தின் பன்னாட்டு ஒருங்கிணைப்பாளராகவும், திருச்சி தமிழ்க்குரல் பதிப்பக ஆலோசகராகவும் கௌரவ சேவைகளை வழங்கி வருகின்றார். இவரது பயண நூல்கள் தமிழ்க்குரல் பதிப்பாக வெளிவந்தன.

எழுத்தாளர் மாத்தளை சோமு அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முழுமையாக ஏற்றுக்கொண்ட தமிழ்த்தேசியப் பற்றாளர். அதற்கான குரலை ஓங்கிக் கொடுத்துவரும் ஓர் இலக்கியவாதி. செல்லுமிடமெங்கும் தமிழீழப் போராடத்தின் நியாயத்தை வலியுறுத்தி வருபவர். முக்கியமாக, தமிழ்நாட்டில் பங்குபற்றும் வைபவங்களிலும், இலக்கியச் சந்திப்புகளிலும் தமது தமிழீழ ஆதரவுக் குரலைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்தி வருபவர். 'தமிழ்நாட்டின் சில போலிகளை இனங்காணாத புகலிடத் தமிழர்கள், அவர்களுக்காக பல்லாயிரம் டாலர்களை விரயப்படுத்துவதையும், நம்பி ஏமாறுவதையும் எழுத்திலும் பேச்சிலும் சுட்டி வருபவர் இவர். கடந்த ஆண்டில் தமிழீழத்தின் முக்கிய இடங்களுக்கு இவர் மேற்கொண்ட விஜயம் குறிப்பிடப்பட வேண்டியது.

தமிழர் தகவலின் இவ்வருடத்துக்கான இலக்கிய விருதுடன், கொழும்பு 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றி அண்மையில் காலமான திரு. இ. சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக, இலண்டன் வழக்கறிஞரும் மூத்த ஒலிபரப்பாளருமான விமல் சொக்கநாதன் வழங்கும் தங்கப் பதக்கமும் மாத்தளை சோமு அவர்களுக்குச் சூட்டப்பெறுகின்றது.

நகை வியாபாரத்தில் நம்பகமான பெயர்



வசந்தன் பத்மநாதன்

13வது ஆண்டு விருது

தமிழர்தம் வாழ்வில் மண் பெண் பொன் ஆகிய மூன்றும் முக்கியமானவை என்பர். திருமண வைபவத்தில் இம்மூன்றுக்கும் அளிக்கப்படும் முக்கியத்துவத்தைக் கவனித்தால் இது புரியும்.

தங்க நகைகளை அலங்காரத்துக்காக மட்டுமன்றி, சிறந்தவொரு நம்பிக்கையான முதலீடாகவும் தமிழர்கள் கருதி வருவதால், நகைகளைக் கொள்முதல் செய்வதில் அதீத அக்கறை காட்டுவர். இதனால் தமிழர் பண்பாட்டில் தங்க நகை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்தப் பின்னணியில் பார்க்கையில், "கனடாவில் இந்தளவுக்கு நகை விற்பனை நிறுவனங்கள் தேவையா" என்ற கேள்விக்கு "நிச்சயம் தேவை" என்கின்ற பதில் கிடைக்கும். சுமார் இருபதுக்கும் அதிகமான நகை விற்பனை நிலையங்கள் ரொறன்ரோ பெரும்பாகத்தில் இருக்கின்ற போதிலும், இவைகளின் உரிமையாளர்கள் அனைவருமே ஆபரணத் தொழிலில் முன்அனுபவமோ, அல்லது அதற்கான தகமைகளோ இல்லாதவர்கள். நகை வடிவமைப்பு வேலைகளைச் சம்பந்தப்பட்ட தொழில் பயிற்சியும் தொழில் பக்குவமும் உள்ளவர்களிடம் கொடுத்தே செய்விக்கின்றனர்.

இவர்களுள், வசந்தன் பத்மநாதன் முற்றிலும் வித்தியாசமான தனித்துவம் பெற்றவர். தந்தையார், அவரது தந்தையார் என்று இவரது மூத்த பரம்பரையினர் அனைவருமே ஆபரணத் தொழிலைச் செய்து வந்தவர்கள். இதனால், நகை வடிவமைப்பும் நகை தயாரிப்பும் இவரது பரம்பரைக் கலை என்றும் சொல்லலாம். 'பத்மநாதன் பத்தரின் மகன்' என்று தம்மை அறிமுகப்படுத்தவதில் வசந்தனுக்கு இருக்கும் பிரியம், அவருக்கு இக்கலை மீதுள்ள 'பக்தி'யை எடுத்துக் காட்டுவது.

தமிழீழத்தின் வடபாலுள்ள சங்கானைப் பட்டணத்தில் பெருமதிப்புடன் ஆபரணத் தொழில் செய்துவந்த தமது தந்தையாரிடம் இத்தொழிலைப் பதினொரு வயதில் கற்க ஆரம்பிக்கையில், பின்னொரு காலத்தில் தாம் கனடா சென்று தனியாகத் தொழிலை ஆரமபிக்க நேருமென்று வசந்தன் எள்ளளவும் நினைத்திருக்கவில்லை. தனது தந்தையாரிடம் இயற்கையாகவே மெருகேறியிருந்த அற்புதக் கலைவண்ணத்துக்குக் கைவண்ணம் சேர்த்துப் ருமை பெறுகிறார் வசந்தன். பெற்ற தாயை இழந்த தமது மகனின் அலாதித் திறனைத் தற்போது கனடாவில் நேரிலிருந்து பார்த்து வியக்கின்றார் அவரது தந்தையான பத்மநாதன் பத்தர் அவர்கள்.

தாய்நாட்டின் போர்ச் சூழல் காரணமாக மிக இளவயதிலேயே வசந்தன் நாட்டை விட்டு வெளியேறி அகதியாக பாரிசில் கால்பதிக்க நேர்ந்தது. தமது பரம்பரைத் தொழிலை அங்கு செய்ய முடியாதென்பதை உணர்ந்தவர், இரண்டு வருடங்களின் பின்னர் கனடாவை இரண்டாவது தாயகமாக்க முடிவெடுத்தார். ஒரு நூறு டாலருடன் கனடாவில் குடியேறியவர் இன்று கனடியத் தமிழர் வாழ்வில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகியுள்ளார்.

அந்த நாட்களில் இங்கிருந்த சில நகை வியாபார நிறுவனங்கள் வாடிக்கையாளர் தேவைகளை நிறைவேற்ற இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து வடிவமைக்கப்பட்ட 'ரெடிமேட்' நகைகளை இறக்குமதி செய்து வந்தனர். இதில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்த விரும்பிய வசந்தன், தாமே வடிவமைத்து நகைகளைச் செய்யும் நிறுவனத்தை நிறுவ முன்வந்தார்.

ஆங்கில மொழியில் பரிச்சயமின்மை, போதிய மூலதனம் எதுவுமே இல்லையே என்னும் குறை ஆகியன அவரது துணிச்சலுக்கு முன்னால் கலைந்து போயின. நன்கறிந்த நண்பர்களிடம் பெற்ற கடனுடன், ஒரு நிலஅறையை வாடகைக்கு எடுத்துத் தமது தொழிலை ஆரமபித்தார். சில நாட்களிலேயே அவரது பெயர் ஓகோவெனப் பிரசித்தமானது. முதலாவது 'வசந்தா நகைமாளிகை' ரொறன்ரோவின் புளோர் வீதியில் திறக்கப்பட்டது. சில வருடங்களின் பின்னர் இதனை மேலும் விஸ்தரிப்பதற்காக மிஸிஸாகாவுக்கு மாற்றியுள்ளார்.

அங்குள்ள பிரதான சாலைகளில் ஒன்றான கியுஒன்ராறியொ வீதியில் 3025ழ் இலக்கக் கட்டிடத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இன்றைய வசந்தா நகைமாளிகை, வசந்தனின் சுயதொழில் நம்பிக்கையினதும் துணிச்சலான விடாமுயற்சியினதும் சின்னமாக எழுந்து நிற்கின்றது. அவரது இன்றைய தொழில் முயற்சியின் பெறுமதி இரண்டரை மில்லியன் டாலர்கள். இதன் உரிமையாளர் வசந்தன் பத்மநாதன் மட்டுமே. பங்காளர் எவரும் கிடையாது.

"நேர்மை, தொழிற் சுத்தம், கடும் உழைப்பு, நம்பிக்கையான வாடிக்கையாளர்கள் ஆகிய அனைத்தும் சேர்ந்ததே எனது பதினாறு வருட அபிவிருத்தியின் முக்கிய காரணிகள்" என்று தன்னடக்கத்துடன் அவர் சொல்கிறார். "நகை வியாபாரத்தின் பொன்னான வார்த்தையாக அமைபவை நேர்மையும் தரமும்தான். இவையிருந்தால் நகை வர்த்தகத்துக்கு விளம்பரமே தேவையில்லை" என்பது வசந்தனின் கோட்பாடு.

கனடாவிலும் தாயகத்திலும் சமூகப் பணிகளோடு தம்மை ஈடுபடுத்தியுள்ள வசந்தன், இது தொடர்பான பல வைபவங்களின் புரவல-ராகவும் அமைந்து வருகின்றார். தமது வர்த்தக முயற்சிகளுக்காக ஏற்கனவே கனடாத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் விருதினையும் இவர் பெற்றவர்.

தமிழர் தகவலின் இந்த வருடத்துக்கான 'வர்த்தக முன்னோடி' விருதினைப் பெறும் வசந்தன் பத்மநாதனுக்கு, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் மாணவர் தலைவனாகவிருந்த செல்வன் அகிலன் திருச்செல்வம் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப் பெறுகின்றது.

எஸ்தி



விவேகா அச்சக
சிறீதரன் செல்வநாயகம்

13வது
ஆண்டு
விருது

அச்சுப்பதிவு முன்னோடி

யாழ்ப்பாணத்தின் முக்கியமான நாற்சந்திகளில் ஒன்று 'முட்டாசுக் கடைச் சந்தி'. இதற்கான காரணப் பெயர்கள் பலவுண்டு. அப்பகுதியால் செல்பவர்கள் ஒருபோதும் 'விவேகானந்தா அச்சக'த்தை விலத்திச் செல்ல முடியாது.

யாழ்ப்பாணத்தில் வெளியீட்டுத்துறையுடன் இவர்களுக்கிருந்த தொடர்பு ஆதியானது. யாழ்ப்பாணத்தின் அச்சக வரலாற்றில் இவர்களுக்கு முக்கிய பங்கு மட்டுமன்றிப் பெரும் பங்குமுண்டு. கொழும்பிலிருந்துதான் கலண்டர்கள், டயரிகள் யாழ்ப்பாணத்துக்கு வருமென்ற நியதியை மாற்றியவர்கள் விவேகானந்தா அச்சகத்தினர். விவேகானந்தா கலண்டர்' தமிழ் மக்களின் இல்லங்களை அலங்கரித்த காலம் அது. இராட்சத அச்சு இயந்திரங்களுடன் இரவு பகலாக அந்த அச்சகம் ஒரு காலத்தில் இயங்கிக்

எஸ். ரி. சிங்கம்

கொண்டிருந்ததை இலகுவாக மறந்துவிட முடியாது. பாடசாலைகளுக்கான பாடப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், நூல்கள், விழா மலர்கள் என்று பலவகை அச்சு வேலைகளையும் நேர்த்தியாகச் செய்து புகழ் பெற்ற விவேகானந்தா அச்சகத்தின் உரிமையாளர்கள் நயினாதீவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தின் சகோரர்கள். இவர்களில் ஒருவரான காலஞ்சென்ற செல்வநாயகம் அவர்களின் புதல்வரே கனடாவில் அமைந்துள்ள விவேகா அச்சக உரிமையாளர் திரு. சிறீதரன் செல்வநாயகம்.

'கண்டது கற்கப் பண்டிதன்' ஆகலாம் என்றவாறு எல்லோரும் எல்லாம் செய்யலாம் என்ற கனடிய வாழ்க்கை முறையில், விவேகா அச்சகத்தின் பாரம்பரியத்தைப் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். அச்சு மை திரு. சிறீதரன் அவர்களின் உதிரத்தில் கலந்திருப்பதால்தான், அவரால் குறுகிய காலத்தில் தமது தொழிலில் வளர்ச்சி காண முடிந்தது எனலாம்.

நீண்ட காலத்துக்கு முன்னரேயே தாய்மண்ணை விட்டுப் புறப்பட்ட இவர் சிலகாலம் ஐரோப்பிய நாடொன்றில் வசித்தார். அச்சுக் கலை ஈடுபாட்டுக்குத் தீனி போடும் சந்தர்ப்பம் இங்கு கிடைத்தது. பிரபல்யமான 'ஹெய்டல்பேர்க்' அச்சு இயந்திரங்கள் நவீன வடிவமைப்பில் உருவாகியுள்ள இவ்வேளையில் அவைகளின் செயற்முறை, இயக்கம், பயன்பாடு ஆகியவைகளை நன்கு பயிலும் சந்தர்ப்பம் அங்கு கிடைத்ததால் அதனைப் பயன்படுத்திக் கொண்டார்.

தமது மனைவி பிள்ளைகளுடன் கனடாவில் குடியேறிய இவருக்கு இங்கு அச்சகமொன்றினை நிறுவித் தமிழ் மக்களுக்குச் சேவையாற்றும் விருப்பு ஏற்பட்டது. "1992ம் ஆண்டில் சங்கர் அச்சகம் என்ற பெயரில் ஒரேயொரு 'மெஷினுடன்' எனது தொழிலை ஆரம்பித்தேன். தமிழர் தகவல் ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் மங்கள விளக்கேற்றி இதனை ஆரம்பித்து வைத்தார். படிப்படியாக வர்த்தக முயற்சியை விஸ்தரித்து வந்துள்ளேன். 1996ம் ஆண்டில் அச்சகத்தின் பெயரை 'விவேகா அச்சகம்' என்று மாற்றினேன்" என்று கூறும் திரு. சிறீதரன் அவர்கள், தமது தந்தையார் நடத்திய விவேகானந்தா அச்சகத்தின் நினைவாகவே பெயரை மாற்றியதாகப் பெருமையுடன் சொன்னார்.

கனடாவில் பத்து வருடங்களின் சிறப்பான அச்சுப்பணியை முடித்த வேளையில், இன்றைய காலத்துக்கு ஏற்றதாக அச்சகத்தை மாற்றிப் புனரமைக்க விரும்பி, நான்கு வர்ணங்களில் அச்சடிக்கும் 'ஹெய்டல்பேர்க்' மெஷினை விவேகா அச்சகம் கொள்முதல் செய்தது. இதற்கு உதவும் துணையாக cutting machine, numbering machine, coalating machine, two colour printing machine ஆகியவையும் விவேகா அச்சகத்தில் இணைந்து கொண்டன.

இதனால், விவேகா அச்சகம் இன்று சகல அச்சு வேலைகளையும், அதனுடன் சம்பந்தமான மற்றைய வேலைகளையும் துரித கெதியில் நிறைவேற்றக்கூடியதாகப் பூரணம் பெற்றுள்ளதுடன், கனடியர்களின் அச்சகங்களுடன் போட்டியிட்டு வேற்றின மக்களின் அச்சுத் தேவைகளையும் நிறைவேற்றும் அந்தஸ்துக்கு உயர்ந்து நிற்கின்றது. இதனால் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்று துணிந்து சொல்லலாம்.

திரு. சிறீதரன் அவர்கள் அச்சக நிர்வாகி அல்லது அச்சக உரிமையாளர் மட்டுமல்ல; அச்சுக் கலையின் சகல பரிமாணங்களையும் பயிற்சியால் கற்றுக்கொண்ட சிறந்த ஒரு அச்சகர் (printer). இதுவே விவேகா அச்சகம் என்ற பெயர் கனடியத் தமிழர் சமூகத்தில் மட்டுமன்றி, பெரும்பான்மைச் சமூகத்திடையும் துரிதமாகப் பரவ வழிவகுத்தது. அவரது மனைவியார் என்றும் இவருக்குத் துணையாக இருந்து வருகின்றார். இவர்களது புதல்வர்கள் கணினி வடிவமைப்பில் அவ்வப்போது உதவி வருகின்றனர். இதனால் எந்தப் பாரிய வேலையையும் உரிய காலவட்டத்துள் செய்து முடிக்கும் வல்லமை விவேகாவுக்கு உண்டு.

இவ்வாறான சிறப்புகளை இந்த அச்சகம் வேகமாகப் பெற்றுக் கொண்டதால், பத்தாண்டுகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னராகவே - 1991ம் ஆண்டில் - கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தொழிற் திறமை விருதினை சிறீதரன் செல்வநாயகம் அவர்களால் பெறமுடிந்தது.

புலம்பெயர்ந்த தமிழர் பெயரை அச்சில் பொறித்துக் கொண்டிருக்கும் விவேகா அச்சக உரிமையாளர் திரு. சிறீதரன் செல்வநாயகம் அவர்களுக்கு அச்சகத்துறை முன்னோடி விருதும், திரு. து. ஈஸ்வரகுமார் அவர்கள் வழங்கும் 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது.

'6 குமார்ஸ்' - புடவை உலகின் தனி ராஜ்யம்



ஜெயகுமார் பரமானந்தம்

13வது ஆண்டு விருது

கனடாவில் 1992ம் ஆண்டுப் பகுதியில் தமிழர்கள் அனைத்து வர்த்தக முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர். தமிழர்களின் புதுப்புது வர்த்தக முயற்சிகள் பரவலாக ஆரம்பிக்கப்பட்டு வந்தன.

ஆனால் புடவைக் கடை அல்லது ஜவுளி வர்த்தக நிறுவனம் மட்டும் தமிழரிடம் இருக்கவில்லை. இதற்கான காரணம் என்னவென்றும் தெரியவில்லை.

அவ்வேளையில் துணிச்சலுடன் வடஇந்தியர்களின் புடவைக் கடைகள் ஓகோவென்று நடைபெற்றுக்கொண்டிருந்த ஜெராட் வீதியின் இந்திய பஜாரில், முதன்முறையாக ஓர் ஈழத்தமிழர் அதே வர்த்தகத்தில் குதித்தார்.

அவர், '6 குமார்ஸ்' நிறுவனத்தின் அதிபரான குமார். இன்று பன்னிரண்டு ஆண்டுகள் முடிவுற்ற வேளையில், ஸ்காபரோவிலும் அதே பெயரில் அதே தொழிலை ஆரம்பித்த இவரே கனடாவில் இந்தத் துறையின் முன்னோடி எனக் கொள்ளப்படுகின்றார்.

புங்குடுதீவில் பிறந்து. உள்ளூர் பாடசாலையிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் கல்வி பயின்ற பின்னர் 1984ல் இங்கிலாந்து சென்று Accountancy/computering கல்வி கற்று அங்குள்ள நிறுவனமொன்றில் பணியாற்றிய குமார் (ஜெயகுமார் பரமானந்தம்), 1990ல் கனடாவுக்கு வந்தார்.

ஒருநாள் ஜெராட் வீதிக்குச் சென்றபோது, ஈழத்தமிழர்கள் தங்களின் கலாசார பாரம்பரியங்களுக்கு ஒவ்வாத புடவைகளை அங்குள்ள வடஇந்தியர் கடைகளில் வாங்கியதைக் கண்டபோது, அவரது மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அதுவே, 1992ல் '6 Kumars Silk House' ஆக உருவெடுத்தது. இவரது சகோதரர் திரு. சிறீகுமார் இந்த நிறுவனத்தின் பங்காளர்.

இவரது தந்தையாரான காலஞ்சென்ற பரமானந்தம் அவர்கள் பல வருடங்களுக்கு முன்னர் பதுளையில் ஜவுளி வர்த்தகம் செய்ததையும், இவரது மூத்த சகோதரர் இங்கிலாந்தில் '6 குமார்ஸ்" என்ற பெயரில் புடவை வர்த்தகம் செய்வதையும் பின்னணியாக எடுத்தால், திரு. குமாரும் அதே துறையில் இறங்க மனம் கொண்டதில் தவறிருக்க முடியாது எனலாம்.

ஓர் இனத்தின் அடையாளமாக ஒருவரது பெயர், பேசும் மொழி ஆகியவற்றை மட்டுமன்றி அவர்களின் உணவு வகைகள், உடை வகைகள், குடியிருப்பின் கட்டிட அமைப்பு போன்றவைகளையும் பார்க்க வேண்டும். இந்த வகையில், தமிழர்களின் பிரதான அடையாளமாக அமையும் புடவை வகைகளை அவர்களின் கொண்டாட்டங்கள் வைபவங்களுக்கு மட்டுமன்றி அன்றாடத் தேவைகளுக்கும் உரியதாக வழங்க வேண்டியது இந்த வியாபாரத்தின் பிரதான அம்சம். அதேசமயம், வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறுவதானால் தரம், தராதரம் ஆகியவைகளில் நேர்மையாக இருக்க வேண்டும்.

1992ல் வாடகைக்குப் பெற்ற ஒரு சிறிய நிலப்பகுதியில் ஆரம்பமான '6 குமார்ஸ்' இன்று அதேயிடத்தில் நான்கு மாடிகளைக் கொண்ட சொந்தக் கட்டிடத்தில் இயங்குகின்றது என்றால், அவர்களது புடவை வியாபாரத்தின் நேர்மையை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

இது பற்றி திரு. குமார் அவர்கள் விபரிக்கையில், "எமது பிரதான குறிக்கோள் எப்போதும் தரமான புடவைகளை, தூய பட்டு வகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதே. அதனை இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றோம்" என்று சொன்னார்.

இந்தியாவில் அறிமுகமாகும் பட்டுப் புடவைகளை உடனுக்குடன் இறக்குமதி செய்து கனடிய வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதால் நிலையான ஒரு பெயரையும் இடத்தையும் தாம் தக்க வைக்க முடிந்துள்ளதாகவும் பெருமையுடன் அவர் கூறினார்.

இதன் காரணமாக ஈழத் தமிழர்களல்லாத இந்திய மக்களும் தற்போது '6 குமார்ஸ்' நிறுவனத்தின் வாடிக்கையாளர்களாகியுள்ளனர் தினமும் குறித்த நேரத்துக்குத் திறந்து குறித்த நேரத்துக்கு மூடுவதை மிகவும் உறுதியாக இவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

இதற்கு நல்லதொரு உதாரணத்தைச் சொல்லாம். கடந்த மாத (2004 ஜனவரி) நடுப்பகுதியில் ரொறன்ரோவில் மிகவும் கடுமையான பனி மழை பொழிந்தது. வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை. எவரையும் வெளியே செல்ல வேண்டாமென வானிலை அவதான நிலையம் அடிக்கடி அறிவித்துக் கொண்டிருந்தது. அலுவலகங்கள், தொழிலகங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

ஆனால், ஜெராட் வீதியிலுள்ள '6 குமார்ஸ்' மட்டும் திறந்திருந்தது. வாடிக்கையாளர்கள் இல்லாத நிலையிலும் நிறுவனத்தை மூடிவிட விரும்பவில்லை. இதனை இந்த நிறுவனத்தின் முகப்பினைக் காட்டும் மிகப்பெரிய வர்ணப் படத்துடன் 'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகை ஒரு பிரதான செய்தியாக

2004 ஜனவரி 18ம் திகதிய இதழில் (B8 Metropolis) பிரசுரித்திருந்தது. இந்தப் புகைப்படத்துக்கு, "Kumars Silk Shop remains open late in the cold, cold eveng last week" என்று விளக்கமும் கொடுத்திருந்தது.

"இதுதான் 6 குமார்ஸ் - வியாபாரம் இருக்குதோ இல்லையோ நேரம் தான் எங்களுக்கு முக்கியம்" என்கிறார் குமார்.

கனடாவில் புதிய வர்த்தக முயற்சியை ஆரம்பித்து, மேலும் பலர் இத்துறையில் துணிச்சலுடன் இறங்க வழிவகுத்த திரு. ஜெயகுமார் பரமானந்தம் அவர்களுக்கு தமிழர் தகவல் வர்த்தக முன்னோடி விருதும், திரு. நா. (சிவா) சிவலிங்கம் அவர்கள் தமது பெற்றோர் நாகரத்தினம் தம்பதிகள் ஞாபகார்த்தமாக வழங்கும் தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது.

மீனம்

'R & S ஓட்டோஸ்' ராதா, வாகனங்களின் ராஜா



ராதா
கிருஷ்ணசாமி

13வது
ஆண்டு
விருது

இலங்கையில் வாழ்ந்த காலத்தில் தென்னிலங்கையிலிருந்து பாவித்த வாகனங்களைக் கொள்முதல் செய்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்று சிறிய லாபத்துடன் விற்பதை ஒரு பொழுதுபோக்குத் தொழிலாக மேற்கொண்டவர், இன்று கனடாவில் கார் விற்பனைச் சேவையில் முன்னணியில் திகழ்கின்றார். சிறுவயதி-லிருந்தே வாகனங்களில் ஏற்பட்ட தனி மோகம், பதினான்கு வயதாகையில் மூத்த சகோதரருக்கு வாகன விற்பனையில் உதவியிபோது, பின்னொரு நாள் கண்டம் விட்டுக் கண்டம் சென்று கனடாவில் கார் விற்பனையில் இறங்குவோமென்று இவர் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை.

'மனம் போல வேலை' என்பது போன்று, திரு. சிதம்பரம் ராதா கிருஷ்ணசாமி என்னும் இந்த உயர்ந்த மனிதர் இன்று கனடாவில் தமது தொழிலால் உயர்ந்து நிற்கின்றார்.

கஜமுகன்

1990ல் கனடாவில் குடியேறியபோது வங்கி நிறுவனமொன்றில் ராதாவுக்கு வேலை கிடைத்தது. வாகனக் கடனைச் செலுத்தாதவர்களின் வாகனங்களைச் சுவீகரித்து, அவற்றை மீள்விற்பனைக்கு உகந்ததாகப் பராமரித்துக் கையளிக்கும் வேலை இது. இந்தத் தொழிலின் நெளிவு சுழிவுகளை அறிந்தபின், தாமும் இவ்வாறான வாகன விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்தால் என்ன என்ற எண்ணம் அவரது சிந்தனைக்குள் எழும்பியது. தமது வீட்டுக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இத்தொழிலை ஆரம்பித்த ராதா, எப்போதும் சுமார் நூறு வாகனங்கள் விற்பனைக்குத் தயாராகவிருக்கும் நிலையத்தை ஸ்காபரோவில் தற்போது நடத்தி வருகின்றார்.

R & S Auto Sales நிறுவனம் இவரது கனடிய தொழில் முயற்சியின் முதற் குழந்தை. தற்போது அதற்கு இணைவாக Radha Automative Engineering Inc, Radha International Finance ஆகிய நிறுவனங்களையும் நிறுவி, வாகனப் பராமரிப்பு, வாகனக் காப்புறுதி ஆகியவைகளையும் சொந்தமாக மேற்கொண்டு வருகின்றார்.

பாவித்த வாகனங்களைக் கொள்முதல் செய்து, அவைகளைத் திருத்திப் பராமரிப்புச் செய்து மீளவும் விற்பனை செய்வது இலகுவான தொழிலல்ல. முதலில் பொறுமை வேண்டும். அடுத்து நம்பிக்கையான வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும். இவையிரண்டையும் ஒழுங்காகப் பேணுவதால், மாதமொன்றுக்குச் சராசரியாக இருபத்தியைந்து வரையிலான வாகனங்களை இவரால் விற்க முடிகின்றது. சிலசமயம், ஒரு வருடத்தில் ஐநூறு வரையானவைகளையும் விற்க முடிகின்றது.

ராதா ஒரு தமிழர் என்பதால் அவரது வாடிக்கையாளர்கள் அனைவரும் தமிழர்களாக இருப்பர்களென எண்ணக்கூடாது. சுமார் அறுபது வீதமானவர்கள் கனடாவில் வதியும் மற்றைய நாட்டினர். அதேசமயம், சில தமிழ்க் டும்பங்களுகம்கு ஆறு அல்லது ஏழு வாகனங்களை விறக முடிந்ததைத் தமது தொழிற் சுத்தத்துக்குக் கிடைத்த வெற்றியாக எண்ணி மகிழ்வுறுகின்றார்.

"செய்யும் தொழில் எதுவாகவிருந்தாலும், அது சிறிதோ பெரிதோ, முழு ஈடுபாட்டினையும் அதன் மீது செலுத்த வேண்டும். அந்தத் தொழிலினை வெற்றியாக முடிக்க வேண்டுமென்று திடசங்கற்பம் பூணவேண்டும். அதன் மீது ஒருவகையான பக்தி செலுத்த வேண்டும்" என்று கூறும் ராதா, அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டால் தொழிலில் தோல்வி ஏற்பட இடமில்லை என்று அடித்துக் கூறுகின்றார.

வாகன விற்பனை என்பது போட்டியான ஒரு வர்த்தகமாக இன்று மாறி வருகின்றது. ஊடக விளம்பரங்களிலும் கூட இதனையொட்டிய போட்டி வாசகங்கள் காணப்படுகின்றன. புதிதாக உருவாகியிருக்கும் போட்டிச் சூழல் ஆரோக்கியமானதாக இருக்குமா என்று பலரும் கேட்கின்றனர்.

வர்த்தகம் என்றால் அங்கு போட்டியிருக்கும். வாடிக்கையாளரின் தேவையையும் நிலைமையையும் அறிந்து அனுசரித்து அதற்கேற்ப நடந்துகொண்டால் எல்லாம் சுபமாக முடியுமென்பது ராதா கிருஷ்ணசாமி சுலோகம்.

இதுவே இவரது தொழில் வெற்றியின் ரகசியமும்கூட. அதேசமயம் எந்தப் போட்டியையும் சந்திக்கத் தயராகவும் உள்ளார்.

பிறந்தகத்திலும் புகுந்தகத்திலும் சமூக ஆதாரப் பணிகளில் தமது பங்கைச் செலுத்தி வருகின்ற இவர் நல்லதொரு பண்பாளர். மனம் கோணாது பல்துறைப் பணிகளுக்கும் தமது வருமானத்தின் கணிசமான பகுதியைச் செலவிட்டு வருகின்றார்.

திரு, ராதா கிருஷ்ணசாமி அவர்களின் வாகன விற்பனைத் தொழில் முயற்சியை விதந்துரைத்த கனடாத் தமிழர் வர்த்தக சம்மேளனம், 2002ம் ஆண்டில் இவருக்கு Award of Excellence விருது வழங்கிக் கௌரவம் செய்தது.

இவரது அனைத்து வர்த்தக முயற்சிகளையும் பாராட்டும் வகையில், இவ்வருடத் தமிழர் தகவல் வர்த்தக முன்னோடி விருதும், யாழ்ப்பாணத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் மயில்வாகனம் நினைவாக அவரது பெற்றோர் வழங்கும் தங்கப் பதக்கமும் சூட்டப்பெறுகின்றது.

கௌரவம் பெறும் மாணவ மணிகள்

எழுத்துலகின் இளைய தாரகை



சிவகாமி விஜேந்திரா

13வது ஆண்டு விருது

University of Toronto Schools (UTS) இல் 11ம் வகுப்பில் பயிலும் சிவகாமி விஜேந்திரா 1992ம் ஆண்டில் இலங்கையிலிருந்து கனடாவுக்கு குடிபெயர்ந்தார். Grenoble அரசினர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த சிவகாமியின் அறிவுக் கூர்மை, சிருஷ்டிப்புத் திறன், பிரச்சனைகளைத் தீர்க்கும் திறமை, ஞாபக சக்தி யாவும் ஒரு gifted student ஆக இவரை இனம் காட்டின. அதனைத் தொடர்ந்து 1996ம் ஆண்டு முதல் Denlow pedseil. தனது gifted program இல் சிவகாமியை வளர்த்தெடுத்தது. ஐந்தாம் வகுப்பில் அவர் படிக்கும் போது out door education இன் 30வது ஆண்டுவிழாவில் Outdoor education பற்றிய தனது பார்வை எனத் தானே தயாரித்து பேசிய பேச்சுத்தான் அவரது முதலாவது பொது அரங்கம்.

சிவகாமியின் பாதையில் புதிய பரிணாமம் 1999ம் ஆண்டு நிகழ்ந்தது. University of Toronto Schools தன்னை நாடி விண்ணப்பித்த 1,000 பேரில் 100 மாணவர்களைத் தெரிவு செய்த போது அதில் ஒருவராகச் சிவகாமியும் தெரிவானார். சென்ற ஆண்டு June இல் அதியுயர் கூர்மதியாளர் அமைப்பான Mensa இன் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்து அதன் உறுப்பினராகியுள்ளார். அவர் பாடத்தில் காட்டும் திறமைக்காக UTS வழங்கும் A.N. Scarrow Memorial பரிசு இரு தடவையும் இவருக்கே கிடைத்தது. அதுமட்டுமன்றி 98ம் ஆண்டு முதல் 2002ம் ஆண்டு வரை Spelling Bee of Canada நடத்தும் போட்டியில் ரொறன்ரோ மட்டத்தில் நிகழும் போட்டியிலும் 1ம் பரிசை இரண்டு முறையும் 2ம் பரிசை 3 முறையும் பெற்றுள்ளார்.

இவருக்கு ஆங்கில மொழியில் இருக்கும் புலமையும் ஆற்றலும், பாடசாலைக் கல்வி என்ற மட்டத்தில் வெற்றியைக் கொடுத்தது மட்டுமன்றி சிறுகதை படைத்தலிலும் விஞ்சி நிற்கிறது. Toronto Star வருடா வருடம் 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காக நடத்தும் சிறுகதைப் போட்டியில் இரு தடவைகள் முதல் பரிசைப் பெற்றுள்ளார். 2001ல் A New Word என்ற கற்பனைக் கதையிலும், 2003ல் Ripe Royal Galas என்ற உணர்வுபூர்வமான கதையிலும் வெளிப்பட்ட இவரின் மொழி ஆட்சியையும் சிருஷ்டிப்புத் திறனையும் கண்டு விதந்த Toronto Star Starship இவருக்கு பகுதி நேர வேலை வழங்க முன்வந்துள்ளமை இவரின் எழுத்தாற்றலுக்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும்.

ஆங்கிலத்தில் மட்டுமன்றி சரித்திரம், கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றிலும் சிறந்து விளங்குகின்றார் சிவகாமி.

சரித்திர பாடத்தில் கென்யா நாட்டின் Mau Mau Revolution பற்றி இவர் எழுதிய கட்டுரை இவரது ஆசிரியரால் பல இடங்களிலுள்ள கல்விச் சபைகளுடன் பரிமாறப்பட்டுள்ளது.

வாட்டர்லு பல்கலைக்கழகம் நடத்தும் Pascal, Cayley Math Contest களில் அதியுயர் சிறப்புச் சித்திகளைப் பெற்று 2003ல் Galors Contest எழுத அழைக்கப்பட்டார்.

Toronto Science Tech Fair 1997ல் City Finalist ஆகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சுற்றாடலிலும் சூழலிலும் இவருக்கு உள்ள அதீத அக்கறை 2003ல் Toronto Envirothon Competition இல் 3வது இடத்திற்கு வெற்றி பெற வழி வகுத்தது.

மனித மேம்பாடு, மனித நேயம், மனித உரிமைகள் ஆகியவைகளில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் மிக்க இவர் Amnesty International Clubல் நிர்வாகியாகவுள்ளார். நிதி திரட்டல், கடிதம் எழுதுதல் (Letter writting) போன்றவற்றைச் செய்வதுடன், Social Issues Councilன் நிர்வாக உறுப்பினராகவிருக்கின்றார்.

பாடசாலை soft ball குழுவில் ஒருவராக இருப்பதுடன், discus, javelin எறியும் போட்டிகளிலும் பங்கு பற்றிப் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

Sunny brook வைத்தியசாலையில் தன்னார்வத் தொண்டுப் பணி செய்யும் இவர், Winchester பாடசாலையிலும் தனது பாடசாலையிலும் கணிதம் கற்பிப்பதையும் தொண்டர் சேவையாகச் செய்து வருகின்றார். சிவகாமி கடந்த 2 வருடத்தில் 400 க்கு மேற்பட்ட மணித்தியாலங்களை இவ்வாறு செலவிட்டமைக்கு பாடசாலை விருது வழங்கிக் கௌரவித்தது. கல்வி தவிர்ந்த வெளி வேலைகள் அதிகம் செய்யும் தலைமைத்துவத்தை காட்டும் மாணவர்களுக்கு பாடசாலை கொடுக்கும் Dorothy Thomas Memorial Award ஐயும் 2002ல் சிவகாமி பெற்றார்.

2003ம் ஆண்டு அதியுயர் மதிநுட்பமும், சிருஷ்டிப்புத் திறனும் கல்விக்கு வெளியேயுள்ள செயற்பாடுகளிலும் திறமை வகிக்கும் மாணவர்களுக்கான Shad Valley Summer Camp க்கு போனதன் மூலம் சிவகாமி IBM இல் வேலை பெறவும் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் அந்தக் Camp இல் சிவகாமியின் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்ட Sani Goo என்ற Play doh வின் Protocol plan இற்கு RBC Markets விருது கொடுத்து கௌரவித்துள்ளார்கள். Shad Valley Summer Camp நிகழ்ந்த கனடா முழுவதுமுள்ள 10 பல்கலைக்கழகங்களிலிருந்து தெரிவாகிய 10 குழுக்களை Royal Bank judge பண்ணி அவர்களது எண்ணக் கருவுக்கு விருது கொடுத்துள்ளது. இந்த Sani goo ஐ பிள்ளைகள் விளையாடும் போது Sani goo பற்றீரியாக்களை அழிக்கும் Antibiotic ஆகத் தொழிற்படுகிறது.

2004ம் ஆண்டு கோடை விடுமுறைக்கு இலங்கை சென்று ஏதாவது தொண்டர் சேவை செய்ய வேண்டும் என்பதே சிவகாமியின் தற்போதைய திட்டமாகும்.

கௌரவம் பெறும் மாணவ மணிகள்



அனுராகவன் கேதீஸ்வரன்

13வது ஆண்டு விருது

தமது நான்காவது வயதினில் 'அப்பா - டடி' நாடகத்தில் நடிக்க ஆரம்பித்து, இதுவரை நூறுக்கும் அதிகமான மேடை வானொலி நாடகங்களில் அப்பாவுடன் சேர்ந்து அரங்கேறி, தற்போது திரைப்படங்களில் 'டடி'யுடன் சேர்ந்து நடிக்கும் தரத்திற்கு வளர்ந்துள்ள இளங்கலைஞர் அனுராகவன். இது வெறும் புகழ்ச்சியல்ல. ரசிகர்களின் மெய்யான பார்வை இது.

இவரது தந்தையார் கேதீஸ்வரன் என்னும் சட்டப்பெயர் கொண்ட எஸ். கே. தீசன். "தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழி" என்ற கூற்றினை நிரூபித்ததுடன், தந்தையை விஞ்சிய மைந்தன் எனும் புதுமொழியையும் உருவாக்கிய அற்புத இளநடிகர் அனுராகவன்.

கனடிய மண்ணில் நடைபெற்ற 'பூஞ்சோலை - 95' இவருக்கு முதல் மேடையானது. அதே வருடம், கனடா இந்து மாமன்ற விழாவில் 'சமய குரவர்கள் சந்தித்தால்...' பல்சுவை நிகழ்ச்சியில் நடித்து, "யார் இந்தச் சிறுவன்?" என்று பலரையும் மூக்கில் விரல் வைக்கச் செய்தார்.

மாமா நீங்கள் பிசியோ, சட்டம் ஒரு சக்கரைப் புசணிக்காய், எப்ப தம்பி என்ரை பிளைட், ராசம்மா.com, இஞ்சருங்கோ ஈ மெயில் வந்திருக்கு, மிலேனியம் 2000.5, போடா தம்பி வெளியாலை உட்பட்ட பல நகைச்சுவை நாடகங்களில் அனுராகவன் கலக்குக் கலக்கியுள்ளார். மேடை நாடகங்களில் மட்டுமன்றி வானொலி, தொலைக்காட்சி வரிசைகளிலும் இவருக்கெனத் தனியான ரசிகர் கூட்டம் உள்ளது..

பாரதி ஆர்ட்ஸ் குழுவில் இவர் 'கீ போர்ட்' வாத்தியக் கலைஞர்; அத்துடன் நல்லதொரு பாடகர். விழாக்களின் அறிவிப்பாளராக மட்டுமன்றி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணியாற்றிப் பலரதும் 'சபாஷ்' பெற்றுள்ளார்.

ஏறத்தாழ ஐம்பதுக்கும் அதிகமான மேடைகளில், பக்திப் பாடல்கள், எழுச்சிக் கீதங்கள், சினிமாப் பாடல்களைப் பாடியுள்ளார். இங்கிலாந்து நகரில் நடைபெற்ற புங்குடுதீவு மக்களின் பூவரசம் பொழுது விழாவில் மயூரனின் வில்லிசைக் குழுவில் தமது தந்தையாருடன் சேர்ந்து அனுராகவனும் பங்குபற்றியது மறக்க முடியாதது. அதே வில்லிசை தொடர்ந்து கனடாவில் பல மேடைகளில் ஏற்றம் கண்டு வருகின்றது.

பல நூறு மேடைகள் கண்ட 'கலகலப்பு' நாடகத்தில் நடித்திருந்த போதிலும், 2003ல் இது திரைப்படமாக வெளியானபோது 'குழந்தை' நட்சத்திரமாகவே அனுராகவனை தயாரிப்பாளர்கள் அறிவித்திருந்தார்கள். ஆனால் வளர்ந்த நடிகர்களிலும் பார்க்கத் தத்ரூபமாக, மிக 'இயற்கை'யாக நடித்து அனைவரதும் வரவேற்பை இவர் பெற்றுக்கொண்டார்.

ஸ்காபரோ Brookmill ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று வரும் இளங்கலைஞரான அனுராகவன், அங்கு கல்வியிலும், கல்விசாரா நிகழ்ச்சிகளிலும் முன்னணியில் திகழ்பவர். Safety Patrol குழுவில் ஒரு தொண்டராகவுள்ளார்.



துர்க்கா சின்னத்தம்பி

13வது ஆண்டு விருது

'கிடைக்கும் ஓய்வு நேரததில் ஒரு துளிப்பொழுதைக்கூட வீணாக்கக் கூடாது; அவப்பொழுதையும் தவப் பொழுதாக்க வேண்டும்" என்பதற்காகவே தன்னார்வத் தொண்டில் தம்மைக் கூடுதலாக ஈடுபடுத்தி வருகின்ற மாணவர் துர்க்கா சின்னத்தம்பி.

பாடசாலையில் கல்வி கற்கையில் ஆரம்பமான தொண்டார்வம் இப்போது யோர்க் பல்கலைக் கழகத்தில புகுந்த பின்னரும் இவருடன் சேர்ந்து செல்கின்றது.

தன்னார்வத் தொண்டுக்காக (volunteering) ஆறாம் வகுப்பில் கல்வி கற்கையில் Citizenship Award பெற்ற துர்க்கா, தொடர்ச்சியான தொண்டுச் சேவைக்காக கனடிய மத்திய அரசின் கீழ் இயங்கும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் 2003ம் ஆண்டுக்கான சிறப்பு விருதினைப் பெற்றுள்ளார். கனடா முழுவதும் கடந்த வருடம் இவ்விருதினைப் பெற்ற ஒரேயொரு தமிழ் மாணவர் இவரே.

பாடசாலையில் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் ஆண்டினை முடிக்கும் வரையும், ஒவ்வொரு வகுப்பிலும் சக மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல், வளர்ச்சி குறைந்த மாணவர்களுக்கு உதவுதல், அவர்களுக்காக பாடப் புத்தகங்களை வாசித்து விளக்குதல், வீட்டுப் பாடங்களைச் செய்வதற்கு உதவுதல் போன்ற பலவேறு வகையான நடவடிக்கைகளின் ஊடாக அவர்களின் தினசரி வாழ்க்கைக்கு உதவி வந்துள்ளார்.

பாடசாலைக் கல்வியை முடிக்கும் ஆண்டில் இவருக்கு Human Growth and Development Proficiency Award வழங்கப்பெற்றது.

Meadow craft Seniors Centre இல் முதியவர்களின் அன்றாடப் பணிகளில் சில மணி நேரங்களைச் செலவிட்டு அவர்களுக்கு உதவுவதில் துர்க்கா மகிழ்ச்சியடைந்துள்ளார்.

Girl Guides of Canada நிறுவனத்துடன் தம்மை இணைத்துப் பல பணிகளைப் புரிந்த துர்க்கா அதன் இலக்கினைப் படிப்படியாக முடிக்கையில் bronze, silver பட்டிகளைப் பெற்று இறுதியாக gold பட்டியை பெற்றுச் சாதனை கண்டுள்ளார். ஆறு ஆண்டுகள் இத்துறையில் இவர் பெற்ற அனுபவம், வளர்ந்தோர் எவரதும் உதவியின்றி தனியாக ஒரு முகாம் அமைக்கும் ஆற்றலைப் பெற வைத்தது.

பாடசாலைக் கல்வியிலும், தொண்டுச் சேவையிலும் மட்டுமன்றி தமிழர் பண்பாட்டின் மூலக்கூறுகளாக அமைந்திருக்கும் கலைகளை அறிந்து கொள்வதிலும் அவைகளைக் கற்பதிலும் இவருக்கு அதீத ஈடுபாடுண்டு.

சங்கீதபூஷணம் விஜயலட்சுமி சீனிவாசகம் அவர்களிடம் வாய்ப்பாட்டினை ஐந்தாண்டுகள் கற்றும், வீணை வாத்தியத்தை நான்காண்டுகள் கற்றும் சித்திச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

திருமதி வசந்தா டானியல் அவர்களிடம் நான்கு வருடங்கள் முறையாக பரதநாட்டியம் கற்றுள்ளார்.

மூன்றாம் உலகம் செல்லும் முதலாம் உலக வேலைகள்

எமக்கு இலாபமா, இல்லை நட்டமா?



இ. செந்தில்நாதன்

இணையத்தில் காணப்படும் செய்திக் குழுவொன்றில் (Internet newsgroup) அண்மையில் சுவையான விவாதமொன்று நடைபெற்றது. விஞ்ஞான/தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சி பெற்று அத்துறைகளில் எழுத்தாளர்களாகக் கடமையாற்றுவோருக்கான (Technical writers) இந்த இணையக் குழுவில் இடம்பெற்ற இந்த விவாதம் ஒரு சில வாரங்கள் நீடித்து முடிவுக்கு வந்தபோது புரிந்தது இந்த சமுதாயத்தில் எத்தகைய மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றனவென்றும், இவை எம்மையெல்லாம், குறிப்பாக இங்கு கல்வி பயிலும் இளையோரை, எவ்வாறு பாதிக்கக்கூடுமென்றும்.

இந்த விவாதம் வேறொன்றுமில்லை: கைத்தொழில் நாடுகளின், குறிப்பாக வட அமெரிக்காவின், எதிர்காலமென நம்பப்பட்ட பல முன்னணித் தொழிற்துறைகளின் வேலைகள் மூன்றாம் உலக நாடுகள் நோக்கி படையெடுக்கின்றனவா?

கடந்த ஒரு சில தசாப்தங்களாகவே அமெரிக்காவிலிருந்தும் ஏனைய மேற்கத்தைய நாடுகளிலிருந்தும் வேலைகள் மூன்றாம் உலக நாடுகளை நோக்கி நகர்ந்துள்ளன.

ஆனால் இவை பெரும்பாலும் 'blue collar jobs' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் உற்பத்தித்துறை வேலைகளே. தென் கொரியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தாய்வான் நோக்கியும் நகர்ந்த இவை இப்போது சீனா நோக்கி நகர்ந்து வருகின்றன.

வடஅமெரிக்கத் தங்குதடையற்ற வர்த்தக உடன்படிக்கை (North American Free Trade Association - NAFTA) காரணமாக பல வடஅமெரிக்க வேலைகள் மெக்சிகோவிற்கும் நகர்ந்து வருகின்றன.

கடந்த 25 ஆண்டுகளில் இன்று வரை சுமார் ஐந்து மில்லியன் வேலைகள் அமெரிக்காவில் மட்டும் இழக்கப்பட்டுள்ளனவென அமெரிக்க தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. முன்னேறி வரும் உற்பத்தித் தொழில்நுட்பம் காரணமாக இழக்கப்பட்ட வேலைகளும், மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வேலைகளும் இவற்றில் அடங்கும்.

ஒரு தேசம் அபிவிருத்தியடைகையில் அதன் உற்பத்தித் துறையில் பல மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. அபிவிருத்திக்கு முதல் பலியாவது விவசாயத் துறையாகும். அபிவிருத்திக்கு இன்றியமையாதது என கருதப்படும் கைத்தொழிற்துறை முன்னேற, விவசாயத்தில் ஈடுபடுவோர் எண்ணிக்கை குறைந்து செல்லும்.

இதே போன்று தொழில்நுட்பம் மாற, தொழிற்சாலைகளில் உற்பத்தி முறைகள் முன்னேற, கைத்தொழில் துறையில் ஈடுபடுவோர் (உண்மையில் கூறப் போனால் தேவைப்படுவோர்) எண்ணிக்கை குறையுமென்றும், ஆனால் இத்துறையில் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யும் விதத்தில் காப்புறுதி, பங்குச் சந்தை போன்ற சேவைகள் துறை (Services sector) வேலைகள் அதிகரிக்குமெனவும், அத்துடன் கணினி, உயிரியல் போன்ற அதியுயர் தொழில்நுட்பத்துறைகளின் வளர்ச்சி மேலும் புதிய வேலைகளை உருவாக்கும் எனவும் மேற்குலக அரசாங்கங்களும் பொருளாதார நிபுணர்களும் கட்டியம் கூறினர்.

ஆனால் அரசாங்கங்களும் பொருளாதார நிபுணர்களும் ஒரு புதிய, முக்கிய அபிவிருத்தியொன்றை கருத்திற் கொள்ளவில்லை: அதிகரித்து வரும் மேலைத்தேய, குறிப்பாக பன்னாட்டு நிறுவனங்களின், செல்வாக்கு, தேசங்களின் வரையறைகளுக்கு அப்பாற்பட்ட இந்நிறுவனங்கள் இலாபத்தை மட்டுமே கருத்திற் கொண்டு இயங்குகின்றனவென்பது பலர் குறைப்பாடு. கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அதிகரிக்கத் தொடங்கிய 'பங்குதாரர் நலன் மேம்பாடு' (Shareholder value) என்ற கோட்பாடும் இதற்கு உதவியது.

இந்த நிறுவனங்களின் நோக்கில், இலாபத்தை அதிகரிப்பதற்கு உற்பத்திச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும். மூலப் பொருட்களின் செலவு மிகவும் குறைவாக உள்ளதனால் அடுத்தபடியாக தொழிலாளர்களிற்கான ஊதியம் குறைக்கப்பட்டாலேயே இலாபம் அதிகரிக்கப்படலாம். அதற்காக ஊதியம் குறைந்த, அதேவேளை தொழிற்சங்கங்களின் ஆதிக்கம் குறைந்த நாடுகளை நோக்கி தமது தொழிற்சாலைகளை நகர்த்துவது பொருளாதார நோக்கில் இந்நிறுவனங்களைப் பொறுத்தவரையில் சரியான கொள்கையாகும்.

இக்கொள்கையின் விளைவு? 'white collar jobs' என அழைக்கப்படும் பல அலுவலக மற்றும் உயர் தொழில்நுட்பம் சார்ந்த பல வேலைகளின் ஏற்றுமதி.

இந்த 'யார் எக்கேடு கெட்டாலும் என்ன, இலாபம் தான் முக்கியம்' என்ற சித்தாந்தத்தின் ஆரம்ப கட்டத்தில் பாவனையாளர்/நுகர்வோர் உதவி (customer support) பிரிவுகள் மேலை நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு, குறிப்பாக பெங்களூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இந்தியர்களுக்கு அமெரிக்கர் விளங்கிக் கொள்ளும் பெயர்கள் சூட்டப்பட்டதுடன் அமெரிக்க ஆங்கிலத்தில் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

பாவனையாளர் உதவி பிரிவுகளில் ஆரம்பித்த நிறுவனங்கள், பின்னர் தமது தரவு ஆய்வு (Data analysis) போன்ற பிரிவுகளையும் பெங்களூருக்கு மாற்றினர்.

நாம் மேற்குறிப்பிட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் இன்னொரு கட்டம் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து அதி தேர்ச்சி பெற்ற கணினித்துறை விற்பன்னர்களை அமெரிக்காவிற்குக் கொண்டு வந்தது. இவர்கள் H - 1B வதிவிட உரிமைச் சட்டம் மூலம் அமெரிக்காவிற்கு அழைத்து வரப்பட்டனர்.

அமெரிக்காவின் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடுகட்டும் விதத்தில் அந் நாட்டினால் கணினிப் பொறியியலாளர்களை உருவாக்க முடியாமல் இருந்ததே இதற்கு பிரதான காரணியாயிருந்தது.

எனினும் கடந்த ஒரு சில வருடங்களாக அமெரிக்காவில் உயர் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட சரிவு காரணமாக இத்துறையில் வேலை பார்ப்போர் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பது எமக்கெல்லாம் நன்கு தெரிந்த விடயம்.

இச்சரிவு காரணமாகவும், மற்றும் வெளிநாட்டவரை அமெரிக்காவில் வேலைக்கு அமர்த்துவதில் ஏற்பட்டு வரும் அதிருப்தி காரணமாகவும், H - 1B விசாக்கள் வழங்குவதை அமெரிக்க அரசாங்கம் குறைத்துள்ளதுடன், வேலையிழந்த H - 1B விசா உரிமையாளர்களை திருப்பியும் அனுப்பி வருகிறது.

(மறுபக்கம் வருக)

பரதக்கலா வித்தகி...

கனடியக் கலையுலகம் சாந்தாவிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கின்றது. இவரது அறிவு, ஆற்றல், அனுபவம் ஆகியவை பரதக்கலையை ஒரு புதிய பரிமாணத்துக்கு வளர்த்துச் செல்லும் என்பதோடு இவரும் இவரது மாணவ ஆசிரியர்களும் பரதக்கலை மூலம் தமிழ் மொழியையும் கனடாவில் நிலைபெறச் செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய ஒப்பற்ற கலைஞர் நடனக்கலைக்கும் நடனக் கல்வித் துறைக்கும் ஆற்றி வரும் அளப்பெருஞ் சேவையை மதித்து. கலைத்துறைச் சேவைக்கான தமிழர் தகவல் விருதுடன், 'சரவணாஸ்' சிற்பக் கலைக்கூட அதிபர் திரு. ஜெயராசா வழங்கும் தங்கப் பதக்கமும் சூட்டப்பெறுகின்றார்.

மூன்றாம் உலகம்...

இதேவேளை, அதியுயர் தொழில்நுட்பத் துறையில் இன்னொரு திருப்பம் ஏற்பட்டது: அதாவது, அமெரிக்க வெற்றிடங்களுக்கு இந்தியர்களை வரவழைப்பதிலும் பார்க்க, இந்தியாவிலேயே கணினி விற்பன்னர்களை வேலைக்கமர்த்தி இக் கடமைகளை செய்விப்பது.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட இணையக் குழுவில் ஒரு இந்தியர் இந்த புதிய திருப்பத்தின் பின்னணியை பின்வருமாறு விளங்கப்படுத்தினார். ஒரு அமெரிக்க கணினிப் பொறியியலாளரை அமெரிக்காவில் வேலைக்கமர்த்தினால் செலவு 8,000 (அமெரிக்க) டாலர், ஒரு இந்தியரை H - 1B விசா மூலம் வேலைக்கு அமர்த்தினால் செலவு 5,000 டாலர். ஆனால் இதே வேலையை இந்தியாவில் செய்விக்க ஆகும் செலவு 500 டாலர் மட்டுமே.

பிரபல அமெரிக்க இதழான Forbes அண்மையில் எழுதிய கட்டுரையொன்றில், சுமார் மூன்று மில்லியன் வேலைகள் அடுத்த 12 ஆண்டுகளில் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளனவென குறிப்பிட்டது. இன்னொரு ஆய்வொன்றில், அடுத்த ஐந்தாண்டு காலத்தில் இரண்டு மில்லியன் வேலைகள் மேலைத்தேய நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

மேலைத்தேயங்களின் அரசாங்கங்களும் தொழிற்சங்கங்களும் இந்த உயர் தொழில்நுட்ப வேலைகளின் ஏற்றுமதி பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கையில் இவ்வருட நடுப்பகுதியில் பிரபல நிதி நிறுவனமான JP Morgan Chase & Co புதிய குண்டொன்றை போட்டது. தனது பங்குச்சந்தை ஆய்வுப் பகுதியின் ஒரு பிரிவை அமெரிக்காவிலிருந்து மும்பாய்க்கு மாற்றும் திட்டமே இக் குண்டு.

ஏனைய பல நிதி நிறுவனங்களும் இப்போது JP Morgan Chase பின்பற்றுவது பற்றி ஆலோசித்து வருகின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில் 500,000 நிதித்துறை வேலைகள் அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படலாமென்று கூறுகிறது 100க்கு மேற்பட்ட நிதி சேவை நிறுவனங்களை ஆய்வு செய்த அமெரிக்க ஆய்வு நிறுவனமொன்று.

இந்த வேலைகளிலும் பெரும்பாலானவை இந்தியாவிற்கும் ஏனையவை பிலிப்பைன்ஸ் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுக்கும் செல்லவுள்ளன.

இந்தியா தற்போது 75,000 கணினிப் பொறியியலாளர்களையும் 20 இலட்சம் ஆங்கிலப் புலமையுள்ள பட்டதாரிகளையும் ஆண்டு தோறும் உருவாக்கி வருகிறது.

இவர்களுக்கு உதவும் வகையில் மேலைத் தேயங்களிலிருந்து வேலைகள் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டாலும், முன்னர் போல் கொழுத்த ஊதியத்துடனான வேலைகள் கிடைப்பது கணினிப் பொறியியலாளர்களுக்கு ஓரளவு சிரமமாகி விட்டது.

இதற்கு ஒரு காரணம் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்துள்ள 50,000 H - 1B விசா உரிமையாளர், H - 1B க்குப் பதில் B - 2B (Back to bangalore) என்றும் B - 2C (Back to Chennai) எனவும் குறிப்பிடப்படும் இவர்கள் உள்ளூர் பட்டதாரிகளுடன் போட்டி போடுகின்றனர்.

இந்த 'white collar' வேலைகள் இந்தியாவிற்கும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு மேலைத்தேய நாடுகளில் எதிர்ப்பும் இல்லாமல் இல்லை. பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் தொழிற்சங்கங்கள் இதற்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

பல அமெரிக்க மாநிலங்கள் இவ்வாறு வேலைகள் ஏற்றுமதி செய்வதைத் தடுக்க சட்டங்கள் இயற்றுவது பற்றியும் ஆலோசித்து வருகின்றன (ஆனால் இவர்கள் மேலைத்தேய நாடுகளின் அதீத மானியம் காரணமாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆயிரக் கணக்கான விவசாயத்துறை வேலைகள் பறி போவது பற்றி கவலைப்படுவதில்லை.) இந் நடவடிக்கைகளின் விளைவுகள் கனடா போன்ற அபிவிருத்தியடைந்த நாட்டில் வாழும் எம்மையும் நிச்சயம் பாதிக்கும். அமெரிக்காவில் போன்று பல கனடிய நிறுவனங்களும் நிச்சயமாக கனடிய எதிர்கால சந்ததியினரின் பல வேலைகளை இந்தியாவிற்கோ, ஏன் இலங்கைக்கோ ஏற்றுமதி செய்யலாம். அதை நாம் வரவேற்போமா இல்லை எதிர்ப்போமா?

துருவி ஆராயும்...

உருவாக்கும் ஓர் உத்வேகத்துடனேயே சொந்த ஆய்வுகளை நடத்தி வருகின்றார். இதன் பலனாகச் சிக்கனச் செலவில் விவசாயிகளுக்கும் பிறருக்கும் உதவக்கூடிய நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வடிவமைப்பதில் இவர் வெற்றி கண்டிருக்கின்றார். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால் சூரிய வெப்பம், நிலவாயு, பெற்றோல், விறகு என்று இவற்றால் பெறப்படும் எச்சக்தி கொண்டும் இதனை இயக்கலாம்.

இத்தகைய ஆன்ற ஆய்வாளர், அரிய கண்டுபிடிப்புகளைச் செய்த சாதனையாளர், சூழல்/விவசாய விஞ்ஞானி ஒரு தமிழர் என்பது குறித்து நாம் இரட்டித்த மகிழ்வடைகிறோம்; தமிழினம் பெருமைப்படுகிறது. இவரது அதீத திறமையையும் சாதனைகளையும் மதித்து இவ்வாண்டுக்குரிய தமிழர் தகவலின் விஞ்ஞான ஆய்வுத் துறைக்கான விருதுடன். திரு ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் வழங்கும் சி. வை. தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது.

ஆண்டு மலர் பிரதியை தபாலில் பெறலாம்

தமிழர் தகவலின் 13வது ஆண்டு மலர் பிரதி ஒன்றினைத் தபாலில் பெற விரும்புகின்றீர்களா?

தபாற் செலவுக்காக ஐந்து டாலர்களை காசோலையாக அல்லது காசுக் கட்டளையாக Tamils' Information பெயருக்கு எழுதி அனுப்பவும். உங்கள் தபால் முகவரியையும் ஆங்கிலத்தில் விபரமாக எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Tamils' Information
P.O.Box - 3
Station - F
Toronto, ON.
M4Y 2L4
Canada


சிறியவர்கள் முதியவர்கள் பாடசாலைக்குச் செல்பவர்கள் வேலைக்குச் செல்பவர்கள் வீட்டில் இருப்பவர்கள் எனும் அனைவருக்கும் நாட்களை வெல்வது என்பது ஒரு முக்கியமான செயற்பாடாகவுள்ளது. நாட்களை வெற்றி கொள்வதற்கான முதலாவது திறவுகோல் புரிந்துணர்வு. இரண்டு ஆட்களுக்கிடையில் மட்டுமன்றி, தொழில்சார்துறை, சமூகம், இனம், நாடுகளுக்கு இடையிலும் இதன் தேவை அவசியமாகவுள்ளது.

காலையில் வெளியில் செல்லும் போது மழையோ, வெயிலோ அல்லது அதிகூடிய பனியோ அதுவே மனதுக்கு மிகப் பிடித்தமான காலநிலையாக கருத வேண்டும். இதனைப் புத்தகங்களில் படித்தமைக்காக செய்யாமல் அடிமனதிலிருந்து வரவழைக்க வேண்டும். இல்லையேல் அதற்கான பயிற்சியில் ஈடுபட வேண்டும். எந்தக் கஷ்டத்துக்கும் காரணம் புறச்சூழலோ அல்லது இரண்டாம் நபர்களோ அல்ல. நாங்களே எல்லாவற்றுக்குமான உருவாக்கம். ஆகவே எதனுடைய ஆரம்பத்திலும் கவனத்துடன் இருக்க வேண்டும். அதற்காக ஆரம்பத்தில் பிழை விட்டு விட்டோம் இனி என்ன செய்வது என்றும் கவலைப்படத் தேவையில்லை. எதற்கும் எம்மை தாமதமாகியவர்களாகக் கருதி தாழ்மைப்படாமல், எதற்கும் எப்போதும் தயாரானவர்களாக எம்மை நாங்களே உசார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் சமநிலையினை நிலைநாட்ட வேண்டும். ஆனால் கனவோ, கற்பனையோ அல்லது உபயோகமான முறைகளில் நேரத்தை செலவிடுதல் என்று வரும்போது கூடுதலான பகுதியினை யதார்த்தமான செயல் வடிவங்களுக்கு ஒதுக்குதல் நன்மை தரும். சில பழக்க வழக்கங்களுக்கு அடிமையானவர்கள் உபயோகமான நேரத்தை இனங் காணுவதில் மயக்கமாகவே இருப்பர். சிலர் தாங்கள் அடிமையான பழக்கத்தில் ஈடுபடுவதையே தங்களின் நல்ல நேரமாகவும் கருதக்கூடும். எங்கள் மனதினில் மற்றவர்களை இருத்த முயற்சிக்காமல் மற்றவர்களின் இதயத்தில் எம்மையிருத்த முயற்சி செய்து வெற்றி கொள்வோமாக இருந்தால் நாட்கள் இலகுவாக இருக்கும். ஆனால் அப்படி **எதுவும்** நிகழவில்லை என்றாலும் அதற்காக **கவலைப்படத்** தேவையில்லை, மற்றவர்**களுக்காக** எதற்கு எங்கள் **மகிழ்ச்சியினை** இழக்க வேண்டும்? **நாங்கள்** அடுத்தவர் மேல் **பொறாமைப்படுவதை** விடுத்து அடுத்தவர்கள் எம் மேல் **பொறாமைப்படும்** வகையில் இருப்போமாக இருந்தால் **மகிழ்ச்சி** இரட்டிப்பாகும்.

தொடர்பாடல் என்பது அடுத்த முக்கியமான பகுதி. எந்த மொழியாக இருந்தாலும் சரி உரையாடலிலோ அல்லது எழுத்திலோ நாங்கள் ஒன்றை நினைத்துக் கூற மறுபுறத்தில் வேறுவிதமாக புரிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இவ்வாறான குறையினைப் போக்க இருதரப்பினரும் பாவிக்கக்கூடிய ஒரே ஒரு ஆயுதம் கேள்வி எழுப்புவதே. அதுமட்டுமல்ல சில சமயங்களில் எமக்குத்தான் சொல்கிறார்களா என்ற சந்தேகமும் எழக்கூடும். இதிலிருந்து தெளிவடைதல் வேண்டும். ஒரு கணத்தில் நிகழும் நிகழ்வுகள், எடுக்கப்படும் முடிவுகள் முழு வாழ்க்கையையே பாதிக்கக்கூடும். பெரும்பகுதியினர் தாங்களே தங்களுக்கான உணர்ச்சிச் சுவரை எழுப்பி விட்டு அதை கடக்க முடியாமல் இருப்பர். இவர்களுக்காக மற்றவர்கள் இச்சுவரை உடைக்க முடியாது.

எல்லோருமே தங்களைப் பற்றியும், பிறரைப் பற்றியும், பொதுவான வாழ்க்கை பற்றியும் தங்களுக்குள்ளே ஒரு உரையாடலை வைத்திருப்பர். இத்தகைய உரையாடலே அவர்களின் குணவியல்பையும், செயல் வடிவங்களையும் தீர்மானிக்கும். இந்த உரையாடலில் நல்லதையோ, கூடாததையோ அல்லது எதிலும் வெற்றி கொள்ளக் கூடியவர், வெற்றி கொள்ள முடியாதவர் என தாங்கள் யார் என்ற பெயரைச் சூடிக் கொள்வர். இத்தகைய பெயர் சூடல் தான் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவது. இத்தகைய அக உரையாடல், ஒலிநாடா போன்று மீண்டும் மீண்டும் மூளையில் வாசிக்கப்படுவது. இது எதிர்மறையான எண்ணங்களைக் கொண்ட ஒலிநாடாவாக இருந்தால் அதனை வெளியில் எடுத்து யதார்த்தமான சாத்தியமாகக் கூடிய குறிக்கோள்களை மீள்பதிவு செய்து மீண்டும் மூளையில் சுற்றவிடலாம். இல்லையேல் அவற்றை ஒரு தாளில் எழுதி மீண்டும் மீண்டும் படிக்கக்கூடியதாக பார்வையில் வைக்கலாம். எதிர்மறையான விடயங்களை நேர்மறையாக எழுதும் போதும் அதை வாசிக்கும் போதும் ஒரு புதுவகையான உணர்வு மாற்றத்தை உணரலாம்.



நாட்களை எப்படி வெற்றி கொள்வது?

அம்பலவாணர் யோகன்

மிகச் சிலர் தான் தங்களுக்குத் தெரிந்தவற்றை பிறருக்கு ஊட்டி மகிழ்வர். ஆனால் பெரும்பகுதியினர் தங்களுக்குத் தெரிந்தவற்றை பிறருக்குத் தெரியாமல் மறைப்பதிலேயே மகிழ்ச்சியடைவர். இவர்களை இனங்காண்பதுதான் மிகப்பெரிய கஷ்டம். காரணம் எல்லோருக்குமே இரண்டு முகங்கள் இருக்கும். அதிலும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட முகங்களுடன் நடமாடுபவர்களே அதிகம். இவர்களின் மத்தியில்தான் எமது தினசரி நடவடிக்கைகள் நிகழ்வதால், மிகவும் அவதானத்துடனும், நுணுக்கமாகவும் புறச்சூழலைப் புரிந்து கொள்வதுடன், எந்தப் பெரிய தாக்கம் ஏற்படினும் அதனை ஒரு தாக்கமாகவே கருதாத மனப்பாங்கும் இருந்தால் மட்டுமே நாட்களை வெல்ல முடியும்.

தொடர்ந்தும் ஒரேமாதிரியாக நாட்கள் அமைவதால், பெரும்பகுதியினர் சலிப்படைவது இயற்கையே. அதனால் தங்களை அறிவாளிகள் என நினைப்பவர்கள் புதிது புதிதாக ஏதாவது செய்ய நினைப்பதையும் இழந்து விடுகின்றனர். ஆனால் உண்மையான அறிஞர்கள், புதிய சிந்தனைவாதிகளே இத்தகைய சலிப்புத் தன்மையிலிருந்து மீண்டு கொள்கின்றனர். சாதாரணமானோர் தங்களின் தினசரி வாழ்க்கையினை அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்குடனும், சிறிய சிறிய மாற்றுச் செயல்வடிவங்களுடனும், மனநிம்மதியே பிரதான குறிக்கோளாக கருதிக் கொண்டு, எவ்வகை எதிர்பார்ப்புகளும் இல்லாமல் (எனெனில் ஏமாற்றங்களே மனதை சோர்வடைய செய்து தோல்வி நாளாக மாற்றிவிடும்) இருந்தாலே நாட்களை வெற்றி கொள்ள முடியும்.

வாழ்க்கையின் பெரும்பகுதியினையோ அல்லது கணிசமான காலம் தாய்நாட்டில் வாழ்ந்து விட்டு மிகுதிக் காலத்தை புகலிட நாடுகளில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களை சென்றடைவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கம். காரணம் இவர்கள் தான் அதிகமான உளவியல் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக எத்தகைய விடயமாக

(மறுபக்கம் வருக)

இருந்தாலும் இடையிலிருந்து ஆரம்பிப்பது பூரணமாக அமையாது. அடுத்து, இரண்டு விடயங்கள் சம்பந்தமாக எப்போதும் ஒப்பிடல் நிகழும். ஆனால் இது தான் இவர்களின் பலமும் பலவீனமுமாக இருக்கும். இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற பொதுவியல் பலரது மனஅலைச்சலுக்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது. இதுதான் வாழ்க்கை. இதுதான் பயணம் என்பது யாருக்குமே தெரியாது. இதனை அறிய முயற்சி செய்து நேரத்தையும், பணத்தையும், குறிப்பாக உடல் ஆரோக்கியத்தினையே இழக்காமல், இன்றைய நாளினை நல்லதாக்க என்ன செய்யலாம் என்ற கேள்விக்கான தேடலில் இறங்கி அதற்கான செயற்திட்டங்களை திட்டமிடுவதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலுமே கவனம் இருந்தால் நாட்களை வெல்ல முடியும். நேரம் போதாது என்ற குறைபாடு ஏற்க முடியாதது. நேரத்தை சேமிப்பதற்காக ஒரே நேரம் இரண்டு செயல்களை செய்யலாம், ஒரு செயலில் காத்திருக்கும் நிலை இருந்தால் மட்டும். ஆனால் எந்த நேரமும் ஒரு செயலை செய்யும் போது முளை வேறு செயலை செய்வதை வழக்கப்படுத்தக்கூடாது.

எந்தவொரு புறக்காரணியிலும் தங்கி வாழும் நிலை இல்லாமல், எதிலும் சுயத்தை கடைப்பிடிக்கும் நிலை வேண்டும். ஒவ்வொரு தனிமனிதர்களிலும் குறையிருப்பது யதார்த்தமான உண்மை. ஆனால் அக்குறையினை, அடுத்தவர்களின் விமர்சனங்களின் உதவியோடு சரியான முறையில் இனங்கண்டு, இல்லாமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும். ஒருவர் கதைக்கும் முறையினை வைத்து, செய்யும் செயலை வைத்து, நடக்கும் நடத்தையை வைத்து அவரை சரியான முறையில் இனங்காணும் திறமையும் இருந்தால் நாட்கள் இலகுவாக இருக்கும். மொத்தத்தில் வாழ்க்கை சுகமாக இருக்கும். வாழ்க்கையினை ரசித்து, அனுபவித்து வாழும் பயிற்சியும், சந்தோஷமே வாழ்க்கை. வாழ்க்கையே சந்தோஷம் என்ற குறிக்கோளும் உறவுகள் பற்றிய சரியான வரைவிலக்கணங்களினதும், கோட்பாடுகளினதும் தெளிவும், எதிலும் என்ன "செய்தி" சொல்லப்படுகின்றது என்று தேடும் நுண்ணறிவும், நட்புக்கும் அன்புக்கும் இடையிலான வேறுபாட்டினைப் புரிந்து கொள்ளும் உணர்வும் ஒட்டுமொத்தமான புரிந்துணர்வாகஇருந்தாலே நாட்களை வென்று அதன் ஊடாக வாழ்க்கையினை வெல்ல முடியும். The journey of life is day by day.



இனிய நற்றமிழும் புலம்பெயர்ந்த தமிழர்களும்

ஐ. சண்முகநாதன்

தேமதுரத் தமிழ் தமிழ் கூறு நல்லுலகம் என்றெல்லாம் போற்றிப் பறை சாற்றி நம் முன்னோர் வளர்த்த அருந்தமிழ் இன்று இந் நாட்டில் படும் பாடு போதும் போதுமென்றாகி விட்டது.

தமிழ் வளர்த்த வரலாறும் அது போற்றி வளர்க்கப்பட்ட காலமும் தான் தமிழர்களது வாழ்வியலின் பொற்காலம். சங்க கால மன்னர்களும், புலவர்களும் தமிழ் வளர்த்தனர். மூன்று சங்கங்கள் அமைத்து தமிழ் வளர்த்த பெருமை பெற்றது. உலகில் காணப்படும் மொழிகளில் பழமையான தமிழும் ஒன்று.

பிற்காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ் வளர்த்து ஆய்ந்த பேரறிஞர்கள் அதிகமாக இருந்தார்கள். இலக்கண இலக்கிய பரிமாணங்களோடு வளர்ச்சி கண்ட முதுமொழி, ஐரோப்பியர் வருகையும் ஆங்கில மோகமும் எம் மொழியைச் சீர்குலைக்க ஆரம்பித்தது. இந் நிலையில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் பலர் தமிழ் மேல் அதிக காதல் கொண்டவர்கள். தமிழும் ஆட்சி மொழியாக வேண்டுமென பலமுறை முரசறைந்தவர்கள். ஆனால் பலன் உண்டா? இப்படி பெருமை பேசித் திரிவதை நிறுத்தி உண்மையான மொழிப்பற்றாளர்கள் இங்கு இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் என்ன எமது இளம் சமுதாயத்தினரிடம் விடைபெற்றுச் செல்லும் தமிழாகவே இருப்பது உண்மையான தமிழனுக்கு மிகுந்த கவலையையும், மனவேதனையையும் கொடுக்கின்றது.

எந்த இனமும் மொழியைக் கொண்டு தான் இன அடையாளத்தை வெளிப்படுத்தும். எனவே மொழியைத் தொலைத்து விட்ட தமிழர்கள் இனி எப்படி தமிழன் என்று சொல்வர். பொதுவாகவே ஈழத் தமிழர்கள் தம்மை இசைவாக்கம் செய்வதில் வல்லவர்கள். எந்த நாகரிகம், எந்த மதம், எந்தக் கொள்கை போன்ற எவற்றை எடுத்தாலும் இலகுவாகவே தங்களை மாற்றிக் கொள்ளும் சுபாவம் உடையவர்கள். தம்மை கனடியன் என்று சொல்லிக் கொள்வதிலும் அலாதி இன்பம் காண்பவர்கள்.

தான் எப்பொழுது தமிழ்க் கனடியன் என்று சொல்லுகின்றானோ அவன் மொழியிலும் இனத்திலும்பாசம் வைத்தவன். ஆங்கில நாடொன்றில் ஆங்கில மோகம் கொள்வது தவறேதும் கிடையாது. ஆனால் இவ் ஆங்கில மோகம் கொண்டவர்கள் எம் இனிய தமிழை விலை பேசி விற்பதே பாரிய தவறாகும். எமது வருங்கால சந்ததியினருக்கு தமிழ்மொழியையும் எமது கலாசாரத்தையும் ஊட்டி வளர்க்க தயங்கும் எம்மில் ஒரு சிலர் வரலாற்றில் மாபெரும் தவறிழைத்தவர்களாகஆகி விடுகின்றனர். பலமொழிகளைக் கற்று பாண்டித்தியம் பெறுவதும், அறிவை வளர்த்துக் கொள்வதும் மிகவும் பிரதானம். ஆனால் எமது மொழியை ஏளனம் செய்வதோ, பழிப்பதோ, விற்பதோ, புறக்கணிப்பதோ நாம் எமக்குச் செய்து கொள்ளும் கொடுரமாகும். சுமார் பதினேழு மொழிகளில் விரிவுரை நிகழ்த்திய எமது மூதறிஞர் தனிநாயகம் அடிகளார் இப்படி எத்தனை அறிஞர்கள் தமிழை தரணி எங்கும் வளர்த்தனர்.

தமிழன் என்ற பெருமையை உயர்த்தியது எமது மொழியும், கலாசாரமும் பண்பாடுமேயாகும். மண் பற்றும், மொழிப் பற்றும் இல்லாத தமிழன் ஒரு சாதாரண நடைப்பிணம். அவன் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற வாழ்வும் அடையாளம் தெரியாத முகத்தையுடையவனாகவும் இருக்கின்றான். இப்படித்தான் தென் ஆபிரிக்கா, மொரிசியஸ், மலேசியா, இந்தோனேஷியா, மடகாஸ்கர் போன்ற நாடுகளில் வாழ்கின்றார்கள். மேலும் ஒரு பதினைந்து இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கும் அவ்வாறான நிலை நிச்சயமாக ஏற்படும். தாய்மொழி, தாய்நாடு என்று கூறாதவர்கள் வெறும் மனிதர்கள். நாம் எமது பண்பாட்டில் தாயைத் தெய்வமாகப் போற்றுகின்றோம். அதனால் தான் தாய்மொழி, தாய்நாடு என்று தாய் அந்தஸ்திற்கு உயர்த்தி நாம் போற்றுகின்றோம்.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு முத்தமிழை ஒரு பாடமாகக் கற்பியுங்கள். கனடிய அரசே ஒரு திறமைச் சித்தியை வழங்கி ஊக்கப்படுத்துகின்றது. ஆனால் நம்மில் எத்தனை பேர் இதற்கு முயற்சிக்கின்றோம்? நடனம், சங்கீதம், மிருதங்கம் மற்றும் இசை வகுப்புகள், கராத்தே என்பனவற்றிலும் அக்கறை காட்டுகின்றோம். (எதிர்ப்பக்கம் வருக)

வரவேற்க வேண்டியதே. ஆனால் இவை அனைத்தும் தமிழ்மொழியினூடாகவா நடைபெறுகின்றது? பரதக்கலை தமிழர்களின் வாழ்வியலில் பின்னிப் பிணைந்தது. இளங்கோவடிகளினால் எழுதப்பட்ட சிலப்பதிகார காலத்தில் இருந்தும் தொடர்புடையது., தமிழில் அழகாக நடைபெற்ற நடனக்கலை இங்கு ஆங்கில மூலமாக கற்பிக்கப்படும் நடனக்கலை ஆகிவிட்டது. இதே போலவே எமது கலைகள் எல்லாம் ஆங்கில மயமாக்கப்பட்டு மிக வேகமாகப் பரவி வருகின்றது. இவற்றை எல்லாம் காணுகின்ற போது எமது மொழி, பண்பாடு, நற்பழக்கங்கள் எல்லாம் விரைவாக சீரழிந்து போகும் நிலை விரைவில் உருவாகி வருகின்றது. இங்குள்ள கல்விச்சபைகளில் ஏற்பட்ட பாரிய தவறினாலும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு தமிழை ஒரு பாடமாகக் கற்பிக்க விருப்பமற்றவர்களாக இருக்கின்றனர்.

பொதுவாகவே கல்விச்சபைகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் அவர்களின் ஆங்கிலத் தரத்தையே முதன்மையாகப் பார்த்தார்களே தவிர தமிழின் தரத்தை அறியவில்லை. எத்தனையோ தமிழ் ஆசிரியர்கள், பட்டதாரி தமிழ் ஆசிரியர்கள் இருக்கும் போது அவர்களை நேர்முகப் பரீட்சையிலும், ஆங்கிலம் தெரியாது என்று நினைத்து அவர்களை நியமிக்க மறுத்திருக்கிறார்கள். வகுப்பறைகளில் ஆசிரியர்கள் மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்த ஆங்கில கதைகள், கட்டுரைகள் என்பவற்றை கற்பித்து விட்டு ஒரு சில மணித்துளிகள் மட்டும் 'அ' எழுது வீட்டு வேலை எனக் கொடுத்து விடுவதனால் மாணவர்களுக்கு ஆங்கில விடயமே மேலோங்கி "அங்கு என்னம்மா ஆங்கிலம் தான் கற்பிக்கின்றார்" என்று கூறும் அளவிற்கு மாற்றி விட்டார்கள் ஒரு சில ஆசிரியர்கள்.

புலம்பெயர்ந்த எம்மவர்கள் ஐரோப்பிய, அமெரிக்க கண்டங்களில் வாழும் போது எமக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களை நழுவ விட்டு ஒன்றும் அறியாத இளம் பிள்ளைகள் அன்னிய கலாசார மோகங்களுக்கு அடிமையாகி தம் வாழ்வை அழித்து விடுகின்றனர். குறிப்பிட்ட சில காலத்திற்குப் பின்னர் இப்பிள்ளைகள் முகவரியும், முகமும் தெரியாத மிகக் கேவலமான நிலைக்குச் செல்வர். இதனால் தான் எம் பிள்ளைகள் வன்முறையாளர்களாக மாறவும், தம் வாழ்வை சீரழிக்கவும் துணிந்து விடுகின்றார்கள்.

எனவே இங்குள்ள கல்விச் சபைகளில் உள்ள தமிழர்கள் தமிழ்மொழியை நன்கு பேசவும், எழுதவும், இலக்கண, இலக்கிய ஆற்றல் உடைய பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது மிக அவசியமானதாகும். பிள்ளைகளுக்கு தமிழ்மொழி மேல் வெறுப்பும், பெற்றோர்க்குப் பலத்த ஏமாற்றமும் ஏற்படுவதற்கு ஒரு காரணம் கல்விச் சபைகளில் தமிழ்மொழி ஆசிரிய நியமனங்களுக்குப் பொறுப்பாயிருப்பவர்கள் விடும் தவறும் ஒன்றாகும். எனவே எம் இளம் சமுதாயம் எம்மொழி அரவணைப்பிலிருந்து விடுபட்டுச் செல்லக் காரணமாக இருக்கக் கூடாது.

தமிழ் ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து நம் இளம் சிறார்களை ஊக்கப்படுத்த வேண்டும். இங்குள்ள தமிழ் ஆலயங்கள் தமிழ் கிருஸ்தவ ஆலயங்களிலும் தமிழ் கற்பிக்கப்பட வேண்டும். தினமும் நடைபெறும் கலைவிழாக்கள் தமிழ்மணம் கமழ்ந்ததாகச் சிறக்க வேண்டும். எந்தவிதமான காரணம் கொண்டும் அன்னிய கலாசார மோகத்தை கலப்பது தமிழ்மொழியைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பது எம்மவர்களின் தலையாய கடமையாகும். நம் தேசியத் தலைவர் "புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமிழ்மொழியை கண்டிப்பாக வளர்க்க வேண்டும், தம் பிள்ளைகளுக்கு தூய தமிழ் பெயர் வைத்து அழைக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். எனவே தமிழே தன் உயிராகக் கருதும் எவர்க்கும் என்றும் தலை வணங்கும் பண்பு எம்மிடையே வளர வேண்டும். புலம்பெயர்ந்த நம் தமிழர்கள் தமிழ்மொழியையும், எம் கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் என்றென்றும் கண்ணெனக் காப்போமாக!

உலகின் முதல் மருத்துவர் சரகர்

ச. நாகராஜன்

பாரதம் உலகிற்கு அளித்துள்ள பல கொடைகளுள் முக்கியமான ஒன்று ஆயுர்வேதம்.

ஆயுர்வேதம் என்றால் பூரண ஆயுளுடன் வாழ்வது பற்றிய விஞ்ஞானம் என்பது பொருள்! நாளுக்கு நாள் உலகில் இந்த மருத்துவ முறைக்கு மதிப்பு கூடி வருகிறது. 'ஆயுர்வேதா' என்ற இந்தச் சொல்லை எட்டு லட்சம் சொற்கள் அடங்கிய ஆங்கிலம் அங்கீகரித்து சென்ற ஆண்டு தனதாக ஆக்கிக் கொண்டு விட்டது!

பூரண ஆயுளுடன் மனிதன் வாழ வேண்டும் என்று மனிதனைப் படைத்த பிரம்மா அவனுக்கு நோய் வராத நெறிகளையும், நெறிகளை மீறி அவன் நடக்கும் போது நோய் வந்தால் அதை நீக்கும் முறைகளையும் கருணை மேலிட்டு தட்சனுக்கு உரைக்க, அந்த ஆயுர்வேதக்கலை பிரஜாபதி, அஸ்வினி குமாரர்கள், இந்திரன், பரத்வாஜர் வழியே புனர்வசு ஆத்ரேயரை அடைந்தது. அத்ரி முனிவரின் புத்திரரான ஆத்ரேயர் இதை அக்னிவேசருக்கு உபதேசித்தார். அக்னிவேசர் 'அக்னிவேச தந்திரம்' என்ற நூலாக இதை உருவாக்கினார்.

அதர்வண வேதத்தின் அங்கமாக உபவேதமான ஆயுர்வேதம் கருதப்படுகிறது.

அக்னிவேச தந்திரத்தை 'எடிட்' செய்து, திருத்திப் புதுப்பித்தவரே சரகர். சரகர் என்றால் 'இடம் விட்டு இடம் செல்பவர்' அல்லது அலைபவர் என்று பொருள். தன்னிடம் இருந்த அபூர்வமான உயிர் காக்கும் கலையான இந்த ஆயுர்வேதக் கலையை நாடெங்கும் சென்று பரப்பி மக்களை நோயின்றி வாழுமாறு செய்ய முயன்ற ஆசார்யர் சரகர்.

இவரது அறிவு பிரமிப்பூட்டுவதாக இருந்ததால் 'அதி புத்தி' என்று இவர் அழைக்கப்பட்டார்.

சரகரால் இயற்றப்பட்ட 'சரக சம்ஹிதை' 120 அத்தியாயங்களைக் கொண்டது. உரைநடை, பாக்கள் இவை இரண்டினாலும் ஆன இந்த நூல் 12,000 பாக்கள் அடங்கியது என்று கூறப்படுகிறது. ஆனால் இன்று நம்மிடையே 8,419 பாடல்களும் 1,111 உரைநடைப் பகுதிகளும் இன்னும் அதிகப்படி பாக்களாக 332ம் கிடைத்துள்ளன. சுமார் 2,000 பாக்கள் கிடைக்காதது நமது துரதிர்ஷ்டமே!

சரகரின் சம்ஹிதைக்குப் பலவிரிவுரைகள் எழுதப்பட்டுள்ளன. இவை சரகர், சுஸ்ருதர், வாக்பட்டர் - இந்த மூவரே பெரும் மருத்துவ நிபுணர்கள். இவர்களை 'வ்ருத்த த்ரயி' என்று அழைப்பர். இந்த மூவர் இயற்றிய நூல்களுள் இருக்கும் அத்தியாயங்களின் எண்ணிக்கை 120 என்று இருப்பது ஆச்சரியத்தை அளிக்கும் விஷயம்!

மனிதனின் பூரண ஆயுள் 120 என்பதைக் குறிக்கவே 120 அத்தியாயங்கள் அமைக்கப்பட்டதாகக் கூறுவர். 'ஜீவேம சரதச் சதம்' - "நூறு ஆண்டுகள் வாழ்வோமாக" என்று வேதம் முழங்கினாலும், நெறியோடு வாழ்ந்தால், 120 வயதை எட்டிப் பிடிக்கலாம் என்பது சரகரின் சித்தாந்தம்.

அஷ்டாங்க சிகிச்சை

'சரக சம்ஹிதை' ஆயுர்வேதத்தைத் தெளிவாக விளக்குகிறது. ஆயுர்வேதம் அஷ்டாங்க சிகிச்சையை - (மறுபக்கம் வருக)

எட்டு வித சிகிச்சை முறைகளை - வலியுறுத்துகிறது.

1. காய சிகிச்சை (உள் மருந்து)
2. சாலாக்யம் (கழுத்து, தலை சம்பந்தம்)
3. சால்ய பர்த்ரகா (ஆயுதம் மூலம் அறுவை சிகிச்சை)
4. விஷகர்க வைரோத்ர ப்ரச்னா (இயற்கை மற்றும் செயற்கை விஷங்களை முறித்தல்)
5. பூத வித்யா (பூத பிசாசங்களை நீக்கல்)
6. கௌமார ப்ருத்யா (குழந்தை நலம்)
7. ரசாயனம் (என்றும் இளமையுடன் இருக்க அபூர்வ மருந்துகள்)
8. வாஜீகரணம் (சிற்றின்பத்தைத் தூண்டுகின்ற மருந்து)

ஆயுர்வேதம் மூலம் செய்யப்படும் அறுவை சிகிச்சையை விவரிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தும் சரகர் உள்ளுக்குள் மருந்து செலுத்தி குணமாக்கும் முறைகளையே விஸ்தாரமாக எடுத்துரைக்கிறார்.

எட்டு பாகங்கள்
சரக சம்ஹிதை எட்டு பாகங்களை உடையது.

1. சூத்ர ஸ்தானம்
2. நிதான ஸ்தானம்
3. விமான ஸ்தானம்
4. சரீர ஸ்தானம்
5. இந்திரிய ஸ்தானம்
6. சிகித்ஸா ஸ்தானம்
7. கல்ப ஸ்தானம்
8. சித்தி ஸ்தானம்

சூத்ர ஸ்தானம் ஆரோக்கியத்தை எப்படி மேம்படுத்துவது என்பதை விவரிக்கிறது.
நிதான ஸ்தானம் நோய்களை டயாக்னிஸ் செய்யும் முறையை விவரிக்கிறது.
விமான ஸ்தானம் உடலில் நோய் ஏன் ஏற்படுகிறது என்பதை விவரிப்பதோடு அதைப் போக்கும் மருந்துகளின் குணங்களை விவரிக்கின்றது.
சரீர ஸ்தானம் உயிர் வாழும் ஜீவராசிகளின் ஜனனத்தையும் மரணத்தையும் விவரிக்கிறது.
இந்திரிய ஸ்தானம் நோய் வருவதற்கான அறிகுறிகளை விவரிக்கிறது.
சிகித்ஸா ஸ்தானம் நோய்களைத் தீர்க்கும் சிகிச்சை முறைகளைத் தெளிவாக விவரிக்கிறது.
கல்ப ஸ்தானம் பலவிதமான சிகிச்சை முறைகளை விளக்குகிறது.
சித்தி ஸ்தானம் எவை எவற்றை நீக்க வேண்டும், எவை எவற்றைக் கொள்ள வேண்டும் என்பதை விவரிக்கிறது.

வில்லியம் ஹார்வி கி.பி. 1628ல் ரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்து மருத்துவ உலகில் புரட்சியை ஏற்படுத்தினார். ஆனால் இந்த ரத்த ஓட்டத்தை சரகர் சுலபமாக விளக்குகிறார்.

தாவரங்கள் மூலம் ஏற்படும் 341 மருந்துகளையும், மிருகங்கள் மூலமாக உருவாக்கப்படும் 177 மருந்துகளையும், உலோகம் மற்றும் தாதுக்கள் மூலமாக உருவாக்கப்படும் 64 மருந்து வகைகளையும் சரகர் விவரிக்கிறார். 'உன் குழந்தையை நேசிப்பது போல உன் நோயாளியை நேசி' என்று டாக்டர்களுக்கு அவர் கூறும் அறிவுரை உள்ளத்தை உருக்குவதாக அமைகிறது.

நோயில்லா வாழ்விற்கு உணவுப் பழக்கவழக்கமே காரணம் என்ற அடிப்படையைச் சுட்டிக்காட்டும் அவர் 'பூரண ஊட்டச்சத்து உணவை' (Wholesome food) வலியுறுத்துகிறார்.

'சுயக் கட்டுப்பாட்டுடன் பெரியோரின் ஆசி பெற்று பூரண ஊட்டச்சத்து உணவை உண்ணும் ஒருவன் நோய்கள் இன்றி நூறுஆண்டுகள் வாழ்வான்' என்று சூத்ர ஸ்தானம் 27ம் அத்தியாயத்தில் 348ம் பாடலில் விளக்குகிறார்.

பத்து விதிகள்
உணவை எப்படி உட்கொள்ள வேண்டும் என்பதை பத்து விதிகள் மூலமாக அவர் விவரிப்பது வியப்பூட்டும் ஒன்று. அவை
1. அப்பொழுதே தயாரிக்கப்பட்ட சூடான உணவை உட்கொள்க.
2. உணவு எண்ணெய்ப் பசையுடன் இருக்கட்டும்.
3. அளவறிந்து உண்க.
4. முன்பு உண்ட உணவு ஜீரணித்த பின்னரே அடுத்த முறை உண்க.
5. உணவுப் பதார்த்தங்களின் மூலப் பொருட்கள், ஒன்றை ஒன்று எதிர்விளைவு ஏற்படுத்தாமல் அனுசரணையாக இருக்க வேண்டும்.
6. உணவை மகிழ்ச்சிகரமான இடத்தில் தேவையான வசதிகளுடன் உண்க.
7. மிக மிக அவசரமாக வேகமாக உண்ணக் கூடாது.
8. மிக மிக மெதுவாக உணவை உண்ணக் கூடாது.
9. உண்ணும் போது பேசக்கூடாது. சிரிக்கக் கூடாது. சாப்பிடும் போது சாப்பாட்டின் மீதே கவனமாக இருத்தல் வேண்டும்.
10. ஊட்டச்சத்து மிகுந்த பூரண உணவையே உட்கொள்ள வேண்டும். இது அந்தந்த மனிதரின் உடல்வாகு, உள்ள நிலையைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இந்தப் பத்து விதிகளைக் கடைப்பிடித்தால் நோய் வராது. நோய், வேறு பல சூழ்நிலைக் காரணங்களால் வந்தாலும் அதற்கான மருந்துகளையும் விவரிக்கிறார்.

அல்பெருனியின் வியப்பு
இந்தியாவிற்கு வருகை புரிந்த முஸ்லிம் யாத்ரீகர் அல்பெருனி சரகரை வியந்து போற்றுகிறார். "அவர்களிடம் (இந்துக்களிடம்) சரகர் இயற்றிய ஒரு நூல் உள்ளது. மருத்துவ நூல்களில் மிகச் சிறந்தது என்று அதை அவர்கள் கூறுகின்றனர். த்வாபர யுகத்தில் அக்னிவேசர் என்ற ரிஷியாக இருந்தவர் மீண்டும் சரகராக அவதரித்திருக்கிறார் என்று அவர்கள் நம்புகின்றனர்" என்று அல்பெருனி எழுதியுள்ளார்.

உடலில் உள்ள வர்ம ஸ்தானங்களை சரகர் குறிப்பிடுவதோடு அந்த இடங்களில் மஸாஜ் மற்றும் அழுத்த முறைகளைச் செய்து நோய்களைப் போக்கும் நெறிகளைக் கூறுகிறார். இப்போதுள்ள லேஸர் தெரபி, எக்ஸ் ரே உத்திகள் இதே இடங்களைக் குறிப்பிடுவதைக் கண்டு மருத்துவ உலகம் அதிசயிக்கிறது.


உலகின் முதல் மருத்துவர்
அமெரிக்காவில் சரகர் க்ளப் என்ற சங்கமே ஆரம்பிக்கப்பட்டு விட்டது!

அமெரிக்காவைச் சேர்ந்த உலகின் பிரசித்தி பெற்ற மருத்துவரான டாக்டர் ஜார்ஜ் க்ளார்க், "நான் ஒரே ஒரு முடிவிற்குத் தான் வரவேண்டியுள்ளது! நவீன உலக மருத்துவர்கள் தங்கள் மருந்துகளையும் தங்கள் சிகிச்சை முறைகளையும் உதறித் தள்ளிவிட்டு சரகர் கூறிய நெறிகளின்படி சிகிச்சை முறைகளை மேற்கொண்டால் உலகில் மிகச் சில நோயாளிகளே எஞ்சி இருப்பர்" என்று சரகருக்குப் புகழாரம் சூட்டுகிறார்.

'உலகின் முதல் மருத்துவர்' என்று உலகமே வியந்து பாராட்டும் சரகர் பாரதத்தின் அற்புத புருஷரே!

நன்றி: மஞ்சரி, நவம்பர் 2003

சிக்கலான சுயவிபரப் பொழிப்பும் நெருக்கடியான நேர்முகத் தேர்வும்



இ. ஸ்ரீராகவன்

நேர்முகப் பரீட்சை! ஆம், நாளாந்தம் நம் காதில் விழும் சொற்களில் ஒன்று.

இன்றைய நவீன உலகில் அவசியமான அதுவும் கனடிய நாட்டில் எதற்கெடுத்தாலும் நேர்முகத் தேர்வு என மிக மிக அத்தியாவசியமாகி விட்ட ஒன்று.

யானை வரும் முன்னே, மணியோசை வரும் பின்னே என்பது போல, நேர்முகப் பரீட்சையின் நுழைவாயிலெனக் கருதத் தக்க அதிமுக்கிய விடயம் Resume எனப்படும் சுயவிபரப் பொழிப்புத் தயாரிப்பும், அதனைப் பெறுனருக்கு உரிய கால எல்லையினுள் கிடைக்கச் செய்வதுமாகும். எனவே முதலில் சுயவிபரப் பொழிப்பின் உருவாக்கத்தினைச் சற்று விரிவாக ஆராய்தல் இவ்விடத்திற் பொருத்தமானதே.

நேர்த்தியான முறையில் தயாரிக்கப் பெற்று, உரிய முறையில் வெளிப்படுத்தப்படுகின்ற சுயவிபரப் பொழிப்பு, ஓர் தேடுதல் வேட்டையில் அதி உச்சப் பங்கினை வகிக்கவல்லது என்பதனை நீங்கள் அறிந்ததுண்டா?

ஓர் சுயவிபரப் பொழிப்பு எவ்வாறானதாக அமைந்திடல் வேண்டும்? உரிய பதவிக்கு உரித்தான நோக்கம், தொழில்சார் அனுபவத் தகைமை, அது தொடர்பான அனுபவ ஆற்றல், கல்வியியற் பின்னணி, சுயவிபரத் தரவுகள் என்பனவற்றை முதன்மைப்படுத்தி, இக் கிரம ஒழுங்கில் வகையிட்டு இக் கருதுகோள்களின் அடிப்படையில் கொடுக்கப்படும் தரவுகள், நிச்சயம் தொழில் தருனரின் மனதினைத் தொடும் என்பதில் ஐயமில்லை.

உரிய பதவிக்கு உரித்தான நோக்கம் எனும் கருதுகோள், ஓர் சுயவிபரப் பொழிப்பில் முதன்மை பெறும் அம்சமாகும். ஏனெனில் உங்கள் பதவிக்கு உரித்தான நோக்கத்தினை முதலிலேயே வெளிப்படுத்தாதுவிடின், தொழில் தருனருக்கு, உங்களது தொழில் எதிர்பார்ப்பு என்னவென்பதை ஊகிக்கும் சந்தர்ப்பம் இழக்கப்படுவதுடன், நீங்கள் என்ன பதவிக்கு விண்ணப்பிக்கின்றீர்கள் என்பதிலும் ஓர் தெளிவற்ற நிலை காணப்படுமானால், நீங்கள் போதிய தகுதியைக் கொண்டிருந்தும், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படாமல் விடப்படும் சந்தர்ப்பங்களே அதிகம் என்பது கசப்பான உண்மை.

J.I. பெய்க்கிரீசன் எனும் அமெரிக்க தொழில்சார் ஒருங்கிணைப்பாளர் "விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாக வரையறுப்பதானது ஓர் சிற்பத்தின் குவியப் புள்ளியைப் போன்றதானது" என்கின்றார். இத்துடன், இவ்வரையறையானது சுருக்கமாகவும், உங்களது தகைமைகளையும், தனித்துவத்தையும் கோடிட்டுக் காட்டுவதாகவும், தொழில்தருனர் மேற்கொண்டு உங்களது சுயவிபரப் பொழிப்பு முழுவையும் பார்வையிட அவரைத் தூண்டுவதாகவும் அமைதல் அவசியமெனவும் கூறுகின்றார்.

தொழில்சார் தகைமைகள், அது தொடர்பான அனுபவ ஆற்றல் என்பது, உங்கள் பெயரில் பதியப்பட்டுள்ள உங்கள் கைவசம் உள்ள தொழில்சார் பதிவேடாகும். எனவே ஏலவே பெற்ற தொழில்சார் அனுபவத்தினை வகைப்படுத்தும் போது அவ்வகையீடானது, கட்டாயமாகத் தொழிற்தளத்தின் பெயர், முகவரி, அங்கு கடமையாற்றிய பதவி, அதற்குரித்தான பொறுப்புகள், அதற்குரித்தான ஆற்றல் என்பனவற்றைக் குறிப்பிட்டாக வேண்டும். தொழில்தருனர் உங்களது தொழிற் சரிதத்தினை மேலோட்டமாக பார்வையிடும் போது, உங்களது மிக அண்மைய தொழில் தொடர்பான விபரத்தில் அதிக ஆர்வம் காட்டுவதால், உங்களது அண்மைய தொழில் தொடர்பான விபரம், தங்களது அதி உச்சப் பெறுபேற்றினை வெளிக் கொணர்வதாக அமைதல் அவசியம். உதாரணமாக தொழில் சார்பான உங்களது வினைத் திறமையை நிரூபிக்கும் முகமாக நீங்கள் பெற்ற விருதுகள்/ மேலதிகாரிகளின் பாராட்டுதல்கள்/ குறிப்புரைகள்/ இதனால் வழங்கப்பட்ட வேதன உயர்வு/ பதவி உயர்வு போன்றவற்றைக் குறிப்பிடுவதன் மூலம், உங்களது நடவடிக்கைகளினால், தங்களது நிறுவனம் என்னென்ன அனுகூலங்களைப் பெறக் கூடுமெனத் தொழில்தருனரைச் சிந்திக்க வைக்க முடிகின்றது. கல்வியியற் பின்னணி என்பது நீங்கள் கல்வி கற்ற பாடசாலைகள், கல்வியியல் நிறுவனங்கள் என்பவற்றின் பட்டியற் தொகுப்பாகும். கல்வி கற்ற வருடம், இதனூடாகப் பெற்ற தகைமைச் சான்றிதழ்கள், பட்டங்கள், கௌரவங்கள் என்பன பொதுவாக இதனுள் அடங்கும். அத்துடன் இக் காலப் பகுதியில் நீங்கள் பங்குபற்றிய கல்வி சாராத வெளிக்கள நடவடிக்கைகளின் குறிப்பும் இப் பகுதியிற் சேர்க்கப்படலாம். தனிநபர் சம்பந்தமான உங்களது சமூகச் செயற்பாடுகள், தொழில்துறை தொடர்பான ஏதேனும் விசேட அடையாளங்கள், பயிற்சிகள் என்பன போன்ற தகவல்கள் யாவும் இப் பகுதியினுள்ளேயே அடங்கும். இம் மேலதிகக் குறிப்புரையானது, நீங்கள் ஓர் இலட்சிய விண்ணப்பதாரி எனும் விம்பத்தினைத் தொழில்தருனரின் மனத் திரையில் விழுத்தும்.

மேற்கூறிய அனைத்து விடயங்களையும் வெளிப்படுத்தியதன் பின்பு, இறுதியாகவும், பொதுவாகவும், சுயவிபரப் பொழிப்பில் கொடுக்கப்படுவது, உங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக இரண்டு நடுவர்களின் விபரங்களைத் தொழில்தருனரிற்குத் தெரிவிப்பதாகும். இவ்விடத்தில் யாரை நடுவராகக் குறிப்பிடுவது எனும் குழப்பமான ஒரு நிலைமை எல்லோரிற்கும் உண்டு. பொதுவாக, இரு நடுவர்களில் ஒருவராக உங்களை நன்கறிந்த உங்களது குடும்ப வைத்தியரோ/மருந்தாளரோ/வழக்கறிஞர் போன்ற தொழில்சார் தகைமை பெற்ற ஒருவரைக் குறிப்பிடலாம். இன்னுமொரு நடுவராக உங்களது வேலைத்தள மேற்பார்வையாளர், அல்லது உங்களுடன் பணியாற்றும் சக ஊழியர்/உங்களை நன்கறிந்த, தொழில்தருனரிடமும் பரிச்சயமுள்ள ஒரு நபரினைக் குறிப்பிடலாம். இதனடிப்படையில் நல்லதொரு சுயவிபரப் பொழிப்புத் தயாரித்தாயிற்று. சூட்டோடு சூடாக உடன் செய்ய வேண்டிய விடயம், அதனை ஒருமுறைக்கு இருமுறை மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் சரி பார்த்தல். உங்கள் விண்ணப்பத்திலிருக்கும் ஒரு எழுத்துப் பிழை கூட, உரிய இலக்கை அடைய முடியாமல் உங்களைக் கீழே தள்ளிவிடும். எனவே, இலக்கணப்பிழை, எழுத்துப் பிழை என்பவற்றைச் சரிபார்த்து, இன்னொருவர் மூலமாக உரக்க வாசிக்கச் செய்து, அதனை அவதானித்து, தவறு ஏதும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்து கொள்வதுடன், உரிய இடங்களில் , . : ; போன்ற குறியீடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதையும் உறுதி செய்து கொள்க.

இதன் பின்னர், தயாரிக்கப்பெற்ற சுயவிபரப் பொழிப்பின் ஒரு பிரதியை உங்கள் வசம் வைத்துக் கொண்டு இயன்றவரையில் விரைவாகத் தொழில்தருனரைச் சென்று சேரத்தக்க வகையில் www.nas.net/nresume எனும் இணையத் தளத்தின் மூலம் online ஆகவோ/அஞ்சலிலோ அனுப்பி வைப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, உரிய நிறுவனத்தினைத் தொலைபேசியில் அழைத்து உங்களது விண்ணப்பம் பற்றி வினாவி உறுதி செய்து கொள்ளல் அவசியம். அதிர்ஷ்டம் உங்கள் கதவைத் தட்டுகின்றது; நேர்முகத் தேர்விற்கும் அழைக்கப்பட்டு விட்டீர்கள். கவனிக்க வேண்டியது என்னவெனில், எல்லா நேர்முகத் தேர்வுகளுமே இறுக்கமானதாகவும், சவால் மிகுந்ததாகவுமே விளங்குகின்றன. ஏனெனில் எமது எதிர்காலம் சம்பந்தப்பட்டதாகையால் அது பற்றிய பதட்டமும், பயமும் இயல்பானதே. இவ்வேளையில், பூரண ஆயத்தநிலை மாத்திரமே உங்களை ஒருநிலைப்படுத்துவதாகவும், *(மறுபக்கம் வருக)*

அமைதியாகவும், இயல்பாகவும் இருக்கச் செய்வதுடன் மட்டுமன்றி, நுட்பமான தந்திரோபாயக் கேள்விகளையும், ஏனைய குறுக்குக் கேள்விகளையும் தாக்குப் பிடிக்க வல்லதுமாகும். நேர்முகத் தேர்வின் போது உங்களது சமநிலைத் தன்மை, சகிப்புத் தன்மை, மன உறுதி என்பனவற்றைச் சோதிக்கும் முகமாக உங்களிடம் சிக்கலான/குழப்பமான வினாக்கள் வீசப்படலாம். இவ்வாறான சவால் மிகுந்த நேர்முகப் பரீட்சையை நடாத்தும் ஒருவர் தொழில்சார் முறையிலும், அனுபவ ரீதியாகவும் நன்கு பயிற்றப்பட்ட ஒருவராகவே இருப்பார். பொதுவான கலந்துரையாடலின் போது, உங்களிடம் கேட்கப்படும் கேள்விகள் யாவும், நீங்கள் தான் உரிய பதவிக்குப் பொருத்தமானவர் என்பதை நிரூபிக்க உங்களிற்கு வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் என்பதை நன்கு நினைவில் நிறுத்துங்கள்.

உதாரணமாக, இறுதியாக நீர் ஆற்றிய பணியில் உமது வருமானம் என்ன? எனவும், உமது வயதெல்லையில் உமது அனுபவம்/திறமை என்பவற்றைப் பயன்படுத்தி ஏன் அதிகமாகச் சம்பாதிக்க முடியவில்லை/முயலவில்லை? என வினவக்கூடும். இது நீங்கள் எதிர்பாராத ஒரு வினாவாக அமைந்து, உங்களை நிலைகுலைய வைக்கலாம். எனினும் சாத்தியமான வாழ்க்கைச் சூழலில் உங்கள் மனவுறுதியையும், இவ்வாறான ஒரு கடினமான சூழ்நிலையில் சிக்கல் ஒன்றினை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றீர்கள், உங்கள் தர்க்க அறிவு என்பனவற்றை வெளிக் கொணர்வதே இக் கேள்வியின் நோக்கமாகும். இன்னுமொரு முக்கிய விடயம், உங்களிடம் வினவப்படும் வினாக்கள் யாவும், நன்கு திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப் பெற்றதாகவும், ஓர் குறித்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும், கிரமமான முறையில் அமையப் பெற்றதுமாகவுமே இருக்கும்.

ஓர் நெருக்கமான சூழலில்/சூழ்நிலையில் தங்களால் பணியாற்ற முடியுமா என வினவப்படுவதாக வைத்துக் கொள்வோம். இதற்கு "ஆம்" அல்லது "இல்லை" எனும் பதில் மாத்திரமே எதிர்பார்க்கப்படுகின்றது. உடனடியாகவே இப் பதிலைத் தொடர்ந்து "நல்லது; இவ்வாறான ஓர் நெருக்கடியான சூழல்/சூழ்நிலை ஏன் எழக் கூடுமெனத் தாங்கள் எண்ணுகிறீர்கள்?" எனக் கேட்கப்படும் போது, நீங்கள் காட்டும் மௌனம்/தாமதம், இக் கேள்வி தொடர்பாக நீங்கள் குழப்பத்தில்/தெளிவின்மையில் உள்ளீர்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டி விடுகின்றது. இது உங்கள் சமநிலைத் தன்மையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துமாதலால், இயன்றவரை கேட்கப்படும் கேள்விகள் யாவற்றுக்கும் உடனடியாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும், தேர்வாளர்களை நேருக்குநேர் நோக்கியவாறும் விடைகளைப் பகருவது புத்திசாலித்தனம்.

இதேபோல, "நீங்கள் வேலையின் போது ஒரு பிழை விட்டு விட்டதாக உணர்ந்தால், அவ்வாறான சூழ்நிலையில் தங்கள் சிந்தனை/போக்கு எவ்வாறானதாக இருக்கும்?" என வினாவப்படுவதாகக் கருதின், உங்கள் கோணத்திலிருந்து பார்ப்பதுடன் மட்டுமன்றி, அவர்களது கோணத்திலிருந்தும் பார்க்கப்பட வேண்டிய வினாக்கள் இவை. தவறுகளைக் கண்டுபிடிக்கும் ஆற்றல், அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உள்ளவரா நீங்கள்? என்பதனைக் கண்டறிய உங்கள் மீது வீசப்படும் நுட்பமான தந்திரோபாயக் கேள்விகளில் இதுவும் ஒன்றாகும். எனவே இவ்வகையான தந்திரோபாயக் கேள்விகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம். இது வழமையாக நேர்முகத் தேர்வாளர்களினால் கடைப்பிடிக்கப்படும் ஓர் உத்தியுமாகும். "ஆம்" அல்லது "இல்லை" எனும் சுருக்கமான பதிலைத் தரக்கூடிய கேள்விகளைத் தொடர்ந்தே இவை வழமையாகக் கேட்கப்படுகின்றன. நேர்முகத் தேர்வொன்றின் போது, பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகத் தேர்வாளர்களே இடம்பெறுகின்றனர். எனவே வேறுபட்ட கோணங்களிலிருந்து கேள்விக் கணைகள் ஒரே சமயத்தில் உங்கள் மீது பாயலாம். இவ்வாறான வேளையில், ஒரு நேரத்தில் ஒருவருடைய கேள்விக்கு மாத்திரமே பதிலளிப்பதுடன், மிக இயல்பாகவும் நடந்து கொள்ளுங்கள். உங்களது இலட்சிய வேலை எப்படிப்பட்டதாக அமைய வேண்டும்/உங்களது இலட்சியத் தலைமையாளர் (Ideal Boss) எப்படியானவராக இருக்க வேண்டுமென உங்கள் எதிர்ப்பார்ப்பினையும் வினவுவது வழமை. ஏன் நீங்கள் இவ்வேலைக்கு விண்ணப்பித்தீர்கள்?; தற்போதைய தொழிலில் என்ன நம்மை/தீமைகள்? உங்களிடம் இவ்வேலை தொடர்பாக என்ன தனித்துவ ஆற்றல் உள்ளதாக உணர்கின்றீர்கள்?, ஏனையோரை விட நீங்கள் எவ்வகையில் சிறப்பாக கடமையாற்ற முடியும்?, உங்களுக்கு இவ்வேலை கிடைத்தால் எவ்வாறு எமது நிறுவனத்திற்கும், இச் சமூகத்திற்கும் சேவையாற்ற முடியுமென எண்ணுகிறீர்கள்? போன்ற இன்னோரன்ன, தனித்துவ ஆற்றலை வெளிப்படுத்தும் கேள்விகள் சர்வ நிச்சயமாக எப்போதும், எங்கும் கேட்கப்படுவன.

எங்களைப் பற்றி எவ்வாறு அறிந்தீர்கள்? என்பதும், இதுவரையில் எங்களைப் பற்றி அதாவது எமது நிறுவனத்தினைப் பற்றி என்ன அறிந்துள்ளீர்கள்? எனும் வினாவும் வழமையாகக் கேட்கப்படுவதே. இதுதவிர, உங்களைப் பற்றிக் கூறுங்கள் எனப் பொதுவாக வினவுவர். இதில் பிரதானமாக அவர்கள் எதிர்பார்ப்பது, உங்களது முன்னைய வேலைச் சூழல்கள், அது தொடர்பான விபரங்களையே. எனவே இக் கேள்விக்கு உங்கள், கடந்த கால தொழிற்சாதனைகளையும், அதனால் நிறுவனம் பெற்ற அனுகூலங்களையும் விளக்கமாகக் கூற வேண்டியது அவசியம். உங்களது பலம், பலவீனம் என்ன? உங்களது தொலைதூர, குறுகிய கால இலட்சியங்கள் என்ன?, உங்களது சம்பள எதிர்பார்ப்பு என்ன?, உங்களது முன்னாள் தலைமையாளர்கள்/சக ஊழியர்களிடம் உங்களைப் பற்றி வினவினால், அவர்கள் என்ன கூறுவார்கள் என எண்ணுகிறீர்கள்?, உங்களுடைய உந்து சக்தி என்ன?, மற்றையோருக்கு எவ்வாறு உந்து சக்தியாக விளங்குவீர்கள்?, தொழில் தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள்/தொழில் நிமித்தம் ஏற்படும் இடமாற்றல்களிற்கு நீங்கள் தயாரா? போன்ற வினாக்களும் தேர்வாளர்களிடமிருந்து வழமையாக எதிர்பார்க்கப்படுவனவாகும் இக் கேள்விகளை அவதானிப்பீர்களெனின், இவற்றில் ஆச்சரியம் எதுவும் இல்லை; எனினும், அனைத்துமே, ஆளுமை நிறைந்த, உரிய பதவிக்கான தகுந்த மனோநிலை, மற்றும் நடத்தைப் பண்புசார் நபரினைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல் எனின் மிகையன்று.

நேர்முகத் தேர்வில் இன்னுமொரு நெருக்கடியான விடயம் என்னவெனில், நேர்முகத் தேர்வின் தொடக்கத்தில், நேர்முகத் தேர்வாளரிடமிருந்து உங்களிற்குப் பரிபூரணமான வாழ்த்தும், வரவேற்பும் கிடைக்காமையுடன், அவர் நேருக்கு நேராக உங்களைப் பார்க்காமலும், எவ்வித ஆரம்ப அறிமுகமோ/உரையாடலோ இல்லாமலும், மேசையின் மீதுள்ள ஏதாவது ஒரு பொருளின் மீது கவனம் செலுத்தியவாறு, அமைதியற்று, பரபரப்பாகக் காணப்படுவதாகவும், மொத்தத்தில் உங்களைக் கொஞ்சம் கூட சட்டை செய்யாதவராகக் காணப்படக்கூடும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பேசாமல் எழுந்து போய் விடலாமா என்றே எண்ணத் தோன்றும். நிச்சயமாக அவ்வாறு செய்யக்கூடாது. மாறாகக் கதிரையிலேயே ஒட்டிக் கொண்டிருங்கள். இச் செயல் தான் நீங்கள் எந்தவொரு சூழ்நிலையையும் தாங்க வல்லவர் என்பதை எடுத்துக் காட்டுவதோடல்லாமல், வெற்றிகரமாகவும், முற்று முழுதாகவும் நேர்முகத் தேர்வினை முடித்து நியமனக் கடிதத்துடனும், சிரித்த முகத்துடனும் நீங்கள் வெளியில் வருவதற்கான முதற்படி என்பதையும் மறவாதீர்கள். மேற்கூறிய விடயங்களை விட, குறித்த நேரத்தில் சமூகமளித்தல், நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதத்துடன், அதில் கேட்கப்பட்ட எல்லா ஆவணங்களையும் வரிசைக் கிரமமாக ஒழுங்குபடுத்தித் தயாராக வைத்திருத்தல், பார்த்தவுடன் கவரத் தக்க நேர்த்தியான ஆடை அமைப்பு, மிக முக்கியமாகப் புன்னகை பூத்த முகம் என்பனவும் நியமனத்தை உங்கள் வசப்படுத்துவதில் கணிசமான பங்கினை வகிக்கக்கூடியன.

உலகில் பொதுவாக, அதிலும் குறிப்பாகக் கனடிய மண்ணில், பல்வேறு நிறுவனங்களில் ஏற்படும் பலதரப்பட்ட பதவிகளுக்குமான வெற்றிடங்களில் 95% ஆனவை விளம்பரப்படுத்தப்படுவதில்லை என்பது அதிர்ச்சி தரும் உண்மை. விளம்பர நிர்வாகச் செலவுகள், நேரத்தை மீதப்படுத்தல், மாற்றீடு மூலம் உடன் நிரப்பப்படக்கூடிய தன்மை என்பன காரணங்களாகக் கூறப்படுகின்றன. இவ்வாறான விளம்பரப்படுத்தப்படாத பதவிகளை (Hidden jobs) கண்டறிந்து, நாம் தான் அவற்றை எமக்கு ஏதுவாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முயற்சியுடையார், இகழ்ச்சியடையார் அல்லவா? எனவே முயன்று முன்னேறுவோம்.

Bronze Sponsors

அபிராமி கேட்டரிங்
416 266 5372

தர்ஷனாஸ்
905 625 8152 & 905 270 7576

AGR துரித பணமாற்றுச் சேவை
416 261 0024

காந்தி - கல்விச் சேமிப்புத் திட்டம்
416 955 9303 & 416 841 1866

A. (Caru) Carunakaran
416 465 3010

R. G. Education Centre
416 609 9508

விருதுகள் பொறுவோருக்கான தங்கப் பதக்கங்களை அன்பளித்தவர்கள்

டாக்டர் அ. சண்முகவடிவேல்
திரு. நா (சிவா) சிவலிங்கம்
திரு. ஆ. (வேல்) வேலுப்பிள்ளை
சிற்பக் கலைஞர் 'சரவணாஸ்' ஜெயராசா
திரு. து. ஈஸ்வரகுமார்
திரு. விமல் சொக்கநாதன் (லண்டன்)
வழக்கறிஞர் தெய்வா மோகன்
நிமலராஜன் மயில்வாகனம் குடும்பம்
டாக்டர் இளங்கோ அசோஷியேற்ஸ்
அகிலன் அசோஷியேற்ஸ்

Record Keepers

I know for many of you this would be the first page or opening page. As the editor of Tamils' Information I am privileged to speak to you through this page.

Tamils' Information has successfully completed its 13th year in its journey - eventhough number 13 is considered to be unlucky. This is the first issue of the 14th year. This anniversary issue is not only the largest volume so far, but also contains the highest number of articles. I am stuck without words to thank all of the contributors.

You are all well aware that, since February 1991, Tamils' Information is published consecutively on the 5th of each month. This acheivement has been made possible by the hand-in -hand dedication of three teams - the volunteer production group, the eminent contributors and our esteemed business community. I personally express a billion thanks to all of them.

This is the only Tamil digest in the world purely with contents of information for all Tamil expatriates. Canadian Tamils can be very proud of this. Aside from providing information we function as 'record keepers'of our life and times, for future reference. So, no one can dispute our meaningful success in all walks of life in our adopted homeland.

In the mean time we are leaving behind this valuable treasure of records in print, for our future generation. If all other print and electronic Tamil media would share in this record keeping, a complete history of Canadian Tamils will be there for the entire world.

Our march continues on the highway of information and this is a journey on the back of a camel. We salute and thank the partners who have accompanied us.

We will print our footsteps Deeper and Firmer on Canadian soil.

Let our footprints be clearly visible in tommorw's path.

Thiru S. Thiruchelvam
Editor in Chief

பின்னழகு காண நுழைபவர்களே!

அழகை ரசிக்க இரு வழிகளுண்டு. அவை முன்னழகு பின்னழகு.

சஞ்சிகைகளையும் நூல்களையும் 'புரட்ட' விரும்பும் பலர் பின்வழியையே விரும்புகின்றனர். மலரின் கடைசிப் பக்கமாக இது அமைந்தாலும், இவ்வழியாகவே உங்களில் பலர் மலருக்குள் முகம் புதைப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

அதனாற்தான் இந்தக் கதவிலும் நானே நிற்கின்றேன். பொறுத்திருங்கள் - ஓரிரு நிமிடங்களில் உங்களை விட்டு விடுவேன்.

பதினான்காம் ஆண்டில் அடி வைக்கும் தமிழர் தகவல், அடுத்தாண்டு பதினைந்தாவதின் ஆரம்பம் என்பதையும் நினைவூட்டுகின்றது. அப்போது, எனது பத்திரிகைப் பணியின் நாற்பதாண்டுகளைப் பூர்த்தி செய்கையில், புகலிட வெளியீட்டு அனுபவம் பதினைந்து ஆண்டுகள் என்பது தேன்சுவை போன்று இனிப்புச் சொட்டுவது மறக்க முடியாத காலம்.

இந்தப் பதினைந்து ஆண்டுகளைச் 'சாதனை' என்று எவராவது சொல்வார்களானால், அது முக்கூட்டின் இறுக்கமான துணிவுசார் துணை என்றுதான் சொல்ல வேண்டும். வலுமிக்க தன்னார்வத் தொண்டர்களான வெளியீட்டுக் குழுவினர், தொடர்ந்து ஆக்கங்களை எழுதி வரும் பல்துறை-தொழிற்றுறைசார் வல்லுனர்கள், கொடுத்துச் சிவந்த கரங்கொண்ட தமிழர் வர்த்தக சமூகம் ஆகியோரே இந்த முக்கூட்டினர். இவர்கள் ஒவ்வொருவரதும் கரங்களை இறுகப் பற்றி என் இதயத்தால் ஈரமாக்குகின்றேன்.

இந்த ஆண்டு மலர் முன்னைய மலர்களைவிட அதிகூடிய பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுமார் நூறு விடயதானங்கள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும், இறுதியில் பதினொரு ஆக்கங்களைச் சேர்த்துக்கொள்ள முடியாது போனது பெருங்கவலை. அடுத்து வரும் ஆண்டுகளில் இக்குறையை நீக்கும் வகையில் பக்கங்கள் மேலும் அதிகரிக்கப்படும்.

பின்னழகு காண நுழைந்து, 'முதற்' பக்கத்தில் காத்திருந்து சில துளிப் பொழுதுகளை என்னுடன் செலவிட்ட நீங்கள், உண்மையிலேயே 'மகா பொறுமைசாலிகள்'.

நன்றிக்குமுண்டோ அடைக்குந்தாழ்!

திரு எஸ். திருச்செல்வம்

Silver Sponsors

Fashion Florist
Fresh flower experts
416 754 8282

R. Pat Pushpakanthan
21st Century Agent
416 894 1187

Royal Grocery
Royal means Royal
416 693 8078

Dr. C Yogeswaran
Family Dentist
416 299 1868

Kanagambikai
Gold House
416 269 7198

Net Com
Training & Technology Inc.
416 438 3737

Dr. Pushpa Vannithamby
Family Dentist
416 289 7187

Vasantha Nagai Malikai
Pioneer Jewellers
905 848 5151

A1 St Francis
Digital Photo Studio
416 752 4444

S. K. Bales
21st Century Agent
418 801 3219/416 265 3920

Tam Sivathasan
ROYAL LEPAGE Sales Rep
416 284 4751/ 416 804 3443

Dr. Shan
A. Shanmugavadivel
Family Dentist
416 266 5161

Shri P. Vijayakumara Kurukkal
Sri Gowri Mangala Services
416 266 3333

6 Kumars
Silk House
416 465 7131 / 416 261 3666

Siva Kanapathypillai
Children's Education Trust of Canada
416 438 0660

Shri P. Krishnaraja Kurukkal
Sri Vijayaluxmy Vasa
905 501 0011

A1 Travel & Tours
Best Choice for Travels
416 289 6114

Vijaya's Silk
Popular Textile Store
905 273 7997

Shri S. Kanthan Kurukkal
Kanapathy Kriya Bhavanam
416 248 0200 & 416 917 7717

Yarl Cake House &
Abirami Printers
416 431 6604 / 416 431 6874

Jeya & Bros
Pioneer Music Palace
416 759 9540

Shankar & Co
Toronto's Leading Store
416 759 5100

V. V. Tutoring Centre
Ontario International Institute
416 701 1763 / 905 471 3084

Marche Maruthi
Quick Money Transfer
1 514 270 9511

S. K. Theesan
Leading Legal Asst.
416 490 9199

Yarl Super Store
Parliament & Wellesley
416 923 9806

Jupiter Foto
Pioneers in Photography
416 358 0047

Siva Trading
Always Top; Always First
416 321 2739

Ambal Trading Co.
Parliament & Wellesley
416 928 6665

www.harangraph.com

Platinum Sponsors

Manual Jesudasan
Law Office
416 444 8070

Claireport
Banquet & Convention Centre
416 675 7700

M. Kasipillai & Sons
Money Transfer Pioneers
416 267 8221

Ceylon Gems
Qualified Gemmologist
416 861 0444

Nathan Gurunathan
Home Life Ultimate Realty Inc.
416 752 7277

Haran
Futureway Financial Service Inc.
416 803 6500

R. R. Rajkumar
J. R. B Universal Inc.
416 752 0270

So Soya
www.sosoyaplus.com
416 293 6555

P. Kayilasanathan
Law Office
416 752 9561

Ketha
N.K.S. Draperies & Blinds
416 321 6420

R. Balendra
Insurance Broker
416 750 9450

Thiravie Murugesu
Century 21 Affiliate Reality Inc.
416 281 4900

Peter Joseph
Traffic ticket & Immigration
416 757 7707

Karu Kandiah
Royal LePage - Top Rank Associate Broker
416 284 5555

Ranjan Francis
Royal LePage Agent
416 816 1220

Gowri Malan Associates
Income Tax Specialist
416 742 0449

Siva
Gowri's Limousine Services
416 656 9391

Mohan & Mohan
Law Office
416 609 8200

R &S Auto Sales
Top Quality Used Car Dealer
416 412 3838

Nathan Sritharan
Law Office
416 499 2760

G.N.S. Party Rentals
All Under One Roof
416 288 1977

Kiruba Kirushan
Easy Home Buy
416 414 5562

Ahilan Associates
Printers & Publishers
416 920 9250

ISSN 1206-0585